# மெஹர் பிரபு
## (MEHER PRABHU)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு
## (MEHER BABA'S LIFE HISTORY)

## குறுகிய தமிழாக்கம்
**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு ஐந்து

## (VOLUME FIVE)

**1932 - 1936**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்க வேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறை நாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, மார்ச் 2021
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:01/23.11.2024

# உண்மைப்பொருள்

அளவிறுதியற்ற உண்மைப்பொருள், உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கட்டும், அதன் எல்லையற்ற இறையாண்மைக்கு உங்களை வழிநடத்தி, அத்துடன் இணைந்திருக்கச் செய்யட்டும். நாம் உண்மையின் நெறி தவறாமல் வாழும்போது, முழு உலகமும் நமக்கு எதிராக எழுந்தாலும், உண்மையான மேலுலக மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம்; ஆனால், பொய்மை நம் இதயத்தில் ஆட்சி புரியும் தருணத்தில், முழு உலகமும் நமது காலடியில் தவழ்ந்தாலும், நரகமெனும் திகிலூட்டும் தீப்பிழம்பு நமக்குள் பொங்கி எழுவதைக் காணலாம்.

எனவே, உண்மைப்பொருளாகிய இறைவன் மட்டுமே, உங்கள் வழிகாட்டியாகவும், நண்பனாகவும், அன்புள்ளம் படைத்த துணைவனாகவும் இருக்கட்டும் என்பது உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் நான் வழங்கும் ஆசீர்வாதம்.

**-மெஹர் பாபா**

# பிரசாதம்

பிரியமான பாபா, அவரது பௌதீக உடலைத் துறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக எனக்குக் கொடுத்த, என்ன ஒரு பிரசாதம் இது! (குருநாதரிடமிருந்து பெறப்படும் தனிப்பட்ட பரிசு). இந்தப் பிரசாதம், அவர் பூமியில் பௌதீக உடலோடு வாழ்ந்த காலகட்டத்தை உள்ளடக்கிய அவரது வாழ்க்கைக் கதையை எழுதும் உண்மையான தியான வழிபாடாக அமைந்தது.

அவதார புருஷர் என்பவர் பெருங்கடலாகத் திகழும் சமுத்திரம் போன்றவர்; அவர் எப்பொழுதும், செயல் ஈடுபாடு உடையவராகவும், பிரபஞ்சத்துடன் இணைந்தும் இருக்கிறார்; மேலும், அவர் தனது பௌதீக உடலோடு வாழ்ந்த காலத்திலும், உடலைத் துறந்த பின்பு வரும் அடுத்த நூறாண்டு காலத்திற்கும், பிரபஞ்சத்தில், எல்லையற்ற செயலாற்றலுடன் இருக்கிறார். எல்லா நேரங்களிலும், பிரபஞ்சத்தில் உள்ள எல்லா படைப்புகளுக்கும் பொறுப்பாக இருப்பது அவதார புருஷர் மட்டுமே.

மெஹர் பாபாவின் வாழ்க்கை சரித்திரத்தை அறிந்து, அவரது கால்தடங்களைப் பின்பற்றுவது, பிரியமானவருடன் நெருக்கமான தோழமையை உருவாக்க சிறந்த வழியாகும். அவர் ஒவ்வொருவரையும் அரவணைக்க (படிப்பறிவு அல்லது படிப்பறிவற்ற, ஏழை அல்லது பணக்காரர், இந்த நாடு அல்லது அந்த நாடு, இந்த மதம் அல்லது அந்த மதம், ஆண்கள் அல்லது பெண்கள், வயதானவர்கள், இளைஞர்கள், மற்றும் பலர்), எவ்வாறு உலகில் பணிபுரிகிறார் என்பதை முழு ஈடுபாட்டுடன் மனம் ஒன்றி, அறிந்து, ஒருவர் மனதை மூடி இதயத்தைத் திறக்கும் தருவாயில், தெய்வீக அன்பின் ஒளிக்கதிர்கள் உள்ளே ஊடுருவுவதைக் காணலாம்.

இந்தப் பிரசாதத்தை, தனது அன்பின் உழைப்பின் மூலம் வெகுஜனங்களைச் சென்றடையச் செய்பவருக்கு இது ஒரு பெரிய பாக்கியம், ஆகவே அவர் தனது பிரியமானவர் வழங்கும் வரப்பிரசாதத்தை அடையப்பெறுபவர் ஆகிறார்.

**-பாவ் கல்சூரி**
**செப்டம்பர், 1994**

# விலை மதிப்பு

அவதார புருஷராக, பூமியில் கடவுளின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வரலாற்றுத் தொகுப்பின் விலை மதிப்பு என்ன என்ற எனது கருத்தை நீங்கள் அறிய விரும்புகிறீர்கள். பகவான் கிருஷ்ணரின் சிறப்புமிக்க பக்தைகளில் ஒருவரான 'ஸந்த்' மீராபாயின் பாடலிலிருந்து இரவல் வாங்கிய ஒரே வரியில் பதிலளிக்க ஆசைப்படுகிறேன்:

"உண்மையான ரத்தினக்கல் ஒன்றின் மதிப்பை அணிமணி வணிகர் மட்டுமே அளவிட முடியும்."

எனவே அதன் விலை மதிப்பு குறித்த எனது கருத்து ஒரு பொருட்டல்ல, ஆனால் கடவுள் மனிதனாக நம்மிடையே வாழ்ந்த சரித்திரத்தின் விரிவான தொகுப்பு, உலகிற்கு வழங்கப்படுகிறது என்ற நமது காலத்தின் அளவுகடந்த நல் அதிர்ஷ்டத்தைப் பற்றிய எனது விழிப்புணர்வு - ஏற்கனவே விழித்தெழுந்துள்ள சிலருக்கு அவரது அன்பாகவும், மேலும் அலைகளில் மேலெழுந்து வரும் பலருக்கு அவரது ஒளி மற்றும் உண்மையை நோக்கிச் செல்லும் வாய்ப்பாகவும் விளங்குகிறது, ஏனெனில் பாபா அவரது வரலாற்றுக் கதையைத் தொகுக்கும் இந்தப் பணியை மேற்கொள்ளும்படி பாவ் கல்சூரிக்குக் கட்டளையிட்டார், இப்போது அது 'லார்ட் மெஹர்' (LORD MEHER) - 'மெஹர் பிரபு' (MEHER PRABHU) என்ற தொகுப்பில் வெளியிடப்படுகிறது.

இந்த அன்பின் பொக்கிஷத்திற்கு நாம் என்ன விலை மதிப்பீட்டை வைக்க முடியும்? ஒவ்வொரு வாசகருக்கும் நிர்ணயிக்கப்பட்ட அவரவர் விதியின் அளவுக்கேற்ப, மெஹர் பாபாவைக் கடவுள் - அவதார புருஷர் என்று ஏற்றுக்கொள்ளும் அளவில் அது அமைந்துள்ளது. என்னைப் பொறுத்தவரை, அவதார் மெஹர் பாபா இப்போது மற்றும் எதிர்காலத்தில் எப்போதும் பின்பற்றுபவர்களிடம் வைத்திருக்கும் அன்பின் எண்ணற்ற சான்றுகளில் இதுவும் ஒன்றாகும்.

ஜெய் பாபா.

**-மணி எஸ். ஈரானி**
**செப்டம்பர், 1994**

## முன்னுரை வழங்குபவர்: சுப்ரபா டிக்ஷதா,
## மேலாண் இயக்குனர், கிரெடிட் சுவிஸ் இந்தியா லிமிடெட், பூனே.

மெஹர் பாபாவின் வாழ்க்கையில், 1932 முதல் 1936 வரையிலான அவரின் மேற்கத்திய பயணம், அங்கு இடம் பெற்ற நிகழ்வுகள், அதிலிருந்து நமக்கு கிடைக்கும் அரிய பாடங்கள், இந்தத் தொகுப்பில் மிகத் துல்லியமாக வரையப்பட்டு இருக்கிறது.

மெஹர் பாபா பயணம் மேற்கொண்ட அனைத்து நாடுகளிலும், அவரை சந்திக்கும் மக்கள் பாபாவின் இறையன்பையும், தன்னிகரற்ற பாசத்தையும் கண்டு வியப்பது, பல சம்பவங்களில் தெரிகிறது. மேலும், மதம், இனம் வேறுபாடு இன்றி பாபாவின் அன்பில் மனம் உருகும் பல உள்ளங்களைப் பற்றி அறிய வருகிறோம்.

இந்தத் தொகுப்பில் மனம் உடைந்துபோன சிலர், பெரும் மனம் அழுத்தம் கொண்ட சிலர், வாழ்க்கையின் அடுத்த தருணம் புரியாத பலர், பாபாவின் ஒரு வருடலில், ஓர் இதமான புன்னகையில், கண்ணசைவில் மனம் தெளியும் பல சம்பவங்கள் மனதை நெகிழவைக்கின்றன.

இறைவனை அடைய எதற்காக ஒரு குரு வேண்டும் என்ற ஐயம் எழுப்பும் ஒரு சீடருக்கு, தனது பாணியில் பாபா தரும் விளக்கமும், அன்பும் நம்பிக்கையும் கொண்டு, எவ்வாறு சீடர்கள் இறைவனருள் அடைய முடியும் என்பதையும், பகவத் கீதையில் கிருஷ்ணாவின் உபதேசம் மற்றும் அழகிய சிறு கதைகள் மூலமாக, பாபா கற்றுத்தரும் பாடங்களும், நெஞ்சுருகச் செய்கிறது.

ஒரு கிருத்துவ பெண்மணிக்கு "**ஏசுவின் படிப்பினையை நீங்கள் பின்பற்றினாலே எனக்கு நெருங்கியவராகி விடுவீர்கள்**" என பாபா சொல்வது, அவர் மதங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதைப் புரிய வைக்கிறது.

இந்தக் காலக்கட்டத்தில் மஹாத்மா காந்தியின் சுதந்திர போராட்டமும், அஹிம்சா வழியும், அதன் மகத்துவத்தைப் பற்றிய பாபாவின் கருத்துகள், நமக்கு அஹிம்சா புரட்சியில் உள்ள நேர்மையை வலியுறுத்துகிறது.

இந்தத் தொகுப்பில், மஹாத்மா காந்திக்கும், பாபாவிற்கும் இடையே நடைபெறும் கடித போக்குவரத்தும், அதில் அடங்கிய ஆழ்ந்த அர்த்தங்கள் நிறைந்த சில பகுதிகளும் நமக்கு ஆச்சரியம் அளிக்கும்.

பாபாவின் பல அன்பான உபதேசங்களுக்கு இடையே இந்த வரிகள் நம் மனதில் நிற்கிறது. "**உலகத்தில் வாழுங்கள். அதே வேளையில், எல்லாம் உலகம்தான் என்று எண்ணாமல், பற்றற்றவராக இருங்கள்; உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்; ஆனால் மாயையின் பிடியில் சிக்கிவிடாதீர்கள். ஒருபோதும் கவலைப்பட வேண்டாம்; சிரமங்களுக்கு மத்தியிலும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.**"

## முன்னுரை வழங்குபவர்
## எம். தனபால், முதன்மை மேலாளர் (ஓய்வு), கனரா வங்கி

1932ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரை, மெஹர் பாபா மேற்கொண்ட நான்காவது மேற்கத்திய பயணம் முதல் ஒன்பதாம் பயணம் வரை நடந்த நிகழ்வுகளே, இந்த ஐந்தாவது தொகுப்பாக உங்களது கரங்களில் தவழ்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்று விடும் என்பதைத் தெளிவாக 1932ஆம் ஆண்டிலேயே மெஹர் பாபா அறிவித்து விட்டார். சுதந்திரம் பெற்ற பின்னரும் இன்று வரை இந்தியாவில் நிலவுகின்ற துயரங்களுக்கு என்ன காரணம்? இதுவும் மெஹர் பாபாவின் பொன் மொழிகளில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் ஆன்மீக சூழ்நிலையை, எப்படிப்பட்ட பிரச்சினைகள் வரினும், பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என பாபா கூறியதை நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். வெவ்வேறு சமூகங்களுக்கு இடையிலான விருப்பு, வெறுப்பு, சண்டை சச்சரவுகள், இன்றைக்கும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. தன்னலமற்ற அன்பும் சகோதரத்துவம் மட்டுமே, உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வர முடியும் என அவதார புருஷர் அன்றே அறிவுறுத்தி உள்ளார்.

லண்டன் நகரில் 1932ஆம் ஆண்டு டிசம்பர் பதினொன்றாம் நாள், பாபா சொற்பொழிவொன்றில் ஆன்மாவைப் பற்றியும், ஆவியைப் பற்றியும் கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். “ஆன்மா எல்லையற்றது, நித்தியமானது, தூய்மையானது, அழிவற்றது. ஆன்மா இறைநிலையை எய்தும் வரை, ஆவி மறுபிறவி எடுத்து உடல்களை மாற்றிக் கொண்டே இருக்கும்.” மீண்டும் மீண்டும் மனிதன் பிறவி எடுப்பதன் காரணமும், பிறவாமை எப்போது நிகழும் என்பதன் ரகசியமும் பாபாவால் எளிமையாகக் கூறப்பட்டுள்ளது.

லண்டன், அமெரிக்கா போன்ற பல்வேறு மேற்கத்திய நாடுகளுக்கு, பாபா சென்ற போது, பல அன்பர்கள் அவரை சந்தித்தனர். அந்த அனுபவத்தினை மறக்க முடியாது எனவும், பாபாவின் அழகில் ஈர்க்கப்பட்டு அவரது அன்பு, கருணை இவற்றை உணர்ந்து, மெய் சிலிர்த்துப் போய் கண்ணீர் பெருகியதையும், படிக்கும்போது அவதார புருஷரின் அற்புத அரவணைப்பின் தன்மையை நம்மால் உணர முடிகிறது. அந்தக் காலகட்டத்தில், மெஹர் பாபாவிடம் பலர் அறிந்துகொள்ள முயன்றது என்னவெனில், அவர் எந்த மதத்தை உபதேசிக்கிறார் என்பதேயாகும். அதற்கு அவரே, இலங்கையில் ஒரு பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் தெளிவுபடுத்தினார். “நான் எந்த மதத்தையும் சார்ந்தவனல்ல. எல்லா மதமும் என்னைச் சார்ந்தது. அன்பே எனது முதன்மையான ஊடகம்.

கலை, அறிவியல், இயல்பு, அழகு என்று வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் கடவுளை உணர முடியும். அதுவே என் மதம்."

மேற்கத்திய அன்பர்களிடம் 1933ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 16ஆம் தேதியன்று, கடவுள் மீதான அன்பு எப்படி இருக்க வேண்டும் என்று விளக்கி உள்ளார். "கடவுள் மீதான அன்பு, உச்சத்தை அடையும் போது, அது 'நான்' எனும் அகந்தை மற்றும் அனைத்து ஆசைகளையும், ஏக்கங்களையும் அழிக்கிறது. கடவுளும் கடவுளை நேசிப்பவரும் ஒன்றுபடுவதைத் தவிர வேறு எதுவுமில்லை. இதுவே பரிபூரண நிலை."

மெஹர் பாபாவின் ஐந்தாவது மேற்கத்திய பயணத்தின் போது, போர்டோஃபினோ என்ற இடத்தில் தங்கியிருந்தபோது, ஒரு நாள் நிலவொளியில், ஒளிரும் நட்சத்திரங்களின் பின்னணியில், பாபாவின் வசீகரிக்கும் பேரழகில் மேற்கத்திய அன்பர்களும், மண்டலியும் மெய்மறந்து போனதை விவரிக்கையில், அப்பரவச அனுபவம் நம்மையும் தொற்றிக் கொள்கிறது.

இந்தத் தொகுப்பு முழுவதும், நாமெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கியமான விஷயங்களை, பல்வேறு சமயங்களில் பாபா எடுத்துக் கூறியுள்ளார். மஜூம்தார் என்ற வழக்கறிஞரை ஆறுதல்படுத்தும் போது பாபா கூறியதாவது "சிரமங்களை, கோழி அடைகாப்பதுபோல மனதில் வைத்து அவதிப்படாதீர்கள். வருவது வந்து போகட்டும். எல்லா சூழ்நிலைகளிலும் உங்கள் மனதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்."

இந்தூர் மஹாராணியிடம் பாபா பேசும்போது "உலகம் உண்மையில் ஒரு கனவு. மகிழ்ச்சியும் துக்கமும் மனதின் விளையாட்டுக்கள். இரண்டிலும் எந்தப் பொருளும் இல்லை" என்று கூறியதை நாம் கடைப்பிடித்தால் எதிலும் பாதிக்கப்படாமல் நிறைவான வாழ்க்கையை வாழமுடியும்.

டாலி என்ற அன்பரிடம் ஒருமுறை பாபா கூறியதை, நாமெல்லாம் நமக்கு அறிவுரையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். "மன அழுத்தத்தை முறியடிக்க வேண்டும். எண்ணங்களை கடந்து செல்ல மனதைப் பயிற்றுவிக்க வேண்டும். மனம் சரணடையும் போது, சந்தோஷம், துக்கம் என்ற கேள்விக்கே இடமில்லை."

உலகில் பிறந்த நாமனைவரும், மரணம் ஒருநாள் வருவதைப் பற்றி கவலைப்படுகிறோம். சொல்லொணா துயரத்தை, நாம், பிரியமானவர்கள் மரணம் அடையும்போது அனுபவிக்கிறோம். ஆனால் மெஹர் பாபா சொல்கிறார், "மரணம் தூக்கம் போன்றது. தூக்கம் மனிதனுக்கு இன்றியமையாதது போல, மரணமும் வாழ்க்கையின் அவசியமான பாகம் ஆகும். உண்மையில் யாரும் பிறக்கவுமில்லை, இறக்கவுமில்லை. இது அனைத்தும் கனவு. வாழ்க்கை, உடல்,

இறப்பு அனைத்தும் மாயா. ஒருவரின் மரணம் குறித்து அழுவது அறியாமை." இப்படிக் குறிப்பிடக்கூடிய எண்ணற்ற போதனைகள் இந்தத் தொகுப்பில், ஆங்காங்கே பரவிக் கிடக்கிறது.

இறுதியாக, ஆன்மீகம் பற்றி அவதார புருஷரின் பொன்மொழியோடு இந்த முன்னுரையை நிறைவு செய்கிறேன். "ஆன்மீகத்தில், புத்தித்திறன் மற்றும் வெளியுலக வாழ்க்கை முக்கியமல்ல. உணர்வுகள், அனுபவங்கள்தான் முக்கியம். நீங்கள் உலகில் வாழலாம், உங்கள் கடமைகள் அனைத்தையும் செய்யலாம், ஆனால் ஆன்மீக உள்வாழ்க்கையில் அனுபவங்களைத் தேடும் ஏக்கத்துடன் இருங்கள். அது உங்களுக்கு நிச்சயமாக, படிப்படியாக வரும். உலகில் இருங்கள். ஆனால் பட்டும் படாமலும் இருங்கள்."

# நிகழ்வுகளின் காலவரிசை

**1932**
- நவம்பர் 21, மெஹர் பாபா, மும்பை துறைமுகத்திலிருந்து, இத்தாலிய 'கோண்தே வெர்டே' கப்பலில் பயணம்.

**1932**
- டிசம்பர் 6, லண்டன் வருகை
- டிசம்பர் 14 - 16, ஃபெல்ட்மெயிலன், ஸூரிக், ஜெனோவா வருகை

**1932**
- டிசம்பர் 17 - 20, 'எஸ்பீரியா' கப்பலில் எகிப்து, அலெக்ஸாண்ட்ரியா பயணம்.
- டிசம்பர் 20 - ஹெல்வென், ஸக்காரா, கெய்ரோ

**1933**
- ஜனவரி 03, எஸ்.எஸ். பலோரன் கப்பலில் இலங்கையை நோக்கிப் பயணம்.
- பிப்ரவரி 2, மதராஸ் வழியாக மும்பை, நாசிக் வருகை

**1933**
- பிப்ரவரி 15 - மார்ச் 3, மெஹராபாத், மும்பை விஜயம்

**1933**
- ஏப்ரல் 7 - 26, மேற்கத்தியர்கள் மும்பை வருகை. பாபாவுடன் பண்டர்தாரா ஏரி, ஆக்ரா, ராவல்பிண்டி, முர்ரி, ஸ்ரீநகர், காஷ்மீர், ஹர்வன் விஜயம்.

**1933**
- ஏப்ரல் 26 -27, மேற்கத்தியர்கள் டெல்லி வழியாக ரயிலில் மும்பை வந்து 'பிரிட்டானிக்கா' கப்பலில் ஐரோப்பா பயணம்.

**1933**
- ஜூன் 12, மெஹர் பாபா விக்டோரியா கப்பலில் ஐந்தாவது ஐரோப்பிய பயணம்
- ஜூன் 23, ஜெனோவா, போர்டோஃபினோ, ஸான்டா மார்கெரிட்டா, ரோம் விஜயம்

**1933**
- ஜூலை 10, மெஹர் பாபாவின் மௌனம் - எட்டாவது ஆண்டு நிறைவு
- ஜூலை 24 - ஆகஸ்ட் 4, - 'விக்டோரியா' கப்பலில் பாபா இந்தியா வருகை

**1933**
- செப்டம்பர் 25 - அக்டோபர் 6, 'எம்.வி. கோண்தே வெர்டே' கப்பலில் ஆறாவது ஐரோப்பிய பயணம். வெனிஸ் வருகை.

**1933**
- அக்டோபர் 8 - 31, பாரிஸ், லண்டன், அவிலா, மாட்ரிட் , பார்சிலோனா பயணம்
- நவம்பர் 2 - 14, எஸ்.எஸ். வைஸ்ராய் கப்பலில் மெஹர் பாபா இந்தியா வருகை

**1934**
- பிப்ரவரி 17, மதராஸ் 'மெஹர் பவன்' ஐயங்கார் இல்லம் விஜயம்.
- பிப்ரவரி 18, மெஹர் பாபாவின் 40-வது பிறந்த நாள் விழா

**1934**
- ஏப்ரல் 17 - மே 02, பெங்களூரு வருகை. நந்தி மலை, கெங்கேரி கிராமம் ஏகாந்தவாசம். மெஹராபாத் வருகை

1934
- ஜூன் 9 - 26, எஸ்.எஸ். மங்கோலியா கப்பலில் ஏழாவது ஐரோப்பா பயணம். பாரிஸ், லண்டன் வருகை

1934
- ஜூலை 6, ஸூரிக், சுவிட்சர்லாந்து - ஃபெல்ட்மெயிலன் மெர்டென்ஸ் இல்லம்.
- ஜூலை 12, ஃபாலென்ஃப்ளூ மலையில் ஏகாந்தவாசம்

1934
- ஆகஸ்ட் 2 - 3, எஸ்.எஸ். ஸ்ட்ராத்நேயர் கப்பலில் பாபா இந்தியா, மெஹராபாத் வருகை

1934
- நவம்பர் 15, எஸ்.எஸ். டுஸ்கானியா கப்பலில் எட்டாவது மேற்கத்திய பயணம்
- நவம்பர் 28 - 29, மார்ஸெல்லஸ், பாரிஸ், லண்டன் வருகை

1934
- டிசம்பர் 5 - 18, எஸ்.எஸ். மெஜஸ்டிக் கப்பலில் அமெரிக்கா பயணம் - நியூயார்க், மெக்ஸிகோ, கலிஃபோர்னியா - ரயிலில் பயணம்

1934
- டிசம்பர் 26, ஓசியானோ மணற்குன்றுகள் விஜயம்

1935
- ஜனவரி 3 - 4, பாரமவுண்ட், யூனிவெர்ஸல், ஃபாக்ஸ், வார்னர் பிரதர்ஸ் ஸ்டுடியோக்கள் விஜயம்.

1935
- ஜனவரி 10 - பிப்ரவரி 16, வான்கூவர் - ஹொனலுலு, யோகோஹாமா, ஹாங்காங், சிங்கபூர், கொழும்பு, மதராஸ் வழியாக மெஹராபாத் வருகை

1935
- மே 20, சத்குரு உபாஸனி மஹாராஜின் 65ஆவது பிறந்த நாள்

1935
- ஜூன் 9 - ஜூலை 10, ஏகாந்தவாசம், உபவாசம் - அஜ்மீர், தில்வாரா, அர்புடா, மவுண்ட் அபு, சூரத், நவ்ஸாரி, டமன், மெஹராபாத்

1935
- ஆகஸ்ட் 23, ஏகாந்தவாசத்தின் 40ஆவது நாள்.
- அக்டோபர் 15 - டிசம்பர் 20, ஏகாந்தவாசம் - டைகர் வேலி, மும்பை, மெஹராபாத்

1935
- டிசம்பர் 31, மைசூர் பயணம் - மைசூர் ஆசிரமம்

1936
- ஆகஸ்ட், ராஹுரி (மஸ்துக்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்) ஆசிரமம் நிறுவப்பட்டது

1936
- அக்டோபர் 24 - நவம்பர் 23, கராச்சி, இம்பீரியல் ஏர்வேஸ் ஹத்ரியான் விமானம் வழியாக பாக்தாத், துருக்கி, ஐரோப்பா பயணம் - இந்தியா வருகை

1936
- தொடரும்...

# பொருளடக்கம்

நான்காவது ஐரோப்பிய பயணம் - லண்டன் & ஸூரிக் .... 3

மேற்கத்தியர்கள் இந்தியா வருகை .................................... 21

ஐந்தாவது ஐரோப்பிய பயணம் – போர்டோஃபினோ & ரோம் (இத்தாலி) ........................................................................ 35

ஆறாவது ஐரோப்பிய பயணம் – லண்டன், அவிலா ......... 76

மாட்ரிட், பார்சிலோனா (ஸ்பெயின்) - மெஹராபாத் வருகை .........................................................................105


ஏழாவது ஐரோப்பிய பயணம் – பாரிஸ், லண்டன் & ஸூரிக் ...........................................................................169

எட்டாவது மேற்கத்திய பயணம் – லண்டன், நியூ யார்க் & கலிஃபோர்னியா .......................................................................224


ஏகாந்தவாசம், உபவாசம் ..........................................................276

மைசூர், ராஹூரி ஆசிரமங்கள் ..............................................296

கராச்சி, பாக்தாத், இஸ்தான்புல் வழியாக ஐரோப்பா பயணம் .........................................................................347



மெஹர் பாபா, லண்டன் - 1932



ஜெனோவா, டிசம்பர் 1932 - காக்கா பாரியா, விஷ்ணு, எனிட் கோர.ஃப், பாபா, நோரினா, குயன்டின், ஜால்பாய்

# நான்காவது  ஐரோப்பிய பயணம் - லண்டன் & ஸூரிக்

## (Fourth Europe Visit – London & Zurich)

மெஹர் பாபா, நான்கு மண்டலியுடன், நான்காவது ஐரோப்பிய பயணத்திற்காக, நாசிக் நகரிலிருந்து புறப்பட்டார். 1932, நவம்பர் 21ஆம் நாள், மும்பையிலிருந்து இத்தாலிய 'கொண்தே வெர்டே' (CONTE VERDE) கப்பலில் பயணத்தைத் தொடங்கினர். இம்முறை சகோதரர்கள் ஜால்பாய், ஆதி ஜூனியர் மண்டலியில் விஷ்ணு, காக்கா இருவரும் பாபாவுடன் சென்றனர்.

கப்பல் தளத்தில் பயணிகள் ஆர்வத்துடன் ஒருவரைப் பார்க்கும் நம்பிக்கையில் காத்திருந்தனர்; ஹாலிவுட் நடிகர் டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் (DOUGLAS FAIRBANKS), தூரக்கிழக்கிலிருந்து இந்தக் கப்பலில் அமெரிக்காவை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார். கடந்த ஜூன் மாதத்தில் ஹாலிவுட்டில் பாபாவிற்கு, ஃபேர்பேங்க்ஸ் மாபெரும் வரவேற்பு அளித்திருந்தார்.

கப்பலில் செல்லும் வேளையில் பாபா, பின்வரும் செய்திகளை இந்திய பத்திரிகைகளுக்கு வழங்கினார்:

**இந்தியா ஓர் ஆன்மீக நாடு. இது உலகில் மிகுந்த பாக்கியம் மற்றும் தனித்துவமான நிலையைக் கொண்டுள்ளது; இது புனிதர்கள், குருநாதர்கள், ஆன்மீக ஞானிகளின் பூர்வீகமாக உள்ளது. எனவே, இந்தியாவின் ஆன்மீக சூழ்நிலையை, தேவைப்பட்டால், அடிமைத்தனம், பொருள் ரீதியாக மகிழ்ச்சியற்ற நிலை இவற்றை எதிர்கொண்டேனும், பாதுகாக்க வேண்டியது அவசியம்.**

**அதன் ஆன்மீக சக்தியையும் மதிப்பையும் தக்க வைத்துக் கொள்ளும் வரை, இந்தியா எவ்வளவுதான் துன்பங்களை எதிர்கொண்டாலும், அது, இந்த மண்ணில் வாழும் மக்களின் நன்மைக்கே. மேலும், அதன் தற்போதைய துன்பத்தின் விளைவாக, சுதந்திரமும் மகிழ்ச்சியும் வருவது திண்ணம்.**

**அடிமைத்தனம், துயரம் இவற்றை அனுபவித்த பின்புதான், சுதந்திரமும் அதைத் தொடர்ந்து வரும் மகிழ்ச்சியின் உண்மையான மதிப்பும் பாராட்டப்படுகிறது. ஆனால் இந்தத் துன்பத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர, நண்பனையும், எதிரியையும் நேசிக்க வேண்டும்; நல்லெண்ணம், பொறுமை, சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். மேலும், பிறரின் தவறுகளை அம்பலப்படுத்துவதற்கு பதிலாக, இந்தியா தனது சொந்த குறைபாடுகளை சரிசெய்ய முயற்சிக்க வேண்டும். வெவ்வேறு சமுதாயங்களுக்கு இடையிலான வெறுப்பும், அவர்களின் குறுகிய ஆனால் பேரழிவு தரும் சண்டை சச்சரவுகளும் நிறுத்தப்பட வேண்டும்; இந்தியாவிற்கு, சுதந்திரமும் மகிழ்ச்சியும் வருவது நிச்சயம்.**

**ஒருபுறம் வழிபாட்டு முறைகள், மதங்கள், கோட்பாடுகள், மதச் சடங்கு சம்பிரதாயங்கள், சொற்பொழிவுகள், மறுபுறம் பொருள் நலன் மற்றும் உடல் சார்ந்த சிற்றின்பங்களைத் தேடுவதில், உண்மையான மகிழ்ச்சியைக் கொணர முடியாது என்பதை உலகம் விரைவில் உணரும்.**

**தன்னலமற்ற அன்பும் உலகளாவிய சகோதரத்துவம் மட்டுமே அதைக் கொண்டுவர முடியும்.**

பாபா மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களில், இம்முறை சாஞ்சி உடன் செல்லவில்லை. பாபா ஐரோப்பாவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியபோது, ஹாலிவுட்டில் சில பணிகளைச் செய்ய, சீனா வழியாக லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குப் பயணம் செய்யுமாறு ருஸ்தத்திற்கு உத்தரவிடப்பட்டது. ருஸ்தம் டிசம்பர் 2 அன்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். பாபாவின் அறிவுறுத்தல் படி, ஹெர்பெர்ட் டேவியுடன் சிறிது காலம் தங்குவதற்காக, சாஞ்சி சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டார்; அவர் புறப்படுவதற்கு முன்னர், இந்த எண்ணங்களை, கிம்கோ குழுவிற்கு எழுதிய கடிதத்தில் சாஞ்சி இவ்வாறு பதிவு செய்திருந்தார்:

பாபாவிடமிருந்து பிரிந்து செல்வது எளிதான காரியமல்ல, குறிப்பாக ஏழு நீண்ட ஆண்டுகளுக்கும் மேலாக அவருடன் மிக நெருக்கமாக இருந்த ஒருவருக்கு இது சாத்தியமல்ல. இதை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது; இதைப் பற்றி எவருக்கும் எதுவும் தெரியாது. இது மிகவும் கடினமானதாக இருக்கும் என்று நான் நினைத்ததில்லை. நான் இப்படிப் பல துன்பங்கள் அனுபவித்தவர்களைப் பார்த்திருக்கிறேன்; அவர்களுக்காக எப்பொழுதும் என் அன்பான அனுதாபத்தையும், சக உணர்வுகளையும் கொண்டிருக்கிறேன். சில சமயங்களில், பிறரின் இந்தத் துன்பங்களைக் கண்டு நான் கண்கலங்கியதும் உண்டு. ஆனால் அது தனிப்பட்ட முறையில் எனக்கு வரும் வரை, அது குறித்த நடைமுறை யோசனை எதுவும் எனக்கு இல்லை.

இந்தியாவில் தங்கியிருந்து பின்பு சீனாவில் ஹெர்பெர்ட்டை சந்திக்குமாறு பாபா என்னிடம் சொன்னபோது, நிச்சயமாக நான் அதைச் செய்ய வேண்டியிருந்தது. மறுப்பதானால், இந்த நேரத்தில் அதை விட வேறு எதுவும் நம்பிக்கையற்றதாக இருக்க முடியாது. ஆனால் நான் அதை எப்படிச் செய்தேன் என்பது இந்த இதயத்திற்கு மட்டுமே தெரியும். ஒரு வாரம், பாபா இந்தியாவில் இருந்தபோதும், நான் ஒரு நடைபிணம் போலவே நகர்ந்தேன் - மனதில் வெறுமை மேலும் என் வயிற்றில் ஒரு பனிக்கட்டி இருந்தது போல மந்தமாக, குளிர்ந்து, திகைத்து, உறைந்து போனேன். பாபா புறப்பட்டுச் செல்லும்போது, வாழ்க்கை அழிந்துவிட்டதாகத் தோன்றியது; எல்லாம் உயிரற்றதாகத் தெரிந்தது...

பாபாவும் மண்டலியும் 1932 டிசம்பர் 2ஆம் நாள் வெனிஸ் (VENICE) நகருக்கு வந்தனர். எலிஸபெத் பேட்டர்ஸன், நோரினா மாட்சபெல்லி, நதீன் டால்ஸ்டாய், குயன்டின் டாட் ஆகியோர் பாபாவை வரவேற்கச் சென்றனர்.

தொடர்ந்து அவர்கள் லண்டனை நோக்கி ரயிலில் பயணம் செய்து, 4ஆம் தேதி மிலன் (MILAN) வந்து சேர்ந்தனர், அங்கு இனிட் கோர்ஃபும் (ENID CORFE), மற்றொரு நண்பரும் அவர்களை சந்தித்தனர். மிலன் நகரில் ஓர் இரவு தங்கி, பாரிஸ் வழியாக டிசம்பர் 6ஆம் நாள் லண்டனுக்குப் புறப்பட்டு, அதே நாளில் வந்து சேர்ந்தனர்.

இதற்கிடையில் கிட்டி டேவி மற்றும் கிம்கோ, பாபா, 'நைட்ஸ் பிரிட்ஜ்' ஹோட்டலில் (KNIGHTSBRIDGE HOTEL) ஏழு நாட்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பாபா வந்ததும் அனைவரும் ஆர்வத்துடன் அவரை சூழ்ந்துகொண்டனர். எலிஸபெத், நோரினா இருவரும் லண்டன் குழுவை சந்திக்கும் முதல் வாய்ப்பு இது.

நோரினாவிற்கு, லண்டனில் பல அறிமுகங்கள் இருந்தன; அவர் தனது பிரியமான பாபாவை சந்திக்க அவர்களை அழைத்து வந்தார். அவர்களில் ரஷ்யாவின் கவுண்டஸ் கேத்தரின் (கிட்டி) பஹ்லன் (COUNTESS CATHERINE – KITTY – PAHLEN), பேரனஸ் ரோத்ஸ்சைல்ட் (BARONESS ROTHSCILD), லேடி ஸ்டெல்லா வைட்டலெஸ்கி (LADY STELLA VITELLESCHI), வியன் கீஸன் (VIVIAN GIESEN) ஆகியோர் அடங்குவர். காலம் இதை இப்படிப் பார்த்தது:

"பாபா, தனது இறை கீதத்தை இசைக்கக் கற்றுத் தந்தார்; இதைப் பார்த்தப் பிறரையும், இசை ஞானியான இறைவன் ஈர்க்கும் விதத்தில், அவருடைய இறை கீதமாகிய மதுபானம் இருந்தது. இறைவனைத் தவிர வேறு யார் இந்த அன்பின் மதுவை வழங்க முடியும்?"

அடுத்த ஆண்டு அவர்கள் இந்தியாவிற்கு வருவதை விரும்புவதாக, பாபா தனது அன்பர்களுக்கு விளக்கினார். முதன்முறையாக, கிம்கோவுடன் மெஹராவைப் பற்றியும், அவர் மீது மெஹரா கொண்டிருந்த தீவிரமான, தூய அன்பைப் பற்றியும் கூறினார், "**மெஹரா எனது ராதா, அவருடைய வாழ்க்கை எனது மகிழ்ச்சியால் ஆனது. நீங்கள் அவரைப் பார்க்கும்போது, அவருக்கு என் மீதுள்ள அன்பைப் பற்றி அறிவீர்கள். அவருடைய அன்பு எப்பொழுதும் என்னை மகிழ்ச்சியாக இருக்கச் செய்கிறது**!"

மெஹர் பாபாவின் இந்த வருகையின் போது, அவர் தனது உண்மையான அடையாளத்தை மூடிமறைத்து, மாறுவேடத்தில் லண்டன் நகரைச் சுற்றி வந்தார். ஹோட்டலில் ஓய்வெடுக்கும் வேளையில், அவர் தனது நீண்ட தலைமுடியைக் கீழாக இறக்கி, அதை சீர்செய்யும் கடமையை, டிலியா, மார்கரெட் இருவருக்கும் வழங்கினார்; அவ்வேளையில் தனது எழுத்துப்பலகை வழியாக இவ்வாறு தெரிவித்தார், "**இந்தியாவில் மெஹரா செய்யும் பணியை இங்கே நான் உங்களுக்குத் தருகிறேன்; எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் நீங்கள்**!"

பல சந்தர்ப்பங்களில், பாபாவின் வாழ்க்கையை ஒரு படமாகத் தயாரிப்பது குறித்த விவாதம் நடைபெற்றது. இந்தத் திட்டத்தில், குறிப்பாக ஆர்வமுள்ள நோரினா, 1931ஆம் ஆண்டில் ஹார்மன் ரிட்ரீட்டில் பாபா அதைக்

குறிப்பிட்ட நாளிலிருந்து, பல்வேறு திரைப்படத் தயாரிப்பாளர்களைத் தொடர்பு கொண்டார்.

பாபா லண்டனில் இருந்த வேளையில், கிட்டி டேவி எப்பொழுதும் வெவ்வேறு விஷயங்களில் கலந்துகொள்வதில் மும்முரமாக இருந்தார், பிறருக்கு தன்னலமற்ற முறையில் சேவை செய்தார். டிலியா முழுநேரமும் ஹோட்டலில் செயலாளராக இருந்து, நேரடி பேட்டிக்கான நேரங்களை ஒதுக்குவதும், தொலைப்பேசியில் பதிலளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். பாபாவும் குழுவும் வழக்கமாக, மாலை நேரங்களில் திரைப்படங்களுக்குச் சென்றனர், குறிப்பாக சார்லி சாப்ளின், லாரல் - ஹார்டி, ஃபேட்டி ஆர்பக்கிள் ஆகியோரின் நகைச்சுவை திரைப்படங்களை அவர் மிகவும் விரும்பினார்.

இந்த நேரத்தில், 24 வயதான 'சக்ரதார் தர்மணீதர் தேஷ்முக்' (CHAKRADHAR DHARMANIDHAR DESHMUKH) என்ற அறிவார்ந்த இந்திய பிராமணர், லண்டனில், மனோதத்துவத்தில் டாக்டர் பட்டத்திற்காகப் பயின்று வந்தார். 'டெய்லி ஹெரால்ட்' (DAILY HERALD) பத்திரிகையில் வந்த செய்தி மூலமாக, தேஷ்முக் லண்டன் நகரில் மெஹர் பாபா இருப்பதை அறிந்திருந்தார். பாபா உண்மையில் நான்கு மாதங்களுக்கு முன்பே அவரை உள்ளளவில் தொடர்பு கொண்டார்; தேஷ்முக், பாபா தனக்கு முன்னால் நிற்பதைப் போலக் கனவு கண்டது மட்டுமின்றி, கனவில் பாபா அவருடன் உரையாடினார்: **"நீங்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவர்; நீங்கள் ஒரு நல்ல மனிதர்."** இதை ஏற்க அவர் தயங்குவதைப் பார்த்து, பாபா, "**அப்படி இல்லையா**?" என்று கேட்டார்.

தேஷ்முக் உடனே, "நல்லது அல்லது தீயது, எதுவாயினும், தயவுசெய்து, என்னை உங்களிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்று பதிலளித்தார்.

பாபாவின் பதில், அன்பு மற்றும் ஒளியின் உடனடி அலையாக வியாபித்தது, "இது குளிர்ந்த தெளிவான நிலவொளியில் குளிப்பது போல் இருந்தது" என்று தேஷ்முக் பின்னர் கூறினார்.

செய்தித்தாளில் வெளிவந்த பாபாவின் புகைப்படத்தை, தேஷ்முக் முதன் முதலாகப் பார்த்த அந்த நேரத்தில், அவரை, 'ஏற்கனவே தனது இதயத்தை வென்றவர்' என அறிந்துகொண்டார். அவர் மேலும் தனது இறைவனால் ஈர்க்கப்பட்டு, அவரது தரிசனத்திற்காக ஏங்கினார். தேஷ்முக் பின்னர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "நான் புகைப்படத்தைப் பார்த்தபோது, நான் தேடிக்கொண்டிருந்த தெய்வீக வழிகாட்டுதலின் உறுதிமொழியை அவருடைய கண்களில் கண்டேன். அவரது ஒளிரும் கண்களின் வெளிப்பாடு, கண்ணுக்குத் தெரியாத தொலைதூரத்திலிருந்து சத்தியத்தின் செய்திகளை என்னிடம் கொண்டு வந்தது; அங்கு நித்திய, நிலையான, எல்லையற்ற, வாழ்வின் இறுதி இலக்கான இறை உணர்வு உள்ளது."

1932, டிசம்பர் 8ஆம் நாள் நைட்ஸ்பிரிட்ஜ் ஹோட்டலில் பாபாவை சந்திக்க தேஷ்முக் வந்தார். பேராசிரியரான திருமதி மேக்கிரேகர்-மோரிஸ் (Mrs. MacGREGOR-MORIS) மற்றும் வட்ட மேசை மாநாட்டுக்காக லண்டனுக்கு வந்த பிரபல மராத்தி எழுத்தாளரும் அரசியல்வாதியுமான என்.சி கேல்கர் (N.C. KELKAR) ஆகியோரை அவர் உடன் அழைத்து வந்தார். சந்திப்பின் போது, பாபா, இளைஞரான தேஷ்முக்கிடம், **"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"** என்றார்.

தேஷ்முக், மனோதத்துவம் படித்து வருவதாக விளக்கினார். மேலும் **"தத்துவத்தின் பொருள் என்ன**?" பாபா குறும்புத்தனத்துடன் வினவினார்.

"இது மறைந்திருக்கும் யதார்த்தத்தை வெளிப்படுத்தும் ஒரு விஞ்ஞானம்" என்று தேஷ்முக் பதிலளித்தார்.

பாபா சிரித்தபடியே, **"என்னைப் பொறுத்தவரை, தத்துவம் என்பது ஒரு எளிய விஷயத்தைக் கடினமாக்குவது**!" என்றார்.

மெஹர் பாபாவை நேருக்கு நேர் சந்தித்தது, டாக்டர் தேஷ்முக் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது, ஏனெனில் இந்த தரிசனம் அவருக்கு தத்துவத்தின் உண்மையான அர்த்தத்தைத் கற்பித்தது. அந்த நேரத்திலிருந்து, அவர் ஒரு தீவிர சீடராக மாறியதோடு, பாபாவின் எழுத்து மற்றும் வெளியீட்டுப் பணிகளில் உதவியாக இருந்தார்.

மெஹர் பாபாவின் 'சிறந்த', 'இலட்சிய' சிறுவனைத் தொடர்ந்து தேடும் முயற்சி, 1927ஆம் ஆண்டில் மெஹர் ஆஷ்ரமத்தில் தொடங்கி 1958 வரை நீடித்தது. பாபாவின் தனிப்பட்ட பணிகளுக்குப் பொருத்தமான சிறுவனைத் தேடுவது, தவிர்க்க முடியாமல் அவர் எங்குச் சென்றாலும் இந்த முயற்சி தொடர்ந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில், பல சிறுவர்கள் அழைத்து வரப்பட்டனர், ஆனால், பாபா அனைவரையும் திருப்பி அனுப்பிவிட்டார். ஒன்று அல்லது இரண்டு பேரை மட்டுமே குறுகிய காலத்திற்கு உடன் வைத்திருந்தார். இப்போதும் பாபா, மண்டலியில் சிலருக்கு, வெளியே சென்று அத்தகைய சிறுவனைத் தேடிவரும் பொறுப்பை வழங்கினார். ஒரு சில ஆங்கிலேய இளைஞர்கள் ஹோட்டலுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களில் ஒருவர் பாபாவால் மிகவும் ஈர்க்கப்பட்டார், மூன்று நாட்கள் பாபாவுடன் இருந்தார்.

ஒரு நாள் அந்த சிறுவன் விஷ்ணுவிடம், "அவர் எங்கே?" என வினவினான்.

"யார்?" என்று விஷ்ணு கேட்டார்.

"அந்த நீண்ட முடியுடன் கூடிய ஊமை மனிதன்!"

உள்ளூர சிரித்துக்கொண்டே, விஷ்ணு, "இப்போது அவருடைய பணியில் மும்முரமாக இருக்கிறார்" என்றார்.

"நான் எப்போதும் அவருடன் இருக்க விரும்புகிறேன்."

"ஏன்?" என்று விஷ்ணு கேட்டார்.

"அவர் மிகவும் கனிவானவர். அத்தகைய மனிதரை நான் பார்த்ததில்லை. அவரை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் உணர்கிறேன்!" என்று சிறுவன் கூறினான்.

1932, டிசம்பர் 11ஆம் நாள், பாபா 'மறுபிறவி' (REINCARNATION) பற்றி சொற்பொழிவை வழங்கி, 'ஆவி' (SPIRIT) என்றால் என்ன என்பதை விளக்கினார்:

**ஆன்மா எப்பொழுதும் அப்படியே இருக்கும்; ஆவி மட்டுமே மறுபிறவி எடுத்து உடல்களை அடுத்தடுத்துத் தக்க வைத்துக் கொள்ளும். ஆவி என்றால் என்ன என்பதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல், இந்த வார்த்தையை தெளிவற்ற முறையில் பயன்படுத்துகிறார்கள். ஒரு பொருளுக்குப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

**ஆன்மா எல்லையற்றது, நித்தியமானது, தூய்மையானது. தற்போது, நீங்கள் ஆன்மாவைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத பட்சத்தில், உங்கள் மனம் ஒன்றுதான் உங்களுக்கு அனைத்தையும் குறிக்கிறது. இருந்தும் மனம் நீங்கள் அல்ல; உடலுக்கு உடைகள் இருப்பதுபோல், அனைத்தையும் உணர்ந்து அனுபவிக்கும் உங்கள் மனம் நீங்கள் அல்ல; நீங்கள் அந்த அகங்கார மனமும் அல்ல - நீங்கள் ஆத்மா.**

**அது உணரப்படும் வரை, ஆவி மறுபிறவி எடுத்து உடல்களை மாற்றிக்கொண்டிருக்கும். உங்கள் உடை தேய்ந்து நொய்ந்து போகும்போது அதை மாற்றிக் கொள்கிறீர்கள், அதுபோலத்தான் உடலும். உங்கள் அனைவருக்கும் பல உடல்கள் இருந்தன, ஆனால் உங்கள் ஆன்மா ஒருபோதும் மாறவில்லை. அனைவரும் மூலாதார பொருளுக்குத் (பாபாவிடம்) திரும்பி வரும் வரை, ஆவி மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துக்கொண்டே இருக்கும்!**

அமைதியான, தனிமையை விரும்பும் 'ஸ்காட்டிஷ்' (SCOTTISH) பெண்மணி கிறிஸ்டின் மெக்நாட்டன் (CHRISTINE McNAUGHTON – 28), நைட்ஸ்பிரிட்ஜ் ஹோட்டலில் பணியாளராக இருந்தார்; பெரும்பாலும் பாபாவின் உணவை அவரது அறைக்குக் கொண்டு வந்தார். பல நாட்களுக்குப் பிறகு, பாபா, அனைவரிடமும் "**அந்தப் பெண்மணி, ஆன்மீகத்தில் மிகவும் நாட்டம் உள்ளவர், ஒரு நல்ல ஆத்மா**" என்று குறிப்பிட்டு, அனைவரின் கவனத்தையும் அந்தப் பெண்மணியின் பக்கம் திரும்புமாறு செய்து, மண்டலியை அவரோடு உரையாடி, பழகுமாறு கேட்டுக் கொண்டார். அனைவரும் அவ்வாறே செய்தனர். (குறிப்பாக நோரினாவிடம் அவர் மீது அதிக கவனம் செலுத்துமாறு கூறி, '**முந்தைய பிறவியில் கிறிஸ்டின், நோரினாவிற்கு மகளாக இருந்தார்**' என்றும் தெரிவித்தார்.)

அங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா, கிறிஸ்டினோடு கைகளைக் குலுக்கி, அவருடன் தொடர்பில் இருக்குமாறு கிம்கோவிடம் கூறினார். அதைத் தொடர்ந்து பாபா அந்தக் குழுவை இந்தியாவிற்கு அழைத்தபோது, கிறிஸ்டினையும் உடன் அழைத்து வருமாறு கூறி, வேண்டிய பணம், பயண

கட்டணம், தேவையான உடைகள் அனைத்தும் வழங்குமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

லண்டனில் பாபாவை சந்திக்க புதிய நபர்கள் வந்தபோது, மிகக் குறைந்த அளவு நேரத்தையே அவர் அதற்காக ஒதுக்கினார், ஏனெனில், இம்முறை குறிப்பாக, பாபா தனது நெருங்கிய அன்பர்களுக்காகவே வந்திருந்தார் - கிட்டி, மார்கரெட், டிலியா, மின்டா, கிம், ஸில்லா, ஆட்ரி ஆகியோருடன் அதிக நேரம் செலவிட்டார்; குயன்டின், வில், மேரி பேக்கெட், டாம் ஷார்ப்லி, சார்லஸ் பர்டம், எலிஸபெத், நோரினா, நதீன், இவர்கள் அனைவரும் பாபாவின் எதிர்கால திட்டத்திற்கு இணங்க, இந்தியாவில், ஆஷ்ரமத்தில் தங்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள்.

காலம் இதை இவ்வாறு தொடர்பு படுத்தி விளக்கியது, "பலர் பூங்காவின் வெளிப்புற அழகை நோக்கி ஈர்க்கப்பட்டனர்; ஆனால் அதில் உள்ள கஷ்ட நஷ்டங்களையும், கடும் புயலையும் தாங்கும் தைரியம் அவர்களுக்கு இல்லை. 'தோட்டக்காரர்' அத்தகைய உன்னதமான 'அன்புப் பறவைகளை' தனது 'வனப்பகுதியில்' வைத்து, அங்குக் கூடுகளைக் கட்ட விரும்புகிறார். ஆனால் தோட்டத்தின் வழியாக உல்லாச பயணம் வரும் பெரும் திரளான மக்கள், காட்சிகளைக் கண்டுகளித்து, தத்தமது கூடுகளுக்குத் திரும்புகின்றனர் - அங்குத் தங்குவதற்கு, தோட்டக்காரர் அவர்களை அனுமதிப்பதில்லை. பல பறவைகள் பிரியமான சரணாலயத்திற்கு அடிக்கடி வந்து செல்கின்றன, ஆனால் ஒரு சிலரே அங்கு வாழத் தகுதியுடையவர்கள்!"

மெரடித் ஸ்டார், இவை அனைத்திற்கும் பின்னால், பாபாவுடனான பிணைப்பில் இன்னமும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தார்; ஏனெனில், இவ்வளவு விளம்பரத்திற்குப் பிறகும், பாபா, அமெரிக்காவில் தனது மௌனத்தைக் கைவிடவில்லை. லண்டனில் தங்கியிருந்த போது, மெரடித் அல்லது மார்கரெட் ஸ்டார் இருவரும் பாபாவை சந்திக்க வரவில்லை; பாபா, கூம்ப் மார்ட்டினில் அமைந்துள்ள டெவன்ஷர் ரிட்ரீட்டுக்குச் செல்லவுமில்லை. மெரடித் எப்போதேனும் பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தாலும், அவர்களின் தொடர்பு வெளியளவில் துண்டிக்கப்பட்டது. "நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டிய £ 400 பணம் அல்லது இறை உணர்வை எனக்குக் கொடுங்கள்!" இவ்வாறு மெரடித் ஒருமுறை எழுதினார், "இல்லையெனில், நான் உங்களைவிட்டு விலகி, நீங்கள் ஒரு மோசடிக்காரர், போலி என்று அம்பலப்படுத்துவேன்!" இந்தக் கடிதங்களில் ஒன்றை, பாபா, குழுவிற்கு வாசித்துக்காட்டி, அனைவரும் அதைப் பார்ப்பதற்காகக் கொடுத்தார்; சில சூழ்நிலைகள் எவ்வளவு நம்பிக்கையற்றவை என்பதைச் சுட்டிக்காட்டி, ஆவேசமடைந்த பாபா, அவரது கைகளை மேல் நோக்கி வீசி, "**இந்த மேற்கத்திய நாடு**!" என்றார்.

மெரடித் ஸ்டாருடனான பாபாவின் உறவும், மாறுபட்ட எதிர்வினைகளும் வெறும் வெளிப்புற அம்சங்களாகும். உள்ளளவில் என்ன நடக்கிறது அல்லது

பாபா என்ன பணிபுரிந்து கொண்டிருந்தார் என்பதை எவராலும் அறிய முடியாது. பிரபஞ்சத்திற்குக் கட்டுப்பட்டு, படைப்பின் ஆரம்பம் முதல் இறுதி வரை, உலகளாவிய கடமை ஒன்றையே கண்ணாகக் கருதும் அவதார புருஷர், ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருக்கிறார், ஏனெனில் அவரே எல்லாமே, அவரே எல்லோரும்! அவரது பிரிக்க முடியாத பிணைப்பில், அவர் அனைவரையும் பரவலாகத் தன்னுடன் அடக்கிக் கொண்டவர், அவர்களின் செயல்முறை எவ்வளவுதான் கீழ்த்தரமாக இருந்தாலும் சரி, எவரையும் ஒருபோதும் 'கைவிடுவதில்லை'. இதுவே அவதார புருஷரின் மகத்துவம், அவரது ஒரே 'பலவீனம்'. அவர் அனைவரிடமும் இரக்கம் உள்ளவர், எவருக்கும் தீங்கு செய்ய முடியாதவர்!

லண்டனில் ஒரு வாரம் இருந்த பின்பு, மெஹர் பாபா தனது அன்பர்களிடமிருந்து விடைபெற்று 1932 டிசம்பர் 14ஆம் நாள் ஸூரிக் (ZURICH) நகரத்திற்குச் சென்றார்.

பாபா மண்டலியுடன் மறுநாள் ஸூரிக் வந்தபோது, ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் (HEDI & WALTER MERTENS), ஓட்டோ ஹாஸ்-ஹெய் (OTTO HAAS-HEYE) ஆகியோர் பாபாவின் விருந்தோம்புநராக இருந்தனர். ஜெர்மனியில் பிறந்த ஓட்டோ ஹாஸ்-ஹெய் (53), ஒரு நிறுவனத்தில், நவீன நாகரீக பாணி நாடக உடை வடிவமைப்பாளர், மற்றும் நோரினாவின் முதல் கணவர் கார்ல் வால்மொல்லரின் (KARL VOLLMOELLER) நெருங்கிய நண்பர். இத்தாலிய துணை தூதரகத்திற்கு மேலே, ஒரு கட்டிடத்தின் முதல் தளத்தில், ஓட்டோ, 'ஸூரிக் கலை மற்றும் மாதிரி பள்ளி'யை (ZURICH ART AND MODEL SCHOOL) சில பெரிய, மரத்தாலான அறைகளில் நிறுவினார். அன்று காலை நேரத்திலிருந்து பல்வேறு நபர்களை சந்தித்த பாபாவிற்கு, அவர் அங்கு ஒரு சிறப்பு வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தார். பிற்பகல் ஏழு மணிவரை சந்திப்பு நிகழ்ந்தது; அதற்குப் பிறகு பாபா ஒரு மணி நேரம் ஏரியின் அருகே நடந்து சென்றார்.

அன்றைய சந்திப்பில், 54 வயதான ஒரு பெண்மணி, சுவிட்சர்லாந்தில் முன்னணி கலைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர், பாபாவை முதல் முறையாக சந்தித்தார். பெயர் ஹெலன் டாம் (HELEN DAHM), பல ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் இதர மேற்கத்திய நண்பர்களுடன் இந்தியாவில் தங்கி, பாபாவிற்கு, குறிப்பிடத்தக்க ஓவியங்களை வரைந்தார். மற்றுமொரு ஃபிரெஞ்சு பெண்மணி, ஆன்ட்ரே ஆரென் (ANDREE ARON - 24), ஓட்டோவின் பள்ளியில் 'நவ நாகரீக' தையல் கற்பித்தவர். பாபாவுடனான தனது முதல் சந்திப்பைப் பற்றி, ஆன்ட்ரே கூறியதாவது:

பாபா அங்கு வந்தபோது, நான் யாரை சந்திக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. பாபா யார் என்றும் எனக்குத் தெரியவில்லை. ஒரு ஜோதிடர் அல்லது எதிர்காலத்தைக் குறித்து அதிர்ஷ்டம் சொல்லும் ஒருவரைப் பார்க்கப் போகிறேன் என்று நான் நினைத்தேன். பேராசிரியர் ஹாஸ்-ஹெய் அவரை எனக்கு அறிமுகப்படுத்திய போது, அவர் என்னை அதிர வைத்தது போல்

உணர்ந்தேன்; மனம் திறந்து பேச விரும்பினேன். அவர் ஒரு குழந்தையைப் போல், உண்மையான அன்பு மற்றும் தயவுடன் என்னை அழைத்துச் சென்றார். அதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். உண்மையில் அது ஓர் அருமையான அனுபவம். இதுதான் அன்பு. நீங்கள் உணர்வது அவ்வளவுதான். இனி 'நான்' என்ற உணர்வு இல்லை; நீங்கள் பாபாவைப் பற்றி மட்டுமே நினைக்கிறீர்கள். அதைத்தான் நான் உணர்ந்தேன். ஆனால், நான் பாபாவை நேசிக்கிறேன் என்பதை அறிய ஐந்து மாதங்கள் ஆயிற்று.

அன்பு, தயவு, பக்தி - நான் வேறு எவருடனும் அனுபவிக்காத ஒரு குணம் - இது மனித இனத்தின் புனிதமான குணம். எங்கும், எப்பொழுதும் நண்பர்களுடன் கூட நான் இதைக் காணவில்லை. பாபாவுடனான எல்லா சந்திப்புகளிலும் அத்தகைய அரவணைப்பையும் கருணையையும் உணர முடிந்தது. சிறிய (சாதாரண, பொருள் சம்பந்தமான) விஷயங்களைப் பற்றி நாங்கள் சிந்திக்கவில்லை. இனி எதுவும் முக்கியமில்லை. தூக்கமும், உணவும் எதுவும் இல்லை. நீங்களே இனிமையாக மாறுவதை உணர்கிறீர்கள். அதுதான் அற்புதம். அதுதான் அருமை.

ஹாஸ்-ஹெய் மூலமாக, பாபாவைப் பற்றி தெரிய வந்த இதர முக்கிய நபர்களில் ஒருவர், ஆன்மீகத்தில் அதீத ஆர்வமிக்க ஒரு சர்வதேச தொழிலதிபர் ஓட்டோ பில்லோ (OTTO BILLO) ஆவார். அவரும், அவரது நண்பர் வால்டர் மெர்டென்ஸ் இருவரும் மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்ட போது, அவர் ஒரு ஸூஃபி குருநாதரைப் பின்பற்றி வந்தார். ஓட்டோ பில்லோ, பாபாவை சந்தித்த பிறகு, வால்டரையும் பாபா சந்திக்க விரும்புவதாகக் கூறினார். முதலில், வால்டரின் மனைவி ஹெடி (39), ஒரு கலைஞர், பாபா மீது அதிக அக்கறை காட்டவில்லை, ஏனெனில் அவர் ராமகிருஷ்ணாவைப் பின்பற்றி வந்தார். எப்படியும் விருப்பமில்லாத மனநிலையில், ஹெடி, வால்டருடன் சென்றார்; மெஹர் பாபாவைப் பார்த்த அந்த கணமே அவரின் அன்பால் ஆட்கொள்ளப்பட்டார். ஓட்டோ பில்லோவின் தொடர்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது, ஏனெனில் அவரது மகள் ஐரீன் பாபாவுடன் மிகவும் நெருக்கமாக இருக்க விதிக்கப்பட்டவர்.

மெஹர் பாபா, ஃபெல்ட்மெயிலன் நகரில் அமைந்த மெர்டென்ஸின் தோட்டத்தில் ஓர் இரவு தங்கியிருந்து, டிசம்பர் 16ஆம் நாள் ஸூரிக் நகரிலிருந்து புறப்பட்டு, அன்றிரவு ஜெனோவா (GENOA) வந்து சேர்ந்தார்; பாபா, 'ஸவோய் மெஜஸ்டிக்' (SAVOY MAJESTIC HOTEL) ஹோட்டலில் தங்கியிருந்தார், அங்கு அவரது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நோரினா, எலிஸபெத் இருவருடனும் பாபா கலந்துரையாடினார். சில மேற்கத்திய அன்பர்கள் விரைவில் இந்தியாவிற்கு வர இருந்ததால், பாபா அவர்களின் வருகையைக் குறித்து விரிவாகத் திட்டமிட்டார்.

இந்தியாவிற்கு திரும்பும் பயணத்திற்காக, பாபா, 17ஆம் தேதி எகிப்து நாட்டை நோக்கிப் புறப்பட்ட எஸ்பீரியா (ESPERIA) கப்பலில் குயன்டின், விஷ்ணு,

காக்கா, ஜால்பாய், ஆதி ஜூனியர் ஆகியோருடன் சென்றார். எலிஸபெத், நோரினா இருவரும் மூன்று நாட்களுக்குப் பிறகு நியூயார்க் புறப்பட்டுச் சென்றனர்.

1932, டிசம்பர் 20ஆம் நாள், பாபா அலெக்ஸாண்ட்ரியா (ALEXANDRIA - எகிப்து) வந்து சேர்ந்தார். ஏற்கனவே திட்டமிட்டதற்கு இணங்க ஆதி ஜூனியர், விஷ்ணு, ஜால்பாய் ஆகியோர் 'போட் ஸெட்' (PORT SAID) துறைமுகத்திற்கு ரயிலில் புறப்பட்டு, அங்கிருந்து அவர்கள் இந்தியாவிற்கு 'நால்டேரா' (NALDERA) கப்பலில் பயணத்தைத் தொடர்ந்தனர். இதற்கிடையில் பாபா, காக்கா, குயன்டின் ஆகியோர் கெய்ரோ (CAIRO) நகருக்குச் சென்று, மறுநாள் காலை ஆறு மணிக்குத் திரும்பி வந்து 'ஹோட்டல் பென்ஷன் மொராண்டி'யில் (HOTEL PENSION MORANDI) தங்கினர்.

அன்றிரவு அவர்கள் கெய்ரோ நகரைச் சுற்றி நடந்து வந்து, பின்னர் ஹோட்டலுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், மெஹர் பாபா, வீதியில் திடீரென, அங்கும் இங்கும் நகராமல் நின்றார். அரை நிமிடம் கழித்து, அவர் மீண்டும் நடையைத் தொடர்ந்தார். குயன்டினை அழைத்து, பாபா எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார், "**எனது முகவர்களில் ஒருவரிடமிருந்து, நான் இந்தியாவில் அவசரமாகத் தேவைப்படுகிறேன் என்ற ஒரு செய்தி வந்துள்ளது**." மறுநாள் காலையில், பாபா, குயன்டினை, தாமஸ் குக் அலுவலகத்திற்கு அனுப்பி, அங்கு வந்திருக்கும் தொலைத்தந்தியைக் கண்டுபிடித்து வருமாறு கூறினார். பாபா கூறியபடியே குயன்டின் தொலைத்தந்தியை எடுத்து வந்தார்; "ஒரு சில ஏற்பாடுகளைச் செய்து முடிக்க, உடனடியாக இந்தியாவில் நீங்கள் இருக்க வேண்டியது அவசியம்" என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1932, டிசம்பர் 23 அன்று மெஹர் பாபா கெய்ரோவை விட்டு வெளியேறி, ஹெல்வான் (HELWAN) புறநகருக்குப் பயணம் செய்து, 'இங்கிலிஷ் விஸிட்டர்ஸ்' ஹோட்டலில் (ENGLISH VISITORS'S HOTEL) தங்கினார். கிறிஸ்துமஸ் தினத்தன்று, ஜோஸரின் (DJOSER) பழங்கால பிரமிடைப் பார்க்க அவர் ஸக்காரா (SAQQARA) கிராமத்திற்குச் சென்றார். பாபா, ரயிலில் செல்ல விரும்பினார், ஆனால் குயன்டின் காரில் செல்லுமாறு பரிந்துரைத்து, பழமையான கார் ஒன்றை வாடகைக்கு எடுத்தார். பயண பொருட்களை வைக்க இடமில்லாததால், காக்கா மிகவும் சிரமப்பட்டு அங்கும் இங்கும் வைக்க வேண்டிய நிலை. எகிப்தின் இந்தப் பகுதியில் மழை பொழிவது அபூர்வம், ஆனால் அந்த நாள் அவர்கள் ஐந்து மைல் தூரம் சென்றதும் பலத்த மழை பொழியத் தொடங்கியது. பாபா, குயன்டின் செய்ததை நினைத்து அதிருப்தியை வெளிப்படுத்தினார்; இதன் மூலம், 'பாபா அவருடைய விருப்பத்தை வெளிப்படுத்தும் போது, ஒருவர் தனது சொந்த பரிந்துரைகளை முன்வைக்கக் கூடாது' என்பதை, குயன்டின் கற்றுக்கொண்டார்.

26ஆம் நாள் கெய்ரோவிற்குத் திரும்பி வந்த பாபா, அடுத்த நாள் மீண்டும் அலெக்ஸாண்ட்ரியா சென்று, கெய்ரோவிற்குத் திரும்பி வந்தார். அவர் கெய்ரோ அருங்காட்சியகத்திற்கு விஜயம் செய்து, அற்புதமான 'துட்டகாமென்'

(TUTAKHAMEN) தொகுப்பைப் பார்த்தார். 31ஆம் நாள், பாபா மீண்டும் பழைய காப்டிக் தேவாலயத்திற்கு விஜயம் செய்தார் - இந்த ஆலயத்தில் ஜோஸ.ஃப், மேரி இருவரும் குழந்தை இயேசுவை ஹெரோதிடமிருந்து (HEROD) பாதுகாத்தனர்.

1933ஆம் ஆண்டின் முதல் நாளில், பாபா ஸ்பிங்ஸையும் (SPHINX), கிஸாவில் அமைந்த சீயப்ஸ் மற்றும் கெ.ஃப்ரினின் (CHEOPS AND CHEPHREN AT GIZEH) பெரிய பிரமிடுகளையும் பார்வையிட்டார்.

1933, ஜனவரி 2ஆம் நாள், மெஹர் பாபா ‘போட் ஸெட்’டுக்குப் (PORT SAID) புறப்பட்டார்; மறுநாள் மாலையில் இலங்கையை நோக்கி எஸ்.எஸ். பலோரன் (SS BALOERAN) கப்பலில் பாபா பயணத்தைத் தொடர்ந்தார்.

பயணத்தின் நடுவில், பாபா, குயன்டினிடம், தனது குடும்பத்தினருடன் பயணம் செய்யும் ஒரு டச்சு (DUTCH) சிறுமியைக் குறித்து, அசாதாரணமான எதையாவது கவனித்தீர்களா என்று கேட்டார். குயன்டின் முதலில் குறிப்பாக எதையும் கவனிக்கவில்லை என்றும், ஆனால் அவர் நொண்டு நடை போட்டு நடப்பதையும், உடல்நிலை சரியில்லாமல் இருப்பதையும் கண்டதாகத் தெரிவித்ததும், பாபா இவ்வாறு விளக்கினார், "**பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில், அவர் ஓர் ஆண் யோகியாக இருந்தார். உபவாசம் மற்றும் தியானத்தின் மூலம் உயர்ந்த உணர்வு நிலையை அடைய முயன்ற போது, அவர் மாரடைப்பால் இறந்தார். தொடர்ந்து வந்த ஒவ்வொரு பிறவியிலும் அவர், ஆண் அல்லது பெண்ணாக இருந்தாலும், நொண்டு நடையுடன் வாழ்ந்து வருகிறார். இந்தத் துன்பத்திலிருந்து விடுவிக்க, அவருடைய பாசத்தை நான் வென்றாக வேண்டியது அவசியம்.**"

பாபா, படிப்படியாக அந்த சிறுமியைத் தன் பக்கம் ஈர்க்கத் தொடங்கினார்; ஒவ்வொரு நாளும் சிறுமியுடன் அதிக நேரம் செலவிட்டார்; பிங்-பாங், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடினர். பயணத்தின் முடிவில், அந்த சிறுமியின் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

இலங்கையை நெருங்கும் நேரத்தில், பாபா, ஒரு மாத காலம் ஏகாந்தவாசம் இருக்க விரும்புவதாக, காக்கா மற்றும் குயன்டினுக்குத் தெரிவித்தார்.

1933, ஜனவரி 12ஆம் நாள் அவர்கள் கொழும்பு வந்து சேர்ந்து, ‘ஒய்ட் ஹார்ஸ்’ ஹோட்டலில் (WHITE HORSE HOTEL) மூன்று நாட்கள் தங்கியிருந்தனர்.

ஜனவரி 15ஆம் நாள், பாபா இலங்கையின் உட்புற பகுதியில் பயணித்து, பண்டாரவேலா (BANDARAWELA), தியத்தலாவா (DIYATALAWA) நகரங்களுக்கு இடையே அமைந்த ஒரு மலையில் ‘வில்லா வலென்சியா’ (VILLA VALENCIA) என்ற பங்களாவில் தங்கியிருந்தார். இலங்கை மிகவும் சமமான காலநிலை இருப்பதாகக் கூறப்படும் ஒரு பகுதி; அழகானது, இயற்கை காட்சி நிறைந்தது, பாபாவின் பங்களாவின் பின்னால் அமைந்த ஆழமான பள்ளத்தாக்கின் வழியே பொங்கி ஓடும் ஒரு நதி இடைவிடாத கர்ஜனையை ஏற்படுத்தியது.

பங்களாவிற்குச் சென்ற சிறிது நேரத்தில், பாபா அஸிஸியில் செய்ததைப் போல், இங்கும் 24 மணிநேரம் ஏகாந்தவாசம் மேற்கொள்ளத் தகுந்த இடத்தைக் கண்டுபிடிக்குமாறு காக்காவிற்கு அறிவுறுத்தினார். பண்டாரவேலா பகுதியில் சுற்றி அலைந்து, ஒரு குறுகிய வீதியில் அமைந்த புத்த கோயிலை, பொருத்தமான இடமாகக் கண்டுபிடித்து, பாபாவை அங்கு அழைத்துச் சென்றார். கோவில் பூசாரி அவர்களை கோவிலுக்குள் நுழைய அனுமதிக்காததால், அவர்கள் அங்கே சில படிகளில் இறங்கி திறந்த முற்றத்தில் நின்றனர்.

பக்கத்து வீட்டின் கதவைத் திறந்து, குறைந்தது 100 வயதான ஒரு பெரியவர் வெளியே வந்தார். அவர் உடனடியாக, பாபாவை அடையாளம் கண்டுகொண்டது போலத் தோன்றியது; பாபா, கை சைகையால் அவருடன் பேசத் தொடங்கினார், "24 **மணி நேரம் இடையூறு எதுவும் இல்லாமல் நான் தனிமையில் இருக்க ஓர் அறை வேண்டும்**" என்று பாபா கூறியதும், அந்த முதியவர் உடனடியாக அதைப் புரிந்துகொண்டு, கோவிலைத் திறந்து பாபாவிற்கு அறையை வழங்குமாறு கோவில் பூசாரியைக் கேட்டுக்கொண்டார். இருப்பினும், பாபா தனது திட்டத்தை மாற்றினார். அதற்குப் பிறகு, பாபா, '**அந்தப் பெரியவர் நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டு இருந்ததாகவும், இலங்கையை விட்டு வெளியேறும்போது, அவருக்கு ஐந்தாவது ஆன்மீகத் தளத்திற்கான உந்துதலை வழங்கப் போவதாகவும், அவர் மத்திய இலங்கைக்குப் பொறுப்பான ஆன்மீக முகவர்**' என்றும் குறிப்பிட்டார்.

ஏகாந்தவாசத்தில் அமர பாபா விருப்பம் தெரிவித்தது, அந்த மேம்பட்ட ஆத்மாவைத் தொடர்பு கொள்வதற்கான ஒரு சாக்குப்போக்காக இருக்கலாம் என்று தோன்றியது.

இதற்கு நடுவே, ஆதி சீனியர் ஜனவரி 19ஆம் நாள் இலங்கைக்கு வந்து, பாபாவுடன் இரண்டு நாட்கள் தங்கிய பின்னர் இந்தியா திரும்பினார். ஜனவரி 26 அன்று பண்டாரவேலாவில், பாபா 'சிலோன் அப்ஸர்வர்' (CEYLON OBSERVER) பத்திரிகையைச் சேர்ந்த ஒரு நிருபரை சந்தித்தார்; அவர் மகாத்மா காந்தி, இந்தியா, மதம், அவரது மௌனத்தின் நோக்கம், அமெரிக்கா சென்றதன் முக்கிய காரணம் போன்ற பல விஷயங்களைக் குறித்த கேள்விகளை எழுப்பினார். பாபாவின் பதில் பின்வருமாறு:

**காந்தியின் அமைதியான எதிர்ப்பின் இயக்கத்தைப் பாருங்கள். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் இது அற்புதமானது, ஏனெனில் அது நேர்மை, உண்மை, அஹிம்சை ஆகியவற்றைத் தழுவுகிறது. ஓர் அரசியல் ஆயுதமாக அதன் மதிப்பை என்னிடம் கேட்க வேண்டாம். எனக்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை...**

**தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரை, நான் அவர்களை நேசிக்கிறேன். அவர்கள் என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானவர்கள். சமீபத்தில், நான் அவர்களின் தலைவர் டாக்டர் அம்பேத்கரை வரவழைத்து என்ன செய்ய வேண்டும் என்று**

**அறிவுறுத்தினேன். ஆச்சாரமான இந்து மனப்பான்மையை நான் முட்டாள்தனமாகப் பார்க்கிறேன். ஆனால் நான் எவரையும் கண்டிக்கவும் இல்லை, எவரையும் வெறுக்கவும் இல்லை.**

**எனது மதம்? நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல, இருந்தும் ஒவ்வொரு மதமும் என்னைச் சார்ந்தது. அன்பு எனது முதன்மையான ஊடகம். அளவிறுதியற்ற ஒன்றை அன்பு, நேர்மை இவற்றின் மூலம் மட்டுமே அடைய முடியும். கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் சமய சம்பிரதாயங்களை நான் நம்பவில்லை. கலை, அறிவியல், இயற்கை, அழகு - இது போன்ற வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் கடவுளை உணர முடியும். அதுவே எனது மதம்.**

**நான் எட்டு ஆண்டுகளாக மௌனம் அனுஷ்டிக்கிறேன். இது ஒரு சபதம் அல்ல, ஆனால், ஆன்மீகக் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது. விரைவில், எனது போதனைகளின் பணி தொடங்கும். இதை அமெரிக்காவில் தொடங்குவதற்கான எனது காரணம் என்னவெனில், அமெரிக்கா, பொருள் சார்ந்த விஷயங்களில் மிகவும் ஆழமாக மூழ்கி, அதன் விளைவாக மிகவும் துன்பப்படுவதால், ஒரு புதிய ஆன்மீக மறுபிறப்பு முதலில் நடைபெற வேண்டிய மண் அது. அமெரிக்காவின் பொருள் சார்ந்த சக்திகளை ஆன்மீகத்தின் உச்சத்திற்குத் திருப்பிவிட, ஒரு குருநாதரின் உதவிக்கரம் இன்றியமையாத ஒன்று.**

**உங்கள் இலங்கை மிக அருமையான நாடு. நான் இங்கு மீண்டும் வருவேன். நான் விரைவில் இந்தியாவிற்குப் புறப்பட உள்ளேன், தொடர்ந்து சீனா, ஹொனலுலு வழியாக அமெரிக்கா செல்லும் வழியில் இங்குத் திரும்பி வருவேன்.**

**நான் இங்கே ஆஷ்ரமம் ஒன்றை நிறுவுவேனா? ஒருவேளை.**

பாபா, காக்கா, குயன்டின் ஆகியோர் ஜனவரி 27ஆம் நாள் கொழும்பு (COLOMBO) திரும்பினர். பாபா உபவாசம் இருந்து 29ஆம் தேதி வரை அங்கே தனிமையில் இருந்தார், மறுநாள் காக்காவுடன் கப்பலில் இந்தியாவிற்குப் புறப்பட்டு, மதராஸ் வழியாக மும்பைக்கு ரயிலில் பயணம் செய்தார். 1933 பிப்ரவரி 2ஆம் நாள் இரவில் நாசிக் திரும்பினர்.

இதற்கிடையில், இலங்கையிலிருந்து குயன்டின் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்; பாபா, இந்தியாவிற்கு வர அழைப்பு விடுத்த மேற்கத்திய பெண்மணிகளை அழைத்து வருமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஜனவரி 10ஆம் நாள் ஷாங்காய் (SHANGHAI) நகரை விட்டு வெளியேறிய சாஞ்சி, விஷ்ணு, ஜால்பாய், ஆதி ஜூனியர் ஆகியோர் 28ஆம் நாள் மும்பை வந்து சேர்ந்தனர்.

சில நாட்கள் மண்டலியுடன் நாசிக்கில் தங்கிய பிறகு, பாபா மும்பைக்குச் சென்றார். 1933, பிப்ரவரி 10 அன்று, பாரசீகத்திற்கு பதிலாக, பிரிட்டிஷ் பாஸ்போர்ட்டைப் பெறுவது குறித்து அவர் திடீரென முடிவு செய்தார்,

மேலும் ஆதி சீனியரிடம் பிரிட்டிஷ் துணை தூதரகத்திற்குத் தேவையான ஆவணங்களைக் கொண்டு வரக் கூறினார்.

பாபாவின் பாஸ்போர்ட் விண்ணப்பத்தில், தொழில் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு, சாஞ்சி: 'ஆன்மீக ஆசிரியர்' என்றும், புலப்படும் தனித்துவமான அடையாளங்களுக்கு, 'புருவங்களின் மத்தியில் வடு' என்றும் குறிப்பிட்டார் - இது 1914ஆம் ஆண்டு உபாஸனி மஹாராஜ் வீசிய கல்லால் உருவான வடு; அது ஒரு நிரந்தர அடையாளத்தை விட்டுச் சென்றது.

இம்முறை இந்த விண்ணப்பத்தில் எம்.எஸ்.ஈரானி என்று கையெழுத்திட பாபாவிற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை; இதனால் பாஸ்போர்ட் (எண் 83270) அதே நாளில் வழங்கப்பட்டது; மேலும் சீனா, அமெரிக்கா தேசங்களுக்குச் செல்லத் தேவையான விஸாக்களும் பெறப்பட்டன.

அன்று மாலை பாந்த்ராவில் (BANDRA) சில முஹமதிய ஆதரவாளர்களை பாபா சந்தித்தார். அவ்வேளையில் வாழ்வின் சந்தோஷத்தைப் பற்றிய பேச்சு எழுந்ததும், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**ஹாலிவுட் திரைப்பட நட்சத்திரங்களைப் பாருங்கள். அவர்களிடம் ஏராளமான பணம், பெயர், புகழ் அனைத்தும் உள்ளன - இருந்தும் அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களாகவே இருக்கிறார்கள், ஏன்**? **ஏனெனில் பணத்தால் மட்டுமே மகிழ்ச்சியைப் பெற முடியாது. இது, மகிழ்ச்சியை நாடி, பணத்தின் பின்னால் தொடர்ந்து ஓடும் மனிதகுலத்தின் மிகப் பெரிய, கவலைக்குரிய தவறுகளில் ஒன்றாகும்**.

'**தீய சக்திகள்**' (ஊசலாடும் ஆவிகள்) **மனிதனை ஆட்கொள்ளுவதைப் பற்றி, சில சூழ்நிலைகளில் அது நிகழ்கிறது** என்பதை, பாபா உறுதிப்படுத்தினார்: "**தீய சக்திகள் சில சமயங்களில் தங்கள் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய, சில உடல்களில் புகுந்து கொள்கின்றன. அதனால்தான் சில விசித்திரமான மற்றும் பயங்கரமான சம்பவங்கள் நிகழ்கின்றன, ஆனால் தீய சக்தியால் ஆட்கொள்ளப்படுவதற்கு அந்த நபர் பொறுப்பல்ல**."

நாசிக் திரும்பியதும், பாபா தனது மேற்கத்திய 'பறவைகளின்' வருகைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். மும்பை, காந்திவலி (KANDIVALI) அருகில் பெண் மண்டலிக்கு மார்க்கரின் (MARKER) பெரிய பங்களாவும், மேற்கத்திய அன்பர்களுக்காக மெஜஸ்டிக் ஹோட்டலில் (MAJESTIC HOTEL) அறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. அருகிலமைந்த பண்டர்தாரா (BHANDARDARA) ஏரிக்கு மூன்று நாள் பயணமும் திட்டமிடப்பட்டது.

மெஹர் பாபா, முதலில் தனது மேற்கத்திய அன்பர்களை இந்தியாவில் ஆறு மாதங்கள் தங்குமாறு அழைத்திருந்தார், அதன் பிறகு சீனா, ஜப்பான் வழியாக ஐரோப்பா, அமெரிக்காவிற்கு அவர்களோடு செல்வதாக இருந்த திட்டம், பாபாவுடன் அடிக்கடி நிகழ்வது போலவே, விரைவில் மாற்றப்பட்டது.

ஒரு நாள், பாபா, நாசிக் நகரில் ஆண் மண்டலியை சந்தித்தபோது, டாக்டர் கனி பின்வரும் கனவை விவரித்தார்:

எனது கனவில், ஒரு புனிதமான நபரை நான் கண்டேன், அவரின் உருவத்தையும் ஆளுமையையும் என்னால் சரியாகத் தீர்மானிக்க முடியவில்லை. அவரை நெருங்கி, மெஹர் பாபாவைப் பற்றிய பல கேள்விகளைக் கேட்டேன்: அவர் யார்? அவர் எங்களோடு என்ன செய்ய உள்ளார்? 'வட்ட அமைப்பு' என்ற வார்த்தைகளின் உண்மையான அர்த்தம், அதன் முக்கியத்துவம் போன்ற பல விஷயங்கள். எனது எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கும் விதத்தில் அவர் பின்வருமாறு கூறினார்: "இயேசு கிறிஸ்து என்ற பெயரில் ஒரு நபி இருந்ததாகவும், அவருக்குப் பின்னர் அரேபியாவில் முஹம்மது வந்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அதே நபர்தான் இன்றைய மெஹர் பாபா. நீங்கள் அவருடன் இருப்பது நல்லது; சரியான நேரத்தில் அவரைச் சென்றடைந்தீர்கள்!"

**பாபா சிரித்துக்கொண்டே, ஆமாம் என உடன்பட்டார்.**

1933, பிப்ரவரி 15ஆம் நாள், பாபா, மெஹராபாத் சென்று, அங்குள்ள விஷயங்களை மேற்பார்வையிட்டு, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். சாஞ்சி அவரது குறிப்பேட்டில் பதிவு செய்தபடி, பதினேழு பேர் அவருடன் 'பழைய' பேருந்தில் சென்று அடுத்த நாள், பாபாவும் குழுவும் நாசிக் திரும்பினர்.

நாசிக் திரும்பி வரும் வழியில், அஹமதுநகர் அருகே, பஸ் கட்டுப்பாட்டை மீறிச் சென்றபோது, பாபா ஆதி சீனியரை (டிரைவர்) பின்னால் தள்ளி விபத்தைத் தவிர்த்தார். அதற்குப் பிறகு பயணம் தொடர்ந்தது.

நாசிக் திரும்பியதும், பாபா விஸா சம்பந்தமாக, மும்பைக்கு மார்ச் 3ஆம் தேதி புறப்பட இருந்தார். புறப்படும் முன்னர், அவர் ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்தார்: வெளியளவில் எந்தக் காரணமும் இல்லாதபோதும், அவர் தனது கையில் 'பிளாஸ்டர் ஆஃப் பாரிஸை'ப் (PLASTER OF PARIS) பயன்படுத்தினார். பாபா, மும்பைக்கு வந்தபோது, மீண்டும் அதையே செய்தார், பாபாவின் இந்தச் செயலுக்குப் பின்னால் மறைந்திருக்கும் இரகசியத்தை மண்டலியால் புரிந்துகொள்ள முடியவில்லை. அன்று இரவு சாஞ்சியின் இரண்டு வயது மருமகன், தாரா தாதாசாஞ்சிக்கு ஏற்பட்ட கடுமையான விபத்தில், குழந்தை கிட்டத்தட்ட உயிரைத் துறக்கும் நிலையில் இருந்தது. அந்தக் குழந்தையின் காயங்களுக்கு பிளாஸ்டர் ஆஃப் பாரிஸைப் பயன்படுத்துமாறு பாபா பெற்றோருக்கு அறிவுறுத்தினார்; அப்போதுதான் பாபா, அதற்கு முன்பு செய்ததன் அர்த்தத்தை மண்டலி புரிந்து கொண்டனர்.

1933ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள், மெஹர் பாபா, 'போர்' (BHOR) மாவட்ட மஹாராஜாவின் அழைப்பை ஏற்று, அங்குச் செல்ல இருந்தார். வழியில், லோனவாலாவில் டாக்டர் கனி இல்லத்தில் தேநீர், காலை சிற்றுண்டியை முடித்துவிட்டு, பூனாவில் டாக்டர் நீலு வீட்டிற்கும் சிறிது நேரம் விஜயம் செய்தார். அதற்குப் பிறகு பாபா 'போர்' நகருக்குச் சென்றார், அங்கு

மன்னருடன் மக்களும் இணைந்து சிறப்பான வரவேற்பு அளித்தனர். அனைவருக்கும் தரிசனம் வழங்கி, பாபா மறுநாள் கோலாப்பூர் சென்று, நாசிக் திரும்புவதற்கு முன்பு, பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சந்தித்தார்.

பெஹராம் தனது வருங்கால மனைவி பெரின், மெமோ, தங்கை மணி ஆகியோருடன் 15ஆம் தேதி நாசிக் வந்தார். பெஹராமும், பெரினும் ஒரு வாரத்திற்குப் பிறகு, மார்ச் 21ஆம் நாள், தியோலாலி (DEOLALI) குறுநகரில் அமைந்த ஸொராஸ்ட்ரியன் நெருப்பு கோவிலில் (ZOROASTRIAN FIRE-TEMPLE) திருமணம் செய்து கொண்டனர்; மெமோ மிக்க மகிழ்ச்சி அடைந்தார். திரைப்பட அரங்கம் அருகே பந்தலமைத்து வண்ண விளக்குகள் மற்றும் பூக்களால் அலங்கரிக்கப்பட்டது. மும்பை, நாசிக் பகுதியைச் சேர்ந்த விருந்தினர்களுக்கு மதிய, இரவு உணவு வழங்கப்பட்டது. அடுத்த நாள், பாபாவுடனான வரவேற்பு விருந்தில் கிட்டத்தட்ட 300 நபர்கள் கலந்து கொண்டனர். அங்கு நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுடன் மாஸ்டர் கிருஷ்ணாவின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா ஆண் மண்டலியில் பெண்டு, விஷ்ணு ஆதி சீனியர் மூவரையும் சந்தித்து, மேற்கத்திய அன்பர்களின் வருகைக்கான ஏற்பாடுகள் குறித்து விரிவான வழிமுறைகளை வழங்கினார். இந்தியாவில் பயணம் செய்வதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது. சாஞ்சி வேண்டிய ஏற்பாடுகளை கவனிக்க மும்பைக்குச் சென்றார்.

பாபா 1933 மார்ச் 25 முதல் நான்கு நாட்கள் நெருங்கிய பெண் மண்டலியுடன் பண்டர்தாரா ஏரிக்குச் சென்றார்; பின்னர் ஏப்ரல் 3ஆம் நாள் பெண் மண்டலியை மும்பை, காந்திவலிக்கு அழைத்துச் சென்றார். மெஹராவைத் தவிர, மணி, நாஜா, பெரிய கோர்ஷெத், ஸூனாமாஸி, சிறிய கோர்ஷெத், ஃப்ரீனி, குல்மாயுடன் அவரது மகள் டாலி, பீலாமாய், மகள் ஸில்லா ஆகியோரும் இருந்தனர்.



மெஹர் பாபா, நாசிக் - 1933



மேற்கத்தியர்கள் இந்தியா வருகை, **1933** - கிட்டி டேவி, டிலியா,
நோரினா, மின்டா, விவியன், கிரிஸ்டின், ஆட்ரி வில்லியம்ஸ்
அமர்ந்திருப்பவர்கள்: மேபெல், குயன்டின், மார்கரெட்



மெஹர் பாபாவுடன் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய பெண் மண்டலி,
மும்பை, ஏப்ரல் **1933**

# மேற்கத்தியர்கள் இந்தியா வருகை

**(Westerners Coming to India)**

மேற்கத்திய அன்பர்கள் ஐரோப்பாவில் சந்தித்து, ஜெனோவாவிலிருந்து 1933, மார்ச் 28 அன்று, விக்டோரியா கப்பலில் பயணம் செய்தனர். லண்டன் குழுவில் கிட்டி, மார்கரெட், மேபெல், ஆட்ரி, மின்டா, டிலியா, கிறிஸ்டின், குயன்டின் ஆகியோர் இருந்தனர்; அமெரிக்க அன்பர்கள் எலிஸபெத், நோரினா, விவியன் கீஸன் (VIVIENNE GIESEN - கிம் டோல்ஹர்ஸ்டுக்கு பதிலாக) அனைவரும் ஏப்ரல் 7 அன்று மும்பையை வந்தடைந்தனர்.

மேற்கத்திய நண்பர்களை வரவேற்க, இந்திய அன்பர்கள் கப்பல் தளத்திற்குச் சென்றனர்; ஃபிரீனி, தீனா தலாட்டி இருவரும் ஒவ்வொருவருக்கும் பூச்செண்டு வழங்கி, பூமாலை அணிவித்து வரவேற்றனர். மண்டலி அனைவரையும் மெஜஸ்டிக் (MAJESTIC) ஹோட்டலுக்கு ஓய்வெடுக்க அழைத்துச் சென்றனர்.

மதியம் இரண்டு மணிக்கு அனைவரையும் காந்திவலிக்கு அழைத்துச் சென்றதும், அங்கு அவர்களுக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. அனைவரும் பாபாவைப் பார்த்து, வாழ்த்துத் தெரிவிக்க உள்ளே விரைந்தனர். அதற்கு பதிலாக அவர்களை சிறிய கோர்ஷெத் சந்தித்து, அவரது சிதைந்து போன ஆங்கிலத்தில், "பாபா கண்டு கொள்ளப்பட்டது! பாபா கண்டு கொள்ளப்பட்டது! - BABA FOUND! BABA FOUND!" ('பாபாவைக் கண்டு பிடியுங்கள்' என்பதற்கு பதிலாக) என்று கத்தினார்.

பாபா வீட்டின் உள்ளே மறைந்து கொண்டு, அவரைத் தேடிக் கண்டுபிடிக்க, மேற்கத்திய நண்பர்களிடம் கூறுமாறு கோர்ஷெத்திற்கு அறிவுறுத்தியிருந்தார். அவருக்கு சரியான ஆங்கிலம் தெரியாது, எனவே அவர் சரி என்று நினைத்ததை மீண்டும் மீண்டும் கூறினார். இது அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது; பின்னர், அவர்கள் பாபாவைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்று யாரோ விளக்கியதும், அனைவரும் வேடிக்கையான 'அவதார புருஷரின் கண்ணாமூச்சி' விளையாட்டில் பங்கெடுத்தனர், இறுதியில் டிலியா, பாபாவைக் கண்டுகொண்டார்.

பாபா வெளியே வந்ததும், மெஹரா, அவரது மஹாராணி, இதர பெண் மண்டலியும் அவருடன் இணைந்தனர்; அழகான புடவைகளை அணிந்திருந்தார்கள். பாபாவுடன் இதுவே முதல் முறையாக நல்ல ஆடைகளை அணிய அவர்களுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பு.

பாபா, மெஹராவை அறிமுகப்படுத்தினார், பாபா விவரித்தபடியே - தூய்மையும் அழகும் மிக்கவர் என்பதை மேற்கத்திய பெண்கள் கண்டுகொண்டனர். பின்பு மணி, ஃபிரீனி, குல்மாய், நாஜா, பெரிய கோர்ஷெத், சிறிய கோர்ஷெத் ஆகியோரும் அறிமுகப்படுத்தப்பட்டனர். அனைத்து பெண்களும் தங்கள் இந்திய சகோதரிகளுடன் பரிசுகளைப் பரிமாறிக்கொண்டனர்;

மேலும் பெண் மண்டலி மேற்கத்திய பெண்களுக்கு, புடவைகளை அணிவித்து அழகு பார்த்தனர்.

மெஹர் பாபாவின் இணையற்ற அன்பு, கிழக்கு மேற்கு என்ற எந்த பாரபட்சத்தையும் ஏற்படுத்தவில்லை; அனைத்து சூழ்நிலையிலும் ஒற்றுமையின் சாரத்தை அனைவரும் உணர்ந்தனர். பிரியமானவர்களுடன் அன்பின் சகவாசம் ஆரம்பமானது; கோபிகைகளின் இதயங்கள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

மேற்கத்திய நண்பர்கள் தங்கள் ஹோட்டலுக்கு இரவில் திரும்பிச் சென்றனர். மெஹர் பாபாவுடன் இருந்தபோது, ஆட்ரி, கிறிஸ்டின் ஆகியோர் அவர்கள் கப்பலில் சந்தித்த வேறு சில பயணிகளை சந்திக்கலாமா என்று கேட்டதற்கு, பாபா, "**இல்லை, அப்படி எதற்கும் அனுமதி இல்லை. நீங்கள் அனைவரும் ஆன்மீக குருநாதருடன் இருக்க இங்கு வந்துள்ளீர்கள். ஆட்ரி, கிறிஸ்டின் இருவரும் விரும்பினால் ஐரோப்பாவிற்கான அடுத்த கப்பலில் திரும்பிச் செல்லலாம். அவர்கள் இந்திய மண்ணில் கால் வைக்க வேண்டியது அவசியம்; அதை அவர்கள் இப்போது செய்துவிட்டார்கள்.**" பாபா சொன்னதைத் தெரிவித்த பின்னர், இரண்டு இளம் பெண்களும் இந்தியாவில் இருப்பதையே விரும்பினர்.

1933, ஏப்ரல் 9 அன்று, பாபா இந்திய பெண் மண்டலியுடன் நாசிக் திரும்பி வந்து, பின்பு பண்டர்தாரா ஏரிக்குச் சென்றார். அடுத்த நாள் மேற்கத்திய அன்பர்களும் அவர்களோடு இணைந்து மூன்று நாட்கள் அங்கே தங்கியிருந்தனர். பாபா அவர்களை ஏரியில் பயணம் செய்ய அழைத்துச் சென்றார். பாபா, குறிப்பாக அவர்களிடம், அவர் எங்குச் சென்றாலும் அவருடன் இணைந்திருக்கும்படிக் கூறினார். ஒரு நீண்ட நடைப்பயணத்திலிருந்து அனைவரும் திரும்பி வருகையில், அசாதாரண காட்சி ஒன்றைக் காண நேர்ந்தது - கண்ணைப் பறிக்கும் மின்னல், கார் மேகங்கள், சூரிய அஸ்தமனம், அதே நேரத்தில் சந்திர உதயம். பாபாவின் உத்தரவை மீறி கிறிஸ்டின் முன்னால் நடந்து சென்றார். அந்த அற்புத காட்சியைக் காண அங்கு அனைவரும் ஒன்றாக இல்லை என்ற அதிருப்தியை, பாபா தெரிவித்தார்.

பாபா அவரது கடுமையான சீற்றத்தை வெளிப்படுத்தி, எழுத்துப்பலகை வழியாக எடுத்துரைத்தார்: "**நீங்கள் எனது கட்டளைகளைப் பின்பற்றவில்லை என்றால், என்னிடம் வருவதால் என்ன பயன்? நீங்கள் இந்தியாவில் வேடிக்கையாக உல்லாசப்பயணம் செய்வதாக இருந்தால், ஒரு சுற்றுலாப் பயணியைப் போல் உல்லாசமாக இருங்கள்! அதனால் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை; ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், என்னுடன் நடந்து செல்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது.**"

அவர்கள் அந்தக் காட்சியை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த போது, எலிஸபெத், பாபாவிடம், "நீங்கள் எங்களிடமிருந்து மிகவும் வித்தியாசமாக இதைப் பார்க்கிறீர்களா?" என்று வினவினார்.

பாபா சிரித்துக் கொண்டே பதிலளித்தார், "**மிகவும் அதிக அளவில். உங்கள் கண்கள் சிறியதாக இருந்தாலும், அவை உலகைப் பார்க்கின்றன.**

**இந்தச் சிறிய கண்களின் வழியாக, இவ்வளவு பரந்த உலகைக் காணமுடிகிறது. ஆனால் அதே கண்களை மூடும்போது, நீங்கள் என்னைக் காண முடியும்!"**

டிலியா கண்களை மூடியபோது, தன்னால் எதையும் பார்க்க முடியவில்லை என்று அறிவித்தார்! அதற்கு, பாபா பதிலளித்தார், "**நீங்கள் கண்களை எப்போது மூடினீர்கள்? கண்களை உண்மையாக மூடுவது என்பது, உங்கள் மனதில் எண்ணங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பதாகும். மனதின் மரணம் கண்களை மூட வைக்கும், அப்போதுதான் என்னுடைய உண்மையான ரூபத்தை நீங்கள் காண்பீர்கள்.**

**"இக்காரணத்திற்காகத்தான் நான், எப்பொழுதும் உங்களை என்னில் கவனமாக இருக்க வேண்டும், வெளிப்புற கவர்ச்சிகளில் கவனம் செலுத்த வேண்டாம் என்று உங்களுக்குக் கூறுகிறேன். ஆனால் நீங்கள் அவற்றின் பின்னால் ஓடி, அதன் மூலம் என்னை இழக்கிறீர்கள்! எனவே நான் சொல்வது போல செய்வதில் கவனமாக இருங்கள்."**

உள்ளத்தை நெகிழ வைக்கும் ஒரு சம்பவம்; உள்ளூர் கிராமவாசிகள் சிலர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். அவர்களில் ஒரு குஷ்டரோகி பாபாவிடம் ஒரு பூவைக் கொடுத்து வணங்கினார். பாபா உடனடியாக, பூவிலிருந்து இரண்டு இதழ்களை எடுத்து, ஒன்றை அவருக்கு சாப்பிடக் கொடுத்து, மற்றொன்றைத் தனது வாயிலிட்டார். நோய்வாய்ப்பட்ட மனிதனைத் தழுவி, அவர் குணமடைந்துவிடுவார் என்று குறிப்பிட்டார்.

1933 ஏப்ரல் 12ஆம் நாள் பண்டர்தாராவிலிருந்து, பாபா, குழுவுடன் இகத்புரி ரயில் நிலையம் சென்று, ஆக்ராவுக்கு ரயிலில் புறப்பட்டார். அவர்கள் நாசிக் ரயில் நிலையத்திற்கு வந்தபோது, "சத்குரு மெஹர் பாபாவிற்கு ஜெய்" என்ற கோஷத்துடன் நூற்றுக்கணக்கான மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக, ரயில் மேடையில் காத்திருந்தனர். ரயில் நிறுத்தப்பட்டதும், கூட்டம் உரத்த ஆரவாரத்துடன் பாபாவின் பெட்டியை நோக்கி விரைந்தது. சிலர் அவரது காலடியில் விழுந்து அழுதனர், சிலர் அவரது கால்களையும் அவரது ஆடையின் முந்தானையையும் முத்தமிட்டனர் - உண்மையில் இது மேற்கத்திய அன்பர்களுக்கு ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஏப்ரல் 13, மதிய வேளையில் ஆக்ரா (AGRA) நகரைச் சென்றடைந்த அவர்கள் லாரீஸ் (LAURIE'S) ஹோட்டலில் தங்கினர். பாபா, காஷ்மீரில் தங்கும் இடத்தை ஏற்பாடு செய்ய ஆதி சீனியர், பெண்டு, விஷ்ணு மூவரையும் முன்கூட்டியே ஸ்ரீநகருக்கு அனுப்பிவைத்தார். ஹோட்டலில் ஓய்வு மற்றும் இரவு உணவிற்குப் பின்னர், ஒன்பது மணிக்கு, பாபா அனைவரையும் தாஜ்மஹாலை நிலவொளியில் காண அழைத்துச் சென்றார். வியப்பூட்டும் நினைவுச்சின்னத்திற்கு அப்பால் உயரும் முழு நிலவைக் கண்டு கோபிகள் மயங்கினர்.

தாஜ்மஹாலின் ஆடம்பரத்தைப் பற்றி, சிலர் கூறிய கருத்துக்களைக் கேட்டு ஆதி ஜூனியர், கிட்டியிடம் தெரிவிக்கையில், "இதில் எந்தவித ஆன்மீகமும் இல்லை. இது மனித அன்புக்காக மட்டுமே அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கம்பீரமான கல்லறை - ஒரு ராஜா தனது ராணியிடம் வைத்திருந்த அன்பு. இதை ஷாஜஹான் கடவுளை வணங்குவதற்காக அர்ப்பணித்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்."

தாஜ்மஹாலைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று பாபா நோரினாவிடம் கேட்டதற்கு, "நான் உங்களைப் பார்த்ததிலிருந்து, வேறு எந்த அழகும் என்னைத் திருப்திப்படுத்தவோ, எந்த விளைவையும் என்னில் ஏற்படுத்தவோ முடியாது!" என்று நோரினா பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே, "**இன்னும் என் உண்மையான அழகையும் சிறப்பையும் நீங்கள் காணவில்லை**!" என்றார்.

அடுத்த நாள் பாபா, அவர்களை மீண்டும் பகல் நேரத்தில் தாஜ்மஹாலைப் பார்க்க அழைத்துச் சென்றார்; அங்குச் சென்றதும், பாபா அவரது திட்டங்களின் மாற்றத்தை அறிவித்தார். மேற்கத்திய அன்பர்கள் ஆறு மாதங்கள் இந்தியாவில் தங்குவதற்காக அழைக்கப்பட்டனர்; மேலும் அவர்கள் தத்தமது வேலை, வீடு, வணிகம், குடும்பம், நண்பர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு வந்தனர்.

இப்போது, இந்தியாவில் ஒரே வாரத்தில், காஷ்மீர் பயணத்திற்குப் பின்னர், அவர்கள் வீடு திரும்ப வேண்டியிருக்கும் என்று பாபா தெரிவித்தார்; இது அவர்களுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது, ஆனால், அவர் திட்டமிட்டதற்கும் முன்னதாக, ஹார்மன் ரிட்ரீட்டை விட்டு வெளியேறி, மௌனத்தைக் கலைப்பதைத் தள்ளிவைத்த போது, பாபா, எல்லா சூழ்நிலைகளிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து, எதிலும் உறுதியாக இருக்கும் தன்மையைக் கற்றுத் தந்தார். **அனைவரும் பாபாவிற்குக் கீழ்ப்படிவார்களா?** "ஆம்" என்று அவர்கள் ஆர்வத்துடன் பதிலளித்ததைக் கண்டு, பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

ஆக்ராவிலிருந்து ரயிலில் ராவல்பிண்டிக்குப் (RAWALPINDI) புறப்பட்டு, ஏப்ரல் 14ஆம் நாள் அங்கு வந்து சேர்ந்தனர். பாபா அந்த இடத்தைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "**ராவல்பிண்டியில் அற்புதமான ஒரு துறவி, அவர் இந்தியாவில் எனது தலைமை முகவர்களில் ஒருவராக இருக்கிறார். அவர், ஆன்மீகக் கீழ்த்தளங்களில் இருக்கும் பல ஆத்மாக்களுக்குக் கட்டளையிடுகிறார். ராவல்பிண்டி இந்தியாவில் ஒரு முக்கியமான சந்திப்பு; காஷ்மீருக்கு வடக்குத் திசையை நோக்கிப் பயணம் செய்யும் பயணிகள் இந்த சந்திப்புக்கு வந்தாக வேண்டும்**" என்று கூறினார்.

ஆதி சீனியர், பெண்டு மற்றும் விஷ்ணு, அவர்களை ராவல்பிண்டியில் வரவேற்று, நோரினா, எலிஸபெத் இருவரையும் பாபாவுடன் ஒரு காரிலும், இதர அனைவரும் இரண்டு கார்களிலும் முர்ரியை (MURREE) நோக்கி சவாரி செய்தனர். இந்தப் பயணத்தின்போது, பாபா கறுப்பு கண்ணாடி அணிந்து,

தலைமுடியைத் தொப்பியால் மறைத்து, அடையாளம் தெரியாமல் தோற்றத்தை மாற்றிக்கொண்டார்.

ஏப்ரல் 15ஆம் நாள், முர்ரி நகருக்கு வந்து, சேம்பர்ஸ் (CHAMBER'S) ஹோட்டலில் இரண்டு நாட்கள் தங்கினர். பாபா, மண்டலி, குயன்டின், மார்கரெட், மேபெல் ஆகியோர் வெளிப்புற குடிலிலும், இதர அனைவரும் ஹோட்டலின் பிரதான கட்டிடத்திலும் தங்கினர்.

1933, ஏப்ரல் 16ஆம் நாள், பாபா மேற்கத்திய நண்பர்களிடம் இவ்வாறு கூறினார்: "**கடவுள் மீதான அன்பு, அதன் உச்சத்தை எட்டும் போது, அது 'நான்' எனும் அகந்தை மற்றும் அனைத்து ஆசைகளையும், ஏக்கங்களையும் அழிக்கிறது. கடவுளும் அவரது காதலரும் ஒன்றுபடுவதைத் தவிர வேறு எதுவும் இல்லை! இதுதான் பரிபூரணமான நிலை.**"

"**காதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியாது; உணர்ச்சி வசப்படுதல், ஆழ்ந்த ஏக்கம், பாலியல் ஈர்ப்பு இவற்றில் எதுவும் இல்லை. ஒரு நபர் ஏதேனும் உலகப்பொருளை அடைய விரும்புவதும் காதல் அல்ல.**"

தொடர்ந்து பாபா, "**என்னை நேசியுங்கள், என்னைப் பின்பற்றி எனக்கு சேவை செய்யுங்கள்!**" என்று கூறி முடித்தார்.

கிட்டி பாபாவிடம், "உங்கள் பணியில் நாங்கள் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?" என்று கேட்டார்.

அதற்கு பாபா, "**என்னை நேசிக்கவும், நான் சொல்வதைச் செய்யவும் வேண்டும். தூய அன்பு ஒருவருக்கு அதைப் புரிய வைக்கும்.**"

அன்று ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் (EASTER); பாபா குழுவுடன் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்திற்கு விஜயம் செய்தார், "**எல்லா வழிபாடுகளும் என்னிடம் திரும்பி வருகின்றன. கிறிஸ்தவர், முஹமதியர் அல்லது யூதர் யாராக இருந்தாலும், ஒரே கடவுளுக்காக, இதயத்தில் ஏக்கத்துடன் பிரார்த்தனை செய்கிறார்கள்.**"

முர்ரி, இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த ஓர் இடம்; அன்றைய தினம் மெஹர் பாபா, குழுவுடன் மலையடிவாரத்தில் நடந்து சென்றபோது, ஓரிரு பிரிட்டிஷ் வீரர்கள் உள்ளூர் மக்களிடம் கொடூரமாகவும் முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டதைக் கண்டனர்.

பாபா இதை கவனித்து, "**இதுதான் இந்தியர்களை நடத்தும் முறை, ஏழை மக்கள் என்பதால் இது பொறுத்துக் கொள்ளப்படுகிறது. இல்லையெனில், வங்காளம், மதராஸ் போன்ற பிற இடங்களில் இப்போதெல்லாம் மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து, அவர்கள் ஆங்கிலேயர்களை அதுபோலவே நடத்தத் தொடங்கியுள்ளார்கள். இது ஆங்கிலேயர்களின் தவறு. ஆனால் எகிப்து நாட்டைப் போலவே இந்தியாவும் 20 ஆண்டுகளுக்குள் சுதந்திரம் அடையும்.**

"**அவர்கள் இழைக்கும் தவறுகள் மற்றும் குறைபாடுகளுடன், ஆங்கிலேயர்கள் சில நல்ல காரியங்களும் செய்துள்ளனர். அவர்கள் மிகவும் நல்லதும், அதே நேரம் தீங்கும் இழைத்துள்ளனர். அது அவ்வாறு நடக்க வேண்டியிருந்தது. இப்போது சில இந்தியர்கள் இங்கிலாந்திலும், சில ஆங்கிலேயர்கள் இந்தியாவிலும் பிறவி எடுத்துள்ளனர். கர்ஸன் இப்போது இந்தியாவில் இருக்கிறார்.**


**"நான் அமெரிக்கர்களை மிகவும் விரும்புகிறேன், இத்தாலியர்களை அவர்களின் நல்ல இதயங்களுக்காக விரும்புகிறேன்; ஆனால் அரேபியர்கள் நடந்து கொள்ளும் விதம் மனதிற்கு இதமாக இல்லை - அவர்கள் தீய குணம் படைத்தவர்கள், காமம் நிறைந்தவர்கள்!"**

இந்தப் பயணத்தில், பெரும்பாலும், எவரும் பாபாவை விட்டுத் தனியாகச் செல்லக்கூடாது என்பது அவரது கண்டிப்பான உத்தரவாக இருந்தது; ஆனால் அவர் இரண்டு குழுக்களாக முர்ரியில் பார்வையிட அனுமதித்தார். நீண்ட தூரம் சென்ற பிறகு, கிட்டி கவலையுடன் காணப்பட்டார், டிலியாவிடம் அவர் ஹோட்டலுக்குத் திரும்பி செல்ல விரும்புவதாகக் கூறினார். டிலியாவும் அவ்வாறே உணர்ந்ததால், இருவரும் தங்கள் அறைக்குத் திரும்ப இருந்தனர். அவர்கள் செல்வதைக் கண்ட பாபா, திரும்ப அழைத்துக் கூறினார், **"நான் உங்களுடன் முக்கியமான ஆன்மீக விஷயங்களை விளக்க விரும்பினேன், ஆனால் நீங்கள் இங்கு இல்லாததால், இப்போது எனது மனநிலையும் மாறிவிட்டது."**

இயன்றவரை, அனுமதிக்கப்பட்ட போதெல்லாம் பாபாவுடன் எப்போதும் ஒன்றி இருக்கவும், வெளி இடங்களைப் புறக்கணிக்கவும் அவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருந்தது. ஒருவரின் மனம், பாபாவை மையமாகக் கொண்டிருந்தால், வெளிப்புற நிகழ்வுகள் எந்த விளைவையும் ஏற்படுத்தாது. நிகழ்வுகளுக்கு மத்தியில் கூட, பாபாவை மையமாக நினைவில் கொண்ட ஒருவர், ஒரே நேரத்தில் அவற்றிலிருந்து விலகி இருக்கிறார். **"என்னுடன் இருப்பதை ஒருபோதும் தவறவிடாதீர்கள்"** என்று பாபா மேலும் கூறினார்.

நோரினா, எலிஸபெத் இருவருடன் பாபா, ஒரு நீண்ட நேர கலந்துரையாடலை மேற்கொண்டார்; மேற்கத்திய நாடுகளில் அவரது எதிர்கால பணிகளைத் திட்டமிட்டார்.

1933, ஏப்ரல் 18 அன்று காலை அனைவரும் முர்ரியிலிருந்து காரில் புறப்பட்டு, காஷ்மீரை நோக்கிச் சென்று, அன்று பிற்பகல் ஐந்து மணிக்கு ஸ்ரீநகரை (SRINAGAR) வந்தடைந்தனர். அவர்கள் இமயமலைப் பகுதி வழியாகப் பயணித்தபோது, சாலையில் இருந்த ஒரு நிலச்சரிவை கடக்க வேண்டியதாயிற்று. ஆட்ரிக்கு எப்போதுமே உயரங்கள் குறித்த பயம் இருந்தபோதிலும், பாபாவுடன் பயணம் செய்யும் வேளையில் எந்த பயமும் இல்லாமல் சரியான பாதுகாப்பு உணர்வு இருப்பதை அவர் நினைவு கூர்ந்தார்.



காஷ்மீரை நோக்கிச் செல்லும் பாதை, 1933



ஹர்வன் கிராமம், காஷ்மீர், 1933

முன்னதாகவே பேருந்து மூலம் காஷ்மீர் (KASHMIR) சென்ற ஆண் மண்டலி மற்றும் குயன்டின், தங்குவதற்கு நான்கு படகு வீடுகளை வாடகைக்கு எடுத்திருந்தனர். காஷ்மீரில் இவ்வளவு குளிராக இருக்கும் என்று பெண்கள் எதிர்பார்க்கவில்லை. இந்தியாவில் கோடை காலம் வெப்பமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவர்கள் குளிருக்குத் தேவையான ஆடைகளை மும்பையிலிருந்து கொழும்புக்கு அனுப்பிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி சீனாவுக்குச் செல்லவிருந்தார்கள். ஸ்ரீநகர், கடும் குளிராக இருந்ததால் அவர்கள் கம்பளி ஆடைகளை வாங்க வேண்டியிருந்தது. **‘வேறு எதையும் வாங்க வேண்டாம்’** என்று பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார். எலிஸபெத், மேலும் பல பொருட்களை வாங்க விரும்பினார், ஆனால் அவர் பாபாவின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தார்.

பாபா அவர்களை ஸ்ரீநகரில் பல்வேறு இடங்களுக்குப் பேருந்தில் அழைத்துச் சென்று, ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கினார். மாலை வேளைகளை பாபாவின் அறையில் கழித்தனர்; அங்கு அவர்கள் இந்திய மற்றும் மேற்கத்திய இசைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்; வெவ்வேறு பாடல்களின் ஆன்மீக முக்கியத்துவத்தை பாபா இடையிடையே விளக்கினார்.

ஒரு நாள் இரவு, அனைவரும் நெருப்பு வளர்த்து முகாமில் சுற்றி அமர்ந்திருந்த போது, மேற்கத்திய அன்பர்களில் ஒருவர் பாபாவிடம், "நீங்கள் யார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் - நீங்கள் அனைவருக்கும் ஆதாரமாக இருப்பவர் என்பதை எப்படி அறிவீர்கள்?" என வினவினார்.

அதற்கு பாபா, **“அனைத்திற்கும் முன்பே அது எனக்குத் தெரியும். நான் பரமாத்மாவிலிருந்து வந்தேன். அந்த நிலையில், பரமாத்மாவுடன் ஒன்றிணையும் வரை, ஒருவர் அந்த நிலையைப் பற்றி அறிய முடியாது”** என்று பதிலளித்தார்.

ஏப்ரல் 19ஆம் நாள் ஸ்ரீநகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் அமைந்த டால் ஏரிக்கு (DAL LAKE), படகுவீடு வழியாக பாபா அவர்களை அழைத்துச் சென்றார். படகில் செல்லும் வழியில் தேநீர் மற்றும் சிற்றுண்டியை உண்டனர்; பின்னணியில் இமயமலையுடன், சுற்றுப்புற காட்சிகள் கண்களைக் கவர்ந்தன. ஆனால் வழக்கத்திற்கு மாறாக, குளிர்ச்சியாகவும் ஈரமாகவும் இருந்தது. **“நான் எனது திறவுகோலைத் திருப்பி விட்டேன்”** என்று பாபா இது குறித்து கருத்துத் தெரிவித்தார்.

1933, ஏப்ரல் 20ஆம் நாள் காலை, பாபா குழுவை சஷ்மா ஷாஹி (CHASHMA SHAHI) தோட்டங்களுக்கும் (இங்கு பாபா 1930இல் விஜயம் செய்தார்), பிற்பகலில் ஹர்வன் கிராமத்திற்கும் இரண்டு பேருந்துகள் மற்றும் காரில் அழைத்துச் சென்றார்.

கிராமவாசிகள் அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க, மாறுபட்ட தோற்றத்தில் உடையணிந்த பாபா, அவர் தங்கியிருந்த இடத்தையும், 1929ஆம்

ஆண்டு ஏகாந்தவாசம் மேற்கொண்ட குகையையும் அவர்களுக்குக் காட்டினார். **‘இயேசு சிலுவையில் உயிர் துறக்கவில்லை, ஆனால், இந்தியாவிற்கு வந்து, பல ஆண்டுகளாக அலைந்து திரிந்தார்; அவர் காஷ்மீரில் தனது உடலைத் துறப்பதுவரை உலகளாவிய பணியைச் செய்தார்’** என்றும், மலை ஒன்றைச் சுட்டிக்காட்டி, பாபா வெளிப்படுத்தினார்; **‘கிறிஸ்துவின் சீடர்கள் பாத்தோலமியூ** (BARTOLOMEW) **, தாடியஸ்** (THADDEUS) **இருவரும் அவருடைய உடலை அடக்கம் செய்த இடமும் இங்கேதான் உள்ளது; அவர்கள் பாலஸ்தீனிய நாட்டிலிருந்து வந்ததையும்’** பாபா தெரியப்படுத்தினார்.

காஷ்மீர், பூமியின் மிக அழகான இடங்களில் ஒன்றாக இருப்பதால், ஒரு மேன்மையான ஆன்மீக சூழல் வியாபித்திருப்பதை மேற்கத்தியர்கள் கண்டனர். ஹர்வனில் விவரிக்க முடியாத அமைதி நிலவுவதை உணரமுடிந்தது!

ஹர்வான் மலையிலிருந்து திரும்பி வருகையில், ஒரு குறுகிய, கந்தை ஆடையுடன் ஒருவர், பக்கப்பாதையில் அமர்ந்து, பாடி நடனமாடுவதையும், வெளியே ஓடிவந்து அவர்களின் காரைப் பின் தொடர்ந்ததையும் அனைவரும் கவனித்தனர். பாபா அவரைப் பார்த்த மகிழ்ச்சியில் புன்முறுவல் செய்தார். பெண்மணிகளில் ஒருவர் அவருக்குப் பணம் கொடுக்க முன்வந்த போது, பாபா அதைத் தடுத்து நிறுத்தி, **“அவருடைய விசித்திரமான நடத்தையைக் கண்டு சிரிக்காதீர்கள், அவர் பைத்தியம் அல்ல”** என்று பாபா எச்சரித்தார். அதற்குப் பிறகு பாபா, இவ்வாறு தெரிவித்தார்: **“அவர் ஒரு தற்காலிக முகவர்; அவர் தனது ஆன்மீகப் பணிகளைச் செய்யும் பொருட்டு, பைத்தியமாகத் தோன்ற வேண்டிய கட்டாயம். காஷ்மீரில் மேலும் மூன்று முகவர்கள் உள்ளனர் - அவர்கள் இவரைப் போன்ற வயதான, பைத்தியக்காரத்தனம் கொண்டவர்கள் அல்ல.”**

21ஆம் நாள் அனைவரும் ஷிகாரஸில் (SHIKARAS - ஒரு வகை மரப் படகு) நகரத்திற்குச் சென்று, மதியம் ஒரு திரைப்படத்திற்கும் சென்றனர். மேற்கத்திய அன்பர்கள் இந்தியாவிலிருந்து புறப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, பாபா 22ஆம் தேதி விஷ்ணுவை மும்பைக்கு அனுப்பி வைத்தார். காலையில் பாபா அனைவரையும் ஏரியைச் சுற்றி நடக்க அழைத்துச் சென்ற வேளையில், சாலையில் மண் மிகவும் ஆழமாக இருந்ததால், ஒரு கட்டத்தில் அனைவரும் கால்நடையாகச் செல்ல வேண்டியிருந்தது, ஆனால் இயற்கைக்காட்சிகள் அற்புதம். பாபா அவர்களுடன் ஓடினார், புல்வெளிகளுக்கு மேலேயும் கீழேயும், வேடிக்கையாகவும் மகிழ்ச்சியாகவும் நடந்து அவர்கள் வேறு வழியில் நகரத்திற்குத் திரும்பினர்.

ஏப்ரல் 23 அன்று, ஸ்ரீநகரில் அவர்களின் கடைசி நாள். வானிலை மீண்டும் மேகமூட்டமாகவும், குளிராகவும் காணப்பட்டது; ஆனால், பிற்பகலில் வானிலை சீரான போது, பாபா அனைவரையும் ஷாலிமார் (SHALIMAR) மற்றும் நிஷாத் (NISHAD) தோட்டங்களுக்கு அழைத்துச் சென்றார். சில முஸ்லிம்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருந்த இடத்திற்கு எதிரே அமைந்த வீட்டின் மொட்டை மாடியில்

பாபா சென்று அமர்ந்தார். "**நான் இங்கு இருக்கும் வேளையில் பிரார்த்தனை செய்வது அவர்களின் அதிர்ஷ்டம்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

பேருந்தில் தனது இருக்கையில் அமர்ந்து, பாபா, "**காஷ்மீரில் இந்த சுற்றுப்புறங்களைப் போல சிறந்த இடங்கள் உலகில் இல்லை**" என்று குறிப்பிட்டார்.

படகு வீட்டிற்குத் திரும்பி வந்ததும், பாபா கீழ்வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார். எலிஸபெத், நோரினா இருவரையும் நியூயார்க்கிற்குத் திரும்புமாறு அறிவுறுத்தி, குயன்டின் இத்தாலியின் ஸான்டா மார்கெரிட்டாவுக்குப் புறப்படும் முன்பு, பாபாவின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருக்குமாறு கூறினார்; குழுவின் இதர அன்பர்கள் மார்ஸெல்லஸுக்குச் சென்று பாபாவிடமிருந்து, (இங்கிலாந்து அல்லது ஜெனோவாவிற்குச் செல்வதைப் பற்றி) தொலைத்தந்தி வருவது வரை காத்திருப்பது, மேலும் அங்கிருந்து அவருடன் நியூயார்க்கிற்குப் பயணம் செய்வது, போன்ற தகவல்களைத் தெரியப்படுத்தினார்.

1933 ஏப்ரல் 24ஆம் நாள் காலையில், மேற்கத்திய அன்பர்கள் அனைவரும் ஸ்ரீநகரிலிருந்து காரில் புறப்பட்டு, முர்ரி வழியாக அன்று இரவு ராவல்பிண்டி வந்து, டெல்லியிலிருந்து மும்பைக்கு ரயிலில் பயணம் செய்தனர். இரண்டு நாள் பயணத்திற்குப் பிறகு மும்பையைச் சென்றடைந்ததும், நேராகக் கப்பல்துறைக்குச் செல்லுமாறு பாபா மேற்கத்திய அன்பர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். ஆகவே 26ஆம் நாள் ரயில் டெல்லியை வந்தடைந்தபோது, மும்பை கப்பல்துறைக்குச் செல்லும் ரயிலில், முதல் வகுப்புப் பெட்டியை இணைக்குமாறு ரயில்வே அதிகாரிகளிடம் சாஞ்சியும் ஆதி ஜூனியரும் கேட்டுக்கொண்டனர். இதற்கு ஒப்புக் கொண்டபோதிலும், பிரிட்டிஷ் அதிகாரி தவறு செய்து, சாஞ்சியிடம் அவதூறாக நடந்துகொண்டார். ஆத்திரமடைந்த ஆதி, அந்த அதிகாரியின் தவறான அணுகுமுறையைக் கண்டித்து, சாஞ்சியிடம் மன்னிப்புக் கோருமாறு கூறினார். அந்த அதிகாரி, அதற்குத் தயாராக இருந்தாலும், சக அதிகாரிகள் உடனிருந்ததால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

இந்த நேரத்தில், பாபா அலுவலகத்திற்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும், பிரிட்டிஷ் அதிகாரி, தனது நாற்காலியில் இருந்து எழுந்து அதை பாபாவிற்கு வழங்கினார். என்ன விஷயம் என்று பாபா, ஆதி ஜூனியரிடம் கேட்க, நடந்ததை அவரிடம் கூறியபோது, அதிகாரியைத் திட்டியதற்காக, பாபா அவரை வேகமாக அறைந்தார். அதைத் தொடர்ந்து, கண்காணிப்பாளர் பாபாவின் விருப்பப்படி அனைத்தையும் செய்தார். ஆனால், அந்த ஏற்பாடுகளைச் செய்ய காலதாமதமானதால், ரயில் டெல்லியிலிருந்து இரண்டு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டது. இது அதிகாரியின் தவறாக இருந்தபோதும், ஆதி ஜூனியருக்கு அறை கொடுத்து, பாபா இந்த வேலையைச் செய்து முடித்தார்.

மெஹர் பாபா மேற்கத்தியர்களை, மகிழ்ச்சியாக இருக்கச் செய்தார். அவர்கள் பாபாவுடன் இருக்கப்போகும் தருணங்களைக் குறித்து விவாதித்து, வரவிருக்கும் பிரிவைப் பற்றி பேச வாய்ப்பளிக்கவில்லை. ஏப்ரல் 27 அன்று, மும்பைக்கு வந்து, அதே நாளில் 'பிரிட்டானிக்கா' (BRITANNICA) கப்பலில் பயணம் செய்தனர். மேற்கத்திய அன்பர்கள் ஆறு மாத காலம் தங்கயிருந்த திட்டம் பதினைந்து நாட்களில் முடிவுக்கு வந்தது! பாபா அவர்களை வழியனுப்பிய பிறகு, மஞ்சள் நிற சூரிய கண்ணாடியும், தொப்பியும் அணிந்து தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டார்.

மெஹர் பாபா, அன்றிரவு மும்பை நகரில் கன்ஃபெக்ஷனர் (CONFECTIONER) இல்லத்தில் தங்கியிருந்தார். மண்டலியுடன் நாசிக் செல்வதற்கு முன்பு, தஹனுவிற்குச் (DAHANU) சென்று, இரண்டு நாட்கள் தங்கியிருந்து அவரது எதிர்கால திட்டங்களை வகுத்தார். கோடை காலமாக இருந்ததால், வெப்பம் தாங்க முடியாமல் மே 1ஆம் நாள் நாசிக் திரும்பி வந்தார். குஸ்தாஜி மஹிம் என்ற இடத்தில் வாழும் தனது உறவினர் ருஸ்தம் எலாவியாவின் இல்லத்தில் சில நாட்கள் தங்கச் சென்றார்.

மகாத்மா காந்தி இன்னமும் பூனா, ஏர்வாடா மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். மே 6ஆம் நாள் பாபா, சாஞ்சி மூலம் ஒரு செய்தியை, காந்திக்கு அனுப்பி வைத்தார்.

1933 மே 14ஆம் நாள் பாபா, நாசிக் நகரிலிருந்து சாஞ்சி, காக்கா, பெண்டு உள்ளிட்ட சில மண்டலியுடன் மெஹராபாத்திற்குப் புறப்பட்டார். சமீபத்தில் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்த ராவ்ஸாஹேபையும், அவருடன் தங்கியிருந்த கலிங்கட், சிது இருவரையும் சந்தித்தார்.

பாபா அன்று நள்ளிரவில் மும்பைக்குச் சென்று நெருங்கிய சில அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். அதற்குப் பிறகு, டாக்டர் நீலுவை சந்தித்து, அவர் தங்கியிருந்த வீட்டுக்கு எதிரில் அமர்ந்திருந்த ஒரு வாலியைச் சுட்டிக்காட்டி, '**அவர் மேல்நிலையை அடைந்த ஆத்மா**' என்று பாபா குறிப்பிட்டார்.

மே 17ஆம் நாள், பாபா அவரது நெருங்கிய அன்பர் ஒருவரின் மனைவி உடல்நலமின்றி மருத்துவமனையில் இருந்ததைப் பார்க்க, அவரது தோற்றத்தை மறைத்து, மறைமுகமாகச் சென்றார். அன்று குஸ்தாஜியையும் சந்தித்து, மாலையில் மண்டலியுடன் வெலிங்டன் சினிமாவில் 'பூரன் பக்தா' (PURAN BHAKTA – DEVOTEE) என்ற திரைப்படத்திற்குச் சென்றார்.

மெஹர் பாபா ஒரு பொருத்தமான சிறுவனை இம்முறை தன்னுடன் ஐரோப்பாவிற்கு அழைத்துச் செல்ல விரும்பினார், மேலும் இது தொடர்பான பத்திரிகை விளம்பரங்களைத் தொடர்ந்து, 50க்கும் மேற்பட்ட சிறுவர்களை பாபா

நேரடியாக சந்தித்தார்; ஆனால் பெரும்பாலான சிறுவர்களின் வயது அதிகமாக இருந்ததால் பாபா அனைவரையும் நிராகரித்தார். சிறந்த சிறுவனைத் தேடும் பொறுப்பு பெண்டுவிற்கு வழங்கப்பட்டது.

பாபா, குஸ்தாஜி, காக்கா, சாஞ்சி ஆகியோர் 1933, மே 20, பிற்பகலில் ரயிலில் நாசிக் திரும்பினர், அதே நேரத்தில் ஆதி சீனியர், ஜால்பாய், விஷ்ணு, சகன் ஆகியோரும் அங்குக் காரில் சென்றனர். வரும் வழியில், இகத்புரி அருகில், ஒரு கும்பல் காரைத் தடுத்து நிறுத்தி, அவர்களைத் தாக்கி, கொள்ளையடித்துச் சென்றனர். நாள் முழுவதும், பாபா அமைதியற்றவராக இருந்து, அவர்களைப் பற்றி பலமுறை விசாரித்தார்

மும்பையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாசிக் வருமாறு பாபா, ஆதி சீனியரிடம் கூறியிருந்தார், ஆனால், எப்படியோ ஆதி சீனியர் வரத் தாமதமாகிவிட்டது. சரியான நேரத்தில் வராததால், இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்தது. இரவு 11 மணிக்கு படுகாயங்களுடன் வந்த ஆதி, ஜால்பாய் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர்.

குஸ்தாஜியின் சகோதரர் ஸ்லாம்சன் (SLAMSON), நீண்ட காலமாக விலகி இருந்து, பின்பு, பாபாவை சந்திக்க இந்தூர் நகரிலிருந்து 22ஆம் நாள் எதிர்பாராத விதமாக வந்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

1933, மே 9ஆம் நாள், காந்தி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதால், அவருக்குக் கடிதம் எழுதி அவர்களுக்கு இடையே ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு பாபா, சாஞ்சிக்கு அறிவுறுத்தியிருந்தார். ஆனால் காந்தியின் உண்ணாவிரதம் தொடர்ந்ததால் தனிப்பட்ட முறையில் பதிலளிக்க முடியவில்லை. காந்தியின் சார்பில் அவரது நண்பர் ஒருவர் எழுதிய கடிதம் சாஞ்சியின் கைகளுக்கு வந்தது.

மே 15, 1933

பூனா.

அன்புள்ள சகோதரர் தாதாசாஞ்சி,

மே 9ஆம் நாள், நீங்கள் எழுதிய கடிதத்தை மதிப்பிற்குரிய காந்திஜி பெற்றுக்கொண்டார். அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த நாளிலிருந்து பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஸ்ரீ பாபா வருவதானால், அவர் பாபாவை சந்திப்பார், ஆனால் எதையும் பேசவோ விவாதிக்கவோ முடியாது.

இன்று, அவரது விரதத்தின் ஆறாவது நாள். அவர் இதுவரை நல்ல ஆரோக்கியமாக இருக்கிறார் என்று கூறலாம்.

மதுரதாஸ் (வாசன்ஜி)

இந்தக் கடிதம் வந்ததைத் தொடர்ந்து, பாபா மே 25 அன்று காந்திக்கு, பின்வரும் தொலைத்தந்தியை அனுப்பினார்:

மகாத்மா காந்தி,
(கவனிப்பு) லேடி தாக்கர்சி பங்களா, பூனா.

தீண்டாமையின் காரணமாக நீங்கள் மேற்கொள்ளும் பெரும் தவத்தின் ஆன்மீக முக்கியத்துவத்தை நான் அறிவேன். கடைசி முக்கியமான கட்டமும் கடந்து போகும். உங்களுக்கு, என்னுடைய நேரடி பார்வையின் கீழ் ஆசீர்வாதங்கள். விரைவில் ஐரோப்பாவிற்குச் செல்ல இருக்கிறேன், ஆனால் எப்பொழுதும் உங்களுடன் ஆன்மீக ரீதியில் இணைந்திருக்கிறேன்.

அன்புடன்,
பாபா
ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் லிமிடெட், நாசிக்.


மெஹர் பாபா மும்பைக்குச் சென்றிருந்த வேளையில், 1933 ஜூன் 3 - 5 தேதிகளில் நாசிக் 'சர்க்கிள் சினிமா'வில் (CIRCLE CINEMA) நடைபெற்ற 'அனைத்து மத நம்பிக்கை' (ALL FAITHS CONFERENCE) மாநாட்டிற்கு பாபாவும் அழைக்கப்பட்டார்; பாபா கலந்து கொள்ளாத போதும், அவர் அனுப்பிவைத்த செய்தியை மாநாட்டின் கடைசி நாளில் ராம்ஜூ வெளியிட்டார்:

**எல்லா நம்பிக்கைகளின் குறிக்கோளான முழுமையான இறை உணர்வை அடைவது வரை, நம்பிக்கை என்பது எல்லாவற்றிற்கும் மேலாக நம்பிக்கை மட்டுமே, அதைக் குருட்டு நம்பிக்கை அல்லது வேறு எந்த விதமாகவும் அழைக்கலாம். இறைநிலையை அடைந்த ஒரு மனிதனுக்கு, நம்பிக்கை எனும் கேள்விக்கே இடமில்லை, ஒரு மனிதன் அவனை மனிதன் என்று சந்தேகத்திற்கு இடமின்றி நம்புவது போல், ஒருவர், விசுவாசத்தின் எல்லைகளைத் தாண்டி, தன்னை எல்லையற்ற இறை ஞானிகளுடன் அடையாளம் கண்டுகொள்ளும்போது, எல்லா இடங்களிலும் வெளிப்படுவதையும் கண்டுகொள்கிறார்.**

ஆதி ஜூனியர், ஜால்பாய் இருவரும் ஜூன் 5ஆம் நாள் மும்பைக்கு வந்தனர், அதே நாளில் பாபா, மெமோவையும் சந்தித்தார்.

சிறுவனுக்கான பாஸ்போர்ட் சரியான நேரத்தில் வாங்க முடியுமானால், ராம்ஜூவின் பதினைந்து வயது மகன் தாதுவை (DADU) ஐரோப்பாவிற்கு அழைத்துச் செல்ல பாபா முடிவு செய்திருந்தார். பாஸ்போர்ட் அலுவலகம், மெஹர் பாபா அந்த சிறுவனுக்கு உத்தரவாதமாக இருந்தால் விஸா வழங்க ஒப்புக்கொண்டது, அவர் அதைச் செய்தார். ஜூன் 6ஆம் நாள் பாபா, சாஞ்சி, பெண்டு, விஷ்ணு, ஸெய்லர், சகன், ராம்ஜூ, தாது உள்ளிட்ட மண்டலியுடன் பஸீன் (BASSEIN) எனும் இடத்தில் அமைந்த ஆய்வு பங்களாவிற்குச் சென்றார், ஆனால் காலநிலை சீராக இல்லாததால், பாபா 8ஆம் தேதி நாசிக் திரும்பி வந்தார்.





மெஹர் பாபா, வில்லா அல்தாச்சியரா 1933



மெஹர் பாபா, போர்டோஃபினோ - 1933, காக்கா, சாஞ்சி, ஹெர்பெர்ட், ஆதி ஜூனியர், பெண்டு, குயன்டின்

# ஐந்தாவது ஐரோப்பிய பயணம் – போர்டோ:ஃபினோ & ரோம் (இத்தாலி)

**(Fifth Europe Visit – Portofino & Rome, Italy)**

மெஹர் பாபா 1933, ஜூன் 10ஆம் நாள் மும்பைக்கு வந்ததும், சாஞ்சியிடம் கப்பலில் தங்கள் அறைகளின் இறுதி முன்பதிவு செய்யப்பட்டுவிட்டதா என்று கேட்டார். சாஞ்சி ஏற்கனவே அவ்வாறு செய்ததாக உறுதியளித்தார்; ஆனால் பாபா, "**எல்லாம் சரியாகிவிட்டது என்று உறுதியாக இருக்கிறீர்களா? அதை நீங்கள் தனிப்பட்ட முறையில் பார்த்தீர்களா?**" என்று மறுபடியும் கேட்டபோது, சாஞ்சி 'ஆமாம்' என்று உறுதியாக பதிலளித்தார். ஆனால் பாபா, "**மீண்டும் ஒருமுறை சரிபார்த்து உறுதி செய்யுங்கள்**" என்று கூறினார்.

நம்பிக்கையோடு இருந்த சாஞ்சிக்கு, பாபா மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதால், இப்போது சந்தேகம் வரத் தொடங்கியது. ஆனால் அன்று சனிக்கிழமை, முன்பதிவு அலுவலகம் மூடப்பட்டிருந்ததால், அவர்கள் புறப்படும் நாளான திங்கள் வரை அவர் அதைக் குறித்து எதுவும் செய்ய முடியவில்லை.

1933, ஜூன் 12ஆம் நாள், மெஹர் பாபாவும் மண்டலியும் கப்பல் தளத்திற்குச் சென்றனர்; பாபாவை வழியனுப்ப ஏராளமான அன்பர்கள் காத்திருந்தனர். அவர்கள் ஏறிய தருணத்தில், டெக்கில் பாபாவின் கேபின் வெளியே மாற்றப்பட்டிருப்பதை, சாஞ்சி கண்டுபிடித்தார்.

பாபாவின் வார்த்தைகளின் முக்கியத்துவத்தை இப்போது சாஞ்சி உணர்ந்தார். ஜன்னல் இல்லாத ஒரு சிறிய, வெப்பமான அறையில் பதினொரு நாள் பயணத்தைத் தாங்க வேண்டியதை எண்ணி, பாபாவை எப்படி எதிர்கொள்ளுவது என அவர் அஞ்சினார். என்ன தவறு நடந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிகுந்த சிரமத்துடன் அதிகாரிகள், பணிப்பெண்களுடன் வாதாடி (அவர்கள் தங்கள் முழுப் பயணத்தையும் ரத்து செய்வதாக மிரட்டி), பாபாவின் அறையை மாற்றி வாங்கினார்.

மெஹர் பாபா அவரது ஐந்தாவது வெளிநாட்டு பயணத்தில், மும்பையிலிருந்து விக்டோரியா (VICTORIA) நீராவி கப்பலில் சாஞ்சி, பெண்டு, ஆதி ஜூனியர், காக்கா, தாது ஆகியோருடன் பயணம் செய்தார். ஜெனோவாவை நோக்கிச் செல்லும் இந்தப் பயணம் பயங்கரமானது. பாபாவின் மனநிலையும் மோசமாக இருந்தது, ஏனெனில் புதிய அறை கூட சௌகரியமாக இல்லாமல், மண்டலி அவரைப் பார்க்க மிகவும் சிரமமாக இருந்தது. அறை சிறியதாக இருந்தாலும் காக்கா பாபாவுடன் இருந்தார்.

வழக்கம் போல் இரண்டு அல்லது மூன்று மஹாராஜாக்கள் கப்பலில் பயணம் செய்தனர், ஆனால் பாபா எவரையும் சந்திக்க விரும்பவில்லை.

அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பதற்காக, பாபா கப்பலின் ஊழியர்கள் இருக்கும் பகுதிகளில் நடந்து சென்றார். இருப்பினும், ஜூன் 16 அன்று, கப்பல் ஏதனில் நிறுத்தப்பட்டபோது, பாபா சில உள்ளூர் பார்சி அன்பர்களை, தரிசனத்திற்காகக் கப்பலில் வர அனுமதித்தார். 18ஆம் தேதி, (மும்பையில் பிரஸிடென்சி மாஜிஸ்திரேட் – THE PRESIDENCY MAGISTRATE - உயர் நீதித்துறை பதவியில் இருந்த) நானாபாய் ஜங்க்ளேவாலா (NANABHAI JANGLEWALA), அவரது மனைவி மற்றும் மகனையும் குறுகிய நேரத்திற்கு சந்தித்தார்.

ஒரு வார கடல் பயணத்திற்குப் பிறகு, ஜூன் 23ஆம் நாள் பாபா மண்டலியுடன் ஜெனோவா வந்து சேர்ந்தார்; கிட்டி, மின்டா இருவரும் பாபாவை சந்தித்தனர். ஹோட்டல் 'அஸ்டோரியா பெல்க்ரானோ'வில் (HOTEL ASTORIA BELGRANO) இரண்டு நாட்கள் தங்கிய பின்னர், அவர்களுடன் நோரினா, எலிஸபெத், அனிதா டி காரோ மூவரும் ஸான்டா மார்கெரிட்டாவில் (SANTA MARGHERITA) வந்து இணைந்தனர். போர்டோஃபினோ (PORTOFINO) நகரின் பிரதான பியாஸ்ஸா (PIAZZA) அமைந்த ஒரு குன்றின் மேல் மத்திய தரைக்கடலை நோக்கி இருந்த 'வில்லா அல்தாச்சியாரா'வை (VILLA ALTACHIARA) எலிஸபெத் வாடகைக்கு எடுத்திருந்தார். வில்லா அனைவருக்கும் போதிய இடமளிக்கும் அளவுக்குப் பெரியதாக இல்லாததால் பாபா, மண்டலி மற்றும் அனைவருடன் ஜூன் 28 அன்று ஸான்டா மார்கெரிட்டாவில் அமைந்த வேறொரு வீட்டிற்குச் சென்றார்.

இம்முறை இத்தாலியில், பாபா அனைவரையும் வேறுவேறு பணிகளில் மும்முரமாக இருக்கச் செய்தார், குறிப்பாக எழுதுதல், தட்டச்சு பணிகளைச் செய்தல் இதுபோன்ற இதர பணிகளில் ஈடுபட வைத்தார். கிட்டியின் சகோதரர் ஹெர்பெர்ட் ஜூலை 4 அன்று சீனாவிலிருந்து வந்தார்; ஓட்டோ ஹாஸ்-ஹெய், ஹெடி மெர்டென்ஸ் மற்றும் அவரது பதினைந்து வயது மகள் அனகாத்தரினா ரோல்லி (ANNAKATHARINA ROELLI) ஆகியோர் ஸூரிக்கிலிருந்து வந்தவர்கள்; மிலன் நகரிலிருந்து இனிட், வியன்னாவிலிருந்து விக்டர் (VICTOR), ஆலிஸ் ட்ராவ்-ஃபிஷர் (ALICE TRAU-FISHER) ஆகியோரும் வந்திருந்தனர்.

ஆலிஸ், சில ஆண்டுகளுக்கு முன்பு, நியூயார்க் நகரில் நோரினாவை சந்தித்தார்; அன்றிலிருந்து அவர்கள் அவ்வப்போது, தவறாமல் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர்; ஆலிஸைப் பற்றி நோரினா, பாபாவிடம் எடுத்துக் கூறியதும், பாபா அவரையும் அழைத்தார்.

மொத்தத்தில் குழு பெரியதாக இருந்தது. ஆதி ஜூனியர், சாஞ்சி, எலிஸபெத், இனிட் இவர்கள் பொதுவாக, பாபா மற்றும் ஓட்டோவிற்கு, தட்டச்சு பணிகளைச் செய்தனர்; எலிஸபெத், பாபாவைக் காரில் அழைத்துச் சென்றது மட்டுமன்றி, வரவு செலவு கணக்குகளையும் கவனித்து வந்தார்; நோரினா மொழிபெயர்ப்பு, கடிதப் போக்குவரத்து போன்ற பணிகளைக் கையாண்டார்; குயன்டின் சில குறிப்பிட்ட கடிதங்களை கவனித்தார்; கிட்டி, அனிதா, டிலியா, மேபெல், மார்கரெட், மின்டா, விவியன் ஆகியோர் வீட்டு நிர்வாக பணிகளைப் பகிர்ந்து கொண்டனர்; ஹெர்பெர்ட் ரஷ்யாவில் தனது சாகசங்களைப் பற்றி ஒரு கட்டுரையை எழுதிக்கொண்டிருந்தார், மேலும் பாபாவின் எழுத்துக்களிலும்

பணியாற்றினார்; காக்கா, பெண்டு இருவரும் உணவு தயாரிப்பதில் உதவிபுரிந்தனர்.

மெஹர் பாபாவின் செய்தியைப் பரப்புவதில் அனைவரும் மிக்க ஆர்வத்துடன் இருந்தனர். நோரினாவும் கிம்கோ குழுவும் மெஹர் பாபாவைப் பற்றியும், அவரது போதனைகள், பணிகள் குறித்தும், குறிப்பாக, கேலிக்குரியதாக இல்லாமல் இருந்தாலும், 'பத்திரிகைகளில் வெளிவரும் உண்மைக்குப் புறம்பான வதந்திகளுக்கு, விடை அளிப்பதற்கான நேரம் இது' என ஒருமனதாக நினைத்தனர். மெஹர் பாபா அவரது மௌனத்தைக் கலைத்து, உலகுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு முன்னர், அவருடைய போதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தனர்; இதை பாபா விரைவில் செய்யப்போவதாகப் பலமுறை தெரிவித்தார்.

எனவே, அவர்கள் போர்டோஃபினோவில் நடந்த நிகழ்வுகள் குறித்த பாபாவின் கூற்றுகளையும் தகவல்களையும் ஒருங்கிணைத்து, 'கேள்வி - பதில்' வடிவில் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தனர். அவர்களில் நான்கு பேர் அங்கிருந்த நூலகத்தை அலுவலகமாகவும், தட்டச்சு பணிகளுக்காகவும் பயன்படுத்தினர்.

அனிதா, குயன்டின் இருவரும் கலகலப்புடன் மகிழ்ச்சியான தனித்தன்மை மிக்கவர்கள், மேலும் பாபாவை சிரிக்க வைப்பதற்காக, வேடிக்கையான கதைகளையும், துணுக்குகளையும் நகைச்சுவை விருந்தாக வழங்கி வந்தனர். ஓர் அழகான பிற்பகல் சூரிய ஒளியில், அன்பர்கள் பாபாவுடன் வில்லா அல்தாச்சியாராவின் படிகளில் அமர்ந்திருந்தபோது, திடீரென பாபா, அனிதாவைப் பார்த்து இவ்வாறு கூறினார், **"உங்களுக்குத் தெரியும், நான் கடவுளாகவும் மனிதனாகவும் இருக்கிறேன் என்று!"**

பாபா கூறியது அனிதாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது, "கடவுள் என்னவென்று எனக்குத் தெரியாது" என மனதில் நினைத்துக்கொண்டு, பாபாவைப் பார்த்து, "ஆனால், பாபா டார்லிங், நான் உங்களை ஒரு மனிதனாகப் புரிந்து கொள்ளாத போது, உங்களைக் கடவுளாக நான் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?" என்ற கேள்வியுடன் மேலும் கூறினார், "ஓ, பாருங்கள் பாபா, அது ஒரு பொருட்டல்ல. நாங்கள் அனைவரும் தவறு செய்கிறோம். நீங்கள் உங்களை கடவுள் என்று அழைக்கலாம் - நீங்கள் விரும்பியதைக் கூறலாம், இது உண்மையில் ஒரு பொருட்டல்ல. நான் உங்களை எப்போதும் நேசிக்கிறேன்."

பாபா மௌனமாக சிரித்துக்கொண்டே சாஞ்சியை அழைத்தார். அவரும் தலையை அசைத்தபோது, பாபா சைகையால் தெரிவித்தார், **"என்ன தைரியம்… அனிதா கூறியது மிகவும் ஆச்சரியமாக உள்ளது! நான் என்னை எப்படிக் கூறினாலும் அது ஒரு பொருட்டு இல்லையாம்… நான் சொல்வதில் தவறு இழைத்திருக்கலாம்… நான் ஒரே நேரத்தில் கடவுள், மனிதன் என்பதும்**

**முக்கியமில்லையாம்… அவர் அதைப் பற்றி முற்றிலும் அலட்சியமாக இருக்கிறாராம்!"**

போர்டோஃபினோவில் நாட்கள், மேடைநாடகம், இசை நிகழ்ச்சிகள், நல்ல உணவு மற்றும் இறை-மனிதனின் தோழமையில் அவருடைய சகவாசத்தில் கழிந்தன. ஆனாலும், பாபாவின் முன்னிலையில் எந்நேரமும் இருந்ததால், அவர்களின் உதடுகள் மூடியே இருந்த அதே வேளையில், அவருடைய அன்பின் நெருப்பில் அனைவரும் எரிந்து கொண்டிருந்தனர். எல்லா நேரங்களிலும் புன்னகைக்கும் முகத்துடன், சமநிலையைப் பராமரிப்பது என்பது நெருப்புடன் விளையாடி, மகிழ்ச்சியைப் பெறுவது போன்றது. இறை மனிதனுடன் பக்தர்கள் இவ்வாறு ஒன்றிணைந்து வாழும் வாய்ப்பு கிடைக்கும் வேளையில் மட்டுமே இத்தகைய அனுபவம் சாத்தியம்.

போர்டோஃபினோவில் பாபா தங்கியிருந்தபோது, குளிர்ந்த நிலவொளி இரவில், ஒளிரும் நட்சத்திரங்களும் பிரகாசித்தன. மாலைப்பொழுதில் வில்லாவைச் சுற்றி வியாபித்த நிசப்தம், பூமியில் அமைதி மற்றும் மகிழ்ச்சியின் செய்தியை மனிதகுலத்திற்குத் தெரிவிப்பது போலத் தோன்றியது. வான்நீல நிற சட்டை அணிந்து, மிகவும் அழகாக, அற்புதமாகத் தோற்றமளித்த பாபாவைச் சுற்றி, பிரியமானவர்களும் மண்டலியும் ஒன்றுதிரண்டனர். அமைதியான சூழ்நிலை ஓர் இனம்புரியாத போதையை அளித்ததுபோல் அனைவரும் மெய்மறந்து சிலையாக அமர்ந்திருந்தனர்.

பாபாவின் முகத்தில் சந்திரன் பிரகாசித்தது; அற்புதமான மல்லியின் வாசனை வீசியது, பின்னணியில் ஸக்காடஸின் (CICADAS) பாடல்கள் ஒலித்தன. "இது பாபாவுடன் இருந்த மிகவும் அருமையான நேரம், மிக அழகான தருணங்களில் ஒன்றாகும்" என்று டிலியா நினைவு கூர்ந்தார். "நாங்கள் அங்கேயே அமர்ந்திருந்தோம், ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை."

பாபாவின் புன்னகை நிறைந்த முகமும், அலையாய் பாயும் முடியும், ஒளியின் கதிர்களால் பிரதிபலிப்பதைக் கண்டனர். காலமும் கடந்தது. "சூரியன் சிரித்துக் கொண்டிருக்க, அவரது புன்னகை அன்பர்களின் இதயங்களைக் கவர்ந்தது; 'பிரியமான பாபா, நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்!'" என்று இதயங்கள் கூக்குரல் விடுத்தன.

அனைவரும் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா அமைதியாக உள்ளே சென்றார். அவரது மௌன கீதம் அனைவருள்ளும் எதிரொலித்தது, அவருடைய கம்பீர வடிவத்தின் வெளிப்பாடு, அவர்களின் இதயங்களில் எப்பொழுதும் ரீங்காரம் செய்தது. அனைவரும் தத்தமது படுக்கைக்குச் சென்றனர், ஆனால் அவர்களால் எப்படித் தூங்க முடியும்? அவருடைய மகிமையால் ஆட்கொள்ளப்பட்டு அதிலேயே ஆழ்ந்திருந்தனர். கிருஷ்ணரிடம் மயங்கிய அர்ஜுனனைப் போலவே, அவர்களும் இறை-மனிதனின் அழகு மற்றும் மகிமையால் வசீகரிக்கப்பட்டு மெய்மறந்து காணப்பட்டனர்.

இது, அவரது உண்மையின் உருவான பரமாத்மாவின் மகிமை, அதில் ஒரு சிறிய அம்சத்தை அவர் இந்த இரவில், வீட்டின் மொட்டை மாடியில் அனைவருக்கும் வெளிப்படுத்தினார்.

இந்தப் பழைய வில்லாவில் சிறிது காலம் தங்கியிருந்த பிறகு, சில மேற்கத்திய அன்பர்கள் மிகவும் மாறுபட்ட இயல்புடைய அனுபவங்களைக் கொண்டிருந்தனர். ஒருவர், வீட்டில் யாரோ கண்ணுக்குத் தெரியாமல் நடமாடியதாகவும், தனக்கு முன்னால் நின்ற உருவம், மேலும் மேலும் உயரமாக வளர்ந்ததாகவும் கூறினார்; தூங்கும்போது தலைமுடியை இழுத்ததாக மற்றொருவர் முறையிட்டார்; இன்னுமொருவர் வித்தியாசமான சத்தத்தைக் கேட்டார். இந்தக் கதைகள் காதுகளில் ரீங்காரம் செய்ய, அடுத்த நாள் இரவில், டிலியா 'பேய், பேய்' என்று கத்தினார். இது, தூய்மையான காற்றை சுவாசிப்பதற்காக, மார்கரெட் எதிர் ஜன்னலுக்கு வெளியே சாய்ந்தபோது எழுப்பிய சத்தம் என்று தெரியவந்தது.

அடுத்த நாள், அவர்கள் நடந்ததை பாபாவிடம் தெரிவித்தபோது, **"உங்களில் நான் விரும்பும் ஒரு விஷயம், மேற்கத்திய அன்பர்களின் தைரியம்!"** என்று கூறினார்.

இருப்பினும், வில்லாவில் ஒரு பேய் இருப்பதை, பாபா உறுதிப்படுத்தினார். முதல் மாடியில் வீட்டின் பின்புறம், பாபாவின் படுக்கையறை இருந்தது. அவரது அறையோடு இணைக்கப்பட்டிருந்த படிக்கட்டு, கீழே தளம் வரை சென்று, வெளியே செல்ல வழிவகுத்தது. ஒருமுறை நள்ளிரவில், காக்கா இரவு காவல் புரிந்தபோது, பாபா, திடீரென எழுந்து, தனது காலணியை அணியாமல், விளக்கின் ஒளியும் இல்லாமல், அறையை விட்டு வெளியேறி, படிக்கட்டில் இறங்கி, இருட்டில் மறைந்தார். காக்கா அவரைப் பின்தொடர்ந்தார், ஆனால் பாபா ஏதோ பணிபுரிகிறார் என்பதை உணர்ந்த அவர், படிக்கட்டின் கீழே காத்திருந்தார். பாபா விரைவில் மீண்டும் தோன்றி, தனது அறைக்குத் திரும்பிச் சென்றார். நள்ளிரவில் இதை ஏன் செய்தீர்கள் என்று காக்கா அவரிடம் கேட்க, பாபா இவ்வாறு விளக்கினார், **"இந்த வீட்டில் ஒரு நடமாடும் ஆவி இருந்தது. அவர் ஒரு நல்ல மனிதர், ஆனால் கடவுளை அவமதித்ததால் சுமார் 500 ஆண்டுகளாக மனித உடல் இல்லாமல் ஆவியாக அலைகிறார். இன்று நான் அவரை விடுவித்தேன், அதனால் அவர் மீண்டும் ஒரு மனித உருவத்தை எடுக்க முடியும்."**

ஸான்டா மார்கரிட்டாவில் செய்ததைப் போல, பாபாவின் அறையில் இரவு தங்க முடியுமா என்று மின்டா மீண்டும் பாபாவிடம் கேட்டார், ஆனால், பாபா இந்த முறை அதை அனுமதிக்கவில்லை.

இந்த வருகையின் போது பாபாவுடன் தங்குவதற்காக, தோட்டத் தொழிலாளர் ஒருவரின் மகன் ஆல்பர்டினோ (ALBERTINO) என்ற இத்தாலிய சிறுவன் அல்தாச்சியாரா வில்லாவிற்கு அழைத்து வரப்பட்டான். விரைவில், பாபா, ரோம் (ROME) நகருக்கு ஒரு குறுகிய பயணத்தை முடிவு செய்தார்,

அவருடன் நோரினா, எலிஸபெத், மின்டா, கிட்டி, ஹெர்பெர்ட், பெண்டு, சாஞ்சி, சிறுவர்கள் தாது (DADU), டினோ (TINO) செல்ல இருந்தனர். புறப்படும் முன்பு, பாபா வில்லாவில் இருந்தவர்களிடம் அவர் திரும்பி வரும்போது பாபாவுக்காக, ஒரு சில நகைச்சுவையான குறுநாடகங்களைத் தயாரிக்கும்படிக் கூறிச் சென்றார்.

1933 ஜூலை 6ஆம் நாள் நள்ளிரவில், எலிஸபெத், பாபாவை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். ரயிலில் நுழைவதற்கு முன்பு, பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததை உணர்ந்தார், ஆனால் மறுநாள் காலையில் ரோம் வந்தபோது, அவர் நன்றாக இருந்தார். உடல் நோய் எப்போதும் பாபாவின் எந்தவொரு முக்கியமான ஆன்மீகப் பணியிலும் முன்னோடியாக இருக்கும்.

ரோம் நகரில் பாபா ஹோட்டல் எலிஸீயில் (HOTEL ELYSEE) தங்கியிருந்தார்; அங்கு, பாபா, நோரினாவை அழைத்து இவ்வாறு தெரிவித்தார்: “**நான் உண்மைப்பொருளைத் தேடும் நபர்களைத் தொடர்பு கொள்ள விரும்புகிறேன், ஆனால் நான் இன்று மட்டுமே அவர்களை சந்திப்பேன். இன்று பிற்பகல் மூன்று மணிக்கு அவர்களை நேரடியாக சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்**.”

காலை உணவிற்குப் பிறகு, பாபா, ரோம் நகரின் ஏழு மலைகளை, காரில் சுற்றி வந்தார், பின்னர் அனைவரும் ஸெயின்ட் பீட்டர்ஸ் பெஸிலிக்காவைக் (SAINT PETER’S BASILICA) காண வட்டிக்கன் (VATICAN) நகருக்குச் சென்றனர். தலைமுடியை மறைக்க பாபா, ஒரு ஃபிரஞ்சு தொப்பியை அணிந்திருந்தார், அதை அகற்ற அவர் விரும்பவில்லை; ஆனால் தேவாலயத்திற்குள் நுழைய வேண்டியிருந்ததால், பாபா முழு குழுவால் சூழப்பட்டு, அவரது தோற்றத்தை மறைத்துக் கொண்டார். பாபா பெரிய தேவாலயத்திற்குள் நுழைந்து, அதன் கீழ்புற குவிமாடத்தின் மையத்தில் நின்றுகொண்டு, நான்கு திசைகளையும் கை சைகைகளால் அடையாளம் காட்டினார்.

அதற்குப் பிறகு பாபா, விரைவாக மேற்கு வாசலின் வழியாக வெளியேறினார்; நேர்த்தியான ஓவியங்கள், சிலைகளைப் பார்க்க பாபா எவரையும் அனுமதிக்கவில்லை; அவற்றில் ஒன்று ‘டெல்லா ரோப்பியா’வால் (DELLA ROBBIA) சிற்பமாக வடிவமைக்கப்பட்ட ‘மாடோனா’ (MADONNA) மற்றும் கிறிஸ்துவின் பியட்டா (PIETA) சிலை - (மாடோனா, ‘தி மிரக்கிள்’ -THE MIRACLE - நாடகத்தில் நோரினாவின் ‘மாதிரி’ பாத்திரம்).

பாபா, ‘கேபிடோலைன் ஹில்’ (CAPITOLINE HILL), ‘தி ஃபோரம்’ (THE FORUM), ‘தி கொலஸியம்’ (THE COLOSSEUM) ஆகியவற்றைப் பார்வையிடச் சென்றார், அங்கே அவர் சில நிமிடங்கள் அமைதியாக நின்று, பின்பு ‘பெனிட்டோ முஸோலினி’யின் (BENITO MUSSOLINI) அலுவலகத்தை இரண்டு முறை காரில் சுற்றி வருமாறு அறிவுறுத்தினார்.

ரஷ்ய புரட்சிக்கு முன்பு தூதராக இருந்தபோது, தனது கணவருடன் ரோமில் வாழ்ந்து வந்ததால், அன்று பிற்பகல் நேர்காணல்களுக்கு ஏற்பாடு

செய்யுமாறு பாபா, நோரினாவிடம் கேட்டுக் கொண்டார். துரதிர்ஷ்டவசமாக, அவர் கடந்த பல ஆண்டுகளாக இத்தாலியில் இல்லாததால், நெருங்கிய நண்பர்களுடனான தொடர்பையும் இழந்துவிட்டார். தொலைபேசியில் மக்களை அழைத்து, ஓர் இந்திய ஆன்மீக குருநாதரை சந்திக்க அவர்களை வற்புறுத்துவது, அத்தகைய குறுகிய நேர அறிவிப்பில் சாத்தியமற்றது. நோரினா 32 நபர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலைத் தயார் செய்து, பாபாவை சந்திக்க தகுதியானவர் என்று கருதி, உறுதி செய்வதற்கு முன்னர், அதை பாபாவிடம் சமர்ப்பித்தார்.

அந்தப் பட்டியலைப் பார்த்து பாபா, மூன்று நபர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களில் ஒருவர் ரஷ்ய இராணுவ அதிகாரி, இரண்டாவது ஓர் எளிய, நல்ல உள்ளம் கொண்ட இத்தாலியர், இறுதியாக ஓர் உலக தத்துவ பேராசிரியர். நோரினாவிற்கு முதல் இருவரையும் அழைத்து வந்ததில் எந்தப் பிரச்சினையும் இல்லை; பாபாவுடனான அவர்களின் சந்திப்புகள் அவர்களுக்கு சிறப்பாக, பயனுள்ளதாக இருந்தன; ஆனால் பேராசிரியரின் அணுகுமுறை முற்றிலும் மாறாக இருந்தது. மெஹர் பாபாவுடனான இந்த இளம் தத்துவஞானியின் சந்திப்பை நோரினா ஒருமுறை விவரித்தார்:

உண்மையான குருநாதர் ஒருவரைப் பற்றி தொலைபேசியில் நான் உற்சாகமாக விளக்கியதைக் கேட்ட பின்னர், அவரைப் பொறுத்தவரையில் சந்தேகத்திற்கிடமான மனிதரை அவர் சந்திக்க மறுத்துவிட்டார். சத்தியத்தைத் தேடுவதில் அவர் மிகவும் தைரியமான, சாகசக்காரராக இருக்க வேண்டும் என்று நான் பரிந்துரைத்தபோது, அவர் வருவதாக ஒப்புக்கொண்டார்.

மதியம் இரண்டு மணிக்கு ஹோட்டல் எலிஸீயில், அவர் பாபா முன்னிலையில் வந்து நின்றார்; பாபாவை சந்திப்பதற்கு முன்னர் அவர், 'உங்கள் தனித்துவமான மனிதர்' என்று மிகவும் முரண்பாடாக முறையிட்டார். அவரது அணுகுமுறை ஆணவத்துடனும், குறைகாணும் மனப்போக்குடனும் இருந்தது. அவர் பாபாவை உணர்ச்சியற்ற முறையில் பார்த்தார், ஒரு செய்தித்தாள் கட்டுரைக்கான குறிப்புகளை எடுத்துக்கொள்வது போல் அவரை எடை போட்டார்.

பாபா, அவருக்கே உரித்தான இணையற்ற, எளிமையான முறையில் அவரை அமருமாறு அழைத்தார். இளம், புலமை வாய்ந்த பேராசிரியரின் மனம் அலைபாயத் தொடங்கியது. அவர் பாபாவின் 'அறிவைத்' தூண்டிவிட்டு ஆய்வு செய்ய ஆயத்தமானார். அவருடைய நிலைப்பாட்டிலிருந்து, கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டார். மிகவும் சிக்கலான இந்தக் குறுக்குக் கேள்விகளுக்கு, பாபா அத்தகைய தெளிவான ஞானத்தோடு, சுருக்கமாக, கிட்டத்தட்ட 'கற்களில் பொறிக்கப்படும் வாக்கியங்கள்' போல பதிலளித்தார்; மொழிபெயர்ப்பாளராக இருந்த நான், தெய்வீக நற்செய்தி உயிரோடு வருவதைப் போல் உணர்ந்தேன்!

ஆனால் பேராசிரியர் திருப்தி அடைந்தவராக இல்லை. அவர் ஏற்றுக்கொள்ளும் மனநிலையிலும் இல்லை. பாபாவின் தூய ஞானத்தின் நேர்மறையான உணர்வை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருமை

தன்மையின் போராட்டத்தில் அவரது மனம் தெளிவற்று காணப்பட்டது. திடீரென, கட்டுப்படுத்த முடியாத உள் கோபத்தால் தூண்டப்பட்ட அவர், பாபாவைக் குறுக்கிட்டு, அவராகவே உருவாக்கிய தனது இக்கட்டான நிலைக்கு ஒரு முடிவு கொண்டு வந்தார். இந்த வார்த்தைகளோடு அவர் என்னிடம் திரும்பினார், "அவர் எனக்கு, புதிய பதில்கள் எதையும் தரவில்லை என்று உங்கள் குருநாதரிடம் சொல்லுங்கள். உண்மைப்பொருளைப் பற்றிய பழைய, தேய்ந்துபோன சூத்திரத்தை அவர் மீண்டும் கூறுகிறார்!"

அவரது தெய்வீக ஆனந்தத்தில் சலனமற்ற நிலையில் இருந்த பாபா, வெறுமனே, அருள் நிறைந்த நகைச்சுவையுடன் புன்னகைத்து, உற்சாகமான மனிதனின் தலையில் அவரது கையை வைத்து, இந்த சங்கடமான சூழ்நிலையை உடனடியாகத் தீர்த்து வைத்தார்; கண்களில் ஆழமாக உற்றுநோக்கி, மனப் புயலை ஒரே நொடியில் அடக்கிவிட்டார். மனிதனின் வாழ்வின் ஆற்றலை ஆழமான உள்பொருளின் சக்தியோடு பரிமாறிக்கொள்வது போலத் தோன்றியது. மனதின் எதிர்வினை மனப்பான்மையை நிறுத்துவது போல், அவர் ஆழமாக சுவாசிக்க ஆரம்பித்தார். அவர் என் கண்களுக்கு முன்பாக, பாபாவின் அருளைப் பெற்று முற்றிலுமாக மாற்றப்பட்ட தோற்றத்தில் இருந்தார்.

உணர்வு நிலையின் விரிவாக்கத்தின் உடனடி செயல் நடைபெற்றது. சிறிது நேரத்திற்குப் பின்னர், அவர் தனது இயல்பான நிலையை மீட்டெடுத்து, பாபாவை சிரந்தாழ்த்தி வணங்கிய போது, தெய்வீக தீர்த்தத்தால் புனிதமாக்கப்பட்டது போல், “எல்லா கேள்விகளுக்கும் அன்பு ஒன்றுதான் பதில் என்று எனக்குத் தெரியும். அன்பு உண்மையானது என்பதை நீங்கள் உணர வைத்தீர்கள். அன்பினால் மட்டுமே தனிநபரின் பிரச்சினைகள், இருமைத்தன்மை மற்றும் வாழ்க்கையின் போராட்டத்தைப் போக்க முடியும்” என்றார்.

பாபாவின் முன் மண்டியிட்டு கூறினார், "எனது முழு வாழ்க்கையையும் எடுத்து, நீங்கள் அதைப் பயன்படுத்துங்கள்."

அதற்கு பாபா, “**குழப்பமடைய வேண்டாம்; போராட வேண்டாம். உங்கள் வாழ்க்கையின் முறையை மாற்றவும் வேண்டாம், ஆனால் கடவுளோடு ஒன்றி இருக்க வேண்டும் என்ற ஏக்கத்தை உருவாக்க, உங்கள் முழு இதய உணர்வோடு முயற்சி செய்யுங்கள். இந்த ஏக்கம், உங்களை, பரமாத்மாவைப் பார்க்க வைக்கும்**” என்று பதிலளித்தார்.

அவரை எச்சரித்த பாபா, “**நான் இப்போது உங்களுக்கு அளித்த காட்சி நீடிக்காது, ஆனால் நீங்கள் உண்மையை மேலும் மேலும் புரிந்துகொள்வீர்கள். நீங்கள் அதில் மிகவும் ஆழமாகச் செல்வீர்கள்; தக்க நேரத்தில், நீங்கள் மனிதகுலத்திற்குப் பெரும் சேவையைப் புரியும் வாய்ப்பையும் அடையப் பெறுவீர்கள்.**”

பேராசிரியர் பாபாவின் அறையை விட்டு வெளியேறிய பிறகு, மூடிய கதவுக்கு முன்பாக சிறிது நேரம் நின்றார். கண்களில் கண்ணீருடன் அவர் என்னிடம், “நான் கடவுளைப் பார்க்க வேண்டாம் என்று நினைத்தேன்! என்னை

வரவழைத்ததற்கு மிக்க நன்றி. தயவுசெய்து அவருக்காக நான் என்ன செய்ய முடியும் என்பதை எனக்குத் தெரியப்படுத்துங்கள். நான் அவருக்கு சேவை செய்ய காத்திருக்கிறேன்." கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பேராசிரியர் மெதுவாக வெளியேறினார்.

மெஹர் பாபா தேர்ந்தெடுத்த மூவரையும் சந்தித்த பின்பு, பாபாவும் குழுவும், பிரபலமானவர்கள் ஒன்றுகூடும் 'அரான்யோ அல் கோர்ஸோ' (ARAGNO AL CORSO) என்ற புகழ்பெற்ற கஃபேக்குச் (CAFÉ) சென்றனர். அங்கு அரசியல்வாதிகளும் பல்வேறு துறைகளைச் சார்ந்த நபர்களும் அமர்ந்து, 'எஸ்பிரெஸோ' கோப்பைகளைக் கையில் ஏந்திய வண்ணம், அன்றைய பிரச்சினைகள் குறித்து விவாதித்து வந்தனர். ரோம் நகரத்தின் பரபரப்பான மையத்தில் இந்தக் கஃபே அமைந்துள்ளது. அவர்கள் நடைபாதை மேசைகளில் அமர்ந்து ரொட்டி சுருள்கள், கேக்குகள், எலுமிச்சை குளிர்பானம் போன்றவற்றை ஏற்பாடு செய்தனர். திரள் திரளாக மக்களும், போக்குவரத்தும் கடந்து செல்வதை, பாபா பார்த்துக் கொண்டிருந்தார், அவருக்கு இருபுறமும் அமர்ந்திருந்த மின்டா, நோரினா இருவருடனும் உரையாடினார்.

மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்த வேளையில், சிவப்பு நிற (மடிக்கத்தக்க முகடுள்ள) ஃபியட் காரில், மஞ்சள் நிற முடியுடன் கூடிய, பெரிய திடகாத்திரமான நடுத்தர வயது மனிதர், அவர்கள் அருகே மெதுவாக ஓட்டி வந்தார். இவர் ஐரோப்பாவில் தனது நேரடி முகவர் என்று பாபா பின்பு விளக்கினார்; அவரை, கிறிஸ்டியானோ (CHRISTIANO) என்று குறிப்பிடுகிறார். வார்ஸாவில் ஹெர்பெர்ட் தொடர்பு கொண்ட மறைமுக முகவர், கிறிஸ்டியானோவிடமிருந்து உத்தரவுகளைப் பெற்றார். கிறிஸ்டியானோ தனது மனைவியுடன் ரோமில் வசித்து வருகிறார், ஆனால் அவரது ஆன்மீக நிலை பற்றி மனைவிக்கு எதுவும் தெரியாது என்று பாபா குறிப்பிட்டார். திடீரென பாபா அவர்களிடமிருந்து 'மறைந்து' விட்டார்; உடல் மட்டும் அருகில் இருந்தது. உடன் வந்தவர்கள் அனைவரும் பாபாவை நோக்கித் திரும்பி அமர்ந்தனர். சிறிது நேரத்தில் அவரது கண் இமைகள் அசைந்து பளிச்சிட்டன; அப்போது அவர் புறப்பட வேண்டிய நேரம் இது என்பதைக் குறிக்கும் வகையில் எழுந்து நின்றார்.

பாபா மறைமுகமாக ஒருவரும் கண்டுகொள்ளாத முறையில் உடையணிந்த போதிலும், சாலையில் பலர் அவரை உற்று நோக்கினர். பாபாவும் குழுவும் உடனே அருகிலிருந்த ஒரு திரையரங்கிற்கு, 'வையிட் ஷேடோஸ்' (WHITE SHADOWS) என்ற திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர்: இது ஒரு மகிழ்ச்சிகரமான திரைப்படம், பாபா குறிப்பாக, அதன் ஹவாய் நடனங்களை ரசித்தார். பின்னர் அனைவரும் ஹோட்டலுக்குத் திரும்பி வந்து படுக்கைக்குச் சென்றனர், ஆனால் பாபா இரவு முழுவதும் ஆன்மீக மேல் தளங்களில் பணிபுரிந்தார்.

அடுத்த நாள் காலையில் பாபா, "**ரோம் நகரில் எனது பணி நிறைவுக்கு வந்தது. நான் எதிர்பார்த்ததை விட விரைவாகவே முடிந்துவிட்டது. இன்று பிற்பகல், நாம் ஸான்டா மார்கரிட்டாவுக்கு திரும்ப**

**வேண்டும்**" என்று குறிப்பிட்டார். போர்டோஃபினோவிலிருந்து ரோமுக்குச் செல்வதற்கு முன்பு, பாபா கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார், **"வெளியிலிருந்து வேறு எவரும் வில்லாவுக்கு உணவுக்காக வரக்கூடாது, தேவ தூதர் கேப்ரியல்** (ARCHANGEL GABRIEL) **கூட அனுமதிக்கப்பட மாட்டாது**!" ஆனால் அந்த நாள், ஜூலை 8, போர்டோஃபினோவிலிருந்து ஒரு தொலைத்தந்தி மூலமாக 'எவரேனும் மதிய உணவுக்கு வரலாமா' என்று கேட்கப்பட்டது. **"தேவதூதர் கேப்ரியலுக்குக் கூட அனுமதி இல்லை என்று தெளிவாகக் கூறியபோதும், இன்னும் அவர்கள் கேட்கிறார்கள்**!" என்று பாபா சிடுசிடுத்தார்.

காலை உணவிற்குப் பிறகு, பாபாவும் குழுவும் நகரத்தை இரண்டு கார்களில் சுற்றி வந்தனர். ஸெயின்ட் ஜான் லேட்டரனின் (ST JOHN LATERAN) அரண்மனை, பஸிலிக்கா (BASILICA), ரோம் நீரூற்றுகள், வட்டிக்கன் அருங்காட்சியகம் மற்றும் சில காட்சியகங்களுக்கும் (VATICAN MUSEUM & GALLERIES) சென்றனர். பாபா உண்மையில் காட்சியகங்களின் தாழ்வாரங்கள் வழியாக வேகமாக நடந்து, பின்பு சிஸ்டைன் சேப்பலில் (SISTINE CHAPEL) அமர்ந்தார். ஆர்வமுள்ள பெண்டு அவரிடம், போப், கார்டினல் மற்றும் உள் முகட்டுப் பரப்பில் வர்ணம் தீட்டிய கலைஞரான மைக்கேலேஞ்சலோவின் (MICHELANGELO) ஆன்மீக முக்கியத்துவம் குறித்து கேட்டார். "**இன்று, இந்த இடம் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது**" என்று மட்டுமே பாபா கருத்துத் தெரிவித்தார்.

மதிய உணவிற்குப் பிறகு வெப்பம் அதிகமாக இருந்தது. நோரினா ஒரு சில நேரடி பேட்டிகளை ஏற்பாடு செய்திருந்தார், ஆனால் ரோமானியர்கள், குறித்த நேரத்தில் வராமல் தாமதமாக வந்தனர். பாபா, நோரினாவிடம், "**அவர்கள் சரியான நேரத்தில் வராததால், நான் அவர்களை சந்திக்க மாட்டேன்**" என்று கூறினார். இருப்பினும், நோரினா, பாபாவிடம் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, அவர் ஒரு சில நபர்களை சந்தித்தார்.

பாபா அன்று இரவு ரயிலில் புறப்பட்டு, ஸான்டா மார்கெரிட்டாவைச் சென்றடைந்தார். ரோம் நகரம் பாபாவின் மனதிற்கு அவ்வளவு இதமாக இல்லை என்ற காரணத்தால், கடலுக்கு அருகில் திரும்பி வந்ததில் மகிழ்ச்சி அடைந்தார். இருப்பினும், அவர்களை சந்திக்க எவரும் ரயில் நிலையத்திற்கு வராததால், ஏமாற்றத்தை வெளிப்படுத்தி, கார்களில் வில்லாவுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று, மேலும் அனைத்து பொருட்களையும் அவர்களே எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. மிகவும் சோர்வடைந்த பாபா, நேராக தனது அறைக்குச் சென்றார்.

குயன்டினுக்கு ருவானோ போகிஸ்லாவ் (RUVANO BOGISLAV) என்ற அன்பான, நெருங்கிய நண்பர் இருந்தார். 57 வயதான ருவானோ (RUVANO) ஒரு ஓபரா பாடகி, நடிகை மற்றும் தொழிலதிபர். அவர் பாரிஸில் வசித்து வந்தார், ஜூன் மாதம் குயன்டின் இந்தியாவிலிருந்து இங்கிலாந்து திரும்பிய போது,

மெஹர் பாபாவைப் பற்றி ருவானோவிடம் கூற, அவர் பாரிஸ் நகருக்குச் சென்றார்.

அந்நேரத்தில், நியூயார்க் நகரிலிருந்து ருவானோவைப் பார்க்க, திருமதி ஹென்றி பெல் கெய்லி - HENRY BELL GAYLEY, ('நான்னி' - NONNY என்று அழைக்கப்பட்டார்), மற்றும் அவரது மகள் மேடலின் - MADELEINE, (ரானோ - RANO) என்று அழைக்கப்பட்ட இரண்டு நண்பர்கள் வந்தனர். இரவு உணவின் போது, குயன்டின் மூவரிடமும் பாபாவைப் பற்றி கூறினார்.

ரானோ, குயன்டினின் சுவாரஸ்யமான கதையைப் பணிவுடன் கேட்டபோது, 'டாட், இதையெல்லாம் ஆர்வத்துடன் மிகைப்படுத்திக் கூறுகிறார், அதில் அதிக உண்மை இருக்க முடியாது' என்று நினைத்தார்.

பின்பு, குயன்டின், பாபாவின் புகைப்படத்தை அவர்களிடம் கொடுத்த போது, நான்னி அதைப் பார்த்ததும், மெய்சிலிர்த்துப் போனார். அவர், "இதுதான் அந்த மனிதர்!" எனக் கதறியதன் அர்த்தம் என்ன என்று ரானோ கேட்டார். 1932ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நாள், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில், நீண்ட தலைமுடியுடன் ஒரு மனிதரின் புகைப்படத்தை கவனித்ததை எடுத்துக் கூறி, 'அவரேதான்' என்று நான்னி பதிலளித்தார். அவரை எப்படியேனும் சந்திக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு அவரைக் கட்டாயப்படுத்தியது. இதே மனிதர். இது மெஹர் பாபா.

ரானோவின் இதயம் படிப்படியாக மெஹர் பாபாவின் முகத்தோற்றத்தால் தாக்கப்பட்டது; அது அவருடைய இறைவனின் சித்திரம், அவருடைய மனம் குதர்க்கமாகச் செயல்பட்டாலும், இதயம் உண்மையை உணர்ந்தது.

அன்று மாலை, பாபா, ஐரோப்பாவிற்கு வரும்போது ருவானோவைத் தொடர்புகொள்வதாக, குயன்டின் உறுதியளித்தார். பாபா, அமெரிக்காவிற்குப் பயணிக்கத் திட்டமிட்டுள்ளதால், நான்னி, ரானோ இருவரும் மெஹர் பாபாவை, நியூயார்க்கில் சந்திக்க முடியும் என்று குயன்டின் விளக்கினார். அதைத் தொடர்ந்து, பாபாவை அங்கு சந்திக்கும் நம்பிக்கையில் நான்னியும் ரானோவும் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்றனர்.

குயன்டின், இத்தாலியில் பாபாவை சந்தித்த போது, ருவானோ, நான்னி, ரானோ மூவரையும் குறித்து அவரிடம் கூறினார். பாபா உடனே, குயன்டினிடம் ருவானோவிற்குக் கடிதம் எழுதும்படி அறிவுறுத்தினார்; அவரை சந்திக்க போர்டோஃபினோவுக்கு வருமாறு அழைத்தார். ஜூலை 8ஆம் நாள் ருவானோ பாபாவை சந்திக்க ரோம் நகருக்கு வந்தார்.

மறுநாள் காலையில், குயன்டின், ருவானோவை வில்லாவுக்கு அழைத்து வந்தார். அவருடைய முதல் சந்திப்பை ருவானோ இவ்வாறு விவரித்தார்:

மெஹர் பாபா தங்கியிருந்த வில்லா, மத்தியதரைக் கடலை நோக்கி உயரமான மலையில், அழகான பூந்தோட்டங்களால் நிறைந்திருந்தது. நாங்கள் வாயிலில் நுழைந்த அந்தத் தருணம், எனது கண்களில் கண்ணீர்

பெருக்கெடுத்தது; நாங்கள் மலையில் ஏறும்போது நிலைமை மேலும் மோசமாகி நான் அழத் தொடங்கினேன்; இதைக் குறித்து நான் மிகவும் வெட்கப்பட்டேன், குறிப்பாக அனைவரும் என்னைத் திரும்பிப் பார்க்கும் விதத்தில் இருந்தேன்; அழுவதை என்னால் நிறுத்த முடியவில்லை. நாங்கள் வில்லாவைச் சென்றடைந்த நேரத்தில், நான் ஒரு பயங்கரமான நிலையில் காணப்பட்டேன். குயன்டின் எனக்கு ஒரு கப் தண்ணீரைக் கொண்டு வந்தார், ஆனால் எதுவும் உதவவில்லை; கதவு திறந்தபோது பாபா அங்கே நின்று கொண்டிருந்தார்.

நான் செய்ததை என்னால் நினைவில் கொள்ள முடியவில்லை. நான் அவரைப் பார்த்தேன் என்று எனக்குத் தெரியும். இது அநேகமாக ஒரு நொடி நேரம் மட்டுமே இருந்தது, ஆனால் நான் யுகங்களைத் தேடுவது போலத் தோன்றியது. நான் எனது முகத்தின் மீது கைகளை வைத்து, முன்பை விட அதிகமாக அழுதேன்.

பாபா, என்னை ஒரு சோஃபாவிற்கு அழைத்துச் சென்ற அந்த அன்பான மற்றும் மென்மையான வழியை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன், என்னை அவருடன் அமர வைத்து எனது கையை இதமாக வருடினார். அழுவதை நிறுத்த முடியாமல் போனதற்கு நான் எவ்வளவு வருந்துகிறேன் என்று அவரிடம் சொல்ல முயற்சித்தேன். உடனே அவர் எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்ததை குயன்டின், "**அது அப்படியே இருக்கட்டும் என்று அவரிடம் சொல்லுங்கள்**" என்று கூறினார்.

அவர் என்னைத் திருப்பி அனுப்பிவிடுவார் என்று எனக்கு ஒரு பெரிய அச்சம் இருந்தது, எனவே நான் திரும்பிச் செல்ல வேண்டுமா என்று கேட்டேன்; ஆனால், என் அன்பிற்குரிய பாபா 'இல்லை' என்று தலையை அசைத்தார். தினமும் காலையில் பத்து முதல் பன்னிரண்டு வரையிலும், ஒவ்வொரு மதியம் நான்கு முதல் ஆறு வரையிலும் வில்லாவுக்கு வரும்படி என்னிடம் கூறினார். தேவாலய மணியோசையின் உதவியுடன் இந்த வழிமுறைகளை நான் நிமிடம் தவறாமல் செய்துவந்தேன்.

நான் பத்து நாட்கள் அழுதேன். நான் உணவு உண்டேனா, தூங்கினேனா என்பது எனக்குத் தெரியாது. நான் வில்லாவுக்குத் திரும்பக்கூடிய தருணத்தை மட்டுமே நினைவில் கொண்டிருந்தேன். சில நேரங்களில் நான் பாபாவைப் பார்க்கவில்லை. ஒரு முறை அவர் என்னை ஜன்னல் ஓரம் அழைத்துச் சென்று, கடலுக்கு மிகக் கீழே சுட்டிக்காட்டி, அவரது எழுத்துப்பலகையில் "**நான் கடல் போன்றவன். என்னில் உங்களை மூழ்கடித்து, நீங்கள் என்றென்றும் வாழ்வீர்கள்!**" என்று தெரிவித்தார்.

ருவானோவின் கண்ணீர் அவர் இதயத்தைத் தூய்மைப்படுத்தி அதில் நெருப்பை எரிய வைத்தது - அவரை பாபாவின் அரவணைப்பில் நிரந்தரமாகக் கொண்டுவந்தது.

1933, ஜூலை 9ஆம் நாள், குயன்டின், மார்கரெட், மேபெல், டிலியா ஆகியோர் ஒரு குறுநாடகத்தை நடத்தினர்; இதை, பாபா, ரோம் சென்றபோது தயார் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பாபா அவர்களிடம் அடிக்கடி கூறியதற்கு இணங்க நாடகத்தின் பொருளை இவ்வாறு எடுத்துரைத்தார்: **“நீங்கள் எனக்காக ஒரு சிறந்த சிறுவனைத் தேடிக் கண்டுபிடித்தால், நான் எனது மௌனத்தைக் கைவிடுவேன்.”**

ஆகையால், அவர்கள் தயாரித்த நாடகத்தில் அனைவரும் இப்போது வயதானவர்களாக இருக்கிறார்கள், அத்தகைய சிறுவன் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டான், ஆனால் பாபாவிடமிருந்து வந்த தொலைத்தந்தியில் (‘வெஸூவியஸ் - VESUVIUS மலை வெடித்ததால்’) அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது! இதைக் கேட்டு, அனைவரும் மயங்கி விழும் நிலையில் கடைசியாக, "நாங்கள் இன்னும் நம்பிக்கையோடு இருக்கிறோம்!" என்று கூறினர். நாடகம் நிறைவுறும் வேளையில், மார்கரெட், குயன்டின் இருவரும் ஒரு குடையுடன் நடனமாடினர் - (இது, மெரடித், மார்கரெட் ஸ்டார் இருவரும் பாபாவை விட்டுச் சென்றதைக் குறித்தது), மேலும், மேபெல், அனிதா, டிலியா மூவரும் ஓர் ஆஃபிரிக்கா தலைவரையும் அவரது கோத்திரத்தையும் பின்பற்றும் குலத்தைச் சார்ந்தவர்களாக நடித்தனர். பாபா இதைக்கண்டு மிகவும் மகிழ்ந்தார்.

ஒரு நாள் பிற்பகல், அவர்கள் பாபாவுடன் வெளியே குன்றின் மீது அமர்ந்திருந்தபோது, கடந்த கால வாழ்க்கையைக் குறித்த பேச்சு எழுந்தது. கிருஷ்ணரின் துணைவியார் - ராதா என்று மின்டா அப்பாவித்தனமாகக் கூறினார். நோரினா, இயேசுவின் தாயான மரியாவாக இருந்ததாக நினைத்தார். பிற அனைவரும் கடந்த கால வாழ்வில் பல்வேறு வரலாற்று சிறப்புமிக்கவர்களாக இருந்ததாகக் கருதினார்கள்; ஆனால் பாபா, அவர்கள் ஒவ்வொரு காலத்திலும் யார் என்பதைக் குறிப்பிடவில்லை.

இந்த நிகழ்வைக் குறித்து, மார்கரெட் ஒருமுறை இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "அதிர்ஷ்டவசமாக, அந்த நாளில் எவரும் கிளியோபாட்ரா என்று கூறவில்லை, நல்ல காலம்!" நடந்தது அனைத்தும் வேடிக்கையானது, கேலிக்குரியது என்று அவர் நினைத்தார். "பாபா, கடந்த காலத்தைக் குறித்து நான் எதையும் விரும்பவில்லை - ஆனால் தற்போது நான் உங்கள் மனைவியாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன்; ஆனால் நான் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்க மாட்டேன். நான் எப்பொழுதும் உங்கள் மனைவியாகவே இருக்க வேண்டும்!" என்றார்.

பாபா மகிழ்ச்சியடைந்து, அவர் சொன்னது மிகவும் நல்லது என்று சைகையால் தெரிவித்தார். சில நாட்களுக்குப் பிறகு, பாபா, தனது சட்டைப் பையிலிருந்த எகிப்திய புனித சின்னம் அடங்கிய மோதிரம் ஒன்றை மார்கரெட்டின் விரலில் அணிவித்தது, அவரது இதயத்தை நெகிழச் செய்தது. மார்கரெட் அதை ஒருபோதும் விரலிலிருந்து அகற்றவில்லை; அதற்குப் பிறகு, பல வருடங்கள் பாபாவிற்கு எழுதிய கடிதங்களில் ‘தாமஸின் வருங்கால

மனைவி’ என்று கையெழுத்திட்டு வந்தார். (தாமஸ் என்ற பெயரில் ஒரு சிறுவனாக, பாபா விளைாட்டுத்தனமாக பாவனை செய்து நடித்து, முந்தைய ஆண்டு ஸான்டா மார்கரிட்டாவில் நடன வகுப்பிற்காக மார்கரெட்டிடம் வந்திருந்தார்.)

**1933,** ஜூலை **10**ஆம் நாள், மெஹர் பாபாவின் மௌனத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு நாள். மேலை நாட்டினரைப் பொறுத்தவரை, இது குருநாதரின் பணி மற்றும் சக்திகளின் சிறந்த அனுபவம் நிறைந்த நாள். தேநீர் அருந்திய பின்பு, பாபா அவர்களில் சுமார் பதினைந்து பேரை, குன்றின் வழியே நடக்க அழைத்துச் சென்று, “**இன்று நம் எல்லோருக்கும் இது நல்ல உடற்பயிற்சியை அளிக்கும், குன்றின் மேலும் கீழும் நாம் ஏறி இறங்குவோம், இதை நான் உங்கள் அருகில் இருக்கும்போதெல்லாம் எப்பொழுதும் செய்ய விரும்புகிறேன். எனவே நினைவில் கொள்ளுங்கள், என்னுடன் இருங்கள், நான் எங்குச் சென்றாலும் என் அருகில் இருங்கள், தனியாகப் பிரிந்து விடாதீர்கள். ஒன்றாக இருங்கள்**” என்றார்.

அழகிய இத்தாலிய வானத்தைப் பார்த்த பின்பு, பாபா அவர்களை ஒரு செங்குத்தான குன்றிலிருந்து கீழே கடலுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை ஒன்றாக இருந்தனர். ஆனால், சிலர் தங்கள் வழக்கமான உரையாடலின் காரணமாக, பின்தங்கத் தொடங்கினர். கடலை நோக்கி கடைசியாக இறங்கும் பாதையில், சாய்வு மிகவும் செங்குத்தாகவும், ஆபத்தானதாகவும் இருந்ததால் சிலர் பின்வாங்கினர். பாபா, ஹெர்பெர்ட், விவியன் மூவரும் அடிவாரத்தைச் சென்றடைந்தனர். பாபா, பிற அனைவரும் வந்து சேராததால், விரைவில் வருமாறு அவர் சத்தமாகக் கையைத் தட்டினார். அனிதா வேகமாக வர, பிற அனைவரும் மெதுவாகப் பின்தொடர முயன்றனர், ஆனால் அவர்களால் இறங்க முடியவில்லை. குயன்டின் அவர்களைத் திரும்பி மேலே வருமாறுக் கேட்டுக் கொண்டார். எனவே, பிற அனைவரும் தாங்கள் வந்த வழியில் திரும்பிச் சென்று, குயன்டின், மேபெல் ஆகியோருடன் இணைந்து வில்லாவுக்குத் திரும்பினர்.

பாபா, ஹெர்பெர்ட், விவியன், அனிதா ஆகியோர் வந்த வழியாகத் திரும்பிச் செல்வதற்கு பதிலாக, ஒரு குறுக்குவழியில் செல்லுமாறு பாபா கூறினார், அவர் உடனே மற்றொரு மேடு வழியாக மீண்டும் ஏறத் தொடங்கினார்; வேகமாக, இலகுவாக, பாபா மென்மையான பாறையில் ஏறிச் சென்றார்; இவ்வேளையில் ஹெர்பெர்ட், விவியன், அனிதா மூவரும் பாபாவைப் பின்தொடர்ந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை. பாபா பெண்மணிகளுடன் இதமாக நடந்துகொண்டார், கடினமான இடங்களில் அவர்களை மேலே இழுக்க ஒரு கையை நீட்டி அவர்களுக்கு உதவினார். இந்தத் துணிச்சலான முயற்சி, ஆபத்தான கட்டங்களிலும், அனைத்து சூழ்நிலையிலும் குருநாதரைப் பின்பற்றுவதன் அடையாளமாக இருப்பதாக ஹெர்பெர்ட் நினைத்தார்; மேலும்

அவர் பாபாவின் பாதுகாப்பில் நம்பிக்கையுடன் தைரியமாக மேல்நோக்கி ஏறினார்.

இவ்வேளையில் அவர்கள் பாதி வழியில், குன்றின் மீது மாட்டிக்கொண்டு இருப்பதை உணர்ந்தார்கள். மேலே தெளிவான, எளிதான பாதை எதுவும் தென்படவில்லை. பாபா, ஹெர்பெர்ட் இருவரும் பல சூழ்ச்சிகளை முயற்சித்தனர்; பெண்களை அவர்கள் இருந்த இடத்திலேயே காத்திருக்கக் கூறினர், ஆனால் அவர்களுக்கு மேலே சுத்தமான பாறை முகட்டைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை, இரு பக்கங்களும் செங்குத்தாகக் கடலை நோக்கி இருந்தது!

ஹெர்பெர்ட் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் வேர்கள் மற்றும் கிளைகளைப் பற்றிக்கொண்டு ஏற முயற்சித்தார், முடியவில்லை; அவரது இதயம் பயங்கரமாகத் துடித்தது. ஒரு சிறிய பாதை இருந்தது, ஆனால் ஒரு பெரிய பாறை பதினைந்து அடி தூரத்திற்கு வெளியே நீண்டு நின்று, வழியைத் தடுத்தது. பாபா அந்த வழியில் முயற்சித்து, வேகமாக ஏறிய வேளையில், சிதறடித்த சரளைக்கற்கள் ஹெர்பெர்ட் மீது வந்து விழுந்தன. பாபா உடனே ஹெர்பெர்ட்டைப் பின்தொடர கைதட்டி அழைத்து, பார்வையிலிருந்து மறைந்துவிட்டார்.

பாபா கடைசியாக அவர்களை, கை சைகையால் மேலே வர அழைத்ததால், ஹெர்பெர்ட், விவியனையும் மேலே வரச் சொல்லி அழைத்தார். விவியனும் வீரத்தோடு முயற்சித்தும், போதிய வலிமை இல்லாததால் ஏற முடியாமலாயிற்று. அங்கிருந்து கீழே பார்க்க மிகவும் பயமாக இருந்தது. அனைவரும் பாபாவிடம் உதவிக்காக உரக்கக் கத்தி குரல் கொடுத்தனர். ஹெர்பெர்ட் படிப்படியாகத் தனது ஆபத்தான இடத்திலிருந்து நழுவிக் கொண்டிருந்தார், அங்குத் தளர்வான அழுக்கு மற்றும் வழுக்கும் பாசி, பாறையை மூடி இருந்தது. எந்த ஓர் அசைவும் கற்கள் மற்றும் பாறைகளைக் கீழே தள்ளி விவியனை சிரமத்திற்குள்ளாக்கி இருக்கும்; அவர் பாறையில் மனதைரியம் இழந்து அப்படியே ஒட்டிக்கொண்டிருந்தார்; மேலும் அவரது உடலை அந்த இடத்தில் அழுத்தி, நகர்த்தவும் முடியவில்லை. அனிதா அவருக்குக் கீழே தைரியமாக இருக்க முயன்றார்.

இதர அனைவரும் வில்லாவுக்குத் திரும்பி வந்தனர்; பாபாவின் குழு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகும் திரும்பவில்லை என்று ஆச்சரியப்பட்டனர். இதற்கிடையில், பாபா ஓர் உயர்ந்த குன்றின் மீது ஏறி, வழிப்போக்கர்களின் கவனத்தை ஈர்க்க, சத்தமாகக் கைதட்டினார். அவர் இருந்த இடம் வில்லாவிலிருந்து குறைந்தது ஒரு மைல் தொலைவில் இருந்ததால், அங்கு எவரும் அந்த சத்தத்தைக் கேட்கவில்லை. ஆனால் அந்த இடத்தை நடைப்பயிற்சிக்காகக் கடந்து சென்ற இத்தாலிய பாதிரியார் ஒருவர், பாபாவைப் பார்த்தார்; மேலும், பாபா தங்கியிருந்த இடத்தையும் அறிந்திருந்தார். அவர் வீட்டிற்கு விரைந்து சென்று, இத்தாலிய சிறுவன் டினோவிடம் இதைக் கூறினார்.

டினோ, பாபாவை நோக்கி விரைந்தோடி, கயிறுகளைக் கொண்டுவருவதற்கான அவரது கை சைகைகளைப் புரிந்து கொண்டான். அவன்

மீண்டும் வில்லாவிற்குத் திரும்பிச் சென்று, மாலை உணவை சமைத்துக் கொண்டிருந்த காக்கா, ஆதி ஜூனியர், பெண்டு ஆகியோரிடம் கூறினான். அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு, அவர்கள் உடனடியாக ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு விரைந்தனர்.

இந்த நேரத்தில், விவியன் பயந்து, உரத்த குரலில் "பாபா! பாபா!" எனக் கதறினார். அனிதா **15** முதல் **20** அடி கீழே, மேலும் **300** அடி கீழே கடல் இருப்பதை அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. இந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையை கைவிடாத ஹெர்பெர்ட், உதவி வருவதாக விவியனுக்கு உறுதியளிக்க முயன்றார். அனிதா பயப்படவில்லை ஆனால் குழப்பமடைந்தார்; பாபாவுடன் மேற்கொண்ட இந்த நடைப்பயணத்தில், இது எப்படி நடந்திருக்க முடியும் என்று ஆச்சரியப்பட்டார். "ஒரு கோழை ஆயிரம் முறை இறக்கிறான், ஆனால் ஒரு வீரன் ஒரு முறை மட்டுமே!" என்ற வரி அவர் மனதில் தொடர்ந்து தைரியம் அளித்தது.

இறுதியாக, பெண்டு குன்றின் உச்சியில், கையில் ஒரு பெரிய கயிற்றுடன் தோன்றினார். அவர் ஒரு மரத்தில் கயிற்றைக் கட்ட, பாபா அதைப் பற்றிக்கொண்டு கீழே இறங்கினார்; பெண்டு அவரைப் பின்தொடர்ந்தார்; அவர்கள் இறங்கும்போது பாபாவின் மீது கூழாங்கற்கள் சுழன்று விழுந்து கொண்டிருந்தன. சிக்கித் தவித்தவர்களை அடைய, கயிறு அவ்வளவு நீளமாக இல்லாததால், பெண்டு மலை முகடுகளில், மேலும் கீழும் சென்று, ஹெர்பெர்ட் மற்றும் விவியனை மேலே இழுக்க கையை நீட்டினார். பெண்டு பிறகு குன்றின் பக்கவாட்டில் மேலும் கீழும் நழுவி, அனிதாவிடம் அவரது காலைப் பிடித்து ஏறச் சொன்னார்; அனிதா அதை இலகுவாகச் செய்து மீட்கப்பட்டார். பின்னர் அனிதா இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

ஆச்சரியமாக இருந்தது என்னவெனில், பாபாவின் இணையற்ற அற்புதமான அழகு. அழகு என்ன என்பதை நான் முதன்முதலில் பார்த்தது போல் இருந்தது. நான் மேலே இழுக்கப்பட்ட வேளையில், பாபா என்னை உற்று நோக்கினார்; அங்கே - கடலுக்கு எதிராக, பாறைகளுக்கு எதிராக, வானத்திற்கு எதிராக - பாபா ஒரு மிகப்பெரிய 'பைஸான்டைன்' - BYZANTINE (கிழக்கு ரோமாபுரி பேரரசின் தலைநகரான பைஸான்டியம் நகரைச் சார்ந்த), உருவத்தைப் போலவும் மிக அழகான புன்னகையுடனும் தோன்றினார். அந்த நேரத்தில், 'இனி ஒருபோதும் நான் இதைப் போன்ற அழகைப் பார்க்க மாட்டேன்' என்று நினைத்தேன்.

மெஹர் பாபா, உடன் சென்ற அனைவரையும் கண்டித்தார்: "**மீண்டும் என் உத்தரவை நீங்கள் மீறிவிட்டீர்கள். உங்களை எப்போதும் என்னுடன் இருக்கச் சொன்னேன், ஏன் என்னை விட்டுச் சென்றீர்கள்?**"

குயன்டின் அவர்களிடம் திரும்பி வருமாறு சொன்னதாகக் கூறினார்கள்; பாபா உடனே, அவருக்கே உகந்த சினத்துடன், "**குயன்டின் உங்கள் குருநாதர் என்றால், நீங்கள் அவரைப் பின்பற்றுங்கள். ஏன் என்னுடன் இருக்கவேண்டும்? என்னோடு நெருக்கமாக இருக்கும்படியாக உங்களிடம்**

**நான் சொல்லவில்லையா? வெளியேறும் போது ஏன் என்னிடம் கேட்கவில்லை? என்னுடைய கட்டளைகளை நீங்கள் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும்”** என்றார்.

வில்லாவுக்குத் திரும்பி வந்ததும், பாபாவின் மனநிலை மாறியது; அவர் இந்த அபாயத்தின் உயிர்த்துடிப்பை அனுபவிப்பதாகத் தோன்றியது; அவர் ஒரு பள்ளி மாணவனைப் போல மகிழ்ச்சியாக இருந்தார். அனிதா அதை இவ்வாறு விவரித்தார்: பாபா, மட்டற்ற மகிழ்ச்சியுடன், அதி பிரகாசமாகத் தோன்றினார். அனைவரையும் நூலகத்திற்குள் அழைத்து, அவர் நடத்திய சாகசத்தை விவரித்தார். பாபா, அவரது கைகளால், ஹெர்பெர்ட், அனிதா, விவியன் ஆகியோருக்கு ஒரு டம்ளர் பழரசத்தைப் பரிமாறினார்; மேலும் அதைக் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "**இந்த அனுபவத்தை உங்கள் அனைவருக்கும் வழங்க நான் விரும்பினேன், ஆனால் நான் பலமுறை எச்சரித்தபடி சிலர் என்னுடன் இணைந்திருக்கவில்லை. எனது விருப்பத்திற்கு ஏற்ப ஒருவர் இறப்பது உண்மையான வாழ்க்கை. இந்த சாகச விளையாட்டின் மூலம், நான் மிகச் சிறந்த பணிகளைச் செய்துள்ளேன். சக்திகளைச் செலவிட்டு, உணர்வுகளைத் தூண்டி, தைரியத்தை வெளிப்படுத்திய இவை அனைத்தும் எனது ஆன்மீகப் பணிகளில் பயன்படுத்தப்பட்டன.**”

போர்டோஃபினோவில் தங்கியிருந்தபோது, ஐரோப்பாவில் வாழ்ந்த பல ஆர்வலர்கள் தங்கள் நாடுகளுக்கு விஜயம் செய்யுமாறு பாபாவிற்கு அழைப்புகளை விடுத்தனர். இதுபோன்று, இத்தாலி, ஃபிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்ட்ரியா, ருமேனியா போன்ற நாடுகளில் நோரினா, குயன்டின் ஆகியோர் பல்வேறு நபர்களைத் தொடர்பு கொண்டனர். ஒவ்வொரு நாட்டையும் பார்வையிட நீண்ட நேரம் எடுக்கும்; பாபா இப்போது இந்தியா திரும்புவதற்கான ஆர்வத்துடன் இருந்தார். இதர நாடுகளுக்குச் செல்வதற்கான திட்டங்களை அவர் ரத்து செய்தார், அதற்கு பதிலாக, பாபா இத்தாலியில் தங்கி, தனது பணிகளைச் செய்ய முடிவு செய்தார். எவ்வாறாயினும், விரும்பியவர்கள் போர்டோஃபினோவிற்கு வந்து பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ருவானோ, ஹெடி போன்ற ஒரு சில நபர்கள் நகரத்தில் தங்கவும், ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் வில்லாவுக்கு வரவும் அனுமதிக்கப்பட்டனர். பாபா அவரது மேற்கத்திய பறவைகள் மீது கவனத்தைத் திருப்பி, பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டார். இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களுக்கு, அவர் தனது தெய்வீக மதுபானத்தை மேலும் மேலும் வழங்கி, தாகத்தை ஏற்படுத்தினார்.

லண்டனில் பயின்று வந்த இந்திய தத்துவ மாணவர் சி.டி. தேஷ்முக், (C.D. DESHMUKH) டாக்டர் பட்டம் பெற்றதும், பாபாவை சந்திக்க வந்து நான்கு நாட்கள் தங்கியிருந்தார். அவர் பாபாவிடம், "நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

பாபா புன்முறுவல் செய்து கொண்டே, **“என்னை மறந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!”** என்று கூறி **“ஒரு பல்கலைக்கழகத்தில் வேலை தேடுங்கள், ஆனால் எனது அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்காக நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், ஆனால், நீங்கள் எப்பொழுதும் என்னை உங்களுடன் வைத்துக்கொள்ள வேண்டும்”** என்ற கருத்துடன் பாபா அவரிடம் வேலை தேடுமாறு கூறினார்.

கிருஷ்ணமூர்த்தியின் எழுத்துக்களால் வெகுவாக ஈர்க்கப்பட்ட தேஷ்முக் பாபாவிடம், "ஒரு குருவின் உதவியின்றி ஆன்மீகப் பாதையில் முன்னேற முடியாதா?" என்று வினவினார்.

அதற்கு பாபா, **“உங்கள் கண்களைக் கட்டிக்கொளுங்கள், பின்னர் ஆதியைக் கண்டுபிடித்து, அவரை இங்கு அழைத்து வாருங்கள்!”** என்றார்.

ஆதி ஜூனியர் அடுத்த அறையில் இருந்தார், எனவே தேஷ்முக் கேட்டார், "கண்களை மூடிக்கொண்டு நான் அவரை எப்படிக் கண்டுபிடிப்பது?"

**“முதலில் நீங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள்”** என்று பாபா அறிவுறுத்தினார்.

தேஷ்முக் தயக்கத்துடன் கண்களுக்கு மேல் ஒரு துண்டு துணியைக் கட்டிக்கொண்டு, சாஞ்சியிடம் அவரை, ஆதி ஜூனியரின் அறைக்கு அழைத்துச் செல்லும்படி சைகையால் தெரிவித்தார்.

சாஞ்சியும் அவ்வாறு செய்தார்; தேஷ்முக் விரைவில் பாபாவிடம் திரும்பி வந்ததும், **“ஏன் ஆதியின் அறைக்கு உங்களால் தனியாகச் செல்ல முடியவில்லை?”** என வினவினார்.

"கண்களை மூடிக்கொண்டதால் வழியை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை," என்று அவர் கூறினார்.

**“அப்படியானால் உங்களுக்கு வழி தெரிந்த ஒருவரின் உதவி தேவையா?”**

"ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்," என்று தேஷ்முக் ஒப்புக் கொண்டார். அதற்குப் பிறகு பாபா விரிவாக விளக்கினார், **“அதேபோல, நீங்கள் பாதையைக் கண்டுபிடிக்க முடியாது. நீங்கள் மாயையில் கட்டுண்டு கண்மூடித்தனமாக இருக்கிறீர்கள். நீங்கள் பாதையை கடந்து செல்ல விரும்பினால், அதை எங்குக் கண்டுபிடிப்பது என்று தெரிந்தவரின் உதவியை நீங்கள் நாடியாக வேண்டும், இல்லையெனில், நீங்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து, அநேகமாக உங்கள் தலை, கால்களை உடைத்து, கடைசியில் நீங்கள் ஒன்றையும் அடையப்பெற மாட்டீர்கள்.”**

பாபாவின் இந்தத் தெளிவான விளக்கம், தேஷ்முக்கை அவரது தவறான கருத்திலிருந்து விடுவித்தது, மேலும் பாபா நகைச்சுவையாகக் கேட்டார், **“தத்துவ நிபுணரே, இதுபோன்ற ஒரு எளிய விஷயத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? அல்லது உங்கள் தத்துவமே உங்களை குழப்பமடையச் செய்கிறதா?”**

நான்கு நாட்களுக்குப் பிறகு, தேஷ்முக் இந்தியாவிற்குத் திரும்பினார், உடனடியாக நாக்பூர் பல்கலைக்கழகத்தின் மோரிஸ் கல்லூரியில் பேராசிரியராகப் பணியில் நியமிக்கப்பட்டார்.

ஒரு நாள் வில்லாவில் மேற்கத்தியர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், போர்டோஃபினோவில் 'அல்தாச்சியாரா' கட்டப்பட்ட இடத்தில் நிகழ்ந்த, அவதார புருஷரின் ஒரு 'குறுகிய வருகை காலத்தைப்' பற்றி, பாபா அவர்களுக்கு விளக்கமளித்தார்:

**சில நூற்றாண்டுகளுக்கு முன்பு, குருநாதராக, ஆனால் குருநாதர் என பிறரால் அறியப்படாதவர், (நான் அவ்வப்போது அவதரிப்பது போன்ற குறுகிய அவதார காலகட்டம்), நான் எனது சில வட்டத்து சீடர்களுடன் போர்டோஃபினோவிற்கு வந்தேன், அவர்களில் சிலர் இப்போதும் என்னுடன் இருக்கிறார்கள்.**

**அந்த நாட்களில், போர்டோஃபினோவில் இப்போது இருப்பதைப் போல வீடுகளோ கட்டிடங்களோ இல்லை, ஆனால் சில குடிசைகள் இருந்தன. வில்லா கட்டப்பட்ட இந்த மலைக்கு இளம் ஜோடி ஒன்று தினமும் (தனிமையை நாடி) இங்கு வந்து நீண்ட நேரம் இருந்து செல்வதை வழக்கமாகக் கொண்டது.**

**ஒரு நாள் நான் தனியாக மேலே சென்றேன். என்னைப் பார்த்ததும், அந்த மனிதர் சீற்றமடைந்தார், ஆனால் நான் அருகில் சென்று அமர்ந்தேன். அவர் கோபத்தில் என்னை அறையவும் செய்தார். நான் எதுவும் சொல்லாமல் அமைதியாக நடந்து சென்றேன். அப்போது என்னுடன் இருந்த உங்களில் ஒருவர், இதைக் கேட்டு சீற்றமடைந்து, மலை மேல் சென்று, அந்த ஜோடி அங்கே அமர்ந்திருப்பதைக் கண்டதும், அந்த மனிதனுக்கு மீண்டும் கோபம் வரவே, அவர்களிடையே மோதல் ஏற்பட்டது. போராட்டத்தில், அவர்கள் குன்றின் விளிம்பை நெருங்கியதும், அந்தப் பெண் தனது காதலனுக்கு உதவ முன்வந்து, இருவருமாக இணைந்து உங்களை குன்றிலிருந்து கீழே தள்ளினர். வேறு எவராக இருந்திருந்தால் இறந்திருப்பார், ஆனால் என்னுடைய சீடர் அப்போது காப்பாற்றப்பட்டார்.**

**இதைக் கேட்டு ஆவேசமடைந்த என்னுடைய சீடர்களில் இன்னொருவர், மறுநாள் மலைக்குச் சென்றபோது, அந்த ஜோடியை அங்குக் கண்டுகொள்ள முடியவில்லை.**

**அடுத்த நாள், இரண்டு சீடர்களும் ஒன்றாகத் திரும்பிச் சென்று, அந்த ஜோடியை அங்கே பார்த்தபோது, அந்த நபர் எனது சீடர்களுடன் ஒரு பயங்கரமான, வன்முறை போராட்டத்தில் இறங்கி பலத்த காயமடைந்தார்.**

**இன்று குன்றின் மீது நடந்த சாகச விளையாட்டு, பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்தை எனக்கு நினைவூட்டியது.**

ஒரு சந்தர்ப்பத்தில், குழுவில் உள்ள ஒருவர், பாபாவிடம் காமத்தைக் குறித்து கேள்வி எழுப்பினார். அவர்களின் உரையாடல் பின்வருமாறு: "காமத்தை எதிர்த்துப் போராடுவதன் மூலம் ஒருவர் உண்மையான அன்பை வளர்த்துக் கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது. ஆனால் உண்மையான அன்பை வளர்ப்பதன் மூலம் ஒருவர் காமத்திலிருந்து விலகிச் செல்ல முடியும் என்று நீங்கள் கற்பிக்கிறீர்கள்."

அதற்கு பாபா, **"அன்பின் முறை நேரடியானது. இதர முறை மறைமுகமாகவும், சுற்றி வளைந்த முறையாகவும் உள்ளது. இது உங்கள் கையால், கழுத்தைச் சுற்றி வாயில் ஊட்டுவது போன்றது"** என்று பதிலளித்தார்.

"நான் ஒரு இளம் பெண்ணை சந்திக்கும்போது, விரும்பத்தகாத எண்ணங்கள் என் மனதில் எழுகின்றன, ஆனாலும் அவற்றை முழுவதுமாகத் தவிர்க்கும் வேளையில், நான் எனது வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதாக உணர்கிறேன். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து வெளியேற ஏதாவது வழி உள்ளதா?"

**"மேற்கத்திய நாடுகளில் செய்யப்படுவது போல, பாலினங்களை சுதந்திரமாகக் கலப்பது ஒட்டுமொத்தத்தில் நல்லது. ஆனால், அதில் ஒருவர் தனது மனதிற்குள் தூய்மையற்ற எண்ணங்களின் சிறிதளவு படபடப்பை உணர்ந்தாலும், அவர் ஒதுங்கி நிற்க வேண்டும். ஆனால் அவர் நேசிக்க வேண்டும். இதுபோன்ற எண்ணங்களைத் தவிர்க்க, அவர் 'என்னைப் பிறரிடம் நேசிக்க வேண்டும்' என்ற எண்ணத்தை மனதில் கொள்ள வேண்டியது அவசியம்."**

அந்த நபர் அப்போது, "உடலுறவின் மூலம் ஒருவர் அன்பை வெளிப்படுத்தவும், வளர்க்கவும் முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த பாபா, **"நீங்கள் பாலியல் செயலின் மூலம் அன்பை வெளிப்படுத்துகிறீர்கள் என்று நினைத்தால், நீங்கள் சோகத்தை விளைவிக்கும் அளவுக்குத் தவறாக நினைக்கிறீர்கள். காமமே அதில் ஈடுபட உங்களைத் தூண்டுகிறது. மனப்படிவங்களின் மோதல்கள் காரணமாக, பாலியல் உடலுறவு மூலம் தூய அன்பை வெளிப்படுத்த முடியாது"** என்றார்.

போர்டோ:ஃபினோவில் தங்கியிருந்தபோது, 1933 ஜூன் முதல் நவம்பர் வரை, ஷிகாகோவில் (CHICAGO) நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்து கொள்ள ஸ்டோக்ஸ் மூலம் பாபாவிற்கு அழைப்பு வந்தது. 'இந்தியாவிற்குத் திரும்பும்போது முடிவு செய்வார்' என்று பாபா ஒரு தொலைத்தந்தி அனுப்பி அவருக்குத் தெரியப்படுத்தினார்.

இதற்கிடையில், மெஹர் பாபாவிடமிருந்து விலகிச் சென்ற மெரடித் ஸ்டார், 1933ஆம் ஆண்டு ஜூலை மாதம் சம்பத் ஐயங்காருக்கு ஒரு கடிதம் எழுதி, அவர் ஏன் பாபாவை விட்டு விலகிச் சென்றார் என்பதை விவரித்தார்:

நான் இனி பாபாவைப் பின்பற்ற முடியாது, அவருடனான எனது தொடர்பை முற்றிலுமாகத் துண்டிக்க விரும்புகிறேன்… பாபா டெவன்ஷரில் இருந்தபோது எனக்கு சந்தேகம் எழுந்தது, இப்போது நான் அதை உறுதிப்படுத்துகிறேன். அதற்கான எனது காரணங்கள் பின்வருமாறு:

1. பாபா ஒரு பரிபூரண குருநாதரும், விரும்பத்தக்க ஆசிரியரும் அல்ல.
2. பொறுப்பற்ற குழந்தையைப் போல, பாபா வாக்குறுதிகளை வழங்குகிறார். அவருடைய வார்த்தையை நம்புவது முற்றிலும் சாத்தியமற்றது. (உதாரணமாக, அவர் கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் பேசவில்லை.)
3. அவர் எனக்கும், பிற அனைவருக்கும் எல்லா வகையான வாக்குறுதிகளையும் வழங்கி அவற்றை நிறைவேற்ற முயற்சிக்கவில்லை.
4. மேற்கத்திய நாட்டின் அளவீட்டுத் தரத்தின்படி, பெண்களுடனான அவரது நடத்தை மிகவும் விரும்பத்தகாதது… அவர் வேண்டுமென்றே பெண்களில் ஒருவிதமான வெறித்தனத்தை ஊக்குவிக்கிறார்.
5. அவர் ஐரோப்பிய சிறுவன் ஒருவனுடன் (கார்ல் ஃபிலிப் – CARL PHILIPP) சீனாவுக்குப் பயணம் செய்தார், இறுதியில் இது ஊழலுக்கு வழிவகுத்தது; செய்தித்தாள்களில் இதை விமர்சித்து, அவரை எள்ளி நகையாடினர். அவரைப் பின்பற்றும் மேற்கத்தியர்களில் பெரும்பாலும் வெறித்தனம் மிக்க பெண்களே ஆவர்; அவர் பிரசித்திபெற்ற மனிதர்களிடம் நெருக்கமாக இல்லை; வெளிப்படையாகக் கூறப்போனால் அவர் அமெரிக்காவில் ஒரு விரும்பத்தகாத சாகசக்காரராகக் கருதப்படுகிறார்.
6. பாபாவைவிட அமைதியற்ற ஒருவரை நான் அரிதாகவே பார்த்திருக்கிறேன்.
7. பாபா அவர்களிடமிருந்து பணம் அல்லது பிற உதவிகளைப் பெற விரும்பியதால், அவர் மிகவும் தகுதியற்றவர்களைப் புகழ்ந்து பேசுவதை நான் மீண்டும் மீண்டும் பார்த்திருக்கிறேன். அவர் என்னிடம் அப்படிச் சொல்லிவிட்டு, அவர்களின் முதுகுக்குப் பின்னால் அவர்களைப் பார்த்து சிரித்ததுண்டு. முதல் முறையாக அவர் அமெரிக்கா சென்றபோது, அவரது ஒரே எண்ணம் பணம் பெறுவதுதான். அவர் 'பெரிய சட்டத்திற்கு' எதிராகச் செயல்படுவதை அறிந்திருப்பதாக என்னிடம் கூறினார்.

என் மனதில், இவை அனைத்தும் கடுமையான, தனிப்பட்ட குற்றச்சாட்டுகள்… எல்லா வகையான அற்புதமான காரியங்களையும் செய்ய விரும்புவதாக பாபா கூறுகிறார். இந்தப் பயணங்கள் அனைத்தையும் மீறி, அவர் நடைமுறையில் எதுவும் செய்யவில்லை, மேலும், **7,000** பவுண்ட்ஸ் (ஏறக்குறைய **10,000** டாலர்) செலவிட்டுள்ளார்.

மெரடித்தின் கூற்றுக்கள் கேலிக்குரியவை என்றாலும், அவர் 'ஸ்காட்லாந்து யார்ட்' (SCOTLAND YARD) லண்டன் மெட்ரோபொலிட்டன் (LONDON METROPOLITAN) காவல் துறை நிறுவனத்தில் புகார் செய்தார். ஆனால் ஒரு விசாரணை ஆய்வாளர், மார்கரெட் க்ராஸ்குடன் பேச வந்தபோது, 'ஸ்காட்லாந்து யார்ட்', மெஹர் பாபாவிற்கு எதிராக எதுவும் கண்டுகொள்ள முடியாததை ஒப்புக்கொண்டார்.

மெரடித் ஸ்டார், பாபாவின் வழிகளை மிகக் குறைவாகவே புரிந்து கொண்டார்; ஆனால் பாபாவின் சொந்த காரணங்களுக்காக, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையிலான முதல் இணைப்புச் சங்கிலி அவரே ஆவார். அவரது தவறுகள் எதுவாக இருந்தாலும், அவர் எப்பொழுதும் அவ்வண்ணம் நினைவில் இருப்பார்.

பாபாவின் உணவை சமையலறையிலிருந்து அவரது அறைக்கு எடுத்துவரும் பொறுப்பு மின்டாவிற்கு வழங்கப்பட்டது; மேலும், குழு பாபாவுடன் அமர்ந்த போதெல்லாம், அவரது எழுத்துப்பலகையை மின்டா வைத்திருந்ததால், அவர் பாபாவின் அருகில் அமரும் வாய்ப்பைப் பெற்றார். ஒருமுறை, மேற்கத்தியர்கள் பாபாவுடன் மாடியில் அமர்ந்திருந்தபோது, மின்டா சிறிது நேரம் அறையை விட்டு வெளியேறினார்; உடனே வேறொரு பெண்மணி அந்த இடத்தில் அமர்ந்தார். மின்டா திரும்பி வந்ததும், அந்த நபரை நகருமாறு சைகையால் தெரிவித்தார், ஆனால் அந்தப் பெண்மணி மறுத்துவிட்டதால், மின்டா வேகமாக வெளியேறி சமையலறைக்குச் சென்றார்.

பெண்டு, பாபாவின் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்த அதேவேளையில், பாபாவின் உணவைத் தயாரிக்க, காக்காவிற்கு உதவினார். இருவரும் சமையலில் மும்முரமாக இருந்த வேளையில், மின்டா திடீரென அங்குச் சென்று அமர்ந்தார். மின்டா அவ்வாறு அமர்ந்திருந்தது பாபாவின் கட்டளைக்குப் புறம்பானதால், பெண்டு அவரை அங்கிருந்து வெளியே செல்லுமாறு கேட்டுக்கொண்டார், ஆனால், மின்டா காதுகளில் வாங்கிக்கொள்ளாமல் அங்கேயே அமர்ந்திருந்தார்.

பாபா அருகில் இல்லாத வேளையில், மண்டலியில் எவரும் மேற்கத்திய பெண்மணிகளுடன் தனியாக இருக்கக்கூடாது என்பது பாபாவின் கண்டிப்பான கட்டளை; அதுபோல், அதற்கு நேர்மாறாக, பாபா ஒருமுறை பெண்களைக் குறித்து ஆண்களை எச்சரித்தார், '**மிக அருகில் வேண்டாம், அதே வேளையில் வெகு தொலைவிலும் வேண்டாம்**.' மின்டா சமையலறையில் அமர்ந்திருந்தபோது, பாபா அவரைத் தேடி வந்து பெண்டு, காக்கா இருவரையும் குஜராத்தியில் வெகுவாகத் திட்டினார்.

"பாபா, இது எங்கள் தவறு அல்ல! நாங்கள் அவரை வெளியேறச் சொல்லியும், அவர் கேட்பதாக இல்லை" என்று பெண்டு வாதாடினார்.

பாபா மிகவும் சீற்றமடைந்து, **"என் உத்தரவு உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் வெளியேறாவிட்டால், நீங்கள் வெளியேறியிருக்க வேண்டும்!**

**நீங்கள் ஏன் அவருடன் பேசிக் கொண்டிருந்தீர்கள்? அவரைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லையா?”** பாபா அவர்களைக் கடுமையாகக் கண்டித்தார். மின்டா, அது தனது தவறு, அவர்களைக் குறை கூற முடியாது என்று ஒப்புக் கொண்டார்.

பாபா, மின்டாவை அழைத்துக்கொண்டு சமையலறையை விட்டு வெளியேறினார்.

இரவு உணவு வேளையில், ஆதி ஜூனியர், பாபாவிடம், "நாங்கள் உங்களுடன் பல ஆண்டுகளாக இருந்து வருகிறோம், நீங்கள் இன்னும் எங்களை நம்பவில்லை - உங்களுக்கு இன்னும் எங்கள் மீது நம்பிக்கை இல்லையா? குயன்டின் ஒவ்வொரு நாளும் பெண்கள் அறைகளுக்குள் நுழைகிறார், அவர்களுடன் பேசுகிறார், ஆனால் நீங்கள் அவரிடம் எதுவும் சொல்வதில்லை" என்றார்.

பாபா மேற்கத்திய அன்பர்களை, சாப்பாட்டு மேசைக்கு அழைத்து, ‘கீழ்ப்படிதல்’ குறித்து அவர்களுக்கு விளக்கினார்: **“எனது மண்டலியைப் பாருங்கள், நான் சொல்வது போல் அவர்கள் எப்போதும் செய்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் எனது கட்டளைகளை மீற மாட்டார்கள். அவர்கள் என்னுடைய மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு, இரவும் பகலும் உழைக்கிறார்கள். ஆனால், ‘அவர்களுடன் தனியாக இருக்கக்கூடாது’ என்பது போன்ற சிறிய சிறிய கட்டளைகளில், நீங்கள் கவனமாக இருக்க முடியாதபோது, உங்களுக்கு என் மீதான அன்பை என்னவென்று சொல்வது?**

**“இந்த சிறுவர்களாகிய எனது மண்டலி அனைவருக்கும், எப்படிக் கீழ்ப்படிவது என்று நன்றாகத் தெரியும்; நான் அவர்களை நம்பவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் அவர்களை 100 சதவீதம் நம்புகிறேன். எனது கட்டளைகளுக்கு எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும் என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த விஷயத்தில் எனது மண்டலியை உங்களோடு ஒப்பிடவே முடியாது!”** பாபாவின் கண்டனம் மேற்கத்தியர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எந்தவொரு மெட்டுக்கும் எல்லா பாடலையும் பாட முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பிரியமான இறைவனுக்குக் கீழ்ப்படிவதற்கு என அமைக்கப்பட்ட மெட்டுக்கு மட்டுமே இந்தப் பாடலைப் பாட முடியும்.

1933 ஜூலை 17 அன்று ஜெர்மன் கவிஞர் ஒருவர், பாபாவை சந்திக்க வந்தார். சுதந்திரத்தைப் (FREEDOM) பற்றி அவரிடம் விளக்கிய பாபா, சில புதிர்கள் அடங்கிய பின்வரும் கதையை விவரித்தார், அதற்கான பதில்களை பாபா வெளிப்படுத்தவில்லை:

**இரண்டு பறவைகள், ஓர் ஆண் பறவை மற்றொன்று பெண், எப்போதும் ஒன்றாக இருந்தன. அவை இரண்டும், விரும்பிய இடமெல்லாம்**

**பறந்து எப்போதும் சுதந்திரமாக வாழ்ந்தன, ஆனால் 'சுதந்திரம்' என்றால் என்ன என்று அந்தப் பறவைகளுக்குத் தெரியாது.**

**ஒரு நாள், ஒரு மனிதன் அந்த இரண்டு பறவைகளையும் பிடித்துக் கூண்டில் அடைத்தான். ஆண் பறவை, கூண்டின் கம்பிகளைத் தனது இறக்கைகளால் அடித்து உடைத்து வெளியேற முடியும் என்று நம்பியது. ஆனால் அவ்வாறு அடித்தபோது அது படிப்படியாக தனது இறகுகள் அனைத்தையும் இழந்தது. அதைத் தொடர்ந்து அதன் சிறகுகளுக்குக் காயம் ஏற்பட்டதால், அது கிட்டத்தட்ட மயக்கமானது.**

**ஆனால் பெண் பறவை புத்திசாலி. சிறகுகளை அடித்து, கதவுகளை உடைக்க முயற்சிப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதைப் புரிந்துகொண்டு அமைதியாக, கூண்டுக் கதவு திறக்கும் வரை காத்திருந்தது. பெண் பறவை புத்திசாலித்தனமாக அமைதியாக இருந்ததால், அது தன்னை, காயத்திலிருந்து காப்பாற்ற முடிந்தது.**

**நீண்ட நேரத்திற்குப் பின்னர், இறுதியில் கதவு திறக்கப்பட்டு, பறவைகள் ஜோடியாக வெளியே பறந்து சென்றன. அவை, சுதந்திரமாக இருந்த தருணம், உண்மையான சுதந்திரம் என்பதை இரண்டு பறவைகளும் உணர்ந்து கொண்டன. சுதந்திரம் இல்லாததால் ஏற்படும் துன்பங்களின் வேதனையை அறிய முடிந்தது. கூண்டில் அடைக்கப்பட்டதால், அதைத் தொடர்ந்து வந்த சுதந்திரத்திற்கும் அர்த்தம் இருந்தது.**

**பெண் பறவை பறந்து சென்றது, ஆனால் காயமடைந்த ஆண் பறவை பறந்து செல்ல முடியாததால் இறுதியில் ஒரு பூனைக்கு இரையானது!**

**இப்போது சொல்லுங்கள் பறவைகளைக் கூண்டில் அடைத்து வைத்தவர் யார்? பறவைகள் யார்? பூனை யார்? இந்தப் புதிரின் பொருளைப் புரிந்துகொண்டு அதைப் பற்றி ஒரு கவிதையை எழுத முயற்சி செய்யுங்கள்.**

அடுத்த நாள், ஜூலை 18 அன்று, வில்லாவின் உணவு அறையில், கிருஷ்ணா, அர்ஜுனன் இருவரையும் பற்றிய, மஹாபாரதத்திலிருந்து ஒரு சம்பவத்தை மேற்கோள் காட்டி, **'சத்குரு மற்றும் அவதார புருஷர் அவர்களின் பணியைக் குறித்து, மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை'** என்று கூறி விளக்கமளித்தார்:

**கிருஷ்ணரின் வாழ்க்கையை நீங்கள் படிக்கும்போது, பொது அறிவுக்கு எதிரானதாகத் தோன்றும் விஷயங்களை, அவர் அடிக்கடி கூறினார், செய்தார், கட்டளையிட்டார் என்பதை நீங்கள் காண்பீர்கள். அவர் ஒருவரிடம் ஒரு விஷயத்தையும், வேறொருவரிடம் முரண்பட்ட விஷயங்களையும் கூறி, ஒரே நேரத்தில் பலருக்கு வெவ்வேறு கட்டளைகளை வழங்கினார். கிருஷ்ணர் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காக, எல்லா விதமான விசித்திர செயல்களைச் செய்வதையும், பொய் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர்**

பரிபூரணமாகவும், கடவுளோடு ஒருவராகவும் இருந்தார், எனவே அனைவரிலும், அனைத்திலும் தன்னைக் கண்டார். அவர் பல்வேறு விஷயங்களுக்கும், மக்களுக்கும் வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

எனது சீடர்களை மாயையிலிருந்து வெளியே கொண்டுவர, நான் மாயையைப் பயன்படுத்த வேண்டும். மேற்கத்திய நாட்டு மக்கள் இதைப் புரிந்துகொள்ளாத வேளையில், கிழக்கத்திய மக்கள் இதைப் புரிந்துகொள்கிறார்கள். கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான மனப்பான்மையின் வித்தியாசம் இதுதான். சுயநலமும், சுயநல நோக்கமும் இல்லாத இடத்தில், பிறருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருக்குமானால், ஒருவர் என்ன செய்தாலும், அது மனப்படிவங்களை உருவாக்குவது இல்லை, மனப்படிவங்களால் பிணைக்கப்படுவதுமில்லை. எனது எல்லையற்ற செயல்பாடுகளுக்கு எல்லையற்ற வழிகளையும், முறைகளையும் பயன்படுத்த வேண்டும், அனைத்தும், வேறு வேறு மக்களுக்கு, வேறு வேறு நேரங்களில் செய்யப்பட வேண்டும்.

கௌரவர்களைக் கொல்லும்படி கிருஷ்ணர் அர்ஜுனனிடம் கட்டளையிட்டபோது, அர்ஜுனன் தயங்கி, மறுத்து, கிருஷ்ணரிடம், "நான் எப்படி எனது சொந்த உற்றார் உறவினர்களைக் கொலை செய்ய முடியும்?" என்று வினவ, கிருஷ்ணர் உடனே, "நான் சொல்வது போலச் செய்யுங்கள்" என்றார். ஆனால் அர்ஜுனன் கேட்கவில்லை. பின்பு கிருஷ்ணர், "என் முகத்தைப் பாருங்கள்" என்று கூறி, அவர் வாயைத் திறந்தபோது, அதில் அர்ஜுனன் கொல்ல விரும்பாத அவரது சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரையும் பார்த்தார். கிருஷ்ணரின் வாயில் முழு பிரபஞ்சமும் இருப்பதை அர்ஜுனன் கண்டார், அதில் லட்சக்கணக்கான கௌரவர்கள் மேகங்களைப் போலத் தோற்றமளித்தனர், ஆனால், பின்னர் அனைத்தும் அவர் பார்வையில் இருந்து மறைந்தன. கிருஷ்ணர், தனது உலகளாவிய உடலை அவருக்குக் காட்டினார், அதில் அனைத்து உயிருள்ள இதர வடிவங்களும் இருந்தன. இதைத்தான் 'விராட் தரிசனம்' - பிரம்மாண்டமான பார்வை என்று கூறுவது! இது உண்மையான தரிசனம் அல்ல. இது குருநாதரின் உலகளாவிய உடலின் தரிசனம் மட்டுமே. அவதார புருஷர் ஒவ்வொரு மனதையும் தன்னுள் கொண்டுள்ளார், இதில் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து தனிப்பட்ட மனங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம், கிருஷ்ணரின் வலிமைமிக்க சக்திகளை ஊர்ஜிதப்படுத்தியதும், அர்ஜுனன் போரில் இறங்கி பலரைக் கொன்றார். கிருஷ்ணர் அவரிடம், "நீங்கள் என் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தால், ஒருபோதும் சந்தேகம் கொள்ளவோ அல்லது கேள்விகளைக் கேட்கவோ மாட்டீர்கள்" என்று கூறி, 'பகவத் கீதை' என்று அழைக்கப்படும் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

**இந்த எடுத்துக்காட்டிலிருந்து, ஒரு குருநாதரின் நெருங்கிய சீடர்கள் கூட, அவர் பணிபுரியும் முறையைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அவர்கள் குருநாதரை உறுதியாக நம்பவும், அந்த நம்பிக்கையை உருவாக்கவும், அற்புதங்களைச் செய்ய வேண்டியது அவசியம். அதனால்தான் கிருஷ்ணர் அவ்வாறு செய்தார். ஒரு குருநாதர் மீதுள்ள இதயபூர்வமான நம்பிக்கையும், முழுமையான கீழ்ப்படிதலும் இறைநிலையை அடைவதற்கான குறுகிய, விரைவான மற்றும் எளிதான வழியாகும்.**

ஒரு சீடனின் அன்பு, நம்பிக்கை இரண்டையும் தெளிவு படுத்தும் மற்றுமோர் உதாரணத்தையும் பாபா தொடர்ந்து எடுத்துரைத்தார்:

**சத்குருவாகவும், சிவாஜியின் குருநாதராகவும் இருந்த சுவாமி ராம்தாஸ், ஒரு முறை தனது முழங்காலில் ஒரு மாம்பழத்தை வைத்து, துணியால் கட்டுப்போட்டு, மறைத்து வைத்திருந்தார்.**

**அவர் தனது சீடர்களை அழைத்து, மிகுந்த வேதனையுடன் இருப்பதாகப் பாசாங்கு செய்தார். வாயை இறுக மூடிய வண்ணம் அவர், "என் காலில் மிகவும் மோசமான கட்டி உள்ளது, அது பழுத்து, சீழ் நிரம்பியுள்ளது; நேற்றிரவு முழுவதும் வேதனையால் தூங்க முடியவில்லை; நான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் இருக்கிறேன்" என்றார். ராம்தாஸ் வேதனையால் துன்பப்படுவதைக் கண்டு, அவரது மண்டலி பல்வேறு சிகிச்சை முறைகளைப் பரிந்துரைத்தபோது அவர், "இந்த முறைகள் எதுவும் உதவாது, ஆனால் எவரேனும் அந்த சீழை உறிஞ்சினால் மட்டுமே, நான் குணமடைவேன். ஆனால் சீழ் விஷமாதலால், இதை உறிஞ்சி எடுப்பவர் உயிரைத் துறந்துவிடுவார்" என்று குறிப்பிட்டார்.**

**இதைக் கேட்டு, குருநாதரின் நெருங்கிய சீடரான கல்யாணைத் தவிர அனைவரும் தயங்கினர்; கல்யாண் முன்வந்து, குருநாதரின் கட்டியிலிருந்த சீழை உறிஞ்சத் தொடங்கினார். ஆனால், ஆச்சரியப்படும் விதத்தில் அவர் மாம்பழ ரசத்தை சுவைத்தார்! இவ்வாறு ராம்தாஸ், தயக்கத்தில் பின்வாங்கிய சீடர்களுக்கு, கல்யாண் அவர் மீது வைத்திருந்த அன்பையும் நம்பிக்கையையும் நிரூபித்தார்.**

மெஹர் பாபா, அதற்குப் பிறகு, சுவாமி ராம்தாஸ், கல்யாண் பற்றிய மற்றுமொரு கதையைக் கூறினார்; இது கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை விளக்குகிறது:

**ஒரு நாள் பட்டப்பகலில், ராம்தாஸ், இருள் நிறைந்து விட்டதாகக் கூறி, கல்யாணிடம் ஓர் ஒளிரும் விளக்கை எடுத்து வரச் சொன்னதும், அதை அவர் உடனடியாகச் செய்தார்.**

**இதற்காக ராம்தாஸ் அவரை அறைந்து, "முட்டாள்! பகலாக இருப்பதை நீங்கள் பார்க்க முடியவில்லையா?" என்றதும், கல்யாண் மன்னிப்புக் கோரி, விளக்குடன் திரும்பிச் சென்றார். இந்த உதாரணத்தின்**

**மூலம், ராம்தாஸ், சிவாஜிக்கு நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் பற்றி விளக்கினார்.**

**"எனது குருநாதர் என்ன கூறினாலும், சற்றும் சிந்தனை செய்யாமல் நான் அதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறேன்"** என்று ஹஃபீஸ் கூறியுள்ளார்.

**இது உறுதியான, உள்ளடக்கமான நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதலின் உதாரணம். ஆனால் இது மிக மிகக் கடினம் - மாறாக சாத்தியமற்றது - குறிப்பாக உங்களுக்கு, இவ்வளவு புத்திக் கூர்மைமிக்க மேலை நாட்டினர் - எப்பொழுதும் எதிலும் தகுதிகளையும் குறைபாடுகளையும் குறித்து வாதிடுவது வழக்கம் .**

**கல்யாண் விஷயத்தில், அவர் தனது குருநாதரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தது மட்டுமல்லாமல், ராம்தாஸ் அது இரவின் இருள் என்று சொன்னபோது உண்மையில் நம்பினார் - பட்டப்பகலாக இருந்தபோதும் கூட. அத்தகைய நம்பிக்கையும் உண்மையிலேயே சாத்தியமற்றது.**

டிலியா, "இதன் அர்த்தம் நாம் சிந்திக்கவோ அல்லது நம் புத்தியைப் பயன்படுத்தவோ கூடாது என்று அர்த்தமா?" என வினவினார்.

பாபா பதிலளித்தார்:

**இல்லை, இல்லை, அப்படி இல்லை! நீங்கள் உங்கள் புத்தியைப் பயன்படுத்தலாம், ஆனால் எனது வார்த்தைகளை நம்பாமல் அல்லது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் அல்ல. உங்களுக்கு மனம் இருக்கும் வரை, நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்; உங்கள் மனம் ஒருபோதும் சிந்திப்பதை நிறுத்தாது! உங்கள் கண்கள் சூரிய ஒளியைக் காணும்போது அது இரவாக இருக்க முடியாது என்று, அது உங்களுக்குச் சொல்லும். எனவே, குருநாதரின் வார்த்தைகளை நம்பாமல் இருக்கும் அளவுக்கு, மனம் உங்களை வழிநடத்த வேண்டாம் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.**

**குருநாதர் சொல்வதற்கும், செய்வதற்கும் பின்னால் ஏதேனும் முக்கியமான காரணமும், நோக்கமும் இருப்பதையும், அவர் எப்பொழுதும் பிறரின் நலனுக்காக அதைச் செய்கிறார் என்பதையும் நீங்கள் சிந்தித்து, புரிந்து கொள்ள வேண்டும். அவர் எதைச் செய்தாலும் அது எப்பொழுதும் சிறந்தது. எனவே குருநாதர் உங்களுக்குச் சொல்வது போலச் செய்யுங்கள், மனம், அது விரும்பியபடி சிந்திக்கட்டும், ஆனால் அதை ஒருபோதும் கடைப்பிடிக்க வேண்டாம். அது போதும்.**

'நம்பிக்கை'யைப் பற்றிய கதை ஒன்றை, பாபா இறுதியாக எடுத்துரைத்தார்:

**ஹஃபீஸ், அவர் சொன்னதை, ஏன் சொன்னார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டியது அவசியம்!**

ஒருமுறை ஹாஃபீஸின் குருநாதர் (அத்தர்) அவரது சீடர்களில் ஒருவரை அந்த சீடரின் வீட்டிற்கு அனுப்பி அவரது குழந்தையைக் கொல்லும்படி கட்டளையிட்டார். அப்போது அங்கிருந்த ஹாஃபீஸ் கூட அந்த உத்தரவைக் கேட்டு ஆச்சரியப்படத் தொடங்கினார். ஆனால் அந்த உத்தரவு வழங்கப்பட்ட அவர், அதற்கு ஏதேனும் நல்ல காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்து, உடனே அவர் வீட்டிற்குச் சென்று குழந்தையைக் கொன்று, அதன் உடலைத் தனது குருநாதரிடம் கொண்டு வந்தார். ஹாஃபீஸ் மனதில் அந்த நேரத்தில் சந்தேகம் இருந்தும், அவர் எதுவும் பேசவில்லை. இதர சீடர்களும் அதையே நினைத்துக் கொண்டிருந்தனர், ஆனால் எதுவும் பேசவில்லை.

குழந்தையின் உடலை வெகு தொலைவில் எடுத்துச் சென்று, ஆழமாகப் புதைக்குமாறு குருநாதர், ஹாஃபீஸிடம் கூறினார். ஹாஃபீஸும் அவ்வாறே செய்து, பாரசீக வழக்கப்படி ஒரு மெழுகுவர்த்தியை எரியவிட்டு, கல்லறைக்கு மேல் வைத்தார். அவர் மெழுகுவர்த்தியின் சுடரைப் பார்த்தபோது, "நான் பயனடைந்தேன்... இது எனது சொந்த நலனுக்காக" என்று ஒரு குரல் கேட்டது. அவர், மேலும் ஆச்சரியப்படும் விதத்தில் மெழுகுவர்த்தி சுடரிலிருந்து ஒரு குழந்தையின் வடிவம் எழுவதைக் கண்டார். ஹாஃபீஸ் ஆச்சரியத்துடன் உற்று நோக்கியபோது, மெழுகுவர்த்தி சுடரிலிருந்து லட்சக்கணக்கான குழந்தை வடிவங்கள் எழுந்து வருவதைக் கண்டார். பயத்தால் திகைத்துப்போய், ஹாஃபீஸ் குருநாதரிடம் ஓடினார். அவர் செல்லும் பாதையில், எங்கு நோக்கிலும், அவர் திரும்பி வந்து குருநாதரின் அருகில் அமரும் வரை, அந்தக் குழந்தைகளின் வடிவங்களையே கண்டார்.

அந்த வேளையில் குருநாதர், குழந்தையின் தந்தையிடம், "இப்போது நீங்கள் போய் வீட்டில் இருக்கும் உங்கள் குழந்தையை அழைத்து வாருங்கள்" என்று கூறினார். அவர் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டது என்று நினைத்து நின்றுவிடாமல், அங்கிருந்து சென்றார், ஹாஃபீஸ் கூட எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை. அந்தக் குழந்தையின் தந்தை வீடு சென்றடைந்த வேளையில், தனது குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன், மகிழ்ச்சியாக வீட்டைச் சுற்றி நடந்து திரிவதைக் கண்டார்.

இந்த சம்பவம் குருநாதர் மற்றும் அவரது பணியின் மகத்தான சக்திகளை ஹாஃபீஸுக்கு உணர்த்தியது; இது எப்போதும் மர்மமானதாகவும், புத்தியால் புரிந்து கொள்ள முடியாததாகவும் இருப்பதால், மக்களைத் தவறாக வழிநடத்துகிறது. அன்றிலிருந்து அவருக்கு, தனது குருநாதர் மீதான நம்பிக்கை வெகுவாக அதிகரித்தது.

ஹாஃபீஸ் இறை உணர்வை அடைந்த பின்னர், அவர் இவ்வாறு எழுதினார், "நான் எனது குருநாதருக்குத் தவறிழைத்துவிட்டேன்; ஆனால் அந்த மனிதர் குருநாதருக்கு எந்தத் தவறும் இழைக்கவில்லை; ஆனாலும் அந்த மனிதர் குருநாதரின் வட்டத்தில் ஒருவராகவும் இல்லை, இறை உணர்வையும் அடையவில்லை." பின்னர் ஹாஃபீஸ் இவ்வாறு

**குறிப்பிட்டிருந்தார்: "அவர் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில் ஒருவர், எந்தக் கேள்வியும் எழுப்பாமல், குருநாதர் மீது சந்தேகத்திற்கு இடமில்லாமல் நம்பிக்கை வைத்து, தனது குருநாதர் கூறுவதை அப்படியே கடைப்பிடித்தார்."**

**எனவே அசாதாரணமான ஒன்றைச் செய்ய நான் உங்களுக்குச் சொல்லும்போது, அது எப்போதும் உங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டதாகவே இருக்கும். நீங்கள், சாதாரணமாக இல்லாத எதையும் நீங்களாகச் செய்தால், அதற்குக் கட்டுப்பட்டவர் ஆகிவிடுவீர்கள்; ஆனால் நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்ட குருநாதர், உங்களை ஒருபோதும் கட்டுண்டவராக்க முடியாது. உங்களை மாயையிலிருந்து வெளியேற்ற அவர் மாயையைப் பயன்படுத்துகிறார். நீங்கள் ஒரு நீண்ட அழகான கனவை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, உங்களை எழுப்ப ஒரு குறுகிய அதிர்ச்சி அளிக்கும் கனவு தேவைப்படுவது போல.**

டிலியா கூறினார், "சில நேரங்களில் என் மனதில் விரும்பத்தகாத எண்ணங்கள் எழும்போது, பாபா, அவை உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன்; என் மனதை வெறுமையாக்குவதன் மூலம் அவற்றைத் தடுக்க முயற்சிக்கிறேன். இப்போது கூட, எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் பாபா அவரது மௌனத்தைக் கைவிடவில்லை என்றால், நான் அதைப் பற்றி சிந்திக்க மாட்டேன், ஏனெனில் உங்களின் ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் சில மர்மமான, ஆனால் திட்டவட்டமான நோக்கமும் இருக்கிறது" என்று நம்புகிறேன்.

பாபா மகிழ்ச்சி அடைந்து, "**ஆமாம், நீங்கள் இப்போது புரிந்து கொண்டீர்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

ஹெர்பெர்ட், பெண்டு இருவரும் 1933, ஜூலை 21 அன்று பாரிஸ் நகருக்குப் புறப்பட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பெண்டு ஜெனோவாவிற்கும் ஹெர்பெர்ட் லண்டனுக்கும் சென்றனர். பாபா ஜூலை 24 அன்று போர்டோஃபினோவை விட்டு வெளியேறி, ஜெனோவாவிற்குச் சென்று, அதே நாளில் மும்பைக்கு விக்டோரியா கப்பலில் பயணத்தைத் தொடங்கினார்.

காலம் இதை இவ்வாறு பார்த்தது: "அவரது அன்பர்களைப் பொறுத்தவரை, இப்போது ஏற்பட்ட பிரிவினை, வழக்கத்திற்கு மாறான, அதீத வேதனையைத் தந்தது. இந்த முறை, பாபாவுடனான அவர்களது நீண்ட கால சகவாசத்தால், அவருடன் மிகவும் நெருக்கமாகக் கொண்டு வரப்பட்டனர்; அத்தகைய நெருக்கம் மிகவும் கடுமையான, வேதனையான பிரிவை ஏற்படுத்தியது.

அனைவரும் ஏறக்குறைய ஒரு மாத காலமாக பாபாவுடன் இருந்தனர், அவருடன் ஒரே இடத்தில் ஒரே கூரையின் கீழ் தங்கியிருந்தனர், அவருடைய தெய்வீக அரவணைப்பில், ஒவ்வொரு கணமும் அமிர்தத்தை அவர்களின் இதயங்களில் ஊற்றிப் பருகினர். வெவ்வேறு மனோபாவங்களை இணக்கமாகக்

கொண்டுவருவதன் மூலம், குருநாதரின் பணிபுரியும் வழிகளையும் முறைகளையும் அவர்கள் சுவைத்துப் பார்த்தனர்; மேலும் இணையற்ற குருநாதருக்கு மட்டுமே உகந்த முறையில் ஒருவரின் மனதை வென்று, தனது கட்டளைகளைப் பின்பற்ற தனிநபர்களுக்கு அவர் பயிற்சியளித்த சில வழிகளின் அனுபவத்திற்கு ஈடு இணையே இல்லை."

மெஹர் பாபா, அவர் மறுபடியும் வருவதாக அவர்களுக்கு உறுதியளித்தார்; மேலும் அவர் இல்லாத நேரத்தில் அவரை எப்பொழுதும் நினைவில் கொள்ள, பல்வேறு கடமைகளை அவர்களுக்கு வழங்கினார். அவர் திரும்பி வருவது வரை, அவர்களில் பலர் ஒன்றாக வாழ விரும்புவதையும் அவர் அறிவுறுத்தினார். பாபா, போர்டோஃபினோவில் தங்கி இருந்ததை மிகவும் விரும்பினார்; அது ஆன்மீக வரலாற்றில் சிறப்பு மிக்க இடமாக உறுதி செய்யப்படுகிறது. போர்டோஃபினோ ஒரு நாள் கிருஷ்ணருடன் தொடர்புடைய புனித இடமான பிருந்தாவனைப் போலிருக்கும். பாபா தனது நெருங்கிய சகவாசத்தை மேற்கத்திய கோபிகளுக்கு வழங்கியிருந்தார், மேலும் போர்டோஃபினோவின் கடற்கரைகள் கண்ணீரால் நனைக்கப்பட்டு நினைவாய் மாறின. "பாபாவின் புன்னகை, அவரது மகிமை, அவரது பணி மற்றும் தெய்வீக லீலை அனைத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அவரது பிரியமான, அன்பர்கள், நிச்சயமாக அவரது வருகையின் நினைவுக்கு மரியாதை செலுத்தும் நிமித்தம், புனித பயணம் மேற்கொள்வார்கள்" என காலம் நினைவுகூர்ந்தது.

1933, ஆகஸ்ட் 3ஆம் நாள், எலிஸபெத் அமெரிக்கா திரும்பிய பிறகு, பாபாவிற்கு எழுதிய கடிதத்தில் அனைவரின் உணர்வுகளையும் வெளிப்படுத்தினார்:

பிரியமான பாபா,

நீங்கள் எங்களை வெளியளவில் விட்டுச் சென்றீர்கள், ஆனால் உள்ளளவில், நீங்கள் ஒருபோதும் எங்களுக்கு இவ்வளவு அருகில் இருந்ததில்லை; நாங்கள் உங்களைப் பற்றி இடைவிடாமல் பேசுகிறோம், ஒவ்வோர் இரவும் உங்களைப் பற்றி கனவு காண்கிறோம். எங்கள் கனவுகள் அனைத்தையும் உணர வைப்பதும், நாங்கள் விழித்திருக்கும் தருணங்களின் மகிழ்ச்சியை அளிப்பதும் நீங்கள் தான்.

போர்டோஃபினோ எப்போதும் எங்கள் இதயங்களின் சொர்க்கமாக இருக்கும். நீங்கள் எவ்வளவு சிறப்பாக இருந்தீர்கள், எவ்வளவு அன்பானவர்!

பிரியமான பாபா, என் இதயம் உங்கள் மீதான அன்பால் நிறைந்து வழிகிறது!

விக்டோரியா கப்பலில் பாபாவின் அறை மீண்டும் சிறியதாக இருந்தது, மேலும் பயணம், பெரும்பாலும் சிரமமாக இருந்தது, ஏனெனில் அரேபிய கடலின் கொந்தளிப்பில் கப்பல் ஒரு பொம்மையைப் போலத் தூக்கி எறியப்பட்டது; மேலும் சாஞ்சி கடல் பிணியால் பாதிக்கப்பட்டார். பெரும்பாலான பயண

நேரத்தில் பாபா தனது அறைக்குள்ளே இருந்தார். ஆனால் அவர் நடப்பதற்காக தளத்தில் வந்தபோது, ஆர்வமுள்ள சில பார்சி பயணிகள் அவரை சந்திக்க முயன்றனர்.

பத்து நாள் பயணத்திற்குப் பின்னர், 1933, ஆகஸ்ட் 4ஆம் நாள் பாபா, மும்பை வந்து சேர்ந்தார். பாபாவின் சகோதரர் பெஹராம், நவல் தலாட்டி இருவரும் பாபாவை அழைக்கச் சென்றனர். மெமோ, ருஸ்தம், ஃபிரீனி, குல்மாய், ஆதி சீனியர் ஆகியோர் அரை மணி நேரத்திற்குப் பிறகு கப்பலில் தோன்றினர். பாபா அவர்களுடன் நவல், தீனா தலாட்டி வீட்டிற்குச் சென்றார்.

அன்று இரவு ஒன்பது மணிக்கு, மானேக்ஜி, பானுபாய் மற்றும் நௌரோஜி தாதாசாஞ்சியின் இல்லங்களுக்குச் சென்று, இரவு உணவை முடித்த பின்பு, பாபா நாசிக் நகருக்கு ரயிலில் புறப்பட்டு, தாமதமாக வந்து சேர்ந்தார்.

பாபா நாசிக் திரும்பியதும், அவர் தனது வழக்கமான நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கினார். ஆண், பெண் மண்டலி அனைவரும் பாபாவுடன் மறுபடியும் இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்; மனமார்ந்த வரவேற்பு அளித்தனர்.

மெஹர் பாபா, இந்தியா திரும்பி வந்ததை அறிந்த பலர், அவரது தரிசனத்திற்காக தொலைதூரத்திலிருந்து வந்தனர். சில நேரங்களில், பாபா அவர்களை சந்தித்தார். ஆண் மண்டலியுடன் ஒரு நாள் தனியாக இருக்க விரும்பி, ஆகஸ்ட் 10ஆம் நாளன்று, பாபா அவர்களுடன் கண்டாலா சென்றார்; தனிப்பட்ட, சிறப்பு கலந்துரையாடல், நல்ல உணவு, இசை நிகழ்ச்சி மற்றும் ஓய்வு - அனைவரும் பாபாவின் சகவாசத்தில் இன்புற்று இருந்தனர்.

1933, ஆகஸ்ட் 20 அன்று காளேமாமா, முன்ஷி ரஹீம், பஷீர் உட்பட பலர் நாசிக் வந்தனர். முன்ஷி ரஹீம், மெஹர் பாபாவின் அன்பான, சிறப்பு பக்தராக இருந்து இறுதி வரை அவரிடம் சரணடைந்தார். பஷீர் என்ற சிறுவனான அவரது வளர்ப்பு மகனுடன் முன்ஷி ரஹீம், பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். இந்த சந்திப்பில், சிறுவன் சற்று வித்தியாசமாக நடந்து கொண்டான், ஆனால் பாபா அன்புடன் அவனை அருகில் அமர வைத்து, "**பஷீரின் நிலை ஒப்பற்றது; அவன் உலக விஷயங்களிலிருந்து மிகவும் விலகி நிற்கிறான். நீங்கள் இத்தனை ஆண்டுகளாக என்னுடன் இருக்கிறீர்கள், இருந்தும் ஆடைகள், சோப்பு, ரேஸர், பிளேடுகள் போன்ற ஒரு டஜன் பொருட்களைக் கேட்கிறீர்கள். அவனது தற்போதைய பற்றற்ற தன்மை நீடித்தால், பஷீர் ஒரு நாள் என் அருளால் பயன்பெற்று, அவனது வாழ்க்கையின் இலக்கை அடைவான்**" என்று கூறினார்.

பாபா கிட்டத்தட்ட அனைவரையும் வெளியேறும்படி கேட்டுக்கொண்டார்; அதற்குப் பிறகு, பஷீரிடம் அவனுக்கு என்ன வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் கேட்டார். "பாபா, எனக்குப் பணம் தேவைப்படுவதால், ஒரு நல்ல வேலையைக் கண்டுகொள்ள எனக்கு உதவுங்கள்" என்று பஷீர் கூறினான்.

சிரித்துக்கொண்டே சற்று ஏமாற்றத்தில் பதிலளித்த பாபா, "**மண்டலி முன்னிலையில் நான் உன்னை எந்த உச்சத்திற்கு எடுத்துச் சென்றேன்; இப்போது அதையெல்லாம் அப்படியே வீழ்த்திவிட்டாய். நீ முக்தியின் உச்சத்திலிருந்து வேலை தேடுவது வரை வீழ்ந்துவிட்டாய்!**" என்றார்.

பாபா, ருஸ்தத்திடம் பஷீரைப் பணியில் அமர்த்துமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ருஸ்தம் அளித்த வேலையை பஷீர் நன்றியுடன் ஏற்றுக்கொண்டான்.

1932ஆம் வருடம், கோஹெர் ஈரானி (GOHER IRANI) அவரது சகோதரர் ஜால் என்பவருடன் குவெட்டாவிலிருந்து அஹமதுநகருக்குக் குடிபெயர்ந்தார். 1935ஆம் ஆண்டில் பயங்கரமான பூகம்பத்திற்கு முன்பு குவெட்டாவை விட்டு வெளியேறுமாறு பாபா எச்சரித்ததைத் தொடர்ந்து, 1933ஆம் ஆண்டு குடிபெயர்ந்தனர். குடும்பத்தில் அனைவரும் குறிப்பாக கோஹெர், அவரது சகோதரி கேட்டி இருவரும் தங்கள் வாழ்க்கையை பாபாவின் பாதங்களில் அர்ப்பணித்தனர். ஆகஸ்ட் 22ஆம் நாள், ரூஸி ஈரானி (ரூஸி பாப் என்று அன்புடன் அழைக்கப்பட்டார்) நாசிக்கில் பாபாவை சந்திக்க வந்தார்.

மெஹர் பாபா நாசிக் திரும்பி வந்த நாள், நியூயார்க்கில் வாழ்ந்த கிரஹாம் ஸ்டோக்ஸ் ஷிகாகோவில் நடக்க இருந்த 'அனைத்து நம்பிக்கை' மாநாட்டில் (ALL FAITHS CONFERENCE IN CHICAGO) கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார். மாநாட்டின் நிர்வாக இயக்குநரிடமிருந்தும் இரண்டாவது அழைப்பு வந்தது. அந்த நேரத்தில் பாபா, மௌனத்தைக் கைவிடவில்லை என்றால், அவர் தனது எழுத்துப்பலகை மூலம் மாநாட்டிற்கு ஒரு செய்தியை வழங்குவார் என்ற நிபந்தனையின் பேரில் கலந்து கொள்ள பாபா ஒப்புக்கொண்டார். பாபா பொதுவாக இந்த வகையான எந்தவொரு பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ள விரும்புவதில்லை. எனவே அவர் ஏற்றுக்கொண்டது மண்டலிக்கு ஆச்சரியமாக இருந்தது. பாபா அமெரிக்கா செல்ல முடிவு செய்தார், அதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாயின.

பாபா, இந்தியாவில் இல்லாத வேளையில் மண்டலி செய்யும் பணி குறித்து தினசரி விவாதங்கள் நடத்தப்பட்டன. 1933 ஆகஸ்ட் 26ஆம் நாள் நடந்த கூட்டத்தில் மண்டலியின் உதவியோடு தனது திரைப்பட திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்க ருஸ்தம் பரிந்துரைத்தார். இந்த யோசனையை பாபா விரும்பினார்; பெஹராம், பெண்டு இருவரும் ஒரு திரைப்பட கேமராவை இயக்கவும், ஜால்பாய் நடிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார்.

அப்போது, ஊமை, நகைச்சுவை, சோதனை படம் ஒன்றைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. பெண்டு, சிது இருவரும் இந்தியா முழுவதும் பயணம் செய்து, வெவ்வேறு இடங்களைப் படம்பிடித்து, இந்தக் காட்சிகளை, பின்பு ருஸ்தத்தின் படத்தில் தேவைக்கேற்பப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

(இந்த யோசனை பின்பு கைவிடப்பட்டது.) பெண்டு, திரைப்படம் தயாரிப்பதைக் கற்றுக்கொள்வதோடு, அந்தப் பணிகளுக்குத் தேவையான அனைத்தையும் திட்டமிட முடிவுசெய்யப்பட்டது.

இதற்கிடையில், ஆகஸ்ட் 17ஆம் நாள் பாபா, மும்பைக்கு வந்து, செப்டம்பர் மாதத்தில், மீண்டும் மேற்கு நோக்கி மேற்கொள்ள இருக்கும் பயணத்திற்காகக் கப்பலில் முன்பதிவு செய்தார். மன்ஸில்-எ-மீம் நாட்களில் பாபாவுடன் இருந்த முன்னாள் சீடரும், அகில இந்திய கிரிக்கெட் வீரருமான வஜிஃப்தர் மற்றும் அந்த நேரத்தில் மும்பையில் வாழ்ந்து வந்த பெஹராம், பெரின், மெமோ ஆகியோரையும் பாபா சந்தித்தார்.

அன்று மாலை, பாபா, மெமோ, பெரின் இருவரையும் வெளியே அழைத்துச் செல்ல விரும்பினார். எனவே அப்பல்லோ தியேட்டரில் ‘தி ஒயிட் ஸிஸ்டர்’ (THE WHITE SISTER) என்ற திரைபடத்திற்குச் சென்றனர். இது ஒரு காதல் கதையாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது, ஆனால் துரதிர்ஷ்டவசமாக உரையாடலின் ஒரு வார்த்தையைக்கூட கேட்க முடியாததால், திரைப்படம் முடிவதற்கு முன்பே தியேட்டரை விட்டு வெளியேறினர்.

1933, செப்டம்பர் மாதத்தில் ‘கேள்விகளும் பதில்களும்’ (QUESTIONS AND ANSWERS) என்ற சிறு புத்தகம் ஆங்கிலத்திலிருந்து வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது - காளேமாமா, கெ.கெ. மானேக்கர், துலியாவின் கேல்கர் ஆகியோரால் மராத்தி மொழியிலும், குஜராத்தி மொழியில் ஸோமா தேசாய் (சாஞ்சியின் உதவியுடன்), மற்றும் பாரசீக மொழியில் ராவ் ஸாஹேப் மொழி பெயர்த்து தினசரி பாபா முன்னிலையில் வாசிக்கவும் திட்டமிடப்பட்டது. எதிர்வரும் மேற்கத்திய பயணம் குறித்து, கடிதங்கள், தொலைத்தந்திகள் அனுப்பப்பட்ட அவ்வேளையில், பாபா மண்டலியின் எதிர்கால விவகாரங்களை மேற்பார்வையிட்டு, ஒவ்வொருவருக்கும் வேறு வேறு கடமைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் காக்கா மும்பைக்குச் சென்றதால், பாபாவின் தனிப்பட்ட தேவைகளைப் பெண்டு கவனித்து வந்தார். செப்டம்பர் 13 அன்று பாபாவின் புகைப்படம், குறிப்பாக, ராம்ஜூவின் ‘ஸ்ரீ மெஹர் பாபா: அவரது தத்துவம் மற்றும் போதனைகள்’ (SHREE MEHER BABA HIS PHILOSOPHY & TEACHINGS) என்ற புத்தகத்தில் அச்சிட்டு, அவரது மேற்கத்திய அன்பர்களுக்கு வழங்குவதற்காக எடுக்கப்பட்டது. பாபா புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை வாசித்து, சில திருத்தங்களைச் செய்தார்.

செப்டம்பர் 14ஆம் நாள், பாபா ஸையத் ஸாஹேபின் வீட்டிற்கு தேநீர் அருந்தச் சென்றிருந்தார்; அங்கு நடந்த ஓர் இசை நிகழ்ச்சி ஆறு மணி வரை நீடித்தது. அன்றைய தினம் அஹமதுநகரிலிருந்து நஸர்வான் ஸட்டாவும், மறுநாள் சென்னையிலிருந்து ஐயங்கார் குடும்பமும் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தனர்.

1933ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று மண்டலியைக் குறித்த, பாபாவின் திட்டங்கள் மாற்றப்பட்டன. மெஹராபாத்தில் சில கட்டிடங்களை எழுப்புவதற்கான வழிமுறைகளுடன் பெண்டுவை, பாபா அனுப்பி வைத்தார். அவருடன் ஸெயிலர், சிது, பாலா ஸுப்பேக்கர், கலிங்கட் ஆகியோரும் உடன் சென்றனர். கலிங்கட் முதன்முதலில் பெர்சியாவிலிருந்து வந்த மெஹராஷ்ரம் மாணவர்களில் ஒருவர். மெஹராஷ்ரமம் கலைக்கப்பட்ட பிறகு, கலிங்கட், பாபாவை விட்டுச்செல்ல விரும்பாமல் ஆண் மண்டலியுடன் வாழ்ந்து வந்தார்.

மெஹராபாத்தில் இப்போது தங்குவது மற்றும் உணவு பற்றி, பாபா கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். மெஹராபாத் மேல் மலையில், பெண்டு, ஒரு குளியலறை, தகரத்தால் கட்டப்பட்ட ஓர் அறை மேலும், பாபாவிற்கு ஒரு சமையலறை ஆகியவற்றை நீர் தொட்டியின் எதிரே கட்டத் தொடங்கினார். நல்ல தொழில்நுட்ப வல்லுனராக இருந்த கலிங்கட், ஒரு பழைய பேருந்தை சரிசெய்து, கட்டுமானப் பொருட்களை அஹமதுநகரிலிருந்து எடுத்து வந்தார்.

மெஹராபாத்தில் ரயில் பாதைக்கு அருகில் அமைந்த தபால் நிலைய கட்டிடத்தை, இடித்துத் தரைமட்டமாக்க இந்த நேரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்தது. இந்த உத்தரவை ரத்து செய்ய அவர்கள் தங்களால் முடிந்தவரை முயற்சிக்க வேண்டும் என்று பாபா அனைவரையும் வலியுறுத்தினார். மண்டலி பல்வேறு அதிகாரிகளை அணுகியும், அவர்களின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. தற்போதைய பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்க, ரயில்வே பாதைகளுக்கு மிக அருகிலிருக்கும் கட்டிடத்தை விலக்காவிட்டால், அரசாங்க அதிகாரிகளே அதைச் செய்வார்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது.

வெளிநபர்கள், அந்த வேலையை ஏனோதானோவென்று செய்ய விடாமல், மண்டலி கட்டிடத்தை, தாங்களே இடிக்க முடிவு செய்தனர். நிதிப்பற்றாக்குறை காரணமாக, அடிக்கடி செய்ததைப் போல, புதிய கட்டுமானத்திற்கு, தபால் நிலையத்திலிருந்து பழைய கட்டுமான பொருட்களைப் பயன்படுத்தும்படி, பாபா அவர்களிடம் கூறினார்.

இதுவரை, கீழே இருந்த கிணற்றிலிருந்து மெஹராபாத் மேல்மலைக்குத் தண்ணீரை எடுத்துச் செல்வதற்கான நவீன ஏற்பாடு எதுவும் இல்லை. மாட்டு வண்டி மூலம் தினமும் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டது. கான்ஸாஹேபின் செல்வாக்கின் மூலமாக, பெண்டு, ரயில் பாதையின் கீழ், குழாய் வழியாக நீர் எடுத்துச் செல்ல, அரசாங்கத்திடம் தேவையான அனுமதியைப் பெற்றார்.

இந்த நடவடிக்கைகள் மெஹராபாத்தில் நடந்து கொண்டிருந்தபோது, பாபா தனது அடுத்த மேற்கத்திய பயணத்திற்கான ஏற்பாடுகளை விரைவு படுத்தினார். நாசிக்கில், ஏராளமான கடிதப் பரிமாற்றங்களுடன், பாபாவிற்கு மேற்பார்வையிட வேறு பல வேலைகள் இருந்தன, ஓய்வெடுக்கக் கூட

நேரமில்லை. அவர் தனது ஆண், பெண் மண்டலியின் வாழ்க்கையில் ஏராளமான விஷயங்களை கவனிக்க வேண்டியிருந்தது. பாபா, தனது மண்டலியை மிகவும் நெருக்கமாகக் கண்காணித்து வந்தார்; அவர்களின் பழைய 'அகங்காரப் புதையலை' உடைத்து, சுக்குநூறாகச் செய்வதன் மூலம், அவர்களைத் தூசியாக மாற்றும் பணியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். மண்டலி அனைவரும், மெஹர் பாபாவுடன் தங்கியிருந்து, அவதூறுகளையும் அவமானங்களையும் தாங்கிக்கொள்ளக் கற்றுக்கொண்டனர், என்றாலும் பாபா, அதை உடைக்கும் செயல்முறையை முடிக்கும் நோக்கத்தில் அவர்களின் மனதை மேலும் வலிமையோடு தாக்கினார்.

மெஹர் பாபாவுடன் நிரந்தரமாக வாழும் ஆண், பெண் மண்டலியைப் பொறுத்தவரை, அவர்களின் வாழ்க்கை கூர்மையான வாளின் விளிம்பில் நடப்பது போன்றதாகும்.

தரிசனத்திற்காக வரும் வெளிநபர்கள் பாபாவால் பாராட்டப்பட்டாலும், மண்டலி பெரும்பாலும் அவர்கள் முன்னிலையில் அவமதிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். இது, பாபா அவர்களிடம் கொண்டுள்ள ஆழமான நேசத்தின் வெளிப்பாடு. ஒரே நேரத்தில் தூங்குவதும், விழித்திருப்பதும் இயலாதது, ஆனாலும் குருநாதர், 'சாத்தியமற்றதை சாத்தியமாக்கும்' தன்மை படைத்தவர். ஆகவே, வெளியே வாழும் ஒருவர், பாபாவின் நெருங்கிய மண்டலி அனுபவிக்கும் கஷ்டங்கள், மன அழுத்தங்களின் வகைகளை கற்பனை செய்து பார்க்க முடியாது.

**1933**, செப்டம்பர் **16** அன்று சி.டி. தேஷ்முக் மற்றும் அவருடைய உறவினர் ஒருவர் பாபாவை சந்திக்க, காலை பத்து மணிக்கு வரவிருந்தனர்; ஆனால், குறிப்பிட்ட நேரம் கடந்தும் வராததால் சீற்றமடைந்த பாபா, சாஞ்சி, விஷ்ணு இருவரிடமும் கோபப்பட்டு, "**நீங்கள் உதவாக்கரைகள்! நீங்கள் தேஷ்முக்கிற்கு சரியான முகவரியும், வழிமுறையையும் கொடுத்தீர்களா என்று எனக்கு இப்போது சந்தேகம் வருகிறது**" எனக் கூறினார். அதற்கு சாஞ்சி, "சரியான விபரங்கள் அவருக்கு அனுப்பப்பட்டன, ஆனால், பலத்த மழை காரணமாக அவர் வர தாமதமாகி இருக்கலாம்" என்று பதிலளித்தார்.

இது பாபாவை மேலும் கோபத்திற்குள்ளாக்கியது; இருவரையும் வெகுவாகக் கண்டித்தார். அமைதியற்ற தோற்றத்துடன் அவர், "**என்னை மிகவும் கவலையடையச் செய்வதன் மூலம் நீங்கள் என்ன பயனை அடைகிறீர்கள்?**" என வினவினார். பாபா ஏன் இவ்வளவு வருத்தப்பட்டார் என்று விஷ்ணு, சாஞ்சி இருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. "**நான் இப்போது தேஷ்முக்கைப் பார்க்க விரும்பவில்லை. அவர் வந்தால், அவரை வெளியே போகச்சொல்லுங்கள். அவர் இறக்கட்டும்!**" என்று கூறினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, "**எப்படியேனும் தேஷ்முக்கை, பிற்பகல் 3.30 மணிக்கு இங்கு அழைத்து வாருங்கள்**" என்று கட்டளையிட்டார். நாசிக்கில் தேஷ்முக் தங்கியிருக்கும் இடம் சாஞ்சி, விஷ்ணு இருவருக்கும்

தெரியாது. விஷ்ணு என்ன செய்வது என்று தெரியாமல் யோசனை செய்தார்; பாபா அவரிடம், "**இங்கு அமர்ந்து என்ன செய்கிறீர்கள்? அவரை எப்படியேனும் 2:30 மணிக்கு இங்கு அழைத்து வாருங்கள். நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், தேஷ்முக் இறந்துவிடுவார்!**" என்றார்.

விஷ்ணு அங்கிருந்து வெளியேறி, நாசிக்கில் வாழும் சில பிராமண குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று, அவரைக் கண்டுபிடிக்க முயன்றார். அதிர்ஷ்டவசமாக, தேஷ்முக் இந்த வீடுகளில் ஒன்றில் தங்கியிருப்பதைக் கண்டுபிடித்து, அவரை சரியாக 2:30 மணிக்கு பாபாவிடம் அழைத்து வந்தார்.

சிறிது நேரத்தில், கோதாவரி பாலத்தின் அனைத்து போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. பலத்த மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து, பாலத்தை அடித்துச் செல்லும் அபாயம் நிலவியதால், காவல்துறையினர் பாலத்திற்குச் செல்லும் சாலையின் குறுக்கே தடைகளை வைத்தனர். தேஷ்முக் 2:30 மணிக்கு வரத் தவறியிருந்தால், அவர் பாபாவை சந்தித்திருக்க முடியாது. பாபாவின் அருட்பார்வை, பாலத்தை மூடுவதற்கு முன்னர் அவரைக் கடக்கச் செய்தது. அப்போதுதான் சாஞ்சியும், விஷ்ணுவும் பாபாவின் சீற்றமான மனநிலையின் முக்கியத்துவத்தையும், தேஷ்முக்கின் வருகையைப் பற்றிய கவலையையும் புரிந்து கொண்டனர்.

தேஷ்முக்கின் வருங்கால மனைவி இந்துமதியைப் பற்றி கேள்விப்பட்ட பாபா, தேஷ்முக் அவரைத் திருமணம் செய்து கொள்ள அனுமதித்தார், "**நீங்கள் திருமணம் செய்து கொள்ள விதிக்கப்பட்டவர்கள், ஒரு நல்ல தோழரைக் கண்டுபிடித்தீர்கள். ஆனால் எல்லாவற்றையும் இறுதியாக ஏற்பாடு செய்வதற்கு முன்னர், அவரை ஒரு முறை என்னிடம் அழைத்துவர மறந்து விடாதீர்கள். பின்னர் உங்களுக்கு எந்தக் கவலையும், பொறுப்பும் இருக்காது.**" அடுத்த ஏப்ரல் மாதத்தில் திருமணத்திற்கான தேதி நிர்ணயிக்கப்பட்டது.

தேஷ்முக்கின் மிக உயர்ந்த தத்துவ மனதை அறிந்த பாபா, "**உங்களுக்குப் பல்வேறு எண்ணங்கள் இருக்கும்; உங்களுக்கு சந்தேகம் வரும், உங்கள் மனம் வாதிடும். ஆனால் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள்: நான் உண்மைப்பொருளின் மொத்த உருவம்! உங்கள் மனம் ஆச்சரியமடைந்தாலும், அங்கும் இங்கும் அலைபாய்ந்தாலும், அப்படியே இருக்கட்டும். அதற்குப் பின்னால் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஓடாதீர்கள்** (ஒரு குருநாதர் அல்லது துறவியிடமிருந்து இன்னொருவரிடம் என்று அர்த்தம்). **என்னைத் திடமாகப் பற்றிக்கொள்ளுங்கள்**" என்று கூறினார்.

பாபாவின் கருத்துக்கள் வருத்தம் நிறைந்து காணப்பட்டன. ஒரு கட்டத்தில், தேஷ்முக் இவ்வாறு நினைத்தார்: "மெஹர் பாபா ஒரு பார்சி, நான் பிராமணர். பாபாவின் குருநாதர் உபாஸனி மஹாராஜும் பிராமணர். நான் ஏன் உபாஸனி மஹாராஜைப் பின்பற்றக்கூடாது? அவர், பிராமணரும் பாபாவின் குருநாதரும் ஆவார். நான் மெஹர் பாபாவிடமிருந்து பெறுவதை விட அதிகமான அறிவை அடையப் பெறமுடியும். மேலும், ஒரு பார்சியின் பக்தராக இருப்பது எனக்கு உண்மையில் பொருத்தமாக இருக்காது."

இந்த எண்ணங்கள், இறுதியில், தேஷ்முக் ஸாக்கோரியில் வாழ்ந்து வந்த உபாஸனி மஹாராஜின் ஆஷ்ரமத்திற்குச் செல்ல வழிவகுத்தது. தேஷ்முக் மலர் மாலை ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு, உபாஸனி மஹாராஜை அணுகினார். மஹாராஜ், தேஷ்முக் வருவதைப் பார்த்ததும் அவரை சபிக்கத் தொடங்கி, உடனடியாக வெளியேறும்படிக் கத்தினார். அதிர்ச்சியடைந்த தேஷ்முக் அருகில் வராமல் தூரத்தில் நின்றார்; உபாஸனி அவரை நோக்கி, கற்களை வீசத் தொடங்கினார். பயந்துபோன தேஷ்முக் சற்று மறைந்து நின்றார். உபாஸனி மஹாராஜ் இப்படி நடந்து கொள்ளும் முறையை அனுபவித்த பிறரின் துன்பகரமான கதைகளையும் நினைவு கூர்ந்தார்.

திகைத்துப்போய் அச்சத்தில் ஆழ்ந்த தேஷ்முக், வருத்தத்தில் இவ்வாறு சிந்தித்தார்: "மெஹர் பாபா எவ்வளவு கனிவானவர், அவர் மிகவும் அன்பானவர். உபாஸனி மஹாராஜ் அதற்கு நேர்மாறானவர்! மெஹர் பாபாவைப் பின்பற்றுவதே மிகவும் சிறந்தது."

இறுதியில், தேஷ்முக் இந்த சம்பவத்தை பாபாவிடம் எடுத்துரைத்ததும், **“உபாஸனி மஹாராஜ் ஓர் உண்மையான சத்குரு. அதை நினைவில் கொள்ளுங்கள்! உண்மையான குருநாதர்களின் வழிகளைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களை எவரும் புரிந்து கொள்ளவும் முடியாது. நீங்களாக உபாஸனி மஹாராஜிடம் சென்றீர்கள் ; இப்போது, நான் கூறுகிறேன், அவரிடம் திரும்பிச் செல்லுங்கள்.”**

திகைத்துப்போய், தேஷ்முக் கெஞ்சினார், "பாபா, உபாஸனி மஹாராஜிடம் திரும்பிச் செல்வதைத் தவிர, வேறு எதைச் சொன்னாலும் செய்கிறேன், என்னால் மீண்டும் அங்குச் செல்ல முடியாது. நான் அவரைப் பார்த்து பயந்துவிட்டேன்!"

அதற்கு பாபா, **“இது எனது உத்தரவு; எனது அறிவுறுத்தல்களை நிறைவேற்ற மீண்டும் ஒரு முறை அவரிடம் செல்லுங்கள். இல்லையேல், என்னை விட்டுவிடுங்கள், என்னை ஒருபோதும் பார்க்க வேண்டாம்!”** என்றார்.

"ஆனால், பாபா, நான் உங்களுடையவனாகி விட்டேன், வேறு எவரையும் அணுக விரும்பவில்லை" என்று தேஷ்முக் எதிர்ப்புத் தெரிவித்தார்."

**“என்னுடையவராக இருப்பது எனது விருப்பத்தை நிலைநிறுத்துவதாகும். நீங்கள், நான் கூறியதைச் செய்ய முடியாது என்பதால், என்னுடையவர் என்று எப்படிச் சொல்ல முடியும்?”** என்று பாபா கேட்டார்.

தேஷ்முக் உதவியற்றவராக உணர்ந்தார், நாக்பூருக்குத் திரும்பிச் சென்றார். அதிர்ஷ்டவசமாக, உபாஸனி மஹாராஜ் அப்போது நாக்பூருக்கு விஜயம் செய்தார்.

அவரது இதயத்தில் நிரம்பிய பதட்டம், தயக்கம் அனைத்தையும் கடந்து, தேஷ்முக் தைரியமாக மஹாராஜை சந்திக்கத் தயாரானார். அவர் சமீபத்தில் எழுதிய ஒரு சிறிய புத்தகத்தை (‘மை மாஸ்டர் அண்ட் ஹிஸ் டீச்சிங்’ – MY MASTER AND HIS TEACHING - மெஹர் பாபாவின் புகைப்படம் உள் அட்டையில் அச்சிடப்பட்டிருந்தது) கையில் எடுத்துக்கொண்டார்.

சற்றும் எதிர்பாராமல், வித்தியாசமான முறையில் உபாஸனி மஹாராஜ், தேஷ்முக்கைப் பார்த்ததும் மகிழ்ச்சியடைந்தார்; மிகவும் மென்மையாகவும், கனிவாகவும், அக்கறையுடனும் காணப்பட்டார். அவரை அருகில் அமர வைத்து அன்பாகப் பேசினார். தேஷ்முக், மெஹர் பாபாவைப் பற்றிய தனது புத்தகத்தை உபாஸனி மஹாராஜுக்கு வழங்கினார். பாபாவின் புகைப்படத்தைப் பார்த்த மஹாராஜ், பயபக்தியுடன் அவரது நெற்றியால் அந்தப் புத்தகத்தைத் தொட்டார். அவர் புத்தகத்திற்கு மாலை சூட்டி தேஷ்முக்கிடம் பிரசாதமாகத் திருப்பிக் கொடுத்தார்.

ஸாக்கோரியில் உபாஸனி மஹாராஜ் கடுமையாக நடந்து கொண்டதற்கு, மெஹர் பாபா மற்றும் அவரது ஆன்மீக மகிமையைப் பற்றிய தனது தவறான எண்ணங்களே காரணம் என்பதை இறுதியில் தேஷ்முக் உறுதியாக நம்பினார். அந்நேரத்திலிருந்து, அவருக்கு மெஹர் பாபா மீது மலை போன்ற அசைக்கமுடியாத நம்பிக்கை உருவானது.

நாசிக் நகர் உள்ளூர் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ‘மஹாராஷ்டிரா கவிஞர்கள்’ (MAHARASHTRA POETS CONFERENCE) மாநாட்டில் கலந்து கொள்ள மெஹர் பாபா அழைக்கப்பட்டார். செப்டம்பர் 16 அன்று நடந்த மாநாட்டில், சிறிது நேரம் கலந்துகொள்ள பாபா ஒப்புக்கொண்டார். அவரை மேடையில் அழைத்து வந்து, அமைப்பாளர்களில் ஒருவர் நன்றி தெரிவித்து மாலை அணிவித்தார். மஜூம்தார் என்ற வழக்கறிஞர் அன்று நாஸிக் வந்தவர், பதட்டத்துடன் இருப்பதைக் கண்ட பாபா அவரை ஆறுதல் படுத்தினார்:


**சிரமங்களை, கோழி அடை காப்பதுபோல மனதில் வைத்து அவதிப்படாதீர்கள். அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள். வருவது வந்து போகட்டும்; இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். எல்லா சூழ்நிலைகளிலும் உங்கள் மனதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.**

**ஆன்மீகம் மிகவும் எளிதானது, ஆனால் பண்டிதர்கள் (பாதிரியார்கள்) மற்றும் வேதாந்தவாதிகள் இதற்குப் பல பெயர்களையும், புகழ் மாலைகளையும் அணிவித்து, உலர்ந்துபோன தத்துவத்தின் தொகுப்பை, பக்கம் பக்கமாக நிரப்பி உள்ளனர். எதை ஏற்றுக் கொள்ள வேண்டும், எதை நிராகரிக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று தெரியாமல் பாமர மக்கள் குழப்பமடைகிறார்கள். இத்தகைய சடங்கு சம்பிரதாய வழிமுறைகள், இன்றைய உலகம் எட்டியுள்ள நிலையில், ஆன்மீகத்தில் நாட்டம் காட்டும் ஒருவருக்கு, நடைமுறையில் கொடுக்கப்படும் எதையும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாத அளவுக்குச் சென்றுவிட்டது; முக்கியத்துவம் அளிக்கப்படாமல் நிராகரிக்கப்படுகிறது, இதனால் குருநாதர்கள் கூட இந்த எளிய விஷயங்களில் சில மெருகூட்டப்பட்ட பூச்சுகளைப் பூசி, மேலும் புனிதமான, அமைதியான, கண்ணியமான தோற்றத்தை அளிக்கிறார்கள்!**

ஆனால், நான் அதை உங்களுடன் செய்ய மாட்டேன். நான் அதை மிகவும் எளிமையாக்குவேன். முதல் பதினைந்து நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடங்கள் தனியாக ஓர் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள்; எண்ணங்கள் அவற்றின் போக்கில் இரண்டு நிமிடங்கள் வந்து போகட்டும்; மூன்று நிமிடங்கள் என்னைப் பற்றி சிந்தியுங்கள். இதை, பதினைந்து நாட்கள் செய்து, அடுத்த பதினைந்து நாட்கள் அதைச் செய்யாதீர்கள். தொடர்ந்து மீண்டும் பதினைந்து நாட்கள் செய்து, பதினைந்து நாட்கள் செய்யாமல், அப்படியே தொடருங்கள். நான் சொல்வது போல நீங்கள் செய்தால், நீங்கள் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல், அதை முழுமையாக, உள்ளூர உணர்வீர்கள்.



போர்டோ∴பினோ - **1933**
காக்கா, ஆதி ஜூனியர்,
ஹெர்பெர்ட், பாபா,
குயன்டின்




நாசிக், **1933**



டாக்டர் வில்லியம்
டான்கின், லண்டன், 1933



மெஹர் பாபாவுடன் நான்னி,
ரானோ கெய்லி



சாஞ்சி, மெஹர் பாபா, நோரினா, ஹெர்பெர்ட் டேவி, ஆதி ஜூனியர் - லண்டன் 1933

# ஆறாவது ஐரோப்பிய பயணம் – லண்டன், அவிலா

**(Sixth Europe Visit – London, Avila)**

மெஹர் பாபாவின் அடுத்த ஐரோப்பிய பயணத்திற்கான திட்டங்களை முடிவு செய்து, பாபா 1933 செப்டம்பர் 23ஆம் நாள் நாஸிக்கிலிருந்து மும்பைக்குப் புறப்பட்டார். மறுநாள் இரவு தாதரில் செய்தித்தாள் நிருபர்களுக்கு நேரடி பேட்டி வழங்கினார். செப்டம்பர் 25ஆம் நாள், ‘எம்.வி. கொண்தே வெர்டே’ (M.V. CONTE VERDE) கப்பலில் ஐரோப்பாவை நோக்கித் தொடங்கிய பயணத்தில் பாபாவுடன் ஆதி ஜூனியர், சாஞ்சி, காக்கா ஆகியோர் இருந்தனர். இது கடந்த இரண்டு ஆண்டுகளில் மெஹர் பாபாவின் ஆறாவது வெளிநாட்டு பயணம் ஆகும்.

பாபாவின் அறை வசதியாக இருந்தது; காலை, மாலை வேளையில் சுமார் ஒரு மணி நேரம், கப்பல் தளத்தில் நடக்கச் சென்றார்; இதர நேரங்களில் தனது அறையில் இருந்தார். அவரது அறிவுறுத்தல்களின்படி, கப்பலில் இருந்த எவருக்கும், அவர் இருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும்கூட, இரண்டு நாட்கள் பயணத்திற்குப் பின்பு, செப்டம்பர் 27 இரவில் பாபா மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, சாஞ்சி வெளியே சென்றதும், நடை பாதையில் நின்றுகொண்டிருந்த, மிகவும் கண்ணியமான, வயதான ஒருவர், தன்னை அறிமுகப்படுத்தி, "நான், ஸர் அக்பர் ஹைதரி (SIR AKBAR HYDERI), நாளை காலையில் மெஹர் பாபாவைப் பார்க்க விரும்புகிறேன், அவர் என்னை சில நிமிடங்கள் பார்க்க அனுமதித்தால், அவருக்கு எந்த நேரம் வசதியாக இருக்கும் என்று எனக்குச் சொல்வீர்களா?" என்று கேட்டார்.

**“பயணத்தின் போது நான் எவரையும் பார்க்க விரும்பவில்லை என்றாலும், நாளை காலை பத்து மணிக்கு, ஐந்து நிமிடங்கள் அவரைப் பார்ப்பேன் என்று அவரிடம் சொல்லுங்கள்”** என்று பாபா, சாஞ்சியிடம் கூறினார்.

சாஞ்சி இதை தெரிவித்ததும் அந்தப் பெரியவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர், மெஹர் பாபாவைப் பற்றி அதிக அளவில் கேள்விப்பட்டதாகவும், அவரை சந்திக்க ஒரு வாய்ப்புக்காக ஏங்கியதாகவும் கூறினார். 64 வயதான அக்பர் ஹைதரி, ஹைதராபாத்தின் திவான், ஒரு முக்கியமான அரசாங்க அதிகாரி (ஒரு முதலமைச்சருக்கு நிகரான பதவி வகிப்பவர்). மறுநாள் காலையில் வந்தவர், வழக்கமான அறிமுகங்கள் மற்றும் இனிப்புப் பரிமாறல்களுக்குப் பின்னர், அவர்களின் உரையாடல் ஆன்மீகத்தை நோக்கித் திரும்பியது. மெஹர் பாபா, மூன்று வகையான நம்பிக்கையைப் பற்றி விளக்கினார்.

"கடவுள் நிலையை உணரவும், அனுபவிக்கவும் செய்யும் அடுத்த கட்டத்தை நோக்கி என்னை எடுத்துச் செல்லுங்கள்" என்று ஹைதரி கேட்டுக்கொண்டார்.

பாபா, அவருக்கு உதவுவதாக உறுதியளித்து, **"இதற்கான வழிமுறைகளை நாளை உங்களுக்கு வழங்குகிறேன்"** என்று கூறினார். அவரது மனைவிக்கும் பாபாவை சந்திக்கும் ஒரு வாய்ப்பை வழங்குமாறு ஹைதரி கேட்டுக்கொண்டார்; அடுத்த நாள் மாலை பொருத்தமானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஹைதரி உற்சாகத்துடன் தனது உள்ளுணர்வில் ஊக்கமடைந்தவராகக் காணப்பட்டார். பாபா அவரைப் பெரிதும் விரும்பினார்; அவர் ஆன்மீகத்தில் உண்மையான அக்கறை கொண்டிருந்தார் - இது பாபாவால் எப்பொழுதும் பாராட்டப்பட்ட ஒரு பண்பு. அரசாங்கத்தின் உயர் பதவியில் இருந்தாலும், அவருடைய பணிவான மனப்பான்மையை, பாபா விரும்பினார்.

அதே நாளில், பிரபல இந்திய நடனக் கலைஞர் உதய் ஷங்கர் (UDAY SHANKAR 33), பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். சுவிஸ் சிற்பியும், கலை வரலாற்றாசிரியருமான ஆலிஸ் போனர் (ALICE BONER) மூலம் ஐரோப்பாவில் பாபாவைப் பற்றி அவர் தெரிந்துகொண்டார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆலிஸ் போனர், ஷங்கருடன் இந்தியாவிற்கு வந்திருந்தார், மேலும் ஷங்கரின் நடனக் குழுவின் மேற்கத்திய வருகைக்கான செலவுகளை அவர் ஏற்றுக்கொண்டார். ஐரோப்பாவில் இருந்தபோது, நோரினா, எலிஸபெத், குயன்டின் ஆகியோர் உதய் ஷங்கரை சந்தித்து, அவருடன் மெஹர் பாபாவைப் பற்றிய விபரங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அவரைப் புகழ்ந்து, அவரது திறமைக்குப் பாராட்டுத் தெரிவித்த பாபாவை, உதய் ஷங்கர் வணங்கினார். அவர் பாபாவிடம், "நான் இந்திய பாரம்பரிய நடனத்தை மேற்கத்திய நாடுகளில் அறிமுகப்படுத்தி விரிவாக்க விரும்புகிறேன்; ஆனால், இந்தியாவில் சில அமைப்புகள் என்னை விமர்சிக்கின்றன. அவர்கள் என்னிடமிருந்து தங்கள் நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கு பணம் வேண்டும் எனக் கோருகிறார்கள், ஆனால் அதைச் செய்ய என்னிடம் பணம் இல்லை" என்று கூறினார்.

பாபா, அவரது எழுத்துப்பலகையில் இவ்வாறு தெரிவித்தார்: **"ஒவ்வொரு நல்ல பணியும் எதிர்ப்பை சந்திக்கும். அந்த எதிர்ப்பின் எதிர்வினை எப்போதும் பணிக்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவலைப்படத் தேவையில்லை; உங்கள் பணியை மனசாட்சியுடன் செய்யுங்கள்; சரியான திசையில் இரு மடங்கு வைராக்கியத்துடன் தொடருங்கள்."**

அப்போது ஷங்கர், "பாபா, ஒரு நாள் உங்களுக்காக ஒரு நடன நிகழ்ச்சியை வழங்க விரும்புகிறேன்" என்றார்.

அதற்கு பாபா, **"நான் மிக்க மகிழ்ச்சியடைவேன்"** என்று பதிலளித்தார்.

பாபாவின் தரிசனம் கிடைத்ததில், ஷங்கர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால், அவர்கள் பிரிந்து செல்வதற்கு முன்பு, பாபா அவரை எச்சரித்தார், "**நான் எவரையும் சந்திக்க விரும்பாததால், என்னைப் பற்றி கப்பலில் இருப்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாம்**. **'பிரின்டிஸி'யில் (**BRINDISI**) இறங்குவதற்கு முன்னர் என்னைப் பாருங்கள்**."

அன்று இரவு, நியூயார்க் நகரில் வாழும் நோரினா, கிரஹாம் ஸ்டோக்ஸ் மற்றும் லண்டனில் கிட்டி டேவி ஆகியோரிடமிருந்து தொலைத்தந்திகள் வந்தன. ஷிகாகோவில் நடந்த அனைத்து நம்பிக்கை மாநாட்டில் கலந்து கொண்ட பெரும்பாலான பிரதிநிதிகள் திரும்பிச் சென்று விட்டதாகவும், மாநாடு முடிவடைய இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இந்தச் செய்தி, பாபா ஒருபோதும் மாநாட்டில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டாததால், அவருக்குச் சௌகரியமாக இருந்தது.

ஸ்டோக்ஸ், ருஸ்தம் மற்றும் அவரது இதர அன்பர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தில், பாபா மாநாட்டில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டார். மாநாடு ஏற்கனவே திட்டமிடப்பட்டு, மெஹர் பாபாவின் உரையைக் கேட்க அக்டோபர் 29 அன்று ஒரு கூட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது; ஆனால், ஸ்டோக்ஸ் பாபாவிற்கும் அவரது குழுவினருக்கும் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியாததால், மாநாட்டின் நிர்வாகிகளில் ஒருவர், ஷிகாகோவிலிருந்து தொலைத்தந்தி அனுப்பி, பாபா, அவரது வருகையை ரத்து செய்யுமாறு பரிந்துரைத்தார். தொலைத்தந்தியைப் பெற்ற பிறகு, பாபா ஐரோப்பாவில் ஒரு மாதம் தங்கியிருந்து பின்னர் இந்தியாவிற்கு திரும்ப முடிவு செய்தார்.

அடுத்த நாள், ஹைதராபாத் நகரில் வாழும் பார்சி இனத்தைச் சார்ந்த முன்ஷி (MUNSHI) என்பவர் பாபாவை சந்திக்க வந்தார். பாபாவைப் பற்றி, அவர் பாரசீக மொழியில் ஒரு கவிதை இயற்றினார்; ஆனால், அவர் பாபாவை நேருக்கு நேர் சந்தித்தபோது, குருநாதர் முன்னிலையில் ஒரு வார்த்தையும் கூற முடியவில்லை. அவர் பாபாவைப் பார்த்ததும், உணர்ச்சியற்றவர் போல் அசையாமல் உற்று நோக்கிக் கொண்டிருந்தவர், பின்னர் அமைதியாக வெளியேறினார்.

அடுத்த நாள், முன்ஷி கண்ணீருடன் சாஞ்சியிடம், "நான் பாபாவின் சத்ராவை முத்தமிட விரும்பினேன், ஆனால், அது அவமரியாதைக்குரியது என்று நினைத்து, என்னால் அவ்வாறு செய்ய முடியவில்லை. பாபாவை சூழ்ந்துள்ள வெளிச்சத்தைத் தவிர, வேறு எதையும் என்னால் பார்க்க முடியவில்லை. அதை என்னால் விளக்கவும் முடியவில்லை. அவரது தரிசனத்தை அடைந்தது மிகப்பெரிய அனுபவம். அவரை சந்தித்தது எனது அதிர்ஷ்டம். அதே கப்பலில் அவருடன் பயணம் செய்வது என்ன ஒரு பாக்கியம்! இதற்காகத்தான் நான் மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பப்பட்டேன் என்று

நினைக்கிறேன் - அதனால்தான் நான் பாபாவைப் போல் உயர்ந்த மனிதர் ஒருவரை சந்திக்க முடிந்தது!" என்று கூறினார். முன்ஷி பின்பு மெஹர் பாபாவைப் பற்றி வேறு சில பயணிகளிடம் கூறினார்.

**1933,** அக்டோபர் **1**ஆம் நாள், மெஹர் பாபா, தனக்கு பயங்கரமாகப் பல் வலிப்பதாக மண்டலியிடம் கூறினார். ஆதி ஜூனியர் கப்பலில் மருத்துவரை அணுகிய போது, அவர் முதலில் நோயாளியைப் பார்க்காமல் எந்த மருந்தையும் வழங்க மறுத்துவிட்டார். சாஞ்சி அவரிடம் சென்று வாய் கொப்பளிக்க கொஞ்சம் மருந்து வேண்டும் என்ற வேண்டுகோளுடன் பாபா, டாக்டரை சந்திப்பதைத் தவிர்க்க முயன்றார். ஆயினும், அவரை, ஆதி மருத்துவரிடம் கூறிய நோயாளி என்று தவறாகக் கருதி, உடனடியாக சாஞ்சியின் பற்களைப் பரிசோதித்தார். பற்கள் நன்றாக இருப்பதாகவும், அவருக்கு எந்த மருந்தும் தேவையில்லை என்றதும் சாஞ்சி எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் நோயாளி அல்ல என்று விளக்கமளிக்க எவ்வளவோ முயன்ற போதிலும், மருத்துவர் அவரது வேண்டுகோளைப் புறக்கணித்து, சாஞ்சியின் பற்களில் மருந்தை வைத்து, அரை மணி நேரம் அசையாமல் அமரச் சொன்னார். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, மருத்துவர் மிகவும் கசப்பான மருந்து ஒன்றை சாஞ்சியின் வாயில் ஊற்றினார். பாபாவுக்காக மருந்து வாங்கிவரச் சென்ற சாஞ்சி, இறுதியில் கசப்பான சுவையுடன் திரும்பிவர வேண்டியதாயிற்று.

இதற்கிடையில், பாபா, இந்த நகைச்சுவையான சம்பவத்தைக் கேள்விப்பட்டு மகிழ்ந்தார்; பல் வலியையும் தாங்கிக் கொண்டார்.

மண்டலி சக பயணிகளுடன் பேசி, பழகாமல், உணவு அறையில் சாப்பாட்டு நேரங்களைத் தவிர, அவர்கள் அங்கு செல்லாததால், இதர பயணிகளிடையே அவர்கள் யார் என்ற உண்மையான விபரங்கள் குறித்த மாறுபட்ட யூகங்கள் எழுந்தன. சிலர் தவறாக, உலகெங்கிலும் பயணம் செய்யும் வெற்றிகரமான வணிகர்கள் என்று நினைத்தனர், ஏனெனில் அவர்கள் பெரிய பெரிய பெட்டிகளை எடுத்துச் சென்றனர், எப்போதும் காகிதங்கள் மற்றும் கடிதப் போக்குவரத்துப் பணிகளில் மும்முரமாக இருந்து, பகல் அல்லது இரவு என நேரம், காலம் பாராமல் தொலைத்தந்திகளை அனுப்பிக் கொண்டிருந்தனர். மேலும், அக்பர் ஹைதரியுடன் அவர்கள் அடிக்கடி பேசுவதைப் பார்த்த சிலர், அவர்கள் லண்டனில் நடக்கும் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் உயர் அரசு அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றும் கருதினர்.

காலையிலும் பிற்பகலிலும் ஒரு மணிநேர நடைபயணத்தைத் தவிர, பாபா, பார்வையாளர்களை வெகு அபூர்வமாகவே சந்தித்தார். அவரது அறை மிகவும் சௌகரியமாக இருந்ததால், பாபா அறையை விட்டு வெளியே வராமல் அமைதியாக, அங்கேயே இருந்தார்.

அக்டோபர் **2** காலையில், கப்பல் 'போட் ஸெட்' **(**PORT SAID**)** துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தூர் மஹாராணி திருமதி எஷ்வந்த்ராவ் ஹோல்கர் **(**MAHARANI

OF INDORE MRS. YASHWANTRAO HOLKAR) அவரது செயலாளருடன் தரிசனத்திற்காக, பாபாவின் அறைக்கு வந்தார். அந்த நேரத்தில், பாபா தனது காலை நடைப்பயிற்சிக்காக வெளியே வந்தார்; பயணிகளில் யாரோ ஒருவர் மஹாராணியை அங்கே வழிநடத்தினார். அவர் பாபாவை அணுகியபோது, சாஞ்சி அவரிடம், "நான் பாபாவிடம் அனுமதி கேட்டு உங்களுக்குக் கூறுகிறேன்" என்றதும், மஹாராணியின் செயலாளர், அவர் மெஹர் பாபாவிடம் எதுவும் கேட்க வரவில்லை, ஆனால் அவரது தரிசனத்தை மட்டுமே விரும்பினார் என்று விளக்கினார். பாபாவிடம் கேட்டு அவர்களுக்கு அறிவிப்பதாக சாஞ்சி மீண்டும் வலியுறுத்தினார். ஆனால் அவர்கள் அவரைப் பின்தொடர்ந்து பாபாவின் அனுமதியைப் பெறும் முன்னரே பாபாவை நேருக்கு நேர் பார்த்தார்கள்.

பாபா, அவ்வேளையில் ஐரோப்பிய உடைகளை அணிந்திருந்தார், தனது தனிப்பட்ட காரணத்திற்காக, எந்தவோர் இந்தியரும் அவரை அந்த உடையில் அடையாளம் கண்டுகொள்வதை அவர் விரும்பவில்லை. பாபா அவர்களுக்கு இவ்வாறு விளக்கினார், "**நான் வெளியே கப்பல் தளத்தில் எவரையும் சந்திக்க விரும்பவில்லை என்பதால், அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பதற்காக, நான் ஒரு சாதாரண மனிதனைப் போல் உடை அணிகிறேன். எனது உண்மையான ரூபத்தை அறிந்து கொள்ளும் ஏக்கம் இல்லாதவர்களை நினைத்து நான் அஞ்சுகிறேன், அவர்களிடமிருந்து என் அடையாளத்தை நான் மறைக்க வேண்டியது அவசியம்.**" மஹாராணிக்கு பாபாவுடன் ஒரு சந்திப்பு, திட்டமிடப்பட்டது.

அக்பர் ஹைதரி மனைவியுடன் செப்டம்பர் 29ஆம் நாள் மறுபடியும் பாபாவை சந்திக்க வந்திருந்தார்: "நாங்கள் இருவரும் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கிறோம்" என்று லேடி ஹைதரி (LADY HYDERI) பாபாவிடம் எடுத்துரைத்தார், "எங்கள் மகன் அலி ஒரு குடிகாரன், ஊதாரி. நாங்கள் அவனை நினைத்து மிகவும் கவலையாக இருக்கிறோம்."

பாபா அவர்களை ஆறுதல் படுத்தினார், "**கவலைப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை, இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அவர்களின் மகன் திருந்திவிடுவார்**" என்றும் உறுதியளித்தார். லேடி ஹைதரி, தங்கள் மகனை பாபாவிடம் அழைத்து வரலாமா என்று கேட்டதற்கு, பாபா வேறொரு தருணத்தில் என்று சுட்டிக்காட்டினார்.

இருவரும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றனர், அதன் பிறகு, மெஹர் பாபா ஒவ்வொரு நாளும், சாஞ்சி வழியாக, செய்திகளை அனுப்பத் தொடங்கினார். அக்டோபர் 2 அன்று, ஹைதரியின் மகன் 'போர்ட் ஸெட்' (PORT SAID) துறைமுகத்தில் இறங்க நினைத்தார், ஆனால், அவருடைய தாயார், தனது மகன் கப்பலுக்கு வெளியே சென்றால், அவர் குடிபோதையில் திரும்பி வருவார் என்ற அச்சத்திலும் கவலையிலும், உடனே பாபாவிற்கு ஒரு செய்தியை அனுப்பினார். பாபா, பதிலாக, '**அவர்கள் அஞ்சத் தேவையில்லை, தங்கள் மகனைக்**

**கப்பலிலிருந்து இறங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுங்கள்**' எனத் தெரிவித்தார். அதன்படி, தாயார் கூறியதை எந்த மறுபேச்சும் இல்லாமல் ஏற்றுக்கொண்டது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது; பெற்றோர் மிகவும் நிம்மதியடைந்தனர்.

ஹைதரி மீண்டும் பாபாவை சந்தித்த வேளையில், பாபா அவரிடம், **"எனது பார்வை உங்கள் மகன் மீது இருக்கும். எதிர்வரும் இரண்டு மாதங்களில், அவர் இரண்டு முறை இதில் தீவிரமாக ஈடுபடுவார். அதற்குப் பின்னர் எல்லாம் சரியாகிவிடும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த இரண்டு சந்தர்ப்பங்களுக்குப் பிறகு, மதுவை முற்றிலுமாகக் கைவிடுவார்"** என்று கூறினார். ஹைதரி, மெஹர் பாபாவை ஹைதராபாத்திற்கு அழைத்து, கான்டே ரோஸோவில் இந்தியா திரும்புவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார்; பாபா அதில் பயணம் செய்ய இருப்பதை ஹைதரி அறிந்திருந்தார்.

அதற்குப் பிறகு, பாபா, சாஞ்சி மூலமாக மற்றுமொரு செய்தியை அனுப்பினார்; லேடி ஹைதரி, சாஞ்சியிடம், "பாபா நேற்று எங்கள் மீது கருணை காட்டினார். அது அவருடைய ஆசீர்வாதம். இல்லையென்றால் எங்கள் மகன், நாங்கள் சொல்வதைக் கேட்டிருக்க மாட்டார். தயவுசெய்து அவருக்கு எங்கள் நன்றியைத் தெரிவியுங்கள். அவருடைய அருட்பார்வை எப்போதும் எங்கள் மீது இருக்க வேண்டுகிறேன்!" என்றார்.

மகனின் இரண்டு மாத கெடுவைப் பற்றிய பாபாவின் செய்தியை, சாஞ்சி மறுபடியும் எடுத்துக் கூறி, கவலைப்பட வேண்டாம் என்று உறுதியளித்தார். அவர் அதை உடனடியாக விட்டுவிட முடியுமா என்று கேட்டதற்கு, "கவலை வேண்டாம். இதுவும் கடந்து போகும்" என்று சாஞ்சி கூறினார்.

அப்போது லேடி ஹைதரி, "நாங்கள் பாபாவின் விருப்பத்திற்குக் கட்டுப்படுகிறோம். இப்போது லண்டனில் எனது மகனின் காலில் அறுவை சிகிச்சை செய்வதில் எந்த ஆபத்தும் இல்லை அல்லவா?" என வினவினார்.

எல்லாம் சரியாகிவிடும் என்று சாஞ்சி அவர்களை தைரியமாக இருக்கக் கூறினார். "எங்கள் சலாம்களை தெரிவிக்கவும், மெஹர் பாபாவிற்கு நன்றி" என்று லேடி ஹைதரி அவருக்கு நல் இரவு வாழ்த்து தெரிவித்தார்.

அன்றிரவு மெஹர் பாபா, சாஞ்சியை ஹைதரியிடம் இன்னும் சில முறை அனுப்பினார்; சாஞ்சி ஒருமுறை பாபாவின் செய்தியைக் கொடுக்க அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டியிருந்தது. ஹைதரின் மகன் முதலில் பாபாவைப் பார்க்க விரும்பவில்லை, பெற்றோரின் கோரிக்கையை மறுத்துவிட்டார்.

ஆனால், இப்போது அவராகவே சாஞ்சியிடம், "எனது சலாம்களை மெஹர் பாபாவிற்குத் தெரிவியுங்கள், நான் நிச்சயமாக அவரை சந்திக்க வருவேன் என்று அவரிடம் கூறுங்கள். எனது காலில் ஏற்பட்ட வலி காரணமாக, இப்போது என்னால் வர முடியவில்லை. ஆனால் 'இன்ஷா அல்லா' (கடவுள்

விருப்பம்), நான் நிச்சயமாக நாளை வருவேன். புனிதமான அவர் என்னை எப்போது பார்க்க அனுமதிப்பார்?" என்று கேட்க, 'காலை பத்து மணிக்கு' என்று சாஞ்சி பதிலளித்தார்.

தந்தை ஹைதரி பாபாவிடம், "உங்கள் சக்தியால், அவரை உங்கள் பக்கம் இழுங்கள்!" என்றார். தங்கள் மகனின் வரவேற்கத்தக்க மாற்றத்தைக் கண்டபோது, அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை; அவர்கள் பாபாவிற்கு ஆழ்ந்த நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள். அடுத்த நாள் ஹைதரியின் மகன் அலி பாபாவின் அறைக்கு விஜயம் செய்தார். அலி அறிமுகமானதும், பாபா அவருக்கு இவ்வாறு விளக்கினார்: **மனதின் இயற்கைத் தன்மை என்னவெனில், அது ஆசைகளுக்கு அடிமையாகி, தொடர்ந்து அதைச் செய்து, ஆசைகளை, பழக்கமாக மாற்றுகிறது! ஒருவர், ஒரு குறிப்பிட்ட பழக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது பெரும்பாலும் சாத்தியமற்றது. விடுவிக்கப்பட்டால், அவர் காப்பாற்றப்படுவார். பழக்கத்தை கைவிடுபவர் கடவுளை அடைகிறார். ஆனால் பழக்கவழக்கங்கள் ஆன்மீகப் பாதையில் ஒரு பெரிய தடையாக இருக்கின்றன. அவை ஒரு நல்ல ஆன்மாவைக் கூட அழிவுக்குக் கொண்டு வரும்.**

(பிளீடரை மேற்கோள் காட்டி, பாபா தொடர்ந்தார்). **ஒரு முறை ஆன்மீகப் பாதையை அவருக்குக் காட்ட, ஒரு மனிதர் பிரார்த்தனையுடன் என்னிடம் வந்தார். 'நான் சொன்னதை அவர் பின்பற்றினால், நிச்சயமாக அதைக் கண்டு கொள்வார்'** என்று கூறியதும், அவர் ஒப்புக்கொண்டார். **'ஒரு அறையில் தன்னைப் பூட்டிக் கொள்ளவும், மௌனமாக இருக்கவும், அதே வேளையில் படிக்கவோ எழுதவோ செய்யாமல், பால் மட்டுமே அருந்தும்படி நான் அவருக்கு அறிவுறுத்தினேன். கடந்த நான்கு ஆண்டுகளாக, அவர் அதைச் செய்து வருகிறார், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். இதுதான் 'நாதம்' ('NAAD' - தெய்வீக மயக்கம்) என்று அழைக்கப்படுகிறது, மேலும் இந்த வகையான நாதம், ஒருவர் கடவுளை உணர வைக்கிறது.'**

**ஒரு காலத்தில் புகைப்பிடிக்கும் தீய பழக்கம் கொண்ட ஒரு மனிதர் இருந்தார். அவரால் அதை விட்டுவிட முடியாமல், அவர் என்னிடம் உதவிக்கு வந்தார். அவர் என்னுடன் இருந்ததால், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு முறை கூட அவர் புகைப்பிடிக்கவில்லை! சுருக்கமாக, தீய பழக்கம் ஒரு மனிதனை அழிக்கிறது. இது மனம், உடல், ஆன்மாவைப் பரிதாபத்திற்கு உள்ளாக்குகிறது மேலும் உங்களைச் சுற்றியுள்ள அனைவரையும் துன்புறச் செய்கிறது. நிஜ வாழ்க்கை என்பது பிறரை மகிழ்விப்பதாகும். எனவே உங்களைச் சார்ந்தவர்களை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள். பயப்படாதீர்கள்; எல்லாம் நன்றாக நடக்கும். கவலைப்படாதீர்கள்; என் பார்வை உங்கள் மீது இருக்கும்.**

நன்றியுணர்வோடு, அலி ஹைதரி குருநாதருக்கு மரியாதை செலுத்தும் உணர்வை வெளிப்படுத்தினார்.

அன்று காலை, இந்தூர் மஹாராணி சுமார் பதினைந்து நிமிடங்கள் பாபாவை சந்தித்தார்.

அந்த நேரத்தில் பாபா 'சத்ரா' உடையணிந்து அவரது நீண்ட தலைமுடி கீழே தொங்கிய வண்ணம் அமர்ந்திருந்தார். பாபா, மஹாராணியிடம் இவ்வாறு தெரிவித்தார், "**இது எனது வழக்கமான உடை. என்னிடம் வருபவர்களுக்கு முன்னால் நான் அணியும் உடை இது. என்னை வெளிநாட்டவர் என்று அழைப்போருக்கு, நான் வெளிநாட்டவர் ஆகிறேன். நான் ஒரு வெளிநாட்டவராக உங்களை சந்திக்க விரும்பவில்லை; எனவே நீங்கள் இன்று வந்திருப்பது நல்லது. நான் இப்போது ஒரு சக உள்நாட்டுக்காரனைப் போல் இல்லையா?**"

மஹாராணி சிரித்தார்; பாபா உடனே ஒரு கருத்துரையை வழங்கினார்:

**எல்லாம் மனதைப் பொறுத்தது. மனம் மகிழ்ச்சியையும் துயரத்தையும் உணவாக உண்டு வாழ்கிறது. உலகம் உண்மையில் ஒரு கனவு. மகிழ்ச்சியும் துக்கமும் மனதின் விளையாட்டுகள்; இரண்டிலும் எந்தப் பொருளும் இல்லை. உண்மையில், கடவுளைக் காண, பெரும் முயற்சி செய்வதற்காகவே மனம் இருக்கிறது, ஆனால் இதை ஒருபுறம் தள்ளிவிட்டு உலகில் சிக்கிக் கொள்கிறது. 'எனக்கு இது வேண்டும்! எனக்கு அது வேண்டும்!' என்று அது கதறுகிறது. மனம் மாயையில் சிக்கி, அதன் மூலம் ஆசைகளை அதிகரிக்கிறது. ஓர் ஆசை பூர்த்தியான அடுத்த கணமே, மற்றொன்று விரைவில் பூர்த்தி அடையும் நோக்கத்தில் காத்திருக்கும். இவ்வாறு, ஒன்றன் பின் ஒன்றாக, ஆசைகள் வரம்பில்லாமல் அதிகரிக்கின்றன, அவை ஒருபோதும் எவருக்கும் சுதந்திரத்தைக் கொண்டு வருவதில்லை.**

**எனவே மனதைக் கட்டுப்படுத்தும் மனிதர், முழுப் பிரபஞ்சத்தையும் தன் வசம் கொண்டிருக்கிறார். அத்தகைய மனிதருக்கு மகிழ்ச்சி, துன்பம், உடல் ஆரோக்கியம், செல்வம் அல்லது வேறு எதுவானாலும் எந்த பயனும் இல்லை; அவர் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்.**

மஹாராணி, பாபாவின் உரையைக் கேட்டுத் திருப்தி அடைந்து வெளியேறினார். அதன் பின்னர், உதய் ஷங்கர் தனது நடன நிகழ்ச்சிகளைப் பற்றி பேச வந்தார். பாபா அவரிடம், "**ஒருவேளை ஷிகாகோவில், நான் உங்களுக்கு தரிசனம் வழங்குவேன்**" என்று குறிப்பிட்டார்.

அக்டோபர் 5 அன்று காலையில் இத்தாலியின் 'பிரிண்டிஸி' (BRINDISI, ITALY) துறைமுகத்தில் கப்பல் வந்து சேர்ந்தது. அன்று மதியம், முன்ஷி பத்து நிமிடங்களுக்கு, பாபாவை சந்தித்தார். அதன் பின்னர், அக்பரும் லேடி ஹைதரியும் ஐந்து மணிக்கு, பாபாவைப் பார்த்தார்கள்; பாபா மீண்டும் அவர்களை ஆறுதல்படுத்தினார்; மேலும் தங்கள் மகனைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று வலியுறுத்தினார்.

1933, அக்டோபர் 6ஆம் நாள் காலையில் பாபாவும் மண்டலியும் வெனிஸ் (VENICE) துறைமுகத்திற்கு வந்தனர். இனிட் கோர்ஃப், கிட்டி டேவி, மின்டா ஆகியோர் அவர்களை வரவேற்க வந்தனர். பாபா நேரடியாக, ஹோட்டல் இன்டர்நேஷனலுக்குச் (HOTEL INTERNATIONAL) சென்றார்; மேற்கத்திய குழு அங்கு, பாபாவை எதிர்நோக்கி இருந்தது. மதிய உணவிற்குப் பின்னர், அனைவரும் 'ஸெயின்ட் மார்க்ஸ்' சதுக்கத்திற்கு (SAINT MARKS SQUARE) நடந்து சென்றனர்.

மறுநாள் அதிகாலையில், மெஹர் பாபா, மறுபடியும் ஸெயின்ட் மார்க்ஸ் சதுக்கத்திற்குத் திரும்பிவந்து, அமைதியாக அதைச் சுற்றி வந்தார். பின்னர் அவர்கள் ஒரு ரயிலில் ஏறவிருந்தபோது, பாபா, கிட்டி பக்கம் திரும்பி, **"உங்களிடம் எங்கள் பாஸ்போர்ட் இருக்கிறதா?"** என வினவினார்.

அதற்கு கிட்டி, "என்னிடம் இல்லை, பாபா. (மண்டலி) அவர்களிடம் இல்லையா?" என்ற சந்தேக தொனியில் கேட்டார்.

கிட்டி அவற்றை ஹோட்டலில் பதிவு செய்வதற்காகக் கொடுத்ததை, புறப்படும் அவசரத்தில் சேகரிக்க மறந்துவிட்டார். ரயிலிலிருந்து சாமான்களை இறக்க பாபா கூறியபோது, கிட்டி தனது அலட்சியம் குறித்து கலக்கமடைந்தார், ஆனால் பாபா, எப்போதும் போல் அமைதியாக இருந்து எழுத்துப்பலகை வழியாக, கிட்டியிடம், **"கவலைப்பட வேண்டாம். மதிய உணவை முடித்துவிட்டு, கால்வாயில் கோண்டோலா சவாரி போகலாம்; நான் இங்கு அதிக அளவில் பணிபுரிய முடியும். இரவு ரயிலில் நாம் பாரிஸ் நகருக்குச் செல்லலாம்"** என்றார்.

தாமதம் குறித்து, பாரிஸ் நகரில் எதிர்நோக்கி இருக்கும் ருவானோவிற்குத் தகவல் தரப்பட்டது. இதன் மூலம் கிட்டி, எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டியதைப் பற்றி மேலும் அறிந்து கொண்டார்.

பாபாவும் குழுவும் மாலையில் வெனிஸிலிருந்து ரயிலில் புறப்பட்டு, அன்று இரவு 11 மணிக்கு மிலன் (MILAN) நகரை வந்தடைந்தனர். அந்தத் தாமதமான நேரத்திலும் கூட, திரு. வின்ஃபிரெட் (MR. WINFRED) மற்றும் இரண்டு நண்பர்கள் பாபாவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

1933, அக்டோபர் 8ஆம் நாள், இந்தக் குழு பிற்பகல் பாரிஸ் (PARIS) நகரம் வந்தடைந்தது. ருவானோ, நோரினா, குயன்டின் ஆகியோர் அவர்களை வரவேற்கக் காத்திருந்தனர். பாபா ஹோட்டல் வவுல்மென்டில் (HOTEL VOUILLEMENT) வந்ததும், ருவானோவின் இல்லத்திற்குச் (16, ரூ லாரிஸ்டனில் – RUE LAURISTON) சென்றார்; அங்கு ஏறக்குறைய 50 பேர் பாபாவின் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர். அவர் அனைவரையும் மூன்று மணி நேரம் சந்தித்தார்; பாபாவை சந்தித்தவர்களில் ஓட்டோ ஹாஸ்-ஹெய், அவரது முன்னாள் மனைவி யூலன்பர்க்கின் கவுண்டஸ் விக்டோரியா (COUNTESS VICTORIA OF EULENBURG) மற்றும் அவர்களின் மகள் ஓட்டோரா (OTTORA) ஆகியோர் அடங்குவர்.

ருவானோவின் மகள் பிஜோ மார்ட்டின் (BIJOU MARTIN) பாபாவைப் பார்க்க உள்ளே நுழைந்தபோது, "பாபா டியர் (BABA DEAR), இது பிஜி, எனது குழந்தை" என்று ருவானோ அவளை அறிமுகப்படுத்தினார்.

பிஜோ உடனடியாக, "அம்மா என்னை விட ஒரு சிறிய குழந்தையைப் போன்றவர்!" என்றார்.

"**பாபா என்றால் குழந்தை என்று பொருள், எனவே நாம் மூவரும் குழந்தைகள்**" என்று எழுத்துப்பலகையில் பாபா உச்சரித்தார்.

பாபா, ருவானோவையும் அவரது மகளையும் மிகவும் நேசித்தார்; இருவரும் பாபாவின் ஆழ்ந்த அன்பிற்குரியவர்கள்; ருவானோ, பாபாவிடம் 'ஏன் அவர்கள் இருவரிடமும் (தாயும், மகளும்) மிகவும் அன்பாக இருக்கிறார்' என்று கேட்டதும், பாபா, "**ஏனெனில் நீங்கள் எகிப்து நாட்டில் நீண்ட காலத்திற்கு முன்னர் என்னிடம் கருணை காட்டினீர்கள்**" என்று பாபா வெளிப்படுத்தினார்.

ஒரு பாரிஸ் செய்தித்தாளில் பாபாவின் புகைப்படமும் அவரைப் பற்றிய பாராட்டுக் கட்டுரையும் வெளிவந்தன; அதைப் பார்த்து, பல ஃபிரெஞ்ச் மக்கள் பாபாவை சந்திக்க ஆவலாக இருந்தனர்; இருந்தாலும், மறுநாள் காலையில் பாபா லண்டனுக்குப் புறப்பட்டார்.

அவர்கள் டோவர் (DOVER) நகரில் சில மேற்கத்திய அன்பர்களை சந்தித்தனர். எலிஸபெத், மின்டா, வில் பேக்கெட், ஹெர்பெர்ட் டேவி ஆகியோருடன் பாபா, காரில் லண்டனுக்குச் சென்றார், பிற அனைவரும் ரயிலில் பயணம் செய்தனர். 9 அன்று மாலை லண்டன் வந்தடைந்து, 37, 'வாரிங்டன் க்ரெஸென்ட்' (WARRINGTON CRESCENT) என்ற இடத்தில் சைவ விடுதியான ஹைஜியா ஹவுஸில் (HYGEIA HOUSE) தங்கினர்.

அதி தீவிரமான நிகழ்வுகள் அடுத்த நாள் ஆரம்பமாயின. காலம் இதை இப்படி வர்ணித்தது: "அனைத்து பறவைகளும் தங்கள் இதயத்தின் புதையலுக்கு அருகில் கூடியிருந்தன; இந்த நேரத்தில் தோட்டத்தில் இன்னும் சில மலர்களும், மலர் மொட்டுக்களும் தென்பட்டன." ஸ்டீஃபனி ஹாகார்ட், சார்லஸ் பர்டம், டிலியா டிலியோன், வில்-மேரி பேக்கெட், மார்கரெட் க்ராஸ்க், எலிஸபெத், கிட்டி, நோரினா, ருவானோ, குயன்டின் ஆகியோர் ஏற்கனவே இறை கீதத்தை இசைக்கத் தொடங்கினர். லண்டனில் ஹைஜியா ஹவுஸில் இருந்தபோது, இன்னும் சில அன்பர்கள் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தனர்.

அடுத்த நாள், (93-ஏ, ப்ரோண்டெஸ்பரி – BRONDESBURY - சாலையில் அமைந்த) ஸ்டீஃபனியின் இல்லத்தில், மதிய உணவிற்குப் பிறகு, பாபா பல புதிய நபர்களை சந்தித்தார். அவர்களில், பல ஆன்மீகப் புத்தகங்களின் ஆசிரியரான டோரதி கிரீன்ஸைடு (DOROTHY GREENSIDE), பாபாவிடம், "நான் எழுதும் ஓர் உத்வேகத்தை உணர்ந்தேன்; ஆனால் திடீரென, அதன் ஆற்றல் குறைந்து, தொலைந்து போனது. இப்போது எதுவும் எழுத எனக்கு விருப்பமில்லை" என்று கூறினார்.

"**இவை அனைத்தும் அதன் குறுகிய நேர தோற்றம்தான்**" என்று பாபா பதிலளித்தார், "**அவை எப்போதும் தற்காலிகமானவை, விரைவில் மறைந்துபோகும் தன்மையுடையவை. ஆனால் நான் உங்களுக்கு உதவுவேன். இதில் உங்களைக் குறை கூற எதுவுமில்லை; இந்த உத்வேகமும்**

**சக்தியும் மறைந்து போனது உங்கள் தவறும் அல்ல. காரணம் அது சரியான நேரம் அல்ல. ஆனால் என் உதவியுடன் அந்த உத்வேகம் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் அதை மீண்டும் அடையும்போது, அது எப்போதும் உங்களுடன் இருக்கும். ஒரு நாள் உங்கள் எழுத்துக்கள் மூலம் மனிதகுலத்திற்கு நீங்கள் பெருமளவில் உதவ முடியும்."**

மெஹர் பாபாவின் நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளைக் கேட்டு, டோரதி ஆறுதலையும் மகிழ்ச்சியையும் உணர்ந்தார்; பின்னர் அவர் தனது புத்தகங்களில் ஒன்றை பாபாவிற்கு அனுப்பி, பாபாவின் சீடர்களில் ஒருவராக இருக்கும் தகுதியைப் பெறும் ஆன்மீகப் பயிற்சிகளை வழங்குமாறு வேண்டினார்.

மெஹர் பாபாவின் இந்த வருகையின் போது குறிப்பிடத்தக்கதாக, அவருடைய தொடர்பில் வந்தவர், வினிஃப்ரெட் ஏ. ஃபோஸ்டர் (WINIFRED A. FOSTER) எனும் ஓர் இளம் பெண்மணி. ஒரு நாள் அவர் பாபாவின் காலடியில் அமர்ந்து, பாபாவை நோக்கி, "நான் உங்களை நேசிக்கிறேன், பாபா" என்று மனதில் நினைத்தார். பாபா, இதர அனைவர்களால் சூழப்பட்டிருந்தாலும், அவர் அந்தப் பெண்மணியைப் பார்த்து, எழுத்துப்பலகை வழியாக, **"அதனால்தான் நான் உங்களை என் அருகில் இருக்கச் செய்யவில்லை"** என்று உச்சரித்தார்.

இந்த வார்த்தைகள் வினிஃப்ரெட்டின் இதயத்தை ஆழமாகத் தொட்டன. பாபா அவரது ஆன்மீகப் பணிக்காக, அத்தகைய ஆழமான உள் தொடர்பை ஏற்படுத்தினால், ஒருவர் உடல் ரீதியாக பாபாவின் அருகில் இருக்க வேண்டிய தேவையில்லை என்பதை வினிஃப்ரெட் புரிந்துகொண்டார்.

பாபா, அடுத்ததாக ஹெர்பெர்ட் டேவியை பிற்பகலில் இரண்டு மணி நேரம் சந்தித்தார். குறிப்பாக ஹெர்பெர்ட்டைத் தொந்தரவு செய்த சில விஷயங்களைப் பற்றி அவருடன் விவாதித்தார். ஹெர்பெர்ட் அவரது விவாதத்தை இவ்வாறு தொடங்கினார், "நீங்கள் பேசுவதாக சத்தியம் செய்கிறீர்கள், ஆனால் நீங்கள் அதைச் செய்வதில்லை. உலகம் உங்களைப் பற்றி என்ன நினைக்கும்?" அதற்கு பாபா பதிலளித்தார்: **மத ரீதியான மற்றும் தார்மீக கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதும், மதப் பிணைப்புகளுடன் ஒன்றிப் போவதும் மனிதகுலத்திற்கு நல்லது; ஆனால் ஆன்மீகப் பாதையைப் பொறுத்தவரை அவை பயனற்றவை. உலகக் கடமைகள் தொடர்பான அனைத்து கொள்கைகள், பிணைப்புகள், சட்டங்கள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டவன் நான். நான் பரிபூரணமானவன், என்னைப் பொறுத்தவரை எந்தவிதமான கட்டுப்பாடும் பிணைப்பும் எனக்கு இல்லை. நான் எல்லா தடைகளையும் தகர்த்துவிட்டேன், எல்லா சட்டங்களையும் தாண்டிவிட்டேன்.**

**உலகின் தார்மீக நெறிமுறைப்படி, ஒருவரின் வார்த்தை அல்லது வாக்குறுதி புனிதமானது என்று மனிதகுலத்தால் கருதப்படுகிறது. ஆனால் நேரம், இடம், காரணம், விளைவு ஆகியவற்றைக் கடந்து சென்றவர், ஓர் எல்லைக்குள் எதற்கும் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அவரைப் பொறுத்தவரை, அடிமைத்தனம் என்று எதுவும் இல்லை. எல்லையற்ற**

**ஒன்றை, நோக்கம் எவ்வளவுதான் மேன்மையானதாக இருந்தாலும், எல்லைக்குள் கட்டுப்படுத்த முடியாது; இதன் அர்த்தம் என்னவெனில் வரம்பற்ற ஒன்றை வரம்பிற்குள் கொண்டுவர முடியாது!**

**இக்காரணத்திற்காகத்தான், நீங்கள் கேட்காதபோதும், நான் உங்களுக்கு வாக்குறுதிகளைத் தருகிறேன், உங்கள் நோக்கமும் சரியான நேரத்தில் நிறைவேறும். ஆனால், வாக்குறுதியானது காலத்தைக் கடக்கச் செய்யும் கருவியாக இருக்கக்கூடும் என்பதையும் நான் அறிவேன். இந்த வாக்குறுதி நிறைவேற்றுவதற்காக அல்ல, ஆனால் சூழ்நிலைகளால் தேவைப்படுவதாகும். இது காலத்தின் கட்டாயம், ஆகையால் அதன் விளைவாக வரும் எதிர்வினையை நான் பொருட்படுத்துவதில்லை.**

**எனவே, எனது வாக்குறுதியைக் கடைப்பிடிக்காததற்காக உலகின் கடுமையான விமர்சனங்களைப் பற்றியோ அல்லது அதன் பயங்கரமான அவதூறு மற்றும் எனது பணிக்கு தீங்கு விளைவிப்பதைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. இதுபோன்ற எதிர்வினைகளை நான் வேண்டுமென்றே உருவாக்கி வளரச் செய்கிறேன்! இத்தகைய எதிர்ப்பு எனது பணிக்கு ஆக்கப்பூர்வமான அழுத்தத்தைக் கொடுக்கும். நான் புகழுக்கும் இகழுக்கும் அப்பாற்பட்டவன், அவை எந்த வகையிலும் என்னை பாதிக்காது!**

**பெயர், புகழ், உலக வெற்றியில் கருத்தாக இருப்பவர்கள், விமர்சனங்களுக்கும் அவதூறுகளுக்கும் பயந்து வாழும் சாதாரண மனிதர்களே ஆவர். அவர்கள் எந்த விலைக் கொடுத்தாவது தங்கள் கௌரவத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்கள். பணம், வாழ்க்கை எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுக்குப் 'பெயர்' மட்டுமே முக்கியமானது.**

**நான் உண்மைப்பொருளின் மொத்த உருவம். எவ்விதமான பாராட்டுக்களும் என்னை மேலும் உயர்த்தாது, எந்தவொரு விமர்சனமும் என்னைக் கீழே வீழ்த்தவும் முடியாது. நான் நானேதான், எப்போதுமே அப்படித்தான் இருப்பேன். எனவே நான் என்ன செய்தாலும், அனைவரின் நலனையும் உள்ளடக்கிய பார்வையோடு எனது பணியைச் செய்கிறேன்.**

1933, அக்டோபர் 11 அன்று, பார்வையாளர்களில் பெண்மணி ஒருவர் பாபாவிடம் கேட்டார், "ஒரு நபர், அனைத்து பக்கங்களிலும் அசம்பாவிதமான நிகழ்வுகள் மற்றும் சிரமங்களால் சூழப்பட்டிருக்கும் போது, அவற்றிலிருந்து விடுபட வேறு எந்த வழியும் இல்லாத தருணத்தில், அவர் விரும்பத்தகாதது அல்லது அநாகரீகமானது என்று பொதுவாகக் கூறப்படும் ஒன்றைச் செய்வது முறையாகுமா? அதனால் அவர் நியாயப்படுத்தப்படுவாரா?"

மெஹர் பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இதுபோன்ற சூழ்நிலைகளில், தனிப்பட்ட சுயநலம், சந்தோஷத்திற்காக இல்லாமல், ஒரு நபர் எதைச் செய்தாலும் அது நியாயமானது; உதாரணமாக, கழிவுகளின் குவியலில் விழுந்த வெள்ளி**

**நாணயத்தை, ஒருவர் தனது கையை விட்டு எடுக்கிறார், பின்னர் அசுத்தத்தைக் கழுவி கையையும் சுத்தம் செய்கிறார் என்றால், அவ்வாறு செய்ததற்காக அவரைக் குறை கூற முடியாது. அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை மனதில் கொண்டு அதைச் செய்து, நோக்கம் நிறைவடைந்ததும் அதிலிருந்து விடுபடுகிறார். அது பாவம் அல்ல.**

**இங்கே இன்னும் ஓர் எடுத்துக்காட்டு: ஒரு மனிதன் எல்லா பக்கங்களிலும், பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொள்கிறான் என்று வைத்துக்கொள்வோம் - அவருடைய குடும்பம் பசியால் வாடுகிறது, உறுப்பினர் ஒருவர் அவரது மரணப் படுக்கையில் இருக்கிறார். உயிர் போகும் நிலையில் இருக்கும் அந்த உறவினருக்கு, ஊட்டச்சத்து அல்லது மருந்தை வாங்க அவரிடம் எதுவும் இல்லாமல், உதவியற்றவராக இருக்கிறார். இந்த சூழ்நிலையில், அவர் தனக்காக அல்லது தனது சொந்த மகிழ்ச்சிக்கான எந்த சிந்தனையும் இல்லாமல், விரும்பத்தகாத அல்லது சட்டவிரோதமான வழிகளை நாட வேண்டியிருந்தால், அவ்வாறு செய்வதில் அவர் நியாயப்படுத்தப் படுகிறார்! இன்னொருவர் உயிரைக் காப்பாற்றுவதற்காக, தன்னலமற்ற நோக்கங்களால் அதைச் செய்ய அவர் கட்டாயப்படுத்தப் படுகிறார்.**

**சுருக்கமாக, இதன் பொருள் என்னவெனில், ஒரு செயல் எவ்வளவுதான் மோசமானதாகத் தோன்றினாலும், அது உலகின் ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படக்கூடாது, மாறாக, முற்றிலும் அடிப்படை நோக்கங்களின்படி தீர்மானிக்கப்பட வேண்டும். இது, உலக எண்ணம் கொண்டவர்களுக்கு எவ்வளவுதான் அதிர்ச்சியூட்டுவதாக அல்லது அபத்தமானதாகத் தோன்றினாலும், ஆன்மீகக் கண்ணோட்டத்தில் இது நியாயமான தீர்ப்பின் தரமான நிலை என்று கூறலாம்.**

பிரிட்டிஷ் ராணுவ தளபதி, ஏ.பி.பி. ஜேம்ஸ் (LIETENANT COMMANDER A.B.B. JAMES), அக்டோபர் 11ஆம் நாள் பாபாவை சந்தித்தார். அப்போது அவர் மனச்சோர்வில் குழப்பத்துடன் இருப்பவர் போலத் தோன்றினார். அவருடைய குழந்தையின் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், உடைந்துபோய் மகிழ்ச்சியற்ற நிலையில் காணப்பட்டார்; அது கணவன், மனைவி இருவரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. குழந்தை குணமடைவார் என்று பாபா முந்தைய ஆண்டு அவருக்கு வாக்குறுதி அளித்திருந்தார், அவர்களின் குடும்ப கதைக்கு, பத்திரிகைகளில் பரவலான விளம்பரமும் கொடுக்கப்பட்டது. பாபாவின் வாக்குறுதி நிறைவேறாமல் இருந்தது, தம்பதியரின் கவலையை மேலும் அதிகரித்தது. அவர்களின் நண்பர்களும், உறவினர்களும் மெஹர் பாபா மீதான அவரது நம்பிக்கையையும் பக்தியையும் விமர்சிக்கத் தொடங்கினர். தளபதி ஜேம்ஸ் மனமுடைந்து தற்கொலை செய்யும் முடிவுக்கு வந்தார்.

பாபா, அவரை சமாதானப்படுத்தி, அடுத்த ஆறு மாதங்களில் குழந்தை குணமடைவார், ஜேம்ஸ் தனது கவலைகளிலிருந்து விடுபடுவார் என்று

உறுதியளித்தார்; பாபா அவருக்கு மேலும் விளக்கிக் கூறினார், "**எனது சொந்த சில ஆன்மீகக் காரணங்களுக்காக, கடந்த ஆண்டு எனது வாக்குறுதியை வழங்கினேன். அது நிறைவேறாமல், அதிக துன்பங்களை ஏற்படுத்தும் என்பதை நான் நன்கு அறிந்திருந்தும், நானாகவே, நீங்கள் எதுவும் என்னிடம் கேட்காமல், அந்த வாக்குறுதியை உங்களுக்கு அளித்தேன். ஆன்மீக நன்மை மற்றும் கடந்த காலங்களில் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் என்னுடன் உள்ள தொடர்பைக் கருத்தில் கொண்டு, நான் அவ்வாறு செய்தேன்.**" ஜேம்ஸ் வெளியளவில் நிம்மதி அடைந்தார், பின்பு பாபாவையும் மண்டலியையும் தனது காரில் ரீஜண்ட்ஸ் பார்க் வழியாக அழைத்துச் சென்றார்.

டிலியாவின் சகோதரர் ஜாக் (JACK) 11ஆம் தேதி மாலையில், பாபா மற்றும் குழுவினருக்கு 'கியூ தியேட்டரை' (Q THEATER) பயன்படுத்த ஏற்பாடு செய்தார். பாபா அங்குச் சென்று மார்கரெட், நோரினா, விவியென், மேபெல், குயன்டின், மின்டா, அனிதா, டிலியா ஆகியோரின் பல்வேறு வகையான நடன நிகழ்ச்சிகளையும், நகைச்சுவையான குறு நாடகங்களையும் கண்டு ரசித்தார். குயன்டினுடன் மின்டா 'ரும்பா' நடனமாடினார், இதற்காக மார்கரெட் நடனப்பயிற்சி அளித்தார். நோரினாவும் ஒரு குறுகிய நாடகத்தில் பங்கெடுத்தார்; அதில், சீற்றத்துடன் அவர், தனது காலணியைக் கழற்றி, மின்டாவைத் தலையில் அறைந்தார்! அன்று மாலையில் நடந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை, பாபா முழுமையாக ரசித்தார்.

மெஹர் பாபாவைப் பார்க்க வராத ஒருவர், மார்கரெட்டின் மாணவர் ஆட்ரி வில்லியம்ஸ் (AUDREY WILLIAMS). அவர் ஒரு சில காரணங்களுக்காக, மார்கரெட், கிட்டி இருவரிடமும் தவறாக நடந்து, அடிக்கடி பணம் கேட்டுக்கொண்டிருந்தாலும், அவருடனான தொடர்பைத் தக்க வைத்துக் கொள்ள பாபா விரும்பினார். ஆட்ரி மறுநாள் லண்டனை விட்டு வெளியேற இருந்தார், ஆனால் பாபா அவருக்கு ஒரு செய்தியை அனுப்ப விரும்பினார்; எனவே கிட்டி, மார்கரெட் இருவரும் ஆட்ரியை சந்தித்து, செய்தியை வழங்க அனுப்பப்பட்டனர்.

'தி அக்கல்ட் ரிவியூ' (THE OCCULT REVIEW) பத்திரிகையின் ஆசிரியரான ஹாரி ஸ்ட்ரட்டன் (HARRY STRUTTON) , அக்டோபர் 13ஆம் நாள், மெஹர் பாபாவை சந்திக்க வந்தார். "**அறிவுத்திறன், நூல்களைப் படித்து கற்றுக்கொள்வது - எந்த அளவிற்கு இருந்தாலும், உண்மைப்பொருளை (இறைவனை) முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது**" என்று பாபா அவரிடம் கூறினார். ஸ்ட்ரட்டன் ஓர் அறிவாளி, ஆனால் 1931இல் பாபாவுடனான முதல் சந்திப்பில் வெகுவாக ஈர்க்கப்பட்டார். கிட்டியின் சகோதரர் எர்னஸ்ட் டேவியும் (ERNEST DAVY), அவருடைய நண்பர் ஒருவரும் அதே நாளில் வந்தனர். கப்பல் பயணத்தின்

போது சந்தித்த அக்பர் மற்றும் லேடி ஹைதரி, முன்ஷி, சார்லஸ் பர்டம் ஆகியோரும் வந்தனர்.

அக்டோபர், 13ஆம் நாள் நேரடி பேட்டிக்காக வந்த ஒரு கலைஞரிடம், பாபா இவ்வாறு விளக்கினார், **“நீங்கள் அறியாமல் இருந்தாலும், உங்களின் கலைத்திறன் மூலம் அளவிறுதியற்ற ஒன்றை வெளிப்படுத்துகிறீர்கள். இது எல்லா இடங்களிலும் இருப்பது போலவே உங்களிடமும் ஏற்கனவே உள்ளது. ஒவ்வொரு மனிதனும் அறிந்தோ, அறியாமலோ போராடுவதன் மூலமாக உண்மைப்பொருளையும், அதன் பேரானந்தத்தையும் அடையத் துடிக்கிறான். அதுவே வாழ்க்கையின் குறிக்கோள். ஆனால், காலம் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.”**

63 வயதான மேபெல் பெஸன்ட்-ஸ்காட் (MABEL BESANT-SCOTT) மறுநாள் பாபாவிடம் வந்தார். அவர் கடந்த செப்டம்பர் மாதம் இந்தியாவில் காலமான அன்னி பெஸன்டின் (ANNIE BESANT) மகள். (மேபெல் ஸ்காட் சில வருடங்களாக இந்தியாவில் வாழ்ந்து, அவரது தாயாருக்கு உதவியாக இருந்தார்). அவர், "நான் எனது நண்பரைப் பார்க்க வந்திருந்தேன், ஆனால் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்பதை அறிந்ததும், நான் உங்களைப் பார்க்க வந்தேன். உங்களை சந்தித்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

**“உங்களை சந்தித்ததில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்”** என்று பாபா எழுத்துப்பலகையில் சுட்டிக்காட்டினார்.

அவர்கள், அன்னி பெஸன்டைப் பற்றி பேசினர், **“அவர் இந்தியாவில் ஓர் ஆணாகப் பிறவி எடுப்பார்”** என்று பாபா குறிப்பிட்டார்.

"நானும் அப்படி நினைக்கிறேன்," திருமதி ஸ்காட் கூறினார். "அவர் இந்திய தேசத்தை மிகவும் நேசித்தார்; இப்போது அவருக்குப் பெரிய அளவில் ஓய்வு தேவை."

அவருக்கு உறுதியளித்த பாபா, **“உலகம் இப்போது பொருள்முதல்வாதத்தின் பக்கம் சாய்ந்துள்ளது, மேலும் அதை, வாழ்க்கையின் உயர்ந்த மதிப்புகளை நோக்கித் திருப்ப, உலகிற்கு உதவி தேவை. நான் அந்த உதவியை வழங்க வந்துள்ளேன்”** என்று கூறினார்.

"நீங்கள் உண்மையிலேயே அவ்வாறு செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்," திருமதி ஸ்காட் கூறினார். "கடவுள் அனைத்திற்கும் அனைவருக்கும் ஆதரவாக, ஆதாரமாக இருக்கிறார். ஆனால் அதை உணர்ந்து, வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்."

**“அந்த இலக்கை நோக்கிச் செல்ல நான் உங்களுக்கு உதவுவேன்”** என்று பாபா உறுதியளித்தார்.

"நான் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்," என்று அவர் பதிலளித்தார்.

எகிப்திய நாட்டின் தூதர் ஒருவர் பாபாவிடம், "எந்த வகையான பிரார்த்தனை சிறந்தது?" என வினவினார்.

"**அன்பு**" என்று பாபா ஒரே வார்த்தையில் பதிலளித்தார்.

போலந்து தேசத்தின் பியானோ கலைஞரான ஆர்தர் ரூபின்ஸ்டீன் (ARTHUR RUBINSTEIN - **46**), மற்றும் அவரது இளம் மனைவி நெலா (NELA - **25**), இருவரும் ஹெர்பெர்ட் டேவியின் நண்பர்கள்; அக்டோபர் **14**ஆம் நாள் பாபாவை சந்திக்க வந்தனர். "**எல்லையில்லா இறைவனை வெளிப்படுத்தும் ஓர் ஊடகம் இசை**," என்று பாபா ரூபின்ஸ்டீனிடம் கூறினார், "**ஆன்மீகம் இதயத்தைத் தொடுவதால், இசைக்கலைஞர்கள் ஆன்மீகத்தை அதிகம் நாடுகிறார்கள்**." ரூபின்ஸ்டீன் ஒரு யதார்த்தவாதி, ஆனால் அவரது யூத பாரம்பரியத்தில் பெருமிதம் மிக்கவர், யூதர்களுக்குத் தனிப்பட்ட கடவுளை வணங்கும் பாரம்பரியம் இல்லை என்று குறிப்பிட்டார். ஆயினும்கூட, ரூபின்ஸ்டீன் தாராளமாகத் தனது வீட்டைப் பயன்படுத்தி, பாபாவுடனான ஒரு கூட்டத்தை நடத்த முன்வந்தார். குயின்ஸ் ஹாலில் ஒரு இசை நிகழ்ச்சிக்கு அவர் பாபாவிற்கு இரண்டு டிக்கெட்டுகளையும் வழங்கினார்; அங்கு அவரது நண்பர் ஸர் ஹென்றி வூட் (SIR HENRY WOOD) பாரம்பரிய இசை நிகழ்ச்சியை நடத்தினார். பாபா ரூபின்ஸ்டீனின் வீடு, அவர் அளித்த டிக்கெட்டுகள் இரண்டையும் பயன்படுத்தவில்லை.

ஆர்வமுள்ள பிற நபர்களை சந்தித்த பின்னர், அன்று மதிய வேளையில் பாபா மீண்டும் 'கியூ' தியேட்டருக்கு ஒரு மாறுபட்ட நிகழ்ச்சியைக் காணச் சென்றார். அன்றிரவு, பாபா ஹைஜியா ஹவுஸில் வாழும் (பெரும்பாலும் இந்தியர்கள்) மக்களை சந்திக்க ஒப்புக்கொண்டார், ஆனால் அவர் கேள்விகள் எதுவும் எழுப்பாமல் கைகளை மட்டும் குலுக்க வேண்டும் என்று கூறி இருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில், அனிதா விரும்பிய ஒரு பார்சி தொப்பியைக் கொடுத்ததற்காக, பாபா, ஆதி ஜூனியரைக் கடுமையாகக் கண்டித்தார். எவருக்கும் எதையும் கொடுக்க வேண்டாம் என்ற பாபாவின் உத்தரவுக்கு இது முற்றிலும் முரணானது. அனிதா தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதும், பாபா அவரை மன்னித்தார்; ஆனால் ஆதியைப் பிறர் முன்னிலையில் இத்தகைய வார்த்தைகளால் தாக்கியது அவர் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

'ஸெயின்ட் பார்த்தலோமெவ்' (ST. BARTHOLOMEW'S HOSPITAL) மருத்துவமனையின் மருத்துவ மாணவராகப் பயின்று வரும் வில்லியம் டான்கின் (WILLIAM DONKIN - **22**), கடந்த வருடம் ஸஹாரா (SAHARA) பாலைவனம் முழுவதும் ஒட்டகத்தில் பயணம் மேற்கொண்டார்; வாழ்க்கையின் நோக்கத்தைத் தேட அவரை அறியாமலேயே உள்ளூர ஈர்க்கப்பட்டார்.

டான்கின் 'ஆன்மீக சிகிச்சை முறை'யிலும் அதீத ஆர்வம் கொண்டிருந்தார்; மேலும், தியானம், தன் வயப்படுத்தும் வசீகர சாஸ்திரம், காந்தங்களின் பயன்பாடு ஆகியவற்றின் மூலம், வலியைக் குறைப்பதற்கான பல்வேறு அணுகுமுறைகளை ஆராய்ந்து, லண்டனில் பல மையங்களுக்கு விஜயம் செய்தார்.

மெஹர் பாபாவைப் பற்றிய செய்திகளை வெளியிட்ட 'தி அக்கல்ட் ரிவியூ' (THE OCCULT REVIEW) பத்திரிகை மூலமாக வில்லியம் டான்கின் முதன் முதலில் அவரைப் பற்றி கேள்விப்பட்டார். ஹாரி ஸ்ட்ரட்டனைத் (HARRY STRUTTON) தொடர்பு கொண்டு, டான்கின், சாரிங் கிராஸில் (CHARING CROSS) பாபாவிற்காக அர்ப்பணிக்கப்பட்ட அலுவலகத்தைப் பற்றி அறிந்து கொண்டார், அங்கு அவர் வில் பேக்கெட் மற்றும் பலரை சந்திக்க நேர்ந்தது.

மெஹர் பாபா லண்டனில் இருப்பதைக் கேள்விப்பட்ட டான்கின், அவரைப் பார்க்க வந்தார். இந்தக் குறிப்பிட்ட இளைஞரை சந்தித்ததில், பாபா மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதோடு, **"இந்தியாவில் என்னைப் பின்பற்றும் ஓர் இளைஞர் மருத்துவம் படித்து வருகிறார். நான் அவரை ஒரு மருத்துவர் ஆகுமாறு கேட்டுக் கொண்டேன். அவருடைய மருத்துவ படிப்பு முடிந்ததும், என்னுடன் வந்து இணைய உள்ளார். ஆஷ்ரம வளாகத்தில் ஒரு பெரிய மருத்துவமனை திறக்கப்படும், ஆனால் அறுவை சிகிச்சையில் தேர்ச்சி பெற்ற மற்றுமொரு மருத்துவர் எனக்குத் தேவைப்படுகிறார்"** என்றார். டான்கின் உடனே, "நான் செயின்ட் பார்த்தலோமெவ் கல்லூரியில் மருத்துவம் பயின்று வருகிறேன். நான் அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற வேண்டுமா?" என்று வினவினார்.

**"அது நன்றாக இருக்கும்,"** என்று பதிலளித்து பாபா, **"நீங்கள் விரும்பினால் அதைக் கற்றுக்கொள்ளுங்கள்"** என்றார்.

"அறுவை சிகிச்சை மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. நான் நிச்சயமாக அதைக் கற்றுக் கொள்வேன்" டான்கின் பதிலளித்தார்.

மெஹர் பாபா, டான்கினின் நோக்கத்தைப் பாராட்டினார். டான்கின் அறையை விட்டு வெளியேறும்போது, கதவு கைப்பிடியின் மீது கையை வைத்ததும், மின்சாரம் பாய்வது போன்ற திடீர் அதிர்ச்சியை உணர்ந்தார். அந்த கணத்தில், 'மெஹர் பாபா கடவுள் என்று நான் அறிந்து கொண்டேன்' என்று பின்பு தெரிவித்தார். குருநாதரை சந்தித்த அடுத்த ஒரு வாரத்திற்கு, இந்த இளைஞர் தொடர்ந்து தெய்வீக அனுபவங்களை அடையப் பெற்றார். அவர் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார், எங்கும் எதிலும் பாபாவைப் பார்த்தார்.

இந்த ஆனந்த நிலை மிகவும் ஆழமானது, அதை அனுபவிக்க மட்டுமே முடியும், வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆனால், அந்த அனுபவம் வில்லியம் டான்கினை மெஹர் பாபாவின் பாதங்களில் கொண்டு வந்தது, ஏனெனில் அவர் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மண்டலியில் ஒரு நிரந்தர உறுப்பினரானார்.

1933 அக்டோபர் 15ஆம் நாள், மெஹர் பாபாவுடனான சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு தம்பதியர், தற்போதைய உலக நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பினர். பாபா எழுத்துப்பலகை வழியாக இவ்வாறு தெரிவித்தார்: **"போருக்கான அனைத்து அறிகுறியும் உள்ளது. ஒருவேளை, தவிர்க்கப்பட்டால், உலகில் அதிக குழப்பம் விளையும். எனவே,**

**வேறுவிதமாகக் கூறினால், குழப்பமான சூழ்நிலைகள் தவிர்க்க முடியாதவை. அது நித்திய அமைதியின் கட்டத்தை அடைய வேண்டும். அதைத் தூண்டும் தீப்பொறி ஒரே ஆண்டில் தயார் நிலைக்கு வந்து, ஒன்றரை ஆண்டுகளில் முழு வீச்சில் செயல்படத் தொடங்கி, இரண்டு ஆண்டுகள் நீடிக்கும். அந்த நாடகத்தில் நான் ஒரு முக்கிய பங்கை வகிக்க வேண்டும்.**"

பாபா, தயாரிக்க விரும்பிய திரைப்படத்திற்கு, நிதி உதவி வழங்கிய எல்ஸி ஹென்றி டோம்வில் (ELSIE HENRY DOMVILLE) என்பவரிடம், பாபா படைப்பைப் பற்றி பேசினார்: "**நீங்கள் பார்க்கும் இந்தப் படைப்பு, என்னிடமிருந்து வெளிவந்துள்ளது, மிகச்சிறிய புள்ளியிலிருந்து பரந்து விரிந்த உலகளாவிய பரப்பு வரை, அது வியாபித்திருக்கிறது. படைப்பு என்பது இரண்டு பொருட்களால் ஆனது: ஒன்று 'இடம்', மற்றொன்று 'சக்தி'. அந்தப் படைப்பின் மையத்திற்கு நீங்கள் திரும்பிச் செல்லும்போது, அங்கு வான்வெளி கூட இருக்காது. இடம், சக்தி, நேரம் எதுவும் இல்லை. இந்தப் புள்ளியைக் கடந்து, அதன் உண்மையான உருவில் எல்லையற்ற பொருள் ஒன்று உள்ளது. அதுதான் பாபா. 'அப்பாற்பட்ட' நிலையிலிருந்து, மிகச்சிறிய புள்ளி வழியாக வெளிவந்த இந்தப் படைப்பைப் பாருங்கள். அதைப் பார்க்கும் நிலை என்பது 'நான்காவது பரிமாணம்'** (FOURTH DIMENSION) **ஆகும்.**"

அக்டோபர் 16ஆம் நாள், பாபா 22 பேர் அடங்கிய ஒரு பெரிய குழுவுடன் மதிய உணவுக்காக கோஹினூர் (KOHINOOR) உணவகத்திற்குச் சென்றார். பிற்பகலில் பாபா தனது எதிர்கால திட்டங்களை, கிட்டி மற்றும் சில நெருங்கிய அன்பர்களுடன் விவாதித்தார். இந்திய கப்பல் வைஸ்ராயில் மார்ஸெல்லஸ் வழியாக இந்தியா செல்ல பாபா விருப்பம் தெரிவித்தார், "**எனது பணிக்காக, நான் ஸ்பெயின் நாட்டிற்கு விஜயம் செய்ய வேண்டியது அவசியம்.**" எளிதாக முடியுமானால், தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு கிட்டிக்கு அறிவுறுத்தப்பட்டது.

மெஹர் பாபா, கிம் டோல்ஹர்ஸ்டின் வீட்டிற்கு அன்று மதியம் சென்றார். பின்பு, லண்டனைச் சுற்றி வரும் வேளையில், கிம் சம்பந்தப்பட்ட ஒரு தீவிரமான சம்பவம் நிகழ்ந்தது. கிம் ஏதோவொன்றை நினைத்து மிகவும் வருத்தத்துடன் இருப்பதாகத் தோன்றியது. பாபா, சாஞ்சி, கிட்டி, மார்கரெட், கிம் ஆகியோர் சாலையில் நடந்து கொண்டிருந்த வேளையில், எதையோ மனதில் நினைத்துக்கொண்டு கிம் வேகமாகப் போக, அனைவரும் பின்தொடர்ந்தனர். அருகாமையில் நின்ற காரில் ஏறி கிம் சென்றதும், பாபாவும் இதர நண்பர்களும் தொடர்ந்து சென்றனர். கிம்மை ஏற்றிச் சென்ற கார், நேராக பிக்காடில்லி சர்க்கஸுக்கு (PICCADILLY CIRCUS) அருகில் அமைந்த, 'ஸ்காட்டிஷ் டீ ஷாப்' (SCOTTISH TEA SHOP) அருகில் நின்றது. கிம்மை அழைத்து வர பாபா, கிட்டியை அனுப்பினார்,

ஆனால் கிம் வெளியே வர மறுத்துவிட்டார். இது பாபாவின் பேச்சை வேண்டுமென்றே மீறியதால், பாபா உடனே திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார்: "**கிம் இந்த வாழ்க்கையில் என்னை மறுபடியும் ஒருபோதும் பார்க்க மாட்டார்**" என்று பாபா எழுத்துப்பலகை வழியாகத் தெரிவித்தார்.

அன்று மாலை செல்ஸீ (CHELSEA) 23, ஜூபிலி பிளேஸ், கிங்ஸ் சாலையில் (JUBILEE PLACE, KING;S ROAD) அமைந்த கவுண்டஸ் பஹ்லனின் (COUNTESS PAHLEN) இல்லத்தில் இரவு உணவிற்காக பாபா அழைக்கப்பட்டார்; அவருடன் ஹெர்பெர்ட், கிட்டி, விவியென், குயன்டின், எலிஸபெத், நோரினா, ஸ்டீஃபனி, சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர் ஆகியோர் உடன் சென்றனர். நாடுகடத்தப்பட்ட 'ரஷ்ய ராயல்ட்டி'யைச் (RUSSIAN ROYALTY) சேர்ந்த அவரது நண்பர்கள் சுமார் பதினைந்து பேரும் விருந்தில் கலந்து கொண்டனர்.

அடுத்த நாள் பாபா வெளியளவில் வேறு எதிலும் ஈடுபடாமல் அமைதியாக இருந்தார்; மேலும் அவரது அன்பர்களுடன் நெருக்கமாகப் பொழுதைக் கழித்தார். அனைவரும் மதியம் இரண்டு முதல் ஐந்து மணி வரை, பாபாவைச் சுற்றி அமைதியாக அமர்ந்திருந்தனர். அப்போது பாபா, அவர் இருக்கும் அபூர்வ நிலையில், '**மிக உயர்ந்த இறைநிலையிலிருந்து மிகவும் சாதாரண நிலைக்கு வரும்போது, அதீத துன்பங்களை அனுபவிக்க நேரும்**' என்று குறிப்பிட்டார்.

பாபா மீண்டும் ஸ்பெயின் நாட்டிற்குச் செல்வது குறித்து பேசினார், அவர் அங்குச் செல்ல வேண்டியது அவசியம் என்று மீண்டும் வலியுறுத்தினார்: "**ஸ்பெயினுக்குச் செல்லும் பயணம் எளிதில் ஏற்பாடு செய்யப்பட்டால், நான் ஒரு வாரத்திற்கு மட்டும் செல்ல விரும்புகிறேன்; அதன் பின்னர், உடனடியாக மார்ஸெல்லஸ் வழியாக இந்தியாவிற்குத் திரும்புவேன்.**"

அக்டோபர் 17ஆம் நாள் மாலை 'பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ்' (PRINCE OF WALES) தியேட்டரில் நடந்த ஒரு 'வாட்வில் நிகழ்ச்சி'க்கு (VAUDEVILLE SHOW) பாபா அழைக்கப்பட்ட போது, அங்கு அவர் சில அன்பர்களுடன் சென்றார். அங்குச் செல்வதைப் பற்றி பாபா மறுபடியும் தீர்மானிக்க வேண்டும் என்று பலர் கருத்து தெரிவித்தாலும், பாபா அங்குச் செல்வதற்கு ஒரு சிறப்பு காரணம் இருந்தது; அவரை அன்பாக அழைத்த நபருடன் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதே பாபாவின் நோக்கம்.

அவதார புருஷர் அவரது பணியைச் செய்ய பூமியில் வருகிறார்; முழு உலகமும் அவருக்கு எதிராக இருந்தாலும் அவர் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை; பிரபஞ்சத்தில் அவரது பணியைத் தவிர வேறு எதிலும் அவர் கவனம் செலுத்துவதில்லை. பாபா தியேட்டரில் சிறிது நேரம் அமர்ந்து, ஒரு நடனத்தைப் பார்த்த பின்பு வெளியேற முடிவு செய்தார்.

மெஹர் பாபா, அக்டோபர் 18 பிற்பகலில், கிம்கோ குழுவுடன் ஒரு தனிப்பட்ட நேர்காணலை நடத்தினார். சார்லஸ் பர்டம் (CHARLES PURDOM)

பாபாவின் வாழ்க்கையைப் பற்றி சாஞ்சி, ஹெர்பெர்ட் ஆகியோருடன் விளக்கமாகக் கலந்துரையாடினார்; அவர் எழுதத் திட்டமிட்டிருந்த ஒரு புத்தகத்திற்கான ஆரம்பப் பயணம் இது. இரவில், பாபா, 'மார்கரெட் & மேபெல்' (MARGARET & MABEL) இருவரும் நடத்தி வந்த நடன ஸ்டுடியோவைப் பார்வையிடச் சென்றார், அங்கு மார்கரெட், பாபாவுக்காக நடனமாடி ஒரு குழந்தையைப் போல் அழுதார்.

நான்னி (NONNY) என்று அழைக்கப்படும் எஸ்டெல் சி. கெய்லி (ESTELLE C. GAYLEY), ஒரு முக்கிய நியூயார்க் வழக்கறிஞரின் மனைவி, விதவையாக இருந்தார்; அப்போது அவருக்கு 58 வயது. அவரது மகள் ரானோ (RANO), நியூயார்க் நகரில் 'ஆடைகள் வடிவமைப்பு' துறையில் சில ஆண்டுகள் பணியாற்றிய ஒரு கலைஞர். கடந்த கோடையில் பாரிஸ் நகரில் மெஹர் பாபாவைப் பற்றி, அவர்கள் தங்கள் நண்பர் ருவானோ மற்றும் குயன்டின் மூலமாக அறிந்து கொண்டனர்; மேலும் அவர்கள் அமெரிக்கா திரும்பியதும், பாபாவை அங்கு சந்திக்க எதிர்பார்த்து காத்திருந்தனர். ருவானோ இப்போது பாபாவுடன் லண்டனில் இருந்தார், பாபாவின் திட்டங்களில் ஏற்பட்ட மாற்றத்தை நான்னி, ரானோ இருவருக்கும் தெரிவித்ததும், அவர்கள் உடனடியாக லண்டனுக்குப் புறப்பட்டு வந்தனர்.

லண்டன் வந்தடைந்ததும், பாபா எங்கு இருக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பது அவர்களுக்கு சிரமமாக இருந்தது. ருவானோவின் முகவரிக்குத் தொலைத்தந்தி அனுப்பியும் பதில் எதுவும் வரவில்லை. "பாபா எங்கே? பாபா எங்கே?" என்று நினைத்து, தாயும், மகளும் ஒருவரையொருவர் ஆறுதல்படுத்தினர்; பின்னர் அவர்கள் இருவரும் ஒரு ஹோட்டலுக்குச் சென்று தங்கினர்.

ருவானோவின் முகவரி மூலமாக, ரானோ ஆங்கில தொலைபேசி ஒன்றியத்தைத் தொடர்பு கொண்டு, ருவானோவின் தொலைபேசி எண்ணைப் பெற்றுக்கொண்டார். பின்னர் அன்று மதியம் நான்கு மணிக்கு தாயும், மகளும் பாபாவை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

நான்னி, ரானோ இருவரும் குருநாதரை சந்திக்கும் ஆர்வத்தில் இருந்தனர்; இருப்பினும், ரானோவின் மனதில் அலைபாய்ந்த எண்ணம் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது: "அவர் எத்தகைய குருநாதர்? அவர் எங்கள் நம்பிக்கையை அறிந்திருக்கிறாரா? அவரைப் பார்க்க நாங்கள் ஏங்குகிறோம், ஆனாலும் அவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை..."

அக்டோபர் 18ஆம் நாள் மாலை நான்கு மணி, நான்னியும் ரானோவும் அவர்களின் பிரியமான பாபாவை சந்திக்க ஹைஜியா மாளிகையில் நுழைந்தனர். ருவானோ அவர்களை வரவேற்று, பாபா மிகவும் களைப்பாக இருக்கிறார், இப்போது அவர் உங்களைப் பார்க்க முடியாது என்று அனுதாபத்துடன் கூறினார். தாயும், மகளும் அமைதியாக இருந்தனர். ஏமாற்றமடைந்த இருவரும் நோரினா, எலிஸபெத் மற்றும் கிம்கோ குழுவை சந்திக்க அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் பாபாவைப் பற்றி பேசிக் கொண்டிருந்த வேளையில், அவரிடமிருந்து ஒரு செய்தி வந்தது: **“நீங்கள் இவ்வளவு தொலைதூரத்திலிருந்து வந்திருப்பதால், நான் உங்களைப் பார்க்கிறேன். ஆனால் நீங்கள் எதுவும் கேட்கவோ, என்னுடன் பேசவோ கூடாது. என்னைப் பார்த்த பின்பு நீங்கள் வெளியே சென்றுவிட வேண்டும்.”**

பாபா முதலில் தாயார் நான்னியை அழைத்தார். ரானோ பதற்றத்துடன் வெளியே காத்திருந்த போது, அவர் மனம் வேறுவேறு எண்ணங்களால் வேகமாக அலைபாயத் தொடங்கியது. கதவை மெதுவாகத் திறந்து நான்னி வெளியே வந்தார் - அவருடைய கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தன. ரானோ அதிர்ச்சியடைந்தார், ஏனெனில், அதுவரை உணர்ச்சிகளுக்கு வழிவகுத்த எந்தவொரு நபரையும் ‘முட்டாள்தனமான முறையில் உணர்ச்சிவசமிக்கவர்’ என்று கருதினார், மேலும் அவரது தாயாருக்கு என்ன நடந்தது என்று புரியவில்லை.

பின்பு பாபா, ரானோவை உள்ளே அழைத்தார். இந்த முதல் சந்திப்பை அவர் ஒரு முறை விவரித்த விதம் கீழே வருமாறு:

எனக்குத் தெரியாத ஒருவரை சந்திக்கும் எண்ணத்தில், அமைதியற்ற பல மணிநேரங்களை நான் செலவிட்டேன்; இன்னும் சில விசித்திரமான வழியில், நான் ஈர்க்கப்பட்டேன். அந்த நேரம் வந்தது. நான் அறைக்குள் நுழைந்தும், சுற்றியுள்ள அனைத்தும் மறைந்ததுபோலத் தோன்றியது. நான் பார்த்த அனைத்தையும், அவருடைய அழகின் வெளிப்பாட்டையும் வார்த்தைகளால் விளக்க முடியாத வண்ணம் இருந்தது. அவர் என்னை மிகவும் மென்மையுடனும், தயவுடனும் பார்த்தது, எனது நினைவில் அழியாமல் பதிந்தது. அப்போது, நான் மீண்டும் மெஹர் பாபாவைப் பார்க்கமுடியாவிட்டாலும், அவர் என் இதயத்தில் ஆழமாக பதிந்தது, என்றென்றும் என்னுடன் இருக்கும் என்பதை நான் அறிந்தேன்.

எனது வாழ்க்கையில் இவ்வளவு அழகான ஒருவரை நான் இதுவரை பார்த்ததில்லை. பாபா அனைத்திற்கும் மொத்த உருவம் என்பதை நான் உணர்ந்தேன். விவரிக்க முடியாத அன்பும், இரக்கமும் படைத்தவர் என்பதையும் அறிந்தேன்.

இன்றுவரை, அந்த அறையில் வேறு யார் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது; தெளிவற்ற சில விவரங்கள் மட்டுமே இருந்தன; ஆனால் தெளிவாக அவர்கள் மத்தியில் நான் பார்த்த மிக அழகான வெளிப்பாட்டுடன் மெஹர் பாபா அமர்ந்திருந்தார். இனிமை, அன்பு - அழகாக இருந்த அனைத்தும் - அவர் முகத்தில் இருந்தது. யாரோ ஒருவர் என்னை அறையிலிருந்து அகற்றும் வரை நான் அவரைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

அதன் பின்பு, ரானோ, நான்னி இருவரும் ருவானோவுடன் நடந்ததை விளக்கிக் கொண்டிருந்த வேளையில், விவியன் கீஸன் ‘நடனமாடி காற்றில் மிதந்தது போல’, "ரு..வா..னோ...! உங்களை பாபா அழைக்கிறார்" என்று வியக்கத்தக்க முறையில் பாடிக்கொண்டே அங்கு வந்தார். ருவானோ உடனே

அவசரமாக அறையிலிருந்து விரைந்தோடினார்; ரானோ, நான்னி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து வியந்தனர். விவியனின் நாட்டியத்தில் அவர்கள் அக்கறை காட்டவில்லை; ஆனால், பாபாவின் அழைப்பை ஏற்று, ருவானோ விரைந்ததைக் கண்டு தமக்குள்ளே ஆச்சரியமடைந்தனர்: "நாங்கள் எங்கே மாட்டிக்கொண்டோம்?" ருவானோ யாருடைய அழைப்பையும் அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்வதில்லை; அங்கு நடந்த அனைத்தும் சற்று விசித்திரமாகத் தோன்றியது.

ருவானோ திரும்பி வந்ததும், "நீங்கள் இருவரும் நாளை காலையிலிருந்து, எங்களுடன் ஹைஜியா ஹவுஸில் தங்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார்" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தாயும், மகளும் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றனர். இருவரும் தங்கள் வாழ்க்கையின் மிக நீண்ட நெடிய இரவில் பாபாவைத் தவிர வேறு எதையும் நினைக்க முடியவில்லை. அவர்கள் மறுநாள் காலையில் ஹைஜியா ஹவுஸுக்குச் சென்று பாபாவின் அருகில் இருக்கத் தொடங்கினர். இருவரின் விதியும் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்டது.

மெஹர் பாபா, நான்னியிடம் மிகவும் அன்பாக இருந்தார், அதேவேளையில், அவருக்கே தெரிந்த காரணத்திற்காக பாபா, ரானோவை சற்று தூரத்தில் வைத்திருந்தார். பாபா வெளியளவில் அவரிடம் அவ்வாறு நடந்து கொண்டாலும், இதயத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். பல்வேறு சந்தர்ப்பங்களில், பாபா, ரானோவைத் தவிர பிற அனைவருடனும் திரைப்படம் பார்க்கச் செல்வதும், அல்லது ரானோ அவர்களுடன் சென்றாலும், தனியாகப் பயணம் மேற்கொள்வதும், ரானோ தூரத்திலிருந்து மட்டுமே பாபாவைப் பார்ப்பதும் வழக்கமாக நடந்து வந்தது. அன்பருக்கும், அன்பிற்குரியவருக்கும் இடையிலான நாடகக் களிப்பு, மகிழ்ச்சி மற்றும் துக்கம் இவற்றின் மூலம் மட்டுமே அனுபவிக்கப்படுகிறது - இது பிரியமானவரின் விளையாட்டுத்தனமான தன்மையிலிருந்து வருகிறது.

ரானோ பாபாவிற்குச் சொந்தமானவர்; மேலும் அவரது வட்டத்தில் உறுப்பினராக விதிக்கப்பட்டவர். ரானோவின் இடத்தில் இன்னொருவர் இருந்திருந்தால், பாபா நடத்தும் நாடகப் போக்கைக் கண்டு, தூரத்தில் விலகி இருந்திருப்பார்; ஆனால் அன்பான குருநாதர், தனக்கு உரியவருடன் ஓர் இணக்கமான தொடர்பை உருவாக்கி, அவர் யாரை அவர் அருகில் வைத்திருக்க விரும்புகிறாரோ அவரோடு மட்டுமே பழகுகிறார். ருவானோ, டிலியா, எலிஸபெத், கிட்டி, மார்கரெட், நோரினா, நதீன், ஹெடி மெர்டென்ஸ் ஆகியோரைப் போலவே நான்னியும், ரானோ கெய்லியும் பிரியமானவரின் தோட்டத்தில் நிரந்தர மலர்களாக மாறினர்.

**1933**, அக்டோபர் **19**ஆம் நாள் குயன்டின் டாட் **1920** ஆண்டுகளின் பிரிட்டிஷ் இசை நாடகங்களில் மிகவும் பிரபலமான நபர்களில் ஒருவரான, 'ஐவர் நொவெல்லோ'வை (IVOR NOVELLO) அழைத்து வந்தார். நொவெல்லோ,

பாபாவைப் பார்த்ததும், சிறிது நேரத்தில் ஆழ்ந்த எண்ணங்களில் மூழ்கி கண் கலங்கினார். "**நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். ஒன்றை உணர்ந்து கொள்பவருக்கு, சொற்களும் விளக்கங்களும் தேவையில்லை. உங்களுக்கு நல்ல இதயம் உள்ளது**" என்று பாபா அவரிடம் கூறினார்.

நொவெல்லோ, பாபாவின் வலது கையில் தலையை வைத்து, உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்டது போலத் தோன்றினார். நொவெல்லோவின் இயல்பு மிகவும் அன்பானது என்று குயன்டின், பாபாவிடம் கூறினார் - புகழ் வாய்ந்தவராக இருந்தபோதிலும் அவர் எப்பொழுதும் பிறருக்கு உதவும் பண்புள்ளம் கொண்டவர். அதற்கு பதிலளித்த பாபா, "**நான் ஆதிகால புருஷன். அவர் எனக்குச் சொந்தமானவர், எப்போதும் எனக்குத் தெரியாமல் பணிபுரிகிறார். ஆனால் ஒரு நாள் அவர் அனைத்தையும் அறிவார்.**"

நொவெல்லோ சென்ற பிறகு, பாபா, "**அவர் என்னுடையவர்**" என்று குறிப்பிட்டார்.

மெஹர் பாபா, சார்லஸ் (CHARLES) என்ற கலைஞரின் ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்து, ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் அவருடைய உருவப்படத்தை வரைவதற்காக அமர்ந்திருந்தார். மின்டாவும் பாபாவுடன் சென்றார். குயன்டினின் சகோதரி மற்றும் சார்லஸ் பர்டமின் மனைவி லிலியனும் பாபாவை சந்திக்க வந்தனர்.

குயன்டினின் சகோதரர் மால்கம், பாபாவிற்கு அறிமுகமான வேளையில், அவர் கத்தோலிக்க மதத்தில் அதீத ஈடுபாடு உள்ளவர் என்று குறிப்பிட்டார், ஆனால் கத்தோலிக்கத் திருச்சபை, கிறிஸ்துவின் பணியை வணிகமயமாக்கி, மக்களை அவருடைய போதனைகளிலிருந்து திசைதிருப்பி வழிநடத்துகிறது என்று கூறி முடித்தார். பாபா அதைப்பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "**எல்லா இடங்களிலும் மதங்களின் நிலை இதுதான்**" என்றார்.

ஒரு பிரபலமான நாவலாசிரியரிடம், பாபா, "**நான் எப்பொழுதும் நிலையான மகிழ்ச்சியில் இருக்கிறேன், இந்த மகிழ்ச்சியை பிறருக்கும் வழங்குவதே எனது ஒரே நோக்கம்**" என்று கூறினார்.

அன்று இரவு அனிதாவின் பிறந்தநாள் விழா பாபா முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

வில் & மேரி பேக்கெட் (WILL & MARY BACKETT) இருவரும் பாபாவை மிகவும் நேசித்தனர், மேலும், மெஹர் பாபா அவர்களிடமும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். இந்தத் தம்பதியினர் பாபாவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பினர், ஆனால், அவர்கள் அதைப் பற்றி பாபாவிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. அக்டோபர் 19ஆம் நாள், பாபா எதிர்பாராத விதமாக அவர்களிடம், "**நான் நாளை உங்கள் இல்லத்திற்கு வருகிறேன், நீங்கள்**

**அனைவருக்கும் தேநீர் பரிமாற வேண்டும்**" என்று குறிப்பிட்டார். இதைக் கேட்டு இருவரும் மிகுந்த மகிழ்ச்சியும், கவலையும் அடைந்தனர், ஏனெனில் பாபாவின் குழுவில் சுமார் 30 பேர் இருந்தனர், மேலும் பேக்கெட்டின் சிறிய குடிசையில் மூன்று அல்லது நான்கு நாற்காலிகள் மற்றும் சமமான எண்ணிக்கையிலான தேநீர் கோப்பைகள் மட்டுமே இருந்தன. இவ்வளவு குறுகிய நேரத்தில் அனைத்தையும் எப்படி ஏற்பாடு செய்வது என்று மனதில் நினைத்துக் கொண்டு, அனைவருக்கும் அமர இடமளிக்க முடியுமா என்ற அச்சத்தில் ஆழ்ந்தார்கள்.

அவர்களிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல், மறுநாள் காலையில் அனைவருக்கும் பொதுவாக அறிவித்ததன் மூலம், பாபா அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார், "**நாம் அனைவரும் இன்று வில் மற்றும் மேரியின் இல்லத்திற்குத் தேநீர் அருந்தப் போகிறோம். ஒவ்வொருவரும் ஒரு கப்-ஸாஸரை எடுத்து வர வேண்டும், மேலும் நாம் அனைவரும் அங்குச் சென்று, தரையில் அமர வேண்டும்.**" இறைவனின் இத்தகைய இரக்கமிக்க, புரிந்து கொள்ளும் தன்மையை நினைத்து வில், மேரி இருவரின் இதயங்களும் அன்பால் ஆட்கொள்ளப்பட்டன.

கென்ட் (KENT) நகரின் ஸெவனோக்ஸ் (SEVENOAKS) அருகே ஹால்ஸ்டெட்டில் (HALSTEAD) அமைந்த பேக்கெட்டின் இல்லமான ஓல்ட் ஓக் காட்டேஜுக்கு (OLD OAK COTTAGE), பாபாவும் குழுவும் 20 மைல் தூரம் பயணம் செய்தனர். அவர்களின் குடிசை ஒரு பள்ளத்தாக்குக்கு மேலே சிறியதொரு மலையில் கட்டப்பட்டது. பாதை மிகவும் கடினமானதாகவும், செங்குத்தானதாகவும் இருந்ததால், பள்ளத்தாக்கின் வெகு தொலைவில் காரை நிறுத்த வேண்டியிருந்தது. அனைவரும் இறங்கி நடந்தனர். வழியில் பாபா இரண்டு குழந்தைகளை சந்தித்து, அவர்களை அன்புடன் ஆசீர்வதித்தார்.

பாபா குடிலின் ஒவ்வொரு அறையிலும் சென்று, அவற்றை கவனமாக உற்று நோக்கினார். "**இது எனது இல்லம்**" என்று எழுத்துப்பலகையில் உச்சரித்தார். தேநீர், கேக், வீட்டில் தயாரிக்கப்பட்ட ரொட்டி மற்றும் ஜாம் வழங்கப்பட்டது. பாபா மிகக் குறைவாகவே உண்டு, சிறிதளவு தேநீர் அருந்தினார். ஓர் இனிமையான மாலைப்பொழுதில், சுவாரஸ்யமான பிற்பகலுக்குப் பிறகு, பாபாவை லண்டன் நகருக்கு அழைத்துச் சென்றனர்.

தொடர்ந்து, வில், பாபாவிற்கு இவ்வாறு எழுதினார்: "உங்களின் கண நேர அழகு பார்வை எங்களுக்குக் கிடைத்தாலும், நீங்கள் வழங்கியதை இப்போது எங்களால் முழுமையாக உணர முடியவில்லை. நான், உங்கள் அன்பான கரங்களில் ஆனந்தம் மற்றும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கும் ஒரு குழந்தை, மேலும் உங்களின் சக்தியும், தெய்வீக அழகும் என்னையும், அனைவரையும் அன்புடன் அரவணைக்கட்டும். உங்கள் அன்பில் எங்களை வளரச் செய்ததற்காக, நான் வார்த்தைகளின் சக்தியைத் தாண்டி மீண்டும் நன்றி கூறுகிறேன்."

அக்டோபர் 20 அன்று எலிஸபெத் நியூயார்க்கிற்குத் திரும்பிச் சென்றார். மெஹர் பாபா, லண்டனிலிருந்து புறப்படுவது பற்றிய பேச்சு தொடங்கியது. பிப்ரவரி மாதம் பாபாவின் பிறந்தநாளுக்காக இந்தியாவிற்கு மேற்கத்திய அன்பர்கள் - நான்னி, ரானோ, ருவானோ ஆகியோர் வருவதைப் பற்றி பாபா உறுதியளித்தார். விரைவில் நெருங்கிவரும் பாபாவின் பிரிவின் உணர்வலைகள் அனைவரையும் தாக்கியது; மனச்சோர்வில் அவர்கள் எஞ்சியுள்ள மணிநேரங்களைக் கணக்கிட்டு, எப்போதும் பாபாவின் அருகில் அமர்ந்திருக்க வேண்டும் என்ற ஏக்கம் அனைவரையும் ஆட்கொண்டது.

பாபா தனது அறையில் அவர்களுடன் கேலியும், கிண்டலும் செய்து பேசி, சில பாடல்களையும் கேட்டு ரசித்தார். அவருக்குப் பிரியமானவர்கள் தங்கள் இதயங்களில் ஊற்றிய தெய்வீக மதுரசத்தை ருசித்ததைப் பற்றி, சாஞ்சி தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார், "பேரின்பமான மௌனம் கணிசமாகப் பேசியது. சொர்க்கம் இதைவிட ஆனந்தமாக இருக்க முடியுமா? அவரது தெய்வீக சுகங்களை உணர்ந்து சுவைத்தவர்களிடம் கேளுங்கள்... மேய்ப்பரும் அவரது ஆட்டுக்குட்டிகளும். வரலாறு உண்மையில் மீண்டும் உருவெடுத்து வந்ததா?"

21 அன்று அக்பர் ஹைதரி, ஹைஜியா மாளிகைக்கு வந்து, பாபாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார், அங்கு அவரது மகன் அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஹைதரியை ஆறுதல்படுத்தி பின்பு, திரும்பி வந்து இதர அன்பர்களின் இல்லங்களுக்குச் சென்று, ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களின் தேவைகளில் கவனம் செலுத்தினார். டாம் ஷார்ப்லியும் அன்று பாபாவை சந்தித்தார்.

ஐவர் நொவெல்லோ பாபாவை, ‘புரோசீனியம்’ (PROSCENIUM) நகைச்சுவை நாடகத்திற்கு அழைத்திருந்தார், அதில் அவரும் ஒரு பங்கு வகித்தார். அன்று மாலை, பாபா, தனது குழுவுடன் குளோப் (GLOBE) தியேட்டரில் அந்த நாடகத்தைக் காணச் சென்றார்; நொவெல்லோ ராஜ பரம்பரையினருக்காக, சிறப்பாக அமைக்கப்பட்ட அறையில் பாபாவை அமர வைத்தார். நாடகத்தில் பங்கெடுத்த அனைவரும் நிகழ்ச்சியின் முடிவில் பாபாவிற்குத் தலை வணங்கினர், மேலும் நொவெல்லோ பாபாவின் அரவணைப்பைப் பெற, சிறப்பு அறைக்குச் சென்றார். அதன் பின்பு, நொவெல்லோ, நடிகைகள் ஜீனா டேர் (ZENA DARE) மற்றும் அவரது தங்கை ஃபிலிஸ் (PHYLLIS) ஆகியோரை பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார். பாபா மீண்டும் இங்கிலாந்துக்கு வரும்போதெல்லாம், தனது இல்லத்தில் வந்து தங்குமாறு அன்பான அழைப்பை விடுத்தார்.

லண்டனில் பாபாவின் கடைசி இரவு இது. ஹைஜியா மாளிகையில் அனைவரும் அவருடன் அமர்ந்திருந்து, புனிதமான மௌனத்தால் இதயங்களை நிரப்பினர்.

இந்த இங்கிலாந்து விஜயத்தின் போது, மெஹர் பாபா மீண்டும் அவரது மௌனத்தைக் கைவிடப் போவதாகக் குறிப்பிட்டார்; மேற்கத்திய அன்பர்களும் மிகுந்த ஆர்வத்துடன், ஒரு பெரிய மண்டபத்தை ஏற்பாடு செய்தனர். அன்றிரவு, பாபா அவர்களுக்கு விளக்கினார், "**இந்த நேரத்தில் நீங்கள் அனைவரும் என்னை மிகவும் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளதை நான் காண்கிறேன். உங்களை எண்ணி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அனைவரும் என்னுடன் நெருக்கமாகி விட்டீர்கள், எனது பணியின் முறைகளையும் வழிகளையும் நன்கு புரிந்து கொண்டீர்கள். ஆனால் நான் ஒரு பெரிய மண்டபத்தில், ஒரு திட்டவட்டமான தேதியில், மக்கள் கூட்டத்திற்கு முன்பாகப் பேசுவேன் என்று நீங்கள் உண்மையில் நினைத்தீர்களா? நான் எந்த எச்சரிக்கையும் வழங்காமல் எனது மௌனத்தைத் தொடங்கியது போல், அந்த வழியில் பேசவும் செய்வேன். யாருக்குத் தெரியும் அது எப்போது என்று! ஆனால், நான் பேசும்போது, நான் யார் என்பதை உலகம் முழுவதும் அறிந்து அங்கீகரிக்கும்.**"

சற்று நகைச்சுவை கலந்த தொனியில், பாபா ஒரு முறை நோரினாவிடம், "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, உங்கள் கண்கள் வெடிக்கும்!**" என்றார்.

பாபா புறப்படுவதற்கான ஏற்பாடுகள் 1933 அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தொடங்கியது. பாபா, கிம்கோ குழுவுடன் தனிப்பட்ட, சிறப்புமிக்க கூட்டு சந்திப்புகளை நடத்தினார். மேலும் ஹைஜியா ஹவுஸின் அனைத்து ஊழியர்களும் பாபாவுடன் கைகுலுக்க வந்தனர். பாபாவால் ஈர்க்கப்பட்ட, டோரதி என்ற வயதான 'அறை பணிப்பெண்மணி' தனது குழந்தைக்கு உதவுமாறு பாபாவிடம் வேண்டியபோது, அவர் அதைச் செய்வதாக உறுதியளித்தார். பாபா ஹோட்டலிலிருந்து காலை 11 மணிக்கு விடைபெற்றார்.

விக்டோரியா ரயில் நிலையத்தில், அவர் புறப்படுவதைத் தனிப்பட்ட முறையில் வைத்திருந்தாலும், அவரைப் பார்க்க சுமார் 30 பேர் கொண்ட ஒரு கூட்டம் காத்திருந்தது. ரயில் புறப்படும் வேளையில், அன்பர்கள் அனைவரும் கண்களில் நீர் ததும்ப விடைபெற்றனர். காலம் இதை இப்படி அறிவித்தது: "அவர் ஒருபோதும் வெளியில் எங்கும் செல்லாதவர்! இருந்தும், பறவைகள் தங்கள் இதயம் ஏதோ தொலைதூர இடத்திற்கு கொண்டு செல்லப்படுவதைப் போல் உணர்ந்தன. வாழ்க்கையில் பாபா இல்லாமல், எல்லாமே வெறுமையாக, வெற்றிடமாகத் தெரிந்தன."

குழுவில் ஒருவர், பின்பு, பாபாவிற்கு இவ்வாறு எழுதினார்: "ரயில் புறப்படும் வரை என்னால் அங்கு நிற்க முடியாமைக்கு வருந்துகிறேன். திடீரென நான் கதறி அழவேண்டும் என உணர்ந்ததால், நான் அங்கிருந்து விலகிச் செல்ல வேண்டியதாயிற்று. லண்டனில் நாங்கள் அனைவரும் உங்களுடன் ஒன்றாக இருந்த அறை அமைதியான மயானம் போலத் தோன்றியது. நான் எட்டிப் பார்த்தேன், ஆனால் விரைவாக ஓடிவிட்டேன். அது

எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது - ஒளிர்மிகும் உங்களைக் காணவில்லை என்பதால், நான் மீண்டும் உங்கள் அருகில் இருக்க நீங்கள் அனுமதிக்கும் அந்தத் தருணத்திற்காகக் காத்திருக்கிறேன்."

அனிதா, நோரினா, மின்டா, ஹெர்பெர்ட், குயன்டின், டாம் ஷார்ப்லி ஆகியோர் பாபா மற்றும் மண்டலியை வழி அனுப்பச் சென்றனர். கிட்டி அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தாலும், தனது தந்தையை கவனித்து, பியானோ வகுப்பைத் தொடரும் எண்ணத்தில் லண்டனில் இருந்தார்.

இங்கிலிஷ் கால்வாயில் (ENGLISH CHANNEL) பனிமூட்டமும், குளிரும் நிரம்பி இருந்தது, ஆனால் கடலில் கொந்தளிப்பு இல்லை. பின்னர் அனைவரும் 'கேலே' (CALAIS) ரயில் நிலையத்திலிருந்து 'கான்டினென்டல் எக்ஸ்பிரஸ்' (CONTINENTAL EXPRESS) ரயிலில் மாலையில் பாரிஸ் நகரம் வந்தனர்.

அனிதா, ஓட்டோ ஹாஸ்-ஹெயின் வடிவமைப்பு கலை பள்ளிக்கூடம் செல்லும் நோக்கத்தில், பாரிஸிலிருந்து ஸூரிக் நகரத்திற்கு விடைபெற்றுச் சென்றார்.



லண்டன், அக்டோபர் 1933
காக்கா, சாஞ்சி, பாபா, நோரினா, ஹெர்பெர்ட், ஆதி ஜூனியர்




ஸ்பெயின், அக்டோபர் 1933
இருண் (IRUN),
அவிலா (AVILA),
மாட்ரிட் (MADRID),
பார்சிலோனா (BARCELONA)




தபால் அட்டை - சாஞ்சியின் கையெழுத்து - மெஹர் பாபாவின் கையொப்பம்

# மாட்ரிட், பார்சிலோனா (ஸ்பெயின்) - மெஹராபாத் வருகை

**(Madrid, Barcelona – Spain & Return To Meherabad)**

குழுவின் பிற அனைவரும் 'பாரிஸ்-ஆர்லியன்ஸ் எக்ஸ்பிரஸ்' (PARIS-ORLEANS NIGHT EXPRESS) ரயிலில், சிறப்புப் பெட்டிகளில் பயணத்தைத் தொடர்ந்தனர். பிக்ஃபோர்டு (PICKFORD) பயண நிறுவனம் அனைத்து பயண விவரங்களையும் கையாண்டது. அக்டோபர் 23 காலை எட்டு மணிக்கு, பாபாவும் குழுவும் ஸ்பெயின் நகரின் இருண் (IRUN) ரயில் நிலையம் வந்து அவிலாவிற்குச் (AVILA) சென்றனர். ரயிலில் சாஞ்சி, ஆதி ஜூனியர், குயன்டின் ஆகியோரின் இருக்கைகள் குறித்து, சிறிய குழப்பம் ஏற்பட்டதால் அவர்கள் நின்றுகொண்டே பயணம் செய்ய வேண்டியதாயிற்று.

அன்று மாலை ஆறு மணிக்கு அவிலாவிற்கு வந்த பாபாவும் குழுவும் இங்கல்ஸ் ஹோட்டலில் (HOTEL INGLES) தங்கினர். பாபா ஸ்பெயின் வந்தடைந்த போது மிக்க மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். **'இதுவரை விஜயம் செய்த வேறு எந்த நாடுகளையும் விட ஸ்பெயின், இந்தியாவை நினைவூட்டுவதாக'** அவர் கூறினார். இரவு உணவிற்கு முன்பு, பாபா புனித தெரேசாவின் (ST. THERESA) வீட்டைக் கடந்து ஆண் மண்டலியுடன் நடந்து சென்றார். **"இப்போது நான், எனது இல்லத்தில் இருப்பதைப்போல் உணர்கிறேன்; இந்த இடம் அஸிஸிக்கு (ASSISI) நிகரானது. இது புனிதமான மனிதர்களின் சன்னதிகளுக்கு சிறப்பூட்டும் சூழ்நிலைகளைக் கொண்ட இடம்"** என்று குறிப்பிட்டார்.

மெஹர் பாபா, அவரது கைகளின் மணிகட்டைச் சுட்டிக்காட்டி, **"புனிதமான சாது, சன்னியாசிகள் என் உடலின் நரம்புகள் போன்றவர்கள்; அவர்கள் எனக்காகப் பணிபுரிகிறார்கள், நான் அவர்களின் வாழ்க்கையை வழிநடத்துகிறேன்"** என்று கருத்துத் தெரிவித்தார்.

மெஹர் பாபா மண்டலியுடன் ஹோட்டலுக்குத் திரும்பி வந்து, அடுத்த 24 மணி நேரத்தின் கடைசி உணவை உண்டனர். **"அவிலாவில் நான் சிறப்புமிக்க பணியைச் செய்யவேண்டி உள்ளது. நீங்கள் அனைவரும் எதுவும் உண்ணாமல் உபவாசம் இருக்க வேண்டும், மேலும் எவரும் என்னைத் தொடக்கூடாது என்றாலும், நாம் மலைகளின் மீது ஒன்றாகச் சேர்ந்து நடக்க வேண்டும்"** என்று பாபா அவர்களுக்கு விளக்கினார்.

மறுநாள் காலையில், அவர்கள் அங்குள்ள தேவாலயத்தைப் (CATHEDRAL) பார்வையிட்டு வெளியேறும் வேளையில், பாபா தேவாலய கண்காணிப்பாளருக்கு நான்கு வெள்ளி நாணயங்களை வழங்குமாறு அறிவுறுத்தினார். பாபாவின் தலைமையில், பின்னர் அனைவரும் சுற்றியிருந்த கிராமப்புறங்களில் நடந்து சென்றனர். இயற்கைக்காட்சி அற்புதமாக இருந்தது. அதே வேளையில் கலிலீ

(GALILEE) மலைகள் வழியாக அனைவரும் இயேசுவோடு நடந்து செல்வது போல் உணர்ந்தனர்.

மெஹர் பாபா அப்போது இவ்வாறு வெளிப்படுத்தினார், “**தேவாலயம் கட்டப்படுவதற்கும் நீண்ட காலத்திற்கு முன்பு, நான் இங்கு அவிலாவில் இருந்தேன். நான் இந்த மலைப்பாதையில் நடந்து, அமைதியாக இங்கு ஓய்வெடுத்து, தியானத்தில் அமர்ந்திருந்தேன். அந்த நேரத்தில் இந்த இடங்கள், மரங்கள் எதுவும் இல்லாமல் பாலைவனமாக இருந்தது**.”

பாபாவுடன் அனைவரும் ஹோட்டலுக்கு, மாலை நான்கு மணிக்குத் திரும்பி வந்து, பழங்களை உண்டு உபவாசத்தை நிறைவு செய்தனர். பாபா, மிகவும் நல்ல மனநிலையில் இருந்த இவ்வேளையில் இவ்வாறு வெளிப்படுத்தினார், “**எனது ஆன்மீகப் பணி வெற்றிகரமாக நிறைவேறியது. நீங்கள் என்னுடன் இருப்பது எவ்வளவு அதிர்ஷ்டம்! என்னுடன் இங்கு இல்லாமல் என்னைப் பின்பற்றுபவர்களும், இந்தப் பணியின் ஆன்மீகப் பிரதிபலன்களில் பங்கு பெறுவார்கள்.**

“**ஐரோப்பாவிலும், பிற கண்டங்களைப் போலவே, சிறந்த ஆன்மீகப் பணிகளுடன் தொடர்புள்ள புனித இடங்களும் உள்ளன. ஐரோப்பாவின் நான்கு மையங்கள், வெனிஸ்** (VENICE) **நகரில் உள்ள ஸெயின்ட் மார்க்ஸ்** (SAINT MARKS), **இத்தாலி நாட்டின் ‘லிகுரியன்** (LIGURIAN) **கடற்கரையில் ஓர் இடம், அஸிஸி** (ASSISI) மற்றும் **அவிலா** (AVILA). **நான் இப்போது இந்த இடங்களைப் பார்வையிட மறுபடியும் விஜயம் செய்தேன். இந்தப் புனித மண்ணிலிருந்து பல ஆன்மீக ஞானிகள் உருவாகியுள்ளனர்!**” பாபா விஜயம் செய்த அவிலாவிற்கு, ஹெர்பெர்ட், பத்து நாட்களில் மறுபடியும் திரும்பி வந்து, பாபா அமர்ந்திருந்த அதே மலையில் அமர்ந்து தியானம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

‘**அவிலா, ஐரோப்பாவின் நான்கு முக்கிய ஆன்மீக மையங்களில் ஒன்றாகும். மேலும், அவர் பண்டைய காலங்களில் அந்த இடங்களுக்கு விஜயம் செய்தார்**’ என்றும் பாபா வெளிப்படுத்தியது, அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது; ஏனெனில், பாபா குறிப்பாக அவிலாவைப் பார்க்க விரும்புவதாக ஒருபோதும் குறிப்பிடவில்லை. அவர்களுடைய ஸ்பெயின் நாட்டின் பயண ஏற்பாடுகளை பிற அனைவரிடமும் விட்டுவிட்டார். அவர்களின் லண்டன் பயண முகவர்தான் மாட்ரிட் செல்லும் வழியில் அவிலா செல்லுமாறு பரிந்துரைத்தார்!

அதே நாளில் அனைவரும் மாட்ரிட் (MADRID) நகருக்குப் புறப்பட்டு, அன்று இரவு ‘கால்யே டி ரெக்கொலெட்டோஸில்’ (CALLE DE RECOLETOS) அமைந்த ஹோட்டல் ‘பிரின்சிப்பி டான் ஜுவானுக்கு’ச் (HOTEL PRINCIPE DON JUAN) சென்றனர். ‘**ஸ்பெயினில் எஞ்சியிருக்கும் நேரம் நிதானமாக ஓய்வு எடுக்கும் நேரமாக இருக்கும், அதை ஒரு விடுமுறையாகக் கழிக்கலாம்**’ என்று பாபா அறிவித்திருந்தார்.

அவ்வேளையில் மெஹர் பாபா, ஸ்பெயின் நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்ள விரும்பி, ஒவ்வொரு நாளும் அவர்கள், மாட்ரிட்டின் மக்கள் கூட்டம் அதிகமான வீதிகளில் உலா வந்தனர். தூய்மையான, குளிர்ந்த தென்றல் காற்று, மிதமான சூரிய வெளிச்சம் நிரம்பி இருந்தது. பாபா குறிப்பாக நகரத்தின் 'புவெர்தா-டெல்-ஸோல் - கேட் ஆஃப் தி ஸன்' - (PUERTO DEL SOL - GATE OF THE SUN) என்று அழைக்கப்படும் மத்திய சதுக்கத்தில் திரள் திரளாக நடமாடிய மக்களிடையே நின்று மகிழ்ந்தார். ஒவ்வொரு நாளும் பல முறை பாபா இந்த சதுக்கத்திற்கு விஜயம் செய்தார்.

பாபா ஐரோப்பிய உடையும், தொப்பியும் அணிந்திருந்த போதிலும், அனைத்து ஸ்பெயின் நாட்டு மக்களும் அவரைத் திரும்பித் திரும்பிப் பார்க்கும், தவிர்க்க முடியாத ஓர் ஈர்ப்பை உணர்ந்தனர். ஸ்பெயின் மக்கள் இவ்வாறு நடந்துகொண்டதன் காரணத்தை, பாபா தனது தோழர்களுக்கு விளக்கினார், **"சாதாரண நேரங்களில் அவர்கள் என்னை கவனிக்காமல் நகரும்போது, நான் செய்து வரும் ஆன்மீக உள்பணியே இதற்குக் காரணம்."**

அக்டோபர் 25 இரவு, அவர்கள் விலைமாதர்கள் மற்றும் பலர் அடிக்கடி பங்கெடுக்கும் ஒருவித காபரே நடனக்காட்சிக்குச் சென்றனர். பாபா நடன மேடையில் வண்ணமயமான ஜிப்சி ஃபிளமிங்கோ (GYPSY FLAMENCO) நடனக் கலைஞர்களைப் பார்த்து ரசித்தார். 'இந்த வர்க்கத்தைச் சார்ந்த மனிதகுலத்தின் நலனுக்காக, அவர் கண்ணுக்குத் தெரியாத முறையில் பணியாற்றினார்' என்பதில் சந்தேகமில்லை. அதன் பின்பு பாபாவும் குழுவும், 'ஃபே ரே' (FAY WRAY) நடித்த கிங் காங் (KING KONG) திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர்.

பாபா தோழர்களுடன் ஹோட்டலுக்குத் திரும்பிச் செல்லும் வேளையில், உள்ளூர் மக்கள் பாபாவை நடைபாதையில் மீண்டும் மீண்டும் பார்த்து, சிலர் ஆர்வத்தோடு அவரைப் பின்தொடர்ந்தனர்.

ஹோட்டலில் இருந்தபோது, மெஹர் பாபா இவ்வாறு விளக்கினார்: **"நான் மேற்கத்திய நாடுகளில் மேற்கொண்டுள்ள தற்போதைய பயணத்தின் கடைசி இடம் மாட்ரிட், மேலும் ஒரு வருடம் இந்த நாடுகளுக்குத் திரும்பிவர நான் விரும்பவில்லை. எனவே, புறப்படுவதற்கு முன்பு, நான் முடிக்க வேண்டிய வேலைகள் ஏராளம் உள்ளன."**

பாபா, தொடர்ந்து கூறினார்: **"நான் செல்லும் எல்லா இடங்களிலும் மக்களின் கவனம் என்னை நோக்கி ஈர்க்கப்படுவதற்கு, எனது சிறப்புப் பணியே காரணம். நான் இன்று காலை தீவிரமாகப் பணிபுரிந்தேன், மிகப் பெரிய, சுறுசுறுப்பான சதுக்கத்தில், பத்து நிமிடங்கள் நின்று கொண்டிருந்தேன்; அதே நேரத்தில் குயன்டின், நோரினா இருவரையும் சில தகவல்களை சேகரிக்குமாறு அனுப்பிவைத்தேன். அங்கு நின்ற முழு நேரமும், ஒரு வயதான மனிதர் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார்."**

அடுத்த நாள் காலையில், நீராடுவதற்கு சரியான நேரத்தில் சூடான நீர் கிடைக்காத போது, பாபா மிகவும் வருத்தப்பட்டார். ஹோட்டல் ஏற்பாடுகளைச் செய்த ஹெர்பெர்ட்டை அழைத்து, பாபா, அவரைக் கடுமையாகக் கண்டித்தார், **“என்னால் இங்குப் பணிபுரிய முடியாது! நான் மார்ஸெல்லஸுக்குப் புறப்படுகிறேன். இங்கு அதிகாலையில் சூடான நீரில் குளிப்பது என்பதே முடியாத காரியம்!”** இந்த ஹோட்டலை பாபாவே தேர்ந்தெடுத்தும், அவர் ஏன் ஹெர்பெர்ட்டைக் கண்டிக்கிறார் என்று அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

பாபா, ஹெர்பர்ட், நோரினா இருவரிடமும், பயண முகவரைப் பார்த்து, ஹோட்டலை மாற்றுமாறு கேட்கக் கூறி அனுப்பினார். பிக்ஃபோர்டு பயண முகவரைத் தொடர்பு கொண்டபோது, சில உள் குழப்பங்கள் காரணமாக, அவர்கள், பாபா நிராகரித்த ஹோட்டலில் தங்கியிருப்பது தெரிய வந்தது. அப்போதுதான் பாபாவின் கோபத்திற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

நண்பகலில் அவர்கள் ‘கால்டோ நம்பர் 2-ல்’ அமைந்த கிரான் ஹோட்டல் லண்ட்ரெஸுக்கு (GRAN HOTEL LONDRES) மாற்றப்பட்டனர், அது ஒரு சிறந்த ஹோட்டலாக அமைந்தது. பாபாவின் அறை புவெர்தா டெல் ஸோலை (PUERTA DEL SOL) நோக்கி இருந்தது. ஆனால் **‘உணவில் போதுமான அளவு பூண்டும் மிளகும் இல்லை’** என்று பாபா விரைவில் புகார் செய்யத் தொடங்கினார். இது நோரினாவின் பொறுப்பாக இருந்ததால், உணவில் ஏராளமான பூண்டு இருப்பதை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு வேளை உணவிற்கு முன்னரும், சமையலறைக்கு, மூன்று படிக்கட்டுகளின் மேலேயும் கீழேயும் ஏறி இறங்கி அவர் வெறிபிடித்தவர் போலக் காணப்பட்டார். ஹோட்டல் ஊழியர்கள் நோரினாவை நிச்சயமாக, ஒரு விசித்திர பிறவியாக நினைத்திருக்க வேண்டும்; ஆனால், பாபா புகார் செய்ததன் காரணம், ஹோட்டல் ஊழியர்களின் கவனத்தை அவரிடம் ஈர்ப்பதாகும். பாபாவின் பணி தனித்துவமானது, எந்தவொரு சாக்குப்போக்கின் கீழும் அவர் தனது நோக்கத்தை நிறைவேற்றத் தவறுவதில்லை.

மெஹர் பாபா, நோரினாவிடம், **“கவலைப்படாதீர்கள்… அமைதியை இழக்காதீர்கள்…”** என்று சமாதானப்படுத்தினார். ஆனால், பாபா அவரைக் கண்டிக்கும் போதெல்லாம், யாரோ அவருடைய உடலில் கூர்மையான ஒரு முள்ளைத் துளைப்பது போல் உணர்ந்தது, "இப்போது இதைக் கண்டுகொள்ளாதே… நான் உன்னைத் துன்புறுத்தவில்லை" என்று கூறுவது போல் உணர்ந்தார்.

மாலையில் பாபா இனிமையான ஸ்பானிஷ் இசையைக் கேட்கச் சென்றார், மேலும் புகழ்பெற்ற ஸ்பானிஷ் நடனக் கலைஞரான லா அர்ஜென்டினிடாவின் (LA ARGENTINITA) எழில்நயமான கலை உணர்வு மிக்க நடனத்தையும் அவர் கண்டு ரசித்தார்.

அதன் பின்னர் அவர்கள் நதிக்கரையில் அமைந்த கேபிடல் கேஃபேக்குச் (CAPITAL CAFÉ) சென்றனர். அங்கு பாபா, சில நேரங்களில் ஆடம்பரமான சிற்றுண்டிகள் அல்லது பானங்களுக்கு உத்தரவைத் தந்துவிட்டு, பின்பு

திடீரென எழுந்து, அவற்றைத் தொடாமல், விரைவாக வெளியேறும் போது அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய கட்டாயம். இதனால், குறிப்பாக, ஹெர்பெர்ட் அமைதியை இழக்க நேர்ந்தது; ஏனெனில் அவர் பாபாவின் பயணத்தின் ஒரு பாகத்திற்கு நிதியளிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார்; மேலும் இது முற்றிலும் வீணானது என்று கருதினார்! குருநாதரின் வழிகளையும், முறைகளையும் அவர் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை (துரதிர்ஷ்டவசமாக அதை அவர் ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லை).

**1933,** அக்டோபர் **27**ஆம் நாள், பாபா ஓவியம் மற்றும் சிற்பக்கலை பற்றிய தேசிய ஸ்பானிஷ் அருங்காட்சியகமான 'பிராடோ'வை (PRADO, THE NATIONAL SPANISH MUSEUM OF PAINTING AND SCULPTURE) பார்வையிட்டார். இரண்டு மணி நேரம், எல் கிரேகோ (EL GRECO), வெலாஸ்குவெஸ் (VELASQUEZ), கோயா (GOYA), ரூபன்ஸ் (RUBENS) ஆகியோரால் வரையப்பட்ட இயேசுவின் ஓவியங்களைப் பார்வையிட்டார். பாபா, இவ்வளவு நேரம் செலவு செய்து பார்த்த ஒரே கலைக்கூடம் (ART GALLERY OR MUSEUM) இதுவாகத்தான் இருக்கும்.

அடுத்த நாள், பாபா அரச மாளிகைக்குச் சென்றபோது, அவர், தொப்பி அணிந்திருந்ததால் பாதுகாவலர் ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டார்; தொப்பியுடன் உள்ளே செல்ல அனுமதி இல்லை என்று கூறினார். பாபா நீண்ட தலைமுடியை தொப்பியால் மறைத்து வைத்திருந்ததால், அவர் அதைத் தலையிலிருந்து எடுக்க மறுத்துவிட்டார். பாபாவுடன் வந்த ஹெர்பெர்ட், குயன்டின், மின்டா மூவரும் அவருடன் இருக்க வேண்டுமா அல்லது அரண்மனையைச் சுற்றிப் பார்க்கலாமா என்று கேட்டதற்கு, பாபா, அதிருப்தியுடன் **"போய் வாருங்கள்"** என்று கூறினார். (அவர்கள் எப்போதும் பாபாவுடன் இருக்க வேண்டும் என்பதை மறந்தது, அவரை அதிருப்தி அடையச் செய்தது). பாபா வெளியே அவர்கள் திரும்பி வரும் வரை காத்திருந்தார். திரும்பி வந்த நேரத்தில், அவர்கள் செய்த தவறை மூவரும் உணர்ந்ததும், அதை மறக்கச் சொல்லி பாபா அவர்களை ஆறுதல் படுத்தினார்.

அக்டோபர் **27**ஆம் நாள், புதிதாக அமைக்கப்பட்ட 'ஸர்கிள் எடிட்டோரியல் கமிட்டி'யின் (CIRCLE EDITORIAL COMMITTEE) கூட்டம் நடைபெற்றது. ஹெர்பெர்ட் இயக்குநராகவும், வில் பேக்கெட் செயலாளர் மற்றும் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். நோரினாவும் அதை நிர்வகிப்பதில் பங்கு வகித்தார். கமிட்டியின் எதிர்கால வெளியீட்டுப் பணிகள் மற்றும் இரண்டு சிறிய புத்தகங்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான வழிமுறைகளும் விவாதிக்கப்பட்டன: 'தி ஸேயிங்ஸ் ஆஃப் ஸ்ரீ மெஹர் பாபா' (THE SAYINGS OF MEHER BABA) மற்றும் 'ஸ்ரீ மெஹர் பாபா: தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' - கேள்விகளும் பதில்களும் - THE PERFECT MASTER - QUESTIONS & ANSWERS (இதர மொழிகளில் வெளியீடு - ஜெர்மன், ஃபிரஞ்சு, இத்தாலியன், ருமேனியன், ரஷ்ய மற்றும் ஸ்பானிஷ்).

இரவு பொழுதுபோக்கிற்கான பொறுப்பை குயன்டின் ஏற்றுக்கொண்டார்; ஒவ்வொரு இரவும் வெவ்வேறு திரைப்படத்திற்குச் சென்றனர்; அன்று மாலை குயன்டின், பாபாவை மாட்ரிட்டின் மிகச்சிறந்த திரைப்பட அரங்கான கேபிட்டலில் (CAPITOL) ஒரு நகைச்சுவை திரைப்படம் 'எ பெட் டைம் ஸ்டோரி' (A BED TIME STORY) பார்க்க அழைத்துச் சென்றார்; அதில் ஒரு இசைக்குழுவும், சுழலும் மேடையும் இருந்தன. மற்றுமோர் இரவு, குயன்டின் பாபாவை எஸ்பானியோல் திரையரங்கில் (ESPANOLTO) 'லவ் ஆஃப் தி ஸார்சரர்' (LOVE OF THE SORCERER) எனும் நாட்டிய நாடகத்திற்கு அழைத்துச் சென்றார்.

மெஹர் பாபா அவ்வப்போது திரைப்படங்களுக்குச் செல்ல விரும்புவதன் முக்கிய காரணம், '**அங்கு வரும் பார்வையாளர்களை உள்ளளவில் தொடர்பு கொள்வதற்காக**' என்று பாபா அடிக்கடி கூறி வந்தார்.

அவரது உள்ளளவிலான ஆன்மீகப் பணி முடிந்த அடுத்த கணமே, பாபா அவரது இருக்கையிலிருந்து எழுந்து சென்று விடுவது வழக்கம். அவருடன் வந்தவர்கள் பெரும்பாலும் திரைப்படத்தின் கதையில் மூழ்கி, ஆர்வத்துடன் ரசித்துக் கொண்டிருந்தாலும், பாபாவுடன் புறப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. பாபா எங்குச் சென்றாலும், எதைச் செய்தாலும், அது அவருடைய ஆன்மீகப் பணிக்காக மட்டுமே; மேலும் பல்வேறு இடங்கள், நிகழ்வுகள் அனைத்தும் அவருடைய வெவ்வேறு ஊடகங்கள்.

பாபா, ஸ்பெயினில் தங்கியிருந்த கடைசி மூன்று நாட்கள், காலை வேளையில், அவர்கள் 'காஸா டி காம்போ' (CASO DE CAMPO) என்ற அழகான பூங்காவில் நடக்கச் சென்றனர். குழுவில் சிலர் காளைச் சண்டையைப் (BULLFIGHT) பார்க்க விருப்பம் தெரிவித்த அதே வேளையில், பிறர், இதுபோன்ற மிருகத்தனமான காட்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. அக்டோபர் 29 மதிய வேளையில் பிளாஸா டி டொரோஸில் (PLAZA DE TOROS) ஒரு காளைச் சண்டை நடத்தப்படவிருந்தது, பாபா அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் நுழைவுச் சீட்டை வாங்குமாறு கூறினார். பாபாவுடன் செல்ல விரும்பியவர்கள், பொதுவாக ஒரு பெரிய ஸ்பானிஷ் கூட்டத்தைத் தொடர்புகொள்ள நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று பாபாவிடம் கூறினர்.

காளைச் சண்டை போட்டியில் முதல் காளை கொல்லப்பட்டதைப் பார்த்து, பெண்மணிகளில் ஒருவர் பயந்துபோய் வெளியேற வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு மண்டலியில் ஒருவர், இந்த மிருகத்தனமான காட்சியைக் பார்த்து உடல்நிலை சரியில்லாமல், வெளியே செல்ல வேண்டியதாயிற்று. இதற்கு நேர்மாறாக, பாபா இதைப் பார்த்து முற்றிலும் சலித்துப்போய், இதுபோன்ற போட்டிகள் அனைத்தும் சிறுபிள்ளைத்தனம் என்று நினைத்தார். இரண்டாவது காளை கொல்லப்பட்டதும், பாபா தனது பணி முடிந்துவிட்டதாகவும், இது வெளியேற வேண்டிய நேரம் என்றும் சுட்டிக்காட்டினார். பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**அந்த இரண்டு காளைகளும் அதிர்ஷ்டசாலிகள். அவை அடுத்ததாக மனித பிறவிகள் எடுத்து, விரைவாக**

**ஆன்மீகப் பாதையில் முன்னேறும், ஏனெனில் அவை எனது முன்னிலையில் கொல்லப்பட்டன.**"

மாலையில் அனைவரும் 'சினி அஸ்டோரியா'வில் 'ஜெர்மன் ஸப்மெரைன் ஃபில்ம்' வெளியிட்ட 'மோர்கன்ரோட்' (GERMAN SUBMARINE FILM 'MORGENROT' AT THE CINE ASTORIA) என்ற திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர்.

அடுத்த நாள் அவர்கள் மாட்ரிட் (MADRID) நகரத்தை நோக்கி அமைந்த உயர்ந்த மலை ஒன்றிற்கு நடந்து சென்றனர். அங்கே ஓர் ஆலிவ் மரத்தின் கீழ், அனைவரும் பாபாவைச் சுற்றித் தரையில் அமர்ந்திருந்த வேளையில், எதிர்கால பணிகள் குறித்து நோரினா, குயன்டின், ஹெர்பெர்ட் ஆகியோருக்கு, பாபா, "**நீங்கள் அனைவரும் எனது பணியில் பங்காளிகளாக இருப்பீர்கள்**" என்று தெரிவித்தார். இந்த அழகான, சூரிய ஒளி நிறைந்த மலை மீது, பாபா அவர்களுக்கு 'மனம்', 'ஆன்மா' மற்றும் 'தனி மனிதன்' பற்றிய சொற்பொழிவை வழங்கினார்.

அப்போது, முதன்முறையாக, குயன்டின், ஹெர்பெர்ட் இருவருக்கும் அவரது மண்டலியின் கீழ்ப்படிதலின் ஆழமான அர்த்தத்தையும், பாபாவை மகிழ்விப்பதற்காக அவர்கள் தங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பற்றி சிறிதளவும் கவலைப்படாத தன்மையையும் குறித்து தெளிவுற எடுத்துரைத்தார். மேலும் இந்தியாவில் இறை-போதையில் இருந்த மஸ்த் மஸ்தானைப் (MAST MASTAN) பற்றி கூறிய வேளையில், அவரது 'அரை-தெய்வீக' உணர்வு படைத்த மனநிலையைக் குறித்தும் அவர்களுக்கு விளக்கினார்.

1933, அக்டோபர் 31, மாட்ரிட் நகரில் அவர்களின் கடைசி நாள்; மீண்டும் காலையிலிருந்து மதியம் வரை, பூந்தோட்டங்கள் நிறைந்த இடங்களுக்குச் சென்றனர். பாபா, சாஞ்சியிடம் ஏன் இவ்வளவு மனச்சோர்வடைந்த நிலையில் இருக்கிறார் என்று கேட்டதற்கு, அவர் முணுமுணுக்க மட்டும் செய்தார். உண்மை என்னவெனில், மண்டலியைப் பொறுத்தவரை, ஸ்பெயினுக்கான பயணம் ஒரு விடுமுறையைத் தவிர வேறொன்றுமில்லை. பாபா மேற்கத்தியர்களின் முன்னிலையில் அவர்களை, (சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர்) தொடர்ந்து குறை கூறி, கேலி செய்து சங்கடத்திற்குள்ளாக்கினார். மூவரும் முற்றிலும் மனமுடைந்து போன நிலையில் இருப்பதைப் போல் உணர்ந்தனர் - அதே வேளையில் மேற்கத்திய அன்பர்களுக்கு அனைத்தும் அற்புதமாகத் தோற்றமளித்தது. பலமுறை, சாஞ்சி மனச்சோர்வில் தனியாக அமர்ந்து கண்ணீர் சிந்தினார். பாபா அவரை ஆறுதல்படுத்த முயன்றும், சாஞ்சியால் அவரது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதர நேரங்களில், பாபா அவரைப் பற்றி அலட்சியமாகவும், சலிப்பை வெளிப்படுத்துவது போலவும் நடந்துகொண்டார். மேலும் சாஞ்சி விளக்கியது போல், இந்த பயங்கரமான 'கிள்ளும் தருணங்கள்' அவநம்பிக்கை மற்றும் உள்ளளவில் பெரும்

துன்பங்களால் நிறைந்திருந்தன. எனவே, மண்டலியைப் பொறுத்தவரை, பாபாவுடன் வாழ்வது என்பது ஒருபோதும் எளிதான காரியம் அல்ல.

மெஹர் பாபா, நோரினாவை ஸூரிக் நகருக்கும், மின்டா, குயன்டின் ஆகியோரை பாரிஸ் வழியாக லண்டனுக்கும் அனுப்பி வைத்தார். பாபா, பார்சிலோனாவிற்குக் காலையில் ஹெர்பெர்ட், சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர் ஆகியோருடன் ரயிலில் புறப்பட்டார்; ரயிலில் செல்லும் வேளையில், பாபா ஹெர்பெர்ட் பக்கம் திரும்பி, **"கடந்த வாரம், லண்டனில் பிரியாவிடை அளித்தோம்; இங்கே இன்றிரவு; இப்போது மார்ஸெல்லஸில் இருக்கும் போது உங்களிடமிருந்து பிரியாவிடை. இப்படி, இந்தியாவை விட்டு அல்லது மேற்கத்திய நாடுகளை விட்டு வெளியேறும்போதெல்லாம் - சொல்லப்போனால் எனக்கு எப்போதும் இந்தப் பிரிவின் சோகமான தருணங்கள்"** என்றார்.

ஆதிபுருஷனின் இரக்கத் தன்மையை நினைத்து காலம் இவ்வாறு வியந்தது: "பிரியமானவர்களின் சார்பாக, அவர்களை விட்டு ஒரு கணம் கூட விலகாத அவர் தன்னிடமிருந்து விலகியதில் வருத்தமாக இருந்தார்!"

மறுநாள் காலையில் அவர்கள் பார்சிலோனா வந்தடைந்தனர். ரயில் நிலையத்திற்குள் வந்தபோது, மெஹர் பாபா, தனது எழுத்துப்பலகை வழியாக இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நான் இங்கு வருவது எனது முகவருக்குத் தெரியும். அவர் சாதாரண வாழ்க்கையில் ஒரு போலீஸ்காரர் என்பதால், அவர் எனது முகவர்களிடையே தனித்துவமானவர்."**

அவர்கள் ரயில் மேடையில் இறங்கும்போது, மத்தளங்கள் ஒலிக்க, இராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு, பல வரிசைகளில் வந்துகொண்டிருந்ததைக் கண்ட மண்டலி, ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். சில முக்கியமான இராணுவ அதிகாரிகள் ரயிலில் இருந்திருக்க வேண்டும். பார்சிலோனா நகரத்தில் அவர்கள் யாரை வரவேற்க வந்தார்கள் என்பது மக்களுக்குத் தெரியாது!

பாபாவும் குழுவும் ஒரு பயண அலுவலகரிடம் சென்று, நகர சுற்றுப்பயணத்திற்கான முன்பதிவுகளைச் செய்தனர். இந்த நாள், புதிதாக உருவாக்கப்பட்ட 'கேட்டலோனியா' (CATALONIA) மாநிலத்தை சிறப்பிக்கும் விதத்தில் ஒரு விடுமுறை நாளாக இருந்தது, மேலும் வீதிகளில் திரள் திரளான மக்கள் கூட்டம் அலைமோதியது. இது பாபாவின் மகிழ்ச்சிக்குரிய தருணமாக அமைந்தது. பயண வழிகாட்டி அவர்களை கதீட்ரல் மற்றும் பழைய பாராளுமன்ற வளாகத்திற்கு அழைத்துச் சென்றார்; அங்கு நடைபெற்ற விழாவில் அனைத்து அதிகாரிகளின் ஒரு பெரிய ஊர்வலத்தைப் அவர்கள் பார்வையிட்டனர் - இந்த நகரத்திற்கு பாபா வருகை தந்தது ஒரு விரும்பத்தக்க, தற்செயல் நிகழ்வாக அமைந்தது. அதன் பிறகு, பயண வழிகாட்டி அவர்களை 'மவுண்ட் திபிடாபோ' (MT. TIBIDABO) சிகரத்திற்கு அழைத்துச் சென்றார். அது மிகவும் அழகான மலை சிகரம். பயண பேருந்தை அதன் வழியில்

அனுப்பிவிட்டு, நீண்ட நேரம் அங்கு இருக்க பாபா முடிவு செய்தார். அவர்கள் மத்திய தரைக்கடல் மற்றும் ஐபீரியன் பைரனீஸின் (MEDITERRANEAN AND THE IBERIAN PYRENEES) மலையடிவாரத்தில் நடந்தார்கள்.

அவர்கள் ஒரு பொழுதுபோக்குப் பூங்காவிற்கு விஜயம் செய்து, பாபாவும் மண்டலியும் மின்சார கார்களில் ஏறி பல்வகையான காட்சிகளைக் கண்டுகளித்தனர். ஒவ்வோர் இயந்திரத்திலும் பாபா, ஒரு நாணயத்தை செருகினார், சில குழந்தைகளை (அங்கே ஒரு பொம்மை நிகழ்ச்சியை ரசிக்க) அவருடன் விளையாடுமாறு பாபா அழைத்தார்.

பாபா மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்; தொடர்ந்து மலையில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார். அவர் ஒரு விரும்பத்தக்கதான குகையைக் கண்டறிந்து, “**அடுத்த முறை நான் ஸ்பெயின் நாட்டிற்கு வரும்போது இங்கே தங்க வேண்டும்**” என்று கருத்துத் தெரிவித்தார். அவருடன் அப்போது இல்லாத அன்பர்களை மீண்டும் நினைவு கூர்ந்தார். பின்னர் அனைவரும் நகரத்திற்குத் திரும்பினர்.

ரயில் புறப்படும் நேரம் வரும் வரை பாபா மிகவும் நெரிசலான ‘பிளாஸா -டி-கேடலூனா’வின் (PLAZA DE CATALUNA) நீரூற்றுகள் மற்றும் தோட்டங்களில் அமர்ந்திருந்தார். அப்போது பிளாசாவில் இருந்த ஒரு போலீஸ்காரர், பாபாவை வித்தியாசமான, குறிப்பிடத்தக்க முறையில் பார்த்துக் கொண்டிருந்தார்; மேலும் தான் தொடர்பு கொள்ள வேண்டிய முகவர் இவர்தான் என்பதை பாபா உறுதிப்படுத்தினார்.

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா தனது முகவர்களைப் பற்றி விளக்கமளித்தார்:

**தனித்துவமான மற்றும் வெவ்வேறு பொறுப்புகளைக் கொண்டிருக்கும் முகவர்கள், அவதார புருஷரின் முக்கியமான பணிகளை மேற்கொள்கின்றனர். ஒரு முகவரின் மரணத்திற்குப் பின்னர், அவரது பொறுப்பு, தானாகவே ஒரு வாரிசின் வழியாக நிரப்பப்படுகிறது; எப்போதுமே அவதார புருஷர் இருப்பதைப் போலவே, அவருடைய முகவர்களும் உள்ளனர். முகவர்களில் மூன்று வகை:**

1. **நேரடி முகவர்கள், மிகவும் குறைவான எண்ணிக்கையில் உள்ளவர்கள். ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, மற்றும், ஆஃப்ரிக்கா ஒவ்வொரு கண்டத்திலும் ஒரு முகவர் - உண்மையில், கிட்டத்தட்ட ஒவ்வொரு முக்கியமான கண்டத்திலும் ஒருவர் உள்ளார். இந்த முகவர்களை அவதார புருஷர் நேரடியாக இயங்கச் செய்து அறிவுறுத்தல்களை வழங்குகிறார்.**
2. **மறைமுக முகவர்கள், அவர்களும் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளனர். அவர்கள் நேரடி முகவர்களிடமிருந்து கட்டளைகளைப் பெறுகின்றனர்.**

3. **இரவல் முகவர்களில்** (கடனாக வாங்கப்படும் முகவர்கள்) **பலர் உள்ளனர். அவர்கள் மறைமுக முகவர்களிடமிருந்து கட்டளைகளைப் பெறுகிறார்கள்.**

**முதன்மையான நேரடி முகவர்கள் எப்பொழுதும் நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ளனர், மேலும் இந்தத் தளத்தில் அவர்கள் பயன்படுத்தும் சக்திகளின் மூலம், அவதார புருஷருக்காகச் செயல்படுகின்றனர். அவதார புருஷர் ஒருபோதும் அற்புதங்களைச் செய்யாததால், நேரடி முகவர்கள் அவருக்காக அற்புதங்களைச் செய்யக்கூடும்; அவ்வாறு அதிசயங்களைச் செய்ய விரும்பும் வேளையில், அவர் நான்காவது ஆன்மீகத் தளத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறார்.**

**முகவர்கள் நான்காவது ஆன்மீகத் தளத்தில் இருப்பதன் முக்கிய காரணம், அதனுடைய சில சக்திகளை அவதார புருஷரின் பணிக்காகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதால் மட்டுமே. இந்த முகவர்கள் ஆன்மீகப் பாதையில் இருக்கும் மஹாயோகிகளின் நிலையைப்போல் இருப்பதில்லை. மஹாயோகிகள் நான்காவது ஆன்மீகத் தளத்தை அடையும் போது, அதன் சக்திகளை நன்மைக்காக அல்லது தவறாகப் பயன்படுத்தலாம் - தவறாகப் பயன்படுத்தும் மஹாயோகி, பரிணாம வளர்ச்சியின் கல் வடிவத்தை எட்டும் வாய்ப்புள்ளது.**

ஸிங் ஸிங் சிறைச்சாலை (SING SING PRISON), லுகானோ (LUGANO), ஸான்டா மார்கெரிட்டா (SANTA MAGHERITA) மற்றும் பார்சிலோனாவில் (BARCELONA) தத்தமது இடத்தில் நிலைகொண்டிருந்த பல்வேறு முகவர்கள் அனைவருமே இரவல் முகவர்கள் என்றும் பாபா சுட்டிக்காட்டினார். வார்ஸா (WARSAW) நகரில் ஹெர்பெர்ட் தொடர்பு கொண்ட நபர் ஒரு மறைமுக முகவர். ரோம் நகரில் பாபா தொடர்பு கொண்ட கிறிஸ்டியானோ (CHRISTIANO) என்ற இத்தாலியன் ஒரு நேரடி முகவர் என்பதையும் பாபா வெளிப்படுத்தினார்.

1933, நவம்பர் 2 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் பார்சிலோனாவிலிருந்து புறப்பட்டு 12 மணி நேர பயணத்திற்குப் பிறகு, மறுநாள் காலையில் மார்ஸெல்லஸுக்கு வந்தார். அவர்களை இனிட் கோர்ஃப், ஓட்டோ ஹாஸ்-ஹெய் இருவரும் சந்தித்து பிரிஸ்டல் ஹோட்டலுக்கு (BRISTOL HOTEL) அழைத்துச் சென்றனர்; பின்பு ஹெர்பெர்ட், இனிட், ஓட்டோ ஆகியோருடன் பாபா தனிப்பட்ட முறையில் விவாதித்தார்.

அன்று மதியம் மெஹர் பாபா மண்டலியுடன் இந்திய கப்பல் எஸ்.எஸ். வைஸ்ராயில் (SS VICEROY) புறப்பட்டார். கப்பல் புறப்படும் முன்னர், அனைவரும் பாபாவின் அறையில் மௌனமாக அமர்ந்தனர். அற்புதமான மனநிலையில் இருந்த பாபா, “**நான் என்னுடைய உண்மையான ரூபத்தில் இருப்பதை நீங்கள் பார்க்கவில்லை. இந்த உடல் நான் அல்ல; எனது உண்மையான சுயம் என்பது மிகவும் அழகானது. நான் அளவிறுதியற்ற உண்மைப்பொருளாகவும்,**

**எல்லையற்ற அன்பின் வடிவமாகவும், நித்திய வாழ்வாகவும் இருக்கிறேன்"** என்று கூறினார்.

கப்பல் புறப்படும் மணியோசை கேட்ட அந்த கணத்தில், பாபாவின் வார்த்தைகள் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்தன; இனிட், ஹெர்பெர்ட், ஓட்டோ மூவரும் திகைப்பில் ஆழ்ந்தனர். அவர்களின் கண்கள் கண்ணீரால் நிரம்பி வழிந்தன; அனைவரும் விடைபெறுவதற்கு முன்பு, பாபா ஒவ்வொருவரையும் அன்போடு அரவணைத்தார். கப்பல் இரண்டு மணிக்குப் புறப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு, ஹெர்பெர்ட் பாபாவின் அறிவுறுத்தல்படி அவிலாவில் தங்க ஸ்பெயினுக்குத் திரும்பிச் சென்றார்.

பயணம் தொடங்கிய பத்து நாட்களுக்குப் பிறகு, நவம்பர் 12 அதிகாலையில், கப்பல் ஏதன் (ADEN) வந்து சேர்ந்தது ; அங்கு அவர்கள் அஞ்சல்களைப் பெற்றுக்கொண்டனர்.

கிட்டி பஹ்லன், பாபாவிற்கு இவ்வாறு எழுதினார்:

பிரியமான குருநாதரே, உங்களிடமிருந்து சில செய்திகளைப் பெற நான் எப்போதும் ஏங்குகிறேன், இது எனக்கு மீண்டும் மிக்க பலத்தை அளிக்கும். என் இதயம், என் சிந்தனைகள் எப்போதுமே உங்களுக்கு அருகில் உள்ளன, ஏனெனில் நான் அஞ்சுவதில்லை, காரணம் அனைத்து விஷயங்களும் இருளாகத் தோன்றினாலும், தேவைப்படும் போதெல்லாம் உங்கள் தெய்வீக உதவிக் கரம் என்னை நோக்கி வரும். பிரியமான குருநாதரே, எல்லாம் உங்களுக்குத் தெரியும் என்றும், உங்களை நேசிப்பவர்களை எந்த இடைவெளியும் பிரிப்பதில்லை என்பதையும் நான் அறிவேன்.

நான் மிகவும் சோகமாக இருக்கும் நாட்கள் உள்ளன, எனது இடர்பாடுகள் ஒருபோதும் முடிவடையாது என்று எனக்குத் தோன்றினாலும், உங்கள் தெய்வீக அன்பால் அவை நீடிக்காது என்பதற்கு நான் நன்றி கூறும் அதே வேளையில், அந்த உணர்வுகளை முழுவதுமாக என்னால் வெல்ல முடியவில்லை என்பதை நினைத்து நான் வெட்கப்படுகிறேன். ஏனெனில், வாழ்க்கையின் உண்மையான அர்த்தம், துன்பங்களை அனுபவித்து உங்கள் பணியில் பங்கெடுப்போருக்கு உதவுவது ஆகும் என்பதை நான் புரிந்துகொள்ள வேண்டும்! உலகில் எல்லாமே இதுதான், மேலும், உங்கள் உதவியோடு ஒரு நாள் அதைச் செய்ய நான் எவ்வளவு நன்றியுள்ளவளாக இருக்க வேண்டும்.

இந்தியாவை வந்தடைந்து தரை இறங்குவதற்கு முன்னர், ஐரோப்பிய நாடுகளில் வாழும் தனது பக்தர்களுக்கு இந்த அன்பான கடிதத்தை மெஹர் பாபா அனுப்பி வைத்தார்:

**நாங்கள் இன்று அதிகாலை ஏதன் நகருக்கு வந்தோம். எனது பிரியமான மேற்கத்திய கோபியர்களின் அன்பும், தோழமையும் இல்லாத குறையால், பயணம் வசதியாக இருந்தாலும், அது சலிப்பை ஏற்படுத்தியது.**

**உங்கள் அன்பான பாபா அருகில் இல்லாமல் நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இவை அனைத்தும் விரைவில் முடிவுக்கு வரும் - ஆறே மாதங்கள், அது மட்டும் உறுதி. உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் பொறுப்பாக வழங்கியுள்ள, திரைப்படம் குறித்த பணிகளில் நீங்கள் அனைவரும் தீவிர கவனம் செலுத்த வேண்டும்; நான் விரும்புவது என்னவெனில், நீங்கள் கவலைப்படவோ, சோகமாக உணரவோ கூடாது. நான் உங்களை எப்படி நேசிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்; நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக என்னுடன் இருப்பதை விரும்புகிறேன். ஆனால் என் முன்னால் இருக்கும் பணியைக் கருத்தில் கொண்டு, அனைவரும் சிறிதளவு வேதனையை தாங்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் அனைவரும் இப்போது உணரும் பிரிவின் துயரம், ஆறு மாதங்களில் மிக்க மகிழ்ச்சியாகவும், இனிமையாகவும் இருக்கும் என்று எனக்குத் தெரியும்.**

**எனவே, இனிமையான உள்ளங்களே, நல்ல அன்பர்களாக இருங்கள்; மகிழ்ச்சியான மறு சந்திப்பு விரைவில் மீண்டும் வரும், நீங்கள் அனைவரும் எனது பணியில் பங்கெடுக்கும் நாள் வரும் என்ற எண்ணத்தில் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருங்கள். நீங்கள் எப்போதும் என்னுடன் இருப்பதைப் போல, நானும் எப்போதும் உங்களுடன் இருக்கிறேன் என்பதை இப்போது சொல்ல வேண்டிய தேவையில்லை. அது உங்களுக்குத் தெரியும்.**

**என்னுடைய அளவற்ற அன்பும், புன்னகையும் இத்துடன் தவழ்ந்து வருகின்றன - என் அன்பு உள்ளங்களுக்கு.**

**- பாபா -**

1933 நவம்பர் 14 அதிகாலையில், பாபா, சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர் ஆகியோர் மும்பை வந்து சேர்ந்தனர். ருஸ்தம், பாபாவைத் தனது காரில் நாசிக் அழைத்துச் சென்றார். ஆதி சீனியர், விஷ்ணு இருவரும் பெட்டி படுக்கைகளுடன் பின்தொடர்ந்தனர்.

மெஹர் பாபா நாசிக் திரும்பி வந்ததும், ஒவ்வொரு மண்டலியையும் தனித்தனியாக சந்தித்தார். அஹமதுநகரில் தங்கியிருந்த குல்மாயின் மகள் டாலி, பாபா இந்தியாவில் இல்லாத வேளையில் மனச்சோர்வடைந்து, விசித்திரமாக நடந்து கொண்டதாகத் தெரிய வந்தது. 1933 நவம்பர் 15 அன்று, பாபா, டாலியைப் பார்க்கச் சென்றார்; அன்று பிற்பகல் பாபா அவருடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். ருஸ்தம், காக்கா இருவரும் பாபாவுடன் சென்றனர், ராம்ஜூவும் அதில் கலந்து கொண்டார். பாபா, டாலிக்கு எடுத்துரைத்ததை, பின்பு பாபாவின் உரைகளில் ஒன்றாக அச்சடித்து அனைவருக்கும் விநியோகிக்குமாறு அறிவுறுத்தினார்:

**நீங்கள் வாழ விரும்பவில்லை என்று சொல்கிறீர்கள். இந்த வாழ்க்கையில் மற்றும் உடலளவில் நீங்கள் சோர்வடைந்ததாக உணர்கிறீர்கள். விரும்பத்தகாத, தீய எண்ணங்கள், உங்களைத் தொந்தரவு**

செய்து, சந்தோஷத்தைக் கெடுக்கிறது. ஆனால் வாழ்க்கை என்பது எண்ணங்கள், உடல் அல்ல. நீங்கள் தூங்கும்போதும் உடல் உள்ளது. அப்போது வாழ்க்கையை முடிக்க வேண்டிய அவசியத்தை நீங்கள் உணர்வதில்லை! தூக்கத்திலிருந்து விழித்த அடுத்த கணமே, நீங்கள் மீண்டும் சிந்திக்கத் தொடங்குகிறீர்கள். உண்மையாகச் சொல்லப்போனால், ஒருவரும் அவரது நிலையில் திருப்தி அடைவதில்லை. இந்த உலகில் எவரும் முழுமையான மகிழ்ச்சியுடன் இருப்பதும் இல்லை. பெரிய அந்தஸ்து மிக்க செல்வந்தர்களை நீங்கள் அறிவீர்கள்; அவர்கள் என்னை சந்திக்கும் வேளையில் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியற்ற மனிதர்கள் என்று கூறினார்கள்.

நீங்கள் ஏன் மகிழ்ச்சியற்ற நிலையில் இருக்கவேண்டும்? நீங்கள் குள்ளமாகவும், தடித்தும் இல்லை. நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள். உங்களால் எழுத முடியும், படிக்க முடியும்; அதேவேளையில் ஏழை உயிரினங்கள், முடங்கிப்போனவர்கள், தொழுநோயாளிகள், ஊனமுற்றோர் ஆகியோரைப் பற்றி சற்று சிந்தியுங்கள். ஒரு தொழுநோயாளி உறுதியான மரணத்தை நோக்கிச் செல்வது மட்டுமல்லாமல், இப்போது இருப்பதை விட, மோசமான நிலையில் இறந்துவிடுவார் என்றும் அவருக்குத் தெரியும். ஆயினும், இதுபோன்ற ஆயிரக்கணக்கானோர் அமைதியாகத் தங்கள் நாட்களை எப்படியோ கழித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நாட்டில் வாழும் லட்சக்கணக்கான, கல்வியறிவற்ற ஊமைகளை உங்களோடு ஏன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது? நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி; ஒரு குருநாதரின் சூழலில் வாழ்கிறீர்கள். இமயமலையிலும், பெரிய காடுகளிலும் என்ன இருக்கிறது? சண்டை சச்சரவுகள் மற்றும் போராட்டங்கள் நிறைந்த காட்டு வாழ்க்கையை சித்தரிக்கும் 'டார்ஜான்' திரைப்படத்தை நீங்கள் பார்க்கவில்லையா? தீய எண்ணங்கள் இருந்தபோதிலும், நீங்கள் தீய செயல்களில் ஈடுபடுவதில்லை; எனவே, இதை விட உயர்ந்த வாழ்க்கை வேறு என்ன இருக்கமுடியும்?

தவறான எண்ணங்கள் இருப்பது இயல்பு; நீங்கள் அவற்றை செயல்களாக மாற்றாத வரை, இதன் மூலமாக, கட்டுப்பாட்டைக் கையாளுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறீர்கள். எண்ணங்கள் உங்களைத் தாக்கவில்லை என்றால், எந்த எண்ணங்களும் இல்லாத கல்லுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?

மன அழுத்தத்தை முறியடிக்க வேண்டும். எண்ணங்களை கடந்து செல்ல உங்கள் மனதைப் பயிற்றுவிக்க வேண்டும். உங்கள் மனதை சரணடையச் செய்யும் காலம் வரை, அதை முகம் கொடுத்துப் பார்க்கக் கூடாது. இதை எவரும் செய்வதில்லை. மனம் சரணடையும்போது, சந்தோஷம், துக்கம் என்ற கேள்விக்கு இடமே இல்லை. கடந்தகால வாழ்க்கையின் எண்ணங்களால் உருவான மனப்படிவங்கள் செலவு செய்யப்படுகின்றன. அவை வரும், போகும்; கண்டு கொள்ளாதீர்கள். மனம்

**ஒரு சாவி கொடுத்த கடிகாரம் போன்றது. இது குறிக்கப்பட்ட நேரத்தில், திருகு சுருள் அதன் ஆற்றலை இழக்கும் வரை மட்டுமே ஒலிக்கும். எனவே அது ஒலித்து, ஓயட்டும்; ஆனால் தீய செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அதை மீண்டும் சுழலச்செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.**

**ஆனாலும், நீங்கள் உயிரைத் துறக்க விரும்பினால், என்னை உறுதியாகப் பற்றி கொண்டு, என்னை அடையும் ஏக்கத்தில் உயிரை விடுங்கள். அதில்தான் உங்கள் விடுதலை உள்ளது. அதுவே உண்மையான இறப்பு. உலக மரணம் என்பது ஒரு பெரிய விஷயம் அல்ல. இருப்பினும், இதுவரை எவரும் என்னை இப்படிப் 'பற்றிப் பிடித்து கொண்டதில்லை.' ஒருவர் உண்மையில் பற்றிப் பிடித்து கொள்வதானால், நான் என்னை விடுவிக்க முயற்சிப்பேன். ஆனால் இதுவரை, என்னை விடுவிப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. மாறாக, நான்தான் உங்களைப் பிடிக்க முயற்சிக்கிறேன்.**

**இதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: முழு உலகமும் ஒரு பூஜ்ஜியத்தைத் தவிர வேறொன்றுமில்லை, மேலும் அதனுடன் தொடர்புள்ள அனைத்தும் பொருளற்றது. மனம் என்பது பிரபஞ்சம். மனம்தான் ஆண், பெண், மிருகம் அனைத்தும்.**

டாலியை ஆறுதல்படுத்த, பாபா அவரை மறுநாள் குல்மாயுடன் நாசிக்கிற்கு அழைத்து வந்தார். டாக்டர் கனியும் ஒரு வார காலம் தங்குவதற்காக இந்த நேரத்தில் நாசிக்கிற்கு அழைக்கப்பட்டார்.

மெஹர் பாபா அப்போது அவரது தலைமையகத்தை மாற்றத் திட்டமிட்டு, ஆண், பெண் மண்டலியை நாசிக் நகரிலிருந்து மீண்டும் மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்துள்ளதாக அவர் அனைவருக்கும் தெரிவித்தார்.

பாபா, நவம்பர் 24 அன்று ருஸ்தம், ஃபிரீனி ஆகியோருடன் மும்பைக்குச் சென்று, ஆதி சீனியர், பாதிரி ஆகியோரை சந்தித்தார். மெஹராபாத் மேல் மலைக்கு நீர் குழாய் இணைப்பு குறித்து விஷ்ணு, சகன், காக்கா ஆகியோருடன் அவர் கலந்துரையாடினார். ஸரோஷ் அடுத்தநாள் மும்பையில் பாபாவை சந்தித்தார்; பாபா 27ஆம் நாள் நாசிக் திரும்பி வந்தார்.

பெண்டு, சிது இருவரும் நாசிக் நகரில் பாபாவை சந்தித்து, நீர்க்குழாய் குறித்த ஆரம்பத் திட்டத்தை விவாதித்தனர். பெண்டு சமீபத்தில் மெஹராபாத் மேல்மலையில் பல்வேறு கட்டுமானங்களைக் கட்டி முடித்தார். மண்டலியின் அனைத்து பொருட்களும் மெஹராபாத்திற்குக் (மூன்று பேருந்துகளில்) கொண்டு செல்லப்பட்ட பின்னர், அனைவரும் 1933 நவம்பர் 30ஆம் நாள் நாசிக் நகரை விட்டு வெளியேறினர்.

பெண் மண்டலி மெஹராபாத் மேல்மலை நீர்த்தொட்டியில் அமைக்கப்பட்ட அறைகளிலும், ஆண் மண்டலி மலையடிவாரத்தில் அமைந்த மருத்துவமனை கட்டிடத்திலும் வாழத் தொடங்கினர். பெண்டு மேலாளராகவும்

விஷ்ணு பஜாரிலிருந்து பொருட்கள் வாங்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். ஜமதார் இரவு கண்காணிப்பாளராக தனது பணியைத் தொடர்ந்தார்; இது அவர் 1925 முதல் செய்து வந்த ஒரு கடமை. சகன் மெஹராபாத்தில் இருந்தபோதும், இந்தியாவில் எந்தவொரு பயணத்திலும் பாபாவின் அருகே தொடர்ந்து கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வந்தார்..

குஸ்தாஜி, மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்படி தொடர்ந்து மௌனம் கடைப்பிடித்து வந்தார். மாஸாஜி, சிது ஆகியோரையும் பாபா அவரது பணியில் மும்முரமாக இருக்கச் செய்தார். அதே போல, குடும்ப குவாட்டர்ஸில் வாழ்ந்து வந்த காளேமாமா (KALEMAMA), அவருடைய சகோதரர் அண்ணாஸாஹேப் காளேயும் (ANNASAHEB KALE) நிரந்தரமாகத் தங்க வந்தனர். பாதிரி, ஹோமியோபதி படிப்பை முடித்துவிட்டு, அரன்காவ்ம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு சிகிச்சை அளித்து வந்தார். பாபாவைப் பற்றி பாரசீக மொழியில் எழுதுவதில் ராவ்ஸாஹேப் ஆர்வமாக இருந்தார்; அதே நேரத்தில் பாபாவின் கடிதப் பரிமாற்றத்தை, சாஞ்சி கவனித்துக்கொண்டார். சிறந்த சிறுவனைத் தேடும் கடமை ஜால்பாய்க்கு வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒன்று அல்லது இரண்டு சிறுவர்களை பாபாவிடம் அழைத்து வர, பாபா ஒவ்வொருவரையும் திருப்பி அனுப்பினார். இந்த நேரத்தில் சுமார் 70 பேர் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர்.

மெஹராபாத் மேல்மலையில் பெண் மண்டலியின் சமையலறைக்கு அடுத்ததாக அமைந்த ஒரு சிறிய அறையில் பாபா சில நாட்கள் தூங்கினார். பின்னர், அவர் 1927ஆம் ஆண்டில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட (எதிர்கால) சமாதி நிலத்தடி மறைவில் தூங்கினார். பாபா மெஹராபாத் மலையடிவாரத்தில் காலை 8:00 முதல் 11:00 வரை, மீண்டும் பிற்பகல் 4:00 முதல் 7:00 வரை மண்டலியின் பணியை மேற்பார்வையிடுவதும், கடிதம் மற்றும் இதர விஷயங்களில் கவனம் செலுத்துவதையும் வழக்கமாகக் கொண்டார். ருஸ்தம், ஆதி சீனியர், ராம்ஜூ மூவரும் நாசிக்கிலிருந்து அவ்வப்போது மெஹராபாத் வந்து சென்றனர்.

மெஹராபாத்தில் இப்போது வாழும் பெண் மண்டலி மெஹரா, மணி, நாஜா, ஸூனாமாஸி, சிறிய கோர்ஷெத், வாலு, காக்குபாய் (விஷ்ணுவின் தாயார்) ஆகியோர் ஆவர். பீலாமாய், அவரது மகள் ஸில்லா இருவரும் அடிக்கடி வருவது உண்டு. ஸூனாமாஸி, காக்குபாய் இருவரும் வாயிலைக் கண்காணித்து வந்தனர். நாஜா சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பாபாவின் உணவு, உடை மற்றும் பிற தனிப்பட்ட தேவைகளை மெஹரா கவனித்து வந்தார்.

ஆதி சீனியர், டிசம்பர் 3ஆம் நாள் பீலாமாய், குல்மாய், டாலி ஆகியோருடன் மெஹராபாத் வந்தார். குல்மாய் பிற பெண் மண்டலியுடன் மேல்மலையிலும், டாலி பாபாவின் குடிலிலும் தங்கினர். ஆதி அன்றிரவு தங்கை டாலியை கவனித்துக் கொண்டார். பின்பு டாலி இதர பெண்களுடன் தங்கினார்.

இந்தக் காலகட்டத்தில், பெரிய கோர்ஷெத் (பாபாவின், காலமான மூத்த சகோதரர் ஜாம்ஷெட்டின் மனைவி) ஆஷ்ரமத்தை விட்டு வெளியேறி

மும்பைக்குச் சென்று, சுதந்திரமாக வாழ விரும்பினார். பின்னர் அவர் மீண்டும் திருமணம் செய்துகொண்டு இறுதியில் கராச்சிக்குக் குடிபெயர்ந்தார், இருப்பினும் அவர் பாபாவின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருந்தார்.

**1933,** டிசம்பர் **6**ஆம் நாள் நௌரோஜி தாதாசாஞ்சி **(**NAOROJI DADACHANJI**)** மும்பையிலிருந்து வந்தார். மெஹராபாத்தில் ஒரு பெரிய குடியிருப்பை உருவாக்கும் திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

இதற்கிடையில் சாஞ்சி தென்னிந்தியாவில் மதராஸ், பிஜாப்பூர் நகரங்களில் வாழும் அன்பர்களை சந்திக்கச் சென்றார். டிசம்பர் **7**ஆம் நாள் ஒரு வாரத்திற்குப் பிறகு திரும்பி வந்த சாஞ்சி, பயணத்தின் அறிக்கையை வெளியிட்டு, மதராஸ் அன்பர்கள், பாபாவை அவரது அடுத்த பிறந்தநாள் விழாவிற்கு அழைக்க விரும்புவதாகக் கூறினார். பாபா அதைக் குறித்து முடிவு செய்வதாகத் தெரிவித்தார்.

மெஹராபாத் மேல்மலையில் மெஹர் பாபாவின் சமாதி நிலத்தடி அருகே வைத்திருந்த சில துத்தநாகம் பூசிய தகர தகடுகள் சமீபத்தில் காணாமல் போயின. ஒரு காலத்தில் பொல்லாத திருடனாக இருந்த சத்ய மாங்கை பாபா அழைத்து, இது குறித்து கேட்டபோது, அவர் இந்தத் திருட்டைச் செய்யவில்லை என மறுத்தார். "**நீங்கள் இந்தப் பொருட்களைத் திருடவில்லை என்றால், உங்கள் கூட்டாளிகளில் ஒருவர் நிச்சயமாக அவ்வாறு செய்துள்ளார். கண்டுபிடித்து அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்**" என்று பாபா கட்டளையிட்டார்.

சத்ய மாங் தனது முன்னாள் திருட்டுக் கும்பலை அழைத்தார், ஆனால் ஒருவரும் குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்ளவில்லை. எனவே சத்ய மாங், "திருடன் நம்மிடையே இருப்பதாக மெஹர் பாபா கூறுகிறார், அவருடைய வார்த்தைகள் எப்போதும் உண்மைதான்" என்று கூறினார்.

இதைக் கேட்ட, கூட்டத்தில் இருந்த ஃபக்கிரா **(**FAKIRA**)** என்பவர், "அப்படியானால், நீங்களே திருடன்!" என்றார்.

ஃபக்கிரா தனது முன்னாள் தலைவரை இவ்வாறு குற்றம் சாட்டியதும், சத்ய மாங் தைரியமாக பதிலளித்தார், "சரி, முதலில் நாம் இருவரும் மெஹர் பாபாவிடம் செல்வோம். அதற்குப் பிறகு துனிக்குச் சென்று, அதன் சாம்பலை நம் வாயிலிட்டு இந்த வார்த்தைகளைக் கூறுவோம்: 'இதைத் திருடியவன் எட்டு நாட்களுக்குள் இறக்கட்டும்!'"

ஃபக்கிரா இதைச் செய்ய ஒப்புக் கொண்டார், இருவரும் அவ்வாறே செய்தனர். ஃபக்கிரா ஒரு வாரத்திற்குள் காலமானதும், அவர் உண்மையில் திருடன் எனத் தெரியவந்தது. இது சத்ய மாங்கின் முன்னாள் கும்பல் உறுப்பினர்களை, பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுடன், அவர்களின் தவறான திருட்டுப் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது, உள்ளூர் மக்களைப் பெரிதும் நிம்மதி அடையச் செய்தது.

சத்ய மாங், டிசம்பர் 7ஆம் நாள் மெஹராபாத்திற்கு வந்து, நடந்ததை விவரித்தார். சத்ய மாங்கிற்கு ஒவ்வொரு மாதமும் உதவித்தொகை வழங்க பாபா ஏற்பாடு செய்து, மாதத்திற்கு ஒரு முறை மெஹராபாத்திற்கு வருமாறு அறிவுறுத்தினார். பாபாவும் ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவரை வேலைக்கு வரத் தயாராக இருக்குமாறு கூறி அனுப்பினார்.

ருஸ்தம், ஃபிரீனி, ஸரோஷ் மூவரையும் மெஹர் பாபா 1933, டிசம்பர் 8ஆம் நாள் மெஹராபாத்திற்கு அழைத்தார். ருஸ்தத்தின் திரைப்பட ஸ்டுடியோ திட்டங்கள் குறித்து இன்னும் விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன.

10ஆம் தேதி, ஜமதாருடன் சகனுக்கு இரவு கண்காணிப்பாளராகப் பொறுப்பு வழங்கப்பட்டது. சகனுக்கு பதிலாக, பாபாவின் சமாதி நிலத்தடி அறை அருகே மாஸாஜி, காக்கா இருவரும் தூங்க வேண்டியிருந்தது. அன்று இரவு, பாபா ஆரோக்கியமாக இருப்பது பற்றி அனைவரையும் எச்சரித்தார்: **“மெஹராபாத்தின் வறண்ட காலநிலை, உணவு ஜீரணத்திற்கு நல்லது என்றாலும், சளி, குளிருக்கு மிகவும் பாதகமானது, ஏனெனில் இது மார்பை உடனடியாக பாதிக்கும்; மேலும் எந்த அறிகுறிகளும் இல்லாமல் நிமோனியா** (PNEUMONIA) **மிக விரைவாகத் தாக்கும். இதைத் தடுப்பதற்கான சிறந்த வழி மார்பை குளிர்ச்சியிலிருந்து பாதுகாப்பதாகும். எனவே, இன்று முதல், ஒவ்வொரு மாலையும் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் அனைவரும் ஓர் உள்சட்டையை அணிந்து, இரவு முழுவதும், சூரிய உதயம் வரை வெப்பமாக வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறேன்.”**

டிசம்பர் 11 அன்று நாராயண் மஹாராஜின் நேரடி கண்காணிப்பில் கேட்காவ்ம் கிராமத்தில், இந்துக்களுக்கு பெரிய அளவிலான விழா ஒன்றை நடத்தி, விருந்து அளிக்கப்போவதாக ஓர் அறிக்கை வெளிவந்தது. அதற்கு பதிலளித்த பாபா கருத்துத் தெரிவிக்கையில்…

**இந்த இரண்டு வயதான மனிதர்களும்** (நாராயண், உபாஸனி மஹாராஜ்) **இந்துக்களுக்கு, குறிப்பாக பிராமணர்களுக்கு, இப்போதெல்லாம், பரந்த மனப்பான்மையுடன் அதிக இடம் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். அவர்களுக்குக் கீழ், பிராமணர்கள் தழைத்தோங்கி வருகிறார்கள்! இத்தகைய செயல்பாடுகளுக்கு ஆயிரக்கணக்கில் பணம் செலவிட்டுள்ளனர், மேலும் இதுபோன்ற சடங்கு சம்பிரதாய விஷயங்களுக்காகச் செலவழித்து, பணத்தை விரயம் செய்வது, வகுப்புவாதத்தைத் தூண்ட வாய்ப்பாக அமையும். மனிதகுலத்தின் உலகளாவிய மேம்பாட்டிற்காக நான் தொடர்ந்து பணியாற்றுகிறேன், அன்பை மட்டுமே தருகிறேன். அதே வேளையில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள்!**

**இத்தகைய வகுப்புவாத பிரிவினையை உருவாக்கி, இருவரும், விழாக்களை அவர்களின் நேரடி கண்காணிப்பில் நடத்த எப்படி அனுமதிக்க முடியும்? இது எனக்கு மிகவும் அதிர்ச்சியாக உள்ளது. இந்த சாதி மத தீய**

**எண்ணங்களுக்கு, மேலும் மேலும், அதற்கு அப்பாலும் இடம் கொடுக்கிறார்கள். விவேகானந்தர் கூட, எவ்வளவுதான் கற்றறிந்தவராக இருந்தபோதிலும், இத்தகைய வழிமுறைகளைக் கையாண்டார்.**

**பரிபூரண இறைநிலையை அடைந்தவர்களில், நான் மட்டுமே எந்தவொரு குறிப்பிட்ட மதத்தையும் கடைப்பிடிக்குமாறு போதிக்கவோ, அதை சகித்துக்கொள்ளவோ அல்லது எந்தவொரு குறுங்குழுவாத போக்கையும் அனுமதிக்கவோ இல்லை. ஆரத்தி, பூஜை போன்ற பிற சடங்கு ஆர்ப்பாட்டங்களைக் கூட நான் நிறுத்திவிட்டேன், மெஹராபாத்தில் எனது பொது நடவடிக்கைகளின் ஆரம்ப நாட்களில் அதை நான் அனுமதித்தேன்.**

மெஹர் பாபா அவரது இரண்டு சத்குருக்களின் நடவடிக்கைகளைக் குறித்து, கூர்மையான வார்த்தைகளால் விமர்சித்ததைக் கண்டு, மண்டலியில் சிலர் மிகவும் ஆச்சரியப்பட்டனர்; எனவே பாபா மேலும் விளக்கினார்:

**அவர்கள் பணத்தை வீணடிப்பதில் நான் தீவிரமாக இருப்பதாக நீங்கள் நினைத்தீர்களா? இது ஒரு நகைச்சுவை நாடகம்! இந்த இரண்டு மஹாத்மாக்களும், அனைத்திலும் முன்னோடியாக இருந்து, ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் இந்தக் குறுங்குழுவாத பிராமணர்களின் பாவங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டியது அவசியம். இந்தக் காரணத்திற்காகத்தான், இரண்டு குருநாதர்களின் தர்பாரில் சாதி, மதம் சடங்கு போன்ற ஆர்ப்பாட்டங்களுக்கு இடமில்லை என்றாலும், இப்போது இந்த விருந்து உபசாரங்களை அனுமதிக்கிறார்கள்.**

டிசம்பர் 20ஆம் நாள், ஒரு வாரத்திற்குப் பிறகு, ஷோலாப்பூர் செல்லும் வழியில் சத்குரு உபாஸனி மஹாராஜ் மெஹராபாத் வழியாகச் சென்றார் என்றும், காரில் எரிபொருள் நிரப்ப அஹமதுநகரில் (குஷ்ரு குவாட்டர்ஸ் அருகில்) ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் காரை நிறுத்தி, மஹாராஜ் அங்கே நின்று கொண்டிருந்தார் என்றும் தகவல் வந்தது.

இதற்கிடையில், கெ.ஜெ. தஸ்தூர், மெஹர் பாபா ஒரு மோசடிக்காரர் என்று பகிரங்கமாக அறிவித்த போதிலும், பாபாவிற்குத் தொடர்ந்து கடிதம் எழுதி, பண உதவி கேட்டார்.

1933, டிசம்பர் 14 அன்று, மெஹர் பாபா, அவரிடம் பணம் எதுவும் மிஞ்சவில்லை என்று பதிலளித்தாலும், சமீபத்தில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட ‘மெஹர் பாபாவின் கேள்விகளும் பதில்களும்’ என்ற கையேட்டின் 107 பிரதிகளை அவருக்கு அனுப்புவதாகவும், அதிலிருந்து வரும் வருமானத்தை அவர் வைத்துக் கொள்ளலாம் என்றும் பதில் எழுதினார். காலம் பாபாவின் நகைச்சுவை உணர்வை நினைத்து பூரிப்படைந்தது: "என்ன ஒரு முரண்பாடு! மெஹர் பாபாவிற்கு எதிராகக் கடுமையாகப் பேசிய மனிதர், அவரது புத்தகங்களைப் பரிந்து பேச வேண்டிய சூழ்நிலை."

மெஹர் பாபாவின் இந்த யோசனையில் தஸ்தூர் மகிழ்ச்சியடையவில்லை, அதை அவமானமாகப் பார்த்தார். பின்னர், அவர் மண்டலிக்கு இவ்வாறு எழுதினார்:

குறைந்தபட்சம் சொல்லப்போனால், மெஹர் பாபாவைக் குறித்த, கீழ்த்தரமான பிரச்சாரத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு புத்தகத்தின் நகல்களை நான் விற்க வேண்டும், அல்லது இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்துவது, வெறுமனே மூர்க்கத்தனமானது. அவர் மீது எனக்குள்ள எல்லா அன்புடனும், நான் இப்போது பாபாவை ஒரு சத்குரு என்பதைக் காட்டிலும், அனைத்தும் அறிந்தவர் போல பாசாங்கு செய்பவர், ஆன்மீக வஞ்சகர் என்றே கருதுகிறேன். அவதூறுகளால் என்னைக் கறைப்படுத்த முயற்சிப்பதன் மூலம் உங்களை மகிமைப்படுத்த முடியும் என்று நினைத்தால், நீங்கள் ஒரு முட்டாளின் சொர்க்கத்தில் வாழ்கிறீர்கள் என்று அர்த்தம்.

கீழ்வரும் இந்த பதிலை மெஹர் பாபா, தஸ்தூருக்கு எழுத்துப்பலகை மூலம் எடுத்துரைத்தார்:

**நீங்கள் என்னைப்பற்றி என்ன கூறினாலும் எனக்குக் கவலையில்லை. ஒருவர் என்னை ஒரு குருநாதர் என்றும், இன்னொருவர் என்னை 'அனைத்தும் அறிந்தவன் போல போலி வேஷம் போடுபவன்' என்றும், மூன்றாவது ஒருவர் வேறு ஏதேனும் கூறி அழைத்தாலும் - எல்லாமே எனக்கு ஒன்றுதான், ஏனெனில் நான் என்னவென்று எனக்குத் தெரியும். என்னை எந்தப் பெயரில் அழைத்தாலும் என்னுடைய பரிபூரணமான நிரந்தர நிலையில் எந்த வேறுபாடும் இல்லை.**

**என்னால் யார் ஒருவரையும் 'அவதூறு' செய்ய முடியாது, ஏனெனில் எல்லோரிடமும் எனது சொந்த சுயத்தையே நான் காண்கிறேன். அப்படியானால் ஒருவர் தனது சுயத்தை எப்படி அவதூறு செய்ய முடியும்? என்னிடமிருந்தோ, அல்லது எனது மண்டலியிடமிருந்தோ, அவதூறு பற்றிய உங்கள் எண்ணம் தவறானது அல்லது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.**

**அவமதிப்புப் பற்றிய உங்கள் தவறான எண்ணத்தைப் பொறுத்தவரை - நான் உங்களை நினைத்துப் பரிதாபப்படுகிறேன்! ஏனெனில், உங்களுக்காக என் அன்பு அன்று போலவே இன்றும் இருக்கிறது - நீங்கள் என்ன சொன்னாலும், செய்தாலும் அது எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும் - மேலும் நீங்கள் என்னை நேசித்தீர்கள் என்று நினைத்து, அப்போது கேட்டது போல் இப்போதும் அன்பாகப் பணம் கேட்கிறீர்கள். நீங்கள், போலி நாடகமாடும் குருநாதர் என்று எடுத்துக் கொள்ளும் ஒருவரிடமிருந்து பணம் கேட்பது சுத்த பாசாங்குத்தனம்!**

தஸ்தூர் மீண்டும் எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: ஒரு தனியார் பார்சி பத்திரிகை, உங்களுக்கு எதிரான ஒவ்வொரு கட்டுரைக்கும் எனக்கு ரூ. 50 வழங்கத் தயாராக உள்ளது, ஆனால், இந்த வழியில் பணம் சம்பாதிக்க நான் விரும்பவில்லை...

பாபா அவரது ஒப்பிலா இரக்க குணத்தில், ஆதி சீனியர் மூலமாக, பதில் கடிதம் எழுதினார்:

**பாபா கூறுகிறார், இதைச் செய்ய அவர் ஒப்புதல் அளிப்பதன் மூலம், பணம் சம்பாதிக்க அவர் உதவ முடியுமானால், அவர் உங்களுக்கு உதவக் கூடத் தயாராக இருக்கிறார். ஆகையால், அவருடைய பெயரை இப்படிப் பேரம் பேசி, பணம் சம்பாதிக்கும் வணிகத்தில் பயன்படுத்தலாம்.**

காலம் இதை வியப்பாகப் பார்த்தது. "தஸ்தூருக்கு பாபா கூறியது அவரது கருணையின் வெளிப்பாடு என்று கூறலாம். அவதார புருஷர், அவரை அவதூறாக நடத்தி மக்களுக்கு உதவ முடியுமென்றால், அவர் அதை அனுமதிக்கக் கூடத் தயாராக இருக்கிறார்!"

மெஹர் பாபா, 1933, டிசம்பர் 13ஆம் நாள், பெஹராம், நௌரோஜி ஆகியோருடன் மெஹராபாத்தில் ஒரு திரைப்பட ஸ்டுடியோவைக் கட்டுவது குறித்தும், வரவிருக்கும் ஐரோப்பியர்கள் தங்குவதற்கான இடவசதிகளைத் தீர்மானிப்பது பற்றியும் கலந்துரையாடினார். மெஹராபாத்தில் ஸ்டுடியோவும், மும்பையில் தயாரிப்பு மற்றும் இதர பணிகளைக் கையாளவும், மேற்கத்தியர்களை அஹமதுநகரில் தங்க வைக்கவும் பாபா பரிந்துரைத்தார்.

ஜால்பாய் டிசம்பர் 17ஆம் நாள் நாசிக் நகரிலிருந்து பாபு காளேயுடன் மெஹராபாத் வந்தார். அன்று, பாபாவும் மண்டலியும் ஒரு டென்னிஸ் பந்துடன், கீழ் மெஹராபாத்தில் பங்களாவிற்குப் பின்னால் கிரிக்கெட் விளையாடினர். மேலும், பாபா, நோரினா, ஆதி சீனியர் ஆகியோருடன் அறக்கட்டளை (TRUST) ஒன்றை அமைத்து, மூவரும் அதன் அறங்காவலர்களாகச் (TRUSTEES) செயல்புரிவது குறித்து மண்டலியுடன் விவாதித்தார்.

மெஹர் பாபாவின் வருகை, நகர, கிராம மக்களுக்கு, ஒவ்வொரு நாளும் அவரது தரிசனத்திற்காக வரும் வாய்ப்பை வழங்கியது. இத்தகைய திரள் திரளான மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த, இறுதியில், வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணி வரை மட்டுமே தரிசனம் வழங்கப்படும் என்ற அறிவிப்புப்பலகையை வைக்க வேண்டியது அவசியமானது.

அடுத்த நாள், பிலூ ஸட்டா, காக்கா சிஞ்சோர்கர் (KAKA CHINCHORKAR) இருவரும் மெஹர் பாபாவைப் பார்க்க வந்தனர். டிசம்பர் 20ஆம் நாள், மதியம் மூன்று மணி அளவில் ஆதி சீனியர் பாபாவை அவரது காரில் அஹமதுநகர் விமானத்தளத்தில் நடைபெற்ற விமான கண்காட்சி நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றார். இருப்பினும், பாபா நீண்ட நேரம் கண்காட்சியைப் பார்வையிடாமல், ஏதோவொன்றை நினைத்து வருத்தமடைந்தவர் போல், ஆதியிடம் அவரை மீண்டும் மெஹராபாத்திற்குத் திருப்பி அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

1933 டிசம்பர் 19ஆம் நாள் காலை தனது 57 வயதில் முன்ஷிஜி (முன்ஷி ரஹீம்) மாரடைப்பால் நாசிக்கில் காலமானார் என்று நவல்

தலாட்டியிடமிருந்து தொலைத்தந்தி வந்தது. கஸ்பாபேட்டில், மெஹர் பாபாவுடன் (மேர்வான்) முதல் தொடர்பில் வந்த பிரதானமானவர்களில் ஒருவர். ஸையத் ஸாஹேப், முன்ஷிஜியுடன் நெருக்கமாக இருந்தார், அவருடன் பணியாற்றினார்; அவர் தான் முன்ஷிஜிக்கு மெஹர் பாபாவை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர். முன்ஷிஜி, பாபா மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். பாபா, நவல் தலாட்டிக்கு இவ்வாறு தொலைத்தந்தி அனுப்பினார், "**உன்னதமான பெரியவர் என்னிடம் வந்துவிட்டார்**."

முன்ஷிஜியின் மரணத்தால் ஸையத் ஸாஹேப் ஆழ்ந்த வருத்தத்தில் காணப்பட்டார்; பாபா அவரையும், நவல், அப்துல்லா ஜாஃபர், ராம்ஜூ ஆகியோரை மெஹராபாத்திற்கு டிசம்பர் 22ஆம் நாள் வரவழைத்தார். ஸையத் ஸாஹேப், முன்ஷியின் இழப்பால் அவதியுறுவதை அறிந்த பாபா, இவ்வாறு ஆறுதல் கூறினார்: "**மரணம் தூக்கம் போன்றது; தூக்கம் மனிதனுக்கு இன்றியமையாதது போல, மரணமும் வாழ்க்கையின் அத்தியாவசியமான பாகமாகும். உண்மையில், எவரும் பிறக்கவில்லை, எவரும் இறக்கவுமில்லை. இது அனைத்தும் ஒரு கனவு. ஒரு கனவிற்கு என்னதான் மதிப்பு இருக்கிறது?**

"**முன்ஷிஜி என்னிடம் வந்து மகிழ்ச்சியாக இருக்கிறார்; எனவே அவரைப் பற்றி வருத்தப்படுவது சரியல்ல. மாறாக, முன்ஷிஜியின் மகிழ்ச்சியான நிலையை எண்ணி நீங்கள் பொறாமைப்படுகிறீர்களா?**"

இது ஸையத் ஸாஹேபைப் புன்னகைக்கச் செய்தது, "ஒருபோதும் இல்லை, பாபா!"

"**அப்படியானால் நீங்கள் ஏன் உயிரை விட்டுவிடுவது போலத் தோன்றுகிறீர்கள்?**" பாபா நகைச்சுவையாகக் கேட்டார். ஸையத் சிரிப்பை அடக்கமுடியாமல், மீண்டும் மகிழ்ச்சியாக உணர்ந்தார். பகலில் மெஹராபாத்தில் தங்கி, இரவு ரயிலில் நாசிக் புறப்பட்டுச் சென்றனர்.

மெஹர் பாபா நாசிக்கில் தங்கியிருந்தபோது, ஸரோஷ் தனது சொந்த தனியார் வணிக விவகாரங்களில் மும்முரமாக இருந்ததால், பாபாவைப் பார்க்க ஒரு முறை கூட செல்லவில்லை. பாபா மெஹராபாத் திரும்பி வந்த பின்பு, தினமும் 3 மணி முதல் 6 மணி வரை பாபாவை சந்திக்க ஸரோஷூக்குக் கடுமையான உத்தரவு வழங்கப்பட்டது. இவ்வேளையில், ஒவ்வொரு நாளும் ஸரோஷுக்கு ஒரு வித்தியாசமான, விசித்திரமான வரவேற்பு வழங்கப்பட்டது. பாபா அவரைத் தவிர இதர அனைவருடனும் பேசுவதை வழக்கமாகக் கொண்டார். பாபா அவரிடம் எதையும் விசாரிக்கவோ, அவரை பார்க்கவோ இல்லை. ஸரோஷ் உணர்வால் மிகவும் காயப்பட்டவர் போலத் தோன்றினார்; ஆனால் எதுவும் சொல்லவில்லை. பல நாட்களுக்குப் பிறகு, பாபா அவரிடம், "**உங்களுக்கு ஏதேனும் பிரச்சினையா? எதையாவது நினைத்து வருத்தப்படுகிறீர்களா?**" என்று கேட்டார்.

அதற்கு ஸரோஷ் இவ்வாறு பதிலளித்தார், "நீங்கள் என்னை ஒவ்வொரு மதியமும் இங்கே அழைக்கிறீர்கள் - என்னை மண்டலியுடன் மணிக்கணக்கில் உட்கார வைக்கிறீர்கள் - ஆனால் நீங்கள் என்னை ஒருமுறை கூட பார்க்கவில்லை! என்னை முற்றிலும் புறக்கணிக்கிறீர்கள்!"

**"இந்தப் புறக்கணிப்பை நீங்கள் உணர்கிறீர்களா?"**

"ஆமாம், பாபா, நான்.." என்று ஸரோஷ் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்.

பாபா உடனே பதிலளித்தார், **"நாசிக் நகரில் அத்தனை வருடங்கள் நீங்கள் என்னைப் பார்க்க வராதபோது, நான் எப்படி உணர்ந்திருப்பேன் என்பதை இப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள்! நீங்கள் என்னைப் பார்க்க வராததை நினைத்து நான் எவ்வளவு சோகமாக உணர்ந்தேன் என்று நீங்கள் எப்போதாவது நினைத்தீர்களா? நான் உங்களிடம் கவனம் செலுத்தாததால் நீங்கள் வேதனைப்படுகிறீர்கள். என் மீது கவனம் செலுத்தாத உங்கள் சொந்த மருந்தின் சுவை உங்களுக்கு எப்படிப் பிடிக்கும்?"**

ஸரோஷ் கண்ணீர் வழிய மன்னிப்புக் கோரி பாபாவின் காலடியில் விழுந்தார். பாபா அவரை எச்சரித்தார், **"ஸரோஷ், நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். நீங்கள் என்னைக் கண்டுகொள்ளாமல் அல்லது என்னிடமிருந்து விலகிச் செல்ல எவ்வளவுதான் விரும்பினாலும், நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது - மேலும் நான் உங்களை விடுவிக்கவும் முடியாது! நான் உங்களிடத்தில் இருப்பதுபோல, நீங்களும் என்னிடத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் என்னை நம்பவில்லையென்றால், உங்கள் சட்டையைத் திறந்து பாருங்கள்!"**

ஸரோஷ் பின்னர் இவ்வாறு விவரித்தார்: "இதை நான் செய்தேன், அங்கே எனது வெறுமையான மார்பில் பாபாவின் உருவம் இருந்தது. இதைக் கண்டு, நான் அவருக்கு முன்பாக, தரையில் எனது தலையை அறைந்துக் கதறினேன்; இரத்தம் வெளியேற நான் மயக்கமானேன். பின்னர் எனது தலையை அவர் மடியில் வைத்து, என்னை உயிர்ப்பித்து ஆறுதல்படுத்தினார்."

ஸரோஷ் அன்றிலிருந்து மீண்டும் தனது பழைய நிலைக்கு வந்தார், மேலும் பாபாவிடம் தன்னால் முடிந்தவரை அடிக்கடி சென்றார். ஸரோஷின் மனைவி விலூ, கணவருடன் மெஹராபாத்திற்கு வருவதில்லை, ஏனெனில் அவர் அந்த நேரத்தில் மெஹர் பாபா மீது தனது பக்தி உணர்வைக் காட்டவில்லை. ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு, விலூ தனது கணவரின் குருநாதரை நேசிக்கத் தொடங்கினார்.

மெஹர் பாபா, 1933 டிசம்பர் 23 அன்று அரன்காவ்ம் கிராமத்திற்குச் சென்றார். வாலு, ஒவ்வொரு நாளும் மேல் மலைக்குச் சென்று பெண் மண்டலியுடன் இருப்பது வழக்கம். குடும்ப குவாட்டர்ஸில் தங்கியிருந்த வாலு, மாருதி பாட்டீல், சகனின் குடும்பத்தினர் அனைவரின் இல்லங்களுக்கும் பாபா விஜயம் செய்தார்.

பாபா ஒருமுறை வாலுவிடம், **“நான் மண்டலி குவாட்டர்ஸுக்குச் செல்ல தினமும் இரண்டு முறை மலையிலிருந்து இறங்கி வந்து, மேலும் இரண்டு முறை மேலே நடக்க வேண்டும். பாதையில் வரிசையாக நிழல் தரும் மரங்கள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்”** என்று குறிப்பிட்டார்.

வாலு மிகவும் அக்கறையுள்ள, அர்ப்பணிக்கும் மனப்பான்மை மிக்க பெண்மணி, அன்றே, குறுகிய மண் நிறைந்த சாலையின் இருபுறமும் மரக்கன்றுகளை நட்டுப் பேணத் தொடங்கினார். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மரங்களை வளரச் செய்வது கடினம், ஆனால் வாலு இதற்காக, தொலை தூரத்திலிருந்து தனது தோள்களில் தண்ணீரை சுமந்து வந்து, மரங்களைப் பேணி வளர்த்தார். வாலுவின் ஆரம்பகால உழைப்பின் காரணமாக, மெஹராபாத் மலையை நோக்கி செல்லும் பாதையின் இருபுறமும் அதே நிழல் தரும் மரங்கள் இன்றும் காணப்படுகின்றன. வாலுவிற்கு வேறு எத்தனையோ பணிகள் இருந்தபோதிலும், இந்த வேலையை அவர் கருத்தாகச் செய்துவந்தார்; இதனால் மெஹராபாத்திற்கு வரும் அனைத்து யாத்ரீகர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மெஹராபாத்தில் தண்ணீர் ஒரு சிக்கலான பிரச்சினையாக இருந்தது, ரயில் பாதைகளின் கீழ் புதிய குழாய் பதிக்கும் பணி டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. மூன்று வாரத்தில் அனைத்து குழாய்களும் இணைக்கப்பட்டு, மேல்மலையில் அமைந்த நீர்த்தொட்டியில் டிசம்பர் 24ஆம் தேதி பிற்பகலில், (கையால் இயக்கப்படும்) இயந்திர பம்ப் மூலமாக முதல் முறையாக மேல்மலைக்குத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது; இது ஒவ்வொரு நாளும் மாட்டு வண்டி மூலமாக நீர் எடுத்துச் செல்லும் கடினமான பணியை மிச்சப்படுத்தியது.

1933, டிசம்பர் மாதம் முழுவதும், மெஹர் பாபா தனது மேற்கத்திய அன்பர்களுடன், சாஞ்சி மூலமாக, வழக்கமான கடிதப் பரிமாற்றத்தைத் தொடர்ந்தார்; அவர்களுடைய சில பதில்கள் கீழே வருமாறு:

டிசம்பர் 5ஆம் தேதி, பாரிஸ் நகரிலிருந்து நான்னி எழுதியிருந்தார்:

உங்களைப் பற்றி சிந்திக்க முடிந்ததில் நான் மிகப் பெரிய பாக்கியவானாக இருக்கிறேன். உங்கள் ஒப்புதலுடன் நான் ஏதாவது செய்ய முடியும் என்று பிரார்த்தனை செய்கிறேன். எப்போதும் உங்களுக்கு சேவை செய்வதே எனது மிகப்பெரிய மகிழ்ச்சி.

குயன்டின், பாரிஸ் நகரிலிருந்து டிசம்பர் 7ஆம் நாள் எழுதிய கடிதத்தில்:

கிறிஸ்துமஸ் எனக்கு உண்மையானதாக உணரப்படுவது இதுவே முதல் முறையாகும். நீங்கள் அப்போது அற்புதமாக இருந்திருக்க வேண்டும் - இன்னும் அதிக அற்புதமாக இப்போது இருக்கிறீர்கள்!

நான் உங்களுடன் வந்து இணையும் தகுதியை அடையப் பெறுவதற்கு முன்னதாக, நான் நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது;

ஆனால் சூழ்நிலைகள் எப்போதும் எனக்கு சாதகமாக இருக்கின்றன. நிகழும் ஒவ்வொன்றிலும் உங்கள் உதவிக் கரங்களை நான் காண்கிறேன்.

பாரிஸ் நகரம் - ருவானோ, டிசம்பர் 9ஆம் நாள் எழுதியிருந்தார்:

நான் எப்போதும் உங்களைப் பற்றி நினைக்கிறேன், எனது பிரியமான பாபா, நான் உங்களை நினைக்கும் போதெல்லாம், பாதை சீராகி, மாய ரூபங்கள் மறைந்துவிடுகின்றன. பல சிரமங்கள் இருந்தாலும், அனைத்தும் சிறந்தவை, நன்மைக்கே என்று எனக்குத் தெரியும். நீங்கள் விரும்பியதை மட்டுமே செய்ய நான் ஏங்குகிறேன். நாம் அனைவரும் மீண்டும் ஒன்றாக இருக்கும்போது எவ்வளவு அருமையாக இருக்கும்!

அனிதா, ஸூரிக், டிசம்பர் 13:

உங்கள் கடிதங்கள் எனக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தருகின்றன. என் இதய தேவனே! நான் உங்களை எப்படி நேசிக்கிறேன். நீங்கள் இல்லாத இடத்திலெல்லாம் ஒன்றும் இல்லை, என் இதயம் உங்களுக்காகத் தொடர்ந்து கண்ணீர் சிந்துகிறது. நான் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், எனது சுயமானது, உங்களில் மூழ்கிவிட்டது; எனக்கு எல்லாமே நீங்கள்தான். என்னை உங்களுடன் நெருக்கமாக வைத்திருங்கள். உங்கள் குழந்தை தனது தந்தை அருகில் இல்லாமல் தவிக்கிறது.

1933, டிசம்பர் 20ஆம் நாள், லண்டனிலிருந்து வில் பேக்கெட் எழுதிய கடிதத்தில்:

உங்களையும், உங்களின் வலிந்து ஈர்க்கும் அன்பையும் நாங்கள் எப்போதும் உணர்கிறோம், மேலும் இது எங்களின் மூலமாக ஒளிரச்செய்து அனைவரையும் அரவணைக்கப் பிரார்த்தனை செய்கிறோம். நான் கேட்க அல்லது சிந்திக்க முடிகிற அனைத்திற்கும் மேலாக நீங்கள் என்னை ஆசீர்வதித்துள்ளீர்கள். எல்லா இடங்களிலும், எல்லோரிடமும் என் இதயத்திற்கு நீங்கள் வெளிப்படுத்திய பரிபூரணமான ஒன்றை நான் தேட முயற்சிக்கிறேன். மேலும் அங்கே நீங்கள் சிம்மாசனத்தில் நிரந்தரமாக அமர்ந்துள்ளீர்கள்.

ஐரோப்பாவிலிருந்து, நோரினா, அனிதா, ஆண்ட்ரே அரோன், ஓட்டோ ஹாஸ்-ஹெய், ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் ஆகியோர் இந்தக் ‘கிறிஸ்துமஸ்’ தந்தியை பாபாவிற்கு அனுப்பினர்:

கடந்த கால கிறிஸ்துவை நினைவில் கொண்டு, இக்கால அவதார புருஷரை வாழ்த்தி வணங்குகிறோம்.

பாபா விரும்பும் ஒரு சிறந்த சிறுவனைக் கடைசியாகக் கண்டுகொண்டதாக நினைத்து ஜால்பாய், ‘பகீரத்’ பிரேம்ராஜ் திவாரியை (BHAGIRATH PREMRAJ TIWARI) பாபாவிடம் அழைத்து வந்தார். பகீரத், பார்னேர் (PARNER) கிராமத்தைச் சேர்ந்த, தாயாரை இழந்து வாழ்ந்த, பத்து வயது சிறுவன், பாபா

அவனை மிகவும் விரும்பினார். **“நான் உங்களுக்கு வழங்கும் வேலையைச் செய்வீர்களா?”** பாபா சிறுவனிடம் கேட்டார்.

"நிச்சயமாக," சிறுவன் பதிலளித்தான்.

பாபா, ஆதி சீனியரை, அந்த சிறுவனின் தந்தையிடம் அனுப்பி, அவன் ஆசிரமத்தில் தங்க அனுமதியைப் பெற்று வருமாறு கூறினார். ஒவ்வொரு நாளும் அவருக்காக ஒரு மண் பானையில் குடிநீரை நிரப்புமாறு பாபா, பகீரத்திற்கு அறிவுறுத்தினார். அவனும் அவ்வாறே செய்யத் தொடங்கி, தொடர்ந்து 20 நாட்கள் அதைத் தவறாமல் செய்து வந்தான்; ஆனால் இந்த இருபது நாட்களில் பாபா ஒரு முறை கூட அந்தப் பானையிலிருந்த நீரை அருந்தவில்லை. 21ஆம் நாள், பகீரத் மண் பானையை நிரப்பவில்லை; ஆனால் பாபா அன்று அருந்துவதற்குத் தண்ணீர் கேட்டார்.

பகீரத் “நான் இன்று பானையை நிரப்பவில்லை” என்று பதிலளித்தான்.

ஏன் என்று பாபா அவனிடம் கேட்க, அவன், "நான் அதை 20 நாட்கள் நிரப்பி வைத்தேன், ஆனால் நீங்கள் அதிலிருந்து ஒருமுறை கூட தண்ணீர் அருந்தவில்லை. அதனால் என்ன பயன் என்று நினைத்தேன்" என்று விளக்கமளித்தான்.

**“நான் பானையிலிருந்து தண்ணீரை எடுத்தாலும், எடுக்காவிட்டாலும், உன்னைப் பொறுத்தவரையில், அதில் நீ செய்ய வேண்டியது வேறு என்ன உள்ளது?”** என்று வினவி பாபா, **“நான் உனக்குத் தரும் எந்த வேலையையும் நீ செய்ய வேண்டும், நீ கவலைப்பட வேண்டியது இது மட்டும்தான்”** எனக் கூறியது பகீரத்திற்கு ஒரு நல்ல பாடமாக அமைந்தது. அப்போதிருந்து பாபாவிற்குக் கீழ்ப்படிவது குறித்து நேர்மையாக நடந்து கொண்டான்.

பகீரத் ஒரு முறை சிந்தனையில் ஆழ்ந்திருந்த வேளையில், பாபா அவனிடம், **“நீ என்ன நினைக்கிறாய்?”** என வினவினார்.

"ஒன்றுமில்லை" என்று பதிலளித்தான் அந்த சிறுவன்.

**“ஓ, வெட்கப்பட வேண்டாம், என்னிடம் சொல்லு.”**

"சொல்ல எதுவும் இல்லை, பாபா."

**“ஒரு எறும்பின் எண்ணங்களைக் கூட என்னால் அறிய முடியும்போது, உனது எண்ணங்களை என்னால் அறிய முடியாதா?”** என்று கேட்டார்.

அப்போது பகீரத், “நான் எனது சகோதரியைப் பார்க்க விரும்புகிறேன்” என்றான்.

**“அப்படியானால், நீ ஏன் அதைச் சொல்லவில்லை? சரி, மூன்று நாட்களுக்கு நீ சென்று வர என் அனுமதியை வழங்குகிறேன். சென்று வா”** என்றார்.

அஹமதுநகரில் வாழ்ந்த ருஸ்தம் குஸ்தாத் ஹதிதாரு (RUSTOM GUSTAD HATHIDARU), ருஸ்தம் காக்கா (RUSTOM KAKA) என்று பின்னர் அன்பாக

அழைக்கப்பட்ட அவர், அப்போது, ஏறக்குறைய 25 வயது பருவம், ஆதி சீனியரின் தந்தை கான்ஸாஹேபுடன் மெஹர் பாபாவைப் பார்க்க 1925ஆம் வருடத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில், அவர் கான்ஸாஹேபை மெஹராபாத்திற்கு, காரில் அழைத்து வருவது வழக்கம்; அவருக்குக் கார் ஓட்டுவதில் ஓர் அலாதி ஆசை, வேறு எதிலும் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. அடிக்கடி மெஹராபாத் வந்து சென்றாலும், அவர் மெஹர் பாபா மீது எந்த விதமான சிறப்பு கவனமும், அக்கறையும் காட்டுவதில்லை; பாபாவிற்கு 'நமஸ்காரம்' கூட செலுத்துவதில்லை; ஆனாலும் பாபா அவரை அன்பாக விசாரித்து வந்தார்; ருஸ்தம் காக்கா எந்த விதமான ஈர்ப்பையும் உணர்ந்ததில்லை. அவர் ஒரு கண்டிப்பான பார்சி மட்டுமன்றி, ஸொராஸ்ட்ரிய மரபுவழி கொள்கைகளைப் பின்பற்றாத ஒருவரை நம்புவது தவறு என்று நினைத்து வந்தார். இந்த நம்பிக்கையால் பல ஆண்டுகளாகியும் பாபாவின் அன்பு, அவரிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

1933ஆம் வருடம் பாபா மெஹராபாத்தில் தங்கியிருந்தபோது, ருஸ்தம் காக்கா மீண்டும் ஒருமுறை கான்ஸாஹேபை மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார்; வந்தவர் வழக்கம் போல் ஒதுங்கி இருந்தார். இருப்பினும், இந்த முறை பாபா, ருஸ்தம் காக்காவை தனது அறைக்குள் அழைத்தார். பாபா சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்து, பின்னர் அவரை ஒரு புன்னகையுடன் பார்த்தார். ருஸ்தம் காக்கா, பாபாவின் கண்களில் தனித்துவமான ஒன்றால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், அது அவரை மிகவும் பாதித்தது. மேலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் ருஸ்தம் காக்கா பாபாவின் பாதங்களில் அடிபணிந்தார்; அவரால் அன்பின் சக்தியை எதிர்க்க முடியவில்லை; இது பாபாவிற்கு அவர் அளித்த முதல் வணக்கம், அதன் பின்னர் அவர் தனது முழு வாழ்க்கையையும் மெஹர் பாபாவுக்காக மட்டுமே அர்ப்பணித்தார்.

மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்த பின்பு, வைராக்கிய குணம் படைத்த ஸொராஸ்ட்ரியன் ருஸ்தம் காக்கா முற்றிலும் மாறிவிட்டார். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் 'ஸில்லா ஃபட்கே' (SILLA PHADKE) என்ற ஒரு பிராமணப் பெண்ணைக் காதலித்து, திருமணம் செய்து கொண்டார். ஸில்லாவின் பெற்றோர், ஷஹானே (SHAHANE) குடும்பத்தோடு நல்லிணக்கத்துடன் நண்பர்களாக இருந்தனர். ஸில்லா அவரது ஏழு வயதில், 1925ஆம் வருடம், பாபா மௌனம் தொடங்குவதற்கு முன்பு, காக்கா ஷஹானே இல்லத்தில் மெஹர் பாபா பேசியதைக் கேட்டதுண்டு. ஸில்லாவின் குடும்பத்தார் பாபாவின் பணிகளுக்காக அவர்களை அர்ப்பணம் செய்து வாழ்ந்து வந்தனர். அவரது தந்தை ஆஷ்ரம பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

மெஹராஷ்ரமம் கலைக்கப்பட்ட பின்னர், அதன் முன்னாள் தலைமை ஆசிரியர் டாக்கேஃபால்கர் சட்டப் படிப்புக்காகச் சென்றபோது, பாபா வேண்டிய நிதி உதவியும் வழங்கினார்.

டாக்கே மெஹராபாத்தில் பாபாவை சந்திக்க வந்த ஒரு சந்தர்ப்பத்தில், அவர் பாபா மற்றும் ஆதி சீனியருடன் இருந்த வேளையில், ஆதி ஓர் ஊதாரி என்று நகைச்சுவையாகக் கேலி செய்தார்.

ஆதி அதை அவமானமாகக் கருதி, கடினமான வார்த்தைகளால் உணர்வை புண்படுத்தும் விதத்தில் பதிலளித்தார்.

பாபா, ஆதியை, டாக்கேயின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோருமாறு கட்டளையிட்டார், ஆதியும் அப்படியே செய்தார்.

பாபா அப்போது குறிப்பிட்டார், “**கோபத்தை விழுங்குவது ஒருவர் செய்யக்கூடிய மிக தைரியமான செயல். அதைச் செய்பவர் பணிவானவர்.**”

**1933**, டிசம்பர் **27** அன்று, ராம்ஜூ அப்துல்லாவின் மகன் தாது, பாபாவின் கையாளாகப் பணியாற்ற மெஹராபாத் வந்தார். தாது பாபாவால் மிகவும் விரும்பப்பட்ட மற்றுமோர் இளைஞன்.

இந்தக் காலகட்டத்தில், பாபாவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு திரைப்படத்தைத் தயாரிப்பது பற்றிய விவாதங்கள் நடைபெற்றன; மேலும் இது குறித்து இந்தியாவிலிருந்து மேற்கு நோக்கி பல கடிதங்கள் பரிமாறப்பட்டன.

டிசம்பர் **28**ஆம் நாள், நாசிக்கிலிருந்து ருஸ்தம், டாக்கே.ஃபால்கர், காடேக்கர் ஆகியோர் வந்தனர். மானேக் ரஞ்சி மற்றும் நௌரோஜி குடும்பத்தினர் **30** அன்று மெஹராபாத்திற்கு விஜயம் செய்த அன்றைய தினம் மற்றுமொரு கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

**1931**ஆம் ஆண்டில், மெஹர் பாபா அவரது முதல் மேற்கத்திய பயணத்திற்குப் பிறகு, பிரேமாஷ்ரம சிறுவன் ஆகா அலியை மும்பையில் தங்க அனுப்பியிருந்தார்; கடந்த ஒரு வருடத்தில் ஒரு முறை மட்டுமே பாபா, அலியைப் பார்த்தார். பாபா ஆசிரமத்தை நாசிக் நகரிலிருந்து மெஹராபாத்திற்கு மாற்றிய பின்னர், ஆகா அலி **1933** டிசம்பர் **31** ஞாயிற்றுக்கிழமை பாபாவை சந்திக்க வந்தார்.

**1934,** ஜனவரி **3**ஆம் நாள், ஆதி ஜூனியர், டாக்கே, காக்கா சிஞ்சோர்கர், போர்கர் (BORKAR) ஆகியோர் பாபாவைப் பார்க்க வந்தனர். ஜனவரி **10** அன்று பாபா, ஆதி சீனியர், குல்மாய், குஸ்தாஜி, ஆதி ஜூனியர் ஆகியோருடன் ஸரோஷ் சினிமாவில் ஒரு திரைப்படத்திற்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப் பிறகு பாபா, ஆதி சீனியர், ஆதி ஜூனியர், சாஞ்சி, சிது, ஸெயிலர், பாதிரி ஆகியோருடன் மற்றுமொரு திரைப்படம் (எ மர்டர் மிஸ்டரி – A MURDER MYSTERY) பார்க்கச் சென்றார். ஜனவரி **18**ஆம் நாள் டாக்டர் நீலுவும், **23** அன்று பெஹராமும் பாபாவை சந்திக்க வந்தனர்.

ஜனவரி 24ஆம் நாள், பாபா வழக்கம் போல, காலை எட்டு மணிக்கு, கீழ் மலைக்குச் சென்று, பெண்டுவிடம் ஏதேனும் வெற்றிலைப் பொட்டலம் இருக்கிறதா என்று கேட்க, பெண்டு ஒரு சுருக்கமான, விரும்பத்தகாத பதிலை அளித்தார்; பாபா அவரின் கன்னத்தில் வேகமாக அறைந்தார். உடனே பெண்டு, பாபாவை விட்டு வெளியேற விரும்புவதாகக் கூறி, புறப்பட ஆயத்தமானார்; ஆனால் பாபா அவரை சமாதானப்படுத்தினார்.

ஜால்பாய் அன்று பாபாவின் குடிலுக்கு முன்னால் அமைந்த தோட்டத்தில் ஒரு நகைச்சுவை நாடகத்தை இயக்கி, காட்சிகள் படமாக்கப்பட்டன, ஆனால் கேமராவில் தவறு நிகழ்ந்ததால் படம் சரியாக வரவில்லை.

ஸரோஷ், ருஸ்தம் இருவரும் ஜனவரி 26ஆம் தேதி வந்தபோது, பாபா தனது திரைப்பட திட்டத்தைப் பற்றி விவாதித்த பிறகு, ருஸ்தத்துடன் நாசிக் சென்றார். பாபாவின் ஆன்மீகத் திரைப்படத்திற்கு நிதியளிப்பதில் சாத்தியமான உதவிக்காக, ஸர் ஹைதரிக்கு கடிதம் எழுதுமாறு சாஞ்சிக்கு அறிவுறுத்தப்பட்டது. திரைப்பட பணிகள் குறித்து நோரினாவிடமிருந்து வந்த கடிதத்தை பாபா முன்னிலையில் (பிப்ரவரி 4 அன்று) வாசித்தபோது, **"நோரினா ஒரு சிறந்த வகையான பக்தர் - எனக்காக எதுவும் செய்ய தயங்காதவர்"** என்று பாபா கருத்துத் தெரிவித்தார்.

பாபாவின் பிறந்தநாள் விழாவுக்காக இந்தியாவிற்கு வரவிருந்த நான்னி, ரானோ, ருவானோ மூவரையும் இந்த நேரத்தில் வரவேண்டாம் என அறிவுறுத்தி, தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. அதற்கு பதிலாக, பாபா இந்த நிகழ்ச்சியை மதராஸில் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

1934, ஜனவரி 28ஆம் நாள், ஃபிரீனி மாஸி தனது மகன் கேக்கியுடன் திடீரென மெஹராபாத் வந்தார்; அப்போது அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, தனது நிலை குறித்து மனம் வருந்தினார். அவரை ஆசிரமத்தில் தங்க வைக்குமாறு பாபாவிடம் வேண்டினார். ஆதி சீனியர் அவர்களை குஷ்ரு குவாட்டர்ஸுக்கு அழைத்துச் சென்றார்; நாசிக் நகரில் வாழ்ந்து வந்த தவ்லத்மாய்க்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆதி திரும்பி வரும் வேளையில் ரூஸி பாப்பின் மகள்களான கோஹெர், கேட்டி, ஸில்லா ஆகியோரை மெஹராபாத்திற்கு அழைத்து வந்தார். அடுத்த நாள் ரூஸி பாப், ஸரோஷ் மற்றும் விலூ மூவரும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

மெஹர் பாபா ஜனவரி மாதம் பல முறை அரன்காவ்ம் கிராமத்திற்கு விஜயம் செய்தார்; வழக்கம் போல, கிராமவாசிகளின் தனிப்பட்ட பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் கேட்டுத் தீர்த்து வைத்தார். மாருதி பாட்டீலின் புதிய இல்லத்தின் கட்டுமான பணியையும் அவர் பார்வையிட்டார். வாரத்திற்கு ஒரு

முறை திரைப்படம் பார்க்க, பாபா, ஸரோஷ் சினிமாவுக்குத் தவறாமல் செல்வது வழக்கமாகிவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு நாளும், மெஹராபாத்தில் பாபா மண்டலியுடன் கிரிக்கெட் விளையாட்டில் பங்கெடுத்தார். ஜனவரி 30ஆம் நாள், கிரிக்கெட் பந்து அவரை மார்பில் தாக்கியபோது டாக்டர் நீலு, பாபாவிற்கு சிகிச்சை அளித்தார். பிப்ரவரி 2ஆம் நாள், மறுபடியும் பாபா பிற்பகல் ஐந்து மணிக்கு கிரிக்கெட் விளையாடிய பின்பு, பதினொரு மண்டலியுடன் ஸரோஷ் சினிமாவுக்குச் சென்றார்; அங்கு அவர் '20,000 ஈயர்ஸ் இன் ஸிங் ஸிங்' (20,000 YEARS IN SING SING) என்ற திரைப்படத்தைப் பார்த்தார்; அதில் (பாபா மிகவும் விரும்பிய) ஸ்பென்சர் ட்ரேசி (SPENCER TRACY) மற்றும் பெட் டேவிஸ் (BETT DAVIS) நடித்திருந்தனர். ஃபேற்றி ஆர்பக்கிளின் (FATTY ARBUCKLE) 'பஸ்ஸிங் அரவ்ண்ட்' (BUZZING AROUND) நகைச்சுவை திரைப்படத்தையும் பார்த்தார்.

டாக்டர் டென்னிங் (DR. DENNING), அவரது மனைவி, ஓர் இந்திய மருத்துவர் கரல்கர் (DR. KHARALKAR), 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'வின் (TIMES OFINDIA) நிருபர் ஆகியோர் ஜனவரி 27ஆம் நாள் மெஹராபாத்திற்கு வந்து, குழந்தைகளுக்காக நடத்தும் இலவச மருத்துவமனைக்கு நன்கொடை கோரினர். அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவாக மாதம் ரூ. 25 அனுப்ப பாபா ஒப்புக் கொண்டார்; வந்தவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

1934, பிப்ரவரி 3ஆம் நாள், ஆதி சீனியர், விஷ்ணு, டாக்டர் நீலு ஆகியோருடன் பாபா, 'அமெரிக்கன் மிஷன் பாபா (குழந்தைகள்)' நல சங்கத்திற்குச் (AMERICAN MISSION BABA – CHILDREN WELFARE ASSOCIATION) சென்றார். பாபா அதைச் சுற்றிப் பார்த்து, குழந்தைகளை நீராட்டி, உணவளிப்பதைப் பார்வையிட்டார். பாபாவிற்கு மாலை அணிவித்து குழந்தைகளுடன் அவரது புகைப்படமும் எடுக்கப்பட்டது.

மெஹர் பாபா, அதன் பின்பு ரூஸி பாப், கோர்ஷெத் அவர்களின் இல்லத்திற்கு விஜயம் செய்தார்.

கோலாப்பூரின் தீக்ஷித் அன்று பாபாவை சந்தித்தார். அடுத்த நாள், ஜால்பாய் அருகிலுள்ள கிராமத்திலிருந்து இளம் நடனக் கலைஞர் ஒருவரை அழைத்து வந்த வேளையில், ஆதி சீனியர் ஹார்மோனியம் இசைக்க ஆதி ஜூனியரின் பக்கவாத்தியத்துடன் நிகழ்ச்சி, சிறப்பாக நடைபெற்றது.

பிப்ரவரி 5ஆம் நாள் திருமதி ஷஹானே, பாபாவிடம் வந்து அஹமதுநகரில் உள்ள தனது இல்லத்திற்கு விரைவில் விஜயம் செய்வதாக உறுதிமொழி வாங்கிய பின்னரே திரும்பிச் சென்றார்.

காளேமாமாவின் மருமகன், பஞ்சகணியில் வாழும் ராவ்ஸாஹேப் பண்டிட் அவரது குடும்பத்துடன் மறுநாள் வந்தார். ஸரோஷ், பாபாவைப் பார்க்க பிப்ரவரி 10 அன்று ஃபிரீனி மாஸியையும் அழைத்து வந்தார். தனது நோயைப் பற்றி கவலைப்படாமல், சகோதரி தவ்லத்மாயுடன் இரண்டு மாதங்கள் நாசிக்கில் தங்கும்படி பாபா கூறினார்.



மெஹர் பாபா கிரிக்கெட் விளையாடும் காட்சி,
**2 பிப்ரவரி 1934**



அஹமதுநகர், **3 பிப்ரவரி 1934**

பிப்ரவரி 11 அன்று, நவல், ஃபெராம், ஸெயிலர் மூவரும் நாசிக்கிலிருந்து வந்து பாபாவை சந்தித்தனர். பாபா, 13ஆம் தேதி இரண்டு முறை 'இதய தசைப் பிடிப்பால்' அவதியுற்றார். மறுநாள் அதிகாலையில், சிறிது நேரம் நடந்த பின்னர், அவர் நன்றாக உணர்ந்து, தேநீர் அருந்த விரும்பினார். ஆனால் சிது இன்னமும் பால் எடுத்து வராததால் பாபா அவரிடம் வருத்தத்தைத் தெரிவித்தார்.

1934, பிப்ரவரி 15 அன்று, புவாஸாஹேப் பெர்சியாவிலிருந்து மெஹராபாத் திரும்பி வந்தார். கடந்த ஆண்டு அவர் திடீரென நாசிக்கிலிருந்து வெளியேறியது மண்டலிக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது, எனவே அவர் திரும்பி வந்தபோது ஒருவரும் அவரைக் கண்டுகொள்ளாமல் இருந்தது மட்டுமின்றி பேசவுமில்லை. அவர் 'சர்க்கிள் சினிமா'வில் (CIRCLE CINEMA) செய்து வந்த பணி அனைத்தையும் அப்படியே குழப்பத்தில் விட்டுச்சென்றார்; இது மண்டலியிடையே கசப்பான உணர்வை மேலும் அதிகரித்தது. புவாஸாஹேப் அவரது தனிப்பட்ட விருப்பப்படி, மெஹர் பாபாவின் பெயர், புகழ் மற்றும் போதனைகளை பெர்சியாவில் பரப்பும் பணியில் ஈடுபட்டார். ஆனால், பாபா ஒருபோதும் அவரை அங்குச் செல்லும்படிக் கூறவில்லை, மேலும் தனது பொறுப்புகளை நாசிக்கில் அப்படியே விட்டுச் சென்றதையும் அவர் விரும்பவில்லை. பாபா அவரை சந்தித்து மீண்டும் மண்டலியுடன் இருக்குமாறு கூறினார். புவாஸாஹேப் தயங்கியதும், பாபா அவரை நாசிக் சென்று ஸெயிலருடன் இணைந்து தேநீர் கடையை நடத்தவும், ஒரு புதிய உணவகம் திறக்கவும் அறிவுறுத்தினார். ஆகவே, பாபாவிற்குக் கீழ்ப்படிந்தாலும், இதயத்தில் அவர், மெஹர் பாபாவின் தர்பாரிலிருந்து விலக்கப்பட்டு, சிறைவாசம் அனுபவிப்பது போல் உணர்ந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, புவாஸாஹேப் பூனாவில் தனது உறைவிடத்தை அமைத்து, அங்கே உணவகம் ஒன்றை நடத்திவந்தார். அதன் பின்னர் அவர் பாபா மற்றும் மண்டலியுடன் வாழவில்லை என்றாலும், பாபாவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, அவ்வப்போது மெஹராபாத்திற்கு வந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார்.

மெஹர் பாபாவின் பிறந்தநாளை சிறப்பிப்பதற்காக அவர் மதராஸுக்கு (MADRAS) வருவது குறித்து சிறிது காலமாக, குறிப்பாக, சம்பத் ஐயங்கார் (SAMPAT AIYANGAR) ஆர்வமாக இருந்தார். அழைப்பை ஏற்று, பாபா 1934, பிப்ரவரி 16 மதிய வேளையில் அஹமதுநகரிலிருந்து டோண்ட் (DHOND) ரயில் நிலையத்திற்குப் பேருந்தில் புறப்பட்டார்; ஆதி சீனியர், சாஞ்சி, நவல், பெண்டு, ஸெயிலர், சிது, தாது, ருஸ்தம், ராம்ஜூ, ஸையத் ஸாஹேப் ஆகியோரும் பாபாவுடன் ரயிலில் புறப்பட்டுச் சென்றனர்.

பிப்ரவரி 17ஆம் நாள் பிற்பகலில் ஐயங்கார் குடும்பத்தினர், மற்றும் பலர் மிக்க மகிழ்ச்சியுடன், பாரம்பரிய சடங்கு முறைகளுடன் பாபாவை வரவேற்றனர். ரயில் நிலையத்தில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பாபா மதராஸின் புறநகர் பகுதியான சைதாபேட்டையில் அமைந்த ஐயங்காரின்

இல்லமான மெஹர் பவனுக்கு (MEHER BHAVAN) அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் தனது முந்தைய வருகையின் போதும் தங்கியிருந்தார்.

அன்று மாலை, ஐயங்காரின் குழந்தைகள் பாபாவைச் சுற்றி அவருடன் விளையாடினர். அவர் (பாபா) குழந்தைகளை மிகவும் நேசிப்பவர் என்று யாரோ கிசுகிசுப்பதைக் கேட்ட பாபா இவ்வாறு கூறினார், **"ஆம், ஏனெனில் நானும் குழந்தைதான். ஒரு குழந்தையாக மாறிய பிறகுதான் நான் அதைக் கண்டுகொண்டேன். ஒருவர் குழந்தையாக மாறும் வரை, ஒரு சிறிய அளவிலான ஆன்மீக அனுபவத்தைக் கூட அடைய முடியாது; குழந்தையாக மாறிய அடுத்த கணமே, ஒருவர் ஆனந்தத்தை அனுபவிக்கிறார்! எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது செயல்கள் எதுவும் அவரைக் கவலைக்கு உள்ளாக்குவதில்லை."**

"அறியாமையின் காரணம் என்ன?" கூட்டத்தில் ஒருவர் வினவினார்.

**"ஒருவரின் அறியாமைக்கான காரணம், பரிணாம வளர்ச்சியில் உருவாகும் மனப்படிவங்களின் விளைவாகும்; மனிதகுலத்தின் ஒட்டுமொத்த அறியாமையின் காரணம், ஆதிமுதலான இறைவனின் வெளிப்பாடாகும்.**

**"அனைத்தும் அளவிறுதியற்றது. இறை உணர்வில், வரையறுக்கப்பட்டது எதுவும் இல்லை. ஆனால் நீங்கள் தனித்தனியாக இருமைத்தன்மையிலிருந்து விடுபடாத வரை, அதை அனுபவித்தாக வேண்டும். இவை அனைத்திற்கும் மூல காரணம் அன்பு; அன்பு என்ற ஒன்றே ஒன்றுதான். அன்பு இல்லாத அனைத்துமே பரிதாபகரமானது. அன்பு என்பது கடவுள், உண்மையானது. காமம் என்பது குதர்க்கமான அன்பு; எனவே அது உண்மையற்றது."**

"இதுதான் நீங்கள் எங்களுக்கு வழங்கும் செய்தியா?"

**"ஆம். இது உங்களுக்கு மட்டுமின்றி முழு உலகிற்கும் நான் வழங்கும் செய்தி."** அனைவரும் இணைந்து பரிமாறிய உணவிற்குப் பிறகு, பாபா இரவு 10 மணிக்கு ஓய்வு பெற்றார்.

மெஹர் பாபாவின் 40ஆவது பிறந்த நாள், 1934, பிப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. ஆரத்தி, பஜனை பாடல்கள், தரிசன நிகழ்ச்சிகள் அனைத்தும் காலை 7 மணிக்கு நடைபெற்றன. ஒரு சில தனிப்பட்ட நேரடி பேட்டிகளும் மதிய இடைவெளியில் வழங்கப்பட்டன; மீண்டும் மாலை 5 முதல் 6 வரை நடந்த ஒரு சிறந்த பாடகரின் இசைநிகழ்ச்சிக்குப் பிறகு திவான் பகதூர் ஜெ. வெங்கட நாராயண நாயுடு (DEWAN BAHADUR J. VENKATANARAYANA NAIDU) தலைமையில் பெரிய பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது; அதில் பாபாவின் வாழ்க்கை மற்றும் செய்திகள் குறித்து பல உரைகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவுக்காக மெஹர் பாபாவின் சிறப்பு உரையை ருஸ்தம் வழங்கினார்:



மெஹர் பாபா, ஐயங்கார் குடும்பத்தினருடன்

**நீங்கள் கலந்துகொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தனிப்பட்ட முறையில் பங்கேற்க, நாட்டின் ஒரு பாகத்திலிருந்து மற்றொன்றுக்கு நான் வருவதற்கான காரணம் உங்கள் அன்பு ஒன்றுதான்; இது, தவிர்க்க முடியாமல் என்னை உங்களிடம் ஈர்த்து வந்தது. அன்பு ஒரு வலிமைமிக்க சக்தி; இது தன்னலமற்ற சேவையின் இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், ஒருவரைக் கடவுளாக மாற்றும்.**

இரவு உணவிற்குப் பிறகு, ஜார்ஜ் டவுனில் (GEORGE TOWN) நடைபெற்ற ஒரு சிறிய விழாவில் பங்கெடுக்க பாபா ஒப்புக் கொண்டார்; அங்கு, ஆரிய சமாஜ் (ARYA SAMAJ ஒரு தீவிர தேசியவாத இந்து அமைப்பு) இயக்கத்தைச் சார்ந்த ஒருவர் பாபாவைப் பற்றி பேசினார்.

சம்பத் ஐயங்காருக்கு லட்சுமி (LAKSMI), ஜானகி (JANAKI) என்ற இரண்டு மகள்கள் இருந்தனர். லட்சுமியின் வேண்டுதலின் பேரில், பாபா, சிவ பெருமானைப் போலவும், ஜானகியின் விருப்பத்திற்கிணங்க, பின்பு பாபா, கிருஷ்ணராகவும் உடைகள் அணிந்து புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. மெஹர் பாபா இரண்டு அன்பர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றினார்; அவரது சகவாசத்தில் அனைவரும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தனர்.

மெஹர் பாபாவின் இந்தக் குறுகிய மதராஸ் பயணத்தின் போது, பாபா, ஐயங்கார் குடும்பத்தினருக்கு ‘மாயை’யைப் பற்றி விளக்கம் அளித்தார்:

**ஒரு நபர் ஆழ்கடலிலிருந்து முத்துமணியை எடுக்க விரும்பினால், அவர் கரையில் அமர்ந்து கொண்டு, அதை மேலே வருமாறு குரல் கொடுக்கக்கூடாது. அவர் உண்மையிலேயே முத்துமணியை எடுக்க விரும்பினால், கடலின் ஆழ்பகுதியில் மூழ்குவதற்கு, தனது கடினமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.**

**இப்போது, கடலின் நீரை மாயை என்றும், முத்துமணியைக் கடவுள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். ஆன்மீக நியதிப்படி, மூழ்குபவர் ஈரமாகவோ அல்லது மூழ்கும் போது ஒரு துளித் தண்ணீரைத் தொடவோ கூடாது என்பது அவசியம்! இதன் பொருள் என்னவெனில், அவர் முத்துமணியை, ஆழ்கடலில் மூழ்கி அடையப் பெறுவது சாத்தியம்; ஆனால் அந்த முயற்சியில் ஒரு துளித் தண்ணீரைக் கூடத் தொடக்கூடாது. ஆன்மீக விஷயங்களின் இந்த சாத்தியமற்ற அம்சம் உண்மையில் நீரில் மூழ்கும் ஒருவரை இந்தப் பரிசுக்குத் தகுதியுடையவராக ஆக்குகிறது.**

**தண்ணீரைத் தொடக்கூடாது என்பதற்காக, நீரில் மூழ்குபவர், முழு நீச்சல் உடையை அணிய வேண்டும்; அப்போதுதான் அவர் ஈரம் படாமல் முத்துமணியை எடுத்துவர முடியும்.**

**மேற்கூறியவற்றை ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, கடல் நீரை மாயை எனவும், முத்துமணியைக் கடவுள் என்றும், மூழ்கும் ஒருவரை, தேடுபவராகவும், முழுநீள நீச்சல் உடையை அன்பாகவும் அல்லது உலகைத் துறக்க ஆர்வமுள்ளவராகவும், கடற்கரையில் அல்லது**

**படகிலிருந்து இயந்திரத்தை இயக்கும் ஒருவரை, சத்குருவாகவும் வைத்துக் கொள்ளுங்கள். இயந்திரத்தைக் கையாளும் சத்குருவின் உதவியின்றி, ஒருவர் கீழே இறங்கி முத்துமணியை எடுப்பது என்பது சாத்தியமில்லை, அதாவது மாயையில் மூழ்கி இருக்கும்போது மாயையின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது சாத்தியமற்றது.**

**ஒரு மனிதன் தனது உலக கடமைகளைச் செய்து, மனைவி மற்றும் குழந்தையுடன் ஒரு வீட்டைப் பராமரிக்கலாம். ஆனால் அதே நேரத்தில், என்னவானாலும் அவர் எல்லாவற்றிலும் பற்றின்றி இருக்க வேண்டும்; அதன் அர்த்தம், அவர் தன்னுடன் நெருங்கியவர்கள் மற்றும் அன்பானவர்களிடம் தனது கடமைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்றல்ல, ஆனால் அவருக்கு அதில் எந்தவிதமான பற்றும் இருக்கக்கூடாது. இந்தப் பேனா உங்களுடையது என்பதை நீங்கள் அறிவீர்கள், அதைப் பயன்படுத்துகிறீர்கள். ஆனால் நீங்கள் அதை இழக்க நேரிட்டால், அதைப் பற்றி கவலைப்படாமல், பற்றின்றி பிரிந்து இருக்க வேண்டும்.**

**இறை உணர்வின் அர்த்தம் விடுதலை - மாயையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை. ஆனால் அதிலிருந்து வெளியே வர ஒருவர் மாயையில் இருந்தாக வேண்டும். எனவே மாயையில் இருங்கள், ஆனால் அதில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அதன் தந்திர வலைகளில் மாட்டிக்கொள்ளாமல் விலகி இருங்கள்.**

மெஹர் பாபா பிப்ரவரி 19ஆம் நாள், மும்பை எக்ஸ்பிரஸ் ரயிலில் மதராஸிலிருந்து புறப்பட்டு, மறுநாள் ஷோலாப்பூர் வழியாக மெஹராபாத்தை வந்தடைந்தார்; அங்கு காடேக்கர், குணாதாய் இருவரும் ரயில் நிலையத்தில் பாபாவை வரவேற்று தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். ஸையத் ஸாஹேப், நவல், கிஷன் மற்றும் ருஸ்தம், ஃப்ரீனி இருவரும் (சில நாட்கள் மெஹராபாத்தில் தங்கி) பின்பு நாசிக் புறப்பட்டனர்.

மெஹராபாத்தில் வாழ்ந்து வந்த குல்மாயின் மகள் டாலி இன்னமும் அதீத மனச்சோர்வுடன் காணப்பட்டார். ஒரு மாற்றத்திற்காக, பீலாமாயுடன் கராச்சிக்கு அனுப்பி வைக்க பாபா விரும்பினார், ஆனால் டாலி அதை ஏற்றுக்கொள்ளாமல் பாபாவின் குடிலில், பல மாதங்கள் பால் மட்டுமே அருந்தி தனிமையில் இருப்பதையே விரும்பினார்.

1934, பிப்ரவரி 25 அன்று, நவல், தீனா தலாட்டி மற்றும் (நாசிக் நகரில் வாழும்) ஐயங்காரும், அவரது மனைவியும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். ஒவ்வொரு இரவிலும் தூங்குவதற்கு முன்பு, மூன்று நிமிடங்கள் கண்களைத் திறந்து இருளில் உற்று நோக்கும்படியும், ஏதேனும் வண்ணங்கள் தென்பட்டால் அல்லது அசாதாரண அனுபவங்கள் நேர்ந்தால், பாபாவிற்குத் தெரிவிக்குமாறும் ஐயங்காருக்கு அறிவுறுத்தினார். அன்று மதியம் அனைவரும் நாசிக் திரும்பிச் சென்றனர்.

டாக்டர் கனி, அப்துல் தயாப் (ABDUL TAYAB) இருவரும் இரண்டு நாட்களுக்குப் பிறகு மெஹராபாத்திற்கு வந்து பாபாவுடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். டாக்டர் கனி தனது உத்தரவுகளை மீறுவது குறித்து பாபா அவரது அதிருப்தியை வெளிப்படுத்தினார் (ஒருவேளை மது அருந்தாமல் இருப்பது பற்றி). "**நீங்கள் என்னைத் தோல்வியடையச் செய்துவிட்டீர்கள், ஆனால் நான் உங்களை அவ்வாறு செய்யமாட்டேன்**" என்று பாபா கூறினார். டாக்டர் கனி திரும்பிச் சென்ற பின்பு, பாபா அவருக்கு இவ்வாறு எழுதினார்: "**நீங்கள் விரும்பினால் எனக்குக் கீழ்ப்படியாமல் இருங்கள். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், எந்த சூழ்நிலையிலும் நான் உங்களை எப்போதும் போலவே நேசிக்கிறேன். எனக்கு நீங்கள் இன்னமும் அதே பழைய டாக்டர்தான், இந்தப் பிரபஞ்சத்தின் திறவுகோலை வைத்திருக்கும் உங்கள் தோழன்.**"

மார்ச் 8 அன்று ஆதி சீனியர், ருஸ்தம், ஸெயிலர் ஆகியோருடன் மெஹர் பாபா, நாசிக் சென்றார். பாபா, ஃபிரீனி மற்றும் குழந்தைகளை சந்தித்தார்; மறுநாள் பிற்பகல் திரும்புவதற்கு முன்பு ஸர்கிள் சினிமா, தலாட்டி, எட்கே ஆகியோரின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். மெஹராபாத் திரும்புவதற்கு முன்பு, ஸரோஷ் சினிமாவில் 'கிங் காங்' திரைப்படத்தையும் பார்க்கச் சென்றார்.

இக்காலகட்டத்தில், காளே மாமாவின் மனைவி ஜான்கி (JANKI) இதய நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார். 1934, மார்ச் 13 அன்று பாபா அவரைப் பார்க்க, குடும்ப குவாட்டர்ஸுக்குச் (FAMILY QUARTERS) சென்றார். பாபாவைப் பார்த்த மகிழ்ச்சியில், அவர் வலியை மறந்துவிட்டார். "**நீங்கள் நாளை விடுவிக்கப்படுவீர்கள். கவலைப்பட வேண்டாம்**" என்று பாபா உறுதியளித்தார். அந்தப் பெண்மணி அடுத்த நாள் அதிகாலையில் இறை மனிதனால் நிரந்தரமாக விடுவிக்கப்பட்டார். மனைவியின் மரணத்திற்குப் பிறகு, காளேமாமா ஆண் மண்டலியுடன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வாழ்ந்தார்.

மார்ச் 21 அன்று பார்சி புதுவருட தினம் கொண்டாடப்பட்டது. இதை ஒட்டி அடுத்த ஒரு வாரத்தில் குல்மாய், மெமோ, பெஹராம், சாஞ்சி, பீலாமாய், ஸில்லா, பெய்லி ஆகியோர் மெஹராபாத் வந்தனர்.

மினூ போஹோவாலா (MINOO POHOWALA) நாசிக்கிலிருந்து ஏப்ரல் 3ஆம் நாள் வந்தவர், பாபாவின் உதவியுடன் வேலை கிடைக்கும் வரை மெஹராபாத்தில் தங்குவதாகத் திட்டமிட்டார். காக்கா சிஞ்சோர்கர், பாபாவின் மேற்கத்திய பயணம் மற்றும் பல நடவடிக்கைகளுக்கு, பெரிய அளவில் நிதி உதவி செய்தவர், ஏப்ரல் 8 அன்று மெஹராபாத் வந்தார். நவல், ரூபாமாய், அஸார் ஸாஹேப் ஆகியோரும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

1934, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் தொலைத்தந்திகள் அங்கும் இங்கும் விரைந்த வண்ணம் இருந்தன; இது மெஹர் பாபாவின் அடுத்த

மேற்கத்திய பயணம் மற்றும் திரைப்படம் தயாரிப்பது குறித்த முன்னேற்றத்தைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கியதாக அமைந்தது. நோரினாவின் முதல் கணவர், திரைக்கதை எழுத்தாளர் கார்ல் வால்மொல்லர் (KARL VALLMOELLER), பாபாவின் திரைப்படத்திற்கான கதை வசன இயக்கத்தில் பணியாற்றத் தயாராக இருப்பதாக பாரிஸிலிருந்து நோரினா, பாபாவிற்குத் தெரிவித்தார். அதற்குப் பிறகு நோரினா, பாபாவை சந்திக்க விரும்பிய 40 வயதான ஹங்கேரிய தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கலுடன் (GABRIEL PASCAL - ஜெர்மனியில் 'மேக்ஸ் ரெய்ன்ஹார்ட்'டுடன் – MAX REINHARDT - திரைப்படங்களை தயாரித்தவர்) தனது தொடர்பு குறித்தும் எழுதி இருந்தார்: "உங்களை சந்தித்து இறை உணர்வை அடையும் நோக்கத்தில் பாஸ்கல் எந்தவொரு தியாகத்தையும் செய்ய உள்ளார்!" மார்ச் 13, 19ஆம் நாள் பாபா மீண்டும் பதில் கடிதம் எழுதினார்:

**கார்ல் வால்மொல்லரிடம் அவரது அற்புதமான கற்பனைத் திறனைப் பயன்படுத்தி, இரண்டு காட்சித் தொகுப்புகளை எழுதச் சொல்லுங்கள் - ஒன்று எனக்கு, மற்றொன்று தயாரிப்பாளர்களுக்கு. ஏப்ரல் மாதத்திற்காகத் திட்டமிட்ட எனது வருகை, காட்சித் தொகுப்புகள் தயார் ஆவதைப் பொறுத்தது; இல்லையேல் இப்போது வரப்போவதில்லை. கப்பலில் பயணிகள் நிரம்பும் நிலையில், உடனடியாக முன்பதிவு செய்ய வேண்டியது அவசியம்.**

1934, ஏப்ரல் 24 அன்று மெஹர் பாபா எழுதிய கடிதத்தில்:

**இந்தத் திரைப்படத்திற்கான சில முக்கியமான விஷயங்களை நான் தனிப்பட்ட முறையில் விளக்கிக் கூறுவேன் என்று கார்ல் வால்மொல்லருக்குச் சொல்லுங்கள்... மேலும் இது நிச்சயமாக ஒரு பரபரப்பை உருவாக்கும் என்பதையும், முழு உலகிலும் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பதையும் அவருக்குத் தெளிவுபடக் கூறுங்கள். இதுவரை அறியப்படாத அல்லது திரையில் காண்பிக்கப்படாத அற்புதமான தந்திரக் காட்சிகள், புகைப்படம் எடுத்தல் மற்றும் திரைப்பட நுட்பங்களை உபயோகப்படுத்துவதன் மூலம், இயற்கை செயல்பாட்டின் பல ரகசியங்களை வெளிப்படுத்த முடியும். இது முழு உலகிலும் பெரும் ஆச்சரியத்தை உருவாக்கும்.**

**இவை அனைத்திற்கும் நான் தனிப்பட்ட முறையில் அவருக்கு வழிகாட்டுவேன்; அவர் இந்தப் படத்தைத் தயாரித்து உதவுவதன் மூலம், கலை, அறிவியல், மதம், ஆன்மீகம் ஆகியவற்றின் அற்புத நிகழ்வுகள், வேண்டிய விளைவை ஏற்படுத்தும்.**

**இந்தப் படத்தின் மூலம் அவருடைய பெயரை என்னுடன் இணைப்பதற்கான ஓர் அற்புதமான வாய்ப்பை அவர் பெறுகிறார்; இது நிச்சயமாக ஒரு தனித்துவமான வெற்றிக்கு வழிவகுக்கும், ஏனெனில் நான் தனிப்பட்ட முறையில் உயர்ந்த ஆன்மீக அடிப்படையில் நுட்பமான வாழ்க்கையின் ஒவ்வொரு விவரத்தையும் வழிநடத்தவும், அறிவுறுத்தவும் செய்கிறேன்; மேலும் எனது சொந்த அனுபவத்தின்படி, மிக உயர்ந்த**

**உண்மை மற்றும் அதற்கேற்ப, நவீன பட தயாரிப்பிற்கான விஞ்ஞான ஊடகம் மூலம், எனது சொந்த யோசனைகளுடன் அவற்றை, பொருள் வெளிப்பாடாக மாற்றும் தருவாயில், அது இயற்கையின் தனித்துவமான அம்சமாகத் திகழும்.**

**கேப்ரியல் பாஸ்கலுக்கு, தந்திரக் காட்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட படைப்பு மற்றும் பரிணாமத்தின் அற்புதமான ரகசியங்களை தெளிவுபட விளக்குவேன்; இது உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகளைக் கவர்ந்து ஈர்க்கும். இரண்டாவதாக, மேல்நிலை ஆன்மீகத் தளங்கள், ஆன்மீக ஒளி, இறை உணர்வின் வெளிப்பாடு ஆகியவற்றின் அற்புதமான காட்சிகள், அனைத்து ஆன்மீக மற்றும் மதம் சார்ந்த எண்ணம் கொண்ட மக்களையும் கவர்ந்திழுக்கும்; அதே நேரத்தில் ஐந்து மறுபிறவி எடுக்கும் வாழ்க்கையில் அடங்கியுள்ள உணர்வுகளும் உணர்ச்சிகளும் (காட்சிகள், ஏற்கனவே விளக்கி கார்லுக்கு அனுப்பப்பட்டுள்ளன) - காதல், வெறுப்பு, காதற் செய்கை, பழிவாங்குதல் போன்ற வாழ்க்கை நிகழ்வுகள் நிறைந்தவை - இவை அனைத்தும் உலகில் பொருள் ரீதியோடு சாய்ந்த மக்களை வெகுவாக ஈர்க்கும்.**

ஒருமுறை மெஹர் பாபா, டிலியாவிற்கு மிகவும் கடினமான ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு கடிதம் எழுதினார். டிலியா அதற்கு பதிலாக "நான் முயற்சி செய்வேன்" என்ற தொலைத்தந்தியை அனுப்பினார். பாபா உடனடியாக "**அதை விட்டு விடுங்கள்**" என்று எழுதினார். அப்போது, பாபா அதிருப்தி அடைந்துள்ளார் என்பதை டிலியா உணர்ந்து: "நான் என்னால் முடிந்ததைச் செய்வேன்" என்றதும் பாபா மகிழ்ச்சி அடைந்து, "**தொடர்ந்து செய்யுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்**" என்று பதிலளித்தார். இந்தத் தொலைத்தந்திகளில் மிகக் குறைவான சொற்கள் பரிமாறப்பட்டாலும், டிலியா அவற்றில் ஒரு மதிப்புமிக்க பாடம் இருப்பதைக் கண்டறிந்து, அதைத் தனது வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருந்தார்.

பாபா, மெஹராபாத்தின் வெப்பமான காலநிலையை விட்டுவிட்டு, பெங்களூருக்கு அருகில் அமைந்த 'நந்தி மலை'யில் (NANDI HILL) ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்பினார். ஆனால், அதற்கு முன்னர், ஆதி சீனியர் ஏப்ரல் 14ஆம் நாள், பாபாவை நாசிக் நகருக்கு அழைத்துச் சென்றார்; ஆதி ஜூனியர், ஸெயிலர், குஸ்தாஜி மூவரும் உடன் சென்றனர். அங்கு, ஃபிரீனி, ருஸ்தம் மற்றும் நவல் தலாட்டி ஆகியோரின் தனிப்பட்ட குடும்ப விஷயங்கள் தொடர்பாக அவர்களை சந்தித்தார்.

பாபாவும் மண்டலியும் மறுநாள் மும்பை சென்று, காக்காவின் சகோதரி பானுபாய் இல்லத்தில் தங்கியிருந்த அதே நேரத்தில், மண்டலி, டாக்டர் நீலுவுடன் ஜெ.ஜெ. மருத்துவமனை அருகில் தங்கினர். அன்று மதியம் இரண்டு மணிக்கு சாஞ்சி, பாபாவை சந்தித்தார்.

நாசிக் நகரில் முன்னாள் நிர்வாக பொறியியலாளராக பணிபுரிந்த எஸ். டைப்ஜி (S. TYEBJI) என்பவர் இப்போது ஹைதராபாத் நிஜாமின் முகவராக மும்பையில் பணியாற்றி வந்தார். டைப்ஜியின் மனைவி லேடி ஹைதரியின் மருமகள். டைப்ஜி சமீபத்தில் பாபாவை மெஹராபாத்தில் சந்தித்து, தனது மனைவியையும் பாபாவை சந்திக்க அன்று மதியம் அழைத்து வந்தார். டைப்ஜியின் மகன் வெளிநாட்டில் வாழ்ந்துவந்தார், தம்பதியினர் அவனது நலனைக் குறித்து கவலை தெரிவித்து, அவரைப் பார்க்க ஒரு பயணம் மேற்கொள்ள வேண்டுமா என்று யோசித்தனர். "**அவர் நன்றாக இருக்கிறார்,**" பாபா அவர்களுக்கு உறுதியளித்தார். "**நீங்கள் அங்குச் செல்ல வேண்டிய தேவை இல்லை. நான் இங்கே இருந்துகொண்டு எல்லாவற்றையும் பார்க்கிறேன்; அனைத்தும் நான் அறிவேன். இருப்பினும், நீங்கள் செல்ல விரும்பினால், விரைவில் சென்று, உடனடியாகத் திரும்பி வாருங்கள். அதிக நாட்கள் அங்கே இருக்க வேண்டாம்.**" டைப்ஜியின் மனைவி மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார், ஒரு வருடத்தில் சரியாகி விடுவார் என்று பாபா டைப்ஜிக்கு, தனிப்பட்ட முறையில் கூறினார்.

அன்று இரவு, பாபா 'கேபிடல்' தியேட்டரில் (CAPITOL THEATRE) ஆதி சீனியருடன் 'எஸ்கிமோ' (ESKIMO) எனும் திரைப்படத்திற்குச் சென்றார். மறுநாள் இரவு ராக்ஸியில் (ROXY) மற்றுமொரு திரைப்படமும் (டைகர் பே – TIGER BAY) பார்த்தனர்...

லண்டனிலிருந்து திரும்பிய அக்பர் ஹைதரியும், அவர் மனைவியும் ஏப்ரல் 17ஆம் நாள் காலை மும்பையில் பாபாவை சந்தித்தனர், விக்டோரியா டெர்மினஸில் (VICTORIA TERMINUS) அமைந்த ஆடம்பரமான தனியார் வரவேற்பு அறையில் பாபா அவர்களை சந்தித்தார். (பாபாவை அழைத்து வர அவர்கள் அமெரிக்க பேக்கர்ட் காரை - AMERICAN PACKARD - அனுப்பினர்.) லேடி ஹைதரியின் சகோதரியும் அவரது மருமகளும் மருமகனும் உடன் இருந்தனர்.

மெஹர் பாபா வெவ்வேறு ஆன்மீக நிலைகளைப் பற்றிய சில சுவாரஸ்யமான கருத்துக்களைத் தெரிவித்தார்: "**பூமியில் வாழும் 160 அல்லது 170** (மேல் நிலையை அடைந்த) **ஆத்மாக்களில், 76 பேர் மட்டுமே தங்கள் உடலையும், பௌதீக உலகையும் பற்றிய உணர்வு படைத்தவர்கள். எஞ்சியுள்ள அனைவரும் மஸ்த்துக்கள்** (இறை பைத்தியத்தில் இருப்பவர்கள்). **இந்த 76 நபர்களில் இருபது பேர் 'அலட்சியமாக'** (கடமை எதுவும் இல்லாமல்) **இருக்கிறார்கள்; எஞ்சியுள்ள 56 பேர் வேறு வேறு கடமைகளுடன் ஐந்து சத்குருக்களின் கீழ் செயல்படுகிறார்கள். ஆன்மீகப் பாதையின் பல்வேறு கட்டங்களில் ஏராளமான வாலிகள், பீர்கள், புனிதர்கள் முகவர்களாகப் பணிபுரிகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும், கிராமத்திலும், நகரத்திலும், அதன் முகவர்** (பொறுப்பாளர்) **இருக்கிறார். ஹைதராபாத் முகவராக இருப்பவர் ஒரு வாலி; இது சாதாரண மக்களுக்குத் தெரியாது.**"

"நீங்கள் ஹைதராபாத் வரும்போது அவரை அடையாளம் காட்டுவீர்களா?" என ஸர் ஹைதரி வினவினார்.

**"நிச்சயமாக,"** பாபா கூறினார்.

மெஹர் பாபா அவரது ஆன்மீகத் திரைப்படம் தொடர்பான ஆன்மீகத் தளங்கள் போன்ற பிற தலைப்புகளைப் பற்றி விவரித்தார். ஸர் ஹைதரி அதற்குப் பண உதவி செய்ய முன்வந்தார், மேலும் அதைச் செய்வதற்கான முயற்சிகளை எளிதாக்கினார். பின்னர் அவர் தனது மகன் அலியின் தொழில் மற்றும் திருமணம் பற்றி விவாதித்தார். அலி லண்டனிலிருந்து திரும்பி வரும்போது பாபாவைப் பார்க்கும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த நேர்காணல் ஏறக்குறைய ஒரு மணி நேரம் நீடித்தது; ஹைதரி தம்பதியினர் பாபாவை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

மெஹர் பாபா, நான்கு மாதங்களுக்கும் மேலாக, மும்பைக்குச் செல்லவில்லை; அங்கு வாழும் பாபாவின் அன்பர்கள் அவரை சந்திக்க ஆர்வமாக இருந்தனர்; அவர் இம்முறை அனைவரையும் அனுமதித்தார். பலர் பகல் இரவெல்லாம் அவரைப் பார்க்க வந்தனர். பாபாவும் சிலரை அவர்களது இல்லங்களுக்குச் சென்று சந்தித்தார். பாபா, மும்பையில் இருந்த ஒவ்வொரு முறையும் தாதாசாஞ்சி குடும்பத்தினரைத் தவறாமல் சந்தித்ததுண்டு. மேலும் நௌரோஜியின் மூன்று மகள்களான அர்னவாஸ் (ARNAVAZ), நர்கிஸ் (NARGIS), ரோடா (RODA) ஆகியோருடன் குறிப்பாக நேரத்தை செலவிடுவது வழக்கமான ஒன்று. ஒவ்வொருவரும் அவரை அவர்களுடைய தாயார் பச்சாமாயைப் போலவே மிகவும் நேசித்தார்கள். சாஞ்சி தனது குடும்பத்தை பாபாவிடம் அழைத்து வந்ததோடு, பல உறவினர்களையும் அறிமுகமானவர்களையும் அழைத்து வந்திருந்தார்.

பச்சாமாயின் (BACHAMAI) தங்கை ஸூனா நரிமன் எஞ்ஜினியர் (SOONA NARIMAN ENGINEER), மெஹர் பாபா மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். பச்சாமாயின் வீட்டில் ஸூனா முதன்முதலில் பாபாவை சந்திப்பதற்கு முன்னர், அவரை வணங்குமாறு கூறியபோது, அவர் "நான் கடவுளைத் தவிர வேறு ஒருவருக்கும் தலைவணங்க மாட்டேன்!" என்று பதிலளித்தார்.

ஆனால், மெஹர் பாபாவை நேருக்கு நேர் சந்தித்த வேளையில், அவர் உடனடியாக தன்னை அறியாமலேயே பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். பாபா, அவரை அருகில் அமரச் செய்து, **"நான் ஸொராஸ்டர், ஆனால் என்னைக் கொல்ல விரும்பும் சிலர் இருக்கிறார்கள்**!" என்றார்.

தாதாசாஞ்சியின் வீட்டில் தரிசன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட வேளையில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

1934, ஏப்ரல் 17ஆம் நாள், பாபா மும்பையிலிருந்து பெங்களூருக்கு, மதிய வேளையில், 'மதராஸ் எக்ஸ்பிரஸ்' (MADRAS EXPRESS) ரயிலில் மூன்றாம் வகுப்புப்

பெட்டியில் பயணம் செய்தார். அவருடன் காக்கா, சாஞ்சி, குஸ்தாஜி ஆகியோர் இருந்தனர்.

விக்டோரியா டெர்மினஸில் பாபாவை வழியனுப்ப அன்பான பக்தர்களின் கூட்டம் கூடியிருந்தது. பாபா, தனது தலையில் அரபு பாணியில் ஒரு சால்வையைப் போர்த்தியிருந்ததோடு, அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க, கருப்பு கண்ணாடியும் அணிந்திருந்தார். அவர் எவரையும் பாதங்களில் விழுந்து வணங்க அனுமதிக்கவில்லை, ரயிலில் ஏறுவதற்கு முன்னர் எவரையும் அரவணைக்கவுமில்லை; இப்படி அவரது அடையாளம் ஒரு ரகசியமாகவே வைக்கப்பட்டது.

பூனா ரயில் நிலையத்தில், ஒரு பெரிய மக்கள் கூட்டம் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தது; 'போர்' (BHOR) மாகாணத்தின் மன்னர், அழகிய மலர் மாலையை பாபாவிற்கு அணிவித்தார். ரயில் பதினைந்து நிமிடங்கள் நிறுத்தப்பட்ட வேளையில், 'மெஹர் பாபாவிற்கு ஜெய்' என்ற வாழ்த்துக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது! விஷ்ணு மெஹராபாத்திலிருந்து அஞ்சல்களை எடுத்து வந்திருந்தார். விஷ்ணு, பெஹராம், காளேமாமா ஆகியோருக்கு பாபா சில அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பூனா குழுவிலிருந்து ஜால்பாயும் உடன் சென்றார். ஏப்ரல் 18ஆம் நாள் மாலையில் ரயில் பெங்களூர் சென்றடைந்தது. இந்துக்களுக்கும், பிற யாத்திரிகர்களுக்கும் புனித இடமாகத் திகழும் நந்தி மலை, நகரின் வடக்கு பகுதியில் 36 மைல் தொலைவில் அமைந்துள்ளது. காலதாமதமாகி விட்டதால், இரவில் அங்குப் பயணம் செய்ய முடியவில்லை. பாபாவும் மண்டலியும் சமையல் பாத்திரங்கள், பானைகள், வாளிகள், விளக்குகள், பெட்டி படுக்கை போன்ற அதிக சுமைகளுடன் சென்று கொண்டிருந்தனர்.

ஐயங்கார் குடும்பம் அப்போது பெங்களூரில் தங்கி இருந்ததால், அவர்களை ரயில் நிலையத்தில் சந்திக்குமாறு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. நந்தி மலையில் பாபா தங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யவும், அதே வேளையில் பாபாவின் வருகையை இரகசியமாக வைக்கவும் சம்பத் ஐயங்காருக்கு அறிவுறுத்தப்பட்டது. பாபாவின் வருகையைப் பற்றி ஐயங்கார் குடும்பத்தினருக்கும் தெரியப்படுத்தாததால் அவர் குழம்பிப்போய், "நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என வினவினார்.

பாபா சிரித்தபடியே, **"நான் உங்களிடம் கேட்க வேண்டியது இதுதான்! இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்? நாம் அனைவரும் இரவு உங்கள் பங்களாவிற்குச் செல்வோம்"** என்று பதிலளித்தார்.

சம்பத் ஐயங்கார் மகிழ்ச்சியடைந்தாலும், பாபாவையும் மண்டலியையும் தங்க வைக்க அவரது வீட்டில் எந்த ஏற்பாடுகளும் செய்யப்படாததால் அவர் குழப்பமடைந்தார். பாபாவின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்த அவர், "இது எனது குடும்பத்தின் நல்ல அதிர்ஷ்டம்" என்றார். அவரது கண்கள் மகிழ்ச்சியில் கண்ணீரால் நிரம்பின. ஆனால் 25 பெரிய மற்றும் சிறிய பெட்டிகள், ஐயங்காருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் இத்தனை மூட்டை

முடிச்சுகளை நந்தி மலைக்கு எடுத்துச் செல்வது சாத்தியமில்லை என்று நினைத்து, பதற்றத்தில் நடுங்கினார்! இந்த சுமையைச் சேர்த்து, அவர்கள் பல நாட்கள் தங்கி இருக்கத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தையும் வாங்க வேண்டியிருந்தது.

ஷங்கரபுரம் (SHANKARAPURAM), 66, 3ஆவது கிராஸ் சாலையில் (CROSS ROAD) அமைந்த ஐயங்காரின் இல்லத்திற்கு வெளியே, மெஹர் பாபாவை அழைத்துவந்த கார் நின்றபோது, குடும்பத்தில் ஒருவரும் வெளியே வரவில்லை. பயண வேளையில் அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பதற்காக, பாபா, தனது தலையை ஒரு சால்வையால் மூடி, தலைமுடியைக் கட்டி வைத்திருந்தார். தூரத்திலிருந்த லட்சுமி, பாபாவை அடையாளம் காணத் தவறிவிட்டார். பாபா காரில் இருப்பது தெரிந்ததும் லட்சுமியும் குடும்பத்தினரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். லட்சுமி உடனே மாடியில் பாபாவுக்காக, அறையை ஏற்பாடு செய்ய விரைந்தார், வெளி வராந்தா மண்டலியின் பயன்பாட்டிற்காக இருக்கும் என்ற எண்ணத்தில் அனைத்து பொருட்களும் அகற்றப்பட்டது. இதற்கிடையில், பாபா, ஐயங்காரின் மூன்று பேரக்குழந்தைகளுடன் விளையாடினார்; அவர்கள் இரவு வரை பாபாவின் அருகிலேயே இருந்தனர். அப்பாவி குழந்தைகள் பாபாவை ஓய்வெடுக்க அனுமதிக்காமல் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருந்தனர். பாபா, பல் வலியால் அவதிப்பட்டதால், உணவுக்குப் பிறகு, தனது அறையில் காக்காவுடன் ஓய்வெடுக்கச் சென்றார்.

மறுநாள் அதிகாலையில், ஒரு குறுகிய பயணத்திற்காக, பாபா, பெங்களூரைக் காரில் சுற்றி வந்து, டாடா அறிவியல் நிறுவனத்தைக் (TATA SCIENCE INSTITUTE) கடந்து சென்றார். பஜாரிலிருந்து தேவையான உணவுப்பொருட்களை வாங்கிய பிறகு, பாபாவும் மண்டலியும் நந்தி மலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் பேருந்தில் பயணம் செய்த வேளையில், பயணிகள் பாபாவையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். நந்தி மலை உச்சியை அடைய 2,000 படிகள் ஏறவேண்டியதாக இருந்ததால், 20 கூலிகளை நியமித்து மூட்டைகளை எடுத்துச் சென்றனர். பாபா, ஐயங்காரை நாற்காலியில் கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

அவர்கள் தங்கும் இடத்திற்கு வந்ததும், பாபா, ஐயங்காருடன் வெளியில் நடந்து சென்றார். பாபா, விரைவான நடையுடன் சுறுசுறுப்பாக மலையில் ஏறுவதைப் பார்த்து, 'பாபா படிகளில் இவ்வளவு விரைவாக ஒரு சிறுவனைப் போல் ஓடி ஓடி ஏறுகிறார்!' என ஐயங்கார் ஆச்சரியப்பட்டார்.

மதிய உணவுக்குப் பிறகு, மெஹர் பாபா மீண்டும் ஐயங்காருடன் வெளியே புறப்பட, மண்டலியும் உடன் சென்றனர். அவர்கள் நடந்து சென்ற பாதையில் ஏழை மனிதர் ஒருவர், அவரது மனைவியுடன் எதிர் திசையிலிருந்து வந்தார். அவர்கள் தாழ்த்தப்பட்ட ஹரிஜன்கள், பாபா மண்டலியுடன் கடந்து செல்வதற்காக, தாழ்மையுடன் சாலை ஓரத்தில் காத்திருந்தனர். இந்தியாவில் தீண்டாமை என்பது ஒரு தீவிரமான பிரச்சினையாக இருந்ததால், தாழ்த்தப்பட்ட

ஹரிஜன மக்கள் பெரும்பாலும் துன்புறுத்தப்பட்டு, தொல்லை மற்றும் வேதனைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

மேல் வர்க்க இந்துக்கள் ஒரு தீண்டத்தகாதவரின் நிழலைக் கூட மிதிப்பதில்லை. '**அந்தத் தம்பதியினர் அவர்கள் வந்த பாதையில் அஞ்சாமல் செல்ல வேண்டும்**' என்று பாபா, ஐயங்காரிடம் இணக்கமாகக் கூறுமாறு அறிவுறுத்தினார். இவ்வாறு, தங்களைத் தாங்களே சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களில் தாழ்ந்தவர்களாகவும் நினைத்த இந்தத் துரதிருஷ்டசாலிகள், அவர்களுக்குத் தெரியாமலேயே அவதார புருஷரின் தரிசனத்தையும், ஆசீர்வாதத்தையும் அடையப் பெற்றனர்.

நந்தி மலை உச்சியில் 'ஓக்லாண்ட்ஸ்' (OAKLANDS) என்று அழைக்கப்படும் 'கண்ணிங்ஹாம்' (CUNNINGHAM) பங்களாவில் தங்குவதற்கு ஐயங்கார் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், பாபாவிற்கு இந்த இடம் பிடிக்கவில்லை. வீடு வசதியாக இருந்தாலும், அது பாதையோரத்தில் இருந்ததால், வழிப்போக்கர்களின் நேரடிப் பார்வையில் இருந்தது. பாபாவின் ஏகாந்தவாசத்திற்கு இடையூறாக இருக்கும் என்பதால், வசதியான வேறு இடத்தைத் தேடுமாறு அறிவுறுத்தி, பாபா அவரது நீளமான முடியை எந்நேரமும் மறைத்து வைத்திருந்தார்.

மெஹர் பாபா மேலும் பல விஷயங்களாலும் எரிச்சலடைந்தார். மலையில் சாதாரண அடிப்படை தேவைகள் எதுவும் உடனடியாகக் கிடைக்கவில்லை; பொருட்களை வாங்க ஒருவர் ஆறு மைல் தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. இது தவிர, அவர்கள் வாங்கிய தானியங்கள் - அரிசி, பருப்பு அனைத்தும், சின்ன சின்ன கூழாங்கற்களால் நிறைந்திருந்தன; சுத்தம் செய்ய நீண்ட நேரம் பிடித்தது. தண்ணீர் கூட, பணியாள் மூலமாக மலைக்கு மேலே கொண்டு வர வேண்டியிருந்தது, தண்ணீர் கடினமாக இருந்ததால், பருப்பு பதமாக, பல மணி நேரம் பிடித்தது. பாலும் காலை ஏழரை மணிக்கு முன்னதாகக் கிடைக்கவில்லை; பாபா அதிகாலையில் தேநீர் அருந்துவது வழக்கம்; காலை நேர தேநீருக்காகக் காத்திருக்க வேண்டிய கட்டாயம்.

காக்கா பாரியா, உணவு தயார் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவர் தொடர்ந்து அரிசியில் அதிகப்படியான தண்ணீரை வைத்ததால், சாதம் கூழாக மாறி, பருப்பு போல மென்மையாக இருந்தது. அரிசி, பருப்பு இரண்டையும் எவ்வளவுதான் சுத்தம் செய்திருந்தாலும், சரளைக் கற்கள் இன்னும் இருந்தன. பாபா, சாஞ்சியிடம் அரிசியை சுத்தம் செய்ய உதவுமாறு கூறியபோது, அவர் அதற்கு நேரமில்லை என்று பதிலளித்தார். "வெறுமனே அமர்ந்து அரட்டை அடிக்க உங்களுக்கு நேரம் இருக்கிறது, சிறிது நேரம் இதை ஏன் சுத்தம் செய்யக்கூடாது" என்று கேலியாகக் கூறிய காக்காவின் மனம், சஞ்சலமடைந்தது.

பாபா மேலும் கூறுகையில், "**காக்கா சொல்வது உண்மைதான். இந்த வேலை உங்களுக்கானது அல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் குஸ்தாஜி, பானைகளை எவ்வாறு சுத்தம் செய்து தரையைத் துடைக்கிறார் என்பதைப் பாருங்கள். இந்த வேலைக்கான அரை மணி நேரம், உங்கள்**

**வேலைக்குத் தடையாக இருக்காது. செய்வதில் என்ன தவறு இருக்கிறது? பிறர் அனைவரும் அந்த வேலையை செய்யும் போது, நீங்கள் அதை எளிதாக எடுத்துக் கொள்கிறீர்கள்.**" இவ்வாறு பாபா, சாஞ்சியை 'முள்ளால்' காயப்படுத்தினார்.

உண்மையில், சாஞ்சிக்கு மிகக் குறைந்த அளவில்தான் நேரம் இருந்தது. இந்தியா, ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து வரும் அஞ்சல்களுக்கு, பாபா, உடனடியாக பதிலளிக்க விரும்பினார், மேலும் சாஞ்சி அனைத்து கடிதங்களையும் தனியொருவராகக் கையாண்டார்.

குருநாதரின் கண்டன வார்த்தைகள் "ஒரு குத்துவாளை விட ஆழமாக வெட்டித் துளைக்கும்" என்று சாஞ்சி தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார், மேலும் அவர் மன அமைதியை இழந்தாலும், பாபாவை விட்டுச் செல்வதைப் பற்றி சிந்திக்கவே முடியவில்லை .

சாஞ்சியை சமாதானப்படுத்திய பாபா, இவ்வாறு விளக்கினார்: **"உங்களுக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் காரணமின்றி எதுவும் சொல்லவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் இரவும் பகலும் உழைக்கிறீர்கள் என்ற எண்ணத்தில் இருக்கிறீர்கள், வேறு எவராலும் நீங்கள் செய்வதைச் செய்ய முடியாது என்றும் நினைக்கிறீர்கள். இதில் நீங்கள் தவறிழைக்கிறீர்கள். நான் சிலருக்கு எந்த வேலையும் கொடுக்காமல் வைத்திருக்கிறேன், அதற்கான காரணங்களும் உள்ளன. வெளிப்படையாக எதுவும் செய்யாவிடிலும் கூட, அவர்கள் நீங்கள் பார்க்க முடியாத, செய்ய முடியாத பலவற்றை செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.**"

1934, ஏப்ரல் 21ஆம் நாள், மெஹர் பாபா மும்பையிலிருந்து எடுத்து வந்த 'பரிணாம வளர்ச்சி'யைப் பற்றிய புத்தகம் ஒன்றைப் புரட்டத் தொடங்கினார். அடுத்த சில நாட்களில், பாபா சில பக்கங்களைக் குறித்து வைத்ததோடு, அவர் விரும்பிய ஒரு விளக்கப்படத்திற்கான புள்ளிகளையும் கோடிட்டுக் காட்டினார். இரவில் ஓய்வெடுக்கும் வேளையில் அனைவரும் சீட்டு விளையாடினர்.

25ஆம் தேதி, பாபா, 'முடிவுகளைப் பற்றி கவலைப்படாமல் நடவடிக்கை எடுப்பது' பற்றி, குறிப்பாக, காந்தியைக் குறிப்பிட்டுக் கூறினார்:

**காந்தியைப் போன்ற ஒரு மேம்பட்ட ஆத்மா கூட, கவலைப்படாமல் இருப்பதில்லை, ஏனெனில் அவர் முடிவுகளை விரும்புகிறார். ஒருவர் தனது கடமைகளைச் செய்ய உண்மையாக முயற்சிக்க வேண்டும், ஆனால் முடிவுகள் எப்போதும் கடவுளின் கைகளில்தான் இருக்க வேண்டும். முடிவுகளைப் பற்றி கவலைப்படுவது நல்லதல்ல, அதில் பயனுமில்லை. ஒரு நபர் பிறருக்காக எதையும் செய்ய விரும்பினால், அவர் அதை உண்மையாகச் செய்ய வேண்டும். அதைச் செய்த பின்னர், அவர் முடிவுகளைப் பற்றி கவலைப்படக்கூடாது, ஏனெனில் முடிவுகள் மனிதனின்**

**கைகளில் இல்லை. ஒன்றைச் செவ்வனே செய்வது மனிதனின் கடமை; அதன் முடிவை நிர்ணயிப்பது கடவுளின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது.**

**முடிவுகளிலிருந்து விலகி இருப்பது கடினம் அல்ல, ஆனால் மனிதன் முயற்சிப்பதில்லை. ஒருவரின் செயல்களின் முடிவுகளைப் பற்றி சிந்திப்பது மனித இயல்பு என்பதால், ஒருவர் கவலைப்பட வேண்டும் என்று அர்த்தமல்ல! மனிதன் சிந்திக்க வேண்டும், ஆனால் அவன் கவலைப்படக்கூடாது.**

**உங்கள் எல்லா செயல்களையும் கடவுளுக்காகச் செய்வதாக எடுத்துக் கொள்ளுங்கள்; முடிவுகள் அவருடையதாக இருக்கட்டும். காந்தியும் கடவுளுக்காக எல்லாவற்றையும் செய்கிறார் என்று கூறும் அதே வேளையில், அதன் முடிவுகள் மீது அக்கறை காட்டுவதால் அவர் இன்னும் கவலை அடைகிறார்.**

பாபா, ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்கள் நந்தி மலையில் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்து, மாலையில் மலையைச் சுற்றி நடந்து வந்தார். ஒரு நாள், பங்களாவில் பணிபுரியும் துருதுருப்பு மிக்க தோட்டக்காரர் ஜன்னலின் இடைவெளி வழியாக, பாபாவைப் பார்க்க முயற்சித்தார். அதைக் கண்டுகொண்ட பாபா மிகவும் வருத்தமடைந்து, "**இந்த இடம் எனது ஏகாந்தவாசத்திற்கு உகந்ததல்ல, பெங்களூரில் வேறு ஏதேனும் இடத்தில் எனது பணிகளை முடிப்பேன்**" என்று மண்டலிக்கு அறிவித்தார்.

அடுத்த நாள், பாபா, தனது தலைமுடியை சீர்செய்து கொண்டிருந்தபோது கடைக்காரன் ஒருவன் பங்களாவிற்குள் விரைந்து வந்தது பாபாவை மேலும் வருந்தச் செய்தது. அவரை அடையாளம் கண்டுகொள்வார்களா என்று பல மணி நேரம் பாபா மண்டலியிடம் கேட்கத் தொடங்கினார், "**அவர்கள் என்னைப் பற்றி பிறரிடம் சொல்வார்களா?**" இந்த விசித்திரமான மனிதர்களைக் கண்டு, அங்குப் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் ஆச்சரியமடைந்தனர்: 'இவர்களில் இருவர் ஊமை, பேசுவதில்லை; ஒருவருக்கு நீண்ட தலைமுடி; கதவை மூடிக்கொண்டு சமையல், சுத்தம் செய்வது அனைத்தையும் இரகசியமாகச் செய்தனர்; வெளியில் எவருடனும் பேசவதோ, கலந்துகொள்வதோ இல்லை!'

இந்த ஏகாந்தவாசத்தின் போது, பாபா மற்றும் மண்டலியின் உடல் நிலை சரியாக இல்லை. பாபா தலைவலி, மார்பு வலி, சளி, இருமலால் அவதிப்பட்டார்; எரிச்சலில், அசௌகரியமாக இருப்பது போலத் தென்பட்டார். வானிலையும் குளிராக, பனி நிறைந்து ஈரமாகக் காணப்பட்டது. பதினைந்து நாட்கள் நந்தி மலையில் தங்கத் திட்டமிட்டு, பின்னர், ஏற்றதாக வேறு இடத்தைக் கண்டுபிடிக்க ஐயங்காருக்கு உத்தரவிட்டார். இருப்பினும், ஏப்ரல் 25 அன்று, இரண்டே நாட்களில் மீண்டும் பெங்களூருக்குத் திரும்புவது குறித்து ஐயங்காருக்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது.

பாபா மண்டலியுடன் ஏப்ரல் 27ஆம் தேதி நந்தி மலையிலிருந்து புறப்பட ஆயத்தமானார். மூட்டை முடிச்சுகளை சுமந்து செல்ல 18 கூலியாட்கள்

நியமிக்கப்பட்டனர். திடீரென மழை பொழிய ஆரம்பித்ததால், வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை.

அவ்வேளையில் லட்சுமி சாமான்களை ஏற்றிச் செல்ல வசதியான ஒரு சிறப்பு வாகனத்தோடு நந்தி மலை வந்து சேர்ந்தார். பின்னர் அனைவரும் ஐயங்கார் இல்லம் சென்று சேர்ந்தனர். ஐயங்காரின் மூன்று பேரக்குழந்தைகளும் பாபாவைத் தனியாக இருக்க விடவில்லை; என்றாலும், அவர்களின் உடைகள் காய்ந்து, உணவை உண்ணும் வேளையில், பாபா, அவர் உண்பதற்கு முன்பு தனது கைகளால் அன்பாக, குழந்தைகளுக்கு உணவளித்தார். அதற்குப் பிறகு பாபாவும் மண்டலியும் ஓய்வெடுத்தனர்.

அன்று மாலை, மெஹர் பாபா மண்டலியுடன், கெங்கேரி (KENGERI) கிராமத்தில் ஐயங்கார் ஏற்பாடு செய்த தர்மசாலைக்குச் சென்றார். ஆனால், இங்கு நிலவிய சூழ்நிலை நந்தி மலையில் இருந்ததை விட மோசமாக இருந்தது! தர்மசாலையில் நூறு பேருக்கு மேல் தங்கியிருந்தனர், வேண்டிய வசதிகள் எதுவுமில்லை! தர்மசாலைக்கு அருகிலிருந்த ஒரு சிறிய நீர்த்தொட்டியை, மக்கள் குடிநீருக்காகவும், கை கால்களை சுத்தம் செய்யவும் பயன் படுத்தினர். மேலும் பரபரப்பான சாலை, தர்மசாலையை ஒட்டி இருந்ததால், வழிப்போக்கர்களின் ஆரவாரம் பெரும் தொந்தரவாக இருந்தது. எனவே, பாபாவிற்கு அந்த இடமும் வசதியாக இல்லை; ஏகாந்தவாசத்திற்காக பாபா அமைதியான, புறநகர் பகுதியை விரும்பினார். அனைத்திற்கும் முரண்படும் விதத்தில், சிவாஜி மற்றும் பிற புனிதர்களின் சித்திரங்கள் தர்மசாலையின் சுவர்களை அலங்கரித்தன - அதே நேரத்தில் சிவாஜியைத் தொடர்ந்து வந்த அவதார புருஷர், அவரை கௌரவிக்க விரும்பிய மக்களால் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டார்!

இந்த சூழ்நிலையிலும், வசதியாக வேறு ஏதேனும் ஏற்பாடு செய்யப்படும் வரை, அவர்கள் அங்கேயே தங்கி இருக்க முடிவு செய்தனர். விடியற்காலையில், குரங்குகளின் கூட்டம் ஒன்று அந்த இடத்திற்குள் நுழைந்து, காட்டுத்தனமாக அங்கும் இங்கும் குதித்து, அலறிக்கொண்டு அவர்களை சூழ்ந்தது. இது அனைவருக்கும் ஒரு திடுக்கிடும் சம்பவமாக அமைந்தது. பாபா ஒரு குறும்புத்தனமான புன்னகையுடன், சாஞ்சியிடம் "**இப்போது அனைத்தும் எல்லையைத் தாண்டிவிட்டது! பெங்களூரில் வேறொரு நல்ல இடத்தைத் தேடிக் கண்டுகொள்வது நல்லது**" என்று சைகையால் தெரிவித்தார்.

சாஞ்சி உடனே அங்கிருந்து புறப்பட்டு, பெங்களூர் நகரில் 'மாடர்ன் லாட்ஜில்' (MODERN LODGE) தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். கெங்கேரியில் இருந்த பதினொரு நாட்களுக்குப் பிறகு, பாபா, பெங்களூருக்கு அவசரமாகப் புறப்பட்டார்.

இதற்கிடையில், ஐயங்கார் அமைதியிழந்த நிலையில் கெங்கேரிக்கு வந்தவர், தர்மசாலை பாபாவின் ஏகாந்தவாசத்திற்கு உகந்ததாக இல்லாததால் வேதனையடைந்தார். பாபா அவரை ஆறுதல்படுத்தினார், "**எனக்குச் சில**

**குறிப்பிட்ட பணிகள் உள்ளன, அவை பெங்களூர் நகரத்திலேயே செய்யப்பட வேண்டும், எனவே இதை நினைத்து வேதனை அடைய வேண்டாம். இதில் உங்கள் தவறு எதுவுமில்லை.”**

ஒரு கட்டத்தில், பெங்களூர் அல்லது மதராஸில் மெஹர் பாபாவுடன் ஒரு சில ஆண், பெண் மண்டலியும் தங்குவதற்கான ஏற்பாடு செய்வது குறித்து, ஐயங்காருடன் கலந்துரையாடல் நடைபெற்றது. நிதி உதவி பற்றியும், மெஹர் பாபாவுடன் நெருக்கமாக இருந்த மெரடித் ஸ்டார், கெ. ஜெ. தஸ்தூர் போன்ற சில முன்னாள் பக்தர்களிடமிருந்து வேறுபட்ட ‘எதிர்ப்பு’ உருவானதைக் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பாபா அப்போது இவ்வாறு கருத்துரைத்தார்:

**அவதூறு, துஷ்பிரயோகம் அல்லது சிறைவாசம் போன்ற எதையும் நான் பொருட்படுத்துவதில்லை. டஜன் கணக்கான யூதர்களின் கைகளில் துன்பப்பட நான் எப்போதும் தயாராக இருக்கிறேன், ஆனால் உலகத்திற்கான எனது ஆன்மீகப் பணி, எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது.**

**எந்தத் தீர்வும் கிடைக்காவிடில், எனது மண்டலி உறுப்பினர்களைக் கலைத்து வெளியேற்ற வேண்டிய நிலை வந்தாலும் கூட, பிரபஞ்சத்திற்கான எனது ஆன்மீக உள் பணி நடந்து கொண்டே இருக்கும். தேவைப்படுமாயின், வெளியளவில், கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் நிகழும் எனது நடவடிக்கைகள் அனைத்தையும் முற்றிலுமாக நிறுத்தி விடுவேன். ஒவ்வொரு பரிபூரண மனிதனின் விஷயத்திலும், அவர்களோடு இருந்த பக்தர்களின் உதவியுடன் அனைத்து வெளிப்புற பணிகளும் செய்யப்பட்டன. இயேசு உண்மையில் ஏழ்மையானவர், அவர் தேர்ந்தெடுத்த சீடர்கள் அனைவரும் ஏழை மீனவர்கள். பெருமளவிலான உலகின் எதிர்ப்புகள் இருந்தபோதிலும், அவரது பணி வெளியளவிலும் நடைபெற்றது.**

**ராமகிருஷ்ணரின் விஷயத்தில் நடந்த சமீபத்திய வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் வாழ்ந்த காலம், இயேசு மற்றும் பாபாவின் அவதார காலகட்டமாக இல்லாதபோதிலும், அவர் பரிபூரண நிலையை அடைந்த சத்குருவாக இருந்து, உலகளாவிய பணியை வெளியளவில் அவருடைய சீடர்களின் உதவியுடன் செய்து முடித்தார்; இருந்தும் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே பொருள் ரீதியாக நல்ல நிலையில் இருந்தனர்; எஞ்சிய அனைத்து சீடர்களும் கடுமையான உழைப்பாளிகள்.**

**என்னைப் பொறுத்தவரை, அதிக அளவிலான எதிர்ப்பு, எனது வேலைக்கு அதிக சக்தியை அளிக்கிறது. தடைகள் மேலும் மேலும் அதிகமாக, வேடிக்கையும் அதிகமாகும்!**

1934, ஏப்ரல் 30 அன்று காலையில் பாபா மண்டலியுடன் கெங்கேரியிலிருந்து புறப்பட்டார். பாபா, சாஞ்சி, லட்சுமி மூவரும் ஐயங்காரின் காரிலும், இதர மண்டலி வாடகைக் காரிலும் சென்றனர். பாபா பயணம் செய்த கார், ஒரு மாட்டு வண்டியைக் கடக்க முயன்றபோது, மாடுகளின் கூட்டத்தில் நுழைந்ததால் சில மாடுகளும், ஒரு கன்றுக்குட்டியும் தாக்கப்பட்டன.

விபத்தில் கன்றுக்குட்டி தாக்கப்பட்டதைக் கண்ட லட்சுமி சோகமாகத் தடுமாறியதைக் பார்த்து, பாபா, **“இதில் ஒன்றுமில்லை; எல்லாம் சரியாகிவிடும்; நான் பயணித்த கார் கன்றுக்குட்டியை தாக்கியது அதன் அதிர்ஷ்டம். பயப்படவோ, மோசமாக உணரவோ வேண்டாம்”** என்று லட்சுமியை ஆறுதல்படுத்தினார். கன்றுக்குட்டி காயமடையாமல் எழுந்து ஓடியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. லட்சுமி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

ஐயங்காரின் பேரக்குழந்தைகளில் வசுமதியின் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பாபா முதலில் ஐயங்கார் வீட்டுக்குச் சென்றார். பாபா அன்பாகத் தனது முகத்தை அவள் முகத்தின் அருகில் வைத்து, அவளது சிகிச்சையைப் பற்றி அறிவுறுத்தினார். அதன் பின்னர் அனைவரும் மாடர்ன் லாட்ஜுக்குச் சென்றனர். ஆனால், அவர்கள் கட்டிடத்தில் நுழைந்ததும், மேலாளர் பாபாவை அடையாளம் கண்டு வணங்கினார். பாபா எதைத் தவிர்க்க விரும்பினாரோ அது நடந்தது; இருந்தாலும், அவர் இரண்டு நாட்கள் அங்கேயே இருந்தார்.

பாபாவின் கட்டளைப்படி, பிளீடர் சிறிது காலம் பஞ்ச்கணி குகையிலும் (PANCHGANI CAVE), மவுண்ட் அபு மலையில் அமைந்த ஒரு குகையிலும் (A CAVE AT MOUNT ABU) ஏகாந்தவாசம் கடைப்பிடித்தார், பின்னர் இமயமலையடிவாரத்தில் அமைந்த பனாரஸ் (BENARES), ரிஷிகேஷ் (RISHIKESH) போன்ற புனித ஸ்தலங்களுக்கு யாத்திரையாகச் சென்றார். பாபா அவரை மௌனம் அனுஷ்டிக்குமாறும் அறிவுறுத்தினார்.

1934 ஏப்ரல் மாதத்தில், பாபா ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்த வேளையில், பிளீடர் ரிஷிகேஷில் தங்கி, கேஷ்வானந்த்ஜி மஹாராஜ் (KESHWANANDJI MAHARAJ) என்ற மேம்பட்ட ஆத்மாவிற்கு சேவை செய்து உதவினார். பாபா உண்மையில் கேஷ்வானந்த்ஜியை ஒருபோதும் தொடர்பு கொள்ளவில்லை, ஆனால், அவர் ஓர் உண்மையான சாது என்பதை, பிளீடருக்குத் தெரியப்படுத்தினார்.

கேஷ்வானந்த்ஜி இடுப்பில் துண்டு துணி ஒன்றை அணிவது தவிர - குளிர்காலத்திலும், அனைத்து தட்பவெப்ப நிலையிலும் ஏறக்குறைய நிர்வாணமாக இருந்தார். கங்கை நதிக்கரையில் ஒரு சிறிய மர மேடையை அமைத்து, அதில் அவர் ஒரு கையில் மூங்கில் கழியைத் தாங்கி, நாள் முழுவதும் சூரியனைப் பார்த்த வண்ணம் நின்றார்.

கேஷ்வானந்த்ஜியின் பராமரிப்பாளர் அந்தத் துறவியைப் பார்க்க எவரையும் அனுமதிக்கவில்லை. பிளீடரையும் பார்க்க அனுமதிக்காமல் வெளியேறச் சொன்னபோது, அவர் மெஹர் பாபாவின் புகைப்படத்தை கேஷ்வானந்த்ஜிக்குக் காட்டும்படி அவரை வற்புறுத்தினார். பாபாவின் புகைப்படத்தைப் பார்த்த கேஷ்வானந்த்ஜி புன்னகைத்து, பிளீடரை அருகில் அழைத்தார். அவர் பொதுவாக அந்நியரை தனது அருகில் அனுமதிப்பதில்லை

என்று குறிப்பிட்டு, பிளீடரை அருகில் அழைத்து - ‘மெஹர் பாபா பிரபஞ்சத்தின் அதிபதி என்பதை அவர் அறிவார்’ என்றார்.

கேஷ்வானந்த்ஜி மஹாராஜ் மேலும் கூறினார்: “மெஹர் பாபா முழு படைப்பின் சுமையையும் அவரது தோள்களில் சுமக்கும் அளவுக்கு ஒரு மஹா ஆத்மா.”

கேஷ்வானந்த்ஜி, பிளீடரை அவருடன் சில மாதங்கள் தங்கவும், அவருக்கு சேவை செய்து உதவவும் அனுமதித்தார்.

மெஹர் பாபாவின் ஆன்மீகப் பணி, உலகம் எனும் நாடக மேடையில், முழு சக்தியுடன் இந்திய தேசத்தில் வெளிப்பட்டது - ஐரோப்பாவில், அவதார புருஷரை மையமாகக் கொண்ட ஒரு திரைப்படத்தை உருவாக்குவது குறித்து, தீவிர விவாதங்கள் தொடர்ந்தன. பாபா மீண்டும் மேற்கு நோக்கிப் பயணம் மேற்கொள்ளும் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார். நோரினா, எலிஸபெத் மற்றும் அவர்கள் தொடர்பு கொண்ட திரைப்படத் தயாரிப்பாளரான கேப்ரியல் பாஸ்கல், 1934, ஏப்ரல் 28 அன்று நியூயார்க் நகரிலிருந்து பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பி இருந்தனர். இரண்டு மாதங்களில் படப்பிடிப்பைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், பாபா அவ்வேளையில் அங்கு இருக்க வேண்டியது அவசியம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மெஹர் பாபா, மே 1ஆம் நாள் காலையில் பெங்களூர் நகரைக் காரில் சுற்றிவந்தார் - விசாலமான ‘லால் பாக் தாவரவியல் பூங்கா’ (LAL BAGH BOTANICAL GARDEN) நிழலில் உலா வந்தார். இதற்கிடையில், சம்பத் ஐயங்காரின் மகள் ஜானகி மற்றும் அவரது உறவினர் சி. வி. ராமானுஜாசார்லு (C.V. RAMANUJACHARLU) ஆகியோர் மே 1 அன்று மதராஸிலிருந்து பெங்களூருக்கு வந்தனர், பாபா அவர்களை ஐயங்கார் குடும்பத்தினருடன் அவரது இல்லத்தில் சந்தித்தார். உடல்நலம் சரியில்லாமல் இருந்த ஐயங்காரின் பேரக்குழந்தைகள் மெஹர்நாத், வசுமதி இருவரையும் பாபா மீண்டும் சந்தித்தார், மேலும் குடும்ப விஷயங்கள், தனிப்பட்ட விவகாரங்கள் குறித்து ஐயங்காருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மெஹர் பாபா தென்னிந்திய பயண நாட்களைக் குறைத்து மே 2 அன்று பெங்களூரிலிருந்து புறப்பட்டு, அடுத்த நாள் மெஹராபாத் வந்தடைந்தார். ரயில் கடந்து செல்லும் வேளையில் அனைத்து மண்டலியும் ரயில் பாதையருகில் பாபாவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

பாபா திரும்பி வந்ததும் ருஸ்தம் திரைப்படத்திற்கான திட்டங்களைப் பற்றி விவாதித்தார். கார்ல் திட்டமிட்ட காட்சிகளின் அடிப்படையில் அவர்களின் திரைப்படம் குறித்து நோரினா, எலிஸபெத், கேப்ரியல் பாஸ்கல் ஆகியோருடன், அடிக்கடி, கடிதப் பரிமாற்றம் நடந்து கொண்டிருந்தது; அத்துடன் பாபாவின் அடுத்த மேற்கத்திய பயணத்திற்கான திட்டமும் வகுக்கப்பட்டது.

மெஹராபாத்தில் பாபா இல்லாத வேளையில் மெஹரா, பெண் மண்டலி அனைவரும் தங்குவதற்குப் பொருத்தமான ஒரு வீட்டை அஹமதுநகரில் ஏற்பாடு செய்யுமாறு பாபா, ஆதி சீனியருக்கு உத்தரவிட்டார். பாபாவின் குடிலுக்கு முன்னால் இருந்த பழத்தோட்டம் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததால் அதற்கு நீரூற்றி, சிறப்பு கவனம் தருமாறு மாருதி பாட்டீலுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஸாக்கோரியில் உபாஸனி மஹாராஜ் அவரது கைகளால் நீர் பாய்ச்சி மா மரங்களை பாதுகாத்த உதாரணத்தை, பாபா மேற்கோள் காட்டினார்.

அரன்காவ்ம் கிராமத்தில், அப்பாஜி பாட்டீல் என்ற பழைய கிராமவாசி கடந்த மூன்று நான்கு நாட்களாக மரண படுக்கையில் கடுமையாக அவதிப்பட்டார். மே 4ஆம் நாள் அவரது உறவினர்கள் அந்த வயதானவரைத் துன்பத்திலிருந்து விடுவிக்குமாறு பாபாவிடம் முறையிட்டனர். பாபா அவர்களை ஆறுதல்படுத்தி, **“அவர் என்னைப் பார்க்கும் வரை உடலைத் துறக்க மாட்டார், நான் நாளை வருவேன்”** என்று கூறி அனுப்பினார்.

ஆனால் பாபா அன்று அவரது பணியில் மும்முரமாக இருந்ததால், இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே 6ஆம் நாள் அரன்காவ்ம் சென்றார். மாலை ஆறு மணிக்கு அந்த மனிதரைப் பார்த்து, அவருக்குத் தேநீர் கொடுக்குமாறு உத்தரவிட்டார். பாபா, மெஹராபாத் திரும்பி வந்ததும் அந்த வயதானவர் இறந்து விட்டதாக செய்தி வந்தது.

1934, மே 9 அன்று, பாபா, நாசிக் நகருக்கு ஒரு நாள் துரித பயணத்தை மேற்கொண்டார்; மேலும், மெமோவும் மெஹராபாத்திற்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்தார்.

ஸர்க்கிள் சினிமாவிற்கு அருகில், ஸெயிலர் மாமா ஒரு தேநீர் கடையை நடத்தி வந்தார். மே 11 அன்று அவருடைய செலவுகள் குறித்து பாபா சில கட்டுப்பாடுகளை விதித்தது, ஸெயிலருக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. பெர்லின் நகரிலிருந்து நோரினா அனுப்பிய தொலைத்தந்தி வந்ததும், ஆஷ்ரமத்தில் நிலவிய நிதி குறித்த பதட்டமான நிலைமை மாறியது; நியூயார்க் நகரில் வாழ்ந்து வந்த எலிஸபெத்தின் நண்பர் ஒருவர், பாபாவின் பொது தேவைகள், மேற்கு நோக்கி செல்லும் பயணம் மற்றும் திரைப்பட பணிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய $ 15,000 வழங்கினார்.

இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு பிற்பகல் அல்லது மாலை வேளையில், மெஹர் பாபா, சத்குரு ஷம்ஸ்-இ-தப்ரிஸின் (SHAMS-E-TABRIZ) பாரசீக கவிதைகளை, சுமார் அரை மணி நேரம், ராவ்ஸாஹேப் வாசிப்பதைக் கேட்டு வந்தார்; அந்த நேரத்தில் எந்த விதமான தொந்தரவையும் பாபா விரும்பவில்லை. பாபா, ரூமியின் (RUMI) கவிதைகளையும் கேட்டு ரசித்தார்; இந்தக் கவிதைகள் ஆழமான உணர்வு அல்லது பரவசம் மற்றும் அழகான

மொழிநடையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பாபா, ஒருமுறை ரூமியை, அனைத்து மறைபொருள் அல்லது ஆன்மீக இலக்கியங்களின் மிகச்சிறந்த மனம் படைத்தவராகப் புகழ்ந்து பாராட்டினார், "**இன்றைய அனைத்து பண்டிதர்களின் (தத்துவவாதிகள், அறிஞர்கள், பாதிரியார்கள்) ஒன்றிணைந்த அறிவைக் காட்டிலும் ரூமிக்கு அதிக அறிவுத்திறன் இருந்தது**!"

புவாஸாஹேப் ஒருமுறை ரூமியின் திவான்-இ-ஷம்ஸிலிருந்து (DIVAN-E-SHAMS) அன்பிற்குரியவரின் அழகை குறித்த வர்ணனையை பாபாவிற்கு வாசித்துக் கொண்டிருந்தார். பாபா, அந்த நேரம்தான் நீராடிவிட்டு, மெஸ் குவார்ட்டர்ஸில் அமர்ந்து, அவரது நகங்களை சீர்செய்து கொண்டிருந்தார். அப்போது உடனிருந்த பாதிரி, ஒரு கட்டத்தில், பாபாவின் மார்பு, உணர்ச்சி வேகத்தில் பொங்கி எழுந்து, கண்களும், முகமும் சிவந்ததை கவனித்தார். "அவரது சுய அழகின் போதையில் மயங்கிய வண்ணம், பாபாவின் கண் இமைகள் தாழ்ந்து, ஆனந்தமாகத் தென்பட்டார்" என்று பாதிரி தெரிவித்தார். மொத்தத்தில் பாபா, இந்தப் பூவுலகில் இல்லாததுபோல் உணர்ந்ததாக பாதிரி மேலும் கூறினார்.

ராவ்ஸாஹேபின் புராணக் கவிதைகள் வாசித்தலைத் தொடர்ந்து, பாபா ஏழு ஓடுகள் (SEVEN TILES) கொண்ட ஒரு விளையாட்டை மண்டலியுடன் விளையாடினார். இந்தியாவில் மிகவும் பிரபலமான இந்த விளையாட்டில், ஏழு கற்கள் அல்லது சிறிய ஓடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிவைக்கப்படும்.

இரண்டு அணிகள் எதிர் எதிராக, குறிப்பிடப்பட்ட தூரத்தில் நின்றுகொண்டு, முதல் அணியைச் சேர்ந்த ஒரு விளையாட்டு வீரர், ரப்பர் பந்தை எறிந்து, குவியலைக் கலைக்க முயற்சிக்கும் வேளையில், வீசுபவரின் பந்து, ஓடுகளைத் தவறவிட்டால், எதிர் அணியைச் சேர்ந்த ஒருவர் எறிந்த பந்தைப் பிடிக்க முயற்சிக்கிறார்; வீசுபவரின் பந்து, ஓடுகளைத் தாக்கினால், எதிர் அணி மேலும் ஓடுகளைச் சிதறடிக்க முயற்சிக்கும் வேளையில், முதல் அணி அவற்றை மீண்டும் ஒழுங்காகக் குவிப்பதற்கு முன், முதல் அணி வீரர்களில் ஒருவர் மீது பந்தை எறிந்து அணியை வெளியேற்றுவது வெற்றியைக் குறிக்கும்.

மே 13ஆம் நாள் மாலை விளையாடிய ஆட்டத்தின் போது, அந்த நாள் 'பாபா எய்த வழக்கமான அம்பு' காக்காவைத் தாக்கியதால், அவர் சோகமான மனநிலையில், விளையாட்டில் உற்சாகமின்றி காணப்பட்ட காக்கா, விளையாட்டின் ஒரு கட்டத்தில் வேகமாக வந்த காக்கா, பாபாவைத் தள்ளிவிட்டார்; அதன் பின்பு சில நிமிடங்கள் கழித்து, குஸ்தாஜியையும் அவ்வாறே செய்தார். இது காக்கா, குஸ்தாஜி இருவருக்கும் இடையே வாக்குவாதத்தை ஏற்படுத்தியது. அமைதியாக இருந்த பாபா, அதைப் பார்த்து மிகவும் தீவிரமாகக் கூறினார், "**நீங்கள் இருவரும் எனது முன்னிலையில் இப்படி நடந்துகொள்வதை விட உயிரைத் துறப்பது நல்லது! உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என் முன்னால் இதைச் செய்வீர்கள்? உங்களின் கை கால்களைத் துண்டிக்க வேண்டும்!**" அத்தகைய ஒரு சிறிய

விஷயத்தை எதிர்த்துப் போராடுவதில் தவறிழைத்ததாக மண்டலி பின்னர் உணர்ந்தனர்.

இவ்வேளையில் பாபா இரவில் மெஹராபாத் மேல் மலையில் சமாதியின் நிலத்தடி அறையில் தங்கியிருந்தார். அவர் அந்த மறைவான இடத்தில் ஓய்வெடுக்கும் வேளையில், காக்கா, மாஸாஜி இருவரும் அதற்கு மேலே அமைந்த அறையில் தங்கியிருந்தனர்.

1934 மே 13 இரவு, மின்னல், மழை மற்றும் சூறாவளி காற்றுடன் கூடிய கடுமையான புயல்மழை மெஹராபாத் வழியாக வீசியது. கூரைகள் ஆங்காங்கே காற்றில் பறந்தன; பல மரங்கள் வேரோடு சரிந்தன. நீர் நிரப்பும் கொள்கலன்கள் வயல்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. சில கதவுகள் திறக்கவும் மூடவும் முடியாமல் இருந்ததால், இரண்டு மூன்று ஆண்களின் ஒருங்கிணைந்த பலம் தேவைப்பட்டது.

புயல் வீசும் வேளையில் பாபா மேல் மலையில் இருந்தார். காக்கா, வாமன் ஸப்னிஸ், மாஸாஜி, சகன் ஆகியோர் கூரை கீழே விழ இருந்ததால், சமாதி அறையின் தூண்களை உறுதியாகப் பிடிக்க வேண்டியிருந்தது. பாபா உதவிக்கு மறைவிலிருந்து வெளியே வந்தார், ஆனால் புயலின் வேகம் இறுதியில் பெரிதாகி, தகரத்தாலான கூரை, காற்றில் படபடத்தது. புயலின் தீவிரம் அனைவரையும் சமாதி அறையிலிருந்து வெளியேறக் கட்டாயப்படுத்தியது. பாபாவும், காக்காவும் குளியல் அறையில் பத்திரமாக இருந்தனர்; அதே நேரத்தில் மாஸாஜி, ஸப்னிஸ், சகன் ஆகியோர் வேறு இடங்களுக்குச் சென்றனர். மெஹராபாத்தில் இதுபோன்ற கடுமையான புயலை எவரும் பார்த்ததில்லை, மேலும் மாலை வேளையில் ‘ஏழு ஓடுகள்’ விளையாடும் போது நடந்த நிகழ்வுகள் அவர்களில் ஒருவரையும் காயமடையாமல் காப்பாற்றியிருக்கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

அடுத்த நாள் இரவு கோரப்புயல் மீண்டும் வீசியது, ஆனால் ஆக்ரோஷம் சற்று குறைவாக இருந்தது.

பிலூ ஸட்டாவின் (PILOO SATHA) சகோதரர் நஸர்வான் (NUSSERWAN), மகாத்மா காந்தியுடன் தொடர்பில் இருந்தார்; சட்ட ஒழுங்கு மீறல் காரணமாக அவரும் சிறையில் அடைக்கப்பட்டார். பிலூ ஸட்டா, மே 16ஆம் நாள் காலையில் மெஹர் பாபாவை சந்திக்க அஹமதுநகரிலிருந்து தனது மருமகள் கோர்ஷெத்துடன் வந்தபோது பாபா அவரிடம், “**நஸர்வான், மே 8 அன்று சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார், ஆனால் அவர் என்னைப் பார்க்க இன்னும் வரவில்லை. அவர் இந்த ஏழை மக்களை மறந்துவிட்டார்**” என்று கூறினார்.

அதற்கு பிலூ, "ஆனால் நீங்கள் செல்வந்தர், பாபா!" என்றார்.

“**ஆமாம், நான் பேரரசர் அதேவேளையில் ஃபக்கீர்** (ஆண்டி)” என பாபா ஒப்புக்கொண்டார். “**ஆனால் இது குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது**.”

பிலூவின் சகோதரி ஷிரின் தமானியாவைப் (SHIRIN DAMANIA) பற்றி மெஹர் பாபா விசாரித்தார். "அவர் மிகவும் கடினமாக உழைக்கிறார்," என்று பிலூ கூறினார். "நாங்கள் எங்கள் தாயாரை பல ஆண்டுகளுக்கு முன்னர் இளம் பருவத்திலேயே இழந்துவிட்டதால், ஷிரின் சகோதரர்கள் அனைவரையும் நன்கு கவனித்து, எங்களை வளர்த்து, குடும்பத்தில் அனைத்தையும் நிர்வகித்து வந்தார்."

பாபா மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “**பிறருக்காக உழைப்பதும், சேவை செய்வதும், இத்தனை சிரமங்களுக்கு ஆட்படுவதும் மிகவும் நல்லது. இது கடந்த கால கர்மவினைகளை அழித்து விடும், மேலும் உருவாக்கப்படும் புதிய மனப்படிவங்கள் கூட மிகவும் மந்தமாகிவிடுகின்றன. ஆகவே, பணி புரிவதிலும், பிறருக்காக சேவை செய்து துன்பங்களைத் தாங்கிக்கொள்வதிலும் மிகப்பெரிய ஆன்மீக நன்மை உள்ளது. ஒரு விரலைக் கூடத் தூக்காமல் வெறுமனே அமர்ந்து, எப்பொழுதும் தயாராக, பரிமாறப்பட்ட உணவை உண்ணுவது ஆன்மீக ரீதியில் மிகவும் மோசமானது. இது மிகவும் ஆழமான மனப்படிவங்களை உருவாக்குகிறது; அவற்றை அகற்றுவது என்பது கடினமான காரியம்**” என்றார்.

அதே நாள் காலையில், ஜெ. எஸ். ஈரானி (J.S. IRANI) என்ற ‘பார்சி உலக சைக்கிள் ஓட்டுநர்’ மெஹராபாத்திற்கு சைக்கிளில் வந்தார். அந்த இளைஞர் நாடு முழுவதும் ‘சைக்கிள் சுற்றுப்பயணம்’ செய்து, பின்னர் மெஹர் பாபாவை சந்திக்க விருப்பம் தெரிவித்தார். ஆச்சரியம் என்னவெனில், பாபா அவரைப் பார்க்க ஒப்புக் கொண்டது மட்டுமில்லாமல், அந்த இளைஞனுக்கு பாபாவின் கையொப்பமிடப்பட்ட புகைப்படம் மற்றும் ‘கேள்விகள் - பதில்கள்’ புத்தகத்தின் நகலும் வழங்கப்பட்டது. அதை எப்பொழுதும் அவருடன் வைத்திருக்குமாறு பாபா அறிவுறுத்தினார்.

அரன்காவ்ம் கிராமத்தில் மாருதி பாட்டீலின் (MARUTI PATIL) புதிய வீடு நிறைவடைந்ததும், பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, அவர் 1934, மே 17 அன்று அனைவருக்கும் விருந்தளித்தார். பாபா, மண்டலி, ஸரோஷ், காக்கா சிஞ்சோர்கர் ஆகியோருடன் மாருதி இல்லத்திற்கு விஜயம் செய்தார். கிராமத்தைச் சார்ந்த ஹரிஜன மக்களும் விருந்தில் பங்கெடுத்தனர். உயர் வகுப்பு இந்துவான பாபு பிராமணர் அழைப்பை மறுத்துவிட்டார். அடுத்த நாள், பாபா அவரை அழைத்து, சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் அவருக்கு எடுத்துக் கூறினார்: “**நீங்கள் இன்னமும் இத்தகைய சாதி, சமய வேறுபாடுகளை நிலைநாட்ட விரும்பினால், மெஹராபாத்தை விட்டு வெளியேறுவது நல்லது; நான் அதைப்பற்றி சிறிதளவும் கவலைப்பட**

**மாட்டேன்! இதுபோன்ற செயல்களை நான் அனுமதிக்கவும் மாட்டேன். இவ்விதமான தவறான எண்ணங்களால் எனது பணி பாழாகப்போகிறது. யாரோ ஒருவர் இதுபோன்ற பழங்கால சாதி சமய தீண்டாமைக்கு அடிமையாகி, என்னுடன் நெருக்கமான தொடர்பில் இருக்கும் இந்த கிராமத்தை எந்த வகையிலும் பாதிக்க நான் அனுமதிக்க மாட்டேன்."**

பாபு பிராமணர் அழுது கண்ணீர் வடித்தார், "நான் நாள் முழுவதும் கடினமாக உழைத்து, களைப்பாக இருந்ததால் கூட்டத்தில் பங்கேற்கவில்லை; தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணத்தில் நான் அவர்களைத் தவிர்க்கவில்லை" என்று கூறினார். பாபா அவரை மன்னித்து, அடுத்த வாய்ப்பு வரும்போது இதை, கிராம மக்களுக்கு விளக்குமாறு மாருதிக்கு அறிவுறுத்தினார், எனவே அவர்கள் அதை மனதில் வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

1934, மே 18 அன்று ஷகுந்தலா (SHAKUNTALA) என்ற குழந்தையை ஈன்றெடுத்த சகனின் மனைவி, அதன் பிறகு நோயால் அவதிப்பட்டார். நான்கு நாட்களுக்குப் பின்பு, பாபா, சகனிடம் அவரது மனைவியை அஹமதுநகர் மருத்துவமனையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார். ஆனால் சகன் மோசமான மனநிலையில் இருந்ததால் மறுத்துவிட்டார்.

ஏன் என்று பாபா கேட்டதற்கு, சகன், "எந்த பயனும் இல்லாதபோது ஏன் செல்ல வேண்டும்?" என்று வினவினார்.

**"'எந்த பயனும் இல்லாத போது' என்று நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?"** என்று கேட்டு பாபா தொடர்ந்தார், **"எல்லாம் நன்மைக்கே! என் அருகில் நீங்கள் இரவு கண்காணிப்பாளராக இருக்கிறீர்கள். நீங்கள் சைவ உணவை உண்கிறீர்கள். மது அருந்துவதில்லை, மோசமான செயல்களில் ஈடுபடுவதும் இல்லை. இவையெல்லாம் நன்மை இல்லையா? அனைத்தும் நன்றாகவே உள்ளது!"** சகன் அமைதியாக இருந்தபோது பாபா தொடர்ந்து கூறினார்: **"அனைவருக்கும் மன உளைச்சல்கள் உள்ளன. எண்ணங்கள் வந்து போகட்டும், ஆனால் அவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டாம். எந்த எண்ணங்களாக இருந்தாலும், எவ்வளவு தீயதாக இருந்தாலும் எழட்டும். எனக்குக் கீழ்ப்படிவதைத் தயங்காமல் தொடருங்கள். இது அனைத்தையும் சரி செய்து விடும். இல்லையேல் அது உங்களுக்கும் எனக்கும் தேவையற்ற துன்புறுத்தலை விளைவிக்கும்! நீங்கள் என்னுடன் இருக்க விரும்பினால், என் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையென்றால் போய்விடுங்கள்!"**

எனவே பாபாவின் விருப்பத்திற்கிணங்க, சகன் தனது மனைவியை அஹமதுநகர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மனைவியின் பெற்றோர் மூலமாக அனைத்தையும் ஏற்பாடு செய்த பின்பு மெஹராபாத் திரும்பிவந்தார்.

சமீபத்திய மாதங்களில் நிதி நிலைமைகள் தொடர்ந்து விவாதிக்கப்பட்டன. எலிஸபெத்தின் நண்பர் இப்போது அளித்த நிதி உதவியுடன், திரைப்பட திட்டத்திற்கும், மேற்கத்திய பயணத்திற்கும் போதுமான

நிதியைத் திரட்டுவதில் எலிஸபெத், நோரினா இருவரும் சிக்கலை சந்தித்தனர். எனவே பாபா, அவரது பயணத்தை ரத்து செய்வது குறித்து ஆலோசித்து வந்தார். 1935, மே 19 அன்று ஆதி சீனியர், பெண்டு, காக்கா பாரியா மூவரையும் அழைத்து பாபா விவாதித்தார், "**நான் விரைவில் மேற்கு நோக்கிச் செல்லவில்லை என்றால், மண்டலியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உகந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். தொடர்ந்து மெஹராபாத் மலையில் வாழ்வதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. மேல் மலையில் தங்கியிருக்கும் பெண் மண்டலிக்குத் தேவையான தண்ணீரை எடுத்துச் செல்ல, தினமும் நான்கு நபர்களை நியமிக்க வேண்டியுள்ளதை எண்ணிப் பார்த்தால் இது புரியும். மேலும் கிராமத்து மக்கள் உணவு வேண்டி இங்கு வருகிறார்கள், நூற்றுக்கும் அதிகமானோருக்கு நான் மாதந்தோறும் உதவிப்பணம் அனுப்ப வேண்டியதும் அவசியம்.**"

துலியா (DULIA) நகரில் மானேக்கர் நடத்தி வரும் மோட்டார் கேரேஜில் மண்டலி அனைவரும் பணிபுரிய முடியும் என்ற நோக்கத்தில், மண்டலியில் பலர் துலியாவைப் பரிந்துரைத்தனர்; திட்டவட்டமாக எதுவும் முடிவு செய்யப்படாத நிலையில், பாபா தனது பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அவசரமாகச் செய்ய வேண்டியிருந்த கடைசி நிமிடம் வரை, அனைவரையும் என்னவாகுமோ என்ற மன அழுத்தத்தில் இருக்கச் செய்தார்.

அன்றைய தினம், நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஸாக்கோரியிலிருந்து யஷ்வந்த் ராவ், பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். உபாஸனி மஹாராஜ் சமீபத்தில் கல்கத்தா மற்றும் கரக்பூருக்குச் சென்றிருந்த விஷயத்தை பாபாவிற்குத் தெரியப்படுத்தினார்; மஹாராஜ் 1915ஆம் ஆண்டில் பல மாதங்கள் அங்கு வாழ்ந்து வந்தார்.

மெஹராபாத்தில் மண்டலியுடன் வாழ்ந்து வந்த பீஹாரிலால் என்பவருக்கு, மே 21ஆம் நாள், இருளை உற்று நோக்கிய வண்ணம் நள்ளிரவில் அரை மணி நேரம் தியானம் செய்யுமாறு, பாபா, சிறப்பு அறிவுறுத்தல்களை வழங்கினார்; எந்தவொரு காரணத்திற்காகவும், உதாரணமாக, தேள் அல்லது பாம்பு தன் முன்னே தோன்றி அச்சுறுத்தினாலும், கடித்தாலும் கூட, இருந்த இடத்திலிருந்து நகரவோ, எழுந்திருக்கவோ கூடாது என அறிவுறுத்தினார்.

மே 23ஆம் நாள் பாபாவையும் மணியையும் பார்க்க ஷிரீன்மாயும், அதே நாளில் நஸர்வான் ஸட்டாவும் மெஹராபாத் வந்தனர். 28 அன்று கான்ஸாஹேப், பாபாவுடன் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார், மறுநாள் காலையில் ருஸ்தம் அங்கு வந்தார்.

மெஹர் பாபா, சில நாட்களாக, ஆதி சீனியருக்கு, 'பரிணாம வளர்ச்சி' (EVOLUTION) குறித்த பல விஷயங்களை உரையாகவும், வரைபடங்கள் மூலமாகவும் விளக்கமளித்து, மேற்கத்திய நாட்டு திரையுலக எழுத்தாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களின் படைப்புகளில் எடுத்துக்காட்ட உதவும் வகையில்

எடுத்துரைத்தார். 1934 மே 23ஆம் நாள், கீழ் மெஹராபாத்தில் அமைந்த மெஸ் குவார்ட்டர்ஸின் பின்புற வராண்டா அறையில், மெஹர் பாபா முதன்முறையாக 'படைப்பின் தத்துவத்தை' (THEORY OF CREATION) விளக்கினார். பாபா, எழுத்துப்பலகையில் சுட்டிக்காட்டியதை, சாஞ்சி அல்லது ஜால்பாய் எடுத்துக்கூறினார். ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா அதை சுருக்கெழுத்தில் பதிவு செய்து, பின்பு தட்டச்சில் விரிவாக்கம் செய்தார். ஆதி சீனியர், பாபு காளே, மினூ போஹோவாலா ஆகியோர் கலந்து கொண்டு பாபாவின் விளக்கங்களைக் கேட்டனர்.

மெஹர் பாபா விளக்கமளித்த பெரும்பாலான உரைகள் பின்பு 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற இணையற்ற புத்தகத்தில் இணைக்கப்பட்டன, எனவே அது இங்கே மீண்டும் விளக்கப்படவில்லை. இருப்பினும், பாபா வேறு சில சுவாரஸ்யமான விஷயங்களைக் குறித்து, எழுத்துப்பலகை வழியாக விளக்கினார்:

**விஞ்ஞானிகள் வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்து கடைசி மனித வாழ்க்கை வரையிலான பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்கிறார்கள், ஆனால் இந்தப் பரிணாம வளர்ச்சியில் வேறு வேறு வடிவங்கள் ஏன், எப்படி நிகழ்கிறது என்பது எவருக்கும் தெரியாது. மேலும் மனித வாழ்க்கைக்குப் பின்னர், என்ன இருக்கிறது? என்ன நிகழ்கிறது என்பது பற்றி விஞ்ஞானிகளுக்கு எதுவும் தெரியாது!**

**உணர்வின் பரிணாம வளர்ச்சியால்தான் வேறு வேறு வடிவங்கள் உருவாகின்றன. உதாரணமாக, உடலை உணர்வாகவும், உடையை உடலாகவும் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது, இந்த சட்டையின் அளவு உங்கள் உடலுக்கு ஏற்ப உள்ளது. நாளை ஒரு கை துண்டிக்கப்பட்டால், சட்டை ஒரு கை இல்லாமல் இருக்கலாம். இவ்வாறு உணர்வு காரணமாகவே உடல் மாறுகிறது.**

வடிவங்களின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்பம் குறித்து விளக்கமளித்த பாபா, இவ்வாறு அவரது உரையைத் தொடர்ந்தார்:

**கடல் (சமுத்திரம்) மித வெப்பமாகவும், அமைதியாகவும் இருந்தது; மேலும் தண்ணீரில் வாயு மற்றும் காற்று இருப்பதால், அது 'துருப்பிடித்தது'. இந்தத் துருவிலிருந்து பாசி உருவானது; பாசி, படிப்படியாக கடற்பாசியாக மாறியது. மேலே இருந்து மூழ்கும் பாசிகள் கடலின் கீழ்ப்பகுதியை அடைந்ததும் கடற்பாசியாக ஆனது. இவ்வாறு அசல் பாசியிலிருந்து கடற்பாசி வந்தது, மேலும் கடற்பாசி, தாவரங்களாக உருவெடுத்தது.**

பாபா தொடர்ந்து வடிவங்களின் பரிணாம வளர்ச்சியில் சில அசாதாரண உயிரினங்களைக் குறித்து விரிவாக விவரித்தார், டைனோஸர்கள் (DINOSAURS) வாழ்ந்த வரலாற்றுக்கும் முந்தைய காலங்கள் வரை இது தொடர்புடையது:

**ஊர்வனவற்றின் முதல் பௌதீக வடிவங்களில் ஒன்று மூன்று தலைகளைக் கொண்டிருந்தது. இது சுமார் 175 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்டது. நடுவிலிருந்த தலை சுமார் ஆறு அடி (விட்டத்தில்) இருந்தது.**

**மூன்று தலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. பக்கத் தலைகள் சுமார் இரண்டு அடி** (விட்டத்தில்) **இருந்தன. அதன் முன் பகுதி ஊர்ந்து செல்லும் இனத்தையும், பின்புறம் ஒரு மீனையும் ஒத்திருந்தது - முன்புறம் தடித்தும், பின் பகுதி மெல்லியதாகவும் இருந்தது. அதன் வயிறு பத்து அடி வட்டமாகவும், வால் ஆறு அடி அகலமாகவும் இருந்தது. நடுப்புற தலையில் மீன்களைப் போலவே பற்கள் அடங்கிய ஒரு தாடை இருந்தது; ஆனால் பக்கத் தலைகளில் செதில்கள் நிரம்பி துளைகளால் இணைக்கப்பட்டு மட்டுமே இருந்தன, பற்கள் இல்லை. மூன்று வாய்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன, சுவாசிக்கும்போது ஒரே ஒரு காற்றுக்குழாய் வழியாக அவை ஒரே நேரத்தில் சுவாசித்தன. ஒவ்வொரு தலைக்கும் ஒரு கண் இருந்தது, எனவே இந்த உயிரினத்திற்கு மூன்று கண்கள் இருந்தன.**

**காலங்காலமாக பறவைகளுக்கு இரண்டு கண்கள் இருந்தன. பறவைகள், புழுக்கள் மற்றும் மீன்கள் இனங்களிலிருந்தும் அவற்றிற்கு அப்பாற்பட்ட இனங்களிலிருந்தும் உருவாகி அவை வேறுபட்ட வகுப்பின் கீழ் வருகின்றன. ஒரு பறவை மிகவும் விசித்திரமானது, ஒருவர் கற்பனை செய்து கூட பார்க்க இயலாத அளவுக்கு வித்தியாசமானது. இது பற்றி எவருக்கும் எதுவும் தெரியாது. இந்தப் பறவை அரை பாகம் வௌவாலை ஒத்த மற்றும் மிகப் பெரிய அளவில் - சுமார் பதினைந்து அடி உயரம் கொண்டது. இதற்கு, தீக்கோழி போல் இரண்டு கால்கள் இருந்தன. இதன் கழுத்து சுமார் இரண்டு அடி** (விட்டமாக) **இருந்தாலும், அதன் தலை உடலுடன் ஒப்பிடும் போது சிறியது, சுமார் இரண்டு அடி மட்டுமே. அதன் இறக்கைகள் ஏறக்குறைய ஆறு அடி. அதன் மூக்கு கழுகின் மூக்கைப் போன்றது, பின் பாகம் தடித்தும் மூக்கு நுனி மெல்லியதாகவும் இருந்தது.**

**இவற்றுடன் தொடர்பில்லாத, விடுபட்டுப் போன இணைப்பு ஒன்று, கொரில்லாவைப் போன்றது, ஆனால் குறுகிய வால் கொண்ட ஓர் உயிரினம். கொரில்லா நடக்கும் போது, அதன் கைகளைப் பயன்படுத்துகிறது, விட்டுப்போன இணைப்பு அதன் கால்களில் நடக்கிறது. அதன் முகம் ஒரு சிம்பன்சி** (மனித குரங்கு) **போன்றது, மற்றும் அதன் உருவமும் நடக்கும் விதமும் கொரில்லாவை ஒத்தது. இந்த விடுபட்ட இணைப்பிற்குப் பிறகு, முதல் மனித வடிவம் உருவாகிறது (இது உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ ஓர் அலி - அதாவது மூன்றாம் பால் என்றழைக்கலாம்). ஜாவா, சுமத்ரா அல்லது மத்திய மாகாணங்களின் (இப்போது மத்திய பிரதேசம் என்று அழைக்கப்படும்) இந்திய காடுகளில் இந்தக் காணாமல் போன இணைப்பின் அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண்டுகொள்ளலாம்.**

காலத்தின் சுழற்சிகளையும் மனித வடிவத்தின் கடந்த கால மற்றும் எதிர்கால பரிணாமத்தையும் விளக்கி மெஹர் பாபா தொடர்ந்தார்:

**ஒரு சுழற்சி என்பது 1200 கோடி ஆண்டுகள். விஞ்ஞானிகளுக்கு சுழற்சிகள் பற்றி எதுவும் தெரியாது, ஆனால் இந்தக் குறிப்பு அவர்களின் கண்களைத் திறக்கும். உலகின் பரிணாமம் 200 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது மற்றும் நெபுலாவிலிருந்து** (NEBULA - சூரிய மண்டலத்திற்கு அப்பால் மேகம் போன்ற தோற்றம் அளிக்கும் விண்மீன் கூட்டம்) **தொடங்கிய பரிணாமம், சுழற்சி முடியும் வரை நீடிக்கும் - அதாவது மஹாபிரளயம்** (பிரபஞ்சம் அதன் மொத்த விரிவாக்கத்திலிருந்து சுருங்கும் தன்மை) **நிகழ்வது வரை நீடிக்கும்.**

**மனித வடிவம் பல கோடிக்கணக்கான ஆண்டுகளாக உருவாகி வருகிறது, தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருக்கும். 100 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு, மனிதன் ஐந்து அங்குல உயரத்தை மட்டுமே கொண்டிருப்பான், ஆனால் அதிக மூளை (புத்தித்திறன்) உள்ளவனாக இருப்பான். இந்த சுழற்சியின் தொடக்கத்தில், மனிதன் பதினான்கு அடி உயரத்தில் இருந்து, 300 ஆண்டுகள் வரை வாழ்ந்தான்.**

மெஹர் பாபா, பின்பு **பிரபஞ்சத்தின் 'வாயு'**க்களின் அமைப்பு பற்றி விளக்கினார்:

**விண்மீன் படலத்திலிருந்து (நெபுலா), ஒரே நேரத்தில் உருவாக்கப்படவில்லை என்றாலும், நான்கு கூறுகள் வெளிவந்தன. முதலில் வந்தது வெப்பம், பின்பு புவி ஓடு, பாறைகள், கடைசியாக, தண்ணீர்.**

**பிரபஞ்சத்தில் என்ன இருக்கிறது? பல கோடிக்கணக்கான விண்மீன் படலங்கள் (நெபுலாக்கள்). ஒவ்வொரு விண்மீன் படலத்திலும் லட்சக்கணக்கான உலகங்கள் உள்ளன, அவற்றில் ஒன்று நாம் வாழும் பூமி. முழு பிரபஞ்சத்திலும் என்ன இருக்கிறது? இதில் 276 நுட்பமான (சக்திமிக்க) வாயு நிலைகள் உள்ளன. வாயு, அதன் முதல் வெளிப்பாட்டில் திடப்பொருளாக மாறுவதற்கு முன்னர், அது 276 (சக்திமிக்க) நுட்பமான நிலைகளில் உருவாகிறது. இந்த 276 நுட்பமான வாயு வடிவங்களைப் பற்றி விஞ்ஞானிகள் எவருக்கும் தெரியாது. நுட்பமான வாயு மிகவும் படிப்படியாக, திடத்தன்மை மிக்க ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் போன்ற வடிவமாக மாறும். விண்மீன் படலங்கள், அனைத்து விண்ணுலகங்கள், மற்றும் கிரகங்களிலும் பரிணாம வளர்ச்சி நடைபெறுகிறது. பரிணாமம் அனைத்தும் விண்மீன் படலத்திலிருந்து தொடங்குகிறது. 276 நுட்பமான நிலைகளும் விண்மீன் படலத்தின் தொடக்கத்திலிருந்து வெளிவருகின்றன, அவை நுட்பமான சக்தி (பிராணம்) மற்றும் நுட்பமான வெற்றிடம் (ஆகாயம்) ஆகியவற்றின் மூலப்பொருளாக அமைந்துள்ளன.**

**குளிராக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள வாயு, காற்றாக மாறுகிறது; நாம் வாழும் பூமிக்கு 100 மைலுக்கு அப்பால் காற்று மண்டலம் அறவே இல்லை. இதன் அர்த்தம் என்னவெனில், தனிமங்கள் உருவாகுவதற்கு**

**முன்பே (வெப்பத்திற்கு முன் அல்ல, ஆனால் தண்ணீருக்கு முன்) மின்னணு உருவானது.**

**ஆரம்பத்தில், நாம் வாழும் உலகம் அதீத வெப்பத்துடன் இருந்தது. மெதுவாகக் குளிர்ந்த பின்னர், என்ன நடந்தது? அனைத்து வாயுவும் திடப்படுத்தப்பட்டன. இது பூமியின் மேலே திடமான ஓடு ஒன்றை உருவாக்கியது. ஆனால் பூமியின் மையம், எரி வாயுவால் நிறைந்து வெப்பமாகவே இருந்தது. இவ்வாறு, பூமியின் மேலோட்டத்திலிருந்து பாறைகள் உருவாக்கப்பட்டன. பாறைகள் ஒரே சீராக இல்லாததால் மேல் ஓட்டில் இயற்கையான இடைவெளிகள் உருவாயின.**

**அப்போது நடந்தது என்னவெனில், வாயு குளிர்ச்சியடைந்து, திரவமாக மாறியது; இந்தத் திரவம் (நீர்) பாறைகளின் இடைவெளியில் சிக்கிக்கொண்டது.**

**இவ்வாறு பாறைகள், மலையும் பள்ளத்தாக்குகளுமாக மாறின. மேலும் குளிர்ந்த வாயு, நீராக மாறி அவற்றை நிரப்பியது. இதன் விளைவாக பெருங்கடல்களும், கடல்களும் உருவாயின. இப்படி வெவ்வேறு வடிவத்தின் பரிணாமம் கடல்களிலிருந்து தொடங்குகிறது.**

மெஹர் பாபாவின் இந்த விளக்க உரை சுமார் பத்து நாட்கள் தொடர்ந்தது. எதிர்வரும் ஐரோப்பிய பயணத்திற்கான ஏற்பாடுகள் காரணமாக, ஜூன் 1 அன்று இதை நிறுத்த வேண்டியதாயிற்று. இந்த நேரத்தில் பாபா ஒரு முழுமையான காட்சியையும் விளக்கி, அதிலிருந்து திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இந்தத் திரைப்படத்திற்கு 'இவை அனைத்தும் எப்படி நடந்தது?' (HOW IT ALL HAPPENED?) என்ற பெயரால் அழைக்கப்பட இருந்தது. பரிணாம வளர்ச்சியை ஆரம்பத்திலிருந்து காட்சியாக அமைத்து, மனித உருவம் அடைவது வரை தொடர்ந்து, பின்பு, பாபா ஏற்கனவே விளக்கிய காட்சிகளை - 'எ டச் ஆஃப் மாயா' (A TOUCH OF MAYA) என்ற தலைப்பில் திட்டமிட்ட மூன்று கதாபாத்திரங்களின் வாழ்க்கையைச் சித்தரித்து, ஐந்து பிரதிநிதித்துவ வாழ்நாட்கள் மூலம் இறை உணர்வை அடைவது வரை - இணைக்கவும் திட்டமிடப்பட்டது.

திரைப்படத்தின் கதை, எழுத்தாளர்களுக்கு வழிகாட்டும் விதத்தில் பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:


**ஆரம்பத்தில், பிரம்மாண்டமாக ஒளிரும் கரையில்லாத பெருங்கடலை வெளிச்சமிட்டுக் காட்டுங்கள், அல்லது ஆழமான இருள் படிப்படியாக மறைந்து வெறுமையாக இருக்கட்டும். இந்த இருளிலிருந்து, அல்லது கண்களைக் கூசச் செய்யும் ஒளியிலிருந்து, ஒரு புள்ளி வெளிவந்து ஒளிரும் - அதாவது ஒரு சிறிய பிரகாசமான புள்ளி தோன்றும். இந்தப் புள்ளியிலிருந்து ஆகாயம் (வெறுமையான இடம்) மற்றும் பிராணம் (மூல சக்தி) இரண்டும் தோன்றி ஒன்றோடு ஒன்று மோதும். இப்படி, ஒரே மோதலில் விண்வெளி, சக்தி இரண்டும் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பதை விளக்க, பாபா சில சித்திரங்களை வரைந்து, பின்பு தொடர்ந்தார்.**

பிராணம்
(வரம்பற்ற
சக்தி)

ஆகாயம்
(வரம்பற்ற
விண்வெளி)

பிராணமும்,
ஆகாயமும்
ஒன்றிணைதல்

விண்வெளியும்
பிராணமும் சந்தித்து
மோதும் போது,
படைப்பின் உருவாக்கம்
உணர்வுநிலையின்
தீப்பொறியிலிருந்து
தொடங்குகிறது




படைப்பின் தொடக்கத்தில் உணர்வுநிலையின்
பரிணாமம் தூண்டப்படுகிறது மற்றும்
மனப்படிவங்கள் உள்ளூர பின்னிப்பிணைந்து
மேலதிக உணர்வை உருவாக்குகிறது

**இந்த சுழலும் சூழலிலிருந்து, நுட்பமான சூட்சும கோளம் உருவாகிறது; அதைத் தொடர்ந்து மூலக் கூறுகளான நெருப்பு, நீர், காற்று, பூமி, விண்மீன் படலங்கள், மற்றும் லட்சக்கணக்கான மேலுலக கோளங்கள் உருவாகின்றன. கோடிக்கணக்கான பெரிய, மகத்தான, சூடான, சுழலும் கோளங்கள், லட்சக்கணக்கான சூரியன்கள் மற்றும் கிரகங்கள், நமது சூரிய குடும்பமும் பூமியும் உருவாகின்றன; இவற்றுடன் மிகவும் வெப்பமிக்க வாயுக்களும் திரவங்களும் குவிகின்றன.**

**சம பரப்பற்ற பாறைகள், மேலும் நடுவில் உள்ள இடைவெளிகளில் திரவமாக உருவான வாயு, பெருங்கடல்களாக மாறி, குளிர்ச்சியடையும் போது பூமியில் மேல் பாகம் ஓடாக உருவாகிறது. கடலிலிருந்து, பரிணாமம், பாசிகள் மற்றும் கடற்பாசிகளும் உருவாகத் தொடங்குகின்றன. அவ்வேளையில் பரிணாம வளர்ச்சிக்கான வெவ்வேறு காட்சியாக வெளிப்படுத்துங்கள்: மின் அணுக்கள்** (ELECTRONS - **எலக்ட்ரான்கள்**), **தாதுக்கள், பாசிகள், காய்கறிகளின் ராஜ்ஜியம் மற்றும் முக்கிய உயிரினங்களின் உருவாக்கம் - கடற்பாசி, காளான்கள், புல், மரங்கள், கீரை; மீன், பறவைகள், விலங்குகள், காணாமல் போன இணைப்பு போன்றவை; பின்னர் ஐந்து பிறவிகளில் வாழும் மூன்று கதாபாத்திரங்களின் கதை தொடங்குகிறது.**

மற்றொரு சந்தர்ப்பத்தில், மெஹர் பாபா, அவர் தயாரிக்க விரும்பிய திரைப்படத்தின் நோக்கத்தை விவரித்தார்:


**இந்தத் திரைப்படம் உண்மையில் படைப்பு, பரிணாமம், மறுபிறவி, இறை ஒளி, இறை உணர்வை அடைதல் ஆகியவற்றின் நோக்கத்தை நிரூபிக்கும் - அதாவது உள் மற்றும் வெளியளவிலான முன்னேற்றத்தின் முழுச் செயல்முறையின் வழியாக, அனைத்து உயிர்களும் இறை உணர்வை அடைந்து, இறைவனோடு ஐக்கியமாகும் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் வரை தொடர வேண்டும்.**

**உண்மையான இறை அனுபவம் குறித்த உண்மைகளைப் பற்றிய, எந்த அறிவும் எந்தவொரு மனிதனுக்கும் இல்லை, ஆனால் இறை உணர்வை அடையப் பெற்று, சத்குருவான ஒருவர், ஒவ்வொரு கணமும் அதை அனுபவிக்கிறார்.**

**முழுச் செயல்முறையும் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டு, திரைப்படமாக உருவாகும் வரை, தனிப்பட்ட முறையில் என்னால் கண்காணிக்கப்படும். இதில் மறுபிறவி, ஏழு ஆன்மீகத் தளங்களின் முக்கிய அங்கத்தை, வரைபடங்கள், உயிரியக்கமுள்ள படங்கள்** (ANIMATION - அனிமேஷன்) **மற்றும் சிறப்பு விளைவுகளைப் பயன்படுத்தி புகைப்படங்கள் எடுப்பதன் மூலம் காண்பிக்கப்படும். மரணம் என்றால் என்ன என்பது பற்றிய சரியான ஞானம் மனிதனுக்கு வழங்கப்படும்; அதை உணர்ந்தவுடன், ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய தவிர்க்க முடியாத மரணத்திற்கு ஒருபோதும் அஞ்சமாட்டார்.**

**வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை - கடவுள் உணர்வை அடைந்து, கடவுளோடு ஒன்றிணைவதை விளக்குவதன் மூலம், அனைத்து மனித இனத்தின் மேம்பாட்டிற்கும் இந்தத் திரைப்படம் உதவியாக இருக்கும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் மனிதனின் உணர்வு நிலையின் மாற்றத்தை இது சித்தரிக்கும். வாழ்க்கை உண்மையிலேயே என்ன, அதன் குறிக்கோள், பிரபஞ்சத்தின் இயக்கவியல், கடவுளின் இயல்பு மற்றும் கடைசியாக, உள்ளார்ந்த ஆன்மீக வாழ்க்கை அதன் மூலத்தை நோக்கி தெய்வீக படிக்கற்களில் எவ்வாறு ஏறி பயணிப்பது என்பதை இந்தத் திரைப்படம் மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டும்.**


மெஹர் பாபாவின் திரைப்படக் கையெழுத்துப் பிரதியைக் கண்டு காலம் மிகவும் ஆச்சரியமடைந்து, "அவதார புருஷர் வழங்கிய, இதற்கு முன் வெளிப்படுத்தப்படாத உண்மைகளை எவரேனும் நிச்சயமாக திரைப்படத்திற்குள் கொண்டு வந்து உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டும் ஒரு நாள் வரும்" என்று பறைசாற்றியது.



மெஹர் பாபாவுடன் ஹெடி மெர்டென்ஸ், ஆனா, உர்ஸுலா, **1934**



மெஹர் பாபா,
ஃபாலன்ஃப்ளு, **1934**



மெஹர் பாபாவுடன் வால்டர் மெர்டென்ஸ், **1934**



மெஹர் பாபாவுடன் காக்கா பாரியா (ஒரே அறையில்) கப்பலில் பயணம்

# ஏழாவது ஐரோப்பிய பயணம் – பாரிஸ், லண்டன் & ஸூரிக்

**(Seventh Europe Visit – Paris, London & Zurich)**

**1934** ஜூன் முதல் வாரத்தில், மெஹர் பாபா அவரது ஏழாவது ஐரோப்பிய பயணத்திற்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். பாபா, அவர் இல்லாத நேரத்தில் ஆண், பெண் மண்டலிக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். ஆதி சீனியர், 'போண்டியாக்' (PONTIAC) காரில், ஜூன் **6** அன்று பாபா, கலிங்கட், ஜால்பாய் ஆகியோருடன் மெஹராபாத்திலிருந்து நாசிக் புறப்பட்டார். வழியில் அக்பர் அச்சகத்தில் ஸட்டா குடும்பத்தினரையும், குஷ்ரு குவாட்டர்ஸில் கான்ஸாஹேபையும் சந்தித்து விடைபெற்றார். கான்ஸாஹேப் அவரைக் கடனிலிருந்து விடுவிக்குமாறு கெஞ்சினார். பாபாவும் தனது திரைப்பட திட்டம் வெற்றிகரமாக முடிந்தால் அந்த வருமானத்தை வழங்குவதாக உறுதியளித்தார். அன்று இரவு அனைவரும் நாசிக் வந்தனர். பாபா அடுத்த நாள் முழுவதையும் புவாஸாஹேப், ஸையத் ஸாஹேப், நவல், ராம்ஜூ, ருஸ்தம் குடும்பத்தார் மற்றும் ஒரு சில நெருங்கிய பக்தர்களுடன் கழித்தார். அன்று மாலையில் சண்டிதாஸின் (CHANDIDAS) கவிதைகளின் சிறப்பு கண்காட்சியில் கலந்து கொண்டார்.

**1934,** ஜூன் **8** அன்று ஆதி சீனியர், ஜால்பாய், ராம்ஜூ ஆகியோருடன் பாபா மும்பைக்கு அதிகாலையில் ரயிலில் புறப்பட்டார். பாபாவின் நாசிக் வருகை இரகசியமாக வைக்கப்பட்டாலும், வழக்கமாக நடந்ததைப் போல, மக்கள் அவருடைய வருகையைக் கண்டறிந்து தரிசனத்திற்காக வந்தனர்.

மெஹர் பாபா, நெருங்கிய அனைவருக்கும் கடைசி நிமிட அறிவுறுத்தல்களை வழங்குவதில் மும்மரமாக இருந்ததால், அவரைத் தேடி வந்த பெரும்பாலானோர் திரும்பிச் சென்றனர்.

மும்பையில், டாக்டர் நீலுவின் இல்லத்தில் மண்டலி அனைவரும் தங்கியிருந்தனர்; பாபா, அதே நேரத்தில் மானேக் கன்ஃபெக்ஷனர் வீட்டிற்குச் சென்றார். அங்கு, பாபாவை சந்தித்த இரண்டு நபர்கள் நடிகர் விநாயக் கர்நாட்டகி (VINAYAK KARNATAKI), அவரது நண்பர் பாபு டவ்லே (BABU DHAVALE) இருவரும், மிகுந்த விடாமுயற்சிக்குப் பின்னர், அடுத்த நாள், டாக்டர் நீலுவின் இல்லத்தில் பாபாவின் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். சந்திப்பின் இடையே, மேற்கத்திய இயக்குனர் மற்றும் நடிகர்களைக் கொண்டு, பாபாவின் திரைப்படம் இந்தியாவில் தயாரிக்கப்பட வேண்டும் என்று விநாயக் பரிந்துரைத்தார்.

மெஹர் பாபா, சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர் ஆகியோர் **1934,** ஜூன் **9**ஆம் நாள் மும்பையிலிருந்து மார்ஸெல்லஸ்க்கு எஸ்.எஸ். மங்கோலியாவில்

(SS MONGOLIA) பயணம் செய்தனர். (மிகுந்த சிரமத்துடன், ஸரோஷ் ரூ 1,000 ஏற்பாடு செய்து, கப்பல் புறப்படும் சில நிமிடங்களுக்கு முன்பு, பயணச் செலவுக்காக, பாபாவிடம் கொடுத்தார்.)

மும்பையிலிருந்து சுமார் 30 பக்தர்கள் பாபாவிற்குப் பிரியாவிடையளிக்க துறைமுகத்திற்கு வந்திருந்தனர். பாபா கப்பலில் ஏறுவதற்கு முன்பு, பலர் மாலை அணிவித்தாலும் தாமதமாக வந்தவர்கள் கப்பல் தளத்தில் நின்று கொண்டிருந்த சாஞ்சியை நோக்கி மாலைகளை வீசினர்; சாஞ்சியும் அவர்கள் சார்பாக பாபாவிற்கு மாலை அணிவித்தார். அன்றைய தினம் மிகவும் வெப்பமாக இருந்ததால் பாபா தனது அன்பர்களை, வெயிலில் அலைந்து திரியாமல் பாதுகாப்பாக இருக்குமாறு சைகையால் தெரிவித்தார்; ஆனால் அனைவரும் வெப்பத்தைப் பொருட்படுத்தாமல் கப்பல் புறப்படும் கடைசி நிமிடம் வரை காத்திருந்து கைகளை அசைத்த வண்ணம் நின்றனர்.

மங்கோலியா ஒரு பழைய, சிறிய அளவிலான கப்பல், இந்தப் பயணத்தில் பாபாவும் மண்டலியும் சில அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. பாபா, பொதுவாகத் தனது உணவை, அவரது அறைக்கு எடுத்து வருவதை விரும்பினார், மேலும் அது விதிமுறைகளுக்கு எதிரானது என்ற போதிலும், கப்பல் மேற்பார்வையாளர் இறுதியாக ஒப்புக்கொண்டார். கப்பல் அரேபிய மற்றும் செங்கடல்களின் குறுக்கே பயணித்ததால் வானிலை தொடர்ந்து வெப்பமாக இருந்தது; கப்பல் தள்ளாடித் தள்ளாடி, மேலும் கீழும் அசைந்து அசைந்து சென்றது; ஆனால் பாபா இந்தக் கடினமான சூழ்நிலைகளால் பாதிக்கப்படவில்லை.

மும்பைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட பதிமூன்று நாட்களுக்குப் பின்னர், 1934, ஜூன் 22ஆம் நாள், மெஹர் பாபாவும் மண்டலியும் மார்ஸெல்லஸ்ஸை வந்தடைந்த வேளையில், அங்கு ருவானோ, ரானோ இருவரும் பாபாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்களை சந்திக்க ருவானோ மட்டுமே கப்பல்மேடைக்கு வருமாறு பாபா தெரிவித்திருந்தார், எனவே பாபா, ரானோவைப் பார்க்கும்போது என்ன சொல்லக்கூடும் என அவர் அஞ்சினார். இறங்குவதற்கு முன்பு, பாபா இருவரையும் தனது அறைக்குள் அழைத்து அன்புடன் தழுவினார். ரானோ, 'நான் இங்கே வந்திருக்கக்கூடாது' என்று பாபாவின் காதில் முணுமுணுத்தார். "**நான் உங்களை நினைத்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன், எனவே கவலைப்பட வேண்டாம்**" என்று பதிலளித்ததன் மூலம் பாபா, ரானோவின் அச்சத்தை அகற்றினார்.

மார்ஸெல்லஸில் ஒரு நாளைக் கழித்துவிட்டு, மறுநாள் பாபாவும் மண்டலியும், ருவானோ, ரானோ, நோரினாவுடன் பாரிஸ் நகருக்கு ரயிலில் புறப்பட்டனர். இரவு பயணத்தின் போது, ரானோ பசியாக உணர்ந்தார், ஆனால், உணவு பாபா ஓய்வெடுக்கும் இடத்தில் ஒரு தகர கொள்கலனில் வைக்கப்பட்டிருந்தது. ரானோ, பாபாவிற்குப் புதிதாக அறிமுகமானவர், மேலும், ஓய்வெடுக்கும் போது பாபாவை, தொந்தரவு செய்யக்கூடாது என்று ரானோவிற்குத் தெரியாது. அவர் பாபாவின் இருக்கை அருகில் சென்றபோது,

பாபா கண்களை மூடிக்கொண்டு, தூங்கிக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றினார். ரானோ அமைதியாக டின்னை நகர்த்தும் போது, பாபா அசைந்து, கண்களைத் திறந்து அவரிடம் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். அவருக்குப் பசி எடுப்பதாக ரானோ பதிலளித்ததும் **"சரி, உண்ண ஏதேனும் எடுத்துக் கொண்டு ஓய்வெடுங்கள்"** என்று பாபா சைகையால் தெரிவித்தார். ரானோ வெளியே செல்லும்போது சிறிதளவும் சத்தம் எழுப்பாமல் கவனமாக இருந்தார், திடீரென பாபா விழித்திருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, காக்காவிடம் இரண்டு கருப்பு வெல்வெட் தலையணைகளில் ஒன்றை ரானோவிற்கும் மற்றொன்றை ருவானோவிற்கும் கொடுத்து, இந்தத் தலையணைகளில் தூங்குமாறு தெரிவிக்கக் கூறி அனுப்பினார்.

**1934** ஜூன் **23**ஆம் நாள் மெஹர் பாபா, பாரிஸ் நகருக்கு வந்து மெட்ரோபாலிட்டன் **(**METROPOLITAN**)** ஹோட்டலில் தங்கினார். ரானோவின் தாயார் நான்னி, பாபாவின் வருகைக்காகக் காத்திருந்து, குழுவுடன் இணைந்தார்.

ருவானோவின் இல்லத்திற்குச் சென்றதும், பாபாவின் திரைப்பட செயல்திட்டத்தில் பணிபுரியும் கார்ல் வால்மொல்லர் என்ற ஜெர்மன் எழுத்தாளரை சந்தித்தார்; அவர் ஒரு கவிஞர் மட்டுமன்றி கலைஞரும் ஆவார். வால்மொல்லர், அவர் எழுதி முடித்த திரைக்கதையை, பாபாவிற்கு வழங்கினார். படைப்பு, பரிணாம வளர்ச்சி, மறுபிறவி, ஆன்மீகத் தளங்கள், இறை உணர்வு இவற்றைப் பற்றி பாபா மூன்று மணி நேரம் விளக்கமளித்து, மேலும் அவர் எடுத்து வந்த விளக்கப்படத்தை அவரிடம் காட்டினார். வால்மொல்லர் அதைப் பார்த்து வெகுவாக ஈர்க்கப்பட்டார்; பாபா அளித்த விளக்கங்கள், வரைபடங்களின் அடிப்படையில், ஒரு புதிய கதையை எழுத அவருக்கு அறிவுறுத்தினார்.

இரண்டு நாட்கள், பாபா பாரிஸ் நகரில் பலரை சந்தித்தார். நோரினா, ருவானோ இவர்களின் வழியாக பாபாவைப் பற்றி அறிந்திருந்த பல நண்பர்கள், மற்றும் பாரிஸ் நகரில் சந்தித்த சுவாமி விவேகானந்தரின் சிறந்த அபிமானியாக இருந்த ரிச்செலியூ டியூக் **(**THE DUKE OF RICHELIEU **- 58)** உட்பட பலரை, பாபா சந்தித்தார்.

**24** அன்று ஏறக்குறைய **60** வயதான ஒருவர் பாபாவைப் பார்க்க வந்து, "எனது வாழ்க்கையில் எனக்கு, பல சின்ன சின்ன திருப்பங்கள் நிகழ்ந்தபோதிலும், உங்களை சந்திப்பதன் மூலம், எனது வாழ்க்கையின் முக்கிய திருப்புமுனை வந்துவிட்டதாக இன்று நான் உணர்கிறேன்" என்றார்.

பாபா புன்னகைத்துக் கொண்டே அவரிடம் எடுத்துரைத்தார், **"ஆமாம், அந்தத் திருப்புமுனை ஒவ்வொருவரின் வாழ்விலும் வர வேண்டும். இது ஒரு போருக்கு நிகரானது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு கணமும் ஒரு மனிதனின் வாழ்க்கையில், இதயம்--மனம் இரண்டிற்கும் இடையேயான ஒரு சிறிய யுத்தம், அதுபோல், உணர்வு--புத்தி,**

**நல்லது--தீயது இவற்றிற்கு இடையிலான யுத்தம். இந்தத் தனிப்பட்ட யுத்தங்கள் ஒவ்வொன்றாகப் பரவி, ஒட்டுமொத்த தீவிரமான சூழ்நிலையை சந்திக்கும் போது, கூட்டுமுறையில் எடுக்கப்படும் முடிவு இறுதியில் ஒரு பெரிய, உலகளாவிய போராக உருவாகும்; அதன் மூல காரணம் அடியோடு அகற்றப்படும் வரை, எந்தவொரு சமாதான மாநாடுகளாலும் ஒருபோதும் இதைத் தவிர்க்க முடியாது.**"

1934, ஜூன் 26ஆம் நாள் பாரிஸ் நகரிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்ட மெஹர் பாபா, ரானோ, நான்னி, ருவானோ மூவரையும் அவருக்குப் பின்னால் வருமாறு அறிவுறுத்தினார். ரயிலில் கேலே, டோவர் வழியாகப் பயணம் செய்து, பாபா மண்டலியுடன் அதே நாளில் லண்டன் வந்து சேர்ந்தார். பாபாவின் வருகையை எதிர்நோக்கி ஆங்கில அன்பர்கள் அனைவரும் விக்டோரியா ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். வெஸ்ட் ஹாம்ப்ஸ்டெட்டின், 61 காம்பெய்ன் கார்டனில் (COMPAYNE GARDENS, WEST HAMPSTEAD) அமைந்த, டிலியாவின் சகோதரர் ஹெர்பெர்ட்டின் இல்லத்தில் பாபாவுடன் எலிஸபெத், நோரினா, கிட்டி, மார்கரெட், மேபெல் ஆகியோர் தங்கியிருந்தனர். சாஞ்சி, காக்கா, ஆதி ஜூனியர், குயன்டின் நால்வரும் மார்கரெட் க்ராஸ்கின் இல்லத்தில் இருந்தாலும், அவர்கள் அதிக நேரமும் பாபாவுடனே இருக்க வேண்டியதாயிற்று. சாஞ்சி, ஆதி ஜூனியர் பகல் வேளையில் பாபாவுடன் இருக்க, காக்கா இரவு கண்காணிப்பாளராக இருந்தார். மீண்டும், திரைப்பட தயாரிப்பைப் பற்றிய பல விவாதங்கள் நடந்தன, மேலும் 'பிரபஞ்சம் என்றழைக்கப்படும் திரைப்படத்தின் அதிபதி' (LORD OF THE UNIVERSAL CINEMA) அதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

இந்தத் திரைப்படத்திற்கு நிதியளிப்பதற்காக, பங்குகளை விற்று, பணம் திரட்டும் நோக்கத்தில் ஜூன் 28 அன்று 'சர்க்கிள் புரொடக்ஷன்ஸ் இங்க்' (CIRCLE PRODUCTIONS, INC) என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது. பங்குகளை விற்பதன் மூலம் பாதித் தொகையைத் திரட்ட முடியும் என்றும், மீதமுள்ள தொகையை ஒரு திரைப்பட ஸ்டுடியோ அல்லது விநியோகஸ்தர் வழங்குவார் எனவும் நம்பப்பட்டது. பாபா நிறுவனத்தின் தலைவராகவும், நோரினா, எலிஸபெத், எல்சி டோம்வில், தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கல் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் இந்தியாவில் இந்த நேரத்தில் திரைப்பட திட்டங்களுக்கான பணம் திரட்டும் முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. மொத்தத்தில் பத்து லட்சம் ரூபாய் செலவின் மதிப்பீட்டில், ஐந்து லட்சம் மேற்கத்திய நாடுகளிலிருந்தும், மீதம் ரூபாய் ஐந்து லட்சம் இந்தியாவிலிருந்தும் திரட்ட திட்டமிடப்பட்டது. பாபாவின் மேற்கத்திய பயணத்திற்கு முன்னர், இந்திய செல்வந்தர்களிடமிருந்து பணம் திரட்டுவதற்காக, அக்பர் ஹைதரியைத் தொடர்பு கொள்ளுமாறு பிப்ரவரி மாதம் சாஞ்சிக்கு உத்தரவிடப்பட்டது, ஆனால் ஹைதரியால் உடனடியாக உதவமுடியாத நிலை ஏற்பட்டது.

வில்லியம் டாங்கின் மீண்டும் பாபாவை சந்திக்க வந்த போது, பாபா அவரிடம் அவரது மருத்துவ படிப்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். டாங்கின், பாபாவுடன் அதிக நேரம் அமர்ந்திருந்தார், மேலும் ஆறு நாட்கள் தங்கியிருந்த காலத்தில் குருநாதரின் சகவாசத்தில் நெருக்கமாக இருந்தார்.

மெஹர் பாபாவின் வாழ்க்கையைப் பற்றிய புத்தகம் ஒன்றை எழுதும் பணியைக் குறித்து விவாதிக்க, சார்லஸ் பர்டம் ஜூன் 28 அன்று பாபாவை சந்தித்தார்; அந்தப் புத்தகத்தை அவர் ஏற்கனவே எழுதத் தொடங்கியிருந்தார்.

டாம் ஷார்ப்லியும் அதே நாளில் பாபாவைப் பார்க்க வந்தார். "டாம் அமைதியும், அடக்கமும் மிக்க, பாபாவுடன் ஆழ்ந்த தொடர்புடையவராக இருந்தார். அவர் அனைவரையும் சுற்றி முழு நேரமும் அங்கு இருந்தபோதிலும் எவரும் அறியாத முறையில் அமர்ந்திருந்தார்" என்று மார்கரெட் விவரித்தார்.

பாபா லண்டனில் இருந்தபோது, கவுண்டஸ் கிட்டி பஹ்லன் 1934 ஜூன் 29 அன்று மாலை அவரது வீட்டில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தினார். ஆன்மீகத்தில் நேர்மையும், ஆர்வமும் உள்ள சுமார் பதினைந்து பேர் பாபாவை சந்திக்க வந்தனர்; அவர்களின் பல கேள்விகளுக்கு, பாபா பதிலளித்தது மட்டுமன்றி விளக்கமும் அளித்தார்:

வந்தவர்களில் ஒருவர், "நான் ஓர் உண்மையான கிறிஸ்தவராக எப்படி இருக்க முடியும்?" என வினவினார்.

பாபா எழுத்துப்பலகை மூலமாக பதிலளித்தார்: "**கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றுவதன் மூலமும், அவர் வாழ்ந்த வாழ்க்கையை வாழ்ந்து, அவர் உங்களை வாழச்சொன்ன முறைப்படி வாழ்வதன் மூலமும் நீங்கள் உண்மையான கிறிஸ்தவராக இருக்க முடியும். மக்கள் கிறிஸ்தவத்தைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பின்பற்றத் தயாராக இல்லை - 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு' எனும் கிறிஸ்துவின் போதனை, நடைமுறைக்கு உதவாது என்று கூறுவது மட்டுமல்லாமல், சிறிதளவு ஆத்திரத்தைக் கிளறினாலும், பிறரிடம் கோபத்தில் பறப்பது; அவர்கள் எங்கும் அன்பையும், சகோதரத்துவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பிய இடத்தில் வெறுப்பை உருவாக்குவது - இந்த நிலையில் முழு உலகமும் குழப்பத்தில் இருப்பதில் என்ன ஆச்சரியம்!**"

திருமதி எச். ஃபோர்டு (MRS. H. FORD) அப்போது கேட்டார், "ஆனால் நீங்கள் கிறிஸ்து என்றால், ஏன் அதைப் பற்றி மக்களுக்குத் தெரியாது?"

அதற்கு பாபா, "**நான் இந்த மனித வடிவத்தை எடுக்க வேண்டும் என்பதை மக்கள் அறிய முடியாததுதான் காரணம். இயேசுவை, அவருடைய காலத்தில், அவரது நெருங்கிய சீடர்கள் கூட அறியமுடியவில்லை. எந்நேரமும் அவருக்கு அருகிலிருந்த யூதாஸ், அவரை முத்தமிட்டார், ஆனால் அவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதுபோல, நீங்கள் அனைவரும் என்னை வெளியளவில், என் உடல் வடிவத்தில் என்னைப் புரிந்து**

**கொள்ளமுடியாது. உண்மையான, எல்லையற்ற கிறிஸ்துவாக, எல்லோரிடமும் இருப்பதைப் போல நான் உங்களுள் இருக்கிறேன்.”**

‘இயேசு ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை’ என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டதற்கு, பாபா ஒரு விரிவான விளக்கத்தை அளித்தார்:

**அவதார புருஷரின் வெளியளவிலான வாழ்க்கை முறை, அந்தக் காலத்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது; மேலும் அவர் அந்தக் காலத்திற்கு ஏற்ப, ஒரு முன்மாதிரியாகப் பணியாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான அணுகுமுறையைப் பின்பற்றுகிறார். ஆனால், இதன் முக்கிய சாராம்சம் என்னவெனில், எல்லா அவதார புருஷர்களும் வாழ்க்கையின் ஒரே இலட்சியத்தை உள்ளடக்குகின்றனர்.**

**ஸொராஸ்டர் வாழ்ந்த காலத்தில், மனிதாபிமானம் என்பது பெரும் தயக்கத்தில், சமநிலையில் இல்லாமல் இருந்தது. (அப்போது பாரசீகர்கள்) முழுமையான பொருள்முதல்வாதிகளாக இல்லாமலும், ஆன்மீக ஒளியை நோக்கி உண்மையில் ஈர்க்கப்படாமலும் இருந்தனர். நல்ல குடும்ப வாழ்க்கை வாழவும், திருமணம் செய்து கொள்ளவும், வேறொருவரின் மனைவியை விரும்புவதைத் தவிர்க்கவும், கடவுளை வணங்கவும் அவர் அவர்களுக்குக் கற்றுத் தந்தார். அவரது சுய வாழ்க்கையும் இந்தக் கொள்கையின் அடிப்படையில் அமைந்தது - ‘நல்ல எண்ணங்கள், நல்ல வார்த்தைகள் மற்றும் நல்ல செயல்கள்.’ ஸொராஸ்டர் திருமணம் செய்து கொண்டார்.**

**கிருஷ்ணரின் காலத்தில், இந்துக்கள் தங்களுக்குள் மோதல்களில் ஈடுபட்டனர். பொறாமையும், பேராசையும் பிரதானமாக இருந்தன, ஆன்மீக வாழ்க்கை மற்றும் அன்பின் உண்மையான தன்மையைக் குறித்து அவர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. கிருஷ்ணரின் ஆன்மீக போதனைகள் அன்பின் விதிமுறைகள், தூய்மையான, கள்ளம் கபடமற்ற மகிழ்ச்சி ஆரவாரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. அன்பின் பற்றற்ற இலட்சியத்தை நோக்கி மனிதர்கள் ஆனந்தத்தில் வழிநடத்தப்பட்டனர்.**

**புத்தரின் காலத்தில், இந்திய மக்கள் பொருள் சார்ந்த வாழ்வில் ஆழமாக ஈடுபட்டனர். அவர்களுக்குப் பொருட்களின் உண்மையான மதிப்பைப் பற்றிய கருத்து, தவறானது என்பதையும், அவர்கள் மாயையை தெய்வமாகக் கருதி அதற்கு அடிமையாக இருப்பதையும் நிரூபிப்பதற்காக, புத்தர் தனது மனைவி, குடும்பம், உலகின் செல்வங்களைத் துறந்து, துறவறத்தைச் சார்ந்த தனது போதனைகளை நிலைநாட்டினார்.**

**முஹமதின் காலத்தில், அரபு பழங்குடியினர் உடல் சார்ந்த இன்பத்தில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருந்ததால், பல மனைவிகளுடன் வாழ்வதை, தவறானதாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ கருதவில்லை. முஹமது இயேசுவைப் போல**

**திருமணம் செய்து கொள்ளாமல், பிரம்மச்சரியத்தை ஆதரித்திருந்தால், அல்லது அவர் முழுமையான கட்டுப்பாட்டை மக்களிடையே திணித்திருந்தால், அது தவிர்க்க முடியாத, ஆபத்தான எதிர்வினைகளை உருவாக்கியிருக்கும். அவருடைய போதனைகளை, குறிப்பிட்ட ஒரு சிலரே பின்பற்றியிருப்பார்கள்; அத்தகைய இலட்சியத்தை நோக்கி ஈர்க்கப்படுபவர்கள் இன்னும் குறைவாக இருந்திருப்பார்கள். முஹமதுக்கு ஆறு மனைவிகள் இருந்தனர், ஆனால் அவர்களுடன் உடல் ரீதியான எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை.**

**இயேசுவின் காலத்தில், ஆணவம், உணர்ச்சியற்ற தன்மை, பெருமை, கொடுமை ஆகியவை மக்களின் பண்புகளாக இருந்தன. இருந்தாலும் கூட, பெண்கள் திருமணம் தொடர்பாக அவர்கள் நீதியை விரும்பும் கருத்தார்வம் மிக்கவர்களாக இருந்தனர்; எனவே, அரேபியாவில் இருந்த சூழ்நிலையைப் போலவே, திருமணத்தையும், பல மனைவிகளுடன் வாழ்வதையும் ஒரு முன்மாதிரியாக மாற்றுவது தேவையற்றதாயிற்று. இயேசு அடக்கமான, எளிமையான வறுமையின் வாழ்க்கையை வாழ்ந்தார், மேலும் மனிதர்களை, தூய்மையும் இலட்சியமும் மிக்க அன்பான கடவுளை நோக்கி வழிநடத்துவதற்காக, அவர் துன்பங்களைத் தாங்கிக்கொண்டார்.**

**அவதார புருஷர்கள் இந்த உலகில் வெவ்வேறு காலகட்டங்களில் அவதரிக்கிறார்கள், எனவே அவர்களின் போதனைகள் அந்தந்த சகாப்தத்தின் மனநிலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். சில சமயங்களில், அவதார புருஷர் தனது போதனையை, மனித உருவிலான தனிப்பட்ட கடவுளைத் தேடுவதையும், பிற சமயங்களில், உருவமில்லா கடவுளைத் தேடுவதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தார்.**

**இதை ஒரு மருத்துவமனையுடன் ஒப்பிடலாம், அங்கு நோய்வாய்ப்பட்டவர்கள் வெவ்வேறு நேரங்களில் தாகத்தைத் தணிக்க ஏதேனும் திரவப்பொருட்களை நாடுவர். காலை வேளையில் தேநீர் அல்லது கா.:.பி, மதியம் நீர் அல்லது பழச்சாறு, மாலையில் மோர் மற்றும் தூக்கத்திற்கு முன் மிதமான பால் ஆகியவற்றை மருத்துவர் பரிந்துரைப்பது வழக்கம். மருத்துவர் ஒருவரே, தேவையும் ஒன்றே, ஆனால் தாகம் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நிலைமைகளுக்கு ஏற்ப வெவ்வேறு வழிகளில் தணிக்கப்படுகிறது.**

**இவ்வாறு, கடவுள் அவதார புருஷராக வெளிப்படும் காலகட்டங்களில், மனிதனின் தாகத்தை வெவ்வேறு வழிகளில் தணிக்கிறார். எல்லா மனிதர்களும், உணர்வுபூர்வமாக அறிந்தோ அறியாமலோ, சத்தியத்திற்கான ஒரே தாகத்தைக் கொண்டிருக்கிறார்கள்.**

மெஹர் பாபா தொடர்ந்து தனது சொந்த பணியைப் பற்றி விளக்கமளித்தார்:

**நான் மூன்று முக்கிய வழிகளில் பணிபுரிகிறேன்: தனித்தனியாக,** (வெகுஜன மக்களுடன்) **கூட்டாக மற்றும் உலகளவில். நான் தனித்தனியாகப்**

பணிபுரியும் போது, அது என்னுடன் இருக்கும் நபர்களோடு அல்லது என்னிடமிருந்து விலகி இருப்பவர்களோடு அல்லது என்னுடன் தொடர்பு வைத்திருப்பர்களோடு செய்யப்படும் பணி. சில சூழ்நிலைகளில், அவர்களின் செல்வம் மற்றும் பொருள் சார்ந்த வீழ்ச்சியின் மூலமாகவும் நான் பணிபுரிகிறேன்; அதேவேளையில் சில தருணங்களில், அவர்களின் செல்வம் மற்றும் பொருள் நலன் மூலமாகவும் செய்கிறேன். சில சந்தர்ப்பங்களில், நான் வேண்டுமென்றே பொருள் வீழ்ச்சியைக் கொண்டு வருகிறேன், ஆனால் அதன் பின்னணியில் அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்தை நான் எப்போதும் கருத்தில் கொண்டிருக்கிறேன். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், அவர்களின் சுய மேம்பாட்டிற்காக அவர்களின் மாய குணங்களை வெளிப்படுத்த நான் அவர்களை 'ஊடகங்களாகப்' பயன்படுத்துகிறேன், அங்குதான் மக்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. நான் ஏன் அதைச் செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். அதுவே போதுமானது; ஏனெனில் அன்பு, வெறுப்பு இரண்டும் அதன் உச்சகட்ட நிலையில் ஒரே முடிவுகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக, ஒருவர் என்னை மிகவும் நேசிக்கிறார், அதாவது அவர் என்னைத் தவிர வேறு எதையும் நினைப்பதில்லை, என்னுள் தொலைந்து போகிறார். அதே வேளையில் இன்னொருவர் எனக்கு மிகவும் எதிராக இருந்து என்னை வெறுக்கிறார், ஆனால் எப்போதும் என்னையே நினைக்கிறார், விரோத உணர்வுகளுடன் என்னுள் தொலைந்து போகிறார். நான் எப்போதும் 'சிந்தனை' எனும் ஊடகத்தைப் பயன்படுத்துகிறேன். இது நான் அளிக்கும் உந்துதலுக்கு உடனடியாக பதிலளிக்கும் குணங்களைப் பொறுத்தது.

நான் கூட்டத்தில் பணிபுரியும் போது, இது, பொதுவாக நாடகங்கள், திரைப்படங்கள், விளையாட்டு நிகழ்வுகள் - அங்கு மக்கள் ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது கவனத்தைச் செலுத்துகின்ற இடங்களில் - எனது ஆன்மீக விதையை அவர்களின் மனதில் விதைத்து, விளைவுகளை ஏற்படுத்துவது என்பது எனக்கு எளிதானது.

நான் உலகளவில் பணிபுரியும் வேளையில், என்னுடைய ஆன்மீக முகவர்கள் மூலமாகவே அதைச் செய்கிறேன். எனது மனம், உலகளாவிய மனம் என்பதால், ஒவ்வொரு தனி மனிதனின் மனதுடனும், என் முகவர்களாக இருக்கும் மேம்பட்ட ஆத்மாக்களின் மனதுடனும் இணைக்கப்பட்டுள்ளது; எனவே நான் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் எனது முகவர்கள் மூலமாகப் பணிபுரிகிறேன். அதனால்தான் சில நேரங்களில் ஒருவரிடம் பேசும்போது, எனது மனம் வேறோர் இடத்தில் பணிபுரிகிறது. உரையாடலின் நடுவே நான் திடீரென நிறுத்தி, வேறு எங்கேனும், எதிலேனும் கவனத்தைச் செலுத்தி, உரையாடல் நடக்கும் இடத்தில் இல்லாதது போன்ற உணர்வு நிலையை மக்கள் பார்த்ததும், அறிந்ததும் உண்டு.

இரவில் நான் ஓய்வெடுக்கும் வேளையில், சீடர்களில் சிலரை எனது அருகில் அமரச் செய்து கால்களை அழுத்தி விடுவதன் மூலம், அவர்களோடு உடல் தொடர்பை ஏற்படுத்துகிறேன். காக்கா, இரவு கண்காணிப்பாளராக இருக்கும்போது சில நேரங்களில், திடீரென இரவில் படுக்கையில் அமர்ந்துகொண்டு, சில அறிகுறிகளையோ அல்லது ஒளிரும் மின்னலையோ பார்த்துப் பதற்றமடைந்திருக்கிறார்; இது, குறிப்பாக, உடல் இல்லாத ஆவிகளுடன் நான் எனது சிறப்பு பணியில் ஈடுபடும்போது நிகழும் சம்பவம். (இதுபோன்ற உடலற்ற ஆவிகள் ஏராளமாக உள்ளன, ஆனால் எந்த நிலையில் இருந்தாலும், மீண்டும் மனித பிறவி எடுத்தாக வேண்டும், ஏனெனில் ஒவ்வோர் ஆத்மாவின் இறுதி இலக்கு இறைநிலையை அடைவது ஆகும்.) இதுவே எனது பணியின் சுருக்கமான விளக்கம்.

நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருப்பவர்கள் மட்டுமே என்னைப் பற்றி அறிந்தவர்கள், மேலும் அவர்கள், யார் ஒருவரின் கண்காணிப்பில் எவருக்காக, உடல் ரீதியாக பணிபுரிகிறார்கள் என்பதையும் அறிவார்கள். அவர்கள் எனது பௌதீக உடலைப் பார்க்க முடியாது, ஆனால் அவர்களின் நுட்பமான சூட்சும மற்றும் ஆழ்மன உடல்கள் எனது நுட்பமான சூட்சும உடலைக் காண்கின்றன, இது என்னுடைய பௌதீக உடலை ஒத்திருக்கும். மேலும் நான் எல்லையற்ற இறைநிலையை அடைந்து இறைவனாக இருக்கிறேன் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

உதாரணமாக ஒன்றைக் கூறுகிறேன்: “நான் இங்கே அமர்ந்திருக்கும் வேளையில், எனது ஆன்மீக முகவர்கள் இந்தியா, பெர்சியா, ஆஃப்ரிக்கா போன்ற பல நாடுகளில் பணிபுரிகிறார்கள். இந்தத் தருணத்தில், அவர்கள் எனது நுட்பமான சூட்சும உடலை ஒரே நேரத்தில் வெவ்வேறு ஆன்மீகத் தளங்களில் பார்க்கிறார்கள், ஏனெனில் அவர்கள் அனுப்பும் செய்திகள் ஆழ்மன தளங்கள் வழியாக அனுப்பப்படுகின்றன, அங்கு ஒன்றைச் செய்ய ஒருவருக்கு விருப்பம் மட்டுமே தேவைப்படுகிறது; அது உடனடியாக வேண்டிய இடத்தை அடைந்து விரும்பியதை நிறைவேற்றி முடிக்கிறது.

மக்கள் மீண்டும் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்: "அவர்கள் எவ்வாறு முகவர்களாக மாறுகிறார்கள்?"

“பெரும்பாலும் என்னுடனான நீண்டகால தொடர்புகள் காரணமாக, கடந்தகால வாழ்க்கையில் என்னுடன் இணைந்தவர்கள் ஆன்மீக முகவர்களாக மாறுகிறார்கள். என்னுடன் ஆழமாக இணைந்தவர்கள் வட்டத்தின் உறுப்பினர்கள் ஆகிறார்கள் - ஆனால் அனைத்துமே அளவிறுதியற்ற ஒன்று.”

"உங்கள் ‘வட்டம்’ (CIRCLE) என்று நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்?"

பாபா இவ்வாறு பதிலளித்தார், “இந்த வட்டம் என்பது என்னுடன் ஆழமாக இணைக்கப்பட்ட சீடர்கள், இப்போது அதைப்பற்றிய உணர்வும்,

**அறிவும் இல்லாமல் என்னுடன் இருக்கிறார்கள், மேலும் இந்தக் காலகட்டத்தில் நான் அவர்களுக்காகப் பின்னணியில் செய்யும் பணியின் விளைவாக, எதிர்காலத்தில் முழு உணர்வு நிலையுடன் என்னுடன் இருப்பார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையே இப்போது ஒரு திரை உள்ளது. அந்தத் திரை அகற்றப்பட்டதும் இருவரும் ஒன்றாக மாறுகிறோம். இருமைத்தன்மை அகன்று விடுகிறது.**

“**என்னுடைய முகவர்கள் பௌதீக தளத்தில் உள்ளவர்களுக்காகப் பணிபுரிகிறார்கள்; எனது வட்டத்து சீடர்கள் மூலமாக, அவர்களுக்குத் தெரியாமலே, ஆன்மீகத் தளங்களில் நான் பணிபுரிகிறேன். இயேசு அவரது சீடர்கள் மூலமாக ஆன்மீகத் தளத்தில் அவர்களுக்குத் தெரியாமல் பணியாற்றினார்; ஆனால் பிற்காலத்தில், அவர்கள் அதை அறிந்து கொண்டனர். எல்லா நேரத்திலும் அது இயேசுவின் பணி என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்; அவர்கள் எந்நேரத்திலும் இயேசுவின் கருவிகளாக, ஊடகங்களாக அவருடனே இருந்தனர்.**”

கூட்டத்தில் மற்றுமொருவர் பாபாவிடம், "அறிவியலும் மதமும் வேறு வேறாக இருக்கின்றனவா?" என வினவினார்.

அதற்கு பாபா பதிலளித்தார், “**இது எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது, பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தது. விஞ்ஞானம், பொருள் வளத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமே செயல்படுவதாக இருந்தால், அதற்கு ஆன்மீகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறப்படும். ஆனால், அது வாழ்க்கையின் அர்த்தத்தை தெளிவுபடுத்த வெளிப்படுத்தும்போது, ஆன்மீகத்தின் ஒரு கிளையாக விளங்குகிறது. கலை, சரியாக வெளிப்படுத்தப்பட்டால் அது ஆன்மீகம், தவறாக இருந்தால் அது பொருள்சார்ந்தது என்பது போல!**”

இன்னொருவர் இவ்வாறு வினவினார், "மேற்கு எப்போதாவது அவதார புருஷரை உருவாக்குமா?"

“**அவதார புருஷர் எப்போதுமே அந்தந்த காலகட்டத்தில் மனித உருவில் வருகிறார், ஆசிய கண்டத்தில் மட்டும் பிறவி எடுக்கிறார். இது பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியிலும், அனைத்து ஆன்மீகத் தளங்களிலும், அங்குள்ள விசித்திரமான சூழ்நிலை காரணமாக, அவதார புருஷரின் வெளிப்பாடு அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஆசிய கண்டத்தில் மட்டுமே நிகழ்கிறது**” என்று பாபா பதிலளித்தார்

"அவதார புருஷர் எப்போதாவது ஒரு பெண்ணாக இருப்பாரா?" என்று ஒருவர் கேட்டார்.

“**இல்லை!**” என பாபா வலியுறுத்திக் கூறினார். “**ஒருபோதும் ஒரு பெண் அவதார புருஷராக இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. அவதார புருஷர் எப்போதும் ஓர் ஆணாகவே இருக்கிறார்.**”

அடுத்த நாள், 1934, ஜூன் 30 அன்று, கோஹினூர் இந்திய உணவகத்தின் உரிமையாளர் கிருஷ்ணா வீர், பாபாவிற்கு ஒரு வரவேற்பு அளித்தார்; பாபா சுமார் 30 பேருடன் அங்குச் சென்றார். மதிய உணவுக்குப் பிறகு, நகரத்தின் ஏழை எளிய மக்கள் வாழும் கிழக்குப் பகுதிக்குச் (EAST END) சென்று, அதற்கு முந்தைய நாள் அறுவை சிகிச்சை செய்த ஜெஸ்ஸியை - பில் & நெல்லி பிரீசியின் தாயார் (BILL & NELLIE PRECEY'S MOTHER JESSIE) - சந்திக்கும் விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்கு முந்தைய மாலைப் பொழுதில் பாபாவை சந்தித்த செல்வந்தர் திருமதி எச். ஃபோர்டு, அவரைத் தனது ரோல்ஸ் ராய்ஸ் (ROLLS-ROYCE) காரில் அழைத்துச் செல்ல முன்வந்தார், பாபாவும் அதை ஏற்றுக்கொண்டார்.

கிழக்கு முனையின் அருகிலுள்ள பாதைகள் குறுகலாக இருந்ததால், பாபா 'லாங் லேன் (LONG LANE), 16 லாக்யர் தெருவில் (LOCKYER STREET) அமைந்த பிரீசி குடும்பத்தினர் இல்லத்திற்கு நடந்து சென்றார். பாபாவின் எதிர்பாராத வருகையைக் கண்டு அனைவரும், குறிப்பாக, தாயார், ஆச்சரியமடைந்தனர். கண்களில் நீர் ததும்ப, படுக்கையில் இருந்த பெண்மணி மெதுவான குரலில், "நீங்கள் இவ்வளவு தூரம் வந்தது உங்களின் எவ்வளவு பெரிய கருணை" என்று கூறினார்.

மெஹர் பாபாவின் அன்பும் ஆதரவும் அந்தப் பெண்மணியை ஆறுதல்படுத்தியது. பாபா அவரிடம், "**எவ்வளவு ஏழ்மையில் இருந்தாலும், இதுபோன்ற நல்ல ஆத்மாக்களுடன் இருப்பதை நான் விரும்புகிறேன். ஏழ்மை ஒரு பாவமல்ல. ஏழ்மையின் காரணமாக, நீங்கள் எல்லோரும் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். இதனால்தான், இன்று நான் இங்கு வந்துள்ளேன்.**"

அவர்களிடமிருந்து விடைபெற்று வந்த பாபா, ஒரு ஐஸ்கிரீம் விற்பனையாளரைச் சுற்றி பல குழந்தைகள் நின்றதை கவனித்தார்; திருமதி ஃபோர்டு அனைத்து குழந்தைகளுக்கும் ஐஸ்கிரீம் கூம்புகளை வாங்கினார். பாபா மகிழ்ச்சியடைந்து கூட்டத்தில் நின்ற சில குழந்தைகளை அன்புடன் தழுவினார். அவர் பில் (BILL), அவரது சிறிய சகோதரி நெல்லி (NELLIE) இருவரையும் காம்பெய்ன் கார்டனுக்கு (COMPAYNE GARDENS) அழைத்துச் சென்றார்.

கடந்த சில மாதங்களில், மெஹர் பாபாவின் சொற்பொழிவுகளை, ஆங்கிலத்தில் வெளியிட 'ஸர்கிள் எடிட்டோரியல் கமிட்டி' எனும் குழு அமைக்கப்பட்டது. வில் & மேரி பேக்கெட் இந்த முயற்சியில் தங்கள் பெரும்பாலான நேரத்தை அர்ப்பணித்தனர். ஜூன் 30ஆம் நாள் பிற்பகலில், அவர்கள், 50 சேரிங் கிராஸில் (CHARING CROSS) அமைந்த கமிட்டி அலுவலகத்தில் பாபாவிற்கு வரவேற்பு அளித்தனர். பாபா இரண்டு மணி நேரத்தில் 50 பேரை சந்தித்தார்.

வரவேற்பறையில், ஒரு ரஷ்ய பெண்மணி, பாபாவிடம் ரஷ்ய நாட்டு மக்களின் துன்பம் குறித்து விவாதித்தார். மெஹர் பாபா அவரிடம், "**ரஷ்ய மக்கள் மேலும் அதிக அளவிலான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும், ஆனால்**

**அவர்கள் இறுதியில் துயர் நீங்கி மகிழ்ச்சியைக் காண்பார்கள்**" என்று கூறியதைக் கேட்டு அந்தப் பெண்மணி மிகவும் நிம்மதியடைந்தார், கண்களில் நீர் ததும்ப பாபாவின் கையைப் பற்றிக்கொண்டு சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்தார்.

இந்தக் காலகட்டத்தில், மார்கரெட், குயன்டின் இருவரும் ஆங்கில வரலாற்றின் குறியீடுகளை நடன முறையில் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தனர். மேலும் இந்த நிகழ்ச்சி ('பேஜன்ட் ஆஃப் பார்லமென்ட்' – 'PAGEANT OF PARLIAMENT') தற்போது ராயல் ஆல்பர்ட் ஹாலில் (ROYAL ALBERT) நிகழ்த்தப்பட்டது. அவர்கள் பாபாவை அந்த பாலேயைப் பார்க்க அழைத்தபோது அவரும் ஓர் இரவு அங்குச் செல்ல ஒப்புக்கொண்டார். நாடகத்தைப் பார்த்து, பாபா, ஐரிஷ் முன்னணி நடனக் கலைஞரான டியட்ரா ஃபையுடன் (DEIRDRE FAHY) கைகுலுக்க விரும்புவதாகக் குறிப்பிட்டார், ஆனால், **'நான் யார் என்று அவருக்குத் தெரியக்கூடாது**' என்ற நிபந்தனையை முன்வைத்தார். மார்கரெட், குயன்டின் ஆகியோருடன் பணிபுரிந்த அனைவருக்கும் பாபாவைத் தெரியும் என்பதால், இது எளிதான காரியம் அல்ல. இருவரும் அவரை எப்படி அறிமுகப்படுத்த முடியும்? செய்தித்தாள்களும் பாபாவின் வருகையைப் பரவலாக விளம்பரம் செய்திருந்தன.

நிகழ்ச்சி முடிந்ததும், அவர்கள் பாபாவை அடித்தளத்தில் அமைந்த ஒப்பனை அறைக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் டியட்ராவை அழைத்து, மார்கரெட் கடுமையான குரலில், "டிய்ட்ரா, உங்களுக்கு மிஸ்டர் குயன்டின் டாடைத் தெரியும்தானே! நான் உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்க முடியாது. இன்றைய நிகழ்ச்சியை மேடையில் நீங்கள் சரியாகச் செய்யவில்லை, ரசிக்கும்படியாக இல்லை" என்று சொன்னதும் அந்த இளம்பெண் உடனடியாகக் கண்ணீர்விட்டு அழத் தொடங்கினார்; அதே வேளையில் மார்கரெட் விரைவாக, "ஆமாம், நீங்கள் எங்கள் நண்பர் மிஸ்டர் ஈரானியை சந்திக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்" என்றதும் டியட்ரா அழுதுகொண்டே, உண்மையில் பாபாவைப் பார்க்காமல் கைகுலுக்கினார்; பாபாவும் கைகுலுக்கிவிட்டு அங்கிருந்து சற்று விலகி நின்றார். குயன்டின் உடனே அந்தப் பெண்ணை ஆறுதல் படுத்தினார், "சரி, சரி, நீங்கள் கடினமாக உழைப்பதானால் உங்கள் வேலையைத் தொடரலாம்." பல வருடங்கள் கழித்து, மார்கரெட் அந்தப் பெண்மணியிடம் நடந்ததை விளக்கினார்.

**1934,** ஜூலை **2**ஆம் நாள், டிலியாவின் சகோதரி, மின்டா, பாபாவை ரிச்மண்ட் (RICHMOND), தேம்ஸ் (THAMES) நதிக்கரையில் அமைதியான சூழலில் அமைந்த 'ஸ்டார் & கார்ட்டர்' (STAR AND GARTER) ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார்; அவரது தாயார் மே, பாட்டி, தாயாரின் தோழி ஆகியோரையும் உடன் அழைத்திருந்தார். இந்த மூன்று 'பண்டைய கால பாட்டிகளிடம்' ஆதிகால புருஷன் அளவுகடந்த அன்பும், நல்லெண்ணமும் கொண்டிருந்தார். பாபா லண்டனில் ஓய்வெடுக்கக் கூட நேரம் இல்லாமல் தனது பணியில் மும்முரமாக

இருந்த வேளையிலும், அவருடைய செயல்பாடுகளுக்கு மத்தியில், இந்த மூன்று, வயதான பெண்மணிகளை அவர் மறக்கவில்லை. காலம் இதை இப்படிக் குறிப்பிட்டது: "மாபெரும் கடலாகிய ஒருவர் துளிகளாக இருக்கும் பலரின் ஆர்வத்தையும் கவனத்தையும் முழுமையாகத் தன்பால் ஈர்த்து, கடலோடு ஒன்றிணையச் செய்கிறார்."

ரிச்மண்ட் பார்க் (RICHMOND PARK) வழியாக பாபா, கிட்டி, டிலியா மூவரும் சற்று தூரம் நடந்து வந்த பின்பு, மண்டலி மற்றும் சிலருடன் ஒரு சிவப்பு நிற இரட்டை அடுக்கு பேருந்தில் மேலே அமர்ந்து கிட்டியின் இல்லத்திற்குச் சென்றனர். அடுத்த நாள், மெஹர் பாபா மதியம் இரண்டு மணிக்கு ஹால்ஸ்டெட்டில் (HALSTEAD) அமைந்த வில் & மேரி பேக்கெட்டின் குடிலுக்குச் சென்றார். அங்கு அவர் மீண்டும் சந்தித்தவர்களில் வினிஃப்ரெட் ஃபோர்ஸ்டர் (WINIFRED FORSTER) என்பவரும் ஒருவர். ஜூலை 4ஆம் நாள், பாபா மதிய உணவிற்காக கிருஷ்ணா வீரின் உணவகம் சென்றார்.

ஜூலை 5 அன்று மெஹர் பாபா, மண்டலி அனைவரையும், திருமதி ஃபோர்ட், லண்டனிலிருந்து டோவருக்கு அழைத்துச் சென்றார்; டிக் கேபல் ஸ்மித்தின் (DICK CAPEL SMITH) தந்தையும் உடன் சென்றார். பயணத்தின் போது பாபா ஓய்வெடுக்க விரும்பினார், ஆனால் அந்தப் பெண்மணி இரண்டு மணி நேர சவாரி வேளையில் அவரிடம் கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நோரினா, கிட்டி, மின்டா, டிலியா, குயன்டின் ஆகியோர் டோவருக்கு ரயிலில் வந்து, பாபாவுடன் படகில் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்தனர்.

அன்று பிற்பகல் நான்கு மணிக்கு ஆஸ்டெண்ட் (OSTEND) நகருக்கு வந்த அவர்கள், ஸூரிக் செல்லும் பிரஸ்ஸல்ஸ் எக்ஸ்பிரஸில் (BRUSSELS EXPRESS) பயணம் செய்வதற்கு முன்பு நகரைச் சுற்றி வந்தனர். பாபா பெரும்பாலும் கீழ் வகுப்பில் பயணம் செய்வது வழக்கம், ஆனால் இந்த முறை மூன்றாம் வகுப்பின் மரத்தால் அமைந்த இருக்கைகள் அசௌகரியமாக இருந்ததால் சரியாக ஓய்வெடுக்க முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

பாபாவும் அவரது தோழர்களும் ஜூலை 6 அதிகாலையில் சுவிட்சர்லாந்தின் பாஸல் (BASEL, SWITZERLAND) நகருக்கு வந்து, ரயில்களை மாற்ற வேண்டியிருந்த அவ்வேளையில், ஓய்வறைக்குச் சென்று நீராடி, தங்களைச் சீர்செய்து கொண்டனர்; ஏனெனில் பாபா, ஸூரிக் நகரை அடைந்ததும், மக்களை சந்திக்கும் ஆர்வத்தில் இருந்ததால், அவருக்கு நேரம் போதவில்லை. அதற்குப் பிறகு, பாபா, நடை மேடையில் விறுவிறுப்புடன் சுற்றி வந்து, அடுத்த ரயிலில், இரண்டு மணி நேரத்தில் ஸூரிக் நகருக்கு வந்தார். அங்கு வால்டர் மெர்டென்ஸ் (WALTER MERTENS), பாபாவை வரவேற்று, தனது காரில் அழைத்துச் சென்றார் (காக்கா, ஆதி ஜூனியர் இருவரும் உடன் சென்றனர்); இதர மண்டலி வேறு இரண்டு கார்களில் பின் தொடர்ந்தனர். வால்டரின் பிரமாண்டமான பதினைந்து

அறைகள் கொண்ட மாளிகை ஸூரிக் நகரிலிருந்து ஏழு மைல் தொலைவில் இருந்தது. ஃபெல்ட்மெயிலனில், பெனிஷோஃபெஸ்ட்ராஸ், 35 பெனிஷோஃப் (BUNISHOF AT BUNISHOFERSTRASSE 35 IN FELDMEILEN) என்ற முகவரியில் அமைந்த இல்லத்தைச் சுற்றி அருமையான ஏரிகள் இருந்தன. மெஹர் பாபாவும் மண்டலியும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இங்குத் தங்கியிருந்தனர். வால்டரின் மனைவி ஹெடி (HEDI), பாபாவை வரவேற்க மகிழ்ச்சியுடன் காத்திருந்தார்.

பாபா, வீட்டின் இடது பக்கம் அமைந்த, அற்புதமான தோற்றம் மிக்க, காற்றோட்டமான அறையில் தங்கியிருந்தார். சாஞ்சி, ஆதி ஜூனியர் இருவரும் பக்கத்து அறையிலும், குயன்டின் அடுத்த அறையிலும் தங்கினர். பாபா தோட்டத்திற்குள் சென்று அனைத்து அன்பர்களையும் சந்தித்த வேளையில், வால்டர் சில புகைப்படங்களை எடுத்தார்.

ஸூரிக் நகரில் வாழ்ந்து வந்த அனிதா டி காரோவும் அங்கு வந்திருந்தார். பாரிஸிலிருந்து ரானோ, நான்னி, ருவானோ, லண்டனிலிருந்து மார்கரெட், மேபெல் மற்றும் இத்தாலியிலிருந்து எனிட் கோர்ஃப் (8ஆம் தேதி) வருமாறு அறிவுறுத்தப்பட்டது. மெர்டென்ஸின் இல்லத்தில் அவர்களுக்குப் போதுமான இடமில்லாததால் இதர அனைவரும் அருகிலுள்ள ஹோட்டல் ராபனில் தங்க வேண்டியதாயிற்று.

ஜூலை 7ஆம் நாள் காலையில், பாபா குழுவுடன் ஏரியின் அருகிலுள்ள நீச்சல் பகுதிக்குச் சென்றபோது, அன்பர்களில் பலர் அதில் நீந்தி மகிழ்ந்தனர்.

சுவிட்சர்லாந்திற்கு வருவதற்கு முன்பு, மெஹர் பாபா, மெர்டென்ஸிடம் ஓர் அமைதியான, ஆனால் 'சுதந்திரமான, மேன்மைமிக்க' இடத்தைக் கண்டுபிடிக்குமாறு கேட்டுக் கொண்டார்; பாபா, ஒரு நாள் அங்கு ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்பினார். ஸ்விஸ் நகரத்தைச் சார்ந்த நாவலாசிரியரும் வேட்டைக்காரருமான அவர்களது நண்பர் மெய்ன்ராட் இங்கிலின் (MEINRAD IGLIN), அதற்குப் பொருத்தமானதாகக் கருதும் இடம் ஒன்றை அவர்களுக்குக் காட்டினார். அன்று பிற்பகல், பாபா அதைப் பார்வையிட இங்கிலின், மெர்டென்ஸ் குடும்பத்தினருடன் காரில் சென்றார். ஒரு குறுகிய மலைச் சாலையில் ஓட்டிச் சென்ற பின்னர் (திறந்து மூடப்பட வேண்டிய மாட்டு வாயில்களைக் கடந்து) அவர்கள் ஒரு மலையின் மேல் வந்தனர்.

பாபா ஒரு குன்றின் விளிம்பில் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டார், இந்த இடம் ஃபாலன்ஃப்ளூ (FALLENFLUH - அதாவது 'கீழே விழும் மலை') என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு பெரிய ஏரிக்கு அருகிலுள்ள 'ஸ்க்வயஸ்' (SCHWYZ) குறுநகரத்தைத் நோக்கி, சுவிட்சர்லாந்தின் மையத்தில், ஒரு பள்ளத்தாக்கில் ஆல்ப்ஸ் (ALPS) விளைநிலங்கள் மற்றும் மாட்டு மந்தைகளின் அழகான இயற்கை சூழலில் அமைந்தது. இப்பகுதி ஒரு தூய்மையான, மக்கள் வாழாத காடுகளால் நன்கு பாதுகாக்கப்பட்டது, மேலும் பாபா முற்றிலும் தடையின்றி ஏகாந்தவாசம் இருப்பதை உறுதிசெய்ய முடியும். பாபா அந்த இடத்திற்கு ஒப்புதல் அளித்தார், அன்று மாலை ஏழு மணிக்கு அவர்கள் ஸூரிக் திரும்பினர்.



வினி்ஃப்ரெட் ்ஃபோஸ்டர்,
மேரி பேக்கட்,
மேபெல் ரியான்,
மெஹர் பாபா, சாஞ்சி



வால்டர் மெர்டென்ஸ்
இல்லத்தில்
மெஹர் பாபா



டோபி மெர்டென்ஸுடன்
மெஹர் பாபா

சுவிட்சர்லாந்தின் ஃபாலென்ஃப்ளூ (FALLENFLUH) பகுதியை மெஹர் பாபா பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, லண்டனிலிருந்து எலிஸபெத் வந்திருந்தார். கடந்த பல மாதங்களாக, பாபாவின் சார்பில் திரைப்படம் தொடர்பான அனைத்தையும் நிர்வகிக்கும் வேளையில், அவர் எதிர்கொண்ட மன அழுத்தத்திற்குப் பிறகு, பாபாவை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். பாபாவும் மகிழ்ச்சியில் அவரது முயற்சிகளைப் பெரிதும் பாராட்டினார். அவர்கள் இருவரும் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி நீண்ட நேரம் விவாதித்தனர், திரைப்படத்திற்குத் தேவையான நிதி நிலைகளைப் பற்றியும் பேசினர். இருவரின் கலந்துரையாடல் நீண்ட நேரம் நடந்தது; ஒரு கட்டத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நிதி விஷயம் குறித்த கேள்விகள் மற்றும் விவாதங்களால் நான் முற்றிலும் சோர்ந்து போயுள்ளேன்! இனிமேல் நான் வெளியாட்களிடமிருந்து நன்கொடைகளை ஏற்கக் கூடாது என்று முடிவு செய்துள்ளேன். இது பெரிய அளவில் தவறாகப் புரிந்து கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குகிறது; எனவே ஒவ்வொரு நயா பைசாவையும் அவரவருக்குத் திருப்பித் தர விரும்புகிறேன்!**"

மெஹர் பாபா இந்த விஷயத்தில் ஹெர்பெர்ட் டேவி தவறாகப் புரிந்துகொண்டதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டார், "**ஆனால் ஹெர்பெர்ட் மிகவும் அன்பானவர், அவர் (பாபாவிடம்) திரும்பி வருவார்**" என்று கருத்துத் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்பு, பாபாவின் திரைப்பட திட்டம் குறித்து விவாதிக்க நோரினா, பாரிஸ் நகரில் தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கலைத் தொடர்பு கொண்டார்; ஆனால் அவர்களுக்கு இடையே பல சர்ச்சைகள் எழுந்தன. பாபா, பாரிஸுக்கு வருவார் என்று பாஸ்கல் கேள்விப்பட்டபோது, அவருடன் சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் பேசுவதில் உறுதியாக இருந்தார். நோரினா, பாபாவுடன் நிதி ஆதரவு, திரைப்பட காட்சிகள், கதை வசனங்கள் குறித்த விவரங்களை அடிக்கடி தொலைத்தந்திகள் மூலம் பரிமாறிக் கொண்டது, தவறாகப் புரிந்து கொள்ளும் சூழ்நிலைக்கு வழிவகுத்ததாக, பாஸ்கல், பாபாவைக் குற்றம் சாட்டினார்.

பாரிஸ் நகரில் பாஸ்கல், பாபாவைப் பார்க்க முடியாமலாயிற்று, எனவே அவர் அனிதாவின் நண்பர், ஓவியர், ரோஸமண்ட் வைஸூடன் (ROSAMOND WISE) ஸூரிக் நகரத்திற்கு வந்தார். 1934 ஜூலை 8 ஆம் நாள் மாலையில் பாஸ்கல், கார்ல் வால்மொல்லர் இருவரும் பாபாவை சந்திக்க திட்டமிட்டிருந்தனர், ஆனால் அன்று காலை, பாபா கார்ல் வால்மொல்லரை உடனடியாக சந்திக்க விரும்புவதாக நோரினா, எலிஸபெத் இருவருக்கும் தெரிவித்து, அவருக்கே உகந்த முறையில் 'உள் உணர்வுகளைத் தூண்டினார்'. வால்மொல்லருக்கு விரைவில் ஹோட்டலை விட்டு வர முடியாததால் பாஸ்கல் வர ஒப்புக்கொண்டார்.

கார்ல் வால்மொல்லரின் அணுகுமுறை குறித்து பாபா மகிழ்ச்சியாக இல்லை. "**கார்ல் ஒரு மேதாவியாக இருக்கலாம், ஆனால் அவர் இல்லாமல்**

**திரைப்படத்தை உருவாக்க முடியாது என்று அவர் நினைக்கவோ, புரிந்து கொள்ளவோ கூடாது.**

**"அவர் செய்யும் பணிக்கு உரிய பணம் செலுத்தப்படுகிறது, எனது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப அனைத்து விஷயங்களும் செய்யப்பட வேண்டும் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள்** (பாஸ்கல் மற்றும் வால்மொல்லர்) **எனது விதிமுறைகளின்படி செயல்படத் தயாராக இல்லை என்றால், முழு யோசனையையும் கைவிடுவது நல்லது."**

பாஸ்கல், எளிதில் கோபம் அடையும் மனோபாவமுள்ள மனிதர்; பாபாவின், இந்தத் திரைப்பட திட்டத்தால் அவரது நேரம் வீணாக்கப்படுவதாக உணர்ந்தார். பாஸ்கல் வந்த வேளையில் பாபா வீட்டில் இல்லை; இது அவரை மேலும் வருத்தமும், கோபமும் அடையச் செய்தது. அப்போது, தொலைபேசி மணி ஒலித்தது, எலிஸபெத்திற்கு ஒரு செய்தி வந்தது: **'பாஸ்கலுக்கு உண்ண ஒரு பீச் பழத்தை வழங்குமாறு'** அறிவுறுத்தி, **'பாபா விரைவில் வருவார் என்றும் அவரிடம் சொல்லுங்கள்.'** இத்தகைய தீங்கற்ற, உறுதியளிக்கும் பாபாவின் வார்த்தைகள் பாஸ்கலின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது; அதைத் தொடர்ந்து, பாஸ்கலின் தாயார் அவருக்காக, சிறந்த பீச் பழங்களை, (அவர் மிகவும் விரும்பி உண்ணும் பழம் என்பதால்) பத்திரமாக வைத்துக்கொள்வது வழக்கம் என்பதை எடுத்துக் கூறினார்.

சிறிது நேரத்தில், பாபா வந்து பாஸ்கலை அழைத்துக் கொண்டு அவரது அறைக்குள் நுழைந்தபோது, பாபா, அமைதியாக சிரித்தார்; பாஸ்கலின் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது. அவர் பாபாவிடம் "நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என அடக்கத்துடன் கேட்டார். பாபா அவரை அருகில் அமரச் செய்து, கையைத் தொட்டு, அவரது பணியைப் பற்றி விசாரித்தார். இப்போது பாஸ்கல் அமைதியான மனநிலையில், பாபாவிடம், வாழ்க்கையின் ஆன்மீகப் பக்கத்தை, இதற்கு முன் செய்யாத வகையில் சித்தரிப்பதன் மூலம், உள் உணர்வுகளையும் உள்ளளவிலான ஆழ்ந்த மனித நிலையையும் வெளிப்படுத்த விரும்புவதாகக் கூறினார்.

பாபா அப்போது பதிலளிக்கும் விதத்தில் குறிப்பிடுகையில், **"உங்கள் திரைப்படங்களில் ஒன்றை லண்டனில், ஒரு முறை, நான் பார்த்தேன்; நீங்கள் நகைச்சுவையையும், அவலநிலையையும் எவ்வளவு நுட்பமாக இணைத்துள்ளீர்கள் என்பதை கவனித்தேன். நான் அதை முழுமையாக ரசித்தேன், எனது திரைப்படத்தைத் தயாரிக்கும் மனிதர் நீங்கள்தான் என்பதை நான் அடிக்கடி சுட்டிக்காட்டி இருக்கிறேன். உங்களுக்கு என்னுடன் மிக ஆழமான கடந்தகால தொடர்புகள் உள்ளன; மேலும், எதிர்காலத்தில், குறிப்பாக, திரைப்படம் தயாரிப்பின் மூலமாக நீங்கள் எனக்குப் பணிபுரிவீர்கள். அதற்காக நான் உங்களை என்னிடம் ஈர்த்துள்ளேன்."**

தொடர்ந்து பாபா, "**நீங்கள் என்னுடைய ஃபீனிக்ஸ்** (PHOENIX) **பறவை**" என்று எழுத்துப்பலகையில் உச்சரித்தார்.

பல மணி நேரம் பாபாவுடன் இருந்த பின்பு, கேப்ரியல் பாஸ்கல் தனது வாழ்க்கையில் இதுவரை அடைந்திராத மகிழ்ச்சியை உணர்ந்தார். "இது அனைத்தும் அற்புதமானது, உண்மையிலே அற்புதமானது - வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்கு அற்புதமானது" என்று பின்னர் அவர் நினைவு கூர்ந்தார். "நான் ஒரு சிங்கத்தைப் போல வந்தேன், ஆனால் ஆட்டுக்குட்டியைப் போல திரும்பிச் சென்றேன்!"

பாஸ்கல், வால்மொல்லர் இருவருடன், திரைப்பட திட்டம் பற்றிய விவாதங்கள் அடுத்த மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடந்தன. வால்மொல்லர் ஒரு விமானத்தில் பயணிகளையும் குருநாதரையும் பிரதிநிதித்துவப்படுத்திய விமான ஓட்டியைப் (பைலட்) பற்றிய ஒரு கதையின் (பரிபூரண உணர்வு நிலை) தோராயமான வரிவடிவத்தை எழுதியிருந்தார். பாபாவின் கையை புகைப்படம் எடுத்து படத்தில் காட்டுமாறு பாஸ்கல் பரிந்துரைத்தார், இதற்கு பாபா ஒப்புக்கொண்டார்.

ஆர்வமுள்ள சில சுவிஸ் நபர்கள் நேரடி சந்திப்புக்காக அழைக்கப்பட்டனர். ஜூலை 9ஆம் நாள், பாபாவுடன் நடந்த நேர்காணலின் போது, வால்டரின் சகோதரர் ஆஸ்கர் (OSKAR), "ஒரு சிறந்த, உண்மையான கிறிஸ்தவராக இருப்பதற்கும், நல்ல கணவன், தந்தை என்பதற்கும் தடையாக இருப்பது என்ன?" என வினவினார்.

அதற்கு பாபா, "**கிறிஸ்து வாழ்ந்த வாழ்க்கையை வாழ, நீங்கள் முடிந்தவரை முயற்சிக்க வேண்டும். கோட்பாடுகள் மற்றும் அறிவுசார்ந்த புரிதலால் மட்டும் ஒருவர் கிறிஸ்தவத்தைப் பின்பற்றாமல், அதன் சாராம்சமான உணர்வுடன், அன்புடன், வாழ வேண்டும்**" என்று பதிலளித்தார்.

"நான் அதை எப்படிச் செய்வது?" என்று ஆஸ்கர் மெர்டென்ஸ் கேட்டார்.

**"அன்பை வளர்த்துக் கொள்ள, நீங்கள் அதை நடைமுறையில் செயல் படுத்த வேண்டும்; அதாவது, நீங்கள் அதை அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டும். நீங்கள் உங்கள் ஆசைகளைக் குறைப்பதோடு, உங்கள் சொந்த மகிழ்ச்சியைக் குறைவாக நினைத்து, பிறரை மகிழ்வுறச் செய்ய வேண்டும். இதைச் செய்ய முடியும். 'ஆசை' எனும்போது நான் சுயநல ஆசைகளை அர்த்தப்படுத்துகிறேன்... இது மிகவும் நடைமுறைக்குரியது, முற்றிலும் எளிதானது; ஆனால் மக்கள் எப்போதும் அதைச் சிக்கலாக்கி விடுகிறார்கள்."**

மெஹர் பாபா தொடர்ந்து கூறுகையில், "**என்னை நம்புவதற்கும் பின்பற்றுவதற்கும் எந்தத் தேவையும் இல்லை. கிறிஸ்துவின் போதனைகளை அதன் உண்மையான அர்த்தத்தில் பின்பற்றுங்கள். கிறிஸ்துவை நேசிப்பதன் மூலமும், அவர் வாழ விரும்பிய வாழ்க்கையை**

**வாழ்வதன் மூலமும், நீங்கள் என்னைப் பின்பற்றுகிறீர்கள், எனக்கு நெருக்கமாக வருவீர்கள்.**"

ஸூரிக் நகரில் வாழும் ஒரு மகளிர் கல்லூரியின் பேராசிரியர் ஃபிரிட்ஸ் என்டர்லின் (FRITZ ENDERLIN) இவ்வாறு வினவினார், "புதிய ஏற்பாட்டின் கருத்தாக்கத்தின் அடிப்படையில், பாபாவின் கிறிஸ்து உணர்வுநிலையைப் பொறுத்தவரை அது தவறானது என்று நினைக்கும், ஆனால் அவருடைய அன்பின் தாக்கத்தை அனுபவிக்கத் தயாராக இருக்கும் நபர்களுக்கு, ஸ்ரீ மெஹர் பாபா அவரது அன்பைக் கொடுக்கத் தயாராக இருக்கிறாரா?

அதற்கு பாபா, "**நீங்கள் இயேசுவை நேசித்து, அவரின் போதனைகளைப் பின்பற்றி, அவருடைய வாழ்க்கையை வாழ முடிந்தால், அதுவே போதுமானது. நீங்கள் என்னைப் பின்பற்றத் தேவையில்லை, ஏனெனில் இயேசுவை உங்களின் முழு அன்புடன் பின்பற்றுவதன் மூலம், நீங்கள் மறைமுகமாக என்னைப் பின்பற்றுகிறீர்கள். அதுதான் எனக்குத் தெரிந்தது.**"

ஸூரிக் பல்கலைக்கழகத்தின் இறையியல் பேராசிரியரான டாக்டர் பிரன்னர் (DR. BRUNNER), "கடவுளை அடையும் வழி அவரால் மட்டுமே சாத்தியம் என்று பாபா நம்புகிறாரா? பாபா தனது கிறிஸ்து உணர்வு நிலையின் சக்தியை, எங்கிருந்து அடைகிறார்?" என்று வினவினார்

அதற்கு பாபா, "**நீங்கள் கடவுளை, உங்களில், உங்கள் சுய முயற்சியால் கண்டுகொள்வதானால், அதைக் கடவுளின் சிறப்பு வெளிப்பாட்டில் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் எங்கே இருக்கிறது? கடவுளின் உணர்வுநிலையை அடைவது கடினம் என்பதால், கடவுள் நிலையை அடைந்த ஒருவரின் உதவியைப் பெறுவது அவசியம்**" என்று பதிலளித்தார்.

வால்டரின் முதல் மனைவி ஜூலை 10 அன்று பாபாவை சந்திக்க வந்தார், ஹெடியின் சகோதரியும் அவரது குடும்பத்தினரும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். வால்டரின் முதல் மனைவியின் மகன் எவரிஸ்ட் மெர்டென்ஸ் (EVARISTE MERTENS), ஜூலை 11ஆம் நாள் பாபாவை சந்தித்தார்.

எவரிஸ்ட் பாபாவிடம், "நான் எப்படி மகிழ்ச்சியைக் கண்டு கொள்வது?" என்று கேட்டார்

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**உலகில் ஒவ்வொருவரும், அறிந்தோ அறியாமலோ, ஏதோ ஒரு விதத்தில் மகிழ்ச்சியை நாடுகிறார்கள். ஒரு கொலைகாரன் கூட மகிழ்ச்சியைத் தேடுகிறான்; அதை அவன் கொலை செய்வதன் மூலம் கண்டுகொள்ள முடியும் என்று நம்புகிறான், இதனால்தான் அவன் கொலை செய்கிறான். ஒரு மனிதன் ஏன், எப்போது கொலை செய்கிறான்? ஒன்று வெறுப்பு அல்லது பொறாமை மூலம், மேலும் அவன் கொலை செய்து பழிவாங்கினால் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நினைக்கிறான்.**

**ஒரு மனிதன் ஏன் தற்கொலை செய்கிறான்? ஏனெனில் அவன் மரணத்தில் மகிழ்ச்சியை எதிர்பார்க்கிறான். இன்னொருவன் மது அருந்துவதன் காரணம் என்ன? அவன் மது அருந்துவதன் மூலம் மகிழ்ச்சியை எதிர்பார்ப்பதே காரணம். ஆனால், அதனால் என்ன மகிழ்ச்சி வந்துவிடும்? அது எவ்வளவு காலம் நீடிக்கும்? அவன் அருந்திய போதைப்பொருளின் தாக்கம் நீடிக்கும் வரை. அது மறைந்த அடுத்த கணமே அவன் உடைந்து, சோர்வடைந்து பரிதாபகரமான நிலையில் இருக்கிறான்.**

**இது காமத்துக்கும் பொருந்தும். ஒரு நபர் அவன் அல்லது அவள் அடையும் மகிழ்ச்சிக்காக அனைத்தையும் செய்கிறார்; ஆனால், ஒருவர் மகிழ்ச்சி அடைகிறார் என்பது ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே; அது முடிந்ததும், அந்த நபர் மறுபடியும் பரிதாபமான நிலையில் இருக்கிறார்.**

**உண்மையான மகிழ்ச்சி என்பது வேறு. அது ஒருபோதும் மாறாது, தடுக்கப்படமாட்டாது. நிரந்தரமும், நித்தியமுமான அது உங்களுள் இருக்கிறது. உயிரோடும், உணர்வோடும் நித்திரையில் (மறைந்திருக்கும்) அதைத் திறக்க முடியும் (திறக்கப்பட வேண்டும்). அது, திறந்த அடுத்த கணமே, ஒருவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறார்.**

**எல்லா மகிழ்ச்சிகளுக்கும் ஆதாரம் நானே - ஆனந்தத்தின் சூரியன் - ஆனால், சூரியனிடமிருந்து உங்களை ஒரு திரை மறைத்துள்ளது. சூரியன் இருப்பதும், பிரகாசிப்பதும், அதன் ஒளியை உலகம் முழுவதும் பரப்புவதும் உண்மை. ஆனால், அதன் கதிர்கள் உங்களை அணுக நீங்கள் அனுமதிக்கவில்லை; நீங்கள் அவற்றைத் திரை மூலம் தடுக்கிறீர்கள். அதை அகற்றியதும் நீங்கள் சூரியனைக் காண்பீர்கள். திரையை அகற்றி உங்களுக்குள் மகிழ்ச்சியை உணர வைக்க நான் உதவுவேன். நான் உங்களை நேசிக்கிறேன்; உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன்.**

அப்போது அந்த இளைஞன், "நீங்கள் யாரை அதிகம் விரும்புகிறீர்கள் - எனது தாயாரையா அல்லது ஹெடியையா?" என வினவினான்.

எவரிஸ்ட்டுக்கு உறுதியளித்த பாபா, "**நான் இருவரையும் நேசிக்கிறேன், அனைவரையும் நேசிக்கிறேன். எனக்கு வெறுப்பு என்பதே இல்லை. நீங்கள் என்னை அடித்தாலும், அறைந்தாலும், என் மீது உமிழ்ந்தாலும், நான் உங்களை நேசிப்பேன். உங்கள் தாயார் நல்லவர். ஹெடியும் நல்லவரே. வால்டர் சிறந்தவர். நான் அனைவரையும் நேசிக்கிறேன்.**

"**ஹெடி, உங்கள் தாயின் மகிழ்ச்சியை இழக்கச் செய்தார் என்று நீங்கள் நினைப்பது எனக்குத் தெரியும். அது அப்படி அல்ல; அது அவருடைய தவறும் அல்ல. அது யாருடைய தவறும் இல்லை. நீங்கள் உங்கள் தாயை நேசிப்பதைப் போலவே, நீங்கள் ஹெடியையும் சரிசமமாக நேசிக்க வேண்டும். நீங்கள் உங்கள் தாயையும் நேசிக்க வேண்டும், இகழ்ச்சியாகவோ, மறைமுகமாகவோ பேசக்கூடாது. அவர் மிகவும் கஷ்டப்படுகிறார்.**

**“எனக்காக இதைச் செய்யுங்கள்: உங்கள் தாயை நேசியுங்கள், ஹெடியை நேசியுங்கள், அனைவரையும் நேசியுங்கள். பெரிய மனதுடன், தாராளமாக, மன்னிப்பவராக இருங்கள், விரைவில் நீங்கள் மகிழ்ச்சியைக் காண்பீர்கள். நான் உங்களுக்கு உதவுகிறேன்.”**

"நான் எனது தேர்வில் தேர்ச்சி பெறுவேனா?" என்று எவரிஸ்ட் கேட்டார்.

**“நான் இல்லை என்பேன்.”**

"அப்படியானால் நான் தேர்வில் தோன்ற மாட்டேன்."

**“இல்லை, இல்லை, நீங்கள் கட்டாயம் தேர்வுக்குச் செல்ல வேண்டும்”** என்று பாபா அவரிடம் கூறினார். **“நீங்கள் தோல்வியடைவதில் என்ன தவறு? நீங்கள் தேர்ச்சி அடைந்தீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது என்னவாகும்? அந்த நேரத்திற்கு நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வி மறுபடியும்? நீங்கள் மகிழ்ச்சியாக இல்லை; அதற்காகக் கவலைப்படுவானேன்? நீங்கள் தேர்ச்சி அடைவதை நான் பார்த்துக்கொள்வேன்; எனது திறவுகோலைத் திருப்புவேன், ஆனால் எனக்கு ஒரு சத்தியம் செய்யுங்கள்: ஒவ்வொரு இரவும் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர், என்னை நினைவில் கொள்ளுங்கள்; அதற்குப் பிறகு, படுக்கைக்குச் செல்லுங்கள்.”**

அன்று பிற்பகலில், பாபா அவரது குழுவில் இருந்த அனைவரையும் ஓட்டோ ஹாஸ்-ஹேயின் ‘நவ நாகரீக ஆடை வடிவமைப்பு’ பள்ளிக்கு அழைத்துச் சென்றார், அங்கு பாபா இதற்கு முன்னரும் விஜயம் செய்து தரிசனம் அளித்தார். இந்த சந்தர்ப்பத்தில், ஓட்டோவும் ஃப்ரீடா பில்லோவும் பாபாவை அங்கு சந்தித்தனர்.

ஃபெல்ட்மெயிலனில், பாபா ஓய்வெடுத்து, மெர்டென்ஸ் குடும்பத்தில் அதிக கவனம் செலுத்தினார், வால்டர், ஹெடியின் நான்கு குழந்தைகளான அனகாத்தரினா (ANNAKATHARINA), ஃபோஃப்காங் (WOLFGANG), பீட்டர் (PETER), டோபியாஸ் (TOBIAS – டோபி - TOBY) ஆகியோருடன் விளையாடினார் - இவர்கள் அனைவரும் பாபாவின் ஆளுமை மற்றும் அரவணைப்பில் பரவசமடைந்தனர். அவர்களின் வளர்ப்பு மகனான அரெண்ட் ஃபுஹர்மனும் (AREND FUHRMANN) இந்தக் காலகட்டத்தில் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தான்.

மெஹர் பாபா, நெருக்கமானவர்களுடன் தினமும் நடக்கச் செல்வது வழக்கம், ஆனால், அவரது நடை அதி வேகமாக இருந்ததால் பலர் பின்தங்கினர். ஒரு தருணத்தில், ரானோ மலையில் தாவி ஏறும் வேளையில், பாபாவை நெருங்கும் ஆவேசத்தில் இருந்தார். பாபா, உடனே திரும்பி ரானோவிடம் கையை நீட்டினார். ரானோ, பாபாவின் கையைப் பற்றிப் பிடித்ததும், திடீரெனத் தனது உடல் பளுவை இழந்து, மிதப்பது போல் உணர்ந்தார்; ஒன்றாக இருவரும் மலை மேல் கைகோர்த்துச் சென்றனர். பாபாவுடன் தனியாக மலைமேல் ஏறும் அந்த அழகான அனுபவம், அவருடைய தலைவிதியை

நிர்ணயித்தது; ரானோ என்றென்றும் அன்பிற்குரியவரின் பாதங்களில் பணிவுடன் இருந்தார்.

ரானோ, பின்னர் இவ்வாறு நினைவு கூர்ந்தார், "அன்று அங்கு நடந்த சம்பவத்தால், நான் அவதார புருஷருடன் முன்பிருந்தே தொடர்பில் இருந்தேன் என்பதை உணர ஆரம்பித்தேன். என் உடல் உள்ளளவில் மெதுவாக உடைந்துபோவது போல் உணரத் தொடங்கினேன். அனைவரும் படுக்கைக்கு செல்வது வரை காத்திருந்து, பின்பு வெளியே இரவில் தனியாக அமர்ந்து, அழகிய நிலவொளியில் ஏரியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் உடலின் உள்ளே அனைத்தும் தலைகீழாக மாறியது. ‘எனக்கு என்ன நடக்கிறது? இது பயங்கரமாக உள்ளது, என்னால் உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை!’ என்று நான் நினைத்தேன். ‘பாபாவை சந்தித்த பின்பு பத்து நாட்கள் அழுதேன்’ என்று ருவானோ என்னிடம் சொன்னதன் பொருள் என்னவென்று இப்போது எனக்குப் புரிந்தது!

மெஹர் பாபா பெரும்பாலும் அமெரிக்க, ஐரோப்பிய அன்பர்களுக்கு வலியுறுத்திக் கூறினார்: “**நான் எனது மேற்கத்திய அன்பர்களிடமிருந்து அன்பை மட்டுமே விரும்புகிறேன். கிழக்கத்திய மக்கள் என்னைத் தொழுது எனது பாதங்களில் வணங்குகிறார்கள் - ஆனால் நான் உங்களிடமிருந்து விரும்புவது அன்பு ஒன்றுதான்.**”

ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு பேராசிரியரும் அவரது மனைவியும் சில நாட்கள் இந்தக் குழுவுடன் இருந்தனர், ஆனால் பேராசிரியரின் மனைவி, பாபா மீது உண்மையில் அக்கறை காட்டாததால், அவர் நேரடி சந்திப்பிற்கும் அழைக்கப்படவில்லை. வால்டர் மெர்டென்ஸ், தனது வீட்டில் தயார் செய்த மதுபானத்தை, பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பை நிறைய வழங்குமாறு கேட்டுக்கொண்டார்; மாலை வேளையில் ஒரு நாள் பாபா அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டார். ஆனால், அந்தப் பெண்மணி குழுவுடன் இணைய வேண்டாம் என்று ஜெர்மன் பேராசிரியரின் மனைவிக்குத் தெரிவிக்குமாறு பாபா குயன்டினுக்கு திட்டவட்டமாக அறிவுறுத்தினார். மார்கரெட் கூறியதற்கு இணங்க, குயன்டின், மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடியவராக இருந்ததால், பாபாவின் இந்த உத்தரவை, நேரடியாக அந்தப் பெண்மணியை எதிர்கொண்டு வழங்க முடியவில்லை. அதற்கு பதிலாக, இனிட் கோர்ஃபிடம் அவருக்காக அதைச் செய்யக் கூறினார். இது பாபாவின் உத்தரவு என்பதை இனிட் உணரவில்லை.

அன்றைய தினம் அனைவரும் ஓர் அறையில் கூடினர், மெஹர் பாபா கோப்பைகளை நிரப்பி, புனிதமான மதுவை வழங்கத் தொடங்கினார். அற்புதமான அழகின் தோற்றத்தை வெளிப்படுத்திய பாபாவின் முகம், சூரியனைப் போல் ஒளிர்ந்து, அவரது தங்க பழுப்பு நிற தலைமுடி தடுக்க முடியாத வகையில் அனைவரையும் கவர்ந்தது. இறை மனிதனின் ஒளிரும் புன்னகை, அறை முழுவதும் பிரவேசித்து, ஒவ்வொரு அன்பரின் ஆத்மாவையும் முத்தமிட்ட

போது, அந்த மகிழ்ச்சியின் செய்தி தானாகவே பரவியது. பிரியமானவரின் மகிமை அவரது காதலர்கள் மீது ஒரு மந்திர வலையை வீச, அவரது இறை கீதம் அனைவரின் இதயங்களில் எதிரொலித்தது.

அறையில் அனைவரும் காலவரம்பற்ற, மெய்மறந்த உணர்வால் சூழப்பட்டபோது, திடீரெனக் கதவைத் திறந்து அந்தப் பெண்மணி உள்ளே நுழைந்தார். பாபா, குயன்டினை தீவிரமான பார்வையுடன் நோக்கினார்; ஆனால், பாபா அந்தப் பெண்மணியை உள்ளே வந்து அமர அனுமதித்தார். குயன்டின் தாங்கமுடியாத வருத்தத்தில் காணப்பட்டார்; பாபா, குயன்டினை மன்னித்து, மது வழங்கியபோதும் அவர் மூன்று முறை கோப்பையை ஏற்க மறுத்துவிட்டார். பாபா, உடனே அனைவரையும் வெளியேறுமாறு கூறி அவருடன் தனியாகப் பேசினார்....

**"இதுபோன்ற ஒரு எளிய கட்டளையைக் கூட உங்களால் பின்பற்ற முடியாத போது, எனக்காக நீங்கள் என்ன செய்ய முடியும்?"** என்று பாபா அவரைக் கண்டித்தார்.

குயன்டின் மன்னிப்புக் கோரி விளக்க முயன்றார், ஆனால் பாபா **"நினைவில் கொள்ளுங்கள், எனது விருப்பம், அனைத்திலும் மிக உயர்ந்தது! ஒருவர் எனது கட்டளைகளைப் பின்பற்றத் தவறினால் அது 'அன்பு' அல்ல"** என்றார்.

பாபா 1934 ஜூலை 12 அன்று காலையில் ஃபெல்ட்மெயிலனை விட்டு வெளியேறினார்; ஆதி ஜூனியர், காக்கா, சாஞ்சி, குயன்டின், வால்டர், ஹெடி ஆகியோருடன் ஃபாலென்ஃப்ளூவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார் - ஐந்து இருக்கைகள் கொண்ட பியூக்கில் ஏழு பேர், சாமான்கள், தங்கும் கூடாரங்கள் மற்றும் பல பொருட்களை மேலேயும், பின்புறம், உட்பகுதியிலும் குவித்தனர். வால்டரின் கையில் காயம் ஏற்பட்டதால் காரை ஹெடி ஓட்டிச் சென்றார். வானிலை அற்புதமாக, இயற்கையின் தோற்றம் அழகாகக் தென்பட்டது. காரை ஓட்டிச்செல்லும் வேளையில் ஒரு சுவாரஸ்யமான அனுபவத்தை ஹெடி நினைவு கூர்ந்தார்:

"நாங்கள் ஸூரிக் ஏரிக்கரை ஓரமாக சுமார் அரை மணி நேரம் காரை ஓட்டிச் சென்றோம் - அனைவரும் அமைதியாக இருந்தனர், சாலையில் கிட்டத்தட்ட ஒருவரும் இல்லை, பல கிராமங்களைக் கடந்து சென்றோம்.

"நான் விரைவாகக் காரை ஓட்ட வேண்டும் என்று பாபா விரும்பினார், அதனால் நானும் அவ்வாறே செய்தேன். அதற்கு முன்னர், ஒரு முறை பாபாவின் முகத்தைப் பார்க்க எனது பின்புற கண்ணாடியை சரிசெய்தேன். பாபா அவரது இரண்டு மண்டலிக்கு இடையில் அமர்ந்திருந்தார், அவரது தலை ஒரு பெரிய சால்வையால் முழுவதுமாக மூடப்பட்டிருந்தது - மேலும் அவரது முகத்தில் நிழல் விழுந்து மறைந்திருந்தது. நீண்ட நேரம் என்னால் எனது கண்களை விலக்கி நேராகப் பார்க்க முடியவில்லை. நான் காரின் திருப்புச் சக்கரத்தை (STEERING WHEEL) எனது கைகளால் நன்றாகப் பற்றிக் கொண்டிருந்தாலும், எனது

சுய கட்டுப்பாடு கைகளிலிருந்து நழுவுவது போலவும், நான் ஒரு மெத்தை மீது காரை ஓட்டுவது போலவும் உணர்ந்தேன்; சக்கரங்கள் தரையில் தொடவில்லை. நான் அந்த முழு நேரமும் கண்ணாடியில் பாபா மீது கண்களை வைத்திருந்தேன். திடீரென நான் அவரது முகம் பிரகாசமாக இருப்பதைக் கண்டேன், அதே நேரத்தில், எனது கவனம் சக்கரத்தில் வலுவாக ஈர்க்கப்பட்டது... அப்போது மீண்டும் பாபாவின் முகத்தை இன்னும் தெளிவாகவும், பிரகாசமாகவும் கண்டேன். நான் ஒரு வளைவிலிருந்து வெளியேற்றப்பட்டதைப் போல் உணர்ந்தேன், தொடர்ந்து மீண்டும் ஒரு முறை காரை எளிதாக ஓட்டினேன்."

அவர்கள் ராப்பர்ஸ்வில் (RAPPERSWIL) கிராமத்தில் ஸூரிக் ஏரியைக் கடந்து, 'ஸ்ட்டல் பாஸ்' (SATTEL PASS) வழியாக, இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு, ஸ்விஸ் நகருக்கு வந்தனர். மெய்ன்ராட் இங்கிலின் அவர்களுடன் இணைந்து, ஃபாலன்ஃப்ளூவிற்கு அழைத்துச் சென்றார். (காரில் இடமில்லாததால் அவர்கள் மெதுவாக மலையை நோக்கிச் சென்ற வேளையில், அவர் பின்னால் அமைந்த லக்கேஜ் ரேக்கில் நிற்க வேண்டியிருந்தது.) கற்களால் நிரம்பிய சாலை குறுகலாகவும், கரடுமுரடாகவும், பல இடங்களில் மர வாயில்களால் பிரிக்கப்பட்டும் இருந்தது. மேய்ச்சல் நிலங்களில் இருந்த மாடுகள் இந்த வழியாக ஏறிச் செல்லும் போது, வாயில்களைத் திறந்து மூட வேண்டும் என்பதால் அவர்கள் காரை நிறுத்த வேண்டியதாயிற்று.

கடைசியில் அவர்கள் வன சாலைகள் சந்திப்பைச் சென்றடைந்தனர், அங்கு பாபாவும் ஆண்களும் காரிலிருந்து இறங்கினர். ஆண்கள் தங்கள் தோள்களில் சாமான்களை ஏற்றிக் கொண்டு, பாபா அவரது ஏகாந்தவாசத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மலை விளிம்பிலிருந்து சற்று தொலைவில் இருந்த இடத்திற்கு, இங்க்லின் அவர்களை வழிநடத்தினார். இங்கே, பாபா, ஆதி ஜூனியர், காக்கா, சாஞ்சி, குயன்டின், வால்டர் ஆகியோர் காலை உணவை உண்டனர்; பாபா தேநீர், ரொட்டி, வெண்ணெய், பழங்களை அவரது கைகளால் அனைவருக்கும் வழங்கினார். இதற்கிடையில், இங்கிலின் மீண்டும் முக்கிய சாலை சந்திப்புக்கு நடந்து சென்று, ஹெடியுடன் ஸ்வைஸ் (SCHWYZ) குறு நகரில் அமைந்த அவருடைய இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார். அன்று மாலை ஏழு மணிக்கு மறுபடியும் அந்த சந்திப்புக்குத் திரும்பி வந்து, பாபா மற்றும் மண்டலியை திரும்ப அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது..

காலை உணவை உண்ட பின்பு, மெஹர் பாபா அவரது ஏகாந்தவாசத்தைக் குறித்து நான்கு பேருக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார்: **"எனது ஏகாந்தவாசம் மாலை ஏழு மணி அல்லது ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் ஒருவேளை அதற்கு முன்னதாகவும் முடியலாம்; இது அனைத்தும், எனது பணி முடிவதைப் பொறுத்தது. உங்கள் கடமை என்னவெனில், உங்களில் ஒவ்வொருவரும் இரண்டு மணி நேரம் இங்குக் கண்காணிக்க வேண்டும். காக்கா என்னுடன் வந்து 100 கெஜம் தொலைவில் இருக்க வேண்டும்.**

**நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் வேளையில் நீங்கள் அனைவரும் தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் இருக்க வேண்டும். உங்கள் முறை முடிந்ததும் நீங்கள் விரும்பினால் ஓய்வெடுக்கலாம், பேசலாம் ஆனால் சத்தமாக அல்ல.”**

நான்கு ஆண் மண்டலிக்கு இடையே நேரம் இவ்வாறு பிரிக்கப்பட்டது. குயன்டின் காலை 9:30 மணி, வால்டர் 11:30; ஆதி ஜூனியர் பிற்பகல் 1:30; அதைத் தொடர்ந்து சாஞ்சி 3:30 முதல் ஏகாந்தவாசம் முடியும் வரை. ஏகாந்தவாச வேளையில் அவர்களைத் தனியாக இருக்கச் செய்வதன் முக்கியத்துவத்தையும் பாபா விளக்கினார்: **“ஏகாந்தவாசத்தில் நான் பணிபுரியும் போது, எனது பௌதீக உடலை விட்டு நான் வெளியே சென்று விடுவேன். எனது பௌதீக உடல் உணர்வற்ற பிணம் போல் அங்கேயே இருக்கும். அப்போது என் உடலை சுத்தியலால் அறைந்தாலும் அல்லது கத்தியால் வெட்டினாலும் நான் எதையும் உணர மாட்டேன்.**

**“நான் 50 கெஜம் தூரத்தில் ஓர் எல்லைக் கோட்டை வரைவது சிறப்பாக இருக்கும்; எவரும் அருகில் வரக்கூடாது. அந்த எல்லைக் கோட்டினைக் கடக்க முயற்சிக்கும் எவரும் உயிரைத் துறந்து விடுவார்கள்! அதனால்தான் நான் 100 கெஜம் தூரத்தில் இருந்து உங்களைக் கண்காணிக்கக் கூறுகிறேன்.”**

அதற்குப் பிறகு, தொப்பியை அணிந்து கொண்டு, பாபா புறப்பட்டார்; அவரது மேலங்கி தோள்களில் சாய்ந்து சில பொருட்களை சுமந்து சென்றது. காக்கா, பாபாவின் படுக்கையுடன் பின்தொடர்ந்தார். பாபா செங்குத்தான மலையின் உச்சியை அடைந்ததும், காக்கா படுக்கையை விரித்து, பாபா விரும்பியபடி அந்த இடத்தை தயார் செய்தார். காலை 9:30 மணிக்கு ஏகாந்தவாசம் தொடங்கியபோது, பாபா ஒரு சட்டை மற்றும் சத்ரா அணிந்திருந்தார். பாபா தனது மெத்தையில் சாய்ந்து, மார்பில் ஒரு கொசு வலையைப் பிடித்து, இரண்டு போர்வைகளால் தன்னை மூடிக்கொண்டார். அவர் மூன்று மணி நேரம் அப்படியே இருந்தார், எப்போதாவது ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் திரும்பினார்.

பாபாவின் ஏகாந்தவாசத்தின் போது ஒரு கட்டத்தில், ஒரு சில ஏழை சுவிஸ் பண்ணை பெண்கள் விறகுக்காக, காட்டுக்குள் நுழைய முயன்றனர். அன்றைய தினம் ஆபத்தான மின் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், மக்கள் அந்தப் பகுதிக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் வால்டர் அவர்களுக்கு விளக்கினார். பாபாவின் முந்தைய அறிவுறுத்தல்களின்படி, வால்டர் அவர்களைத் திருப்பி அனுப்பினார்.

மதியம் 12:30 மணிக்கு பாபா எழுந்து அமர்ந்து, முகத்தில் இருந்த உறைகளை அகற்றி, காக்காவைக் கைதட்டி அழைத்தார். அவர் 50 கெஜம் தொலைவில் அமைந்த ஓர் இடத்தில் நெருக்கமாக அமருமாறு காக்காவிற்கு அறிவுறுத்தினார். பின்னர், அவர் மீண்டும் வலையையும் போர்வைகளையும் மூடிக் கொண்டு படுக்கையில் சாய்ந்தார். ஏகாந்தவாசத்தில் பணிபுரியும் போது,

பாபா ஒவ்வொரு மணி நேரமும் எழுந்து அமர்ந்து கொண்டார். சிறிது நேரத்தில், காக்கா சற்று மயக்கமாக உணர்ந்து பதற்றமடைந்த வேளையில், ஒரு மனிதனின் குரல் அவரிடம் ஏதோ கிசுகிசுப்பதைக் கேட்டு, கண்களைத் திறந்தபோது அங்கு ஒருவரும் இல்லை.

மதிய வேளைக்குப் பின்னர் அச்சுறுத்தும் கருப்பு மேகங்கள் ஒன்று திரண்டன. காரின் கூரையை மூடுமாறு ஹெடிக்கு இங்கிலின் எச்சரித்தார். வெளியே இருந்து, அவர் ஃபாலன்ஃப்ளூவைப் பார்த்தபோது, முழுவதும் கறுப்பு மேகங்களால் மூடியிருப்பதைக் கண்டார்; திடீரென பலத்த மழை பொழிந்தது; பாபா ஏகாந்தவாசம் இருந்த இடம் மட்டுமே பிரகாசமான ஒளியுடன் ஒளிர்ந்தது.

பயங்கர இடியுடன் கூடிய மழையில், ஆண்கள் தங்களைப் பாதுகாக்க ஒரு தங்குமிடம் அமைத்தனர்; இருந்தாலும் பலத்த மழையால் அனைவரும் முழுவதுமாக நனைந்து போயினர். மழை அடங்கியதும் அவர்கள் நெருப்பை வளர்த்தி, குளிர் காய்ந்தனர், பாபாவுக்காகவும் நெருப்பை வளரவிட்டு தயாராக வைத்திருந்தனர். "**மாயையின் வழக்கமான எதிர்ப்பு,**" என்று பாபா குறிப்பிட்டார்.

எதிர்பார்த்ததை விட முன்னதாக, மாலை 4:30 மணிக்கு, பாபா தனது படுக்கையிலிருந்து எழுந்து, கோட்டும் சட்டையும் அணிந்துகொண்டு திரும்பி வந்தார். அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் பாபாவின் உடலும், உடையும் சிறிதளவும் ஈரமின்றி உலர்ந்து இருந்தது. அதைக் குறித்து கேட்டபோது, பாபா ஒரு குறிப்பிடத்தக்க புன்னகையை வெளிப்படுத்தினார், இது, அவர்கள் உள்ளுணர்வால் புரிந்து கொள்ளும்படியாக இருந்தது.

மெஹர் பாபா மிகவும் பிரகாசமாகத் தோற்றமளித்தார். பின்னர் அவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "**நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்; இங்குச் செய்யப்பட்ட பணியில் நான் திருப்தி அடைகிறேன். இது அஸிஸியில் செய்ததைவிடச் சிறப்பாக இருந்தது. நான் இப்படிப் பணியில் ஈடுபடும்போது, அதிக எண்ணிக்கையிலான எனது முகவர்கள் கூட்டத்தில் பங்கெடுக்கிறார்கள். ஆனால் உங்களுடைய சாதாரண கண்களால் அவற்றை பார்க்க முடியாது. சில நேரங்களில், காலடி ஓசையை நீங்கள் கேட்கலாம்.**"

மாலையில், பாபா அவர்களின் விரதத்தை நிறைவு செய்ய, பழங்களைப் பகிர்ந்தளித்தார். பின்னர் அவர்கள் காடு, வயல்வெளிகள் வழியாகச் சாலை சந்திப்புக்கு நடந்து வந்தனர். ஐந்து நிமிடங்களில் ஹெடி அவர்களை அழைத்துச் செல்ல வந்தார். பாபா, குறிப்பிட்டதை விட, ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே வர வேண்டும் என்ற உள்ளுணர்வு அவரைத் துரிதப்படுத்தியது. பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்கள் வேறு வழியில் வீடு திரும்ப ஆயத்தமாயினர். வழியில் 'ஐபர்கெரிக்' நுழைவில் (IBERGEREGG PASS) அவர்கள் உள்ளூர் உணவகம் ஒன்றில் காஃபி அருந்தினர். உள்ளே, கிராமத்து சுவிஸ் விவசாயிகள் சிரித்து, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நடனமாடிக் கொண்டிருந்தனர். பாபா, குறிப்பாக அவர்களின் ஆரவாரத்தைப் பெரிதும் ரசித்தார். ஃபாலன்ஃப்ளூ

மலையில் அவர் செலவிட்ட பல மணிநேரத்திற்கு இது முற்றிலும் மாறுபட்டது - அவரது கடினமான ஏகாந்தவாசத்திலிருந்து ஒரு சுவாரஸ்யமான இளைப்பாறல்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில், மாலை 7 மணிக்கு அனைவரும் மெர்டென்ஸ் இல்லத்தை வந்தடைந்தனர். பாபா அற்புதமான மனநிலையில் காணப்பட்டார், அனைத்து அன்பர்களையும் தனது அறைக்கு அழைத்தார். பாபா திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறியதை அவர்களிடம் கூறினார்; மேலும் ஆன்மீக மேல்தளங்களில் நிலைகொண்ட ஆத்மாக்களுடனான சந்திப்பு, எதிர்கால போர் மற்றும் சுவிட்சர்லாந்தின் பாதுகாப்பு குறித்து விளக்கினார். **"நான் சுவிட்சர்லாந்து நாட்டைச் சுற்றி ஒரு வட்டம் வரைந்துள்ளேன், அதனால் அந்த நாடு வரவிருக்கும் போரில் ஈடுபடாமல் பாதுகாக்கப்படும்"** என்று அனைவருக்கும் விளக்கினார். மேலும் பாபா, மலை உச்சியில் தனிமையில் இருந்த விவரங்களையும் எடுத்துரைத்தார்.

அடுத்த நாள், 1934, ஜூலை 13 அன்று, காலை ஒன்பது முதல் மாலை ஆறு மணி வரை, தனியார் நேரடி சந்திப்புகள் நடைபெற்றன. மெஹர் பாபா ஐம்பதுக்கும் மேற்பட்ட சுவிஸ் மற்றும் ஐரோப்பிய மக்களை சந்தித்தார். நோரினா, வால்டர் இருவரும் ஆங்கிலம் பேசாதவர்களுக்கு விளக்கமளித்தனர். அந்த நேர்காணலின் சில பாகங்களைக் கீழே காணலாம்:

காலை 9 மணியளவில், முடமான ஒரு தொழிலாளி திரு. கிளினர் (KLIENER) வந்தார். பாபா, அவரிடம், **"உடலில் உள்ள குறைபாடு ஒரு பொருட்டல்ல, ஆனால் ஆன்மாவிற்குத் தடையாக இருப்பது மனம். நான் ஆன்மீக ரீதியில் உங்களுக்கு உதவுவேன், ஏனெனில் உங்கள் துன்பங்கள் அனைத்தையும் நீங்கள் தாங்கிக்கொள்ளும் மனநிலையை நான் பாராட்டுகிறேன்"** என்று கூறினார்.

இதற்கு முன்னதாக, பாபாவை சந்தித்த திருமதி ஹென்றி ஜேம்ஸ் ஃபோர்மனை (MRS. HENRY JAMES FORMAN) நோரினா அழைத்துவந்தார்: "அவர் விரும்பிய அளவுக்கு விரைவாக ஆன்மீக முன்னேற்றத்தை அடையவில்லை என்று புகார் கூறுகிறார்; அனைத்து விஷயங்களைக் குறித்தும் குழப்பமாக உணர்கிறார்."

அதற்கு பாபா, **"என்னைத் தவிர அனைவரும் குழப்பமாக உள்ளனர், ஆனால் அது விரைவில் சரியாகிவிடும்"** என்று பதிலளித்தார்.

நோரினா தொடர்ந்து கூறினார், "அந்தப் பெண்மணி அவரைப் பற்றிய உண்மையான உள்ளுணர்விற்கு இணங்க, அவர் நல்லவர் அல்ல, தன்னலமிக்கவர் என்று தன்னையே குறை கூறுகிறார். ஆனால் அவர் நல்லவராக இருக்க விரும்புகிறார்."

**"அது மிகவும் உன்னதமானது; நிச்சயமாக நடக்கும். அந்த ஆசை மட்டும் நிலைத்திருக்கட்டும், அவர் வாழ்வில் முன்னேறிச் செல்வார். என்னுடனான இந்தத் தொடர்பு அவருக்கு உதவும்"** என்றார் பாபா.

ஒரு மதகுருவின் மகள், மிஸ் கிர்ஸ்பெர்கர் (MISS GIRSBERGER), கிழக்கத்திய மதங்கள் ஏன் இவ்வளவு குழப்பமானவை என்று மேற்கத்திய மக்கள் நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார். அதற்கு பதிலளித்த பாபா, **“மேற்கத்திய மதங்களைப் பற்றி கிழக்கத்தியர்களும் அதையே கூறுகிறார்கள்! எல்லோரும் அவருடைய சொந்த மதம் சிறந்தது என்று நினைக்கிறார்கள். இதன் காரணம் அறியாமை. இயேசு ஒருபோதும் அந்த அர்த்தத்தில் குறிப்பிடவில்லை. மதம் என்றால் என்ன? கடவுளை உள்ளளவில் கண்டுகொள்வது. இயேசு என்ன கற்பித்தார்? அவரை ஒருவர் தனக்குள்ளே கண்டுகொள்ள வேண்டும். அவரைப் பின்பற்றுபவர்கள் செய்து வருவதைப் போல், அவருடைய பெயரால் போரில் ஈடுபடக்கூடாது.”**

"அதை நாம் எப்படி கண்டுகொள்ள முடியும்? எப்படி உணரமுடியும்" என வினவினார்.

**“அன்பினால் பிறருக்கு தன்னலமின்றி உதவுவதன் மூலமாக! இது மிகவும் எளிதானது. உங்களைப் பற்றி குறைவாக நினைத்து, பிறரை அதிகமாக நினைத்தால் அது மிகவும் எளிதானது. நீங்கள் என்னை சந்தேகித்தாலும் அல்லது என்னை நம்பாவிட்டாலும் பரவாயில்லை, நான் உங்களுக்கு உதவுவேன். நீங்கள் விரும்பாவிட்டாலும் உங்களுக்கு நான் உதவுவேன்! சூரியன் வானத்தில் உயரமாக இருக்கும் போது, நீங்கள் வெப்பமாக உணர்வதைத் தவிர்க்க முடியாது. நீங்கள் விரும்பாவிட்டாலும் அது உங்கள் மீது ஒளியை அள்ளி வீசுகிறது!”** என்று பாபா விளக்கினார்.

கூட்டத்தில் வேறொருவருக்கு பதிலளிக்கும் வேளையில் பாபா, **“ஆன்மீகம் மிகவும் எளிதானது, ஆனால் மக்கள் அதை மிகவும் சிக்கலாக்குவதால், இது ஒரு பிரமாண்டமான பணியாகத் தோன்றுகிறது. பிறரைப் பற்றி அதிகமாகவும், உங்களைப் பற்றி குறைவாகவும் சிந்தியுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக முயற்சிக்கவும்.”**

வால்டரின் அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி. ஹினர் (MRS. HINER) என்ற பெண்மணி எதையேனும் கேட்க விரும்புகிறாரா என்று கேட்டபோது, இல்லை என்று தலையை அசைத்தார். பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: **“எனக்குப் புரிகிறது, ஏனெனில் உள்ளளவில், உதவி உள்ளங்கையில் இருக்கும்போது விளக்கங்களுக்கு என்ன தேவை? உண்மையான உதவி என்பது ஆன்மீக உதவி, வார்த்தைகள் மற்றும் விளக்கங்களால் அல்ல.”** அந்தப் பெண்மணியின் கண்களிலிருந்து ஒரு சில கண்ணீர் துளிகள் விழுந்தன, அவருடைய கையை பாபாவின் கையில் வைத்து அவருடன் சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்திருந்தார்.

எந்தக் கேள்வியும் கேட்காத மற்றொரு நபர், அவர் குருநாதரின் தொடர்பை மட்டுமே விரும்புவதாகக் கூறினார், அதற்கு பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **“எனக்கு எல்லாம் தெரியும் என்பது உண்மை என்றால், என்னிடம் கேள்விகள் கேட்க வேண்டிய தேவையில்லை. மேலும் எனக்குத்**

**தெரியாது என்று நீங்கள் நினைத்தால், என்னிடம் கேட்பதால் நான் உங்களுக்கு உதவ முடியாது!"**

காலை 10 மணிக்கு, திருமதி. ஷ்ரைபர் (MRS. SCHRIEBER) என்ற செவிலியர் பாபாவிடம் சில அச்சம் விளைவிக்கும் நிகழ்வுகளை வெளிப்படுத்தினார், "நான் வாழ்க்கையில் மிகவும் சோர்வாகவும் மகிழ்ச்சியற்றவராகவும் உள்ளேன், நான் எப்படி முன்னேற முடியும் என்று எனக்குத் தெரியவில்லை."

பாபா அவருக்கு உறுதியளித்தார், **"ஒவ்வொருவரும் தனக்குத் தெரியாமலேயே இந்த வாழ்க்கையை சோர்வுறச் செய்கிறார்கள், ஏனெனில் எல்லோரும் மகிழ்ச்சியை நாடுகிறார்கள், ஆனால் அதை எப்படி அடையப் பெறுவது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். வாழ்க்கை மிகவும் அழகானது! இது மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளது! நான் உங்களுக்கு உதவுவேன். பின்னர் அனைத்தும் மாறுபட்டுத் தோற்றமளிக்கும். நீங்கள் அதைக் காண்பீர்கள். வாழ்க்கையில் எப்பொழுதும் அதன் கண்ணோட்டம்தான் முக்கியம், அதில் தென்படும் பொருட்கள் அல்ல. இன்று, நீங்கள் சோர்வடைந்து, வருத்தப்பட்டு, வாழ்க்கையில் உங்களை சூழ்ந்துள்ள விஷயங்களில் அழகாக எதையும் காணமுடியாமல் இருக்கிறீர்கள். நாளை நீங்கள் சலிப்படையாமல், நேற்று இருளாகத் தோன்றிய அதே விஷயங்களில் இன்று மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் - இது அனைத்தும் மாறிய மனநிலை மற்றும் கண்ணோட்டத்தின் விளைவாகும். எளிதான வழி என்னவெனில் அவற்றிற்கு அந்த அளவுக்கு முக்கியத்துவம் வழங்காமல் இருப்பது. அவற்றை லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். நீங்களே உங்களுக்குள் சொல்லுங்கள், 'நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், பிறரையும் மகிழ்விக்க வேண்டும்' என்று; 'படிப்படியாக நீங்களே மகிழ்ச்சியடைந்து பிறரையும் மகிழச் செய்கிறீர்கள். 'நான் சோர்வாக இருக்கிறேன், சிரமப்படுகிறேன், மனச்சோர்வடைகிறேன்' என்று நினைக்க இடம் தர வேண்டாம். அது நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும். 'அனைத்தும் நலமாக, அழகாக உள்ளது. நான் மகிழ்ச்சியாக இருப்பேன்' என எந்நேரமும் உங்களுக்குள் கூறுங்கள்"**

**"நான் உங்களுக்கு ஆன்மீக ரீதியில் உதவுவேன், அது என்னால் முடியும், அதை நான் செய்வேன். அதை நீங்கள் உணர்வீர்கள்"** என்று பாபா மேலும் உறுதியளித்தார்.

போதைப் பொருள் அருந்தும் ஒருவர் பாபாவை அணுகியபோது **"நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?"** என்று கேட்டதற்கு…

அந்த மனிதர், "இல்லை, மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளேன்" என்றார்.

**"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யுங்கள். வாழ்க்கை பயங்கரமானது என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம்; 'நான் வாழ்க்கையில் சோர்வாக இருக்கிறேன்', இதுபோன்ற எண்ணங்கள்**

**உண்மையிலேயே வாழ்க்கையை பரிதாபமாக்குகின்றன. வாழ்க்கை, சிறப்பாக வாழத்தக்கது. அப்படி நீங்கள் நினைப்பதானால், அனைத்து சிரமங்களும் அற்பமானதாகத் தோன்றும். உங்களில் அன்பை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் நான் உதவுவேன். 'நான் தனியாக இருக்கிறேன்,' 'எனக்கு நிறைய செய்ய வேண்டியது உள்ளது,' 'நான் ஏழை,' இப்படி ஒருபோதும் நினைக்காதீர்கள். எல்லோரும் ஏழைகளே! உலகம் முழுவதிலும் ஏழைகள் மட்டுமே உள்ளனர். கோடீஸ்வரர்கள் கூட ஏழைகள், ஏனெனில் அவர்களுக்குப் பேராசையும், இன்னும் வேண்டும் வேண்டும் என்ற ஆசையும் உள்ளது. ஒருவர் மீது பாசத்தைப் பொழியுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன்"** என்றார் பாபா.

ஒருவர் தனது வரம்பு மீறிய செயல்களைப் பட்டியலிட்டு, இனி வாழ்க்கையில் விமோசனமே இல்லை என்ற எண்ணத்தில் பாபாவிடம் வந்தார். அவர் அந்தப் பட்டியலைப் படிக்க முன்வந்தபோது பாபா, **"என்னிடம் எதுவும் சொல்லத் தேவையில்லை. கவலைப்பட வேண்டாம். ஒருவர் ஆன்மீகப் பாதையில் முன்னேற முழு உரிமை உள்ளவர் என்ற கருத்தில், ஒருவரிடம் அன்பு அல்லது காமம் பெருமளவில் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இந்தக் காமம் அன்பாக மாற்றப்படவேண்டும். காமம் என்றால் என்ன, உடலளவிலான உணர்வுகளை, ஆசைகளைப் பூர்த்தி செய்யும் ஏக்கம்; அன்பு என்பது புனிதமான ஆன்மாவின் ஏக்கம். மறுபடியும் எழும்ப முடியாத அளவுக்கு விழுந்துவிட்டீர்கள் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம்"** என்று கூறி முடித்தார்.

ஓர் இளம் பெண் பதட்டமான மனநிலையில் பாபாவிடம் வந்தார்; நோரினா அவர் தேவாலயத்தில் பியானோ வாசிக்கும் ஒருவரைக் காதலிப்பதாக விளக்கினார். ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து செய்து கொண்ட ஒரு மனிதருடன் திருமணம் செய்வதை, கத்தோலிக்க சட்டம் தடுப்பதால், அவர் அந்த நட்பைத் தொடர வேண்டுமா என்று தெரிந்து கொள்ள விரும்பினார். **"அவர்கள் ஒருவருக்கொருவர் நேசிக்கிறார்களா?"** என்று பாபா கேட்டார். அந்தப் பெண்மணி 'ஆம்' என்று சொன்னபோது, பாபா தொடர்ந்தார், **"அப்படியானால், அன்பு மட்டுமே முக்கியம். அதில் காமம் இல்லாவிட்டால், எந்தத் தீங்கும் இல்லை. அந்த அன்பு வளரட்டும், அது வளர்ந்து இரண்டு ஆத்மாக்களை ஐக்கியமாக்கும். இந்த அன்பு தூய்மையுடன் மிளிர நான் அவருக்கு ஆன்மீக ரீதியில் உதவுவேன்."**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவை சந்தித்த ஓவியர் ஹெலன் டாம் (HELEN DAHM) என்பவரை நோரினா மீண்டும் அழைத்து வந்தார். பாபா அவரிடம், **"நானும் ஓவியர். நான் ஆன்மீக வண்ணங்களால் மக்களின் இதயங்களை வரைகிறேன்"** என்று குறிப்பிட்டார்.

மற்றுமொரு கலைஞரிடம், பாபா, **"நான் உலகம் முழுவதையும் திரையாகக் கொண்ட ஒரு கலைஞன்; நான் ஆத்மாக்களை வரைகிறேன். ஒருவரின் ஆன்மீக குணங்கள் அனைத்தையும் கலை மூலம் வெளிப்படுத்த**

**முடியும், ஆனால் ஒருவருடைய முழு இதய உணர்வையும் அதற்காக அர்ப்பணம் செய்ய வேண்டும். கலை என்பது ஆத்மா தன்னை வெளிப்படுத்தி, பிறரை ஊக்குவிக்கும் மூலப்பொருட்களில் ஒன்று. ஆனால் கலையை முழுவதுமாக வெளிப்படுத்த ஒருவர், தனது உள் உணர்ச்சிகளை முழுமையாகத் திறந்து வைத்திருக்க வேண்டும். நான் கலைஞர்களை நேசிக்கிறேன், ஏனெனில் கலை மூலம் ஒருவர் அழகை அற்புதமாக வெளிப்படுத்த முடியும். கலை, அன்பினால் ஈர்க்கப்படும்போது, மேன்மையான அம்சங்களுக்கு வழிவகுக்கிறது.**

**"நீங்கள் வண்ணம் தீட்டும்போது, உங்களின் வரை பொருளைத் தவிர அனைத்தையும் மறந்துவிடுகிறீர்கள். நீங்கள் அதில் மூழ்கியிருக்கும் போது, முழுவதுமாகத் தொலைந்து போகிறீர்கள், அதில் மெய்மறந்து ஈடுபடும்போது, உங்கள் அகந்தை மனம் தள்ளாடும். அவ்வாறு நிகழும் தருணத்தில், எல்லையற்ற அன்பு தோன்றும்; அத்தகைய அன்பு உருவாகும் தருவாயில் எல்லையற்ற பரம்பொருளை, கடவுளை அடைய முடியும். எனவே அளவிறுதியற்ற கடவுளைக் கண்டுகொள்ள கலை ஒருவரை எவ்வாறு வழிநடத்தும் என்பதை நீங்கள் காண்கிறீர்கள்."**

மெர்டென்ஸின் இல்லம் விசாலமாக, மரம், செடி, கொடிகள் மற்றும் பழத்தோட்டங்களால் சூழப்பட்ட இயற்கை வனப்புமிக்க ஒரு பழைய தோட்டமாகும். அந்தத் தோட்டங்களை சைகையால் சுட்டிக்காட்டி "**இதெல்லாம் என் ஓவியம்**" என்று குறிப்பிட்டார்.

ஓர் இளம் பெண் தெய்வீக நற்குணங்களை வளர்த்துக் கொள்ள விரும்பினார், ஆனால் ஒரு குருநாதரின் உதவியின்றி, தன்னால் அதை அடைய முடியாது என உணர்ந்தார். அதற்கு பதிலளித்த பாபா, "**என் உதவியால் நீங்கள் அதை அடைவீர்கள். ஒருபோதும் சோகமடைய வேண்டாம். இது எல்லாமே உங்களுள் உள்ளது, அதைத் 'வெளிக்கொணர' நான் உங்களுக்கு உதவுவேன்**" என்றார்.

"ஆன்மீகத்தை எவ்வாறு அடைய முடியும்?" அந்தப் பெண் விசாரித்தார்.

**"இதை புத்தித்திறனால் அல்ல, ஆனால் இதயம், உணர்வு மற்றும் உள் அனுபவத்தால் அடைய முடியும். என்னால் மணிக்கணக்கில் விளக்க முடியும், ஆனால், ஒரே நொடியில் நான் வழங்கும் உள்ளார்ந்த உதவியுடன் ஒப்பிடுகையில், அது ஒன்றுமில்லை. ஒன்றை மட்டும் செய்யுங்கள்: ஒவ்வொரு இரவும், படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர், ஒரு நிமிடம் சிந்தனை செய்யுங்கள், 'எல்லையற்ற இறைவன் எனக்குள் இருக்கிறார், நான் அதில் எல்லையற்ற ஒரு பகுதியாக இருக்கிறேன்.' இது உங்களை உள்ளளவில் என்னுடன் மேலும் மேலும் தொடர்பை உருவாக்க உதவும். நான் உங்களுக்கு உதவுவேன்"** என்று பாபா பதிலளித்தார்.

நோரினா, ஓர் இளம் பெண்ணை "அவர் சட்டம் பயிலும் மாணவி" என்று மெஹர் பாபாவிற்கு அறிமுகப்படுத்தினார்.

"**சட்டம் நல்லது**" என்று பாபா குறிப்பிட்டார். "**இந்த முழுப் பிரபஞ்சமும்**

**எல்லா வாழ்வையும் உள்ளடக்கிய அன்பின் தெய்வீக சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.**"

அந்தப் பெண் "வாழ்க்கையின் எல்லா விஷயங்களையும் பொருள் ரீதியாகவும், நிரந்தரமாக நீடிக்கும் வகையிலும், அவற்றை அடைய நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

பாபா விளக்கினார்: "**இதைச் செய்ய முடியும். பொருள் சார்ந்த வாழ்க்கையை வாழாவிட்டால் பரிபூரணத்தின் அர்த்தம்தான் என்ன? இது எளிதானது மட்டுமின்றி நடைமுறைக்குரியது. உலக வாழ்க்கையை வாழுங்கள், உங்கள் உலகக் கடமைகள் அனைத்திலும் கலந்து கொள்ளுங்கள், ஆனால் ஒரு நாளில் ஒரு சில நிமிடங்களுக்கு, நீண்ட கால வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றை அறியும் ஏக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இந்த ஏக்கம் படிப்படியாக அதிகரிக்கும் தருவாயில் உங்களை, பொருள் சார்ந்த விளைவுகளிலிருந்து விடுவிக்கும்.**"

ஒருவர் பாபாவிடம், "நான் உங்களை நேருக்கு நேர் பார்த்திருக்கிறேன், ஆனால் எங்கே என்று எனக்கு நினைவில் இல்லை" எனக் கூறினார்.

"**நான் உங்களை மிக நீண்ட காலமாக அறிந்திருக்கிறேன்,**" என்று பாபா கூறினார்.

"உங்களை நான் அறிவேன் என்ற உணர்வும் எனக்கு உள்ளது. உங்களோடு ஓர் இணைப்பு ஏற்கனவே நிறுவப்பட்டதா?" எனக் கேட்டதற்கு, ஆமாம் என்று பாபா பதிலளித்ததும், அந்த நபர் மிகவும் அன்பாக பாபாவின் கையைக் குலுக்கி, முத்தமிட்டார்.

மற்றுமொருவர் இவ்வாறு கேட்டார், "உலக நிலைமைகள் ஒரு நல்ல திருப்பத்தை எட்டுமா?

"**ஆம், அது நடக்கும்.**"

"கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையே ஒன்றையொன்று சரியாகப் புரிந்து கொள்ளும் நிலைமை உருவாகுமா?"

"**ஆமாம், நிச்சயமாக; இது தவிர்க்க முடியாதது. விரைவில் இது உலகளாவிய ஆன்மீகப் புரட்சியாக மாறும், இது அனைவரையும் ஒன்றிணையச் செய்யும்.**"

"ஆக்ஸ்ஃபோர்டு இயக்கம் (OXFORD MOVEMENT) பற்றி நீங்கள் அறிவீர்களா?

"**ஆம், இது என்னை நோக்கி வழிநடத்தும் பாதைகளில் ஒன்றாகும்.**"

"உங்களுக்கென ஒரு புதிய மதம் உருவாகுமா அல்லது அனைத்து மதங்களின் ஒன்றியமாக இருக்குமா?"

"**எல்லா மதங்களும் ஒன்றாக இருக்கும். அது நித்திய நிரந்தர அன்பின் இயக்கமாக உருவெடுக்கும், எனவே அது அன்பின் மதமாக இருக்கும்.**"

"கிறிஸ்துவின் மதத்தைப் போலவா?"

**“இந்த மாற்றம் விரைவில், இந்தத் தலைமுறையில் நடக்கும், மிக நீண்ட காலம் நீடிக்கும். ஆன்மீகப் புரட்சி மிக விரைவில் எழுச்சி பெறும்.”**

"இது போரின் மூலம் அதனை வெளிப்படுத்துமா?"

**“இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம், ஆனால் அது உலகெங்கிலும் உள்ள ஒரு பொருளாதாரப் போருக்குப் பின்னர் அதனை வெளிப்படுத்தும். நான்** (வன்முறை மிகுந்த, இரத்தம் சிந்தும்) **போரைத் தவிர்க்க முயற்சிக்கிறேன்.”**

"போரைத் தவிர்க்க நாங்கள் எவ்வாறு உதவ முடியும், எந்த வகையில் பயனுள்ளதாக இருக்க முடியும்?"

**“போர் நிகழாது என்று நினைப்பதன் மூலம். எனது லட்சக்கணக்கான முகவர்கள் அதை நோக்கிச் செயல்படுகிறார்கள். உங்கள் அன்பின் சிந்தனைகள், செய்திகள் எங்கும், எவரையும் சென்றடைய முடியும், ஏனெனில் இவை அனைத்திலும் ஒன்றே உருவான எல்லையற்ற கடவுள் இருக்கிறார்.”**

"அந்த விடிவு காலத்தை இப்போது ஏன் கொண்டு வரக்கூடாது?"

**“ஆமாம், உலகிற்கு இது மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது; ஆனால் இன்னும், உலகின் சில பெரிய தீமைகளை ஒழிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது, பின்னர் அது மிக விரைவில் நடக்கும். நான் அதை நன்கு அறிவேன், ஏனெனில் நான் அதைச் செய்தேன்.”**

"இந்தச் சிறப்பான நல்ல காலத்தை எவராலும், எல்லோராலும் உணரப்படுமா?"

**“பெரும்பாலும் அனைவராலும், ஆனால் அவரவர் அளவீட்டு முறையில். சிலருக்கு அதிகமாக, பிறருக்கு குறைவாக இருக்கும். ஆனால் அது உலகளாவிய ஆன்மீக உந்துதலாக இருக்கும்.”**

"எல்லோரும் ஏன் கடவுளை உள்ளளவில் கண்டுகொள்வது இல்லை அல்லது உணர்வதில்லை?"

**“இது யார் ஒருவருடைய தவறும் கிடையாது. ஒவ்வோர் ஆத்மாவும், விரைவில் அல்லது பின்பு, கடவுளை உணர்ந்தாக வேண்டும்.”**

"ஒரு சிலர் மட்டுமே இதை உணரும் தருவாயில் ஏன் பலர் அதை உணர்வதில்லை?"

**“ஏனெனில் இவர்களில் பலர் இன்னும் இருமைத்தன்மையின் அனுபவத்தை கடந்து செல்லவில்லை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை அடைய ஒருவர் இருமைத்தன்மையைக் கடந்து செல்ல வேண்டும்.”**

அன்று மதிய வேளையில் ஓட்டோ பில்லோ, பாபாவை சந்தித்தார். நோரினாவின் உறவினர், பேராசிரியர், கலை வரலாற்றாசிரியருமான ஹைன்ரிச் வோல்ஃப்லின் (HEINRICH WOLFFLIN) மற்றுமொரு பார்வையாளர். பேராசிரியர் பாபாவை சந்தித்தபோது, "உலகிற்கு விடிவுகாலம் எப்போது வரும்? இந்த ஏற்புடையதல்லாத நடத்தை எப்போது முடிவடையும்?" என்று கேட்டார்.

**“விரைவில்,”** பாபா அவருக்கு உறுதியளித்தார்.

"ஓ, தயவுசெய்து அது விரைவில் நடக்கட்டும்" என்று பேராசிரியர் புன்னகைத்து கூறினார் "எனக்கு ஏற்கனவே 70 வயதாகிறது, நான் அதைப் பார்க்க விரும்புகிறேன்!"

**"நீங்கள் அதைக் காண்பீர்கள்"** என்று பாபா அவருக்கு உறுதியளித்தார். **"சிறிது காலம் காத்திருங்கள்."**

பேராசிரியரின் வீட்டுக்காப்பாளர் பாபாவை வணங்கினார். அந்தப் பெண்மணி பலமுறை வந்து, அமைதியாக பாபாவின் அருகில் அமர்ந்து, அவரது கையை சில நிமிடங்கள் பற்றிக் கொள்ள விரும்பினார். ஒரு கட்டத்தில் அவர் அப்பாவித்தனமாக, "நான் ஏன் இப்படிக் குறும்பு செய்கிறேன்?" என்றார்.

**"ஏன் அப்படி நினைக்க வேண்டும்?"** பாபா அவரைக் கண்டித்தார். **"மேலும் இதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? ஒருவரின் குறைபாடுகளை எவ்வாறு மேம்படுத்துவது என்று சிந்திப்பது நல்லது, ஆனால் அவற்றைப் பற்றி எப்போதும் கவலைப்பட வேண்டாம்."**

அன்று பிற்பகல் வேளையில் 'குருமார்கள்' என்று அழைக்கப்படும் திரு. மைஸ்டர், திரு.வெக்மேன் (MR. MEISTER & MR. WEGMANN) இருவரும் மெஹர் பாபாவை சந்திக்க வந்தனர். அவர்களில் ஒருவர், "கிறிஸ்தவ கண்ணோட்டத்தில், கிறிஸ்து மட்டுமே கடவுள், தீர்க்கதரிசிகளில் தனித்துவமானவர் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?" என வினவினார்.

மெஹர் பாபா, இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், **"உண்மையில் அவரது நிலை, உணர்வின் நிலைப்பாட்டிலிருந்து பார்த்தால் தனித்துவமானது. முஹமதியர்கள் முஹமது மட்டுமே நபி என்று கூறுகின்றனர்; புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் புத்தரையும் அவ்வாறே கூறுகின்றனர்; பார்சிகள் ஸொராஸ்டரையும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவையும் கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் இலட்சியத்தைக் குறிப்பிட்டு, தத்தமது நபிகளை தனித்துவமானவர் என்று கூறுகிறார்கள். ஆனால் அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? 'பெயர்களில்' என்ன முக்கியத்துவம் உள்ளது? எது முக்கியம் என்றால் இயேசு வாழ்ந்த வாழ்க்கை. கிறிஸ்துவைப் புரிந்து கொள்ள, அவரை அறிந்து கொள்ள, ஒருவர் அந்த வாழ்க்கையை வாழ வேண்டும். விழாக்கள், வாய்ப்பேச்சுக்கள், விவாதங்கள், விமர்சனங்கள் போன்றவை கிறிஸ்துவை அறிந்துகொள்ள எந்தவகையிலும் ஒருவருக்கு உதவாது. கிறிஸ்து ஓர் எளிய விஷயத்தை கற்பித்தார்: 'அன்பு', ஆனால் அவரைப் பின்பற்றுபவர்களில் மிகச் சிலரே அந்த அன்பை வளர்த்துக் கொண்டனர்!"** என்று விளக்கினார்.

"அன்பின் இந்த நிலைப்பாடு கிறிஸ்தவ மதத்தின் மறுக்க முடியாத கொள்கைகளோடு ஒத்துப்போகிறதா?" என்று கேட்டார்.

**"அன்பு தன்னலமற்ற சேவையையும், கீழ்த்தரமான ஆசைகளைக் களைவதையும் குறிக்கிறது. தூய அன்பு அனைத்தையும் உள்ளடக்கியது.**

**ஒருவர் நேசித்தால், இதர அனைத்து விரும்பத்தகாத குணங்களும் தானாகவே கரைந்துவிடுகின்றன. மேலும் அன்பு எனும்போது, நான் தூய அன்பைக் குறிக்கிறேன், ஆனால் பாலியல் அன்பு என்பது இன்று உலகில் புரிந்து கொள்வது போல தூய்மையான அன்பு அல்ல.**"

மற்றுமொருவர் இவ்வாறு வினவினார், "கிறிஸ்துவிற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட மதத்திற்கும் ஏதாவது பெரிய வித்தியாசம் இருக்கிறதா?"

"**உலகளவு வித்தியாசம் உள்ளது. கிறிஸ்து கூறும் வாழ்க்கையை வாழ வேண்டும், சடங்கு முறைகளைப்** (விழாக்கள், சம்பிரதாய வழக்கங்கள் மூலம்) **பின்பற்றக்கூடாது.**"

டாக்டர் திருமதி கோல்பெர்க் (DR. KOHLBERG), சிறந்த ஒரு மருத்துவராக எப்படி இருக்க முடியும் என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**இது மிகவும் எளிது - அன்பு ஒன்றுதான் ஒரே வழி. அன்பினால் செய்யப்படும் அனைத்தும், அற்புதமான பலன்களை அளிக்கும். ஒரு நல்ல மருத்துவராக இருக்க, உங்களுக்கு எல்லா நோயாளிகளும் - நல்லவர்கள், தீயவர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் - சமம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு பிச்சைக்காரனை, நீங்கள் ஒரு கோடீஸ்வரனிடம் காட்டும் அதே அன்பும், அக்கறையுடனும் நடத்துங்கள். எல்லையற்ற கடவுள் அனைவரிலும் இருக்கிறார் என்பதை ஒரு மருத்துவர் உணர்ந்தால் மட்டுமே, அவர் ஒரு துறவியைப் போல பணிபுரிய முடியும்! இது எளிமையானது, ஆனால் நடைமுறையில் செயல்படுத்துவது மிகவும் கடினம். பல விஷயங்கள் - பெயர், புகழ், பணம், சமூகம், சூழ்நிலைகள் இதுபோன்ற பல - தடையாக இருக்கின்றன.**"

"**நான் ஆத்மாக்களின் மருத்துவர். ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப உதவுகிறேன்**" என்று பாபா கூறி முடித்தார்.

ஒரு நாள், மெஹர் பாபா தனிப்பட்ட சிலருக்கு, பரிணாம வளர்ச்சியின் வரைபடத்தைக் காட்டினார். அதில் கலந்துகொண்ட ஒருவர், 'விடுபட்ட இணைப்பு' (MISSING LINK) என்பதை அவர் புரிந்துகொண்டதற்கு இணங்க, அது தவறானது என்று கருதினார். பாபா ஒப்புக் கொண்டார், "**ஆம், இது ஒரு பெரிய தவறு. உண்மையில், பரிணாம வளர்ச்சியில் 'விடுபட்டுப் போன இணைப்பு' என்று எதுவும் இல்லை.**"

"சுயநலம் எவ்வாறு, ஏன் ஏற்படுகிறது?"

பாபாவின் விளக்கம்: "**அனைத்திற்கும் மூல காரணம் சுயநலம், தன்னார்வம், விருப்பம் மற்றும் ஆசை. இரண்டு நாய்கள் எலும்பைக் கண்டால், அதை இரண்டும் விரும்புவதால் சண்டையிடுகின்றன. இரண்டுக்கும் அது வேண்டும் என்ற ஆசை. அவை அதைக் காணாதபோதும், சண்டையிடாத போதும் நிலைமை ஒன்றாகத்தான் இருக்கும், அதாவது அதை அடையும் ஆசை அங்கே மறைந்திருக்கும்.**"

"மக்கள் ஏன், எதற்காக அஞ்சுகிறார்கள்?"

**"ஏனெனில் அவர்கள் வைத்திருக்கும் பொருளை, அவர்கள் விரும்பும் பொருளை இழக்க அஞ்சுகிறார்கள்."**

"அச்சமின்றி வாழ்வதற்கான வழிமுறைகள் யாவை?"

**"அதற்கு சாத்தியமான ஒரே வழி** (இதயத்தின்) **ஆன்மீக மாற்றம் மட்டுமே. அது ஒன்றுதான் மக்களை திருப்திப்படுத்தும். அவர்கள் திருப்தி அடைய விரும்புகிறார்கள், ஆனால் அவர்களே என்ன விரும்புகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது... எல்லா பொருள் சார்ந்த திருப்திகளுக்கும் ஆன்மீக மேம்பாடு அவசியம்."**

"ஆனால் ஆழமாக வேரூன்றிய சுயநலமும், ஆசைகளும் இருக்கும்போது ஆன்மீக முன்னேற்றம் எவ்வாறு வரும்?"

பாபா கூறினார், **"இது உலகளாவிய அன்பினால் உருவாகும் ஒன்று. அன்பு எல்லா இதயங்களையும் ஒன்றிணைக்கும் சக்திகளைக் கொண்டது. எனவே முதல் உலகளாவிய ஆன்மீக உந்துதல் அன்பின் மூலமாகத்தான் இருக்கும்."**

1934 ஜூலை 14ஆம் நாள், மேலும் சில நேர்காணல்கள் வழங்கப்பட்டன. மூர் மஸ்ஸாஸனி (MOOR MAZZEAZZAENI) எனும் பிரபல நடன கலைஞருக்கு, பாபா இந்தக் கருத்தை விளக்கினார்: **"நடனம் சரியான முறையில் வெளிப்படுத்தப்பட்டால் அது ஒரு சிறப்பான கலை. இது தெய்வீக குணங்களை உள்ளடக்கியது, ஒழுங்காக வெளிப்படுத்தினால், அற்புதமான விளைவை ஏற்படுத்தும்; தவறாகப் பயன்படுத்தினால் அது எதிர் விளைவைக் கொண்டிருக்கும்."**

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா தனது நெருங்கிய அன்பர்களிடம், **"திரைப்படம் அமெரிக்காவில் தயாரிக்கப்படும் போது, உங்கள் அனைவரையும் என்னுடன் அங்கு அழைத்துச் செல்வேன்"** என்று கருத்துத் தெரிவித்தார். எவ்வாறாயினும், அடுத்தடுத்த விவாதங்களில் டிலியாவின் பெயர் எப்படியோ குறிப்பிட விடுபட்டது. டிலியாவின் மனம் இதனால் கலக்கமடைந்தது, ஏனெனில் அவர் குழுவிலிருந்து விலக்கப்பட்டதாக உணர்ந்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர் மன வலியை மறைக்க முடியாமல் அழுதார். டிலியாவை ஒரு 'குதிரை ஈ' கண்ணில் கொட்டியதால் இது மேலும் வலியையும், வீக்கத்தையும் ஏற்படுத்தியது. நோரினா, அவரை ஆறுதல்படுத்த முயன்றும் பயனில்லாமல், இறுதியில் **'என்னவாயிற்று'** என்று பாபா, டிலியாவிடம் கேட்டார். வழக்கமான "ஒன்றுமில்லை, பாபா" என்ற பதிலைத் தொடர்ந்து, அவர் தனது சட்டைப் பாக்கெட்டைத் தட்டி, **"நான் உங்களை எனது சட்டைப் பையில் வைக்க வேண்டியிருந்தாலும், என்னுடன் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்வேன்!"** என்று சைகையால் தெரிவித்தது டிலியாவை சிரிக்க வைத்தது, அவருடைய கவலைகள் அனைத்தும் மறைந்து போயின.

கேப்ரியல் பாஸ்கலுடன் மேலும் நடந்த கலந்துரையாடல்களுக்குப் பிறகு, திரைப்பட பணிகள் குறித்த ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு ஜூலை 14ஆம் நாள் கையெழுத்திடப்பட்டது. அன்று மதியம் பாபா ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றார். ஆனால் அவர் புறப்படுவதற்கு சற்று முன்னர், ஆதி ஜூனியர் மீது திடீரெனக் கோபமடைந்தார். கடுமையான வார்த்தைகள் பரிமாறப்பட்டன, இது ஓர் இருண்ட சூழ்நிலையை உருவாக்கியது. சாஞ்சி கூறியதற்கிணங்க, பாபா 'புயலை' உருவாக்கியது, மெர்டென்ஸ் மற்றும் பல புதிய அன்பர்களுக்கு, குருநாதரின் மனநிலையின் 'மறுபக்கம்' என்ன என்பதை அனுபவபூர்வமாக அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

ஸூரிக் நகரிலிருந்த பத்து நாட்களுக்குப் பின்னர், 1934 ஜூலை 16ஆம் நாள், பாபா ரயிலில் மார்ஸெல்லஸுக்குப் புறப்பட்டார். அவருடன் நோரினா, எலிஸபெத், ரானோ, நான்னி, ருவானோ, டிலியா, குயன்டின் மற்றும் மூன்று மண்டலி இருந்தனர். பாபா ஐரோப்பிய பாணியில் ஆடைகளை அணிந்திருந்தார், ஆனால் இந்தப் பயணத்தின் போது, அவர் எப்பொழுதும் தனது சத்ராவை உள்ளே அணிந்திருந்தார். ரயிலில் அவர் ரானோவை நோக்கி, "**இந்த ஆடம்பர அலங்கார உடை எனக்கு மிகவும் அசௌகரியமாக உள்ளது. நான் எனது கோட், காலுறையைக் கழற்றினால் எல்லாம் சரியாக இருக்குமா?**" என வினவினார்.

சுவிஸ் மக்களின் கடுமையான முகங்களை நோட்டமிட்டு, ரயில் பெட்டியைச் சுற்றிப் பார்த்த ரானோ, அது அவருக்கு ஒரு பொருட்டல்ல, ஆனால் இதர பயணிகளின் முன்னிலையில் அது சங்கடமாக இருக்கலாம் என்று பதிலளித்தார். பாபா புன்னகைத்து, சற்று வருத்தத்துடன் சைகை மூலமாக, "**ஆமாம், அது நன்றாக இருக்காது என்று நானும் நினைக்கிறேன்,**" என்று தெரிவித்து, அதே உடையை அணிந்திருந்தார். 'அவதார புருஷர் கூட மரபு வழி வந்த சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம்' எனக் காலம் நினைத்துப் பார்த்தது.

அவர்கள் அதே நாளில் மார்ஸெல்லஸ் வந்து, ஹோட்டல் டெர்மினஸில் (TERMINUS) தங்கினர். செல்லும் வழியில், மெஹர் பாபா நான்னியைப் பார்த்துப் புன்னகைத்து, எழுத்துப்பலகையில் அவரது '**தேவதூதர்**' (ANGEL) என்று குறிப்பிட்டார்.

மார்ஸெல்லஸில் இருந்த நான்கு நாட்களும் பெரும் பரபரப்பான நாட்கள்; பாபா நாள் முழுவதும் விரைந்து, மிருகக்காட்சிசாலையிலும் பூங்காக்களிலும் நடந்து, பல இடங்களைக் காரில் சுற்றி வந்தார். ஒரே நாளில் இரண்டு முறை அனைவரையும் திரைப்படங்களுக்கு அழைத்துச் சென்றார். பாபா திரைப்படத்திற்குச் செல்லும் போதெல்லாம், திரைப்படம் எவ்வளவு நன்றாக இருந்தாலும், அதன் ஒரு பகுதி முடிந்ததும், எழுந்து நின்று வெளியே சென்றுவிடுவது வழக்கம். ஆனால் இம்முறை அப்படிச் செய்யாமல், திரைப்படம் சலிப்பாக இருந்து, அனைவரும் வெளியேற விரும்பியும், பாபா இறுதிவரை அமருமாறு வலியுறுத்தினார். ரானோவிற்கும் ஃபிரெஞ்ச் திரைப்படத்தின்

உள்ளடக்கம் சற்று அபாயகரமானதாக இருந்ததால், மொழிபெயர்க்க சிரமப்பட்டார். ஒரு கட்டத்தில், டிலியா அப்பாவித்தனமாக, "பாபா டார்லிங், உங்கள் ஆன்மீக வேலை இன்னும் முடியவில்லையா?" என்று கேட்டார். படத்தைப் பார்க்க சகிக்காமல் சிலர் தூங்கிவிட்டனர்.

ஒரு நாள் நகரத்தின் வெளியே இருந்தபோது, அனைவரும் பறவைகள் சந்தையைக் கடந்து சென்றனர். பாபா, ஒரு சில பறவைகளை வாங்க விருப்பம் தெரிவித்து, பளிச்சிடும் நிறத்தில் ஒரு ஜோடி கிளிகளை வாங்கி, ஹோட்டலுக்குக் கொண்டு வந்தார். பாபா தனக்கு மேலும் நான்கு கிளிகள் - டிலியா, குயன்டின், நான்னி, ரானோ ஆகியோரிடமிருந்து தலா ஒன்று - தேவை என்று குறிப்பிட்டதும், அனைத்தும் கொண்டுவரப்பட்டன; ஆனால் மறுநாள் காலையில் பாபா அவருக்கு மேலும் மூன்று - நோரினா, எலிஸபெத், ருவானோ மூவரிடமிருந்தும் ஒவ்வொன்று தேவை எனக் கூறினார். பாபா, இம்முறை அவர்களுடன் பஜாருக்குச் சென்று நான்கு கிளிகளைத் தேர்ந்தெடுத்தார்; இப்போது மொத்தத்தில் 13 பறவைகள். நான்னி உடனே அழகான கோபுர வடிவில் கூண்டு ஒன்றையும் வாங்கிவந்தார்.

ஆனால் ஹோட்டலில், பறவைகள் தங்களுக்குள் மோதத் தொடங்கின, அவற்றை வெவ்வேறு கூண்டுகளில் அடைக்க பாபா விரும்பினார். குயன்டின் லண்டனில் 'செல்லப் பறவைகளை' வளர்த்து வந்தார். எனவே ஒரு ஜோடி கிளிகளை வேறு கூண்டுக்கு மாற்றும்படி பாபா அவரை அழைத்த போது, குயன்டின் பக்கத்து அறையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்ததால் (அவர் ஒரு தேநீர் பிரியர்) ஒரு நிமிடம் காத்திருக்குமாறு கூறினார். ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் அவரை அழைத்தார், குயன்டின் அதே பதிலை அளித்தார். இதனால் சீற்றமடைந்த பாபா, பறவைகளை இடம் மாற்ற ஆதி ஜூனியரைப் பணித்தார். குயன்டினைக் குறிப்பிட்டு, "**எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதை விட அவருக்குத் தேநீர் முக்கியம் என்று நினைக்கிறார்**" என பாபா எழுத்துப்பலகையில் தெரிவித்தார்.

ஆதி ஜூனியர் கூண்டுக்குள் கையை வைத்தபோது, பறவைகளில் ஒன்று அவரைக் கூர்மையாகக் கொத்தியது. ஆதி தனது கையை வேகமாகப் பின்னால் இழுத்த அதே வேளையில், ஒரு பறவை கூண்டை விட்டு வெளியேறி அறையின் திறந்த ஜன்னல் வழியாக பறந்து சென்றது. குயன்டின் அங்கு வந்தபோது பாபா மிகவும் அதிருப்தியாக இருப்பதைக் கண்டார்; பாபாவின் கண்கள் தீவிரமாக ஒளிர்ந்தன. அங்கிருந்தவர்களைச் சுட்டிக்காட்டி, பாபா கேட்டார், "**இதுதான் கீழ்ப்படிதலா? மேற்கத்திய நாடுகள் எனக்குக் கீழ்ப்படிவது இப்படித்தானா? நான் உங்கள் அனைவரையும் திருப்பி அனுப்புவேன், உங்கள் முகங்களை மீண்டும் ஒருபோதும் பார்க்க மாட்டேன்! அந்தப் பறவை தப்பிச் சென்றதால் எனது பணி தடைபட்டது. எனவே நான் மீண்டும் சொல்கிறேன்: "நான் சொல்வதை உடனடியாக நிறைவேற்றுவதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்!**"

பாபா பின்னர் அனைவரையும் தழுவி அமைதியானார். பாபாவின் மனநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தைக் கண்டு ரானோ ஆச்சரியமடைந்தார், ஏனெனில் ஒரு சாதாரண மனிதனால் இதுபோன்ற கோபத்தை வெளிப்படுத்திய அடுத்த கணமே, அமைதியின் மொத்த உருவமாகத் தோன்றுவது ஒருபோதும் இயலாத காரியம். இந்த நிகழ்வைக் கொண்டாட, பாபா ஒவ்வொருவருக்கும் ஒரு சிறிய கோப்பை மதுவை வழங்கி, "**மேற்கிலிருந்து கிழக்கிற்கு பறவைகளை எடுத்துச் செல்வது மிகுந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது. ஒவ்வொன்றும் ஒரு நபரைக் குறிக்கிறது. பறந்து சென்ற பறவை எனது நெருங்கிய சீடர்களில் ஒருவர் இறைநிலையை அடைந்து, நான் எனது மௌனத்தைக் கைவிடும் முன்னர் உயிரைத் துறப்பதைக் குறிக்கும். பறவை பறந்து சென்றது எனது விருப்பம். அது இன்னும் சில நாட்களில் மாண்டுவிடும். எனது வட்டத்தில் பன்னிரண்டு உறுப்பினர்கள் உள்ளனர், எனவே பதின்மூன்றாவது பறவை நம்மை விட்டுச் செல்ல வேண்டியிருந்தது. புத்தரின் காலத்திலும் இதுபோன்ற சம்பவம் நடந்தது, அப்போது அவரது சீடர்கள் 32 பறவைகளை அவருக்கு வழங்கினர்.**"

பறவைகளில் ஒன்றை மீண்டும் பஜாருக்கு எடுத்துச் சென்று, அதற்கு பதிலாக தங்களால் இயன்ற எண்ணிக்கையில் சிறிய சிறிய பறவைகளை வாங்கி வருமாறு டிலியா, குயன்டின் இருவருக்கும் பாபா அறிவுறுத்தினார். அவர்கள் திரும்ப எடுத்துவந்த ஐந்து பறவைகளுடன் இப்போது மொத்தம் இருந்த 16 பறவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு, காக்காவிற்கு வழங்கப்பட்டது; அவை அனைத்தும் பாபாவுடன் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

மார்ஸெல்லஸில் இருந்தபோது, பாபாவின் தலைமுடியை சீர்செய்யும் வாய்ப்பு ரானோவிற்கு வழங்கப்பட்டது. அவர் தினமும் பதினைந்து சிகரெட்டுகளைப் புகைத்து வந்தார். ஆனால் இந்த வாய்ப்பை அடையப் பெற்ற நேரத்திலிருந்து புகை பிடிப்பது படிப்படியாகக் குறைந்து, ஒரு நாளைக்கு இரண்டாகக் குறைத்துக் கொண்டார். ரானோ, நான்னி இருவருக்கும் இப்படி சிறிய வழிகளில் சேவை செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், அவர்கள் இருவரும் பாபாவிற்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்பதை உணர வைத்தார்; அவர்களும் அவ்வாறே வாழ்ந்து வந்தனர்.

மார்கரெட் ஒருமுறை பாபா வேறு நாடுகளுக்கு விஜயம் செய்வதைப் பற்றி கூறினார், "பாபா ஒரு வாரத்திற்காக வந்து, எங்களுடன் இருந்து, திரும்பிச் செல்லும் வேளையில், நாங்கள் ஒன்றுமே செய்யாதபோதும், முற்றிலும் களைத்துப் போய், சக்தியற்றவர்களாக இருந்தோம். கிட்டத்தட்ட அவர் எங்கள் ஆற்றலை மனித பேட்டரி போலப் பயன்படுத்தியதாக உணர்ந்தோம்."

எனவே குயன்டின், டிலியா, மார்கரெட், மேபெல் ஆகியோரை ஓய்வுக்காக ஸ்பெயினுக்குச் செல்ல பாபா அனுமதி வழங்கினார்; குயன்டின், டிலியா இருவரும் ஜூலை 19ஆம் நாள் புறப்பட்டனர். ரானோ, ருவானோ, நான்னி மூவரும் அடுத்த நாள் பாரிஸ் நகருக்கு அனுப்பப்பட்டனர்; மார்கரெட், மேபெல்

இருவரும் பாபா திரும்பிச் செல்லும் வரை காத்திருந்தனர். பாபாவை வழியனுப்ப இம்முறை துறைமுகத்திற்கு எவரும் உடன் செல்வதை அவர் விரும்பவில்லை. பாபா பயணம் செய்யும் கப்பல் எஸ்.எஸ். ஸ்ட்ரத்நேவர் ஜூலை 20ஆம் நாள் மாலை வரை இந்தியாவிற்குப் புறப்படுவதாக இல்லை என்றாலும், அன்று காலை மண்டலியுடன் கப்பலில் ஏறினார். நோரினா, எலிஸபெத் இருவரும் திரைப்படத்தைத் தயாரிப்பது தொடர்பான பாபாவின் பணிகளைத் தொடர அமெரிக்காவிற்குப் பயணம் செய்தனர்.

1934, ஆகஸ்ட் 2ஆம் நாள் மதியம், 450 பயணிகளுடன் 'எஸ்.எஸ். ஸ்ட்ரத்நேவர்' (S.S. STRATHNAVER) மும்பை துறைமுகத்தை வந்தடைந்தது; ஆதி சீனியர், கோஹெர் இருவரும் பாபாவை அங்கு சந்தித்தனர். பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. பாபா அன்றிரவு நாசிக் செல்வதாக விருப்பம் தெரிவித்து, 'கொல்கத்தா மெயிலில்' புறப்படுவதற்கு முன்பு, காக்கா பாரியாவின் சகோதரி வீட்டிற்கு விஜயம் செய்தார்.

திரைப்படம் தயாரிப்பது குறித்த விபரங்களை பாபா, ருஸ்தத்திற்கு விளக்கிக் கூறினார். ஆகஸ்ட் 3 மாலை 5 மணிக்கு பாபா, மெஹராபாத் புறப்பட்டுச் சென்று பயணத்தின் விபரங்களை ஆண், பெண் மண்டலிக்கு எடுத்துரைத்தார்.

பெண் மண்டலி அனைவரும் மெஹராபாத் மேல்மலையில் வாழ்ந்து வந்தனர், ஆண்களில் எவரும் அங்குச் செல்ல அனுமதியில்லை; ஆண்களின் தொடர்பிலிருந்து பெண் மண்டலி கண்டிப்பான தனிமையில் வைக்கப்பட்டனர். தங்களது தனியுரிமையை உறுதி செய்வதற்காக ஸூனாமாஸி, காக்குபாய் இருவரும் வாசலில் கண்காணிப்புடன் இருந்ததோடு, ஏதேனும் காரணத்தை முன்னிட்டு ஆண் மண்டலி இவர்களோடு மட்டுமே பேச அனுமதிக்கப்பட்டனர்.

மெஹர் பாபாவின் மேற்கத்திய பயணத்தைப் பொறுத்தவரை, வெளிப்புற கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, முதன்மையாக, இது ஆன்மீகத் திரைப்படம் தொடர்பான முன்னேற்பாடுகள் போலத் தோன்றியது. பாபாவின் தனிப்பட்ட தொடர்பு இருந்ததால், முக்கியமாகப் பங்கெடுத்தவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிந்து கொள்ள அதிக ஆர்வத்துடன் இருந்தனர். கார்ல் வால்மொல்லர் இப்படத்தின் எழுத்தாளராகவும், கேப்ரியல் பாஸ்கல் இயக்குநராகவும், நோரினா, எலிஸபெத், எல்ஸி டோம்வில் ஆகியோர் அனைத்து நிதியுதவிகளையும் ஏற்பாடு செய்ய இருந்தனர். பாஸ்கல் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஸ்டுடியோவால் 50 சதவிகித நிதியுதவியுடன் மூன்று திரைப்படங்களை இயக்கவும், 50 சதவிகிதம் எலிஸபெத், நான்னி இருவரின் அன்பளிப்புடன் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இறுதியாக இதில் வரும் லாபம் இவ்வாறு பிரிக்கப்பட வேண்டும்: பாபாவிற்கு 50 சதவீதம், வால்மொல்லருக்கு ஐந்து, பாஸ்கலுக்கு 45 சதவீதம். பயணத்திற்கான பாபாவின் செலவுகள் அனைத்தும் (6,500 டாலர்) செலுத்தப்பட்டன, வால்மொல்லருக்கு அவரது செலவுகளுக்காக

1,000 டாலர் வழங்கப்பட்டது. திரைப்படத்தின் படப்பிடிப்பைத் தொடங்க 1934 செப்டம்பர் மாதத்திற்குள் அமெரிக்கா திரும்புவதாக பாபா உறுதியளித்தார்; பாபா மற்றும் மண்டலியின் பயண செலவுகள் அந்த நிறுவனத்தால் செலுத்தப்பட வேண்டும்.

பாபாவின் பிரிவால் தவிக்கும் மேற்கத்திய பெண் சீடர்களின் உணர்வுகளைத் தணிக்கும் விதத்தில், பாபா ஒவ்வொருவருக்கும் திரைப்படத்தில் ஒரு முக்கிய பங்கு வழங்கப்படும் என்று சுட்டிக்காட்டினார்; மார்கரெட் ஆன்மீக நடனங்களின் பங்கை ஏற்கவேண்டும்.

மெஹராபாத்தில் சிறிது காலம் தங்கிய பின்பு, பாபா தனது பக்தர்களுக்கு தரிசனம் வழங்க ஒரு சில மண்டலியுடன் மும்பைக்குச் சென்றார். நௌரோஜி தாதாசாஞ்சியின் இல்லத்தில் தரிசனம் நடைபெற்றது, மேலும் பாபாவிற்கு நெருக்கமானவர்கள், நாசிக் நகரைச் சேர்ந்த மினூ கராஸ் உட்பட, பலர் அதில் கலந்து கொண்டனர். மினூ மற்றும் நாசிக் நகரில் போலீஸ் அகாடமியில் சேர்க்கப்பட்ட ஷங்கர் மகாதேவ் துரேக்கர் என்ற இளைஞனும் வழக்கமான பார்வையாளர்களாக இருந்தனர்.

மெஹர் பாபா மும்பை தரிசனத்தைத் தொடர்ந்து, பூனா கஸ்பாபேட்டில் சதாஷிவ் பாட்டீல் இல்லத்தில் வழங்கிய தரிசன நிகழ்ச்சியில், பல பூனா பக்தர்கள் கலந்து கொண்டனர். அதற்குப் பிறகு, பாபா, மெமோ, சகோதரர் பெஹராம், அவரது மனைவி பெரின் ஆகியோரை சந்தித்து, அவர்களுடன் தனிப்பட்ட விஷயங்களைக் குறித்து பேசினார்.

பூனாவில் இருந்தபோது, பாபா, சதாஷிவ், புவாஸாஹேப் இருவரையும் அழைத்து, '**அவர்கள் மெஹராபாத்தில் வாழுமாறு கூறிய பாபாவின் உத்தரவை ஏன் கடைப்பிடிக்கவில்லை**' என்று வினவினார். பாபாவின் வற்புறுத்தலுக்கு மத்தியிலும், மெஹராபாத்தில் தங்குவதற்கான பாபாவின் விருப்பத்தை, புவாஸாஹேப் ஏற்க மறுத்துவிட்டார். ஆண்டுகள் கடந்து செல்லச் செல்ல, புவாஸாஹேப் தனது தவறுக்காகப் பெரிதும் வருந்தினார்.

மெஹர் பாபா அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தை விளக்க, கீழ்வரும் உதாரணத்தைப் பயன்படுத்தினார்:

**ஓர் அறையில் நாம் அமர்ந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அறையில் இரண்டு கதவுகள், ஒன்று முன் புறமும் மற்றொன்று பின் புறமுமான அமைப்பு. முன் கதவு வழியாக வெளியேறுவது சுலபம், ஆனால் பின் கதவு வழியாகச் செல்ல, கடினமாகவும், சிக்கலாகவும் இருப்பதால் அதிக நேரம் எடுக்கும். இப்போது, உங்கள் தாயார் தரையில் விழுந்து மயக்கத்தில் இருப்பதாகச் செய்தி வருகிறது. நீங்கள் உடனடியாகத் தாயார் வீட்டிற்கு விரைந்து செல்ல வேண்டும், எனவே நீங்கள் வெளியேற முயற்சிக்கும் வேளையில், முன் கதவின் அருகே ஒரு கொடிய விஷப்பாம்பு மறைந்திருப்பதை நான் அறிவேன்; நீங்கள் முன் கதவு வழியாக வெளியேறும் தருணத்தில், பாம்பு உங்களைக் கடிக்கக்கூடும். அந்த**

**ஆபத்தான நிலையிலிருந்து நீங்கள் தப்ப முடியாது, நிச்சயமாக உயிரிழந்து விடுவீர்கள்.**

**அதே சமயம் உங்கள் தாயாருக்கு உண்மையான ஆபத்து எதுவும் இல்லை என்பதையும் நான் அறிவேன், நீங்கள் தாமதமாக வீட்டிற்குச் சென்றாலும் கவலைப்பட ஒன்றுமில்லை. இதையெல்லாம் நான் உங்களுக்கு வெளிப்படையாக விளக்க முடியாததால், 'நீங்கள் முன் கதவு வழியாக செல்ல வேண்டாம், ஆனால் பின் வாசல் வழியாகச் செல்லுங்கள்' என்று நான் உங்களுக்கு உத்தரவு அளித்திருந்தாலும், நீங்கள் 'நான் அவ்வாறு செய்தால், மேலும் தாமதமாகும், எனக்குக் கால் வலிப்பதால் வேகமாக நடக்க முடியாது' என்று நினைப்பது மட்டுமல்லாமல், என்னுடன் வாதிடுகிறீர்கள், நீங்கள் புத்திசாலி என்று நினைக்கிறீர்கள்.**

**அவ்வாறான நிலையில், உங்கள் நலனைப் பற்றி சிந்திப்பதைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியாது. மேலும் எதையும் செய்ய நான் உதவியற்றவனாக உள்ளேன். அந்தக் காரணத்திற்காகவே எல்லோரிடமும் "நான் முதலில் கொடுத்த உத்தரவை நீங்கள் பின்பற்ற வேண்டும் - உங்கள் புத்தி மற்றும் ஆதாரமற்ற வாதங்களைப் புறக்கணிக்க வேண்டுமென்று நான் கூறுவதன் காரணம். நீங்கள் உங்கள் புத்தியைப் பயன்படுத்தி வாதிடும்போது, மாறாக, உங்கள் வாதங்களையும் மனநிலையையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன், உங்கள் விருப்பங்களுக்கு நான் தலைவணங்குகிறேன். இந்த சூழ்நிலையில், பின் விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ளும் போது, என்னிடம் ஓடி வந்து, உங்கள் துரதிர்ஷ்டத்தைப் பற்றி புகார் செய்து அழுகிறீர்கள்; நான் செய்ததை எண்ணி வருந்துகிறீர்கள் அல்லது என்னைக் குறை கூறுகிறீர்கள். நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் விளக்க முயற்சிக்கும் போது, கூறியதை சற்றேனும் சிந்திக்காமல் அப்படியே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இல்லையெனில், உங்கள் கர்மவினையின் பலன்களைத் தாங்குவதைத் தவிர வேறு வழியில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்.**

1934 ஆகஸ்ட் 15 அன்று பாபா மெஹராபாத் திரும்பி வந்து, அங்கு வாழும் சில மண்டலியிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கத் தொடங்கினார். பீலாமாய் நிர்வகித்து வந்த சமையல் அறையில் மாஸாஜி சமையல் செய்து வந்தார். இருவருக்கும் இடையே சண்டை சச்சரவு இல்லாத நாளே இல்லை, முக்கியமாக, பீலாமாய் உணவு சமைக்கத் தேவையான பொருட்களை, சரியாகக் கொடுப்பதில்லை. அவர் மிகவும் கண்டிப்பான மேலாளர் என்று மாஸாஜி புகார் கூற, பீலாமாய் கராச்சிக்குத் திரும்பிச் செல்வதாக மிரட்டி, மாஸாஜி எப்போதும் எதற்கும் உடன்படுவதில்லை, அவர் எல்லையை மீறுகிறார் என்று கூறினார். ஆகஸ்ட் 19ஆம் நாள், பாபா அவர்களை அழைத்து "**நீங்கள் இருவரும் பல ஆண்டுகளாக என்னுடன் இருந்து வருகிறீர்கள், ஆனால் நீங்கள்**

**இன்னும் எதையும் துறக்கக் கற்றுக் கொள்ளவில்லை. உடலை ஒரு நாள் துறந்துவிட வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள், இருந்தும் உங்களுக்கிடையில் ஏன் இந்த வெறுப்பு, பொறாமை மற்றும் கோபத்தின் வெளிப்பாடு? இந்த குணங்கள் அனைத்தையும் கைவிடுவதுதான் உண்மையான துறவு என்பது!"**

பீலாமாயைப் போலவே, சகனும் எந்த சூழ்நிலையிலும் உடனிருப்பதாக வாக்குறுதியளித்த போதிலும், மெஹராபாத்தை விட்டு வெளியேறுவதாகக் கூறினார். பாபா அவரை எச்சரித்து கோபமடைந்தார், ஆனால் இறுதியில் அவரை மன்னித்தார்.

ஆகஸ்ட் 20 அன்று சாஞ்சியும், அடுத்த நாள் காக்கா ஷஹானே குடும்பத்தாரும் பாபாவின் தரிசனத்திற்காக மெஹராபாத் வந்தனர்.

மெஹர் பாபா திரும்பி வந்ததிலிருந்து ஆதி சீனியர் மிகவும் மனம் தளர்ந்து காணப்பட்டார். அவரும் 'பாபாவின் அவையிலிருந்து வெளியேறி, அவருடனான தொடர்பை முற்றிலுமாகக் கைவிடுவது' பற்றிய எண்ணங்களை வளர்த்து வந்தார். பாபா வேண்டுமென்றே ஆதியைத் தூண்டுவது போலத் தோன்றியது. ஆகஸ்ட் 23ஆம் நாள் பாபா அவரிடம், "**இந்த நாட்களில் நீங்கள் ஏன் மகிழ்ச்சியாக இல்லை?**" என்று கேட்டார்.

ஆதி ஒருபோதும் தனது எண்ணங்களை வெளிப்படுத்தத் தயங்குவதில்லை; பாபாவின் முன்னிலையிலும் அவ்வாறே நடந்து கொண்டார். பாபாவின் கேள்விக்கு ஆதி சீனியர் பதிலளித்தார், "உங்கள் கடைசி ஐந்து வெளிநாட்டுப் பயணங்களின் போதும், நீங்கள் என்னை உங்களுடன் அழைத்துச் செல்லவில்லை, ஏதாவது ஒரு சாக்குப்போக்கின் கீழ் என்னை இங்கேயே இருக்கச் செய்தீர்கள்."

பாபா இதைக்கேட்டுக் கருத்துத் தெரிவிக்கையில், "**எனது மண்டலியில் நீங்கள் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள்! நீங்கள் உலக விஷயத்திலிருந்தும், உடல் நோயிலிருந்தும் விடுபட்டுள்ளீர்கள், உங்கள் விருப்பப்படி எங்கும் செல்ல கார் வைத்துள்ளீர்கள். இருந்தும் நீங்கள் எப்பொழுதும் அதிருப்தி அடைகிறீர்கள்! நீங்கள் 'முணுமுணுப்பதில் முதன்மையானவர்', ஒருபோதும் வாழ்க்கையில் திருப்தி இல்லாதவர்!**" என்று கூறினார்.

மேற்கத்திய நாடுகள் சென்று திரும்பியதிலிருந்து, மெஹர் பாபா மேல்மலையின் சமையலறைக்கு அருகில் அமைந்த குளியல் அறையில் ஓய்வெடுத்தார். மேல்மலையில் ஒரு சிறிய இரண்டு மாடி கட்டிடம் கட்டும் விருப்பத்தைத் தெரிவித்து, பெண் மண்டலி கீழேயும், அவர் முதல் மாடியிலும் தங்கலாம் என்றும் கூறினார். இந்தத் திட்டத்திற்காக ஒரு வரைவு பணியாளரை (பண்டோபாவின் சகோதரர்) ஈடுபடுத்த ஆதி சீனியர், பாதிரி இருவருக்கும்

அறிவுறுத்தப்பட்டது. இந்தத் திட்டங்கள் ஆகஸ்ட் 24 அன்று பாபாவிற்கு வழங்கப்பட்டன.

நிதி நிலையும் சாதகமாக இல்லை, மற்றும் அவரது 'ஆன்மீகக் காரணங்களுக்காக' 23ஆம் நாள் பாபா சில நெருங்கிய பக்தர்களுக்கு (ராம்ஜூ, ஸெயிலர், ஐயங்கார், மானேக் ரஞ்சி, மினூ) ஒவ்வொரு மாதமும் மண்டலியின் பராமரிப்புக்காக, 10 ரூபாய் வழங்குமாறு ஒரு கோரிக்கையை அனுப்பினார்.

மேலும், அடுத்த நாள் மண்டலியின் கூட்டத்தில், பாபா, ஒரு கோழிப்பண்ணை வளர்த்து சிறிது வருமானம் சம்பாதிக்கப் பரிந்துரைத்தார்; மற்றொருவர் பால் பண்ணை நடத்தும் யோசனையைத் தெரிவித்தார். ஆனால் இறுதியில், பாபா மேல் மலைக்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல ஒரு சிறிய டீஸல் பம்பை நிறுவ முடிவு செய்தார். இதன் மூலம் மாவு ஆலையையும் இயக்க முடியும்; இது பலருக்குத் தரும் சம்பளத்தை மிச்சப்படுத்தும். அவர்களின் உணவுக்காக, சில காய்கறிகளை வளர்க்க ஒரு காய்கறி தோட்டமும் தொடங்கப்பட இருந்தது.

1934, ஆகஸ்ட் 29 அன்று, தவ்லத்மாய், ஃபிரீனி, அவரது மகன் பெஹ்ராம் ஆகியோர் மெஹ்ராபாத்தில் தங்குவதற்காக வந்தனர். ஃபிரீனி இதர பெண்மணிகளுடன் மேல் மலையில் தங்கியிருந்தார், அதே நேரத்தில் தவ்லத்மாய், பெஹ்ராம் ஆகியோர் குடும்ப குவாட்டர்ஸில் தங்கினர்.

கடந்த சில நாட்களாக பாபாவின் உடல்நிலை சரியாக இல்லாமல் இருந்தது. நஸர்வான், சிஞ்சோர்கர், போர்கர் ஆகியோர் ஆகஸ்ட் 30ஆம் நாள் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

1934, செப்டம்பர் 1ஆம் நாள் பாபா உல்லாசப் பயணமாக அனைவரையும் வம்போரி மலைக்கு (VAMBORI GHAT) அழைத்துச் சென்றார். பாபா புறப்படுவதற்கு சற்று முன்பு ருஸ்தம், புவாஸாஹேப் இருவரும் வந்தனர். நாசிக்கில் புவாஸாஹேப் ஒரு உணவகம் நடத்தலாம் என்று பாபா விருப்பம் தெரிவித்தார், ஆனால் புவாஸாஹேப் முதலீடு செய்ய தன்னிடம் நிதி இல்லை என்று கூறினார்.

செப்டம்பர் 9ஆம் நாள் மும்பையிலிருந்து காக்கா பாரியா வந்தார். அடுத்த நாள், பாபா, ஆதி சீனியரிடம், "**ஆரம்பத்தில், நீங்களும் விஷ்ணுவும் மிகவும் கீழ்ப்படியக் கூடியவர்கள் என்று நினைத்தேன், ஆனால் இப்போது உங்கள் இருவரிடமும் சுயநலத்தைக் காண்கிறேன். நீங்கள் ஆன்மீக லாபத்திற்காகவும், விஷ்ணு பண உதவிக்காகவும் என்னுடன் இருக்கிறீர்கள். விஷ்ணுவிற்கு, பணம் தேவையில்லை, ஆனால் அவர் பிறரின் கல்விக்காக உதவ விரும்புகிறார். அதற்காக அவர் தன்னிடம் இருந்ததைச் செலவு செய்துவிட்டு, இப்போது என்னிடம் அதிக அளவில் பணம் கேட்கிறார்.**

**“ஆன்மீகம், பொருள் நன்மை இரண்டையும் யோசிக்காமல் எனக்கு சேவை செய்யக்கூடிய எவரையும் நான் இதுவரை சந்திக்கவில்லை. அர்ஜுன் ஒருவரைத்தான் நான் ஏறக்குறைய அப்படிப் பார்க்கிறேன்; அவர் மிகவும் சிறந்தவர்.”**

அதைத் தொடர்ந்து பாபா, காக்கா பாரியாவை அழைத்து, **“நீங்கள் ஏன் எனக்கு சேவை செய்கிறீர்கள்?”** என வினவினார்.

"இது எனது கடமை!" காக்கா பதிலளித்தார்.

**“உங்களுக்கு எந்த சுயநல நோக்கமும் இல்லையா?”** பாபா தொடர்ந்து கேட்டார்.

"முற்றிலும் இல்லை!"

**“காக்கா இப்படிப் பேசுகிறார், ஆனால் அவர் ஆன்மீக முன்னேற்றத்திற்காகத் தனது இதயத்தில் ஏங்குகிறார். அவர் வேறு எதையும் விரும்பவில்லை, ஆனால் ஆன்மீக முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இங்கே இருப்பது விரும்பத்தக்கது என்பதை அவர் அறிவார். இதுவும் ஒரு சுயநலம்! ஒருவர் நிஜமான அன்புடன் சேவை செய்ய வேண்டும், உண்மையான அன்பு என்பது எந்த ஆதாயத்தையும் எதிர்பாராமல் அல்லது எந்த ஆபத்தையும் பற்றி கவலைப்படாமல் இருப்பதாகும்.”**

ஸாக்கோரியில் கன்யாஸ்திரீகள் என்று அழைக்கப்படும் உபாஸனி மஹாராஜின் பெண் சீடர்களின் குழு ஒன்று இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், மஹாராஜ் இந்தக் கன்னியாஸ்திரிகளுக்கு அடையாளம் வழங்கும் எண்ணத்தில், அவர்களைத் தனது ‘ஆன்மீக மனைவிகள்’ என்று திருமணம் செய்து கொண்டார். இருப்பினும், இந்தக் காலகட்டத்தில், ராஹுரியில் மஹாராஜின் கடுமையான எதிரிகளாக இருந்த சில நபர்கள், அவர் மீது வழக்குத் தொடர்ந்து, அவரைப் பற்றிய பல அவதூறான கூற்றுக்களை முன்வைத்தனர், அவர் பலதார மணம் செய்து கொண்டதாகக் கூறி, சட்டவிரோத நோக்கங்களுக்காக இளம் பெண்களை அவரது ஆசிரமத்தில் தங்க வைத்துள்ளார் என்றும் கூறினர்.

மஹாராஜ் கோப்பர்காவ்ம் நீதிமன்றத்தில் இது குறித்து சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார், ஆனால், ‘**அவர் உலகத்திற்கும் உலக இன்பங்களுக்கும் அப்பாற்பட்ட கடவுளைச் சார்ந்தவர்**’ என்று கூறி மறுத்து, அவர் ஒரு தற்காலிக நீதிமன்றத்திற்குச் சாட்சியங்களை வழங்க வேண்டிய பொறுப்பு இல்லை. **“நான் என்ன செய்கிறேன் என்பதற்கு, நீதிமன்றம், நான் பதிலளிக்க வேண்டிய ஓர் இடம் அல்ல”** என்று அவர் விளக்கினார். எவ்வாறாயினும், வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

மெஹர் பாபா இதைப் பற்றி கேள்விப்பட்டபோது, இந்த வழக்கை அஹமதுநகர் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு ருஸ்தத்திடம் கூறினார். ருஸ்தமும் அவ்வாறே செய்தார். **1934**, செப்டம்பர் **20** அன்று ஆதி சீனியர், விஷ்ணு, டாக்கே ஆகியோர் வழியாக மஹாராஜுக்கு, பாபா இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்:

இந்த நேரத்தில் பாபா நிதி சிக்கலில் உள்ளார், மன்ஸில்-எ-மீம் நாட்களில் பாபா, வஜிஃப்தர் மூலம் கொடுத்த ரூ 15,000 கடனைத் திருப்பித் தரவேண்டும். மஹாராஜ் கடனைத் திருப்பித் தருவதானால், பாபா தனது மேற்கத்திய பயணத்தை ஒத்திவைத்து, மஹாராஜை தனது நீதிமன்ற வழக்கிலிருந்து, அவரைப் பின்பற்றுபவர்களின் செல்வாக்கின் மூலம் விடுவிப்பார்.

கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில், பாபாவிற்குப் பல செல்வந்தர்கள், செல்வாக்கு மிக்க பக்தர்கள் உள்ளனர் (சர் அக்பர் ஹைதரி போன்றவர்கள்), இவ்வழக்கிலிருந்து ஆளுநரின் உதவியுடன் மஹாராஜ் விடுபடுவார்.

இந்தச் செய்தி மஹாராஜின் செவிகளை எட்டியபோது, அவர் இவ்வாறு பதிலளித்தார்:

சதி செய்பவர்கள் என்னை அவதூறாக நடத்தி, துன்புறுத்துவதற்கு ஒன்றிணைந்து கைகோர்த்துள்ளதால், எனக்கு நன்கொடைகளை வழங்கிய பக்தர்கள் இனி இங்கு வரப்போவதில்லை. இந்த வழக்கை எதிர்த்துப் போராடுவதற்கு என்னிடம் போதுமான வசதியும் இல்லை, நான் வைத்திருந்த மதிப்புமிக்க பொருட்களும் ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

இங்கே என்னிடம் என்ன நிதிகளின் களஞ்சியமா உள்ளது? நான் ஓர் ஏழை பிச்சைக்காரன். என்னைப் போன்ற ஒருவரிடம் இத்தகைய கோரிக்கையை வைப்பது, பதிலளிக்கும் நிலையில் இல்லாத ஒருவருக்கான வேண்டுகோள் ஆகும். என் கால்நடைகளைப் பாருங்கள்! போதிய தீவனம் இல்லாமல் எலும்பும் தோலுமாக உள்ளன. மேர்வான் விரும்பினால் அவற்றை எடுத்துச் செல்லச் சொல்லுங்கள். மேலும், அவரை இங்கு வந்து அனைத்து விஷயங்களையும் நிர்வகிக்கக் கூறுங்கள். என்னிடம் இப்போது எதுவும் மிஞ்சவில்லை. நான் வெறும் எலும்புக்கூடாக இருக்கிறேன்.

மக்கள் என்னை நாடி வந்து, அவர்களின் சொந்த நலனுக்காக, எனக்கு சேவை செய்கிறார்கள், என்னிடம் பிரார்த்தனை செய்கிறார்கள், என்னை பரமாத்மா (கடவுள்) என்று அழைக்கிறார்கள். நானும் அவ்வாறு செய்ய அனுமதிக்கிறேன். சிலர் என்னைப் புகழ்ந்தாலும், பிறர் என்னை வெறுத்து துன்புறுத்தினாலும், நான் இருவருக்கும் உரியவன். சிலர் என்னை அச்சுறுத்துவதற்கு முயற்சித்தால் நான் கவலைப்பட மாட்டேன், புகழ்ச்சியால் நான் மகிழ்ச்சியடையவும் மாட்டேன்.

என்னால் எந்த பயனும் இல்லாததால் மேர்வானிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன் என்று சொல்லுங்கள்.

மேர்வான் அவரது நற்குணங்களால், நற்செயல்களால் கடவுள் நிலையை அடைந்துள்ளார்! "நான் ஒரு பிச்சைக்காரன், மேர்வான் என்னிடம் மீண்டும் பணம் கேட்கக்கூடாது" என்று பாபாவின் மூன்று தூதர்களை வணங்கி மஹாராஜ் அழுதார்.

ஆதி சீனியர், விஷ்ணு, டாக்கே மூவரும் மெஹராபாத் திரும்பி வந்து உபாஸனி மஹாராஜ் கூறியதை, பாபாவிற்குத் தெரிவித்தனர். மெஹர் பாபா

22ஆம் நாள், விஷ்ணுவை, தனியாக மஹாராஜிடம் அனுப்பி வைத்தார்: "**பாபா அக்டோபர் 18 அன்று மேற்கு நோக்கிப் பயணம் செய்யத் திட்டமிட்டிருந்தார், ஆனால், உங்கள் சிரமங்கள் காரணமாக, அவர் இப்போது பயணத்தை ஒத்திவைக்கிறார்**."

இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜ் இருவரும், இதுபோன்ற விசித்திரமான செய்திகளை, தொடர்ந்து பரிமாறிக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்களின் செயல்களின் பின்னால் மறைக்கப்பட்ட அர்த்தத்தை எவராலும் உண்மையில் புரிந்து கொள்ள முடியாது.

காலம் இதை இப்படி விளக்கியது: "உபாஸனி மஹாராஜ் ஒரு சத்குரு; மெஹர் பாபா அவதார புருஷர்; இந்தப் பரிமாற்றத்தின் அடிப்படையிலான மர்மத்தை அவர்களால் மட்டுமே ஆழங்காண முடிந்தது. சாதாரண மக்களுக்கு, இது அவர்களின் தெய்வீக லீலை அல்லது திருவிளையாடல், வரையறுக்கப்பட்ட மனதிற்கு அப்பாற்பட்டது. சாதாரண மனித மனம் அவர்களின் செயல்களின் முக்கியத்துவத்தை எப்படி அளவிட முடியும்? எல்லையற்ற அறிவைப் புரிந்துகொள்ள அறிவுத்திறனால் முடியாது. இது தெய்வீக விளையாட்டின் ஓர் அங்கமாகும், இது இரண்டு பரிபூரண ஞானிகளால் விளையாடப்பட்டது; இதன் மூலமாக அவர்களின் ஆன்மீகப் பணியின் சுமை குறைந்துவிட்டது."

மெஹர் பாபா, குறிப்பாக, ருஸ்தம், ஃபிரீனியின் குழந்தைகளை மிகவும் நேசித்தார். 1934 செப்டம்பர் 25 அன்று, ஆதி சீனியர், கலிங்கட் ஆகியோருடன் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்காக நாசிக் சென்றார். ஃப்ரீனி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவர்களை சரியாக கவனிக்க இயலவில்லை, மேலும் ருஸ்தம் அவரது வணிகத்திலும், பாபாவின் வேலை மற்றும் சொத்துக்களுடனான தனது கடமைகளிலும் மும்முரமாக இருந்தார். குழந்தைகளை கவனித்துக் கொள்வதை உறுதி செய்யவும், அவர்களின் நலனைக் காணவும் பாபா, பெரும்பாலும் நாசிக் செல்வது வழக்கம். அன்றே அவர் மெஹராபாத் திரும்பி வந்தார்.

பாபாவின் இந்த நாசிக் வருகைக்கு முன்னதாகவே, தீனா தலாட்டியிடம் உணவு தயார் செய்யுமாறு ராம்ஜூ மூலமாகத் தகவல் தரப்பட்டது. இந்தச் செய்தி தீனாவிற்கு ஆச்சரியமாக இல்லை, ஏனெனில், முந்தைய நாள் இரவு, பாபா நாசிக் வந்துவிட்டதாக அவர் கனவு கண்டார்.

முன்ஷி ரஹீமின் வளர்ப்பு மகன் உஸ்மான், பல வருடங்களுக்குப் பிறகு பாபாவைப் பார்க்க அன்று மாலை, திடீரென வந்தார். பாபா திரும்பி வந்த செய்தியை அவர் எப்படி அறிந்து கொண்டார் என வினவியபோது, அவரும், பாபாவை முந்தைய இரவில் கனவில் கண்டதாகவும், பாபா நாசிக்கில் இருப்பதன் அடையாளமாக அதை எடுத்துக் கொண்டதாகவும் கூறினார்.

செப்டம்பர் 26 ஆம் நாள், மெஹர் பாபா, ஆதி சீனியர், கலிங்கட், ஸெயிலர், ராம்ஜூ, ஸையத் ஸாஹேப் ஆகியோருடன் பாண்டு லேனா குகைகளுக்கு அருகில் அமைந்த ஓர் இடத்திற்கு உல்லாசப்பயணமாகச் சென்று, அன்றிரவு மெஹராபாத் திரும்பி வந்தார்.

செப்டம்பர் 27 அன்று, நாதிர் தஸ்தூர் (NADIR DASTUR) மெஹராபாத் வந்தார். ஒரு தனிப்பட்ட உரையாடலின் போது, பாபாவின் ஆலோசனைப்படி அவர் வியாபாரத்தில் பணத்தை இழந்துவிட்டதாகப் புகார் கூறினார், மேலும் அவரது நண்பர்கள் இப்போது மெஹர் பாபா மீதான தனது நெடுங்கால நம்பிக்கையைக் கேலி செய்கிறார்கள் என்றார். பாபா அவருக்கு நீண்ட நேரம் விளக்கினார்:

**நம்பிக்கையின் அர்த்தம் என்னவெனில், ஒருவர் எந்த சூழ்நிலையிலும் அசையாமல் இருப்பது; எதையும் தைரியமாக நிறைவேற்றக்கூடிய வழிமுறையே நம்பிக்கை. உலக மக்கள் இயல்பாகவே தங்கள் குடும்பங்களைப் பற்றி கவலைப்படுகிறார்கள், ஆனால், உண்மையில், எல்லாம் ஒரு பெரிய பூஜ்ஜியமாகும். உங்கள் குடும்பத்துடனான தொடர்பு எவ்வளவு காலம் நீடிக்கும்? உங்கள் முன்னோர்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும், அதுபோல, நீங்கள் உயிரைத் துறந்த பின்னர், உங்கள் குடும்ப உறுப்பினர்கள் உங்களை எவ்வளவு காலம் நினைவில் கொள்வார்கள்? அவர்கள் அனைத்தையும் மறந்து விடுவார்கள். எவரும் எதையும் நினைவில் கொள்ளவோ அல்லது உங்களுடன் எந்தத் தொடர்பையும் கொண்டிருக்கவோ போவதில்லை. இந்தத் தற்போதைய உறவுகள் அனைத்தும் தற்காலிகமானவை; அவை நிரந்தரமானவை அல்லது நித்தியமானவை அல்ல.**

**சில பணப் பிரச்சினைகள் காரணமாக, உங்கள் குடும்பத்தைப் பற்றி இப்போது கவலைப்படுகிறீர்கள். ஒருவேளை நிலைமை எல்லாம் சீராகி, நாளை உங்களிடம் லட்சக்கணக்கில் பணம் வருவதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் அனைவரும் அப்போது நிம்மதியாக வாழ்வீர்கள். நீங்கள் விரும்பும் நகைகள் மற்றும் பலவற்றை சேகரிப்பீர்கள். ஆனால் அதற்குப் பின்னர் என்ன? எதுவும் இல்லை! உயிரைத் துறக்கும் போது, எல்லாம் முடிகிறது! எல்லாம் பயனற்றதாகிவிடுகிறது! அர்த்தமற்றதாகிறது! எனவே, எங்களைப் போன்ற குருநாதர்கள், தொலைதூர இறுதி இலக்கை எங்கள் முன்னால் பார்க்கிறோம், ஏனெனில் அது மட்டுமே நிரந்தரமானது, நித்தியமானது. இந்த மேலோட்டமான சிரமங்கள் அனைத்திலும் நாங்கள் கவனம் செலுத்துவதில்லை.**

**நீங்கள் எனக்குரியவர். உங்களுக்கு என் மீது நம்பிக்கை இருக்கிறது. நான் உங்களுக்கு வழங்கிய அறிவுரைப்படி செய்ததன் மூலம் நீங்கள் பணத்தை இழந்தீர்கள். உங்கள் பணத்தை நான் தொலைத்துவிட்டேன் என்று மக்கள் சொன்னால், அது உண்மைதான்.**

**ஆனால் ஏன்? மக்களை எவ்வாறு குறை கூற முடியும்? நீங்கள் நிச்சயமாக என்னுடையவர், ஏனெனில் நீங்கள் என் மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள், உங்கள் சுய கஷ்டங்களை மீறி, நீங்கள் என் பாதங்களைத் திடமாகப் பற்றியுள்ளீர்கள். ஆனால் இதை மக்கள் எப்படி நம்புவார்கள்? அவர்களுக்கு எப்படி அத்தகைய நம்பிக்கை இருக்க முடியும்? எனவே, அவர்கள் என் முதுகுக்குப் பின்னால், எனக்கு எதிராகப் பேசினால், அமைதியாகக் கேளுங்கள். அதில் என்ன உண்மை இருக்கமுடியும்?**

**கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்; ஆனால் அது அவருடைய நிலையை மாற்றியதா? இல்லை. உண்மை என்னவெனில், பரிபூரணமான ஒருவர் எந்தப் பேரழிவைக் கண்டும் மனம் தளருவதில்லை. உலகம் முழுவதும் அவருக்கு எதிராகப் பேசினாலும் அவர், அவருடைய பரிபூரண நிலையிலே இருக்கிறார். எவரேனும் சூரியனை நோக்கி அம்புகளை வீசினால் அது எவ்வாறு பாதிக்கப்படும்? அம்புகள் மீண்டும் எழும்பி வந்து அதை வீசியவர்கள் மீது மழை போல பொழியும். அவதார புருஷர் அல்லது சத்குரு சூரியனைப் போன்றவர். அவதூறுகளின் அம்புகளால் அவர்கள் எந்த வகையிலும் ஈர்க்கப்படவோ அல்லது பாதிக்கப்படவோ போவதில்லை. ஆனால் நான் ஏன் இதனால் பாதிக்கப்படுகிறேன் என்றால், நான் உங்களுக்காக உணர்கிறேன், ஏனெனில் நீங்கள் துன்புறுத்தப்படுகிறீர்கள்.**

**இதை நினைவில் கொள்ளுங்கள்: நான் நேசிப்பவர்கள், ஏதாவது நிகழ்வில் எப்படியேனும் அவதிப்படுகிறார்கள். ஆனால் இதன் அறநெறி என்னவெனில், உங்கள் கைகளில் பணம் வந்த உடனே, உங்கள் கடன்களைத் தீர்த்துவிடுங்கள். நீங்கள் ஒரு வியாபாரத்தில் ஈடுபட்டீர்கள், அதில் இழப்பை சந்தித்தீர்கள், ஏனெனில் நான் உங்களை அதில் ஈடுபடச் சொன்னேன். இப்போது எல்லாம் சரியாகிவிடும், உங்களுக்கு மகிழ்ச்சியான நேரங்கள் திரும்பி வரும் வகையில் திறவுகோலைத் திருப்புவேன். ஆனால் உங்கள் நடவடிக்கைகளில் எப்போதும் நேர்மையாக இருங்கள். நேர்மையற்றவராக இருந்து வாழ்க்கையை அனுபவிப்பதை விடவும் நேர்மையாக இருந்து துன்பப்படுவது நல்லது.**

நாதிர் தஸ்தூர் பாபாவின் வார்த்தைகளால் ஆறுதல் அடைந்து சமரச உணர்வுடன் வெளியேறினார்.

1934 அக்டோபர் மாதத்தில், திரைப்பட திட்டம் மற்றும் பாபாவின் மேற்கத்திய நாடுகளின் பயணம் குறித்து அமெரிக்கா, ஐரோப்பா, இந்திய நாடுகளுக்கு இடையே தொலைத்தந்திகள் தொடர்ந்து அங்கும் இங்கும் விரைந்தன. ஒரு கட்டத்தில், வால்மொல்லர் உடல்நலமின்றி இருந்ததால், திரைக்கதைகளை எழுதுவதில் கால தாமதமானது. இருப்பினும், திரைப்படங்கள் இதர முக்கிய துறைகளில் முன்னேறி வந்தன. அவ்வேளையில் பாபாவிற்குப் பல தொலைத்தந்திகள் வந்த வண்ணம் இருந்தன: "பிறர் மீது நம்பிக்கையையும், கலை, முதலீடு குறித்த முடிவுகளில் உறுதியையும் உருவாக்குவதற்கு, இப்போது

நீங்கள் இங்கு இருக்க வேண்டியது அவசியம்." மற்றுமொருவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "முடிவுகளைத் துரிதப்படுத்த உங்கள் வருகை இன்றியமையாதது." எனவே மெஹர் பாபா கடந்த மூன்று ஆண்டுகளில் எட்டாவது முறையாக மேற்கு நோக்கிப் பயணம் செய்யத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

அக்டோபர் 23 அன்று நோரினாவிடமிருந்து மெஹர் பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தி வந்தது: "நீங்கள் இப்போது இங்கு வருவது ஒவ்வொரு விதத்திலும் உதவியாக இருக்கும்." திட்டமிட்ட திரைப்படங்கள் ஒருபோதும் தயாரிக்கப்படவில்லை என்றாலும், ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் வாழும் அன்பர்களை நோக்கிச் செல்ல, இது ஒரு சிறந்த வெளிப்புற நோக்கமாகச் செயல்பட்டன.

பாபாவின் செயலாளர் சாஞ்சி கடிதங்களை நிர்வகிக்கும் பணியில் மும்முரமாக இருந்தார். ஒரு முறை, பாபா இந்தக் குறுகிய கவிதையை மின்டாவிற்கு அனுப்பினார், அவருக்கு ஷாலிமார் என்ற செல்லப்பெயர் பாபாவால் சூட்டப்பட்டது:

என்ன அழகான முகம், என்ன சௌந்தரியம், இரக்க குணம்,
ஷாலிமாருக்கு என்ன அழகான வழிகளும் முறைகளும்,
அன்பு நிறைந்த இதயம், மனமெல்லாம் இலவங்கம்,
என்ன அருமையான மணிப்புறா இந்த ஷாலிமார்!
வாருங்கள், இதயத்தை ஒருபோதும் இழக்காதீர்!
உங்கள் பங்கை சிறப்பாகச் செய்யுங்கள் என் ஷாலிமார்!

1934 அக்டோபர் 22ஆம் நாள் பாபா அக்பர் அச்சகத்திற்கு விஜயம் செய்தார். அங்கு இருந்த வேளையில், 'மனம் துன்பத்தின் அனைத்து அம்சங்களையும் எவ்வாறு மாற்றுகிறது' என்பதை விளக்கினார்; அவரைப் பின்பற்றும், உடல் ரீதியாகத் துன்பப்படும் இரண்டு பெண் உறுப்பினர்களின் உதாரணத்தை எடுத்துரைத்தார்:

**ஒரு பெண்மணி வயதானவர், ஆனால் மந்தமானவர். அவரது மனம், ஆசைகள் மற்றும் பலவீனங்களால் நிரம்பி இருந்தது. பல நோய்களால் - உலகிலுள்ள ஒவ்வொரு நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புகார் கூறுகிறார்!**

**அவருக்கு இந்தப் பிரச்சினை, அந்தப் பிரச்சினை என்று பல பிரச்சினை! அவருடைய உடல் வியாதிகள் அனைத்தும் அப்படியே ஒரே நேரத்தில் மறைந்து விடவேண்டும் என்று விரும்புகிறார். அவர் சாதாரண நேரத்தில் நன்றாக இருக்கும்போது கூட, ஆயிரமாயிரம் வியாதிகளைக் கற்பனை செய்கிறார், இவற்றில் ஒன்று அல்லது மற்றொன்று அவருக்கு இருப்பதாக நம்புகிறார். அவர் தொடர்ந்து தன் மூளைக்கு வேலை கொடுத்து, இடைவிடாமல் கவலைப்படுகிறார். அவருக்கு வயதானதால் பலவீனமான**

**நிலையில் இது உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது, தேவையில்லாமல் அவதிப்படுகிறார்.**

**இதற்கு நேர் மாறாக வேறொரு பெண்மணி, நோயால் உடல்நலம் பாதிக்கப்பட்டு, முழு உடலையும் அதன் பிடியில் வைத்திருப்பதோடு, அது சிதைந்துபோய் மிகவும் சிரமப்பட்டார். இருந்தாலும் அவர் இதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதாமல், கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் இருக்கிறார். அவர் அறிவுறுத்தியபடி பரிகாரங்களைச் செய்து படிப்படியாக முன்னேறி வருகிறார்.**

**சுருக்கமாகச் சொன்னால், இவர் உண்மையாக பாதிக்கப்பட்டவர், ஆனால் சற்றும் கவலைப்படாமல் அதை லேசாக எடுத்துக்கொள்வதால், அவர் அனுபவித்த துன்பங்கள் அனைத்தையும் கடந்து, மகிழ்ச்சியாக இருக்கிறார். முதலில் கூறிய அந்த வயதான பெண்மணி, அவரது பலவீனங்களை, எறும்புப்புற்று ஒன்றை, பெரிய குன்றென எடுத்துக்கொள்வது போல், இல்லாத ஒன்றிற்காக அவதிப்படுகிறார். இது நீங்கள் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொள்ளும் விதத்தைப் பொறுத்தது!**

**இதேபோல், உங்களுடன் நெருங்கிய ஒருவர் இறந்துவிட்டால், அதைப் பற்றி கவலைப்படாமல் இருக்கும் தருவாயில், அது உங்களை பாதிக்காமல், வழக்கம் போல மகிழ்ச்சியாக இருக்கச் செய்கிறது. மாறாக அதை மனதில் சுமந்து, தேவையில்லாமல் அழுது புலம்பினால் மகிழ்ச்சியை இழக்கச் செய்கிறது.**

மெஹர் பாபாவின் இந்திய பெண் பக்தை ஒருவர் 1934 அக்டோபர் 28ஆம் நாள் மெஹராபாத் வந்தார். கடவுளைக் காணும் ஆர்வத்தில் தனது கணவருடன் உடலுறவு கொள்வதை நிறுத்த விரும்புவதாக, பாபாவின் முன்னிலையில் பகிரங்கமாகத் தெரிவித்தார். ஆனால் அதை அவரது கணவர் விரும்பவில்லை.

அவரை ஆறுதல்படுத்திய பாபா, **“உங்கள் ஆன்மீக லட்சியம் மற்றும் கடவுளை நேசிக்க விரும்புவதன் காரணமாக, நீங்கள் உடலுறவில் ஈடுபட விரும்பாவிட்டாலும் உங்கள் கணவரை அன்புடனும் பாசத்துடனும் நடத்த வேண்டியது அவசியம். பாலியல் ஆசைகள் இல்லாமல் இருப்பது நல்லது, ஆனால் கடமை குறித்த கேள்வி எழும்போது, உங்கள் ஆர்வத்தில் கொஞ்சம் தியாகம் செய்து உங்கள் கணவரை மகிழ்விக்க வேண்டும்.**

**“உங்கள் மனதைக் கடவுளிடம் அர்ப்பணித்து, பின்னர் உடலை உங்கள் கணவருக்குக் கொடுங்கள். நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. நான் அறிவுறுத்தியபடிச் செய்ய முயற்சி செய்யுங்கள். இறை அனுபவம் அடைவதற்கு முன்னர், இந்த மீதமுள்ள மனப்படிவங்களை முடிக்க வேண்டும். மீராபாயின் தியாகத்தையும் அவர் அடைந்த கஷ்டங்களையும் நினைவில் கொள்ளுங்கள்.”**

மீரா, மெஹர் பாபாவின் பிரியமான புனித ஆத்மாக்களில் ஒருவராக இருந்தார், அவரது கதை இந்தியாவில் மிகவும் பிரபலமானது:

மீரா, 1498ஆம் ஆண்டில் ராஜஸ்தானின் குர்கி (KURKHI) கிராமத்தில் பிறந்தார். அவர் ராஜஸ்தான் மன்னர் ஒருவரை மணந்தார், ஆனால் கிருஷ்ணா மீது அதீத பக்தி கொண்டிருந்ததால் கணவருடன் பற்றில்லாமல், (மீராவின் கணவர் இளம் வயதில் ஒரு போரில் கொல்லப்பட்டார்) அவரது ராஜ்யத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்தார். அவர் கிருஷ்ணரின் பெருமைகளைப் பாடல்களாக இயற்றி, பின்னர் அரண்மனையை விட்டு வெளியேறி, பொது மக்கள் மத்தியில் பஜனை பாடி வந்தார். புதிய மன்னரும் குடும்பத்தினரும் அதை அவமானமாகக் கருதினாலும் மீரா அதைப் பொருட்படுத்தவில்லை.

ஒருமுறை, மிகவும் வருத்தமடைந்த அரச குடும்பத்தினர், அவரைக் கொல்ல சதி செய்து, மீராவின் பூக்கூடையில் ஒரு நாகப்பாம்பை வைத்தனர். கிருஷ்ணரின் சிலைக்கு மாலை அணிவிக்க அவர் கூடையைத் திறந்தபோது, பாம்பு பூக்களாக மாறியது. தொடர்ந்து அவரைக் கொலை செய்வதற்கான மற்றொரு முயற்சியில், அவர்கள் விஷம் கலந்த கண்ணாடி கோப்பையைக் கொடுத்தனர். கிருஷ்ணரின் நாமத்தைக் கூறி அவர் அதைப் பருகிய வேளையில் விஷம் அமிர்தமாக மாறியது. இதனால், மீரா சாதாரணமானவர் அல்ல, கிருஷ்ணரால் பாதுகாக்கப்பட்டார் என்பதை அவர்கள் உணரத் தொடங்கினர்.

ஆண்டுகள் கடந்தன, மீராவின் பக்தி அவரை அன்பின் உச்சத்திற்கு எடுத்துச் சென்றது. ஒரு நாள் அவர் அரண்மனையை விட்டு வெளியேறி, கிருஷ்ணரின் புகழைப் பாடிக்கொண்டே, கிருஷ்ணர் மற்றும் கோபிகளின் புனித இடமான பிருந்தாவனை நோக்கி வெகுதூரம் நடந்து சென்று, அங்கேயே இருந்தார். அவர் திரும்பி வராததால், மன்னரும் அவரைத் தேடி அலைந்தார். இறுதியாக கிருஷ்ணரின் காட்சியைக் கண்ட பரவசத்தில் மீரா இருந்ததைப் பார்த்தார். அவர் ஓர் உண்மையான துறவி என்பதைப் பலரும் உணர்ந்து அவர் அருகிலேயே இருந்தனர், ராஜ குடும்பத்தினரும் இறுதியில் அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

1934 அக்டோபர் 18ஆம் தேதி மெஹர் பாபா இங்கிலாந்து நாட்டுக்குப் புறப்படவிருந்தார், ஆனால் அவர் தனது பயணத்தை ஒத்திவைத்து ஒரு மாதத்திற்குப் பிறகு கப்பலில் பதிவு செய்தார். பாபா, நவம்பர் 1ஆம் நாள் காலை, ஆதி சீனியர், ஜால்பாய், சாஞ்சி, விஷ்ணு ஆகியோருடன் பூனா சென்றார். ஆதி காரை ஓட்டிச் செல்ல, பாபா முன் இருக்கையில் அவரருகில் அமர்ந்திருந்தார். ஏறக்குறைய 40 மைல் சென்றதும் பலத்த மழை பெய்தது; லோனி (LONI) அருகே கார் ஈரமான, மென்மையாக இருந்த சாலையின் குறுக்கே சறுக்கி, கட்டுப்பாட்டை இழந்து கொண்டிருந்தபோது, பாபா, ஆதியின் இடது கையை ஸ்டீயரிங் மீது மூன்று முறை அழுத்தினார். ஒரு சிறிய கல் குடிசைக்கு முன்னால் இருந்த பெரிய மரக் குவியலிலிருந்து பத்து அடி தூரத்தில் கார் திடீரென நின்றது. பாபாவின் தலையீட்டால் கடுமையான விபத்து தவிர்க்கப்பட்டது. பாபா, குறிப்பாக, தனது தாயார் ஷிரீன்மாயை சந்திக்க பூனா

சென்றுகொண்டிருந்தார். ஆதி ஜூனியரை தன்னுடன் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல பாபா விரும்பினார், ஆனால் மெமோ அதை அனுமதிக்கவில்லை.

தனது குடும்பத்தினரை சந்தித்த பிறகு, பாபா, அப்துல்லா இல்லத்திற்கு விஜயம் செய்தார்; அங்கு அவரும் மண்டலியும் இரவு உணவை முடித்துவிட்டு, அதே இரவில் மெஹராபாத் திரும்பினர்; கொட்டும் மழையில் மிக மெதுவாகக் காரை ஓட்டிச் சென்றார் ஆதி.

மெஹராபாத்தில், பாபா நவம்பர் 4ஆம் நாள், அவர் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் வேளையில், மெஹராபாத் குடியிருப்பை நடத்துவது குறித்து ஒரு கூட்டத்தை நடத்தினார். அவர் பெண்களை நாசிக் நகருக்கு மாற்றுவதைப் பற்றியும், மண்டலி உறுப்பினர்களைக் கலைப்பது குறித்தும் கருத்துத் தெரிவித்தார். ஆனால் இறுதியில் அவர் திரும்பும் வரை அனைவரையும் மெஹராபாத்தில் தங்க வைக்க முடிவு செய்தார். பீலாமாய் பெண்மணிகளையும், பாதிரி, பெண்டு இருவரும் ஆண்களையும், குல்மாய் இரண்டு குழுவிற்கும் இடையே ஒரு நடுவராகவும் செயல்படும் பொறுப்பு வழங்கப்பட்டது.


சத்குரு உபாஸனி மஹாராஜின் முக்கிய பெண் சீடர்களில் ஒருவரான துர்காபாயின் மகன் ரகுநாத் கர்மார்க்கர், அன்று பாபாவை சந்தித்து, மஹாராஜ் பல மதிப்புமிக்க பொருட்களை, கோதாவரிமாயின் பெயருக்கு மாற்றிவிட்டதாகவும், அவர் தொடர்ந்து தனது ஆசிரமத்தில் தங்க, கோதாவரிமாயின் சட்டபூர்வமான ‘கணவருக்கு’ ஏழு அல்லது எட்டாயிரம் ரூபாய்களைக் கொடுத்ததாகவும் தெரிவித்தார். ரகுநாத், இயல்பில் பணிவுள்ளவராக இருந்தாலும், அவரிடம் (மஹாராஜிடம்) ‘காமம்’ வெளிப்பட்டதாக மஹாராஜே கூறியதைக் கேட்டு குழப்பமடைந்தார். **‘கோதாவரிமாயை தனது வாரிசாகக் குறிப்பிடும் மஹாராஜின் போக்குக்கு எதிராகவும், பிறர் அவரை தரிசனம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டதற்கும், ஆதரவாகவோ அல்லது மஹாராஜின் செயல் முறைக்கு எதிராகவோ தான் இல்லை’** என்று பாபா அவருடைய நிலைமையை விளக்கினார். மஹாராஜ் ஓர் அறக்கட்டளையை உருவாக்கி, தனது சொத்தை அதற்கு மாற்றுமாறு அவர் பரிந்துரைத்தார். தொடர்ந்து, பாபா இதைக் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:

**கோப்பர்காவ்மில் உருவான ஒரு குழுவிற்கு உதவுவதன் மூலம், மஹாராஜுக்கு தீங்கு விளைவிக்கும் ஆர்வத்தில், சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு துர்காபாய், மஹாராஜை விட்டு விலகிச் சென்ற செய்தி வேதனையளிக்கிறது. பொறாமை, பேராசை ஆகியவற்றால் விளையும் ஆத்திரத்தின் தாங்கொணா துயரை, 25 ஆண்டுகால சகவாசத்தால் வெல்ல முடியவில்லை. தனது சொந்த மகனை,**

**மஹாராஜுக்கு எதிராகச் செல்ல, அவர் தன் இயல்பின் தூண்டுதலுக்கு அடிபணிந்தார்**.

இதற்கிடையில் உபாஸனி மஹாராஜ் தொடர்பான அவதூறு வழக்கு தொடர்ந்தது, அக்டோபர் 26ஆம் நாள் அஹமதுநகர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அவர் அழைக்கப்பட்டார். அரசு தரப்பு சாட்சி ஆஜராகத் தவறியதால், நடவடிக்கைகள் மறுநாள் வரை ஒத்திவைக்கப்பட்டன. மஹாராஜ் அன்றிரவு குஷ்ரு குவாட்டர்ஸில் தங்கினார். கோதாவரிமாய் 28ஆம் நாள் சாட்சியங்களை வழங்கிய பின்பு, மஹாராஜ் கன்னியாஸ்த்ரீகளுடன் ஸாக்கோரிக்குச் சென்றார்.

ஐரோப்பாவிற்குப் புறப்படுவதற்கு முன்பு, மெஹர் பாபா அவரது பக்தர்களுக்கு 'மெஹர் கெஸட்' (THE MEHER GAZETTE) இதழில் வெளியிட பின்வரும் செய்தியை வழங்கினார்: **"அன்பில் ஒன்றிணைந்தவர்களுக்கு, பிரிந்து வாழ்வது குறித்து எதுவும் தெரியாது. நான், நீங்கள் எங்கிருந்தாலும், எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்!"**



உபாஸனி மஹாராஜ் கன்னியாக்களுடன்



கலி:ஃபோர்னியா 1934
நிற்பவர்கள்: ஜால், மின்டா, பாபா, நோரினா, நதீன், எலிஸபெத், ரானோ,
அமர்ந்திருப்பவர்: ஜீன் அட்ரியல், நான்னி, ருவானோ



ருவானோ, பாபா, ஆதி சீனியர்



ஜீன், டார்வின் ஷா

# எட்டாவது மேற்கத்திய பயணம் – லண்டன், நியூ யார்க் & கலி:ஃபோர்னியா

**(Eighth Western Trip - London, New York & California)**

1934 நவம்பர் 15ஆம் நாள், மெஹர் பாபா மும்பையிலிருந்து 'எஸ்.எஸ். டுஸ்கானியா' (SS TUSCANIA) கப்பலில் ஐரோப்பாவை நோக்கி பயணம் செய்தார். அவருடன் இம்முறை காக்கா, சாஞ்சி, ஆதி சீனியர், ஜால்பாய் ஆகியோர் இருந்தனர். ருஸ்தம் அவர்களை, கப்பல்மேடையில் சந்தித்து வழியனுப்பினார். பின்பு, பாபா மீண்டும் ருஸ்தத்தை அமெரிக்காவிற்கு அழைப்பதாகக் கூறினார்.

பாபா, காக்கா இருவரும் ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டனர்; ஆதி, ஜால்பாய், சாஞ்சி மூவரும் பக்கத்து அறையை ஆக்கிரமித்தனர். கப்பலின் சமையல்காரர் மற்றும் பணிப்பெண்களின் உதவியுடன் பாபாவின் உணவு அவரது அறையில் வழங்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது. ஆனால் பயணத்தின் போது, பல்வேறு உணவு வகைகளுக்காக, பாபா, மண்டலியில் ஒருவரை, தொடர்ந்து சமையல்காரரிடம் அனுப்பத் தொடங்கினார். எதோ காரணத்திற்காக, பாபா, மண்டலியைத் திரும்பத் திரும்ப அனுப்பினார். இதுபோன்ற இடைவிடாத கோரிக்கைகள் சமையல்காரருக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

கடைசியாக, சிறிது நேரம் கழித்து, பாபா சமையல்காரருடன் என்ன செய்கிறார் என்பதை விளக்கினார்: "**என்னைப் பற்றிய ஒரு விஷயத்தில் ஒரு நபரின் கவனத்தைத் திருப்பும் வேளையில் அது, அவரது எண்ணங்களை என் உலகளாவிய மனதோடு இணைக்க உதவுகிறது; இதன் மூலமாக, ஆன்மீக ரீதியில் பணிபுரியும் ஒரு வாய்ப்பு உருவாக்கப்படுகிறது - அந்த நபரின் ஆழ்மன உடலில் உறைந்திருக்கும் தகாத ஆசைகளைச் செயலிழக்கச் செய்து, அவை பௌதீக உடல் வழியாக வெளிப்படாமல் தடுத்து நிறுத்துவதோடு, அந்த மனிதருக்கு என்னைத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் எனக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது - அவர் இப்படி ஒரு வாய்ப்பை இந்த வாழ்க்கையில் மீண்டும் அடைய மாட்டார்.**"

கப்பலில் இருந்தபோது, பாபா ஒவ்வொரு நாளும் ஆதி அல்லது ஜால்பாயுடன் பிங்-பாங் (PING-PONG) விளையாடினார், மேலும் அவர் கப்பல் தளத்தில் நடக்கச் சென்றார். அவர் சில நேரங்களில் மண்டலியுடன் சீட்டு விளையாடினார், ஆனால் பணத்திற்கு பதிலாக அவர்கள் கண்ணாடி மணிகள் அல்லது வேறு எதையேனும் பயன்படுத்தி விளையாடினர்.

அவர்கள் நவம்பர் 23 அன்று மாலை ஒன்பது மணிக்கு 'போட் ஸெட்' (PORT SAID) துறைமுகம் வந்து, ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றனர். அனைவரும் திரும்பி வந்து, கப்பல் பயணத்தைத் தொடர்ந்ததும், ஒரு கடுமையான புயல்

மையம் கொண்டது; ஆதி, காக்கா, சாஞ்சி மூவரும் உடல்நலமின்றி அவதிப்பட்டனர்.

மெஹர் பாபாவும் மண்டலியும் 1934 நவம்பர் 28ஆம் நாள் மார்ஸெல்லஸ் வந்து, ரயிலில் பாரிஸ் வழியாக லண்டன் விக்டோரியா டெர்மினஸுக்கு மறுநாள் வந்து சேர்ந்தனர். நவம்பர் 29ஆம் நாள் 'கென்ட் மாகாணத்தின், டியூக், டச்சஸ் இவர்களின்' (DUKE AND DUCHESS OF KENT) திருமண நாள், நகரம் முழுவதும் கோலாகலமாக விழாக்கள் நடைபெற்றன. பாபா குழுவுடன் தங்கும் இடத்திற்குச் செல்லும் வேளையில், ஹைஜியா ஹவுஸ் (HYGEIA HOUSE), பக்கிங்ஹாம் அரண்மனை (BUCKINGGHAM PALACE), ஹைட் பார்க் (HYDE PARK) மற்றும் வெஸ்ட் எண்ட் (WEST END) ஆகிய இடங்களைக் கடந்து சென்று, அணிவகுப்பைப் பார்த்தது மட்டுமல்லாமல், பாபா ஏராளமான மக்களைத் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பாகவும் அமைந்தது.

லண்டனில் ஆங்கில அன்பர்கள் மீண்டும் பாபாவின் மத்தியில் ஐந்து நாட்கள் தங்கி, மகிழ்ச்சியாக இருந்தனர்.

மெஹர் பாபா ஒரு சில புதிய நபர்களை சந்தித்தாலும், பெரும்பாலான நேரத்தை அவருக்குப் பிரியமானவர்கள் வாழ்வை அர்ப்பணம் செய்ய ஆயத்தமாக இருக்கும் அனைத்து அன்பர்களுடன் செலவிட்டார். மாலை நேரங்களில், பாபா திரைப்படத்திற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். (ஒரு சந்தர்ப்பத்தில், அவர் 'தி அயர்ன் டியூக்' - THE IRON DUKE - திரைப்படத்தைப் பார்க்கச் சென்றார்.) ஹைஜியா ஹவுஸில் கீழ் மாடியில் அமைந்த மண்டபத்தில் இசைத்தட்டு (PHONOGRAPH) பதிவுகளும் இசைக்கப்பட்டன.

மெஹர் பாபா முக்கியமாக, தனது அமெரிக்க பயணத்தை ஏற்பாடு செய்வதில் ஆர்வமாக இருந்தார். நவம்பர் 30 அன்று பாபா, மண்டலி அனைவரின் அமெரிக்க பயணத்திற்கான வீஸாக்கள் (VISAS) வந்ததும் அட்லாண்டிக் வழியாக நியூயார்க், அதைத் தொடர்ந்து ரயிலில் கலிஃபோர்னியாவிற்குப் பயணம் செய்யும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இதன் காரணமாக, புதிய நபர்களை சந்திப்பதற்கோ அல்லது நேர்காணல்களை வழங்கவோ நேரம் இல்லாத சூழ்நிலை. ஆனால் 1934 டிசம்பர் 1 அன்று 'ஸர்கிள் எடிட்டோரியல் கமிட்டி' (CIRCLE EDITORIAL COMMITTEE) அலுவலகத்தில் ஏறக்குறைய அவரது 70 அன்பர்கள் மற்றும் ஆர்வமுள்ள பலருடன் ஒரு சிறப்பான வரவேற்பு நடைபெற்றது.

வால்டர், ஹெடி மெர்டென்ஸ் ஆகியோர் பாபாவை சந்திக்க சுவிட்சர்லாந்திலிருந்து வந்தனர். வால்டர் அறிவுபூர்வமான விஷயங்களில் ஆர்வமாக இருந்தார்; ஒரு சந்தர்ப்பத்தில், வால்டர், சார்லஸ் பர்டம் இருவரும் பாபாவிடம் சில கேள்விகளை முன்வைத்தனர்.

அறிவாற்றலைப் பற்றி, பாபா இவ்வாறு விளக்கினார்: "**சாதாரணமாக, மனிதனை வலிமையாக்க அனைத்து ஊட்டச்சத்துக்களும் வழங்கப்படும்**

**வேளையில், அறியாமையால், அவன் உண்ணும் உணவு அவனை வலிமையுறச் செய்யாமல், உடலில் கொழுப்பை நிரப்புகின்றன! இந்த உவமையில் உலகின் அனைத்து படிப்பினைகளும் அடங்கி உள்ளன. குறைபாடு என்னவெனில் இதயத்தைப் பற்றிய அறிவு."**

அப்போது அவர்களில் ஒருவர், "பொறாமை என்றால் என்ன?" என வினவினார்.

**"பொறாமை இதயத்தின் வறுமையிலிருந்து வெளிப்படுவது, அடிப்படையில் பொறாமை சுயநலமானது"** என்று பாபா எழுத்துப்பலகையில் தெரிவித்தார்.

"காமத்திற்கும் காதலுக்கும் (அன்பு) என்ன வித்தியாசம்?"

**"காமம் என்பது சுய இன்பத்திற்கான விருப்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அன்பு என்பது பிறரை மகிழ்விப்பதற்கான ஆர்வம் ."**

"மனிதனுக்குத் தேவையானது என்ன என்பதைக் குறித்த உங்கள் கருத்து?"

**"அன்பின் மூலம் இறை உணர்வை அடைவது."**

"உங்களை நெருக்கமாகப் பின்பற்றுபவர்களிடமிருந்து உங்களுக்கு என்ன தேவை?"

**"என்னுடைய அறிவுறுத்தல்களை உண்மையுடன் பின்பற்றி, ஒரே இறுதி இலக்கான - அன்பின் மூலம் இறை உணர்வை அடைவது."**

"ஒருவர் எப்படி அன்பை அதிகரிக்க முடியும்?"

**"உங்களின் சுய துன்பங்களுக்கு பதிலாக, பிறரின் துன்பங்கள் மற்றும் துயரங்களைப் பற்றி அதிகம் சிந்திப்பதன் மூலம். இதுதான் குறுகிய வழி."**

"ஒரு பொருள்முதல்வாதியாக இருப்பதைக் காட்டிலும் ஒருவர் இலட்சியவாதியாக இருக்க வேண்டுமா?"

**"வெறுமனே ஓர் இலட்சியவாதியாக இருப்பது நம்பிக்கையற்றது, வீணானது! வெறுமனே ஒரு பொருள்முதல்வாதியாக இருப்பதும் அப்படித்தான். இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலையை உருவாக்குவது அவசியம்"** என்று பாபா கூறி முடித்தார்.

1934, டிசம்பர் 3 அன்று நியூயார்க் நகரிலிருந்து நோரினாவின் தொலைத்தந்தி வந்தது; திரைப்பட திட்டங்கள் குறித்து பாபாவின் வருகை அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்தினார். டிசம்பர் 4ஆம் நாள், குயன்டின், பாபாவை சந்தித்து, மார்கரெட்டுக்கு 'ஆவிகளின் நடனங்களில்' (SPIRIT DANCES) உதவுவதாக உறுதியளித்தார். முதலில், மார்கரெட், குயன்டின் இருவரும் இந்த நடனக் காட்சிகளை பாபாவின் முன்னிலையில் நடத்த விரும்பினர். ஆனால் இப்போது குயன்டின் வேறொரு பணியைத் தொடங்க இருந்ததால், அவர் அதைச் செய்ய முடியுமா என்ற சூழ்நிலை உருவானது.

இதற்கிடையில், ருஸ்தம், ஆதி ஜூனியர், பெஹராம் ஆகியோர் அமெரிக்காவில் பாபாவுடன் இணையும் எண்ணத்தில் இந்தியாவில்

காத்திருந்தனர். ஆனால் இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிதி பற்றாக்குறை காரணமாக இன்னும் நிச்சயமற்றதாகவே இருந்தன.

மெஹர் பாபா மண்டலியுடன் **1934**, டிசம்பர் **5** காலையில் லண்டன் நகரிலிருந்து புறப்பட்டார். கிட்டி, வால்டர், ஹெடி, டிலியா, மார்கரெட், டாம் ஷார்ப்லி, அனிதா, ரோஸ்மண்ட் வைஸ் மற்றும் வில், மேரி பேக்கெட் ஆகியோரை உள்ளடக்கிய பல நெருங்கியவர்களுடன் அவர்கள் ரயிலில் சவுத்தாம்ப்டனுக்குப் (SOUTHAMPTON) பயணம் செய்தனர்; அங்கிருந்து பாபா எஸ்.எஸ். மெஜஸ்டிக் (SS MAJESTIC) கப்பலில் அமெரிக்காவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். கப்பல்தளத்தில், ஆங்கில அன்பர்கள் அத்தகைய ஒரு குறுகிய வருகைக்குப் பிறகு, தங்கள் பிரியமான பாபா புறப்படுவதைக் கண்டு சோகமாக இருந்தனர். கண்ணீர் வழிய, விடைபெறும் வேளையில் அவர்களின் கண்கள் வீங்கி, அதீத துயரத்தில் இருப்பவர்கள் போல தோற்றமளித்தனர்.

அந்த நேரத்தில் 'மெஜஸ்டிக்' உலகின் மிகப்பெரிய கப்பலாக இருந்தது, மேலும் பாபாவிற்கு 'பி' தளத்தில் குளியல் அறையுடன் கூடிய அருமையான சிறப்பு அறை ஒன்று வழங்கப்பட்டது. மீண்டும், காக்கா, பாபாவின் அறையைப் பகிர்ந்து கொண்டார்; ஜால்பாய், சாஞ்சி, ஆதி சீனியர் ஆகியோர் 'ஈ' தளத்தில் ஒரு சிறிய அறையில் இருந்தனர். ஏற்கனவே திட்டமிட்டபடி, ரானோ, நான்னி, ருவானோ ஆகியோர் 'ஷெயர்பர்க்' (CHERBOURG) நகரில் கப்பலில் அவர்களுடன் இணைந்தனர் . நான்னி, ரானோ ஆகியோரின் அறைக்கு பாபா ஒப்புதல் அளித்தார், ஆனால் ருவானோவிற்கு ஒதுக்கப்பட்ட அறையை அவர் விரும்பவில்லை. அதை மாற்றுமாறு கேட்க அவர் ரானோவை இரண்டு முறை அனுப்பினார். இறுதியாக மேற்பார்வையாளர் இணங்கி, ருவானோவிற்கு ஒரு சிறந்த அறையை வழங்கினார்.

மெஹர் பாபா மூன்று பெண்மணிகளையும் (ரானோ, நான்னி, ருவானோ) **'மூவர்'** (THE TRIO) என்று குறிப்பிட்டார்; **அவர்கள் இயேசுவின் காலத்தில் அவருடனும் எகிப்தில் முந்தைய வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததை வெளிப்படுத்தினார். ருவானோ, நான்னி இருவரும் சகோதரர் - சகோதரியாக இருந்தனர் என்றும், ரானோ ருவானோவின் மகனாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்**. (அதற்குப் பிறகு, ரானோ நகைச்சுவையாக ருவானோவை "பாப்பி" -PAPPY - என்று அழைக்கத் தொடங்கினார்.)

வானிலை கடும் குளிராக இருந்தது, பாபா கப்பலின் தளத்தில் அபூர்வமாகச் சென்றார். அவர் ஒவ்வொரு நாளும் ரானோவுடன் பிங்-பாங் விளையாடினார். அவர்கள் ஒருபோதும் வெற்றி, தோல்வி என்ற கணிப்பீட்டு முறையில் விளையாடாமல் பந்தை முன்னும் பின்னுமாக அடித்தனர்; ரானோ

பாபாவின் தொடர்ச்சியான வேகப்பந்துகளுக்கு ஈடுகொடுத்து விளையாட முயன்றார்.

ஓர் இரவு, கடல் பயணத்தின் போது, ரானோ அவரது வாழ்வில் திருமணம் செய்துகொள்ள விரும்பிய அந்த நேரத்தை நினைவு கூர்ந்தார். அடுத்த நாள் அவர் பாபாவுடன் இது குறித்து பேசினார், “நான் விரும்பியபடி எனது வாழ்க்கையில் வெவ்வேறு சூழ்நிலைகள் ஏன் மாறவில்லை என்பது எனக்கு இப்போது புரிகிறது. நான் விரும்பியபடி அனைத்தும் நடந்திருந்தால், நான் ஒருபோதும் உங்களிடம் வந்திருக்க மாட்டேன்” என்று கூறினார்.

ரானோ கூறியதை பாபா ஆமோதித்து, “**ஆமாம், நீங்கள் கூறுவது உண்மை. எல்லாமே எனது கையில் உள்ளது, நீங்கள் என்னிடம் வருவீர்கள் என்று நான் உங்களுக்காக இதுபோன்ற சூழ்நிலைகளை உருவாக்கினேன். நீங்கள் என்னிடம் வர வேண்டியிருந்தது!**”

அமெரிக்காவிற்கு அருகில், பாபா நியூயார்க் நகரை நெருங்கும் போது, எந்த வெளிநாட்டினரையும் சந்திக்க விரும்பவில்லை என்று தெளிவுபட கூறினார் - புதிய நபர்களின் சந்திப்பும் இல்லை, நேரடி பேட்டி, விளம்பரம் எதுவும் இல்லை. ஆனால் நோரினா ஏற்கனவே குருநாதரின் வருகையைப் பற்றி சிலருக்குத் தெரிவித்திருந்தார்; மேலும் அதை விளம்பரப்படுத்தவும் விரும்பினார். ஆனால், பாபா அனைத்தையும் ரத்து செய்யும்படி அவருக்கு, அறிவுறுத்தினார். 1934 டிசம்பர் 12 அன்று நியூயார்க் நகரை கப்பல் வந்தடைந்த போது, செய்தித்தாள் நிருபர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களின் கூட்டம் பாபாவின் அறைக்குள் படையெடுக்க முயன்றது; பாபா அவர்களை சந்திக்க மாட்டார் என்று கூறி திருப்பி அனுப்புமாறு சாஞ்சிக்கு அறிவுறுத்தினார். வெளிநாட்டுப் பயணங்களின் போது வழக்கமாக நடந்தது போல், இம்முறையும் அவர்கள் இறங்குவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. வெகு நேரம் காத்திருந்த பின்பு, பத்திரிகை நிருபர்கள் கலைந்து சென்றனர். ஒரு செய்தித்தாள் கட்டுரை பாபாவை கம்பளி கோட், ஸ்வெட்டர், தொப்பி அணிந்து, வெள்ளி குமிழ் கொண்ட கோல் ஒன்றை கையில் ஏந்தியிருப்பது போல சித்தரித்தது. குடிவரவு அதிகாரிகள் அவரைப் பேச வைக்க முயன்றனர், ஆனால் பாபா புன்னகைத்து, அவரது செயலாளர் சாஞ்சியை அவருக்காகப் பேச அனுமதித்தார்."

மெஹர் பாபாவின் முந்தைய இரண்டு அமெரிக்க வருகைகள் குறித்து, குடிவரவு அதிகாரிகளிடம் கூறப்பட்டது; மேலும் அவர் அமெரிக்காவில் நுழைந்து 60 நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். பாபாவும் மண்டலியும் தேவையற்ற கேள்விகளுக்கு உட்படுத்தாமல் நேரடியாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். சுங்கப் பகுதியை விட்டு வெளியேறிய பிறகு, பாபாவை நோரினா, நதீன், எலிஸபெத், மின்டா, கிரஹாம் பெல்ஸ், ஸ்டோக்ஸ் ஆகியோர் வரவேற்றனர். ஸ்டோக்ஸ் பாபாவை மீண்டும் தனது வீட்டில் தங்குமாறு அழைத்திருந்தார், ஆனால் மண்டலியைத் தங்கவைக்கும் அசௌகரியங்கள்

குறித்த காரணங்களுக்காக, நோரினா, பாபாவை 525, லெக்ஸிங்டன் அவென்யூவில் (LEXINGTON AVENUE) அமைந்த ஷெல்டன் ஹோட்டலில் (SHELTON HOTEL) தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தார். ரானோவும் நான்னியும் தங்கள் குடும்பத்துடன் தங்கினர்.

மெஹர் பாபா தனிப்பட்ட நேரடி சந்திப்புகளை ரத்து செய்த போதிலும், நியூயார்க் நகரின் 'ஸ்கெனக்டடி'யைச் (SCHENECTADY) சேர்ந்த டார்வின் & ஜீன் ஷா (DARWIN & JEANNE SHAW) என்ற இளம் தம்பதியினர் பாபாவை சந்திக்க மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். பல ஆண்டுகளாக, டார்வின் ஸைரஸ் ஷா (DARWIN CYRUS SHAW) ஓர் உண்மையான இறை நாட்டம் மிக்கவராகவும், மதம், தத்துவம், ஆன்மீகவாதம் பயிலும் மாணவராகவும் இருந்த நாளிலிருந்தே வாழ்க்கையின் மர்மத்திற்கு, தொடர்ந்து விடையைத் தேடிக்கொண்டிருந்தார். டார்வின், ஜீன் இருவரும் இயேசுவோடு நெருங்கிய தொடர்பை உணர்ந்தார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக விரைவில் நிகழும் என்று டார்வின் வலுவான உணர்வுகளைக் கொண்டிருந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், 1932 வசந்த காலத்தில், ஸ்ரீ மெஹர் பாபா அமெரிக்காவிற்கு வருவதாகவும், அவருடைய சீடர்களால் சிறந்த ஆன்மீக ஆளுமை மிக்கவர் என்று கருதப்படுவதாகவும் செய்தித்தாளில் படித்தபோது அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அவர் எதிர்பார்ப்பது மெஹர் பாபாவாக இருக்கலாம் என்று டார்வின் உணர்ந்தார். 1932ஆம் ஆண்டில் வேறொரு செய்தித்தாள் கட்டுரை, மெஹர் பாபா அமெரிக்காவிற்கு வந்துவிட்டதாகவும், ஹார்மனுக்கு அருகிலுள்ள ஒரு ரிட்ரீட்டில் சுமார் பத்து நாட்கள் தங்கியிருப்பதாகவும் அறிவித்தது.

இந்த நேரத்தில், 'மெஹர் பாபா, மறுபடியும் உலகில் திரும்பி வந்த கிறிஸ்து' என்று டார்வின் உணர்ந்தார். அவர் உள்ளளவில் பாபாவை அணுகிய தருணத்தில், பாபா உண்மையில் அவருடைய வருகையை ஆத்ம சக்தி வழியாக, தெளிவுற உணரச்செய்தார். மெஹர் பாபாவைப் பற்றிய அவரது உணர்வுகள் மேலும் வலுவடையத் தொடங்கின; அவர் தனது பணியை விட்டுவிட்டு பாபாவைத் தேடி உடனடியாகச் செல்ல வேண்டும் என்று உணர்ந்தார். இருப்பினும், அவர் பகுத்தறிவு சிந்தனையால் தனது உணர்வுகளை மீற அனுமதித்தார். பாபா பத்து நாட்கள் அங்கு இருப்பதால், விரைவில் வரும் விடுமுறை வரை, சில நாட்கள் காத்திருக்கலாம் என்று அவர் நினைத்தார்.

எனவே, விடுமுறை நாள் வார இறுதியில், டார்வின், அவரது பக்கத்து வீட்டு நண்பர்களில் ஒருவரான டொனால்ட் ஹாலோவே (DONALD HOLLOWAY) என்பவருடன், 130 மைல் தொலைவில் அமைந்த ஹார்மன் ரிட்ரீட்டுக்குச் சென்றார். அவர்கள் ரிட்ரீட்டை வந்தடைந்ததும், பாபா அவரது பணியை விரைவில் முடித்துவிட்டு கலிஃபோர்னியாவிற்குப் புறப்பட்டுவிட்டார் என்பதை அறிந்த டார்வினுக்கு இது ஆழ்ந்த ஏமாற்றமாக இருந்தது. இருப்பினும், மெஹர் பாபா 'அன்போடு நிலைகொண்டிருப்பது குறித்த உணர்வு இன்னும் தெளிவாகத் தெரிந்தது. பாபாவைப் பின்பற்றுபவர்களில் சிலர், ஜோஸஃபின்

கிரபாவ், அவரது தாயார் மேரி ஆன்டின், மிலோ ஷட்டக், அனிதா டி காரோ, ஹோவர்ட் இன்சஸ் மற்றும் கிரேஸ் மான் ஆகியோர் அவர்களை அன்புடன் வரவேற்றனர். பாபாவிற்குத் தெரிவிக்க விரும்புகிறீர்களா என்று ஜோஸஃபின், டார்வினிடம் கேட்டபோது அவரும் அவ்வாறே செய்தார்; ஒரு கடிதத்தில் தனது இதயத்தைக் கொட்டி, பாபாவின் சேவையில் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். டார்வின் உடனடியாக அதை அஞ்சல் செய்து, இரவு உணவிற்காக அமர்ந்தார். உணவின் நடுவிலேயே, பாபா கடிதத்திற்கு பதிலளிப்பதை உணரத் தொடங்கினார். டார்வின் "மெஹர் பாபாவின் 'தெள்ளத்தெளிவான அன்பு இதயத்தில் பொங்கிவழிவது போல்' உணர்ந்தார்... என் கடிதத்தில் உள்ள ஒவ்வொன்றிற்கும் பதிலளித்தார்." டார்வினின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. பாபாவைப் பார்க்க முடியவில்லை என்ற ஆழ்ந்த வருத்தத்தில் இருந்ததாகத் தெரிந்த போதிலும், பாபாவைப் பின்பற்றுபவர்களைக் கண்டுகொண்டதில் டார்வின் மகிழ்ச்சியடைந்தார், மேலும் அவர் குருநாதரை நேரடியாக சந்திக்கும் ஏக்கத்தில் இருந்தார்.

அதைத் தொடர்ந்து, 1934ஆம் ஆண்டில், டார்வின், ஜீன் ஷா இருவருக்கும் (அப்போது அவர்களுக்கு வயது 26) நோரினாவிடமிருந்து தொலைத்தந்தி ஒன்று வந்தது. மெஹர் பாபா நியூயார்க் நகரத்திற்குத் திரும்ப வருவதாகவும், அவர்களுக்கு டிசம்பர் 12 அன்று ஹோட்டலில் பாபாவை சந்திக்கும் வாய்ப்பை வழங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது, உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சியான சந்தர்ப்பமாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தேவையான அனைத்தையும் செய்து, டார்வின் பாபாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தார்.

டார்வின், ஜீன் இருவரும் டிசம்பர் 12 அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, 170 மைல் தொலைவில் அமைந்த மன்ஹாட்டனுக்குப் புறப்படத் தயாரானார்கள். ஆனால் அவர்கள் வீட்டுக்கதவைத் திறந்தபோது, அதில் தொங்கவிடப்பட்டிருந்த தொலைத்தந்தியைக் கண்டனர்: "உங்கள் சந்திப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 13ஆம் நாள் வியாழக்கிழமை நடக்கவிருக்கும் வரவேற்பு நிகழ்ச்சியில் நீங்கள் பாபாவைப் பார்க்கலாம்." அதிர்ச்சியடைந்த அவர்கள் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்தனர். பின்பு டார்வின் தொலைத்தந்தியை, துண்டுதுண்டாகக் கிழித்தெறிந்தார்; அவர்கள் எப்படியும் நியூயார்க் நகரத்திற்குச் செல்ல முடிவு செய்தனர், ஹோட்டல் நுழைவாயிலில் மெஹர் பாபாவை ஒரு கண நேரமேனும் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையில் இருவரும் புறப்பட்டனர்.

பாபா வருவதற்கு சற்று முன்னர் அவர்கள் ஷெல்டன் ஹோட்டலுக்கு வந்தனர். நோரினா உள்ளே நுழைந்த அவர்களைப் பார்த்து, "என் அன்புள்ளங்களே, நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? எனது தொலைத்தந்தி உங்களை வந்துசேரவில்லையா?" என்று வினவினார்.

"ஆமாம்," என்று பதிலளித்து அவர்கள், "ஆனால் நாங்கள் நேரடி பேட்டிக்காக வரவில்லை. பாபா இந்த இடத்தைக் கடந்து செல்லும்போது

அவரைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இங்கே இருக்கிறோம்" என்றனர்.

நோரினா, "நான் வந்ததைத் தொடர்ந்து பாபா காரில் வருகிறார். அவர் எந்த நேரமும் இங்கே வருவார். ஒருவேளை அவர் வரும்போது ஒரு நிமிடம் உங்களை சந்திப்பார்" என்று கூறினார். அதேவேளையில் பாபா உள்ளே நுழைந்தார். குளிர்காலம், வெளியில் மிகவும் குளிராக இருந்தது, அவர் ஒரு நீண்ட மேல் கோட் மற்றும் தொப்பி ஒன்றை அணிந்திருந்தார். நிலைமையை விளக்க நோரினா விரைவாக பாபாவிடம் நடந்து சென்றார். பாபா, அவருக்காக ஏங்கித் தவிக்கும் இரண்டு ஆத்மாக்களைப் பார்த்து நோரினாவுடன் அவர்களின் அருகில் சென்றார்.

டார்வின், நீண்டகாலமாக அவர்கள் எதிர்நோக்கி இருந்த அன்பிற்குரியவருடனான இந்த முக்கியமான முதல் சந்திப்பை விவரித்தார்:

பாபா எங்கள் கண்களில் உற்று நோக்கி, எங்கள் கைகளைப் பற்றி பிடித்தபோது, நாங்கள் எப்படி உணர்ந்தோம் என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. அவர் கைகளைப் பற்றியது பல நூறு ஆண்டுகள் மற்றும் பல வாழ்க்கைக் காலங்களை நோக்கி விரைந்திருக்க வேண்டும் என்று நான் உணர்ந்தேன். அவரது அன்பின் தாக்கத்தின் முதல் விளைவாக ஆன்மீக உயர்நிலை, மகிழ்ச்சி மற்றும் ஆனந்தத்தின் சிறப்புமிக்க உணர்வு தென்பட்டது. நான் மிகையாக எடுத்துரைக்க மேலும் பல மேம்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி இருக்கலாம், ஆனால் அவை எதுவுமே உண்மையில் நாங்கள் எப்படி உணர்ந்தோம் என்பதை விவரிக்க போதுமானதாக இருக்காது.

அவருடைய கண்கள், தெய்வீக அன்பின் எல்லையற்ற குணங்களை நோக்கும் எங்கள் முதல் பார்வையாக இருந்தது. நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அவரது அழகு, வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாத அவரது அன்பின் இனிமை - அந்த ஆனந்தம், அனைத்தும் அவருடைய நிலையின் ஒளிர்விடும் அதிசயம். ஒருவர் அவரைப் பார்க்கும் முன்பே ஒரு கற்பனை வடிவம் கொடுக்க முடியவில்லை. அது எப்படி இருக்கும், அவர் எப்படியிருப்பார் என்று ஒருவர் மனத்திரையில் பார்க்க முடியவில்லை. அவர் அளவிறுதியற்ற கற்பனைக்கும் அப்பாற்பட்டவர்.

இந்தக் குறுகிய சந்திப்புக்குப் பிறகு, பாபா நோரினாவுடன் லிஃப்டை நோக்கி நடந்தார், டார்வின், ஜீன் இருவரும் வரவேற்பறையில் இருந்த நாற்காலிகளை நோக்கி நகர்ந்தனர்.

இந்த முதல் சந்திப்புக்கு முன்பு, டார்வின் அனுபவித்தது போல, பாபாவின் உள் அன்பின் உணர்வலைகளின் தாக்கத்தை ஜீன் அனுபவிக்கவில்லை, ஆதலால், அவர் பாபாவின் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியவில்லை. எப்படியேனும், இன்னுமொரு வாய்ப்பைப் பெறும் ஏக்கத்தால் தூண்டப்பட்டார். பாபாவைத் திரும்பிப் பார்த்ததும், அவர் ஆச்சரியப்படும் விதத்தில் பாபாவும் திரும்பி அவரை நேரடியாகப் பார்த்து, இரு கரங்களைக் குவித்து, சற்று தலை குனிந்தார். ஜீன் பார்த்த பார்வையை

ஒருவேளை பாபா விரும்பமாட்டாரோ என்ற எண்ணத்தில் அவர் விரைவில் பார்வையை விலக்கினார். ஆனால், அவர் தன்னையும் மீறி, மேலும் இரண்டு முறை பாபாவைப் பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை; ஒவ்வொரு முறையும், பாபா திரும்பி, கைகளைக் குவித்து அவரை வணங்கினார். பாபா தனது உள்ளார்ந்த எண்ணங்களை அறிந்திருப்பதை ஜீன் உணரத் தொடங்கினார், "பாபா உண்மையில் 'ஏதோ ஒன்றாக' இருக்க வேண்டும்!"

அன்றைய தினம், மெஹர் பாபா, நோரினா, கேப்ரியல் பாஸ்கல், கார்ல் வால்மொல்லர் ஆகியோருடன் திரைப்பட பணி தொடர்பான சந்திப்பு நடந்தது. இது குறித்து, கார்ல், கேப்ரியல் இருவருக்கும் இடையே உடன்பாடு ஒன்றை எட்டுவது கடினமாகத் தோன்றியது. முதன்மை திரைக்கதை எழுத்தாளரான கார்ல், காட்சிகள் நியூயார்க்கில் தயாரிக்கப்படுவதை விரும்பினார், ஆனால் இயக்குனர் கேப்ரியல் ஹாலிவுட்டைப் பரிந்துரைத்தார். கார்ல் வால்மொல்லரின் அலுவலகம் நியூயார்க்கில் இருந்தது; கேப்ரியல் பாஸ்கல் ஹாலிவுட்டில் இருந்தார்; எனவே, இருவருக்கும் இடையே முறுகல் நிலை உருவானது. இருவரின் வேறுபாடுகளை சரிசெய்து, ஒன்றாக வேலை செய்யவும் பாபா அறிவுறுத்தினார், **"நீங்கள் இருவரும் ஹாலிவுட்டில் என்னை சந்திக்க விரும்புகிறேன். நான் பின்பு ரயிலில் வருவேன்."** இருவரும் அவ்வாறே செய்ய சம்மதம் தெரிவித்தனர்.

ரானோ, நான்னி கெய்லியின் இல்லம் நியூயார்க் நகரில் இருந்தது. பாபா அவர்களை அங்கேயே இருக்குமாறு அறிவுறுத்தியிருந்தார், ஆனால் ஒவ்வொரு நாளும் காலையில் ஹோட்டலுக்கு வந்து, பாபாவிற்குக் காலை வணக்கம் சொல்லிய பின்பு, குடும்பத்தினருடன் முழு தினமும் அங்கு இருக்க வேண்டும். அவர்கள் முதல் நாள் பாபாவின் அறைக்குச் சென்றபோது, நதீன் டால்ஸ்டாய் வெளியில் காவல்புரிந்ததைக் கண்டனர். நதீன், இருவருக்கும் இதுவரை அறிமுகம் ஆகாததால், அவர்கள் உள்ளே நுழைவதைத் தடுத்தார். "நாங்கள் பாபாவுடன் கப்பலில் எட்டு நாட்கள் இருந்தோம். அவரைப் பார்ப்பதைத் தடுக்க நீங்கள் யார்? நாங்கள் இங்கே இருக்கிறோம் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று ரானோ பதிலளித்தார். நதீனும் அவ்வாறே செய்து, பின்னர் உள்ளே அனுமதித்தார்.

நான்னி தனது நான்கு வயது பேரன் ஆலிவரை பாபாவிடம் அழைத்து வர விரும்பினார், ஆனால் சிறுவனின் தாயார் அச்சத்தில் அதை அனுமதிக்கவில்லை. நான்னி, பாபாவிடம் இதைக் கூறியபோது, **"என்னுடனான உங்கள் தொடர்பு காரணமாக, உங்கள் முழுக் குடும்பமும் என்னுடன் இணைந்துள்ளது. எனவே, சிறுவனைப் பற்றி கவலைப்பட வேண்டாம்"** என்று உறுதியளித்தார்.

ஹோட்டல் வரவேற்பறையில் பாபாவை சந்தித்த பிறகு, டார்வினும் ஜீனும் அவரை மீண்டும் பார்க்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. பாபாவின்

அருகாமையில் இருப்பதை உணர்ந்த அவர்கள் வரவேற்பு அறையில் அமர்ந்து கொள்வதில் திருப்தி அடைந்தனர்.

மற்றுமொரு புதிய அறிமுகம், ஸ்கெனக்டடியைச் சேர்ந்த பெஸ்ஸி ஆலன் (BESSIE ALLEN) என்ற வயதான பெண்மணி ஒருவர், பாபாவைப் பார்க்க வந்தார். அவர் பாபாவுக்காக கேக் ஒன்றைத் தயார் செய்து எடுத்து வந்து, வரவேற்பறையில் டார்வின், ஜீன் ஷா அருகில் அமர்ந்தார்.

திரைப்பட தயாரிப்பில் ஈடுபட்டவர்களுடன் நடந்த சந்திப்பிற்குப் பிறகு, வேறு நேரடிப் பேட்டிகள் வேண்டாம் என பாபா தெரிவித்தார். எலிஸபெத்தை நோக்கி, மூன்று விரல்களைக் காட்டி, **“வரவேற்பறையில் மூன்று பேர் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களை அழைத்து வாருங்கள்”** என்று சைகையால் தெரிவித்தார்.

டார்வின், ஜீன், பெஸ்ஸி மூவரையும் எலிஸபெத் பாபாவின் அறைக்கு அழைத்து வந்தார். பாபாவின் முன்னிலையில் இருப்பதில் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் அவரது அழகைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டனர். பாபா அவரது நீண்ட தலைமுடியுடன் சத்ரா அணிந்து, படுக்கையில் அமர்ந்திருந்தார். ஜீன் அவரது சிறப்பு மிக்க அம்சங்களைக் கண்ட அதிர்ச்சியில், அறையில் இருந்த வேறு எவரையும் பார்க்கவில்லை. டார்வின் இவ்வாறு நினைவு கூர்ந்தார், "பாபா, விவரிக்க முடியாத அளவிற்கு அழகாக இருந்தார் என்பதுதான் எனது மனதில் பதிந்த முதல் எண்ணம். அப்போது எனக்கு இரண்டு எதிரெதிர் உணர்வுகள் தோன்றின: அவர் எந்த நேரத்திலும் இலகுவாக மிதக்கக் கூடிய ஓர் ஆவியைப் போலவும், மேலும் வலிமை வாய்ந்த கோபுரத்தின் அளவிடமுடியாத சக்தி வாய்ந்தவர் போலவும் தோன்றினார்."

மூவரும் பாபாவின் அருகில் அமர்ந்தனர் - பாபாவின் இடதுபுறம் ஜீன், அடுத்ததாக டார்வின், பாபாவின் வலதுபுறத்தில் பெஸ்ஸி. பாபாவுடனான நெருக்கத்தில் பெஸ்ஸி "இறுதியாக, எனது குருநாதரைக் கண்டுகொண்டேன்" என்று கூறி கைகளால் பாபாவை அரவணைத்தார்.

ஜீனும் அப்படியே செய்ய வேண்டுமென உணர்ந்தார், ஆனால் வெட்கம் அவரைத் தடுத்தது. திடீரென ஜீன் அழத் தொடங்கினார்; அவரால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பாபா, ஜீனின் மணிக்கட்டில் கையை வைத்த அந்த வேளையில் ‘ஏதோ மடை திறந்த வெள்ளமாய் பாய்ந்த குழாயைத் தடுத்து நிறுத்தியது போல்’ உடனடியாக, அவர் அழுகை நின்றதும் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்து காணப்பட்டார். டார்வின் பின்வருமாறு விவரித்தார்:

பாபா, ஜீனைக் கடந்து எனது கண்களில் மிகவும் ஆழமாக உற்று நோக்கினார்; அவர் அருகிலிருந்த ஒவ்வொன்றையும் ஆங்காங்கே நகர்த்தி, முன்னும் பின்னும் பார்த்தது போல் என்னை ஆழமாக நோக்கினார் என்று எனக்குத் தெரியும். அந்தத் தோற்றம் அழகாகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும் இருந்தது. ஒரு ‘நீதிபதியின் முன் வருவது’ போன்ற உணர்வு அல்லது அவர் நம்மை அளவிடுவது போன்ற எண்ணம் ஒருபோதும் இருந்ததில்லை. அவர்

முன்னிலையில் நாங்கள் பல்வேறு வகையான மனிதர்கள் என்று உணர்ந்தோம். எப்படியோ அவர் நம்மை ‘நான்’ என்ற உணர்வு நிலையிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அவரது அன்பில் நாங்கள் நிம்மதியாக இருந்தோம். பாபாவைப் பற்றிய அற்புதமான விஷயம் என்னவெனில், நீங்கள் என்னவாக இருந்தாலும், நீங்கள் என்னவாக இருந்திருந்தாலும், அவர் உங்களை உறுதியுடன், நித்தியமாக நேசிக்கிறார் என்பதுதான் உண்மை.

மெஹர் பாபா, டார்வின், ஜீன் இருவரிடமும், “**நான் எப்பொழுதும் உங்களுக்கு உதவுகிறேன்**” என்று கூறினார். உடனே, நோரினா பக்கம் திரும்பி, பாபா, “**நாளை மறுநாள் என்னைப் பார்க்க அவர்களுக்கு ஒரு நேரத்தை ஒதுக்குங்கள்**” என்று சைகையால் தெரிவித்தார்.

நோரினா, "ஆனால் நேரம் இல்லை பாபா" என்றார்.

“**பரவாயில்லை; ஒன்றைக் கண்டு கொள்ளுங்கள்**.”

பாபா அவர்களைத் தழுவி விடையளித்தார். டார்வின், ஜீன் ஷா இருவரையும் இப்போது நன்கு அறிந்த நதீன் வெளியே இருந்தார். பாபா, ஜீனின் ‘கண்ணீர் மதகுகளை" தடுத்து வைத்திருந்தார். ஆனால் அவர் அறையைவிட்டு வெளியே வந்ததும், அவை மறுபடியும் திறக்கப்பட்டு, கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

அன்று மாலை, பாபாவும் அவரது நெருங்கிய குழுவும், அந்த நேரத்தில் உலகின் மிகப்பெரிய திரைப்பட அரங்கான ‘ரேடியோ சிட்டி மியூசிக்’ ஹாலுக்குச் (RADIO CITY MUSIC HALL) சென்றனர். காலநிலை கடுமையான குளிராக இருந்தது மட்டுமல்லாமல் பாபாவின் உடல்நிலையும் சரியாக இல்லை. அவர் ஹோட்டலுக்குத் திரும்பி வந்ததும் லேசான ஜுரத்தால் அவதிப்பட்டார். அந்நிலையிலும் அவர் ஏகாந்தவாசத்தில் இருக்க விரும்புவதாகத் தெரிவித்தார். பாபாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமாகவே இருந்தது.

பாபா முதலில் நியூயார்க்கில் நீண்ட நாட்கள் தங்கத் திட்டமிட்டிருந்தார், ஆனால் மோசமான வானிலை காரணமாக, போட் ஸெட்டிலிருந்து (PORT SAID) புறப்பட்ட பின்னர் அவரது கப்பல் தாமதமானதால், பாபா நியூயார்க்கில் மூன்று நாட்கள் மட்டுமே தங்க முடிந்தது. திரைப்பட திட்டங்களுடன் தொடர்புடைய நபர்களை அவர் சந்திக்க வேண்டியிருந்ததால், அவருக்குத் தனிப்பட்ட நேரடி பேட்டிகளை வழங்க வாய்ப்பில்லாமல் ஆயிற்று. அவர் மின்டாவிற்கு மட்டும் விதிவிலக்காக நேரத்தை ஒதுக்கினார். மின்டா சமீபத்தில் விவாகரத்து செய்து, தனது ஏழு வயது மகளை நியூயார்க்கிற்கு அழைத்து வந்து, பனாமாவிலிருந்து குடிபெயர்ந்த தனது முன்னாள் கணவர் ஹெர்பெர்ட்டுடன் இருக்கச் செய்தார். பாபா, ஹெர்பெர்ட் மற்றும் சிறுமியை சந்தித்தார், பின்பு மின்டாவை, குழுவுடன் கலிஃபோர்னியா வருமாறு அழைத்தார்.

ஆதி சீனியர் அவரது நாட்குறிப்பில், டிசம்பர் 13 அன்று இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "பாபா இரவு முழுவதும் உடல் நலம் குன்றி, உற்சாகமின்றி மந்தமான உணர்வு நிலையில் காணப்பட்டார். அத்துடன் கடுமையான தலை,

முதுகு வலியால் அவதிப்பட்டார். எனவே நோரினா ஏற்பாடு செய்ய விரும்பிய ஒவ்வொரு நேரடி சந்திப்பையும் மறுத்து வருகிறார்..." இரண்டு பொது வரவேற்புகள் நோரினாவால் திட்டமிடப்பட்டிருந்தன, ஆனால் உடல்நிலை காரணமாக ஒன்றை மட்டுமே நடத்த பாபா அனுமதித்தார். அந்த வரவேற்பு நிகழ்ச்சி 13ஆம் நாள் ஸ்டோக்ஸின் இல்லத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய 200 பேருக்கு பாபா தரிசனம் வழங்கினார்; ஒவ்வொருவரையும் ஒரு சிறிய அறையில் (ஸ்டோக்ஸின் தியான அறை) சந்தித்தார். வீட்டு மாடியில் அமைந்த நூலக அறையில் கூட்டம் ஒன்றுதிரண்டது. பச்சை நிற சோஃபா நாற்காலியில் அமர்ந்திருந்த பாபாவுடன் 'அமைதியாக இருக்க வேண்டும், கேள்விகளுக்கு அனுமதியில்லை, பேசவும் கூடாது' என்று மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மங்கலான, மென்மையான விளக்கு அறையை ஒளிரச் செய்தது. காலம் இதை இவ்வாறு பதிவு செய்தது, "பாபாவுடன் உரையாட யாருக்கும் வாய்ப்பு இல்லை, ஆனால் அவர் அனைவருடனும் உள்ளளவில் பேசினார், இது உண்மையான ஆன்மீகம். அன்பான பாபாவின் நேரடித் தொடர்பில் ஒருவர் வரும்போது, வார்த்தைகள் மற்றும் உரையாடல்களால் என்ன பயன்?"

டாக்டர் ஃப்ரடெரிக் கெட்னர் (DR. FREDERICK KETTNER), மிகவும் கற்றறிந்த மேதை, பிரபலமான தத்துவ பேராசிரியர், இதற்கு முன்னர் 1931ஆம் ஆண்டில் ஹார்மனில் பாபாவை சந்தித்த எழுத்தாளரும் ஆவார். இம்முறை, மெஹர் பாபாவை சந்திக்க வந்தபோது, அவருடைய உண்மையான நிலையை மிகவும் வலுவாக உணர்ந்து, பல நிமிடங்கள் அமைதியாக பாபாவின் அருகில் அமர்ந்து, இறைபோதையில் இருந்தவர் போல, பாபாவை முறைத்துப் பார்த்தார். அவர் தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் கண்டுகொள்ள முடியவில்லை, "நான் உங்களுடன் இந்தியாவிற்கு வர முடியுமா?" என்று கேட்டார்.

பாபா, அவரை அழைப்பது வரை காத்திருக்குமாறு அறிவுறுத்தினார். நிச்சயமாகத் தக்க நேரத்தில் அழைக்கப்படுவார் என்று எழுத்துப்பலகை மூலம் தெரிவித்தார். ஏமாற்றமடைந்த கெட்னரிடம், பாபா, **"உடலளவில் என்னிடம் வருவதை நினைக்காதீர்கள். ஆன்மீக ரீதியில் வாருங்கள்"** என்று உச்சரித்தார்.

அவர்கள் சிறிது நேரம் அமைதியாக, ஒன்றாக அமர்ந்திருந்தனர்; கெட்னர், பாபாவின் கையை தனது கையால் பற்றிக் கொண்டார். அப்போது பாபா, **"உண்மையாக இருப்பவை, தரப்படுவதும் பெறப்படுவதும் நிசப்தத்தில்தான்!"** என்று எடுத்துரைத்தார். அந்த மனிதரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதை அவரால் தடுக்க முடியவில்லை.

நோரினாவின் கணவர் ஜார்ஜஸ் மாட்சபெல்லி (GEORGES MATCHABELLI) அன்று வந்த மற்றுமொரு பார்வையாளர். அவரது நேர்காணல் இரண்டு நிமிடங்கள் மட்டுமே நீடித்திருந்தாலும், அது ஆழமான விளைவை ஏற்படுத்தியது; ஜார்ஜஸ் நோரினாவிடம், "நீங்கள் சொன்னது சரிதான். மெஹர் பாபா உண்மையானவர்!" என்று கூறினார். மூன்று மாதங்கள் கழித்து இளவரசர்

காலமானார். குருநாதர் முன்பு கூறியதுபோல, ஜார்ஜஸ் இறப்பதற்கு சற்று முன்பு, பாபாவைக் கிறிஸ்துவாகக் காணும் ஓர் அழகான அனுபவத்தை அடையப் பெற்றார்.

கேவின் ஆர்தர் (GAVIN ARTHUR) மீண்டும் பாபாவை நியூயார்க்கில் சந்தித்தார். நடிகை தல்லுலா பேங்க்ஹெட் (TALLULAH BANKHEAD) நியூயார்க்கில் இருந்த இந்த சந்தர்ப்பத்தில் பாபாவைப் பார்க்க ஸ்டோக்ஸ் இல்லத்திற்கு வந்தார், மறுநாள் அவரை மீண்டும் ஷெல்டன் ஹோட்டலில் (SHELTON HOTEL) சந்தித்தார். ஒரு பிரபல நிருபரும் விளம்பரதாரருமான ஹென்றி ஜேம்ஸ் ஃபோர்மன் (HENRY JONES FORMAN), அன்று பாபாவை ஷெல்டன் ஹோட்டலில் சந்திக்க நேர்ந்தது. ஃபோர்மன் திரைப்பட துறையில் பணிபுரிந்து வந்தார், மேலும், பாபா திரைப்பட திட்டத்தில் அவரது உதவியை விரும்பி, 'ஸர்கிள்' நிறுவனத்தின் (CIRCLE PRODUCTIONS) செயலாளராகப் பணியாற்றும்படிக் கேட்டுக் கொண்டதற்கு ஃபோர்மன் ஒப்புக்கொண்டார்.

டார்வின், ஜீன் ஷா இருவரும் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்து மெஹர் பாபாவின் அன்பான அரவணைப்பைப் பெற்றனர். ஆனால், அவர்கள் நூலகத்தில் அமர்ந்து, ஒவ்வொரு முறையும் அறையின் கதவைத் திறந்து மூடும் வேளையில் பாபாவை ஒரு கணம் பார்த்து மகிழ்ந்தனர். இவ்வாறு, ஏறக்குறைய இரண்டு மணி நேரம் பாபாவைப் பார்த்த இறை போதையில், இருவரும் விவரிக்க முடியாத ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தனர். நிகழ்ச்சி முடிந்த வேளையில், டார்வின், ஜீன் இருவரும் இறை போதையில் இருந்தனர்! இறுதியில் இருவரும் ஹோட்டலுக்குத் திரும்புவதை அறிந்த பாபா, அவர்களை நோக்கி புன்முறுவல் செய்து விடை அளித்தார்.

அடுத்த நாள், டிசம்பர் 14 பிற்பகல் வேளையில், டார்வின், ஜீன் ஷா இருவரும் டொனால்ட் ஹோலோவே, ஃபெய்த் வாலண்டைன் (FAITH VALENTINE) ஆகியோருடன் மீண்டும் பாபாவை ஷெல்டன் ஹோட்டலில் 20 நிமிடங்கள் சந்தித்தனர். இந்த சந்திப்பை டார்வின் இவ்வாறு விவரித்தார்:

நாங்கள் ஒரு பெரிய வரவேற்பு அறைக்குள் நுழைந்தோம். பாபா, ஒரு வெள்ளை சத்ரா மற்றும் பாத அணியை அணிந்து, மிகவும் அற்புதமான தோற்றத்தில் இருப்பதைக் கண்டோம். பாபாவின் செயலாளர் சாஞ்சி மட்டுமே அந்த அறையில் இருந்தார். இது சூரிய ஒளி நிரம்பிய பிற்பகலாக இருந்தாலும், அறையில் அசாதாரணமான, மென்மைத் தன்மை பாபாவிடமிருந்து வெளிப்பட்டதை உணர்ந்தேன். நான் அவரைப் பார்த்தபோது, இது ஏறக்குறைய ஒரு பிரகாசமான மகிமையாக மாறியது, தெய்வீக அன்பின் பிரகாசத்தில் நான் கிறிஸ்துவைக் கண்டேன்.

மெஹர் பாபா ஒரு பரந்த சோஃபாவில் அமர்ந்து, அவரின் இருபுறமும் எங்களை அமரும்படி சைகையால் தெரிவித்தார்.

மற்றுமொரு தம்பதியர் பாபாவின் இடதுபுறம் அமர்ந்திருந்ததால், ஜீனும் நானும் பாபாவின் வலது பக்கத்தில் அமர்ந்தோம். எப்படியேனும் நான் பாபாவுடன்

நெருங்க வேண்டும் என்ற உணர்வில், அவருக்கு முன்னால் நேரடியாக மண்டியிட்டு என் குதிகால் மீது அமர்ந்தேன். பாபா விவரிக்க முடியாத அளவிற்கு அழகாக இருந்தார், அவருடைய அன்பு எங்கள் ஆத்மசக்தியை வலுவுறச் செய்து, மகிழ்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆனந்தமான இனிமையால் எங்கள் இதயங்களை நிரப்பியது.

மெஹர் பாபாவுடனான முந்தைய தருணங்களைப் போலவே, அதிக உரையாடல் தேவையில்லை என்று எங்களுக்குத் தோன்றியது. நாங்கள் பாபாவுடனும், பாபா எங்களுடனும் மிகவும் ஆழமான அன்பின் பிணைப்பில் இணைந்திருந்தோம். பாபா, அவரது எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்: **"அன்பின் மூலமாக, நீங்கள் என்னுடைய உண்மையான ரூபத்தைக் காண்பீர்கள்."** அந்த நேரத்தில் நாங்கள் அவரைப் பார்த்ததை விட அற்புதமான வழியில் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

நாங்கள் அங்கு அமர்ந்திருந்த வேளையில், மனதில் எண்ணங்கள் அலைமோதின: "இது ஓர் அற்புதமான அனுபவம். இந்தத் தருணத்தின் நினைவுச் சின்னமாக, பாபா எங்களுக்கு சில சிறிய பொருட்களைக் கொடுத்தால் அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்?" உடனே, பாபா கையைத் தட்டி, சாஞ்சியிடம் ஒரு ரோஜா மலரை எடுத்துவரக் கூறி, பின்பு பாபா, ஒவ்வொரு ரோஜா இதழை 'நினைவுச் சின்னமாக வைத்திருக்குமாறு' கொடுத்தார்.

பாபா அவரது கால்களை மடித்து அமர்ந்து, பின்னர் ஒரு பாதத்தை உயர்த்தியபோது அது சில அங்குலங்கள் இடைவெளியில் என் முன்னால் இருந்தது. அவருடைய கண்களை உற்று நோக்கிய வண்ணம், இங்கே கிறிஸ்துவின் புனிதமான பாதம் என்பதை உணர்ந்த எனக்கு, புதிய ஏற்பாட்டின் காட்சிகள் மனதில் பளிச்சென தென்பட்டன, குறிப்பாக பேத்தனியின் மேரி, இயேசுவின் கால்களை விலைமதிப்பற்ற தைலத்தால் அபிஷேகம் செய்து, அவருடைய தலைமுடியால் துடைத்துக் கொண்ட காட்சியை நான் குறிப்பாக நினைவு கூர்ந்தேன். "கிறிஸ்துவின் புனிதமான பாதத்தை முத்தமிட எனக்கு எப்போது வாய்ப்பு கிடைக்கும்?" என்று நினைத்து, பாபாவின் காலில் முத்தமிடும் ஒரு தூண்டுதலை உணர்ந்தேன். அப்போது நான் முன்னால் குனிந்து அன்பாக அவர் காலில் முத்தமிட்டேன். சில நிமிடங்கள் கழித்து, பாபா என்னை அவரருகில் நெருங்கி அமரச் செய்தபோது, தாழ்த்திய எனது தலையை உயர்த்தி நெற்றியில் முத்தமிட்டார்.

டார்வின், ஜீன் ஷா இருவரும் 1952ஆம் வருடம் வரை மெஹர் பாபாவை மீண்டும் சந்திக்கவில்லை, ஆனால் ஏறக்குறைய அந்த இருபது ஆண்டுகளில் முழு நம்பிக்கையுடன் இருந்து கடிதங்கள் வழியாகத் தொடர்பில் இருந்தனர்.

நியூயார்க் நகரில் மூன்று நாட்களுக்குப் பின்னர், 1934, டிசம்பர் 14 அன்று, மெஹர் பாபா முழு தேசத்தையும் கடந்து, மேற்கு நோக்கி ரயிலில் கலிஃபோர்னியாவிற்குப் பயணம் செய்தார். மண்டலியில் சாஞ்சி, காக்கா, ஆதி

சீனியர், ஜால்பாய் இவர்களுடன் எலிஸபெத், நோரினா, மின்டா, நதீன், ரானோ, நான்னி, ருவானோ ஆகியோரும் இருந்தனர். லாஸ் ஏஞ்சல்ஸ் செல்லும் மூன்றரை நாள் பயணத்தின்போது, ஷிகாகோ - CHICAGO (அங்கே, 'ஸான்டா:ஃபே கலி:ஃபோர்னியா லிமிடெட்' - SANTA FE CALIFORNIA LIMITED - ரயிலுக்கு மாறினர்) மற்றும் கென்ஸாஸ் (KANSAS) நகரங்கள் வழியாகச் சென்றனர். பாபா, நேரடியாக ஹாலிவுட் (HOLYWOOD) சென்று, திரைப்பட கதை வசனங்களை மறுபரிசீலனை செய்து, கதை, கதாபாத்திரங்களின் விபரங்களைப் பற்றி விவாதிப்பதில் தீவிரமாக ஈடுபடத் திட்டமிட்டிருந்தார்.

பயணத்தின் போது, டிசம்பர் 17ஆம் நாள் நண்பகல், நியூ மெக்ஸிகோவின் (NEW MEXICO) அல்புகர்க்யூ (ALBUQUERQUE) நகரில் அரை மணி நேரம் ரயில் நிறுத்தப்பட்டது. பாபா தனது உள்ளங்கையில் **'இந்தியன்'** (INDIAN) என்று எழுதிக் காண்பித்தார். அவர் திடீரென ருவானோவுடன் ரயிலிலிருந்து இறங்கி வேகமாக நடந்தார்; மண்டலியும் அவர்களைப் பின்தொடர்ந்தனர். பாபா ரயில் நிலையத்திலிருந்து இரண்டு கட்டிடங்கள் கடந்து, ருவானோவுடன் கைகோர்த்துக் கொண்டு நடந்தார். பின்னர் அவர் ஒரு சிறிய வீதியில் நுழைந்து, திடீரென அங்குச் செல்லாமல் திரும்பி வந்து, அனைத்து மூலை முடுக்குகளும் அறிந்தவர் போல தொடர்ந்து நடந்தார். ருவானோவிற்கு அவர்கள் ரயிலைத் தவறவிடப் போகிறார்கள் என்ற அச்சம். பாபா சென்றடைந்த இடத்தில் இரண்டு பூர்வீக அமெரிக்க இந்தியர்கள் (அநேகமாக 'நவாஜோ' - NAVAJO என்று அழைக்கப்படுபவர்) ஒரு மூலையில் நிற்பதை கவனித்த பாபா அங்கேயே நின்றார். ஒருவர் சிறு சிறு அணிமணி பொருட்களை விற்றுக்கொண்டிருந்தார், பாபா அவரை நெருங்கியதும் அங்கிருந்து நடந்து சென்றார். இதர இந்தியர், உயரமான, பெரிய உருவம், தலையில் ஒரு சிவப்பு கைக்குட்டையைக் கட்டியிருந்தார். அவரும் பாபாவும் ஒருவரையொருவர் எதிர்கொண்டனர்; கண்கள் சந்தித்தன, ஆனால் வார்த்தைகள் எதுவும் பரிமாறப்படவில்லை. பின்பு பாபா விரைவாக ரயில் நிலையத்திற்குத் திரும்பி நடந்து சென்று ரயிலில் ஏறினார்.

ரயிலில் ஏறியதும், ருவானோ இந்த சம்பவத்தை சக தோழர்களுக்கு விவரித்தார்; பாபா, 'இந்தியன்' பற்றி கருத்து தெரிவிக்கையில், **"அவர் எனது முகவர்களில் ஒருவர்; அமெரிக்காவின் நேரடி முகவர்."** பாபா பின்னர் அவர் **'நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட முகவர்'** என்று விளக்கினார் - **'சூட்சும** (பிராண) **சக்திகளைக் கொண்ட நால்வரில் ஒருவர்.'**

டிசம்பர் 18 காலையில் ரயில் கலி:ஃபோர்னியா நகரின் பாஸடீனா (PASADENA, CALIFORNIA) ரயில் நிலையத்திற்கு வந்தது. ஜீன், மால்கம் ஸ்க்லோஸ் இருவரும் ரயில் நிலையத்தில் பாபாவையும், அவரது குழுவினரையும் வரவேற்றனர். அவர்கள் லாஸ் ஏஞ்சல்ஸில் (LOS ANGELES) 1840, கமினோ பாமெரோவில் (CAMINO PALMERO) ஒரு வாடகை வீட்டிற்குச் சென்றனர், அங்கு பாபா மூன்று வாரங்கள் தங்கியிருந்தார்.

அங்குச் சென்றதும், பாபா அனைவரையும் எச்சரித்தார், "**உணவுக்குத் தேவையானதை விட அதிகமாகச் செலவிடக்கூடாது, எனவே அதற்குத் தகுந்தாற்போல் ஏற்பாடு செய்யுங்கள்**." உணவகங்களில் உண்பதை விட, அவர்கள் ஒரு பெண்மணியை சமையல் செய்வதற்காக நியமித்தனர், ருவானோ பொருட்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பாபா ஒவ்வொரு நாளும் பசலைக் கீரையை விரும்பினார், ருவானோ அதை சமைப்பதற்கு முன்னர் அவரே சுத்தம் செய்தார்.

இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு, பாபா ஹாலிவுட்டுக்குத் திரும்பி வந்துள்ளார்; ஆனால் இப்போதைய வருகை ஒரு முழுமையான ரகசியமாக வைக்கப்பட்டது. அவர் தங்கும் இடத்தைப் பற்றிய விபரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்படவில்லை, ஏனெனில் இது அவரை சந்திக்க விரும்பும் பலரைத் தூண்டிவிட வாய்ப்பாக இருக்கும்; இதனால் அவருடைய திரைப்படம் தொடர்பான பணிகள் தடைபடும். பாபா தங்கியிருந்த போது, நோரினா, எலிஸபெத், வால்மொல்லர், மற்றும் ஓர் எழுத்தாளர் வில்லியம் ஏ. டிரேக் (WILLIAM A. DRAKE), பாஸ்கல், அவரது நண்பர் ஹைமன் எஸ். கிராஃப்ட் (HYMAN S. KRAFT), ஒரு தொடர் எழுத்தாளர், ஆகியோருடன் திரைப்படங்களைப் பற்றி விவாதிக்க தினசரி சந்திப்புகள் நிகழ்ந்தன.

படைப்பின் அடிப்படை, மறுபிறவி, ஆன்மீகத் தளங்கள், இறை உணர்வு ஆகியவற்றின் உட்பொருளை பாபா, விரிவாக விளக்கியது, புதுமையாக இருந்தது மட்டுமல்லாமல், எல்லாவற்றையும் பாபா விரும்பிய வழியில் சித்தரிப்பது அவர்களுக்குக் கடினமாகத் தோன்றியது.

மெஹர் பாபா, டிரேக், கிராஃப்ட் இருவரையும் விரும்பினார், கிராஃப்ட் 'நேர்மையும், நாணயமும் மிக்கவர்' என்று கருத்துத் தெரிவித்தார். ஆரம்பத்தில், கிராஃப்ட் பாபாவை சந்தேகக் கண்களால் பார்த்தாலும், அவர்களது முதல் சந்திப்பிலேயே அவர் அதிர்ந்து போனார்; பின்பு பாஸ்கலுக்கு இவ்வாறு விவரித்தார், "அந்த மனிதரிடமிருந்து ஒரு மாபெரும் சக்தி வெளிப்பட்டது!" பாபாவிடம் 'முடியாது' என்று சொல்வது சாத்தியமற்றது என்பதைக் கண்டறிந்த கிராஃப்ட், ஒரு திரைக்கதை எழுதுவதில் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டார். இரண்டு தனித்தனி திரைப்படக் கதைகள் இருந்தன: ஒன்று வால்மொல்லர் எழுதியது, 'திஸ் மேன் டேவிட்' (THIS MAN DAVID); மற்றொன்று கிராஃப்ட் மற்றும் அவரது தோழர்களால் எழுதப்பட்ட, 'ஹௌ இட் ஆல் ஹேப்பன்ட்' (HOW IT ALL HAPPENED). ஆன்மீகத் தளங்கள் மற்றும் இறை உணர்வு பற்றிய கருத்து, தற்போதைக்கு நிராகரிக்கப்பட்டது.

இந்தத் திரைப்பட பணியின் காரணமாக, ஜோஸஃப் வான் ஸ்டெர்ன்பெர்க் (JOSEPH VON STERNBERG) உட்பட பல்வேறு ஸ்டுடியோக்களைச் சேர்ந்த பல திரைப்பட நிர்வாகிகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் மேலாளர்களை பாபா சந்தித்தார். உலகப்பொருட்கள் சார்ந்த அம்சத்தை ஆன்மீகக் கருப்பொருளுடன் கலந்து ஊடுருவச் செய்வது போன்ற தெளிவான, சுவாரஸ்யமான விளக்கக்காட்சிகள், சாதாரண மக்களை வெகுவாக ஈர்க்கும். சம்பந்தப்பட்ட

பல்வேறு நபர்கள் தொழில் மற்றும் வியாபார நோக்கத்தில் மெஹர் பாபாவுடன் கண்டிப்பான நிபந்தனைகளை முன்வைக்க நினைத்தாலும், அவர்கள் அனைவரும் பாபாவின் தெய்வீக ஆளுமை மற்றும் ஆன்மீக ஒளியால் ஆழமாக ஈர்க்கப்பட்டனர். அவர்கள் பாபாவை, தங்கள் இல்லங்களுக்கு விஜயம் செய்யுமாறு அழைத்தனர்; அவர், ஒரு சிலர் இல்லங்களுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார்.

மெஹர் பாபா பாரமவுண்ட் (PARAMOUNT), யுனிவர்சல் -UNIVERSAL (1935, ஜனவரி 3) மறுநாள் ஃபாக்ஸ் (FOX) மற்றும் வார்னர் பிரதர்ஸ் (WARNER BROTHERS) ஸ்டுடியோக்களையும் பார்வையிட்டார், அங்கு அவர் ஃபிரெஞ்சு பாடகர் மாரிஸ் செவலியர் (FRENCH SINGER MAURICE CHEVALIER) உட்பட பல பிரபலமானவர்களை சந்தித்தார்; மேலும் நடிகை ஆலிஸ் பேயுடன் (ALICE BAY) புகைப்படம் எடுக்கப்பட்டது. ஃபாக்ஸ் (FOX) ஸ்டுடியோவில், ஓக்லஹோமா (OKLAHOMA) நகைச்சுவையாளர் வில் ரோஜர்ஸ் (WILL ROGERS), பாபாவுடன் காந்தி மற்றும் கிழக்கத்திய தத்துவத்தைப் பற்றி சில நிமிடங்கள் உரையாடினார்; அவர் இந்தியாவிற்குச் செல்லும் வேளையில் பாபாவை சந்திப்பதாகக் கூறினார். பாபா ஹாலிவுட்டில் பல திரைப்படங்களைப் பார்த்தார், அவற்றில் ஒன்று, வைன் ஸ்ட்ரீட்டிற்கு (VINE STREET) அருகில் ஹாலிவுட் பவுல்வர்டில் (HOLYWOOD BOULEVARD) அமைந்த பான்டேஜஸ் தியேட்டரில் (PANTAGES THEATER) ‘இமிட்டேஷன் ஆஃப் லைஃப்’ (IMITATION OF LIFE) என்ற திரைப்படம்.

மால்கம், ஜீன் இருவரும் மெஹர் பாபா, அவர்களுடன் இல்லாத வேளையில் கடினமான காலங்களைக் கடந்து, நிதி நெருக்கடிகளை சந்திக்கும் சூழ்நிலை உருவானது. “இந்த நேரங்கள் அவர்களின் துன்பங்களைத் தாங்கும் சக்தியை சோதிப்பதற்கும், அதன் திறனை வளர்ப்பதற்கும் என்றே உள்ளனவா?” என்று ஜீன் பாபாவிடம் கேட்டபோது, அவர், **“ஆமாம், நீங்கள் ஏமாற்றம், விமர்சனம், குற்றச்சாட்டு போன்ற எதிர்மறை சக்திகளை, பரிபூரண அமைதி மற்றும் உள்ளளவிலான சமநிலையுடன் எதிர்கொள்ள முடியும். மேலும் நீங்கள் எல்லா நேரத்திலும் கடவுளின் விருப்பத்திற்கு அடிபணிய வேண்டும்”** என்று பாபா பதிலளித்தார்.

மேற்கத்திய நாட்டில் இது பாபாவின் முதல் கிறிஸ்துமஸ். ஹாலிவுட்டில் இருந்தபோது, இங்கிலாந்தில் வாழும் வில், மேரி பேக்கெட் இருவருக்கும் எழுதிய பின்வரும் கடிதத்தில், திரைப்பட திட்டத்திற்காக நிதி திரட்டுவதில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் மற்றும் இடர்பாடுகளை பாபா சுருக்கமாகத் தெரிவித்தார்:

**நியூயார்க் நகரில் இரண்டு நாட்கள் மட்டுமே தங்கிய பின்பு, நான் இங்கு வந்துள்ளேன். கோஷமிட்டு கொந்தளிக்கும் கடல்களில் ஏழு நாட்கள், நியூயார்க் நகரின் பரபரப்பான நேரம், மீண்டும் அமெரிக்க கண்டம் முழுவதும் நான்கு நாட்கள் ஒரு நீண்ட ரயில் பயணம், திரைப்படம் மற்றும்**

போதுமான நிதிநிலை குறித்த சிந்தனைகள் அனைத்தையும் மனதில் தாங்கி, இங்கு கால் வைத்த நேரத்திலிருந்தே இடைவிடாத சந்திப்புகள், நேரடி பேட்டிகளால் அனைவரும் சோர்ந்து போய் இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, இதுபோன்ற திரைப்பட தயாரிப்பிற்குத் தேவையான நிதி ஆதரவைப் பெறும் எந்த நம்பிக்கையும் இல்லை; இதை ஒவ்வொரு தொழிலதிபரும் ஆபத்தை உள்ளடக்கிய பெரிய முயற்சியாகப் பார்க்கிறார்.


ஆகவே, இந்தக் கதையை விலைக்கு வாங்கும் ஒரு தயாரிப்பாளரைக் கண்டு கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, இதனால், ஏற்கனவே இதில் முதலீடு செய்தவர்கள் தங்கள் பணத்தை திரும்பப் பெறலாம். ஒரு தனிப்பட்ட தயாரிப்பாளர் கதையை வாங்கினால், நிச்சயமாக நான் இங்கு தங்க வேண்டிய தேவை இராது. ஆகவே, நான் இங்கு இருக்கும் வேளையில் அப்படி ஒரு தயாரிப்பாளர் கிடைக்காவிடில், பிரியமான நோரினா, எலிஸபெத் இருவரிடமும் இந்தத் திரைக்கதை வசனத்தை ஒப்படைப்பேன்; அவர்கள் சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல் அதை விற்கவோ அல்லது தயாரிக்கவோ அறிவுறுத்தத் திட்டமிட்டுள்ளேன். நான் காலவரையின்றி இங்கு இருக்க முடியாது. மண்டலி மற்றும் இந்தியாவிலுள்ள இதர விவகாரங்களையும் நான் பார்க்க வேண்டும்; எந்த ஏற்பாடும் செய்யப்படாவிடில், ஜனவரி முதல் வாரத்திற்குள் நான் இங்கிருந்து புறப்பட உள்ளேன்.

அவர்கள் இன்னும் மிகச் சிறப்பாக முயற்சி செய்கிறார்கள் - குறிப்பாக நோரினா, எலிஸபெத், நான்னி - திரைப்பட உலகில் உள்ள பல முக்கியமான நபர்கள், நேரடி சந்திப்புக்காக அழைத்து வரப்படுகிறார்கள் - உண்மையில் நல்லவர்கள், உதவ விருப்பமிக்கவர்கள், ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் அவர்களால் முடியவில்லை. சுருக்கமாகச் சொன்னால், அவர்கள் அனைவரும் தங்களால் இயன்றவரை முயற்சி செய்தார்கள், இன்னும் முடிந்த எதையும் செய்யாமலுமில்லை, அவர்கள் என்னிடம் அழைத்து வந்தவர்களை நான் அறிவேன், மேலும் இந்தத் திரைப்படம் தயாரிப்பதற்கான எனது யோசனையையும், கருப்பொருளையும் ஒவ்வொருவருக்கும் விளக்கினேன், அவர்கள் அனைவரும் மனமார விரும்பி, இது போன்ற ஓர் அற்புதமான திட்டத்தை ஏற்றுக்கொண்டு பாராட்டினாலும், இந்த அளவிலான பெரிய திட்டத்திற்குத் தேவையான நிதி உதவியைச் செய்ய, எவரும் முன்வர முடியாத நிலை. ஆனால் நான் இங்கு இருப்பது வரை எனது முயற்சியைத் தொடருவேன்; எந்த சிரமத்தையும் பாராமல் என்னிடம் வரும் அனைவருக்கும், அனைத்தையும் விளக்குவேன். எதிர் வரும் 8 அல்லது 9ஆம் நாள் வரை, தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்புக்கான எந்த ஒரு சாதகமான ஏற்பாடும் நிகழாவிடில், நான் இங்கிருந்து வான்கூவர் புறப்படுகிறேன்... பின்பு நான் ஏற்கனவே கூறியதற்கு இணங்க, ஒரு வருடம் இமயமலைக்குச் செல்ல இருக்கிறேன். எதிர்வரும் என்னுடைய மிகப் பெரிய

**பணியில், எனது அன்பான அனைவரும் அவரவர் திறனுக்கு ஏற்ப பங்கேற்க வேண்டும்.**

**என் அன்பர்களே, உங்களைப் போலவே என்னை நேசிக்கும் பலர், இவ்வளவு காலம் பிரிந்து இருப்பது எவ்வளவு கடினம் என்பது எனக்குத் தெரியும், ஆனால் பிரியமான நீங்கள், நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இருக்கலாம். நான் எப்படி அனைத்தையும் செய்யப் போகிறேன் என்பதை நீங்கள் உணர முயற்சித்தால், அந்தப் பணிக்காக, என் பிரியமான நீங்கள் முழு விருப்பத்துடன் அனைத்திலும் பங்கேற்க வருவீர்கள் என்பதை நான் கூற வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் என்னை எவ்வளவு ஆழமாக நேசிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும், அதை நான் சொல்ல வேண்டியதும் இல்லை. மேற்கத்திய நாட்டில் இது எனது முதல் கிறிஸ்துமஸ், நீங்கள் அனைவரும் இங்கு என்னுடன் இருந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உங்களைப் பிரிந்து இருந்தாலும், உங்களுடன் இருக்கிறேன், எப்போதும் உங்களுடன் இருப்பேன்.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹாலிவுட்டில் பாபாவை சந்தித்த ஸாம் கோஹென் (SAM COHEN), லாஸ் ஏஞ்சலஸ் மற்றும் ஸான் ஃபிரான்சிஸ்கோ இடையே ஓசியானோ (OCEANO) நகருக்கு அருகிலமைந்த தொலைதூர உயர் மணற்குன்றுகளின் பாதிவழியில் வசித்து வந்தார். மெஹர் பாபா 1932ஆம் ஆண்டில் மணற்குன்றுகளில் கேவின் ஆர்தரின் (GAVIN ARTHUR) சமூகத்தையும், பாபாவுக்காகக் கட்டப்பட்ட ஒரு சிறப்பு அறையையும் பார்வையிட இருந்தார். ஆனால் அந்தப் பயண திட்டம் ஒருபோதும் நிறைவேறவில்லை. 1934 விஜயத்தின் போது, பாபாவை மீண்டும் சந்தித்த ஸாம், அவரையும் அவரது ஊர் சகவாசிகளையும் சந்திக்குமாறு பாபாவை அழைத்தார் - இன்னும் சில ஆன்மீகத்தில் நாட்டம் மிக்க, நேர்மையான நபர்கள், உலகப்பொருள் உடைமைகளை அடைவதை விட உயர்ந்த ஒன்றைத் தேடுவதற்காக, உலகைக் கைவிட்டவர்கள் மற்றும் மணற்குன்றுகள் மத்தியில் அழிவிலிருந்து மீட்கப்பட்ட மரக்கட்டைகளின் உதவியுடன் மிக எளிமையான, பழம்பாணியில் உருவாக்கிய தனித்தனி அறைகளில் வாழ்ந்தனர். பாபா விரைவில் வருகை தருவதாகவும், பதினெட்டு பேரை அழைத்து வருவதாகவும் கூறினார். ஸாம் கோஹெனின் சிறிய அறை அனைவருக்கும் போதுமானதாக இல்லை, ஆனால் அதிர்ஷ்டவசமாக நகரத்திற்கு வெளியே இருந்த கேவின் ஆர்தரின் அறையில், 'மோய் மெல்' (MOY MEL) என்றழைக்கப்பட்ட பல அறைகளின் கூட்டமைப்பில், ஒன்றரை மைல் தொலைவில், தங்குமிடங்களை ஏற்பாடு செய்ய முடிந்தது.



ஓசியானோ, கலி:ஃபோர்னியா - **26-27** டிசம்பர் **1934**
கீழே: ஸாம் கோஹென், மெஹர் பாபா, ஹூகோ ஸீலிக், ஜான் டோகெட் (JOHN DOGGETT)

டிசம்பர் 26 அன்று எலிஸபெத், நோரினா, ருவானோ, நதீன் மற்றும் பலருடன் மெஹர் பாபா மூன்று கார்களில் நான்கு மணிநேர பயணம் செய்து ஓஸியானோ நகருக்குச் சென்றனர். டாக்டர் ருடால்ஃப் டபிள்யூ ஜெர்பர் (DR. RUDOLF W. GERBER) என்ற மருத்துவர் தனது குடும்பத்துடன் ஓஸியானோவில் வாழ்ந்து வந்தார். பாபா முதலில் அவரை சந்தித்து, பின்பு மணற்குன்றுகளுக்குச் சென்றார். பாபாவும் ஆண் மண்டலியும் கேவின் அறையை ஆக்கிரமித்தனர், பிற அனைவரும் அருகிலமைந்த அறைகளில் தங்கினர். இரவில் குளிர் அதிகமாக இருந்ததால் அங்கு வாழ்ந்த சாதுவைப் போல தோற்றம் கொண்ட ஒரு குடிமகன் (ஜார்ஜ் பிளேஸ் – GEORGE BLAIS), சால்வை ஒன்றைப் போர்த்திக் கொண்டு, தூங்கும்போது செய்தித்தாள்களாலான போர்வையால் தன்னை மூடிக்கொண்டார்.

பாபாவும் மண்டலியும் தங்கள் அறையில் நெருப்பு வளர்க்க வழி இல்லாமல், குளிரில் ஒரு சிரமமான இரவைக் கழிக்கவேண்டியதாயிற்று. (மூடிய அறையில் நச்சுப் புகை சேராமல் இருக்க, மண்ணெண்ணெய் விளக்குகளை நீண்ட நேரம் எரியவிட வேண்டாம் என்றும் அவர்களிடம் கூறப்பட்டது.)

அங்கு வாழும் மக்களுக்கு, மெஹர் பாபா அன்று நேரடி பேட்டிகளை வழங்கினார். அவர்களில் பாபாவுக்காகக் கட்டப்பட்ட குடிலில் தங்கியிருந்த மரியன் தோர்ப் (MARIAN THORP) மற்றும் உயர் உணர்வு நிலையை அடைவதில் ஆர்வம் காட்டிய கவிஞரும், கபாலிஸ்டுமான (பழங்கால யூத தத்துவங்களை பின்பற்றுபவர்கள்) ஹூகோ ஸீலிக் (HUGO SEELIG) ஆகியோர் அடங்குவர். காமம், கோபம், பேராசை ஆகியவற்றின் சில அம்சங்களை பாபா விளக்கினார், குழப்பமடைந்த ஸீலிக் பாபாவிடம் தெளிவாக விளக்குமாறு வேண்டினார்.

இதற்கிடையில், தனிப்பட்ட முறையில், ஆதி சீனியரின் கேள்விக்கு பதிலளித்த பாபா, "**இந்தியா, பிரிட்டனால் ஆளப்படுவதன் மூலம், உண்மையில் சிறப்பான நிலையில் உள்ளது. அதற்கு** (பிராந்திய **பகுதிகளை**) **உடைமைகளை இழக்கும் பயம் இல்லை. இந்தியாவில் பல பிரிவுகள் உள்ளதால் குறிப்பாக இந்து, முஹமதியன் ஒற்றுமையை அடைய முடியாது. எனவே இந்தியாவிற்கு, சுயராஜ்யம் என்பது ஆன்மீக முன்னேற்றத்திற்கு அதிக அளவிலான வாய்ப்பை அளிக்காது. சீனா சுதந்திர நாடு, ஆனால் பெருங் குழப்பத்தில் உள்ளது. பொருள் ரீதியாகப் பார்த்தால், இந்தியாவும் சுதந்திரத்தால் பயனடைய வாய்ப்பில்லை**" என்றார்.

அன்று மதியம், அனைவரும் பாபாவுடன் கடற்கரைக்குச் சென்றனர். அண்மையில் பெய்த கனமழை மற்றும் நீண்ட அலைகள் காரணமாக, கார் மணலில் சிக்கிக்கொண்டது. ஸான்டா பார்பரா (SANTA BARBARA) வழியாக ஹாலிவுட்டிற்கு திரும்புவதற்காக, பாபாவும் குழுவும் பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்பட்டனர்.

ஸாம் கோஹென் பின்னர் இவ்வாறு எழுதினார், "பாபா (மணற்குன்றுகளில்) பல தொடர்புகளை ஏற்படுத்தினார்; அவர் வழக்கமாகச் செய்வது போலவே, மக்களிடையே இறை ஆர்வத்தைத் தூண்டிவிட்டார்!"

ஒரு கட்டத்தில், நோரினா, பழைய தோழி ஒருவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்; திரைக்கதை எழுத்தாளர் மெர்சிடிஸ் டி அகோஸ்டா, (MERCEDES DE ACOSTA) 42, அந்த ஊரில் அவர் சந்திக்க வேண்டிய ஒருவர் இருப்பதாக அவரிடம் கூறினார். மெர்சிடிஸ், சமீபத்தில் கடும் மன உளைச்சலுக்கு ஆளானார், எவரையும் சந்திக்க விருப்பம் இல்லாமல் தனிமையை நாடினார். ஆனால் இந்த 'மனிதரை சந்தித்ததற்காக வருந்த மாட்டீர்கள்' என்று நோரினா வலியுறுத்தினார்.

"அது யார்?" மெர்சிடிஸ் விசாரித்தார்.

நோரினா, யார் என்று சொல்வதாக இல்லை. "இது உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்," என்று விளக்கினார்.

இறுதியாக, நோரினா தனது தோழியை வரும்படி வற்புறுத்தினார். 1934, டிசம்பர் 31 அன்று, மெர்சிடிஸ் (MERCEDES) வந்தபோது, நோரினா வாசலில் காத்திருந்தார். அவரது இளம் வயதில் மெர்சிடிஸ், இயேசு (JESUS), மேரி மாக்டலீன் (MARY MAGDALENE), ஜோன் ஆஃப் ஆர்க் (JOAN OF ARC) மற்றும் பிற கிறிஸ்தவ புனிதர்களுக்கு உணர்ச்சிமிக்க கடிதங்களை எழுதியிருந்தார். பாபாவைப் பார்த்ததும், அவரிடமிருந்து மகிழ்ச்சியூட்டும், மிதமான அன்பின் தாக்கம் வெளிப்படுவதை உணர்ந்தார். அவர் விரைந்து பாபாவின் அரவணைப்பில் வந்து, "நீங்கள் யார்?" என வினவினார்.

**"நான் நீங்களே"** என்று பாபா சைகையால் பதிலளித்து, திடீரென எழுத்துப்பலகையில் **"நீங்கள் வெளியே சென்று உங்கள் துப்பாக்கியை எடுத்து வாருங்கள்"** என்றார். அவரது காரில் வைத்திருந்த துப்பாக்கியைப் பற்றி, இதுவரை எவரிடமும் சொல்லாததால் மெர்சிடிஸ் ஆச்சரியப்பட்டார். அவர் காரிலிருந்த துப்பாக்கியை எடுத்து வந்து, அதை, பாபாவிடம் கொடுத்தார். அவர் அதிலிருந்த தோட்டாக்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்த பின்பு துப்பாக்கியை அவரிடம் ஒப்படைத்தார்.

பாபா அவரை ஆறுதல்படுத்தி, **"தற்கொலை எதற்கும் ஒரு தீர்வு அல்ல. இது மீண்டும் மீண்டும் அதே பழைய பிரச்சினைகளுடன் மறுபிறவியை எடுக்கச் செய்கிறது. இதற்கு ஒரே தீர்வு, இறை உணர்வை அடைவது ஒன்றுதான் - அதாவது அனைத்திலும் இறைவனைக் காண்பது. அப்போது எல்லாமே எளிதாகிவிடும். இதை நீங்கள் இனிமேல் உங்களுடன் வைத்துக்கொள்ள மாட்டீர்கள் என்று எனக்கு உறுதி கூறுங்கள். தற்கொலை பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டாம்"** என்று பாபா கூறி முடித்தார்.

பாபாவின் இரக்கத்தன்மையை உணர்ந்த மெர்சிடிஸ் உறுதியளித்தார். பின்னர் அவர் பாபாவிடம் அவரது நண்பரான திரைப்பட நடிகை கிரெட்டா கார்போவைப் (GRETA GARBO) பற்றி கூறினார், அவரை மிகவும் நேசிப்பதாகத் தெரிவித்தார்.

பாபா, இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், **"நீங்கள் இருவரும் இத்தாலியில் கடந்தகால வாழ்க்கையில் கணவன் - மனைவியாக**

**வாழ்ந்தீர்கள். அதனால்தான் உங்களிடையே இத்தகைய ஈடுபாடு நிலவுகிறது"** என்றார்.

"கிரெட்டா என்னை முதன்முதலில் சந்தித்தபோது, 'ஓ, நான் உன்னைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்' என்று சொன்னதன் அர்த்தம் இப்போது புலப்படுகிறது" என்று மெர்சிடிஸ் கூறினார், பாபா மேலும் கூறுகையில், **"அவர் முந்தைய வாழ்க்கையில் ஒரு யோகியாக இருந்து, திடீரென உயிரைத் துறந்தார். இந்த வாழ்க்கையிலும் அவரிடம் மறைந்திருக்கும் பல யோக சக்திகள் உள்ளன, ஆனால் ஆன்மீக உயர் உணர்வு நிலை எதுவும் இல்லை. அவர் மகிழ்ச்சியாக இருக்கும் அதே நேரத்தில் துன்பமும் அனுபவிக்கிறார். அத்தகைய வேதனையில் இருந்து ஒரு நாள் தற்கொலை செய்து கொள்ளவும் துணிவார். அவருக்கு எனது தொடர்பு தேவை. அவர் என்னை சந்திப்பதானால், இந்த சூழ்நிலை அனைத்தும் மாறும்"** என்று விளக்கினார்.

மெர்சிடிஸ், மெஹர் பாபாவை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார், அவருக்கு ஒரு ஃபோனோகிராபை (ரெக்கார்ட் பிளேயர் -RECORD PLAYER) அன்பு பரிசாக வழங்கினார். அவர் அறையை விட்டு வெளியே வந்ததும், பாபா, புத்தாண்டு பரிசாக ஆதி சீனியரை அனுப்பி ஒரு கைக்குட்டையை வழங்கி, **'அதை ஒருபோதும் வேறு எவருக்கும் கொடுக்க வேண்டாம்'** என அறிவுறுத்தினார். மெர்சிடிஸ் தூங்கும் வேளையில் அதைத் தலையணைக்குக் கீழே வைத்துக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தார்; ஆனால் பாபா ஏன் அதை வேறு எவருக்கும் கொடுப்பதாக நினைத்தார் என்று யோசனை செய்தார். அவர் மறுநாள் நோரினாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அதே கேள்வியைக் கேட்டபோது, நீங்கள் அதை, கிரெட்டா கார்போவிடம் கொடுக்க ஆசைப்படலாம் என்பதால்தான் இந்த அறிவுறுத்தலை பாபா வழங்கியதாக பதிலளித்தார்.

மெர்சிடிஸ் ஒரு முறை பாபாவை அவரது வீட்டில் தேநீர் விருந்துக்காக அழைத்தார். பாபா வேறு பல அழைப்புகளை மறுத்துவிட்டாலும், இதை ஏற்றுக் கொண்டார். அனைவரும் மெர்சிடிஸின் அழகான இல்லத்திற்குச் (ஜனவரி 6 அன்று) சென்றபோது, பாபா உள்ளே நுழைந்தும், நேராக மேல் மாடிக்குச் சென்று, அங்கு ஒவ்வொரு மறைவையும் அலமாரியையும் திறந்து பார்த்து, இறுதியில் சமையலறைக்கு வந்தார். அவ்வேளையில் அங்கிருந்த சமையல்கார பெண்மணி தனது பணியில் சிறப்பாக இருந்தாலும், எரிச்சலூட்டும் மனநிலையில் இருந்தார். புன்னகையுடன் ஒளிரும் பாபா, அந்த சமையல்கார பெண்மணியை, தோளில் மெதுவாகத் தட்டிக் கொடுத்து, பின்பு தேநீருக்காக அமர்ந்தார்.

பாபா புறப்படத் தயாரான வேளையில், மெர்சிடிஸ் நண்பர்களுடன் வீட்டின் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தார். சமையல்கார பெண்மணி, கதவு திரை வழியாக எட்டிப் பார்த்ததும், பாபா திடீரென மீண்டும் படிகளில் ஏறி, அவரிடம் கையை அசைத்து விடைபெற்று காரில் ஏறினார்.

திரும்பி வரும் வழியில், கிரெட்டா கார்போவின் வீட்டை மூன்று முறை சுற்றிவர பாபா ஓட்டுநருக்கு உத்தரவிட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, மெர்சிடிஸ் பல வாரங்களுக்காக வெளியே சென்றுவிட்டார்; அவர் திரும்பி வந்தபோது, அந்த சமையல்கார பெண்மணி எதிர்பாராத விதத்தில் அமைதியாகவும், அடக்கமாகவும் ஓர் ஆட்டுக்குட்டியின் சாந்தமான குணத்துடன், தேவதூதர் போல மாறியிருப்பதைக் கண்டார். இதனால் குழப்பமடைந்த மெர்சிடிஸ் இறுதியாக, இந்த மாற்றத்திற்கான காரணத்தை வினவியபோது, அந்தப் பெண்மணி இவ்வாறு விளக்கினார், "நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் வெளியே சென்றிருந்தபோது, ஓர் இரவில் என் அறை, வெளிச்சத்தால் நிரம்பியிருந்ததைக் கண்டு நான் இரவெல்லாம் விழித்திருந்தேன். அன்று தேநீருக்காக வந்த குருநாதர் என் அறைக்குள் நுழைந்தார். நான் படுக்கையிலிருந்து எழுந்து அவரைத் தொட்டேன்; சத்தியமாகக் கூறுகிறேன், நான் அவருடைய அங்கியை எனது கைகளில் உணர்ந்தேன். சில காரணங்களால் என்னால் அதை விளக்க முடியவில்லை, பின்னர் எனக்கு கோபம், வெறுப்பு என்பதே வரவில்லை."

கார்ல் வால்மொல்லர் ஒரு திரைப்படக் காட்சியில், கணவன் - மனைவி இருவரும் ஒரே நேரத்தில் இறைநிலையை அடைவதாகச் சித்தரித்திருந்தார். 1935, ஜனவரி 1ஆம் நாள், **இது ஒருபோதும் நடக்காது** என்று மெஹர் பாபா சுட்டிக்காட்டி விளக்கினார்: “**திருமணத்தில் கணவன் - மனைவியாக ஒன்றிணைந்த இரண்டு ஆத்மாக்கள், ஒரே நேரத்தில் இறைநிலையை அடைவதில்லை; ஒருபோதும் இல்லை.**”

வால்மொல்லர், பாபாவிடம் ‘அது ஏன்?’ என்று கேட்டார். பாபா ஒரு வரைபடத்தை வரைந்து விரிவாகக் கூறினார்: “**ஏனெனில் பிறப்பு - இறப்பு என்ற பிறவிச் சங்கிலியில், ஒவ்வொரு எதிர் பாலினமும் ஒரே நேரத்தில் மாறுகிறது; அதாவது ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாறுகிறது.**” பாபா தனது கருத்தை விளக்குவதற்காக, ஆண், பெண் வடிவங்களை மாற்றுவதைக் குறிக்கும் வளைவு செங்குத்துக் கோட்டை வரைந்தார். “**இரண்டு ஆத்மாக்கள் ஒன்றாகச் சேர்ந்து, பாலினத்தை மாற்றி, இறை உணர்வை அடையும் தருணம் நெருங்கும் வரை, ஏராளமான பிறவிகளை எடுக்கும்; இறை உணர்வை அடைய நெருங்கும் அந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் இரண்டு ஆத்மாக்களும் விலகிச் சென்றுவிடும்.**”

பாபா இவ்வாறு கூறி முடித்தார், “**வாழ்வின் ரகசியங்கள் மனித மனதிற்கு முற்றிலும் புலப்படாதவை. அதனால்தான் அவை ஒருபோதும் வெளிப்படுத்தப்படுவதில்லை, ஆனால் வெவ்வேறு வழிமுறைகளில் விளக்கப்படுகின்றன.**”

“**உண்மையான தெய்வீக அன்பு, பரிணாம வளர்ச்சியால் வருவதில்லை; அதாவது தற்காலிக அன்பிலிருந்து அது உணரப்படுவதில்லை. அவை இரண்டும் முற்றிலும் மாறுபட்டவை. மனித அல்லது தற்காலிக அன்பை அதன் சிறப்பான நிலையிலும் தெய்வீக அன்போடு ஒப்பிட முடியாது.**”

வால்மொல்லரின் திரைக்கதையைப் பற்றி பாபா விளக்கினார்: "**ஆலன், விக்டரி இருவரும்** (திரைப்பட கதையில் உள்ள இரண்டு கதாபாத்திரங்கள்) **தங்கள் அன்பின் மூலம் இறை உணர்வை அடைவதில்லை, ஏனெனில் தெய்வீக அன்பும், மனிதனின் தற்காலிக அன்பும் இரு துருவங்கள். எனவே, அவர்களின் வலுவான காதற்செயல், கதையின் உண்மையான, அடிப்படை கொள்கை அல்லது கருப்பொருளை பலவீனப்படுத்தும்; மேலும், மேலே விளக்கப்பட்ட காரணங்களுக்காக மீண்டும் தவறாக வழிநடத்தும்.**"

இறை உணர்வை அடையும் காட்சி, எவ்வாறு திரையில் சித்தரிக்கப்பட வேண்டும் என்ற விவரங்களை, பாபாவே வால்மொல்லருக்கு விளக்கிக் கூறினார். மேலும், கதாபாத்திரம் உயிரைத் துறந்த பின்னர், ஓர் ஆவியின் நடனம் மற்றும் உயிர்த்தெழும் காட்சியைக் காண்பிப்பதற்கான வழிமுறைகளையும் வழங்கினார். "**இந்தக் காட்சியில் ஏழு வெவ்வேறு இயக்கங்கள் மற்றும் ஏழு வெவ்வேறு இசை கருப்பொருட்கள், பின்னணியில் ஏழு வெவ்வேறு வண்ணங்களைக் கொண்டிருக்கும்**" என பாபா குறிப்பிட்டார். மார்கரெட், குயன்டின் இன்னும் பலர் இதற்கான நடன அமைப்பில் பணிபுரிந்து வந்தனர்.

தியோஸோஃபிஸ்ட் இயக்கத்துடன் (THEOSOPHIST MOVEMENT) தீவிரமாக ஈடுபட்ட ஒரு பெண்மணி இந்தியாவில் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். ஜனவரி 1ஆம் நாள், அவர் பாபாவை சந்தித்தபோது, அவர் எப்போதாவது இந்தியாவிற்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்குமா என்று கேட்டார். அதற்கு பாபா அவரிடம், '**ஆமாம், வாழ்க்கையின் பின் பகுதியில்**' என்றார்; மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "**உண்மையாகச் சொல்லப்போனால், ஒருவர் எங்கு வாழ்கிறார் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கிறார் என்பதுதான் முக்கியம். மலைகள் அல்லது குகைகளில் வாழ்ந்தாலும் கூட, ஒருவரின் மனம் உலக மாயையில் மூழ்கி இருக்கும் வரை, எந்த முன்னேற்றமும் இல்லை. மாறாக, உலகில் வாழும் ஒருவர், தனது கடமைகளைச் செவ்வனே செய்து, அவர் மாயையில் மூழ்காமல் ஆன்மீகப் பாதையை நினைவு கொண்டால் பெருமளவில் சாதிக்க முடியும்**" என்றார். அந்தப் பெண்மணி, "நீங்கள் அன்னி பெஸண்டை (ANNIE BESANT) சந்தித்தீர்களா?" என்று கேட்டார்.

"**இல்லை, ஆனால் நான் அவரை அறிவேன். அவர் ஒரு மேல்நிலையை அடைந்த ஆத்மா. ஆனால் ஆன்மீகத்தில், இதயம்** (அன்பு) **ஒன்றுதான் முக்கியம், தலை** (அறிவுத்திறன்) **அல்ல. அதிகப்படியான அறிவு சார்ந்த சொற்பொழிவுகள், இந்த இயக்கங்கள், அமைப்புகள் தொடங்கப்பட்டதன் முக்கிய நோக்கத்தின் உண்மையான மதிப்பை இழக்கச் செய்கின்றன.**"

பாபா அவரது குழுவுடன் பெரும்பாலான மாலை வேளைகளில் நடக்கச் சென்றார். மின்டா ஒருமுறை 'மிகவும் அற்புதமான சூரிய அஸ்தமனங்களை'

நினைவு கூர்ந்தார். ஆனால், பாபா அதி வேகமாக நடந்ததால் அவரைப் பின்தொடர்ந்து செல்லும் அவசரத்தில் அதன் அழகை ரசிக்க முடியாமலாயிற்று.

1935, ஜனவரி 2 மின்டாவின் பிறந்த நாளன்று கோழி, ஐஸ்கிரீம், கேக் போன்றவை, சிறப்பு உணவாக வழங்கப்பட்டது. பாபா அவருக்கு ஸ்கார்ஃப் ஒன்றை அன்புப் பரிசாகக் கொடுத்தார்; மின்டா அன்பாக வழங்கிய மின்சார ரேஸரை ஆதி, பாபாவிற்கு சவரம் செய்யப் பயன்படுத்தினார்.

அந்த நாள், நான்னி மூலமாக, பிரபல திரைப்பட இயக்குனர் சிசில் பி. டமில்லின் (CECIL B. DeMILLE) மனைவி ஒரு நேரடி பேட்டிக்காக வந்தவர், பாபாவை, பிக்ஃபேரில் (PICKFAIR) சந்தித்தபோது தனது கணவர் மீண்டும் பாபாவை சந்திக்க விரும்புவதாகக் கூறினார். சிசில் இரண்டாவது முறையாக மெஹர் பாபாவை ஒருபோதும் சந்திக்கவில்லை என்றாலும், 'இமிட்டேஷன் ஆஃப் லைஃப்' (IMITATION 0F LIFE) என்ற திரைப்படத்தை இயக்கிய பிரபல திரைக்கதை எழுத்தாளர் வில்லியம் ஜே. ஹர்ல்பர்ட் (WILLIAM J. HURLBURT) என்பவர் ஜனவரி 4 அன்று பாபாவை சந்தித்தார். உலகில் வாழ்ந்து, தனது பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து, அதே நேரத்தில் ஆன்மீகவாதியாக எப்படி இருக்க முடியும் என்ற தனது கேள்வியை ஒத்திசைவாக வெளிப்படுத்த ஹர்ல்பர்ட்டிற்குக் கடினமாக இருந்தது. பாபா, அவர் கூறுவதைப் புரிந்துகொண்டு **"நீங்கள் ஆன்மீகத்தை நடைமுறையில் செயல் படுத்துவது எப்படி என்றுதானே கேட்கிறீர்கள்?"** என வினவினார்.

"ஆமாம், அதேதான்," ஹர்ல்பர்ட் குறுக்கிட்டார்.

**"இது எளிதானது, மிக மிக எளிது, அதன் எளிமைதான் அதை மிகவும் கடினமாக்குவது"** என்று பாபா அவருக்கு எடுத்துரைத்தார்.

"இது உண்மையா? எவ்வளவு விசித்திரமாக உள்ளது!" ஹர்ல்பர்ட் கூறினார்.

**"கடவுள், ஆன்மீகம் பற்றிய சரியான கருத்து, சாதாரண மக்களைப் பொறுத்தவரை இன்னமும் தொலைதூரத்தில் உள்ளது. அவை அருமையானவை, மிகவும் சுவாரஸ்யமானவை!"**

ஹர்ல்பர்ட் உடனே, "நான் எனது மிக உயர்ந்த இலட்சியத்தை 'வாழ்க்கைப் பொருள்' (LIFE SUBSTANCE) என்று அழைக்கிறேன். நான் அதை கடவுள் என்று அழைக்க விரும்பவில்லை, ஏனெனில் அது கடுமையான தேவாலய கற்பனையுடன், பிடிவாத மனப்போக்கில் கூறப்படும் கருத்து. ஆனால் எனது நம்பிக்கையும் இலட்சியமும் அதைவிட அதிகம். ஆகவே, நான் அதை 'வாழ்க்கைப் பொருள்' என்று அழைக்கிறேன்" என்றார்.

அதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார், **"பெயர்களும் சொற்களும் ஒரு பொருட்டல்ல. உண்மையான உணர்வு ஒன்றுதான் இன்றியமையாதது."**

"அப்படியானால், நீங்கள் சொல்வது போல் உணர, நான் என்ன செய்ய வேண்டும், நான் அதில் ஆழமாகச் செல்லாவிடில் அதைப் பற்றிய ஒரு பார்வை எப்படிக் கிடைக்கும்?"

**“நான் அதை உங்களுக்கு விளக்குகிறேன். வாழ்க்கையில் உங்களைப் போன்ற உயர் நிலையில் இருக்கும் ஒருவரைப் பொறுத்தவரை, நவீன இலட்சியங்கள் மற்றும் காலகட்டத்தை எட்டிய நாகரிக நாட்டில், நீங்கள் எப்பொழுதும் உயர்ந்த அபிலாஷைகளை நோக்கி உங்கள் மனதை நிலைநிறுத்தி வாழ்வது சரியானது. வெளிப்படையாகச் சொன்னால், உங்களுக்குத் தெரியாமலே நீங்கள் ஓர் ஆன்மீகவாதி.”**

"நான் உண்மையில் அப்படி இருக்கிறேனா?"

**“ஆமாம், உணர்வுபூர்வமாக நீங்கள் அறிந்ததை விட உண்மையிலேயே அதிக ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு உண்டு என்று எனக்குத் தெரியும், ஆனால் இன்னும் நீங்கள் செய்யவேண்டியது ஏராளம் உள்ளது. அதை நான் உங்களுக்கு விளக்குகிறேன்.”** ஒவ்வொரு நாளும் பல நிமிடங்கள் ஒரு குறிப்பிட்ட சிந்தனையில் கவனம் செலுத்த பாபா அவருக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதே நாளில் மிஸ் கரீனா ஷீல்ட்ஸ் (MISS CARENA SHIELDS), மெஹர் பாபாவை சந்தித்தார். அவர் ஒரு புத்திசாலியாகவும், தைரியமான இளம் தொல்பொருள் ஆராய்ச்சியாளராகவும் இருந்தார், தெற்கு மெக்ஸிகோவில் வாழும் மறைமுக ஆற்றல் மிக்க, இயற்கைக்கு அப்பாற்பட்ட மாய மந்திர நடைமுறைகளைக் கையாளும் பூர்வீக பழங்குடியினருடன் அவரது நேரத்தைச் செலவிட்டார், ஹர்ல்பர்ட்டைப் போலவே, இவரும் ஆன்மீகத்தில் முரண்பட்ட கருத்துகளை உணர்ந்தார். பாபா மீண்டும் வலியுறுத்தினார்: **“மேற்கத்திய நாடுகளிலும் சத்தியத்தைத் (உண்மைப்பொருளை) தேடும் நேர்மையான ஆத்மாக்கள் உள்ளன. இந்தப் பௌதீக உலகிற்குப் பின்னால் இருக்கும் வாழ்க்கையைக் குறித்து மேற்கத்திய நாடுகளிலும் ஒரு விழிப்புணர்வு உள்ளது. ஆனால் பொருள் வளமிக்க உலகம் மற்றும் ஆன்மீக வாழ்க்கை இரண்டையும் ஒருமைப்படுத்தி ஒத்துப்போவது கடினமாக உள்ளது. இதைப் பற்றிய உங்கள் உணர்வுகளை நான் அறிவேன். மேலும் நீங்கள் கூறுவது போல் இந்த நிலைமை அல்லது மோதலில் நீங்கள் ஏமாற்றமடைய வேண்டிய தேவை இல்லை.**

**“ஆன்மீகத்தில், புத்தித்திறன் மற்றும் வெளி உலக வாழ்க்கை முக்கியமல்ல என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும், ஆனால் உணர்வுகள் மற்றும் உள் அனுபவங்கள் மட்டுமே முக்கியம். நீங்கள் உலகில் வாழலாம், உங்கள் கடமைகள் அனைத்தையும் செய்யலாம், அதேவேளையில் ஆன்மீகத்தில் முழு ஈடுபாடுடன் இருக்கலாம். நீங்கள் இந்த உலகை விட்டு ஓடி ஒளியாதீர்கள்; உங்களுக்கும், பிறருக்கும் நீங்கள் கடமைப்பட்டுள்ள எதையும் கைவிடாதீர்கள். உங்கள் நியாயமான கடமைகளை எல்லாம் செவ்வனே செய்து உலகில் வாழுங்கள், ஆனால் உங்கள் மனதை எப்பொழுதும் அந்த இறுதி இலக்கை நோக்கி**

**வைத்திருங்கள். ஆன்மீக உள் வாழ்க்கை அனுபவங்களைத் தேடும் ஏக்கத்துடன் இருங்கள். அது உங்களுக்கு நிச்சயமாக, படிப்படியாக வரும்.**"

ஹாலிவுட் திரைப்பட நடிகையும், நாடக ஆசிரியருமான கான்ஸ்டன்ஸ் காலியர் (CONSTANCE COLLIER - **57**), ஜனவரி **6** அன்று கமினோ பால்மெரோவின் (CAMINO PALMERO) இல்லத்தில் பாபாவை சந்திக்க வந்தார். கண்பார்வையை இழக்கத் தொடங்கிய அவருக்கு, பாபா ஒரு தியான முறையை வழங்கி, அதை அவர் கூறிவந்தால் உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் உதவியாக இருக்கும் என்றார். அப்போது அவர் பாபாவிடம், "எனக்கு நூற்றுக்கணக்கான நண்பர்கள் உள்ளனர், ஆனால் ஒருவரைக் கூட உண்மையானவர் என்று கூற முடியாது. நான் தனியாக உணர்கிறேன்."

"**நான் உங்கள் நண்பன் - உண்மையானவன்**" என்று பாபா அவரிடம் சைகையால் தெரிவித்தார்.

"ஆமாம், அதை நான் நம்புகிறேன். நான் உங்களை அறிந்ததிலிருந்து தனிமையை உணரவில்லை. தயவுசெய்து என்னை நினைவில் கொள்ளுங்கள்."

"**நான் எப்பொழுதும் உங்களில் இருக்கிறேன்,**" என்று பாபா உறுதியளித்தார்.

மற்றுமொரு திரைப்பட நடிகரான துல்லியோ கார்மனாட்டி (TULLIO CARMINATI - **40**), அன்று மாலை பாபாவைப் பார்க்க வந்தார். அவர் பல வருடங்களுக்கு முன்பு நோரினாவுடன் மேடை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளார். அவர் நோரினாவிடம், "வயதான போதிலும், நீங்கள் முன்பைவிட எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்? இது உண்மையில் மிகவும் வித்தியாசமானது, தெய்வீகமானது. நான் அதைத் தெளிவாகக் காண முடிகிறது" என்றார்.

நோரினா, பாபாவைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் என்னில் பார்ப்பது அவருடைய தெய்வீகத்தன்மை. நீங்கள் அவரைப் பார்க்கும்போது, அதை நீங்களே கண்டுகொள்வீர்கள்" என்று பதிலளித்தார்.

திரைப்படப் பணிகள் அதிகமானதும், மெர்சிடிஸ், ஹர்ல்பர்ட் இருவருக்கும் படிப்பதற்காக இரண்டு கதைகள் வழங்கப்பட்டது. ஜனவரி 6ஆம் நாள் ஹாலிவுட்டுக்கு வந்த, ஜீன், மால்கம் ஸ்க்லோஸின் நண்பர் காரெட் ஃபோர்டுடன் (GARRETT FORT) இணைந்து ஒரு படத்திற்கான கதை தொடர்ச்சியை எழுதும் பணியை மெர்சிடிஸ் ஏற்றுக்கொண்டார். காரெட் ஃபோர்ட் 'டிராகுலா' (DRACULA), 'ஃபிராங்கன்ஸ்டைன்' (FRANKENSTEIN) மற்றும் 'தி லாஸ்ட் பேட்ரோல்' (THE LOST PATROL) போன்ற பிரபலமான ஹாலிவுட் படங்களில் பணியாற்றிய திரைக்கதை எழுத்தாளர். காரெட் ஃபோர்ட் சிறுவயதிலிருந்தே ஆன்மீகத்தில் அதீத ஆர்வம் கொண்டிருந்தார். இந்தக் காலகட்டத்தில் மெஹர் பாபாவின் தொடர்பில் வந்த பின்னர், அவர் குருநாதரை ஆழமாக நேசித்தார். ஜால்பாய், ஆதி சீனியர், நோரினா, மால்கம் ஆகியோருடன் மெஹர் பாபா, காரெட்

ஃபோர்ட்டின் கடற்கரை இல்லத்திற்கு ஜனவரி 7ஆம் நாள் விஜயம் செய்தார். அங்கு பாபாவுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது.

பல நாட்களாக நிகழ்ந்த கலந்துரையாடல்கள் மற்றும் குருநாதரின் வழிகாட்டுதலுக்குப் பின்னர், இந்தியா திரும்புவதற்கான தனது விருப்பத்தை மெஹர் பாபா வெளிப்படுத்தினார். திரைப்படத் தயாரிப்பில் பங்கெடுப்பவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகி, "ஒவ்வொரு கட்டத்திலும் எங்களை ஊக்குவித்து, வழிநடத்தி, அறிவுறுத்தல்களை வழங்க நீங்கள் எங்களோடு இங்கு இருக்கவேண்டியது அவசியம்!" என்று முறையிட்டனர்.

அதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்: **“இந்தத் திரைப்படம் தயாரிக்க மாதங்கள், ஒரு வருடம் அல்லது அதற்கு மேலாகவும் ஆகலாம், அதனால் காலவரையின்றி இங்கு இருக்க முடியாது. எனது பணி, குறிப்பாக, கிழக்கில் (இந்தியாவில்) செய்யவேண்டியது ஏராளம். இந்தத் திரைப்படம் குறித்த பணி முக்கியமானது என்பதால் உங்கள் கோரிக்கைகளை ஏற்று நான் இங்கு வந்தேன்.**

**“நான் விளக்கியபடி உங்கள் பணிகளைத் தொடருங்கள். இதில் எழும் கடினமான சிக்கல்களை சமாளிக்க நான் உங்களுக்கு உள்ளளவில் உதவுவேன். ஆகவே, கவலைப்படாமல், ஒத்துழைப்புடன் உங்கள் பணியை அவரவரின் தனிப்பட்ட வழியில் தொடரவும். நினைவில் கொள்ளுங்கள், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்.”**

தயாரிப்பாளர் கேப்ரியல் பாஸ்கல், பாபா மீதான ஆழ்ந்த பக்தியுடன் தன்னை அர்ப்பணம் செய்தார். அவரது விசித்திரமான தன்மை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டாலும், பாஸ்கல் உயிரைத் துறக்கும் வரை உள்ளளவில் தொடர்பில் இருந்தார். வேறு பல கலைஞர்களும் நடிகர்களும் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். மேலும் அவரது வருகை அவர்களின் வாழ்க்கையின் ஓட்டத்தை ஒரு புதிய பாதையில் வழிநடத்தியது.

லாஸ் ஏஞ்சலஸில் இருந்தபோது, ரானோ, பாபா அவரது பயண நேரத்தில் அணிய, பழுப்பு நிற தொப்பி ஒன்றை வழங்கினார். பாபா புறப்படுவதற்கு முன்பு, தன்னுடன் இந்தியாவிற்கு அழைத்துச் செல்ல ஒரு நாய்க்குட்டியைப் பெற விரும்பினார். விரைவில், ரானோ ஒரு சிறப்பு வம்சாவளியைச் சேர்ந்த காக்கர் ஸ்பானியல் (COCKER SPANIEL) இனத்தைக் கண்டுபிடித்து, அதைப் பார்க்க பாபாவை அழைத்துச் சென்றார். பாபா, அந்த நாய்க்குட்டியை விரும்பி 35 டாலருக்கு வாங்கினார். ஏற்கனவே மெஹராபாத்தில் ‘சம்’ (CHUM) என்று ஒரு கண்காணிப்பு நாய் இருந்ததால், பாபா இதற்கு ‘சம்மி’ (CHUMMY) என்று பெயரிட்டார்.



சம்மியுடன் (CHUMMY) மெஹர் பாபா - (பின்னால்) நான்னி

வீட்டுப் பராமரிப்பு மற்றும் உணவு தயார் செய்யும் பொறுப்பை ருவானோ ஏற்றுக்கொண்டு, அதிக நேரமும் சமையலறையிலேயே இருந்ததால் பாபாவிடமிருந்து தொலைவில் இருப்பதாக நினைத்த அவர், சோகமும், பொறாமையும் அடைந்து, அடிக்கடி கண் கலங்கினார். ஆயினும்கூட, அவர் தனது பணியை மிக நுணுக்கமாக, செவ்வனே செய்ய முயன்றார். ஒரு முறை, தனியாக நின்று அழும்போது, அவர் தோளில் மென்மையான கை ஒன்று தவழ்வதை உணர்ந்து, அங்கே பாபா நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் அனைத்து துயரமும், தனிமை உணர்வும் அப்படியே பறந்துவிட்டது. அவர் லாஸ் ஏஞ்சலஸை விட்டுப் புறப்பட ஆயத்தமானபோது, பாபா, ருவானோவிடம், “**நீங்கள் விரும்பாத ஒரு பணியை உண்மையாகவும் சிறப்பாகவும் செய்துள்ளீர்கள். நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாததை விட நன்றாகவே செய்துள்ளீர்கள்!**” என்றார்.

1935, ஜனவரி 7ஆம் நாள் இரவு, பாபா மண்டலியுடன் கனடா நாட்டின் வான்கூவர் (VANCOUVER, CANADA) நகருக்கு ‘லார்க்’ (LARK) என்ற ரயிலில் புறப்பட்டார். திரைப்படப் பணியில் ஈடுபட்டிருந்த நோரினா, எலிஸபெத், நதீன், ஜீன், மால்கம், காரெட், மின்டா, ரானோ, நான்னி, ருவானோ மற்றும் பலர் ஹாலிவுட்டில் மூன்று வாரங்கள் குருநாதரின் நெருங்கிய சகவாசத்தை அனுபவித்தனர். அவரது புறப்பாடு, பிரியமான இறைவனுடன் ஒன்றிணையும் ஏக்கத்தில் தாங்கொணா வலியை ஏற்படுத்தியது.

பாரசீக நாட்காட்டியின் படி, மெஹர் பாபாவின் பிறந்த நாளான பிப்ரவரி 18 வரை, ஹாலிவுட்டில் அமைந்த இல்லத்தில் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார். நான்னி, ரானோ இருவரும் பின்பு நியூயார்க்கிற்குத் திரும்பிச் சென்றனர்; நோரினா, எலிஸபெத், ருவானோ ஆகியோர் கலிஃபோர்னியாவில் எஞ்சிய குழுவோடு தங்கியிருந்தனர்; மின்டா நியூயார்க் வழியாக இங்கிலாந்து செல்லவிருந்தார்.

பாபாவும் மண்டலியும் 8 காலை ஸான்ஃபிரான்சிஸ்கோ வந்தடைந்தனர். அவர் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் தனது அன்பர்களிடமிருந்து வந்த கண்ணீர் கடிதங்களுக்கு பதிலளித்தார். பாபா, ஸான் ஃபிரான்சிஸ்கோவில் இருந்தபோது, காலம் இவ்வாறு எடுத்துரைத்தது: "மெஹர் பாபாவை வாழ்த்துவதற்கு, மழை மேகங்கள் கூடியிருந்தன; அவரது அன்பர்களை பிரிந்து வந்ததால் ஏற்பட்ட இதயங்களின் சோக உணர்வுகள் வானத்தை மூடியது போல தென்பட்டன. ஆனால் அன்பிற்குரியவரின் இதயம் சுக்கு நூறாக உடைந்தாலும் கூட ஒருபோதும் சோகமான வெளிப்பாட்டைக் காட்ட விரும்புவதில்லை; விரைவில் மேகங்கள் மறைந்து, சூரியன் தோன்றியது."

மெஹர் பாபாவும் மண்டலியும் கோல்டன் கேட் (GOLDEN GATE) பூங்காவில் நடந்து சென்றபோது சம்மியை உடன் அழைத்துச் சென்றனர். பின்னர் அவர்கள் பாரமவுண்ட் தியேட்டரில் (PARAMOUNT THEATER) 'தி பிரஸிடென்ட் வேனிஷஸ்' (THE PRESIDENT VANISHES) என்ற திரைப்படத்தைப் பார்த்தனர். அதற்குப் பிறகு, படகில் ஓக்லாந்து (OAKLAND) சென்று, போர்ட்லேண்ட் (PORTLAND), சியாட்டில் (SEATTLE) வழியாக 'காஸ்கேட்' (CASCADE) ரயிலில் பயணம் செய்து, ஜனவரி 10ஆம் தேதி அதிகாலை வான்கூவர் வந்தடைந்தனர்; அங்கு அவர்கள் 'யேல்' (YALE) ஹோட்டலில் தங்கியிருந்தபோது, பாபா அவருக்கு வந்த அஞ்சல்களை எடுத்துக்கொண்டு, நகரத்தை சுற்றி வந்தார். பாபாவின் பல் தொடர்ந்து தொந்தரவு கொடுத்ததால் ஒரு பல் மருத்துவரை அணுக வேண்டியிருந்தது.

1935, ஜனவரி 12ஆம் நாள், கனடாவின் 'எம்ப்ரஸ்' (EMPRESS) கப்பலில் ஹவாய் (HAWAII) நாட்டை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர். சம்மி, விலங்குகளுக்கான தனி இடத்தில் பயணம் செய்தது. ஒவ்வொரு காலையிலும் பிற்பகலிலும் பாபா சம்மியைப் பார்த்து வருவதுண்டு. பயண வேளையில், பாபாவைப் பிரிந்த ஆதங்கம் நிறைந்த தொலைத்தந்திகள் பல வந்தன. ஜனவரி 12 அன்று பாபா அனைவருக்கும் இவ்வாறு எழுதினார்:

**கிழக்கில் எனது முக்கிய பணிக்காக, நான் மேற்குக் கரையிலிருந்து வெளியேறும் இத்தருணத்தில் இன்னொரு பிரிவு - மேலும் ஒரு பிரியாவிடை சொல்லத்தான் இதை எழுதுகிறேன். இப்போது நான், என் அன்பு உள்ளங்களுக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லை - நான் உங்களை எப்படி நேசிக்கிறேன், நீங்களும் எவ்வளவு ஆர்வமாக உணர்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், எதிர்வரும் இந்தப் பிரிவின் சிந்தனை, உங்களை ஆட்டிப்படைத்து, அன்பான இதயங்களைக் கண்ணீர் சிந்த வைப்பதை நான் அறிவேன். ஆனால், என்னுடைய பணி எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் உணர்ந்தால், இதயத்தின் பாரம் குறைந்து விரைவில் மறைந்துவிடும். எனது அன்பும், உதவியும் அன்புள்ளம் படைத்த உங்களுடன் எப்போதும் இருக்கும், இது உங்களை உற்சாகப்படுத்த உதவும். நாம் எங்கிருந்தாலும் என் அன்பான எண்ணங்கள் - என் இதயம் - உங்களை எப்போதும் என் அன்பின் அரவணைப்பிலும் உணர்விலும் வைத்திருக்கும், நான் இதைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டிய தேவையில்லை, ஏனெனில் நீங்கள் அதை மிகவும் ஆழமாக உணர்கிறீர்கள் என்றும் எனக்குத் தெரியும், தொடர்ந்து உணர்வீர்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது, ஒவ்வொரு கணமும், உங்கள் அன்பான பாபாவுக்காக, உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பையும் நான் அறிவேன்.**

**எனவே, அன்புக்கு நேரமும் இடமும் தெரியாது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள், அன்பில் ஐக்கியமான இதயங்கள் ஒருபோதும் பிரிந்து செல்ல முடியாது, ஒருபோதும் பிரிந்து இருக்கவும் முடியாது; உங்களை எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையில் வைத்துக் கொள்ளுங்கள்; அன்பான எண்ணங்களுடன் எப்பொழுதும் பிரியமான**

**பாபாவுக்காகப் பணிபுரியுங்கள்; எல்லா சூழ்நிலைகளிலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.**

பயணத்தின் போது, பாபா மிக்க கவலையுடன் காணப்பட்டார், அவரது உடல் ஆரோக்கியமும் ஒத்துழைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் அவர் இந்தியாவை வந்தடையும் அவசரத்தைத் தொடர்ந்து வலியுறுத்தினார். ஹாங் காங் (HONG KONG) நகரிலிருந்து விமானம் அல்லது தரை வழியாக விரைவாக வரும் சாத்தியத்தையும் ஆய்வு செய்தனர். இறுதியில் கப்பலில் தான் வேகமாகப் பயணிக்க முடியும் என்பதை ஊர்ஜிதம் செய்தனர்.

1935ஆம் ஆண்டின் கடுமையான குளிர்காலம் கடந்த 36 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இருந்தது. மேலும் மோசமான வெப்பநிலையால் பாபா தனது வழக்கமான நடைப்பயிற்சிக்கும் செல்லவில்லை. உடற்பயிற்சிக்காக ஜிம் சென்றார். இருப்பினும், உடல்நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்டதால், உணவு, தூக்கம் இரண்டும் சரியாக இல்லை; மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார்.

பயணத்தின் போது, பாபா மண்டலிக்கு இவ்வாறு விளக்கினார், **"எனது இப்போதைய நிலை, வாதக் கோளாறுகளை உருவாக்கக்கூடும்; அதனால்தான் நான் விரைவில் இந்தியாவைச் சென்றடைய விரும்புகிறேன்."**

1935, ஜனவரி 18ஆம் நாள் அவர்கள் ஹவாயின் ஹொனலுலு (HONOLULU, HAWAII) நகருக்கு வந்து, கப்பலை விட்டு வெளியேறி, வைக்கி (WAIKKI) கடற்கரையை நோக்கி நடந்தனர்; அவர்கள் நினைத்ததை விடத் தொலைவில் இருந்ததால் காரில் சென்று, பாபா வைக்கியில் உள்ள சிறிய மிருகக்காட்சிசாலையில் ஒரு விரைவு நடைப்பயணத்தை மேற்கொண்டார். மாலை 7 மணிக்கு, கொட்டும் மழையில் கப்பலுக்குத் திரும்பி வந்தனர்.

ஹவாயிலிருந்து அமெரிக்க அன்பர்களுக்கு மீண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

பாபா, மின்டாவிற்கு எழுதும் கடிதங்களில் எப்பொழுதும் ஒரு கவிதை இணைந்திருக்கும். இந்தக் கடிதத்தில் அவர் இவ்வாறு எழுதினார்:

**எனது எல்லா அன்பும் உங்களுக்கே!**
**என் அன்பான புறாவே,**
**கீழேயும் மேலேயும்**
**நான் உங்களுடன் இருக்கிறேன் எப்போதுமே!**

**நீங்கள் எக்கணமும் என் இதயத்தில் இருக்கிறீர்கள்!**
**நாம் ஒருபோதும் இணைபிரியாமல் இருப்பவர்கள்!**
**நீங்கள், என் இதயத்தின் ஒரு பகுதி!**
**நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பது உறுதி!**

பாபாவின் உடல்நிலை தொடர்ந்து சீரில்லாமல் இருந்தது. ஜனவரி 23ஆம் நாள், ஆதி தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "பாபாவின்

உடல்நிலை ஒவ்வொரு நாளும் விபரீதமாகத் தெரிகிறது. சில ஆன்மீக உள் பணிகளின் கடுமையான பளுவால் அவர் அவதியுற்றார்; இது அவரது கண்களுக்குக் கீழே தென்படும் இருண்ட நிழல்போன்ற வளையத்திலிருந்து தெளிவாகிறது. இரவு முழுவதும் அவருக்குத் தூக்கம் இல்லை. காக்காவும் தொடர்ந்து விழித்துக் கொண்டிருக்கிறார். பாபா அமைதியில்லாமல் இருந்த நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை, சாஞ்சி, பாபாவின் கால்களை அழுத்திக் கொண்டிருக்கிறார்."

ஜனவரி 25 அன்று பாபா மீண்டும் இதய வலியால் அவதிப்பட்டார். அன்று மதிய உணவு வேளையில், பாபா மண்டலியிடம், "**எனது நிலைமை மேலும் மோசமானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்தியா சென்றடைய இன்னும் பல நாட்கள் ஆகும்**" என்று குறிப்பிட்டார். அவர் அறிவுறுத்தியபடியே செய்வதாகக் கூறினார்கள்.

கப்பல் ஜனவரி 26 அன்று யோகோஹாமாவில் (YOKOHAMA) நின்றது. பாபாவும் மண்டலியும் தாமஸ் குக் (THOMAS COOK) அலுவலகம் சென்று, ஹாங்காங்கிலிருந்து கொழும்புக்குச் செல்வது குறித்து விசாரித்தனர். பாபா, 'அமைதியின்மை' காரணமாக வெளியே அதிக நேரம் செலவிடவில்லை. கப்பல் கோபி (KOBE) நகருக்கு வந்ததும் பாபா மறுபடியும் தாமஸ் குக் அலுவலகத்திற்குச் சென்றார். (பாபா ஒரு மண்டலியுடன், சிங்கப்பூரிலிருந்து இந்தியாவிற்கு விமானத்தில் பயணம் செய்வதையும் பரிசீலனை செய்தார்.)

ஹொனலுலுவில் இருந்து பயணம் தொடங்கியதும், பாபா, சாஞ்சியிடம், "இந்தக் கப்பலில் நான் தொடர்பு கொள்ள விரும்பும் 'ஆத்மா' ஒன்று உள்ளது" என்று தெரிவித்தார். அடுத்த நாள், பாபாவின் உடைகளை இஸ்திரி செய்ய சாஞ்சி சலவை அறைக்கு எடுத்துச் சென்றபோது, மார்கரெட் ஸ்காட் (MARGARET SCOTT) என்ற ஒரு பணக்கார பெண்மணியை சந்திக்க நேர்ந்தது; அவர் தன்னுடைய வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து, அவரது கணவரை விவாகரத்து செய்வது மட்டுமன்றி, தற்கொலை செய்வது குறித்து தீவிரமாக இருப்பதாகவும் கூறினார். மெஹர் பாபாவைப் பற்றி சாஞ்சி அவரிடம் எடுத்துரைத்து, பின்பு விவாகரத்துச் செய்ய வேண்டாம் என்ற பாபாவின் அறிவுறுத்தலையும், அந்தப் பெண்மணிக்குத் தெரிவித்தார். ஒவ்வொரு மாலையும் சாஞ்சி அவருடன் சில நிமிடங்கள் பேசினார்; அந்தப் பெண்மணி பாபாவை நேரில் சந்திக்க ஆர்வமாக இருந்தார்.

ஜனவரி 30ஆம் நாள் ஷாங்காய் (SHANGHAI) நகரில் இறங்கும்போது, வேறு எவரும் இல்லை என்றால், பாபா அவரை, கப்பல் மேடையில் சந்திப்பதாகத் தெரிவித்தார். பாபா மேலே வந்தபோது, பலர் அந்தப் பெண்மணியை சூழ்ந்து நின்றனர். அவருக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில், நொடிப்பொழுதில் அனைவரும் கலைந்து சென்றனர், அவர் பாபாவுடன் விலைமதிப்பற்ற சில நிமிடங்களைக் கழிக்க முடிந்தது. பாபா அந்தப் பெண்மணியை ஆறுதல்படுத்தி, நெற்றியில் சிலுவையின் அடையாளத்தைக் கோடிட்டு அவரை ஆசீர்வதித்தார்.

ருஸ்தம், ஷாங்காயில் பாபாவை சந்திக்குமாறு ஏற்கனவே தகவல் தரப்பட்டது. ஆனால் பாபா, மண்டலியுடன் கப்பலில் இருந்து இறங்கிய போது, ருஸ்தம் எங்கும் தென்படவில்லை. கவலையாக, அவர்கள் கப்பல்மேடையின் மேலும் கீழும் தேடி, கடைசியில் பொது அஞ்சல் அலுவலகத்திற்கும், தாமஸ் குக் அலுவலகத்திற்கும் சென்றனர், அங்குத் தற்செயலாக ருஸ்தம் தோன்றினார். ருஸ்தம் இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்திருந்தார், ஆனால் அவர், கப்பலின் பெயரைத் தவறாகக் குறிப்பிட்டதால் ஏற்பட்ட குழப்பத்தில், இரண்டு நாட்கள் ருஸ்தம் திண்டாடிப் போனார்; கையிலிருந்த பணமும் தீர்ந்து விட்டது. இந்நிலையில் அவர் பாபாவைப் பார்த்ததும் மிகுந்த மகிழ்ச்சியும், நிம்மதியும் அடைந்தார்; பாபாவின் 'திறவு கோல்'தான் ருஸ்தத்தை தாமஸ் குக் அலுவலகத்திற்கு, சரியான நேரத்தில் கொண்டு வந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அனைவரும் தங்கள் மதிய உணவை முடித்துவிட்டு, பின்பு ஷாங்காய் நகரைச் சுற்றிவந்து ருஸ்தம் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றனர். பாபா, ருஸ்தத்திற்கு சில அறிவுறுத்தல்களை வழங்கினார்; நோரினா, எலிஸபெத் இருவருடான பணிகளை மேற்பார்வையிட அவரது பிரதிநிதியாக நியூயார்க் மற்றும் ஹாலிவுட் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ருஸ்தம் புறப்படுவதற்கு முன்பு, பாபா, ருஸ்தம் இருவரும் தத்தமது மேல் கோட்டை மாற்றிக் கொண்டபோது, அது ருஸ்தத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் எனக் கூறினார். ருஸ்தம் தனது குடும்பத்தைப் பற்றி அக்கறை கொண்டிருந்ததால், பாபா அவரின் குழந்தைகளை கவனித்துக் கொள்வதாக உறுதியளித்தார்.

ருஸ்தத்தை அமெரிக்காவிற்கு அனுப்புவதில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அடுத்த நாள் பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டு, இதயம் வேகமாகப் படபடத்தது. அவர் இந்தியாவிற்குத் திரும்புவதில் மிக்க ஆர்வத்துடன் இருந்தார்.

**1935,** பிப்ரவரி **2** அதிகாலையில் பாபா ஹாங்காங் (HONG KONG) வந்தார். **1932**ஆம் வருடம் பாபாவை சந்தித்த இரண்டு பார்சிகள், ருஸ்தம் தேசாய் (RUSTOM DESAI), ருஸ்தம் பெஸ்தோன்ஜி (RUSTOM PESTONJI) ஆகியோர் அவரை வரவேற்கக் காத்திருந்தனர். அவர்கள் பாபாவையும் மண்டலியையும் கவுலூனில் (KOWLOON) அமைந்த பெஸ்தோன்ஜியின் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, காலை உணவை முடித்தப் பிறகு புகைப்படங்கள் எடுத்தனர். இருவரின் குடும்பத்தினரையும் சந்தித்த பின்னர், அன்றிரவு பாபா 'ஃபுஷிமி மாரு' (FUSHIMI MARU) கப்பலில் புறப்பட்டார்.

பாபாவின் அறை அசௌகரியமாக இருந்தது, உணவு நன்றாக இல்லை, அவரது உடல்நிலையும் சீரான பாடில்லை. ஒரு நாள் வயிற்று வலி, மறுநாள் தொண்டை வலி என தொடர்ந்தது. பின்பு பாபா தனது வாயில் வலி இருப்பதாகக் குறிப்பிட்டார்; மூன்றாம் நாள், தலை வலி, சில நேரங்களில் உடலில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் ஒரே நேரத்தில்

துடிதுடிப்பதாக முறையிட்டார். பிப்ரவரி 6ஆம் நாள் கப்பலின் ஜப்பானிய மருத்துவரை அணுகியபோது, அவர் பெரிய அளவில் எதுவும் இல்லை என்று கூறி, தொண்டைப்புண்ணுக்காக சிறிது போரிக் அமில நீரை பரிந்துரைத்தார்.

1935, பிப்ரவரி 7 காலை சிங்கப்பூரில் தரையிறங்கி, காலை, மாலை நேரங்களில் நகரை வட்டமிடுகையில், அவர்கள் தேநீர், குளிர்பானங்கள் விற்பனை செய்யும் ஓர் உள்ளூர் முஸல்மானை சந்தித்தனர். அனைவரும் சக இந்தியர்களாக இருப்பதை உணர்ந்து, சிறப்பாக விருந்தோம்பல் செய்தார். இரவு உணவிற்குப் பின்னர், அவர்கள் 'புதிய உலக பொழுதுபோக்கு பூங்கா'வைப் (NEW WORLD AMUSEMENT PARK) பார்வையிட்டனர்.

கப்பல் பினாங் (PENANG) நகரில் பிப்ரவரி 9 அன்று கடலில் நங்கூரமிட்டது. அங்கும் ஓரிரு மணி நேரம் நகரை வலம் வந்த பின்பு, மாலையில் கப்பல் புறப்பட்டது.

பாபாவின் பல் வலி மிகவும் கடுமையாக இருந்ததால் மெஹராபாத் திரும்பி வருவதில் அவசரம் காட்டினார். திடமான உணவு எதுவும் உண்ணவில்லை; திரவ ஆகாரங்களையே பருகி வந்தார்.

இலங்கையின் கொழும்பை நோக்கி பயணிக்கும் கப்பலின் வேகத்தைத் துரிதப்படுத்துமாறு பாபா மீண்டும் மீண்டும் சாஞ்சியை, கப்பலோட்டியிடம் அனுப்பினார். பாபாவைப் பற்றிய சில புத்தகங்களையும் அவருக்கு வழங்கும்படி சாஞ்சிக்கு அறிவுறுத்தப்பட்டது.

மெஹர் பாபா விரும்பியதற்கிணங்க, அவர்கள் பிப்ரவரி 13 அன்று கொழும்பு நகரை வந்தடைந்தனர். விக்டோரியா ஹோட்டலில் மதிய உணவை முடித்து, பின்பு கடற்கரைக்கு வந்தனர். ஆதி சீனியர் அவரது குறிப்பேட்டில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: "பாபாவின் உடல்நிலை மோசமாக உள்ளது. மேலும் அவர் தனது முகத்தோற்றம் மற்றும் கண்களுக்குக் கீழே தென்பட்ட இருண்ட நிழல்போன்ற வட்டங்கள் குறித்து தொடர்ந்து வினவுகிறார்.. அடிக்கடி உமிழ்நீர் வருவதைப் பற்றியும் புகார் கூறுகிறார்."

கப்பல் இந்தியாவை நோக்கிச் செல்லும் வேளையில், சுங்க, பாஸ்போர்ட் அதிகாரிகளால் (CUSTOMS AND PASSPORT OFFICERS) அனைவரும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டனர். பாஸ்போர்ட் அதிகாரி முரட்டுத்தனமாக நடந்துகொண்ட வேளையில், ஆதி சீனியர் அவருடன் பேசி நிலைமையை சரி செய்தார்.

1935, பிப்ரவரி 15 அன்று பாபா மண்டலியுடன் மதராஸ் வந்து ரயில் நிலையத்தில் சம்பத் ஐயங்கார், அவரது குடும்பத்தினர் மற்றும் பிற பக்தர்களை சந்தித்தார். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, பாபா 'பாம்பே' (BOMBAY) எக்ஸ்பிரஸ் ரயிலில் புறப்பட்டு, 16 அதிகாலை டோண்ட் (DHOND) ரயில் நிலையம் வந்து சேர்ந்தார்.

பாதிரி பேருந்துடன் பாபாவை எதிர்பார்த்து இருந்தார். போர் (BHOR) மாகாணத்தின் மஹாராஜா டோண்ட் ரயில் நிலைய மேடையில் பாபாவை அடையாளம் கண்டு, அனைவருக்கும் தேநீர் மற்றும் காலை சிற்றுண்டி

வழங்கியதை, பாபா ஏற்றுக்கொண்டார். சாஞ்சி, காக்கா இருவரையும் பாபா ஒரு முக்கியமான பணிக்காக மும்பைக்கு அனுப்பிவிட்டு, மெஹராபாத் திரும்பினார். பெஹராம், ஆதி ஜூனியர் பூனாவிலிருந்து வந்து பாபாவுடன் இணைந்தனர்.

பாபா, மோசமான உடல்நிலை மற்றும் பயணச்சோர்வால் பலவீனமாக உணர்ந்தார். பாதிரி, பாபாவிற்கு சிகிச்சை அளித்தார், பல் மருத்துவர் டாக்டர் பிம்பல்கரே (DR. PIMPALKHARE) அஹமதுநகரிலிருந்து அழைக்கப்பட்டார். பாபாவின் உடல்நலம் காரணமாக அவரது 41ஆவது பிறந்த நாள் அன்று (பிப்ரவரி 16) எந்த சிறப்பு விழாக்களும் இல்லாமல் நினைவுகூரப்பட்டது.

இந்தியா வந்த பிறகு, மெஹர் பாபா நாய்க்குட்டி சம்மியை சில நாட்கள் அவருடன் வைத்திருந்தார், பின்னர் அதை ஆதி சீனியர் கவனித்துக் கொண்டார். மெஹராபாத் வந்த பின்னரும் பாபா, சிங்கப்பூரில் தொடங்கிய உபவாசத்தைத் தொடர்ந்து - பால், நீர் மட்டுமே அருந்தினார். ஒரு மாதத்திற்குப் பிறகுதான் பாபா, மீண்டும் திட உணவை உண்ண தொடங்கினார்.

பெண் மண்டலி, அவ்வேளையில் மெஹராபாத் மேல் மலையில் தங்கி இருந்தனர். பாபா எடுத்து வந்த மூன்று மைனாக்களை நாஜாவின் கண்காணிப்பில் வைத்திருந்தார். பறவைகளுக்கு, குறிப்பாக புழுக்கள் உணவாக வழங்கப்பட்டன. இந்து திருமூர்த்திகளின் பெயரான பிரம்மா, விஷ்ணு, மஹேஷ் மைனாக்களுக்கு வழங்கப்பட்டது. அவை, பறக்கக் கற்றுக்கொண்ட வேளையில், பாபாவின் தோள்களில் துள்ளி விளையாடுவது வழக்கம். பாபா அவற்றைப் பெரும் பாசத்துடன் நடத்தினார், தனிப்பட்ட முறையில், க்ரீம் (CREAM), சப்பாத்தி போன்றவற்றை உணவாக அளித்தார்.

மற்றொரு மைனாவை பாபா, மெஹராவிடம் கொடுத்தார். மெஹரா மைனாவிற்கு "பாபா, டார்லிங்!" என்றழைக்கப் பயிற்சி அளித்தார். பாபா இந்தப் பறவையை மிகவும் நேசித்தார். பின்பு, பறவை நோய்வாய்ப்பட்டு, சிகிச்சை அளித்தபோதிலும், உயிரைத் துறந்தது. மைனா உயிரைத் துறந்த அவ்வேளையில் இறுதியாக "பாபா!" என்று அழைத்தது. மெஹராபாத் மேல் மலையில் புதைக்கப்பட்டு, கல்லறை எழுப்பியபோது பாபா, **"இது பெரும் பாக்கியம் படைத்தது"** என்று குறிப்பிட்டார்.

கோர்ஷெத் ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இதர பறவைகளை கவனித்துக்கொண்டார். ஒரு முறை, கோர்ஷெத் கையில் ஏற்பட்ட வெட்டு காயத்தால், தொற்றுநோயைத் தவிர்க்கும் நோக்கத்தில், மணி, மெஹரா இருவரும் பறவைகளை கவனிக்கத் தொடங்கினர். ஒரு நாள் அவர்கள் இருவரும் கூண்டை சுத்தம் செய்து, வெயிலில் உலர வைத்தனர். அவர்கள் நீரையும், உணவையும் உள்ளே வைத்துக் கதவை மூட மறந்ததால், சில பறவைகள் பறந்து சென்றன. ஆனால் லண்டனில் குயன்டினுடன் நடந்த இதுபோன்ற சம்பவத்திற்கு மாறாக, இந்த விபத்தில் பாபா அதிருப்தியைத் தெரிவிக்கவில்லை.

ஒரு கட்டத்தில், மூன்று மழலைக் கிளிகள் மெஹராபாத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அவை அருவருப்பான தோற்றத்தில் பலவீனமாக இருந்தன; ஆனால் சிறப்பான கண்காணிப்புடன் அழகான, வலுவான பறவைகளாக வளர்ந்தன. பாபா அவற்றிற்கு உணவளிப்பதில் மகிழ்ச்சி அடைந்தார்; பின்பு பறவைகள் தங்கள் உணவை ஜீரணிக்க உடற்பயிற்சிக்காக நடக்கவைக்கும்படி பெண் மண்டலிக்கு அறிவுறுத்தினார். பெண்கள், குழந்தைக் கிளிகளைத் தட்டிக் கேட்பது ஒரு சுவையான காட்சியாக இருந்தது, உணவு உண்டு வயிறு புடைத்தபடி அவை நடக்க முயற்சித்தன.

இந்தக் காலகட்டத்தில், இரண்டு மெலிந்து நலிந்த முயல்களும் மெஹராபாத் மலைக்குக் கொண்டு வரப்பட்டன; மேலும், பாபா அவற்றுடன் விளையாடுவதும், அவரது மடியில் அமர வைப்பதும் கண்கொள்ளா காட்சி. பெண் முயல், பின்பு குட்டி முயல்களை ஈன்றெடுத்து, பெண் மண்டலியின் கண்காணிப்பில் வளர்ந்தது.

பெண் மண்டலியின் வட்டம் உருவான நாளிலிருந்தே, மெஹரா பாபாவின் எழுத்துப்பலகையை வாசிப்பது வழக்கம்; மணி ஆசிரமத்தில் சேர்ந்த பின்னர், அவரும் அதைக் கற்றுக் கொண்டார். ஆண்களில், சாஞ்சி, ஆதி சீனியர், ஜால்பாய், ஆதி ஜூனியர் ஆகியோர் மிகவும் திறமையானவர்கள்.

மருத்துவ படிப்பை முடித்த டாக்டர் நீலு (DR. NILU), 1935 பிப்ரவரி 19 அன்று இரவு மெஹராபாத்திற்கு வந்தார். பாபா, டாக்டர் நீலுவின் தலைமையில் மருத்துவமனை ஒன்றை நிறுவப்போவதாக உறுதியளித்து, அவரை மெஹராபாத்தில் நிரந்தரமாகத் தங்க அனுமதித்தார். டாக்டர் நீலு அவரது உடமைகள் அனைத்தையும் 21ஆம் நாள் எடுத்து வந்தார்.

சாஞ்சி, காக்கா இருவரும் பிப்ரவரி 20 அன்று மும்பையிலிருந்து திரும்பி வந்தனர், ஆனால், அதே இரவில் காக்கா, மும்பைக்கு மறுபடியும் செல்லவேண்டியதாயிற்று.

பாபா மேற்கத்திய பயணத்தை முடித்து, மெஹராபாத் திரும்பியபோது, அவர் மிகவும் பலவீனமாக இருந்தார், அவரால் நடக்க முடியவில்லை. சில நாட்கள், அவரை ஒரு நாற்காலியில் அல்லது அவரது ரிக்ஷாவில் மேல் மலையிலிருந்து கொண்டு செல்ல வேண்டியிருந்தது. பாபாவின் உடல்நிலையால் சாஞ்சி மிகவும் பாதிக்கப்பட்டார். அதை விவரித்து அவர் எழுதியதாவது:

நாங்கள் மெஹராபாத்திற்கு வந்தபோது, பாபா, கீழே அவரது அறையில் இருந்துகொண்டு, மண்டலியுடன் அனைத்து விஷயங்களைப் பற்றியும் விவாதித்தார். அவர் மிகவும் மெலிந்து, சோர்வடைந்து, அவரது முகமும் உடலும் ஒரு பெரிய மாற்றத்திற்கு உள்ளானதாகத் தெரிந்தது. பிப்ரவரி 16ஆம் நாள், டோண்ட் ரயில் நிலையத்தில் நாங்கள் அவரை கடைசியாகப்

பார்த்ததிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டார், ஆனால், அவர் அப்போது கூட சரியாக இல்லை.


மண்டலி சுலபமாக நாற்காலியில் அவரை மேல் மலைக்கு எடுத்துச் சென்றது ஒன்றும் ஆச்சரியமல்ல; ஆனால், அவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவர் 'எல்லாம் வல்லவர்' மேலும் 'அனைத்தையும் அறிந்தவர்' என்றாலும், அவரது தோற்றம், பலவீனமான நிலை, அவர் கடந்து வந்த பயங்கரமான இடர்பாடுகளை, அவர் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து எளிதாகக் காண முடிந்தது. இவை அனைத்திற்கும் அவருடைய ஆன்மீக உள் பணியே காரணம் என்று ஒருவர் கற்பனை செய்யமுடியாது. ஒன்று மட்டும் நிச்சயம்: ஹாலிவுட்டில் இருந்தே அவர் மிகவும் மோசமாக அவதிப்பட்டு வருகிறார்; அவர் மேற்கொண்ட உபவாசம், ஓய்விலா இரவுகள் இவை அனைத்தும் உடல்நிலையை வெகுவாக பாதித்தது.

பிப்ரவரி 21 அன்று ராம்ஜூ, பாபாவைத் தனியாக சந்தித்து, பிற்பகலில் நாசிக் திரும்பினார். பெண்களுடன் நாசிக் செல்ல பாபா விருப்பம் தெரிவித்து, பிப்ரவரி 25ஆம் நாள் 'விலங்குகள் கூட்டத்தின்' ஒரு பகுதி (முயல்கள்) மலைக்குக் கீழே கொண்டு வந்து ஸரோஷிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று பாபாவின் உடல்நிலை சற்று சீரான நிலையில் அவரது தோற்றமும் பிரகாசமாகத் தெரிந்தது; அவர் ஓர் ஊன்றுகோலின் உதவியுடன் சிறிது நடந்து சென்றார்.

ஆதி சீனியரின் சகோதரி டாலி இன்னமும் கீழ் மெஹராபாத்தில் தனியாக விலகியிருந்தார். 'டாலியின் உடல்நிலை சீராகும் வரை, அவர் ஸாக்கோரியில் தங்க முடியுமா' என்று மஹாராஜைக் கேட்டுவர 25ஆம் நாள் ஆதி சீனியர், கலிங்கட் இருவரும் சென்றபோது, மஹாராஜ் ஔரங்காபாத் சென்றுவிட்டார்.

1935, மார்ச் 1 அன்று ரூஸி பாப், பாதிரியின் தாயார் ஃபிரீனிமாஸியுடன் பாபாவைப் பார்க்க வந்தார்; பாபா, ஃபிரீனிமாஸியின் நோய் குறித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவர் குணமடைந்துவிடுவார் என்று பாபா உறுதியளித்து, பூனாவிற்குச் செல்லும்படி அறிவுறுத்தினார். பாபாவின் துனியிலிருந்து எடுத்த சாம்பலை, நாற்பது நாட்களுக்கு, பாபாஜானின் கல் சமாதியில் வைக்குமாறு அறிவுறுத்தினார்.

மார்ச் 2ஆம் நாள் பூனாவிலிருந்து வந்த புவாஸாஹேபிற்கு பாபா சில அறிவுறுத்தல்களை வழங்கி திருப்பி அனுப்பினார். மறுநாள் ஆகா அலி வந்து பாபாவுடன் தங்கும் விருப்பத்தைத் தெரிவித்தபோது, பாபா அவரை மும்பையிலே இருக்குமாறு கூறி அனுப்பினார்.



**நாசிக் 1935**
அமர்ந்திருப்போர்:
மணி, ஸூனாமாசி,
சிறிய கோரஷெத்,
ஃபிரீனி, குல்மாய், வாலு,
நாஜா, மெஹரா





வட அமெரிக்கா வழியாக, பாபா, பயணம் செய்யும் போது, கனடாவின் கடுமையான குளிர்ந்த வெப்பநிலை அவரது ஆரோக்கியத்தைப் பெரிதும் பாதித்தது. மார்ச் மாதத்திற்குள், அவர் இன்னும் பலவீனமாக இருப்பதைக் காண முடிந்தது; இடையிடையே காய்ச்சல், தொண்டை வலி இருந்து வந்தது. இந்திய கோடைகாலத்தின் வெப்பம் தாங்க முடியாததாக இருந்ததால், இதமான காலநிலையைத் தேடி, பாபா 1935 மார்ச் 4 அன்று அதிகாலையில் பெண் மண்டலியுடன் நாசிக் நகருக்குப் புறப்பட்டார்; அங்குக் கோடை மாதங்களைக் (மார்ச் முதல் மே வரை) கழித்தார். சில மண்டலி மெஹராபாத்திலும், சாஞ்சி மும்பைக்குச் செல்லவும் அறிவுறுத்தப்பட்டனர்.

ஆதி சீனியர், பாதிரியுடன் அதே நாளில் மீண்டும் ஸாக்கோரிக்குச் சென்றபோது, மஹாராஜ், டாலியுடன் குல்மாய் இருப்பதானால் ஸாக்கோரியில் தங்க அனுமதித்தார். இதன் விளைவாக, டாலி மார்ச் 6ஆம் நாள் பீலாமாயுடன் நாசிக் அழைக்கப்பட்டார். இவ்வேளையில் கோஹெரின் சகோதரி ஸில்லா (SILLA), வாமன் ஸப்னிஸின் (WAMAN SUBNIS) மகள் இந்து இருவரும் பெண் மண்டலியுடன் தங்கினர்.

நாசிக் நகரில், பாபா ஸஹரன்பூர் (SAHARANPUR) வட்டாரத்தில் ஒரு பங்களாவில் தங்கியிருந்தார். ஸையத் ஸாஹேப், ஆட்டின் பால் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்பதால், ஆடு ஒன்றை பாபாவுக்காக வாங்கினார், ஆட்டுக்கு ஒரு குட்டியும் இருந்தது, இரண்டும் குறிப்பாக, பாபாவைச் சுற்றி வந்து அவருடன் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டன. பாபா, சப்பாத்தி, ரொட்டி துண்டுகளைக் கொடுத்து அவற்றை மகிழ்வித்தார். விளையாட்டுத்தனமாக, பாபா தாய் ஆட்டிற்கு எட்டும் தூரத்திலிருந்து தனது கையை உயரமாகத் தூக்கும் போது, ஆடு அதன் பின்னங்கால்களில் நின்றுகொண்டு, முன் கால்களை பாபாவின் மார்பில் வைத்து, உணவைப் பற்றிக்கொள்ளும்.

பிப்ரவரி மாதம் பைதூல், பெர்சியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அவர் அங்கு சிலரை சந்தித்து, பாபா சார்பாகப் பணிபுரிந்து, மார்ச் மாதம் திரும்பி வந்தார். அலி அக்பர் ஷாப்புர்ஸமன் (ALI AKBAR SHAPURZAMAN), முன்னாள் மெஹராஷ்ரம சிறுவன், பின்னர் ‘அலோபா’ (ALOBA) என்று அழைக்கப்பட்டார். ஒரு நாள் பைதூல் மும்பையில் ஓர் உணவகத்தில் காசாளராகப் பணிபுரிந்ததைப் பார்த்து, அலோபா அவரை அடையாளம் கண்டுகொண்டார், இருந்தும் அவருடன் எதுவும் பேசவில்லை; பைதூலைப் பார்த்தது அவருள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அலோபா, மெஹர் பாபாவைப் பற்றி மேலும் மேலும் சிந்திக்கத் தொடங்கினார், ஒரு நாள் இரவு தனது வேலையை விட்டுவிட்டு, பாபாவின் தரிசனத்திற்காக அஹமதுநகருக்கு வந்தவர், அங்கு ராவ்ஸாஹேபை சந்தித்தபோது, பாபா நாசிக் நகரில் தங்கியிருப்பது தெரியவந்தது. அலோபா ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் அலுவலகத்தில் பாபாவைக் கண்டுபிடித்து அவரது காலடியில் விழுந்தார்.

1927ஆம் ஆண்டில் மெஹராஷ்ரம பள்ளிக்கூடம் கலைக்கப்பட்டதிலிருந்து அலோபா, மெஹர் பாபாவைப் பார்க்கவில்லை. பாபா அவரை மும்பைக்குச் செல்லும்படி கட்டளையிட்டு, அழைப்பது வரை காத்திருக்குமாறு கூறினார். குருநாதருடனான அலோபாவின் தொடர்பு மீண்டும் தொடர்ந்தது, மேலும், பாபா வழக்கமாக ஒவ்வொரு மாதமும் முதல் நாளில் அவரை அழைத்துப் பேசினார்.

நாசிக் நகரில், ராம்ஜூ, ஆதி சீனியர் இருவருடன் பாபா, மோட்டார் பணிகள் மற்றும் ஸர்க்கிள் சினிமாவின் கணக்குகளை மறு ஆய்வு செய்தார். 1935 மார்ச் 12 அன்று நவல் தாலாட்டியின் வீட்டிற்குச் சென்றபோது, பாபா ஆதி சீனியரிடம் இவ்வாறு குறிப்பிட்டார், "**மண்டலி மற்றும் அவர்களோடு இருக்கும் நிதி உதவி சம்பந்தப்பட்ட தொடர்பைக் கைவிடும் எண்ணத்தில் உள்ளேன்; மேலும் மூன்று ஆண்டுகள் எவருக்கும் தெரியாமல், கைகளில் காசு, பணம் எதுவும் இல்லாமல், தொலைதூர மலையில் ஓய்வெடுக்க விரும்புகிறேன். குஸ்தாஜி மட்டுமே எங்களுக்கான உணவை யாசித்துக் கொண்டு வருவார். நீங்கள் நாசிக்கில் தங்கி, பெண் மண்டலி அனைவரையும் கவனித்துக் கொள்வதாக ஒப்புதல் அளித்தால் மட்டுமே, நான் அவ்வாறு செய்வேன்.**" ஆதி சீனியர் அதற்கு இணக்கம் தெரிவித்தார். ஆனால் அதற்கு பதிலாக, விஷ்ணு, ஆதி சீனியர் இருவரும் மெஹராபாத்தில் தங்க வேண்டும் என்றும், பாதிரி, கலிங்கட் இருவரும் இரவு கண்காணிப்பாளர்களாக பணிபுரிய வேண்டும் என்ற அவரது எண்ணத்தை பாபா முன்வைத்தார்.

ஷிரீன்மாய் அப்போது ஒரு நாள் நாசிக் வந்திருந்த வேளையில், குல்மாயுடன் மனஸ்தாபம் ஏற்பட்டது; இதனால் குல்மாய், ஆதி சீனியர் தங்கி இருந்த வீட்டிற்கு நடந்து சென்று 12 அன்று இரவை அங்கேயே கழித்தார். ஆதி, ஷிரீன்மாய், ஆதி ஜூனியர் இருவரையும் மார்ச் 13 அன்று காரில் பூனாவிற்கு அழைத்துச் சென்றார்.

மார்ச் 16ஆம் நாள், தியோலாலியைச் (DEOLALI) சேர்ந்த பல் மருத்துவர் டாக்டர் மினூ பட்டேனா (MINOO BHATENA), பாபாவின் பற்களுக்கு சிகிச்சை அளித்தார். பாபா, அஹமதுநகர் பல் மருத்துவர் இவரைவிடச் சிறந்தவர் என்று குறிப்பிட்டார். ஆதி சீனியர் தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "மொத்தத்தில், பாபா தனது உடல்நிலைக் குறித்து அடிக்கடி புகார் கூறுகிறார், மேலும் தொலைதூர மலைக்குச் சென்று ஓய்வு எடுப்பது குறித்தும் தொடர்ந்து சிந்தித்து வருகிறார்."

ஸரோஷ், மார்ச் 18ஆம் நாள் ரூசி பாப், மகன் ஜால் ஆகியோருடன் நாசிக் வந்தார். அந்த நாளின் பிற்பகுதியில், மெஹர் பாபா, ஃபிரீனி, ஆதி சீனியர், விஷ்ணு ஆகியோர் ருஸ்தத்தின் குழந்தைகள் தங்கி பயிலும் 'பார்ன்ஸ்' (BARNES) பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தனர்.

ருஸ்தம் இன்னமும் அமெரிக்காவில், நோரினா, எலிஸபெத் இவர்களுடன் திரைப்பட திட்டத்தில் பணிபுரிந்து வந்தார். மார்ச் 28ஆம் நாள், 'இறை உணர்வு திரைப்படக் காட்சி' பற்றி, மேலும் சில விவரங்களைக் கோரும் ருஸ்தத்தின் கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, பாபா சில விஷயங்களை ஆதி சீனியருக்கு விளக்கினார்.

இந்த நேரத்தில், நவல் தலாட்டியின் மனைவி தீனா உடல்நலமில்லாமல் இருந்தார். 1935, ஏப்ரல் 3 அன்று, டாக்டர் கபாடியா (DR. KAPADIA) அவருக்கு சிகிச்சை அளிக்கும் வேளையில் தவறான மருந்தைக் கொடுத்ததால் தீனா உணர்விழந்து கீழே விழுந்து, இதயத்துடிப்பு மிகவும் பலவீனமடைந்தது. டாக்டர் பயந்து போனார்; அப்போது ராம்ஜூவை சந்திக்கச் சென்ற பாபாவிற்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பாபா வந்ததும் டாக்டரைத் தட்டிக்கொடுத்து, **"கவலைப்பட வேண்டாம், இதயத் துடிப்பு சரியாகிவிடும்"** என்று கூறி அவரை ஆறுதல்படுத்தினார். பாபா பின்பு தீனாவிடம் சென்று அவர் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். சில நிமிடங்களில் அவரது இதயத் துடிப்பு வியக்கத்தக்க வகையில் சாதாரணமானது; தீனா இயல்பாக சுவாசிக்கத் தொடங்கினார். ஆச்சரியமும் நிம்மதியும் அடைந்த டாக்டர், பாபாவிடம், "நீங்கள் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தாமதமாக வந்திருந்தால், அவர் உயிரைத் துறந்திருப்பார்" என்று கூறினார்.

இந்தக் காலகட்டத்தில், நவல் ஏதோ சில குடும்ப விஷயங்களை எண்ணி கவலையுடன் காணப்பட்டார். ஏப்ரல் 15 அன்று மாலையில், பாபா அவரது இல்லத்திற்குச் சென்று இவ்வாறு அறிவுறுத்தினார்: **"உலகில் உங்கள் கடமைகளை மனசாட்சியுடன் செய்வதைத் தொடருங்கள், ஆனால் அவற்றின் விளைவுகளைப் பற்றி கவலைப்படவோ, அவற்றில் கவனம் செலுத்தவோ வேண்டாம். எல்லையில்லா பரம்பொருள் உங்களுக்குள் உள்ளது, நீங்கள் அந்தப் பரம்பொருளில் ஒரு பாகமாக இருக்கிறீர்கள்!**

**"நான் காளேமாமா, மாஸாஜி இருவரிலும் இருக்கிறேன். மாஸாஜிக்கு வயது 80, பற்கள் அனைத்தும் அப்படியே இருக்கின்றன. 60 வயதான காளேமாமாவைப் பாருங்கள் அவருக்கு, பல பற்களைக் காணவில்லை. 80 வயதில் தனது பற்கள் அனைத்தையும் வைத்திருப்பதில் மாஸாஜி மகிழ்ச்சியடைய வேண்டுமா? அதே வேளையில் 60 வயதிற்கு முன்னர் ஏன் இவ்வளவு பற்களை இழந்துவிட்டார் என்று காளேமாமா கவலைப்பட வேண்டுமா?**

**"மொத்தத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் மாயையில் எந்த அர்த்தமும் இல்லை. பற்களைக் கொண்டவனும் அவற்றை இழந்தவனும் - ஒன்று போலத்தான். ஆனால் வலுவான பற்களைக் கொண்ட ஒருவர், நான் அதற்கு மதிப்போ, அர்த்தமோ இல்லை என்று கூறுவதால் வேண்டுமென்றே அவற்றை அகற்றக்கூடாது.**

**“மறுபடியும் கூறுகிறேன், மாயையில் முற்றிலும் ஒன்றுமில்லை - ஒரு பூஜ்ஜியம் கூட இல்லை! எதுவும் இல்லை என்றால், அழிவு அல்லது மரணம் எப்படி இருக்க முடியும்? எவரும் இறக்கவும் இல்லை, எவரும் வாழவும் இல்லை!”**

மெஹர் பாபா விளக்கியதை நவல் ஏற்றுக்கொண்டார்.

இதற்கிடையில் மெஹர் பாபா மேற்கத்திய சீடர்களுடன் அவரது தொடர்பைத் தொடர்ந்தார். 1935, ஏப்ரல் 6 அன்று மின்டாவிற்கு எழுதிய கடிதத்தின் முடிவில், அவர் இந்த மழலை வரிகளைக் கையாண்டார்.

**எல்லாவற்றிலும் நான் என்னைப் பார்க்கிறேன்,**
**எல்லையற்றவராக என்னை நான் காண்கிறேன்;**
**ஆனால், வசந்த கால ரோஜாவைப் பார்க்கும்போது**
**ஷாலிமார் என் நினைவுக்கு வருகிறார்.**

வேறொரு கடிதத்தில் இவ்வாறு எழுதினார்:

**இளமையான ஷாலிமார் விரைந்தோடத் தயாராகுங்கள்,**
**என்னுடன் சொர்க்கத்திற்குப் பறக்கத் தயாராகுங்கள்!**

**இனிமையான ஷாலிமார், உங்கள் வாழ்க்கையை**
**எனக்குக் கொடுக்க ஆயத்தமாகுங்கள்;**
**என்னில் வாழுங்கள்!**

**இனிமையான ஷாலிமார் தயாராகுங்கள்!**
**அளவிறுதியற்ற பேரின்பம் அருகில் உள்ளது,**
**எந்த சந்தேகமும், எவ்வித பயமும் நிலையற்றது!**

**இனிமையான ஷாலிமார்**
**நீங்கள் எவ்வளவு இனிமையானவர்,**
**இனிமையிலும் இனிமையானவர்!**

இத்தகைய அன்பின் ஆழமான எண்ணங்கள், மேற்கத்திய கோபியர்களை, அவர்களின் கிருஷ்ணரிடமிருந்து பிரிந்திருக்கச் செய்தாலும், பாபாவின் பாதங்களைப் பற்றிக்கொண்டிருந்தன.

1935, ஏப்ரல் 16ஆம் நாள், குஸ்தாஜி, சாஞ்சி, விஷ்ணு, ஆதி சீனியர் ஆகியோருடன், மெஹர் பாபா நாசிக் நகரிலிருந்து 25 மைல் தொலைவில் அமைந்த ‘கோட்டி’ (GHOTI) என்ற குறுநகருக்கு ஓய்வெடுக்கச் சென்றார். அழகிய காட்சிகளும், குளிர்ந்த, புத்துணர்ச்சியூட்டும் தென்றலுடன் மலையில் பங்களா அமைந்திருந்தது. பாபா ஓரளவு நல்ல மனநிலையில் இருந்தார்; கிணற்றிலிருந்து குடிநீரை இறைத்தார். அவர் அந்த இடத்தை விரும்பினாலும், அமைதியின்றி, கவலையுடன் இருப்பதாகப் புகார் கூறினார், மண்டலி பாபாவின் ஓய்வுக்காக வேண்டிய அனைத்தையும் செய்தனர்.

குல்மாய், பெண்டு, ஜால்பாய் ஆகியோர் மறுநாள் வந்தனர். பாபா தனிமையில் ஏகாந்தவாசம் இருப்பதற்கு உகந்த இடத்தைத் தேடும்படி ஜால்பாயை அனுப்பிவைத்தார். ஜால்பாய் தேர்ந்தெடுத்த இடம் பாபாவிற்குத் திருப்தி அளிக்கவில்லை.

ஏப்ரல் 17 அன்று, மேற்கத்திய நாடுகளிலிருந்து பல முக்கியமான கடிதங்கள் வந்தன; அவை பாபாவை, நாசிக்கில் இருந்தாக வேண்டிய சூழ்நிலையை உருவாக்கின. இருப்பினும், மூன்று நாட்கள் பாபா அங்கேயே இருந்தார். அதற்குப் பிறகு, பாபா பால் மட்டுமே அருந்தி வந்ததால், உடலுக்கு மிகுந்த ஓய்வு தேவைப்பட்டாலும், கோடை மாதங்களில் கடுமையான வெப்பம் நிலவும் நேரத்தில் நாசிக் மற்றும் மெஹராபாத் இடையே அவர் தொடர்ந்து பயணம் செய்து வந்தார்.

1935, மே 3ஆம் நாள், ஒரு சில நாட்களுக்காக, பாபா மும்பைக்குச் செல்ல முடிவு செய்தார். குஸ்தாஜி, ஜால்பாய் ஆகியோருடன் ரயிலில் பயணம் செய்து, ஃபிரீர் (FRERE) சாலையில் அமைந்த பானுபாய் இல்லத்தில் தங்கினார். பாபா வேறு எவரையும் சந்திக்க விரும்பாததால், பாபாவின் வருகையைப் பற்றி வேறு எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை. காக்காவும் சாஞ்சியும் பாபாவை, பானுபாய் இல்லத்தில் சந்தித்தனர். பாபா, மலபார் மலை மற்றும் நகரத்தின் பிற பகுதிகளுக்கு விஜயம் செய்தார். பாபாவின் பல் மறுபடியும் தொந்தரவு செய்ததால் அவர் பல் மருத்துவரிடம் சிகிச்சைக்காகச் சென்றார்.

இரண்டு நாட்கள் மட்டுமே மும்பையில் தங்கியிருந்த பாபா, குறிப்பாக கைக்கோபாத், கொத்வால், கர்மான் மாஸி, பிளீடர் உள்ளிட்ட சில நெருங்கிய பக்தர்களை சந்தித்தார். மேலும், பாபா பரேலுக்குச் (PAREL) சென்று பெரிய கோர்ஷெத், பாதிரியின் தாயார் ஃபிரீனி மாஸி ஆகியோரையும் சந்தித்தார்.

மெஹர் பாபாவைப் பற்றி, சாஞ்சி கூறிய வெலிங்டன் (WELLINGTON) என்ற அயல்நாட்டு தம்பதியினரையும் பாபா சந்தித்தார். இவர்களின் வாழ்க்கையில் இருந்த சில சிக்கல்கள் அடுத்த ஆறு மாதங்களுக்குப் பிறகு சீரடையும் என்று பாபா உறுதியளித்தார். மே 4ஆம் நாள் மும்பையிலிருந்து புறப்பட்டு, பாபா, அன்று இரவு நாசிக் வந்தடைந்தார்.

1935, மே 9 அன்று பாபா தனது இருப்பிடத்தை ஆண், பெண் மண்டலியுடன் மீண்டும் மெஹராபாத்திற்கு மாற்றினார். மே 12ஆம் நாள் நோரினாவுக்குத் தொலைத்தந்தி அனுப்பி, ருஸ்தத்தைத் திரும்ப அனுப்புமாறு பாபா, சாஞ்சிக்கு அறிவுறுத்தினார். கோடை வெப்பத்திலிருந்து சிறிது நிவாரணம் பெற, பாபா 15ஆம் நாள் மண்டலியை 'ஹேப்பி வேலி'க்கு (HAPPY VALLEY) அழைத்துச் சென்றார். பாபா நிதானமாக ஓய்வெடுக்கும் நேரத்தில், தற்போதைய உலக அரசியல் நிலைமைக் குறித்து விவாதித்தார். ஜோஸ்ஃப் பிட்ஸூட்ஸ்கி (JOSEF PITSUDSKI) என்ற போலந்து தலைவர் சமீபத்தில் காலமானார், அவர் மிகவும் நேர்மையான நபர் என்று பாபா கருத்துத் தெரிவித்தார்.

மெஹறாபாத்தில், பாபா தனது ஏகாந்தவாசத்தைப் பற்றி விவாதிக்க, கூட்டம் ஒன்றை நிகழ்த்தினார். அதற்காக, பாபா ஏதேனும் வசதியான இடத்திற்குச் செல்லவும், அதை அனைவரிடமிருந்தும் இரகசியமாக வைக்கவும் விரும்பினார். அவர் இல்லாத நேரத்தில் மெஹறாபாத்தின் நிர்வாகம் குறித்து மே 17 அன்று பெண்டு, பாதிரி இருவருக்கும் விரிவான அறிவுறுத்தல்களை வழங்கினார். 19ஆம் தேதி, அவர் அனைவரிடமும், "**நான் இப்போது ஏழு மாதங்கள் இந்தியாவில் இருக்க முடிவு செய்துள்ளேன். மே 23 அன்று நான் நாசிக் சென்று அங்கே பத்து நாட்களும், தொடர்ந்து மும்பையில் மூன்று நாட்களும் இருக்க உள்ளேன். அதற்குப் பின்னர் எனது செயல்பாடுகள் இரகசியமாக வைக்கப்படும்.**

"**பல வருடங்கள், நீங்கள் எல்லா வழிகளிலும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து, எல்லா வகையான சோதனைகளையும் தாங்கிக் கொண்டீர்கள். எனவே இன்னும் ஒரு வருடம், எனக்கும் எனது பணியிலும் உதவியாக இருங்கள். ஒருவேளை, நான் எனது மௌனத்தைக் கலைக்கக்கூடும். எதுவாயினும், நீங்கள் உங்கள் கடமைகளை கவனமாகச் செய்துகொண்டு இங்கேயே இருங்கள்.**"

மெஹர் பாபா பின்பு குஸ்தாஜி, ராவ்ஸாஹேப் ஆகியோருடன் தனித்தனியாக, பயண ஏற்பாடுகள் குறித்து விவாதித்து, இருவரும் உடன் செல்வதை வெளிப்படுத்தினார். பாண்டிச்சேரி, கோவா, நீலகிரி மலைகள், காஷ்மீர், டார்ஜிலிங், அஜ்மீர், உதய்பூர் ஆகிய இடங்களில் ஏகாந்தவாசத்திற்கு உகந்த பகுதிகளைப் பற்றி விசாரிக்க பாபா, சாஞ்சியிடம் கூறினார். சகனுக்கும் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

சாஞ்சியின் நேர்மையான, அயராத விசாரணைகள் மிகவும் இரகசியமாக இருந்தபோதிலும், அவர் இவ்வாறு எழுதியிருந்தார், "பாபா எப்போதுமே இல்லாத, தேவையற்றதாகக் கருதப்பட்ட அல்லது விடுபட்ட ஒன்றை (தகவல்) வேண்டுமென்றே கேட்பதும், விரும்புவதும் வழக்கம். இது அவரது பயிற்சியும், வேரூன்றிய பலவீனங்களை வெளியே கொண்டு வரும் முறையும் ஆகும்."

1935, மே 20, சத்குரு உபாஸனி மஹாராஜின் 65ஆவது பிறந்த நாளன்று, பாபா மண்டலிக்கு, தர்பூசணி பிரசாதமாக வழங்கினார். அன்றைய தினம் சிறப்பான மனநிலையில் மிகவும் மகிழ்ச்சியான நாளாகக் கழிந்தது. 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு மஹாராஜுக்கு ஏதேனும் சிறப்பு தரிசன நிகழ்ச்சிகளில் மட்டுமே பாபாவால் ஆரத்தி தவறாமல் நிகழ்த்தப்பட்டது, மெமோவும் ஆதி ஜூனியரும் அன்றிரவு பூனாவிலிருந்து வந்தனர்.

மெஹர் பாபா மே 23 அன்று நாசிக் சென்று தவ்லத்மாய், மகள் ஃப்ரீனி, தீனா தலாட்டி, ஆதி சீனியர், ராம்ஜூ ஆகியோரை சந்தித்தார். டாக்டர் நீலுவும்

மும்பையிலிருந்து வந்தார். மே 25ஆம் நாள் பீலாமாய் அவரது குழந்தைகளுடன் கராச்சிக்குத் திரும்பிச் சென்றார்.

1935 மே 30ஆம் நாள், குஸ்தாஜி, ஜால்பாய், குல்மாய் ஆகியோருடன் மெஹர் பாபா, மும்பைக்குச் சென்று மீண்டும் பானுபாயின் இல்லத்தில் தங்கினர். அடுத்த நாள் தாதர் நகரில் புதிதாகக் கட்டப்பட்ட, நௌரோஜி மற்றும் பச்சாமாய் தாதாசாஞ்சியின் 'பானு' மான்ஷனில் (BANU MANSION) மதிய உணவுக்காக, பாபா அழைக்கப்பட்டார். அங்கு, பாபா, தாதாசாஞ்சியின் மகள்கள், அர்னவாஸ் (ARNAVAZ - 17), நர்கிஸ் (NARGIS - 13), ரோடா (RODA - 11), மற்றும் அவர்களது இளம் மகன்களான தெஹம்தன் (TEHEMTAN - 8), ஹோமா (HOMA - 6), தாரா (DARA - 4), நோஸர் (NOZAR - 2), ஆகியோரை சந்தித்தார். நௌரோஜி, சாஞ்சியின் பெரிய சகோதரர், அவரது முழு குடும்பமும் பாபாவின் அரவணைப்பில் இருந்தது.

மே 31 அன்று, பாபாவை சந்திக்க வந்த மானேக் ராஞ்சிக்கு (MANECK RANJI) அவர் இவ்வாறு விளக்கமளித்தார்:

**பிரபஞ்சங்களின் ஆக்கல், அழித்தல் இரண்டையும் என்னால் மிகத் தெளிவாகக் காண முடிகிறது. அவை எண்ணிலடங்காதவை என்றாலும் என்னால் அவற்றை எண்ண முடியும். அவை எனக்கு மிகவும் தெளிவாக உள்ளன. அவதார புருஷர் மற்றும் சத்குருக்கள் மட்டுமே அவர்களின் பௌதீக கண்களால் அதைப் பார்க்க முடியும்; வேறு எவராலும் முடியாது. மக்கள், இதை ஓர் அற்புதமான காட்சியாகக் கருதுகிறார்கள். ஆனால் இறைநிலையை உணர்ந்து ஒவ்வொரு கணமும் நித்திய ஆனந்தத்தை அனுபவிக்கும் ஒருவருக்கு அது ஒன்றுமில்லை.**

**நான் இந்தப் பௌதீக உலகிற்கு இறங்கி வந்துள்ளேன்; என்னுடைய இறை பணிக்காக நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டும். இதை நீங்கள் புரிந்து கொள்வது கடினமானது. இந்த மாயை எனும் உலகப்பொருள் இடர்பாடுகள் நிறைந்தது; அதே வேளையில் பரம்பொருள் உண்மையானது; எந்தச் சிக்கல்களும் இல்லாதது - ஒன்றானது, பிரிக்க முடியாதது, பரிபூரணமானது!**

குல்மாய் ஜூன் 1ஆம் நாள் தனது மகள் பிரோஜாவுடன் (கணவருடன் மும்பையில் வாழ்ந்து வந்தார்) பாபாவை சந்தித்தார்.

1935, ஜூன் 2ஆம் நாள் மெஹர் பாபா, ஒரு குறுகிய பயணமாக, பூனாவில் மெமோவை சந்தித்து, பின்பு தலைகாவ்மில் வாழ்ந்து வந்த ராம்ஜூவின் குடும்பத்தினரையும் சந்தித்தார்.

இந்த வருகைக்குப் பிறகு, ஜூன் 4 அன்று பாபா மறுபடியும் மும்பை சென்றார்; பானுபாய் இல்லத்தில் தங்கியிருந்த வேளையில், ஜூன் 6ஆம் நாள் நௌரோஜியின் 'பானு' மான்ஷனில், சுமார் 40 பக்தர்களுக்கு, பாபா,

ஏகாந்தவாசத்தை தொடங்குவதற்கு முன்னால் தரிசனத்திற்கான ஓர் அரிய வாய்ப்பை அளித்து, பின்வரும் செய்தியை வழங்கினார்:

**என் அன்பர்கள் அனைவருக்கும் ஏற்கனவே விளக்கியது போல், ஒரு வருடம் மலைகளில் ஏகாந்தவாசம் மேற்கொள்ள, நான் இன்று இங்கிருந்து புறப்படுகிறேன். இந்த ஏகாந்தவாசம் உலகளாவிய அளவில் படைப்புகளுடனான தொடர்புடன், படிப்படியான எதிர்கால வெளிப்பாட்டை நோக்கத்தில் கொண்டதாகும். இந்த இடம் நீண்ட காலத்திற்கு முன்பே முடிவு செய்யப்பட்டது, நான் அங்குச் செல்லும் வரை அது வேறு எவருக்கும் தெரியாது, மண்டலியில் இருவர் என்னுடன் இருப்பர். மெஹராபாத், அஹமதுநகர், நாசிக், பூனா, மும்பை ஆசிரமங்களில் வாழும் அனைவருக்கும் வெவ்வேறு கடமைகள் வழங்கப்பட்டுள்ளன.**

**உலகில் வாழும் உங்களுக்கு, உங்கள் குடும்பங்களின் அன்பானவர்கள் மற்றும் மனித குலத்திற்கான உங்கள் கடமைகளை நீங்கள் அறிவீர்கள்; மேலும் ஒவ்வொருவரும் அந்தக் கடமையை மகிழ்ச்சியுடன் செய்வதோடு, எதிர்வரும் அனைத்தையும் தைரியமாகவும், அமைதியாகவும் எதிர்கொண்டு, 'துறவறம்' என்ற தவறான கருத்துடன் அல்லது ஏதோ மலைகளுக்குச் சென்று வாழும் விருப்பத்துடன் அதைத் தவிர்க்க முயற்சிக்கக் கூடாது.**

**கடவுள், பரமாத்மா அல்லது உண்மைப்பொருள் என்று ஒருவர் எப்படி அழைத்தாலும் அது மலைகளில் அல்லது குகைகளில் மட்டும் காணப்படுவதில்லை. உண்மையான மதம் அல்லது ஆன்மீகம் என்பது ஒருவரின் சொந்த கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்து, சகோதரத்துவ மனப்பான்மையுடன் வாழ்க்கையின் அனைத்து விஷயங்களை, விசித்திரங்களை தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் எதிர்கொண்டு, பிறருக்கு தன்னலமற்ற சேவை செய்வதாகும். அன்பெனும் ஒளியூட்டி, வழிகாட்டும் சக்தியால் இவை அனைத்தும் எளிதில் சாத்தியமாகும்.**

**ஒரு நீண்ட பிரிவினை பற்றிய யோசனை, நேசிப்பவர்களுக்கு மிகவும் வேதனையானது, மேலும் அன்பான பக்தர்கள் அதை எவ்வளவு தீவிரமாக உணர்வார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அன்பு எப்போதுமே அப்படித்தான்: அது பிரிவில் ஒன்றிணைகிறது. பிரிவு எவ்வளவு அதிகமாகுமோ, அதற்கேற்ப அன்பும் அவ்வளவு ஆழமாக வளர்கிறது. தீவிரமான பிரிவின் சோதனைகள் மூலம்தான் அன்பால் துடிக்கும் இதயங்கள் நெருங்கி வருகின்றன.**

**அன்புக்காக அனைவரும் கஷ்டப்பட வேண்டும். இயேசு தனது வாழ்நாள் முழுவதும் அன்புக்காகத் துன்பப்பட்டார். நான் ஒன்றும் குறைந்த அளவில் பாதிக்கப்பட்டவன் அல்ல, இன்னும் அதிக அளவில் துன்பங்களைத் தாங்கவேண்டும். இயேசுவைக் கல்லால் அறைந்து சிலுவையில் அறையப்பட்ட காலங்களை விட, இந்த காலங்கள் ஒன்றும்**

**நல்ல காலங்கள் அல்ல. உங்களில் ஒருவரும் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு, ஒவ்வொரு கணமும் நான் சிலுவையில் அறையப்படுகிறேன்.**

**ஏகாந்தவாசம் மேற்கொள்வது மனிதகுலத்தின் மகத்தான பணிக்காக; இந்தப் பணி செய்யப்பட வேண்டும். இதை எண்ணி சோகமாகவோ, ஏமாற்றமாகவோ உணரக் கூடாது; ஆனால் எப்போதும் அனைவருடனும் அன்பான, இணக்கமான உணர்வைக் கொண்டிருக்க வேண்டும்.**

**நினைவில் கொள்ளுங்கள், நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், எதிர்வரும் சோதனை காலத்தில், அனைத்தையும் அமைதியாக எதிர்கொள்ளவும், தாங்கவும் உங்கள் முயற்சிகளில் உங்களுக்கு எப்போதும் உதவுவேன்.**

மெஹர் பாபா, பானுபாய் இல்லத்திற்குத் திரும்பி வரும் வழியில், ஃபிரீனி மாஸியை சந்திக்க, காரை நிறுத்தினார். நியூயார்க்கிலிருந்து இந்தியா திரும்பிய ருஸ்தம், அன்று பிற்பகல் பாபாவை சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். பின்பு, நோரினா, எலிஸபெத் இருவருக்கும் பாபா கீழ்வரும் கடிதம் ஒன்றை எழுதினார்:

**6 ஜூன் 1935**

**திரைப்படப் பணிகள் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படுவதாக ருஸ்தம் மூலம் தெரிய வந்துள்ளது. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், இதுவரை நீங்கள் எடுத்த முயற்சிகள், முதலீடு, தியாகங்கள் அனைத்தும் வீணாகப் போவதை நான் விரும்பவில்லை. எனக்கு இந்தத் திரைபடம் தேவை; அது தயாரிக்கப்பட வேண்டும். எனவே, என் அன்பர்களே, சோர்வடைய வேண்டாம், அதே ஆர்வத்தோடும் உற்சாகத்துடனும் அதற்கான பணியைத் தொடருங்கள்; எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் நான் அங்கு வரவேண்டிய தேவை இருந்தால் தெரியப்படுத்துங்கள். நான் எனது ஏகாந்தவாசத்தை நிறுத்தி, உங்களுக்கு உதவுவதோடு மேற்கத்திய நாட்டு மலைப்பிரதேசங்களில் எஞ்சிய ஏகாந்தவாச பணியை மேற்கொள்வேன்.**

**எனது சிறப்பான அன்பர்களாகவும், என்னுடன் நெருங்கியவர்களாகவும் இருக்கும் நீங்கள், எனது அன்பின் நிமித்தம் அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இது ஒரு சோதனைக் காலம். இதன் வழியாக எனது அன்பர்களாகிய உங்கள் அனைவரையும் நான் அழைத்துச் செல்வேன்; ஆனால் எல்லா சூழ்நிலைகளிலும், வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொள்ளும் அனைத்து எதிர்ப்பையும், சிரமங்களையும் தாண்டி, துன்பம், பிரிவினை ஆகியவற்றின் கீழ், நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்க விரும்புகிறேன். பிரச்சினை மற்றும் எதிர்ப்பை உருவாக்கும் நபர்கள் அறியாமையில் மூழ்கி இருப்பவர்கள்; 'அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது' என்பதை எப்போதும் நினைவில்**

கொள்ளுங்கள். அவர்களின் பங்கை அவர்கள் செய்கிறார்கள். நீங்கள் செய்யவேண்டியதை தைரியமாக, அமைதியாக, மகிழ்ச்சியுடன் செய்யுங்கள்.

என்னை மிகவும் ஆழமாக நேசிக்கும் நீங்கள் இவ்வளவு காலம் காத்திருப்பது மிகவும் நீண்டது, நெடியது என்று எனக்குத் தெரியும்! ஆனால் நான் உங்களிடம் கூறியது போல, பணி செய்யப்பட வேண்டும். நான் செய்ய வேண்டிய மிகப் பெரிய பணியில், எனது நெருங்கியவர்களாகிய நீங்களும் பங்கேற்க வேண்டும் என்பதால், எதுவும் உங்களை அச்சுறுத்தவோ, உங்கள் பங்கில் அங்கம் வகிப்பதில் எந்தத் தடையும் இருக்கவோ கூடாது.


நீங்கள் அனைவரும் உருவாக்கிய அன்பிற்கு இடையில், எதையும் தடையாக இருக்க விடமாட்டீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

எப்படியிருந்தாலும், நீங்கள் அனைவரும், எனது அன்பான கோபியர்கள், நான் உங்களிடம் தனித்தனியாகக் கூறிய அனைத்தையும் நினைவில் கொள்ள வேண்டும், அதன்படி செயல்பட உங்களால் இயன்றவரை முயற்சிக்க வேண்டும்; சோகமாகவோ, வருத்தம் தோய்ந்த முகத்துடனோ அல்லது ஏமாற்றமாகவோ உணரக்கூடாது, எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்க வேண்டும்; உங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து அமைதியாகவும் பொறுமையாகவும் வரும் அனைத்தையும் எதிர்கொள்ளுங்கள். 'நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்', உங்கள் அனைத்து விஷயங்களையும் எதிர்கொள்ள, எனது பணியில் உங்கள் பங்கை வகிக்க மற்றும் மகிழ்ச்சியாக இருக்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் உங்களுக்கு உதவுகிறேன் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம்.


எனவே, இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், முயற்சியைத் தொடருங்கள், மும்முரமாக இருங்கள், உற்சாகத்தைத் தளரவிட வேண்டாம். இதை வெளியே கொண்டு வருவதற்கான உங்கள் முயற்சிக்குப் பின்னால் நான் இருக்கிறேன்.

எனது பிரியமான உங்களுக்குத் தெரியும், நான் உங்களை எப்படி நேசிக்கிறேன் என்று, மேலும் என் அன்பர்களாகிய நீங்கள் என்னை எவ்வளவு ஆழமாக நேசிக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்; உங்கள் பிரியமான பாபாவுக்காக, நீங்கள் எவ்வளவு தீவிரமாகப் பிரிவை உணர்கிறீர்கள், துன்பப்படுகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

ஏகாந்தவாசத்தில் இருந்தாலும் கூட நான் உங்கள் அனைவருடனும் தொடர்பில் இருப்பேன், நீங்களும் தொடர்பில் இருந்து வழக்கம்போல் எனக்கு எழுதுங்கள்.



மவுன்ட் அபு, 1935 ராவ்ஸாஹேப், சாஞ்சி, மெஹர் பாபா, குஸ்தாஜி.



மெஹர் பாபா, 1935, மெஹராபாத், தகர குடிலில் ஏகாந்தவாசம்

# ஏகாந்தவாசம், உபவாசம்

**(Seclusion & Fasting)**

மெஹர் பாபா, மும்பையிலிருந்து, சாஞ்சி, குஸ்தாஜி இருவருடன் 1935 ஜூன் 6 அன்று ரயிலில் புறப்பட்டார். ரயில் நிலையத்திற்கு, பக்தர்கள் எவரும் வர அனுமதிக்கப்படவில்லை. ராவ்ஸாஹேப் (சாஞ்சி குறிப்பிட்டது போல் - இமயமலையில், எந்தவித கடினமான சூழ்நிலையையும் தாங்கும் திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்டவர்.) ஏற்கனவே பரோடாவிற்குப் புறப்பட்டுவிட்டார். ருஸ்தம், ராம்ஜூ, ஆதி சீனியர் ஆகியோர் மறுநாள் நாசிக் திரும்பிச் சென்றனர். பாபா ஏகாந்தவாசத்திற்காகப் போகும் இடம் இரகசியமாக இருந்தாலும், அவர் 'இமயமலையில் எங்கேயேனும்' செல்வதாக, பக்தர்களுக்குச் சுட்டிக்காட்டினார். உண்மையில், மெஹர் பாபா 'மவுண்ட் அபு' (MOUNT ABU) மலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

ரயிலில் மூன்றாம் வகுப்பில் அமைதியும், தூக்கமும் இல்லாத இரவைக் கழித்தனர். சாஞ்சி 'சக பயணிகளின் குறட்டை ஒலியில் கல்லறையிலிருந்து பிணமும் விழித்துக் கொள்ளும் போலத் தோன்றியது' எனக் குறிப்பிட்டிருந்தார். வழியில் உதய்பூர் (UDAIPUR) நகருக்குத் தொடர்ந்து செல்ல ரயில்களை மாற்ற வேண்டியிருந்தது. வானிலை வெப்பமாகவும், அருகில் தண்ணீருடன் கூடிய வசதியான இடம் அமையாததால், ஜூன் 9ஆம் நாள் அஜ்மீர் (AJMER) நகருக்குச் சென்றனர்.

அஜ்மீரில் மெஹர் பாபா, சத்குரு குவாஜா முய்னுதீன் கிஸ்தியின் (QUTUB KHWAJA MU'INUDDIN CHISHTI) சமாதிக்குச் சென்று மரியாதை செலுத்தினார். மண்டலி காரில் வெளியே இருந்தனர். பாபா உள்ளே சென்ற வேளையில், தாடியுடன் இரண்டு வயதான பெரியவர்கள் திடீரெனத் தோன்றி, பாபா வந்த காரின் இருபுறமும் நின்றனர். பாபா தர்காவிலிருந்து வெளியே வந்தபோது, இருவரும் காரின் அருகே அமைதியாக நின்று கொண்டிருந்தனர். வழக்கத்திற்கு மாறான செயலைக் கண்டு குஸ்தாஜி, ராவ்ஸாஹேப், சாஞ்சி மூவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஆனால் பாபா, "**நான் இங்கு தங்கியிருக்கும் காலத்தில் எனக்கு சேவை செய்ய குவாஜா ஸாஹேப் இவர்களை அனுப்பியுள்ளார்**" என்று குறிப்பிட்டார்.

அதே நாளில் மவுண்ட் அபுவைச் சென்றடைந்து , அரசாங்க விடுதியில் தங்கினர். சுற்றுப்புற சூழ்நிலைகள் அமைதியாக இருந்தாலும் பாபா, சாஞ்சியிடம் வேறு சிறந்த இடத்தைத் தேடுமாறு கூறினார். இரண்டு மணி நேரத்தில் சாஞ்சி மூன்று அல்லது நான்கு வீடுகளை ஆய்வு செய்தார், ஆனால் அவை பாபா விரும்பும்படி இல்லை. ஃபிங்கர்நெயில் ஏரிக்கு (FINGERNAIL LAKE) அருகில் டோங்க் (TONK) என்ற வழக்கறிஞரின் வீடு இருந்தது. அருகிலமைந்த மலைகளில் குகைகளும் இருந்ததால் பாபாவிற்கு உகந்ததாக இருக்கும் எனத் தோன்றியது. ஆனால் ஜூன் 11 அன்று, அவர்கள் ஊழியர்களின் குடியிருப்புக்குச் (ஒரு பள்ளி அல்லது பொது நிறுவனம்) சென்று தங்கினர். அதே

மாலையில் பாபா அங்கிருந்து புகழ்பெற்ற தில்வாரா (DILWARA) கோயில்களுக்கு நீண்ட தூரம் நடந்து சென்றார்.

ஏகாந்தவாசத்திற்கு ஏற்றதான இடத்தைத் தேடும் முயற்சி மேலும் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்தது. ஜூன் 13 அன்று காலையில் பாபா 'அர்புடா' (ARBUDA) கோயிலுக்கு நடந்து சென்றார். பிளீடர், முன்னர் அலைந்து திரிந்த காலத்தில் ஆக்கிரமித்திருந்த ஒரு குகையை, பாபா காண நேர்ந்தது. பிளீடர், மெஹர் பாபாவின் பெயரை, கல் சுவர்களில் செதுக்கியிருந்தார். பாபா அந்த இடத்தை விரும்பி, **'இந்தக் குகையில் நான்கு நாட்கள் நான் ஏகாந்தவாசம் இருப்பது நல்லது'** என்று கருத்துத் தெரிவித்தார்.

அன்று மாலை பாபா, மவுண்ட் அபுவில் மிகவும் பிரபலமான 'சூரிய அஸ்தமன முனைக்கு' (SUNSET POINT) விஜயம் செய்தார், அங்கு ஒவ்வொரு மாலையும் மக்கள் பெருமளவில் வந்து அந்தக் காட்சியைக் கண்டுகளிப்பது வழக்கம்.

பாபா, மண்டலியுடன் மறுநாள் காலையில் அர்புடா குகைக்குச் சென்றார். கோயிலின் பராமரிப்பாளர் பிளீடரைத் தெளிவாக நினைவு கூர்ந்து, மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெற ஆர்வமாக இருந்தார். பாபா அவரது அடையாளத்தை இரகசியமாக வைக்க விரும்பியதால், அந்த மனிதரைத் தவிர்ப்பதற்காக, அவர் தன்னை 'மெஹர் பாபாவின் சீடர்களில் ஒருவராக' எடுத்துக்கூறி கடந்து சென்றார்.

1935 ஜூன் 17 அன்று மவுண்ட் அபுவில் இருந்தபோது, அவர்களின் உரையாடல் பெர்சியா மற்றும் ஈரான் நாட்டு மன்னன் ஷாவின் (SHAH) பக்கம் திரும்பியது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**ரேஸா ஷா** (REZA SHAH), **இன்றைய சூழ்நிலையில் பெர்சியாவில் மாற்றங்களைக் கொண்டு வர முடியாது; நவீன கொள்கைகளுக்கு ஏற்ப அந்த நாட்டு மக்களின் மனநிலை மற்றும் அணுகுமுறையை அவர் புதுப்பிக்க முடியாது. அவர் அசல் நோக்கத்தை இழந்துவிட்டார், அரியணையில் நீண்ட காலம் நீடிக்க மாட்டார். அவரது இப்போதைய கூக்குரல் அனைத்தும் தைரியத்தின் அடையாளம் அல்ல, ஆனால் அவருக்குள் மறைந்திருக்கும் கோழைத்தனத்தின் வெளிப்பாடு. ஜெர்மனியின் ஃபீல்ட் மார்ஷல் ஹிண்டன்பர்க்** (FIELD MARSHALL HINDENBURG) **காட்டிய துணிச்சலின் உண்மையான உணர்வுநிலைக்கு நேர் மாறானது**.

ஜெர்மனிக்கு ஒரு முடியாட்சி சிறப்பாக இருக்கும் என்று ராவ்ஸாஹேப் குறிப்பிட்டார், ஆனால் பாபா "**இல்லை**" எனத் திட்டவட்டமாக பதிலளித்தார்.

ஜூன் 18ஆம் நாள், மதிய உணவு வேளையில், குஸ்தாஜி, சாஞ்சி, ராவ்ஸாஹேப் ஆகியோருக்கு மெஹர் பாபா 'மண்டலி' குறித்து கருத்துத் தெரிவித்தார்: **எனது மண்டலி உறுப்பினர்கள் மூவகையைச் சார்ந்தவர்கள்: முதல் வகை, உப்பு கலந்த பாலை ஒத்தவர்கள்; இரண்டாவது, மாசு கலந்த பாலைப் போலவும், மூன்றாவது, பால், சர்க்கரை இரண்டின்**

**கலவைப் போன்றவர்கள். பால் - அன்பு, சேவை, பக்தி, கீழ்ப்படிதல் போன்ற பலவற்றுடன் ஒப்பிடத்தக்கது; இவை அனைத்தும் மண்டலி என்னில் வைத்திருக்கும் பண்பின் கூறுகள். ஆனால் இந்தக் குணங்களுடன், அவர்களின் நடத்தையில் முரண்பாடும் நிறைந்துள்ளது.**

**நான் ஒவ்வொருவரையும் பார்க்கிறேன், அனைவரும் சமமாக இல்லை என்பதைக் காண்கிறேன். நான் துன்ப நிலையில் சோகமாகத் தோன்றும் போது, சிலர், என்னை நினைத்து கவலையுடன் ஆழமாக உணர்கிறார்கள், சிலர் நான் குருநாதர் என்ற எண்ணத்தில், என்னைப் பொருட்படுத்தாமல் அல்லது அலட்சியமாக எடுத்துக் கொள்கிறார்கள் - அதாவது அதையெல்லாம் என்னால் தாங்கிக்கொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். மேலும் சிலர், இந்தச் சிக்கல்களையும் சிரமங்களையும் வேண்டுமென்றே உருவாக்குவதாகக் கருதுகிறார்கள் - அது எனக்கு மிகுந்த சிரமத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்துகிறது. உங்கள் அனைவருக்கும் என் மீது அன்பு, பக்தி, நம்பிக்கை இருப்பதை நான் நன்கு அறிவேன், ஆனால் உங்களுடைய மாறுபட்ட நடைமுறைகள் காரணமாக நான் உங்களுடன் வித்தியாசமாக நடந்து கொள்கிறேன்.**

**நீங்கள்** (மண்டலி) **உங்கள் கடமைகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். வெவ்வேறு சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம், எனக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன், ஆனால் அதில் உப்பு அல்லது மாசு கலக்கப்படுவதன் மூலம்** (அதாவது, நீங்கள் எனது அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படியாதபோது) **நீங்கள் பாலைக் கெடுத்துவிடுகிறீர்கள். என்னை மகிழ்விக்க, பாலில் சர்க்கரை சேர்ப்பதைத் தொடர்ந்து செய்யுங்கள். எப்போதும் என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பது பாலில் சர்க்கரை கலப்பது போல!**

பருவமழைக்கு முந்தைய வானிலை ஈரமாகவும், குளிராகவும் இருந்தது, அவ்வப்போது தூறல் மழை பொழிந்து, பாபாவை அதிகம் நடக்கவிடாமல் தடுத்தது. பாபா தினசரி வேறு வேறு இடங்களுக்குச் செல்வது பற்றி விவாதித்தார், ஆனால் இறுதியில் அவர் கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் மவுண்ட் அபுவில் ‘ஊழியர்களின் குடியிருப்புகளில்’ தங்கியிருந்தார்.

வானிலை சீரானபோது பாபா, நகரம் மற்றும் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் நடந்து வந்தார். சாஞ்சியின் குறிப்புப்படி "பாபாவின் ஆளுமையும், தோற்றமும் மக்களின் கவனத்தையும் மரியாதையையும் ஈர்த்தது."

அபு மவுண்டில் இருந்தபோது, பாபா இந்தக் கடிதத்தை லண்டனில் வாழும் டிலியாவிற்கு அனுப்பினார்:

**நீங்கள் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாக இருந்து, கவலைப்படுவதாகக் கூறுகிறீர்கள். எனது மண்டலியும் இங்கு ஆங்காங்கே இருக்க, நான் இந்த மலையில் தனியாக இருக்கிறேன். ஆனால்**

**அனைத்திற்கும் பின்னால் ஒரு நோக்கம் உள்ளது, குறிப்பாக எனது வட்டத்து உறுப்பினர்களுக்காகவும், பொதுவாகப் பிறருக்காகவும் நான் இதைச் செய்கிறேன். இதன் விளைவை நீங்கள் பின்னால் புரிந்துகொள்வீர்கள்.**

**இதற்கிடையில், உங்கள் உள் தூண்டுதல்களைப் பின்பற்றுங்கள், அதில் நீங்கள் எப்போதுமே வழிநடத்தப்படுவீர்கள், உங்கள் பிரியமான பாபா உங்களுக்கு உதவுவார். கவலைப்படாமல், அமைதியாக எதிர்வரும் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள், தேவையற்றதாக இருக்கும் கவலைகள் மறைந்துவிடும், மேலும் அனைத்து விஷயங்களும் முன்பை விட எளிதாக இருக்கும்.**

மேற்கில் வாழும் மற்றுமொரு அன்பருக்கு, பாபா மவுண்ட் அபுவிலிருந்து பின்வருமாறு எழுதினார்:

**என்னுடைய இப்போதைய ஏகாந்தவாசத்தின் போது, உலகின் இதர அனைத்து வெளியளவிலான வேலைகளும், எவ்வளவு அவசரமாகத் தோன்றினாலும், நடைமுறையில் மிகக் குறைந்த மதிப்புடையவை என்பதைக் கருத்தில் கொண்டு, முக்கியமான உள் வேலைகளை நான் செய்து வருகிறேன் என்பதை நீங்கள் குறிப்பிட்ட இதர அன்பர்களுக்குக் கூறுங்கள். வாழ்க்கையில், உலகின் அனுபவம் ஒவ்வொன்றும் கடந்து செல்லும் என்பதை விளக்குங்கள்.**

**இன்றைய தருணத்தில் முழு உலகமும் மாற்றத்தின் ஒரு காலகட்டத்தைக் கடந்து செல்கிறது, அனைவரும் வேறுவேறு விதத்தில் பாதிக்கப்படுகின்றனர். பொதுவாக மனிதகுலம் உலகப் பொருட்களின் இழப்பால் பாதிக்கப்படும் வேளையில், ஒரு சிலர் மட்டுமே ஆன்மீக ரீதியில் தாக்கத்தை உணர்கிறார்கள், இறுதியில் அனைத்தும் நன்மைக்காக என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.**

மவுண்ட் அபுவில் இருந்தபோது, பாபாவின் உடல்நிலை சீராகவில்லை; வயிற்றுக் கோளாறு, அஜீரணத்தால் அவதிப்பட்டார். எனவே பால் மட்டுமே அருந்தி வந்தார். காலநிலையும் குளிர், பனிமூட்டம் மற்றும் மழையால் சாதகமாக இல்லை. சாஞ்சி விவரித்தபடி:

இந்த மலைகளின் உச்சியில் குளிர்ந்த காற்று, மழை காரணமாக பாபாவின் வழக்கமான நடை தடைபட்டது. அஜீரணத்தால் பாதிப்பு வராமல் தடுக்க, சில நேரங்களில் நெரிசலான இடங்களில் தனியாக நடந்து வந்தார்.

ஆனால் இந்த அனைத்து முரண்பாட்டு சூழ்நிலைகளுக்கும் எதிராக, தெய்வீக விருப்பத்தின் உறுதியான தன்மையுடனும் அவர் செய்ய வேண்டிய பணியின் நிமித்தம், அவர் இந்த இடத்திலேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார். இதனால் மாயையின் எதிர்ப்பால் உருவாக்கப்பட்ட துன்பத்தின் அனைத்து சுமைகளையும், நாம் எண்ணிப்பார்க்கும் ஒவ்வொரு வழியிலும், தானே எடுத்துக் கொள்கிறார். மாயையின் நாடகம் விளைவிக்கும் சிரமங்களை ஒன்றன்பின் ஒன்றாக எதிர்கொண்டு அனுபவித்தாக வேண்டும். அவருடன் இருக்கும் நாங்கள்

இந்த இடையூறுகளை எல்லாம் அவர் எப்படி அமைதியாகக் கையாளுகிறார் என்பதைப் பார்க்க மட்டும்தான் முடியும்.

1935, ஜூன் 20ஆம் நாள், சாஞ்சி, குஸ்தாஜி, ராவ்ஸாஹேப் ஆகியோரை அழைத்து பாபா கூறினார்: "**இங்கே எனது பணி முடிந்தது. நான் வந்த நோக்கம் நிறைவேறியது. நான் உடனடியாக இங்கிருந்து வெளியேற விரும்புகிறேன், ஏனெனில் தற்போதைய இணைப்பைத் தக்க வைக்க, தாமதமின்றி வேறு எங்கேயேனும் எனது பணியைத் தொடங்க வேண்டியது அவசியம். எனவே நாம் உடனடியாக இங்கிருந்து புறப்பட வேண்டும்.**"

மவுண்ட் அபுவில் ஒரு வருடம் ஏகாந்தவாசம் இருக்கப்போவதாக பாபா கூறியது, இப்போது மண்டலிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தியாவின் சிறந்த இடம் குறித்து ஒரு விவாதம் நடைபெற்றது, சாஞ்சி எடுத்து வந்த அனைத்து பயண சிற்றேடுகளையும் துருவிப் பார்த்தார். இறுதியில் பாபா இவ்வாறு அறிவித்தார், "**நான் இங்குத் தொடங்கிய பணிகளைத் தொடர, மெஹராபாத் செல்ல விரும்புகிறேன். அடுத்த கட்டம், ஏகாந்தவாசத்தில் நான் செய்ய வேண்டிய பணியின் மிக முக்கியமான பகுதியாகும், இதற்கு, எனது அசல் தங்குமிடமான மெஹராபாத், மிகவும் பொருத்தமான இடம்**" என்று தெரிவித்தார்.

"**தேவைப்பட்டால், நான் கிழக்கு அல்லது மேற்கத்திய நாட்டு மலைகளுக்குக் கூட செல்லலாம்.**" முன்னதாக, மே 30 அன்று, மெஹராபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா, பாதிரியிடம் சாதாரண முறையில் ஒரு புதிய அறை கட்டும் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர் மவுண்ட் அபு வந்தபோது, பாபா, பாதிரிக்கு அந்தப் பணியைத் தொடங்குமாறு அறிவுறுத்தல்களை அனுப்பினார். மெஹராபாத் மண்டலியில் ஒருவரும், அவர் இவ்வளவு விரைவில் அதை ஆக்கிரமிக்க விரும்புவதாக அப்போது உணரவில்லை.

1935, ஜூன் 23ஆம் நாள், மெஹர் பாபா மதிய வேளையில் அபு சாலையிலிருந்து 'சிந்து மெயில்' ரயிலில் புறப்பட்டார். மெஹராபாத்தை நோக்கி அவரது பயணமும் வருகையும், கண்டிப்பாகத் தனிப்பட்டதாகவும், முற்றிலும் இரகசியமாகவும் இருக்க வேண்டும் என்று அவர் சாஞ்சி, குஸ்தாஜி, ராவ்ஸாஹேப் மூவருக்கும் வலியுறுத்தினார். பாபாவின் வருகையை எதிர்நோக்கி இருந்த ஒரு சிலருக்கு மட்டுமே தொலைத்தந்தி முலம் தெரிவிக்கப்பட்டது. பாபா ரயிலிலும் 'ஏகாந்தவாசம்' மேற்கொள்ள விரும்பினார்; ரயிலில் மூன்றாவது வகுப்பில் பயணம் செய்ததால் கூட்டம் அதிகமாக இருந்தது.

மறுநாள் காலையில் சூரத்திற்கு வந்து அரசு விடுதியில் தங்கினர். 27ஆம் நாள் பெண்டு மெஹராபாத்திலிருந்து வந்தவர் குழுவுடன் இணைந்தார்; அனைவரும் பதினேழு மைல் தொலைவில் அமைந்த ஹஜிரா பையர் (HAJIRA PIER) என்ற இடத்திற்குப் பேருந்தில் புறப்பட்டனர். சாலை கரடுமுரடாக, சேறு நிறைந்து இருந்ததால் அவர்கள் சென்ற பேருந்து அடிக்கடி, ஆங்காங்கே சிக்கிக்கொண்டது,

பல விபத்துகளும் தவிர்க்கப்பட்டன. இறுதியாக, அவர்கள் மோரா (MORA) கிராமத்தைச் சென்றடைந்து, பயணத்தை முடிக்க இரண்டு மாட்டு வண்டிகளை வாடகைக்கு எடுக்க வேண்டியதாயிற்று. மெஹராபாத் மலையில் ஏகாந்தவாசம் மேற்கொள்வதற்காக, அவசரமாகக் கட்டிவரும் அறையைக் குறித்து, பாதிரிக்கு வழங்க வேண்டிய அறிவுறுத்தல்களுடன் பெண்டு மறுநாள் புறப்பட்டார்.

அதே நாளில், பாபா திடீரென வஜி∴ப்தரை நினைவு கூர்ந்தார். அவரைப் பாராட்டி, பாபா, "**வஜி∴ப்தர் எனக்கு அன்புடனும், மிக்க பணிவுடனும் சேவை செய்தார், எனது கட்டளைகள் எவ்வளவுதான் கண்டிப்பானதாகவும், கேலிக்குரியதாகத் தோன்றினாலும் அவற்றிற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்தார்**" என்றார்.

பாபா, ஹஜிரா பையரில் நான்கு நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். அருகிலிருந்த நீரூற்றைக் குறித்து, "**இது உலகின் மிகச் சிறந்த நீர்**!" என்று கூறினார். (மவுண்ட் அபுவில் நீர், தாதுக்கள் மற்றும் உப்புக்கள் நிறைந்து, ஜீரணிக்கக் கடினமாக இருந்தது.)

பாபாவும் குழுவும் ஜூலை 5 அன்று படகு மூலம் சூரத் வந்து, மறுநாள் ஜால்பாயுடன் பாபா, நவ்ஸாரிக்குப் புறப்பட்டார். பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்ள விரும்பினாலும், தேசாய் குடும்பத்தினருக்குத் தெரிவிக்க, சில மணிநேரங்களுக்கு முன்பே சாஞ்சி, நவ்ஸாரிக்கு அனுப்பப்பட்டார்; அனைவரும் பாபாவை ரயில் நிலையத்தில் சந்தித்தனர்.

மெஹர் பாபா அங்கிருந்து டமனுக்கு (DAMAN) ரயிலில் பயணத்தைத் தொடர்ந்து, இரண்டு நாட்கள் அரசு விடுதியில் தங்கி இருந்தார். ஜூலை 9 அன்று மும்பைக்கு வந்து, இரவோடு இரவாக எவருக்கும் தெரிவிக்காமல் நேரடியாக டோண்ட் ரயில் நிலையம் வந்து சேர்ந்தார்.

ஜூலை 10 அதிகாலை மூன்று மணி, ஆதி சீனியர், பாதிரி இருவரும் பாபாவைக் காரில் அழைத்துச் சென்றனர். இரண்டு மணி நேரத்தில் மெஹராபாத் வந்து, ஒரே வாரத்தில் அவசரமாக எழுப்பப்பட்ட தகரம் மற்றும் மரத்தாலான அறைக்கு, பாபா நேரடியாகச் சென்றார். மெஹராபாத்தில் அவர் இருப்பதைக் குறித்து வெளி நபர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

பாபாவின் அறையில் சில பணிகள் இன்னும் முடியாததால், ஜூலை 15 வரை பாபா அவரது ஏகாந்தவாசத்தைத் தொடங்கவில்லை. உள்ளே வைக்கப்பட்ட ஒரு மர கட்டிலில் பாபா தூங்கினார். பாபா அழைத்தால் ஒழிய அறையின் அருகில் எவரும் அனுமதிக்கப்படவில்லை. பாதிரி, பெண்டு இருவரும் அவ்வப்போது வேலைக்காக அழைக்கப்பட்டனர். விஷ்ணு கடிதப் பரிமாற்றத்தில் கலந்து கொள்ள பிற்பகலில் ஒரு மணி நேரம் பாபாவை சந்தித்தார். சகன் இரவு கண்காணிப்பாளராகத் தனது பணியைத் தொடர்ந்தார். டாக்டர் தேஷ்முக் எழுதிய 'மை மாஸ்டர் அண்ட் ஹிஸ் டீச்சிங்ஸ்' (MY MASTER AND HIS TEACHINGS) என்ற புத்தகத்திற்கு, நோரினா முன்னுரை

எழுதியிருந்தார்; சாஞ்சி அந்தப் புத்தகத்தை அச்சிடும் பணியில் மும்பையில் மும்முரமாக இருந்தார்; இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன.

மெஹராபாத்தில், பாபாவுக்காக, மெஹரா தயார் செய்யும் உணவை வாலு எடுத்து வந்தார். பாபா அவரது ஏகாந்தவாச பணிகளைச் செய்யும் வேளையில் அறைக்குள் உற்று நோக்குவது கண்டிப்பாகத் தடைச்செய்யப்பட்டது. ஒரு நாள் வாலு, பாபாவின் உணவை எடுத்துவந்த நேரத்தில், அறையின் கதவு மூடப்பட்டிருப்பதைக் கண்டு, காற்று கதவை மூடி இருக்கலாம் என்ற எண்ணத்தில், அதைத் தள்ளினார். பாபா அவரது ஆன்மீக உள் பணியில் மூழ்கி, உள்ளே அமர்ந்திருந்ததைக் கண்டுத் திடுக்கிட்டதும், பாபாவின் சக்திவாய்ந்த பார்வை வாலுவின் கண்களைக் குருடாக்கியது. கண்களில் ஒரே வலி, இரத்தம் நிறைந்து கண்களைத் திறக்கமுடியாமல் மூன்று நாட்கள் அவதிப்பட்டார்.

ஏகாந்தவாசத்தின் போது சில நேரங்களில், பாபா, பெண் மண்டலியை அழைப்பதுண்டு. ஒரு முறை குல்மாயை அழைத்த வேளையில், வாலுவின் நிலையை எடுத்துக்கூறி, பரிதாபப்பட்டு, அவர் செய்த தவறை மன்னிக்கும்படி மன்றாடினார். குல்மாயின் வேண்டுகோளுக்கு பாபா பதிலளித்து, வாலுவின் பார்வை மீட்டெடுக்கப்பட்டது. இந்த அனுபவம் எதிர்காலத்தில் பாபாவின் கட்டளைகளைப் பின்பற்றுவதில் வாலுவை மிகவும் கவனமாக இருக்கச் செய்தது. 1925ஆம் ஆண்டிலிருந்து, வாலு பாபாவின் துணிமணிகள், மற்றும் அறையை சுத்தமாக வைத்து, வாழ்நாள் முழுவதும் பாபாவுக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

சத்குரு உபாஸனி மஹாராஜ் ஜூலை 23 அன்று, குஷ்ரு குவாட்டர்ஸுக்கு ஒரு குறுகிய விஜயம் செய்தார்; அங்கு அவர் குல்மாய், அவரது மகள் பிரோஜா ஆகியோரை சந்தித்தார்.

1935, ஆகஸ்ட் மாதத்தில் பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டபோதிலும், அவர் தனது கடிதப் பரிமாற்றத்தைத் தொடர்ந்தார். ஆகஸ்ட் 9ஆம் நாள், வால்டர் மெர்டென்ஸுக்கு கீழ்வரும் கடிதத்தை அனுப்பினார்:

**சூழ்நிலைகளும், விவகாரங்களும் எப்படி இருந்தாலும், அவற்றை நிர்வகிப்பது கடினம் என்றாலும், நீங்கள் அவற்றை எவ்வளவு பொறுமையாகவும், சிறப்பாகவும் செய்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஒருபோதும் கவலைப்பட வேண்டாம், ஆனால் சூழ்நிலைகளை சந்தித்து, உள்ளுணர்வுக்கு இணக்கமாக வழிநடத்தப்படுவதை உங்களால் இயன்றவரை முயற்சிக்கவும். உலகெங்கிலும், வாழ்க்கையின் அனைத்து கட்டங்களிலும், சிக்கல்களும் சிரமங்களும் உள்ளன, அவற்றில் சில, உண்மையில் ஆயிரக்கணக்கானவர்களை, ஏன் லட்சக்கணக்கான மக்களை நசுக்குகின்றன; ஆனால் இவை அனைத்தும் மக்களின் சொந்த செயலின் எதிர்வினையாகும், அதை ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டியது அவசியம்.**

**இது நிலைமாற்றத்தின் ஒரு காலமாகும்; வலிமைமிக்க சக்திகள் இதை, எதிர்வரும் ஆயிரம் ஆண்டு காலத்திற்காகக் கொண்டுவரும் முயற்சியில் செயல்படுகின்றன. ஆனால் குருநாதர்களின் வழிகாட்டுதலின் கீழ் உள்ளவர்களுக்கு சிறப்பு பாதுகாப்பும், உதவிக்கரமும் எப்போதும் உள்ளன, எனவே பிறரைக் கொன்று நசுக்கும் கவலைகளிலிருந்து அவர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். நீங்கள் சொல்வது போல, 'பலவீனங்களால் தாக்கப்படுவதாக' நினைத்தாலும், என்னுடனான உங்கள் தொடர்பும், ஆன்மீக வழிகாட்டுதலும் இந்த பலவீனங்களை சமாளிப்பதில், உங்களின் அனைத்து அனுபவங்கள் மூலமாக உங்களை வலிமையாக்க உதவுகிறது. உங்கள் பிரியமான பாபா உங்களைக் கண்காணிக்கிறார், ஒருபோதும் தடுமாற விடமாட்டார்.**

ஆகஸ்ட் 14ஆம் நாள், மெஹர் பாபா, பல கடிதங்களுக்கு பதிலளித்தார். டார்வின் ஷா அமெரிக்காவில் மெஹர் பாபாவிற்கு ஒரு ரிட்ரீட்டை நிறுவமுடியும் என நம்புவதாக எழுதியிருந்தார். பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**பூமியில் அந்த மையம் நிறுவினாலும், இல்லையென்றாலும், உங்களில் விழித்தெழுந்துள்ள மன எழுச்சியின் தூண்டுதலான அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை நான் மிகவும் பாராட்டுகிறேன்; மேலும் இது, ஏற்கனவே உங்கள் இதயங்களில் நிறுவப்பட்ட ஓர் ஆன்மீக மையம் என்று நான் கருதுகிறேன்; இது என்னைப் பொறுத்தவரையில் பூமியில் எழுப்பும் இல்லம் அல்லது கட்டமைப்பை விடவும் கம்பீரமானதும், சிறப்பானதும் ஆகும். உண்மையான உத்வேகம் ஏற்கனவே விழிப்புற்றுள்ளது, மேலும் அது அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் இணக்கமான உணர்வுகளை வளர்த்துக் கொண்டால், இறுதியில் நல்ல விளைவுகளை உருவாக்கி, வாழ்க்கை மற்றும் வாழ்க்கையுடன் தொடர்பான ஆன்மீக விழிப்புணர்வின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். அத்தகைய அன்புள்ளம் படைத்த சகோதரத்துவ மன எழுச்சி எங்கிருந்தாலும், உள்ளளவிலான ஒளியூட்டம் மற்றும் வழிகாட்டுதல் எப்பொழுதும் தவறாமல் தொடர்ந்துவரும்.**

அதே நாளில், பாபா இந்த பதிலை நதீன் டால்ஸ்டாயின் நண்பரான கிராண்ட் டச்சஸ் மேரி (GRAND DUCHESS MARIE) என்ற ரஷ்ய ராஜ பரம்பரையைச் சேர்ந்த பெண்மணிக்கு அனுப்பினார்:

**கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள் பெரும்பாலும் புதிய உள்நோக்குப் பார்வைக்கு வழிவகுக்கின்றன; அவை வாழ்வின் வழிகளை நன்கு புரிந்துகொள்ள உதவுகின்றன, ஏனெனில் அவைத் தோன்றும் அளவுக்கு உண்மையில் இல்லை. வாழ்க்கையின் சோதனைகள், நீங்கள் இப்போது இருக்கும் நிலையை உருவாக்கும் கருவியாக உதவுகின்றன - அதாவது, வாழ்க்கையில் மாறுபட்ட கண்ணோட்டத்துடன் மாற்றப்பட்ட ஓர்**

**அமைப்பு - இது ஆன்மீக யதார்த்தத்திற்கு உங்களை அழைத்துச் சென்று, அமைதி, பேரின்பம் மற்றும் அன்பை நித்தியமாக அனுபவிக்கச் செய்யும்.**

அதே நாள், ஒரு போலி குருநாதரால் ஏமாற்றப்பட்ட தமாரா (TAMARA) என்ற பெண்மணிக்கு மெஹர் பாபா இவ்வாறு எழுதினார்:

**வாழ்க்கையின் சாலைகளின் சந்திப்பில் ஒருவர் தன்னைக் கண்டுகொள்ளும் போது, அவரின் எதிர்கால வாழ்க்கை அந்த முக்கியமான தருணத்தில் அவர் எடுக்கும் திருப்பத்தைப் பொறுத்தது. அந்த நபர் சரியான நேரத்தில் சரியான ஒருவரால் தொடர்பு கொண்டு வழிநடத்தப்பட்டால், சரியான பாதையில் பயணிக்கிறார் என்று கூறப்படுவதோடு, அவரது வாழ்க்கையும் பாதுகாப்பாக இருக்கும்.**

**அத்தகைய ஒருவரைக் கண்டுகொள்வதில்தான் அத்தனை சிரமமும் உள்ளது, அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால், அதுவே எல்லாவற்றையும் குறிக்கிறது. தீவினையின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு, வாழ்க்கையின் மர்மம் புலப்படுகிறது!**

**உங்களின் ஏக்கம், உங்களை இந்தத் திசையில் இப்போது இருக்கும் இடத்திலிருந்து அமைதி, பேரின்பம் மற்றும் நித்திய அன்பைக் காணும் இடத்திற்கு அழைத்துச் செல்லும்; இது அனைத்து உண்மையான ஆன்மீகத்தை நாடும் மக்களின் விருப்பமும், மனிதகுலத்தின் குறிக்கோளும் ஆகும்.**

**கடந்த கால அனுபவங்களை அடை காப்பது போல் அடைத்துவைத்து கஷ்டப்படாதீர்கள், ஏனெனில் இந்த அனுபவங்களே உங்களை என்னிடம் கொண்டு வந்துள்ளன.**

ஜூலை 28 முதல், பாபா மூன்று நாட்களுக்கு, தொடர்ந்து கடுமையான வயிற்று வலியால் பாதிக்கப்பட்டு, **“போர் தொடங்கும் வரை நான் இதுபோலவும், பிற வழிகளிலும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்”** என்று மீண்டும் மீண்டும் கூறினார். **‘உலகத்தை மூழ்கடிக்கும் ஒரு பெரிய போர் விரைவில் நெருங்கி வருவதாக’** பாபா பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்தார்.

ஆகஸ்ட் மாதம் முழுவதும் பாபா அவரது ஏகாந்தவாச பணிகளில் ஈடுபட்டபோது, பாபாவின் பற்கள் மறுபடியும் தொந்தரவு தரத் தொடங்கின. இது உடல் ரீதியான துன்பத்தை ஏற்படுத்திய போது, மருத்துவரை வரவழைத்து இரண்டு பற்களை எடுக்கவேண்டியதாயிற்று. இந்தப் பற்களை குல்மாய் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

வானம் மேகமூட்டமாக இருந்தபோதிலும், பகல் நேரங்களில் தகரத்தால் எழுப்பப்பட்ட அறை மிகவும் சூடாக இருந்தது. பல நாட்களாக மூச்சைத் திணறடிக்கும் வெப்பத்தால், ஆகஸ்ட் 23ஆம் நாள், பாபா அவரது சமாதி அறையின் கல் மேடையில் மதியம் முதல் மாலை ஆறு மணி வரை

வெளியே அமர முடிவு செய்தார். இருப்பினும், மாயை, தனது தந்திர வலையை வீசத் தொடங்கியது. அரை மணி நேரத்தில் பெய்த மழை, பாபாவை மீண்டும் அந்தத் தகர அறைக்குள் தள்ளியது. அடுத்த நாளும் அப்படியே நடந்தது, மேலும் பல நாட்கள் புயலுடன் கூடிய வானிலை தொடர்ந்து, பிற்பகலில் மழை பொழிந்தது.

ஆகஸ்ட் 23 அன்று, பாபாவின் ஏகாந்தவாசத்தின் நாற்பதாம் நாள், அவர் மண்டலிக்கு இவ்வாறு தெரிவிக்கும்படி விஷ்ணுவை அறிவுறுத்தினார்: **"இனிமேல் எனது பணியின் சிறப்பான விளைவுகளைக் காண்பீர்கள்; விளைவு எப்போதும் பின்னரே வரும். நாற்பதாம் நாளில் எப்படி மழை பெய்தது என்று பாருங்கள்! இது ஒரு நல்ல அறிகுறி."**

அந்த நாள் பாபா, வில், மேரி பேக்கெட்டிற்கு இவ்வாறு கடிதம் எழுதினார்:

**ஏற்கனவே அறிவித்தபடி, ஒரு சில காரணங்களுக்காக, ஏகாந்தவாசம் அனைத்து வழிகளிலும் தொடர்கிறது, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட காலம் வரை, வேலையின் தேவைக்கேற்ப வெவ்வேறு இடங்களில் இது தொடரும். நான் மேற்கு நோக்கி வந்து, இந்த ஏகாந்தவாசத்தின் பிந்தைய காலத்தை அங்கே எங்காவது தொடரலாம். நேரம், இடம், மற்றும் அது நிகழும் சாத்தியம் அனைத்தும் வெவ்வேறு பாகங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், நிலைமைகளையும் பொறுத்தது. ஆனால் நான் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும், எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்; நீங்கள், என் அன்பிற்குரியவர்கள், எப்பொழுதும் எனக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறீர்கள்.**

அதே நாளில் மெஹர் பாபா, மின்டாவிற்கு ஈரடிக் கவிதையாக, கடிதம் ஒன்றை வரைந்தார்:

**உங்கள் அன்பின் உருவான பாபாவிடமிருந்து,**
**எந்த உலக அன்பும்**
**உங்களை ஒருபோதும் ஈர்த்துச் செல்ல முடியாது.**

**ஷாலிமார், ஷாலிமார்,**
**ஒரு நாள் இதுவும் கடந்துபோகும்.**
**நான் உங்கள் ஓட்டுநர் - நீங்கள் எனது வாகனம்.**
**நான் உங்களுடையவர் - நீங்கள் எனக்குரியவர்**

1935, செப்டம்பர் 12ஆம் நாள், பாபா சமையலறைக்கு வந்து மெஹரா, கோர்ஷெத் இருவரையும் அழைத்தார். அவர் மெஹராவிடம், **"நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து, நான் சொல்வதை முழு மனதுடன் செய்வீர்களா?"** என வினவினார்.

“நிச்சயமாக பாபா; நான் இன்றுவரை செய்து வருவதால், நான் என்றென்றும் அதைச் செய்வேன்; முழு மனதுடன் செய்வேன்" என்றார் மெஹரா.

ஊசி ஒன்றை எடுத்து வருமாறு கோர்ஷெத்திற்கு பாபா அறிவுறுத்தினார். கையில் ஊசியை எடுத்து, மெஹராவிடம், **“உங்கள் பெயரை இரத்தத்தால் என் கையில் கையொப்பமிட்டு எனக்கு சத்தியம் செய்யுங்கள்”** என்று சுட்டிக்காட்டினார். பாபா, மெஹராவின் வலது கை நடுவிரலைத் துளைத்த பின், அவர் இடது கையால் இரத்தத்தை எடுத்து கையொப்பத்தைப் பதித்தார். ஒப்பந்தத்தில் முத்திரை பதிப்பது போல, மெஹரா அவரது பெயரில் இனிமேல் கையெழுத்திட வேண்டாம் என்று பாபா அவருக்கு உத்தரவிட்டார். மெஹராவும் முழுமையான விருப்பத்துடன் கீழ்ப்படிந்தது, பாபாவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

அக்பர் அச்சகத்தில் பிலூ மாமா ஸட்டா, பாபாவிற்கு ‘சம்’ (CHUM) என்ற நாய்க்குட்டி ஒன்றைக் கொடுத்திருந்தார். மெஹராபாத்தில் ‘சம்’ வலிமைமிக்க, அச்சமூட்டும் தோற்றத்தில் கண்காணிப்பு நாயாக வளர்ந்து வந்தது.

ஏகாந்தவாசத்தின் போது, பாபாவின் அறைக்கு அருகில் வெளியே அமர்ந்து காவல் காத்து வந்தது, பாபாவின் சகவாசத்திற்கு எந்த இடையூறும் விளையாமல், அறைக்கு அருகில் யாரையும் அனுமதிக்காமல், அதேவேளையில் குரைக்காமல், கூச்சலிடாமல் பாதுகாத்து வந்தது.

இந்தக் காலகட்டத்தில், ஒரு மாடு அவ்வப்போது பாபாவின் அறை அருகில் வந்து வட்டமிட்டது. பாபா வெளியே வந்து மாட்டிற்கு உணவளித்து வந்தார். இதைப் பார்த்து சம் பொறாமைப்பட்டு, ஆவேசமாகக் குரைத்து, மாட்டைத் துரத்தும். இதையும் மீறி, பாபாவின் கையிலிருந்து எதையாவது பெறும் வரை மாடு வெளியேறாது. இந்த இரண்டும் வட்டமிட்டு விளையாடுவதைக் கண்டு பாபா மகிழ்ந்தார், மேலும் அது அவரது பணியின் சுமையை இலகுவாக்குவதாகக் காலம் குறிப்பிட்டது.

1935, அக்டோபர் 5 அன்று மெஹர் பாபா இந்தக் கவிதையை இயற்றி, மண்டலியை மாலையில் உரக்கப் படிக்குமாறு கூறினார்:

**ஓ அடடா, அருமையான மெஹராபாத், மண்டலியின் மஹால்,**
**புயல், மழை அல்லது இயற்கையின் சீற்றத்தை**
**எதிர்கொள்ளும் வேளையில்,**
**இடி, மின்னல், ஆலங்கட்டி மழை ஆகியவற்றால் தாக்கப்பட்டது;**
**இதைக் கண்டு நீங்கள் தோல்வியடையக்கூடாது,**
**இதை எதிர்கொண்டு நீங்கள் துவண்டுவிடக்கூடாது!**

அக்டோபர் 10ஆம் நாள், இங்கிலாந்தில் வாழ்ந்த அன்பர்களுடன், பாபா ஆகஸ்ட் மாதம் வில், மேரி பேக்கெட்டிற்கு எழுதியதைப் பகிர்ந்துகொண்டார்:

**ஏகாந்தவாசத்தின்போது நான் எவரையும் பார்க்கவில்லை, இங்கு வாழும் மண்டலியைக் கூட பார்க்கவில்லை - அமைதியான ஒற்றுமை எப்போதும் போல தொடர்கிறது. ஏனெனில், அன்பால் பிணைக்கப்படும் வேளையில், பிரிவு என்பதற்கு இடமே இல்லை, நான் எங்கிருந்தாலும், உலகின் எந்த மூலையிலும், தனிமைப்படுத்தப்பட்ட எந்த நிபந்தனையின் கீழ் இருந்தாலும், நான் எப்போதும் உங்களுடன் இருக்கிறேன், என்னை நேசிக்கும் ஒவ்வொருவருடனும் எப்போதும் நெருக்கமாக இருக்கிறேன்.**

அக்டோபர் மாதத்தில், ஏகாந்தவாசம் தொடங்கிய மூன்று மாதங்களுக்குப் பிறகு, பலத்த இடியுடன் கூடிய காற்று இரவும் பகலும் பெரும் தடையாக இருந்ததால், பாபா அவரது பணியின் மையத்தை மாற்ற முடிவு செய்து, 1935 அக்டோபர் 15ஆம் நாள் பஞ்ச்கணிக்குப் புறப்பட்டார். ஆதி சீனியர், பாபாவை, ஜால்பாயுடன் 'டைகர் வேலி'க்கு (TIGER VALLEY) அழைத்துச் சென்றார். விஷ்ணு, சகன், காளேமாமா, அவரது மகன் முரளி ஆகியோர் முன்கூட்டியே அங்குச் சென்றனர். 16ஆம் நாள் மும்பையிலிருந்து சாஞ்சியும் அவர்களுடன் இணைந்தார்.

டைகர் வேலியில், ஆதி சீனியர், சாஞ்சி இருவரும் பாபாவின் அருகே இரவு கண்காணிப்பாளராகக் கடமைகளைப் பகிர்ந்து கொண்டனர். பாபா, வயிற்று வலியால் முதல் நாள் இரவில் சற்றும் தூங்கவில்லை. அடுத்த நாள் முதல், பாபா வேறு இடங்களுக்குச் செல்வது குறித்து பேசினார். அவர் 16ஆம் தேதி மஹாபலேஷ்வரில் 'பாம்பே' சந்திப்பிற்குச் (BOMBAY POINT) சென்றார், மேலும் அங்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த மெஹராவின் தாயார் தவ்லத்மாயின் பண்ணை 'மியாட்' ஹவுஸைச் (MYATT HOUSE) சுற்றி நடந்தார்.

ஏகாந்தவாசத்தில் இருந்தபோது, பாபா ஆரஞ்சு பழரசம் அருந்தி உபவாசம் இருக்க விரும்பினார், ஆனால் ஆரஞ்சு பழம் கிடைக்காததால், தண்ணீர் மட்டுமே அருந்தினார். பஞ்ச்கணியில், வானிலை சீரற்றதாக மாறி, அக்டோபர் 17 காலை கடும் புயல் ஒன்று பாபாவை, குகைக்கு வெளியே தள்ளியது. பாபா உடனே, பஞ்ச்கணியில் ஒரு தனியார் பங்களாவிற்குச் சென்றார்.

அடுத்த நாள், குகைக்கு அருகே புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. ஒரு கட்டத்தில், மனித வடிவத்தின் நோக்கத்தை விளக்கும் போது, பாபா, ஆதி சீனியரிடம் 'பாலினத்தின் தன்மை' குறித்து இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்: **"மனித வடிவம் குழந்தைகளை ஈன்றெடுப்பதற்காக ஒருபோதும் உருவாகவில்லை. மக்கள் மத்தியில் இப்படிச் சேர்ந்து வாழும் போக்கு, விலங்குகளின் உள்ளுணர்விலிருந்து தோன்றியது. பரிணாம வளர்ச்சியில் கல்லில் இருந்து தொடங்கி, விலங்குகள் வடிவத்திலிருந்து மனித வடிவம் உருவானது ."**

பஞ்ச்கணியில் வாழ்ந்த எடுல்ஜி கர்காரியா (EDULJI KARKARIA) குடும்பத்தார், பாபா மற்றும் மண்டலிக்கு தன்ஸக் (DHANSAK) என்ற சிறப்பு உணவை விருந்தாக அளித்தனர். பாபா வைய் (WAI) அரசாங்க விடுதியில் ஒரு நாள் தங்கி நகரைச் சுற்றிவந்தார். பின்பு மெஹராபாத் புறப்படத் திட்டமிட்டு, வழியில் பூனா குடும்ப வீட்டிற்கும் விஜயம் செய்தார்.

ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் இக்காலகட்டத்திலும், மெஹர் பாபா கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்களுடனான தனது தொடர்பைத் தொடர்ந்தார்; அவர்களின் கடிதங்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் அன்பு, ஆறுதல், ஊக்கம் மற்றும் ஆலோசனைகளின் வார்த்தைகளை அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்.

1935, நவம்பர் 1ஆம் நாள் மெஹர் பாபா மின்டாவிற்கு எழுதிய கடிதம்:

**பிரியமான ஷாலிமார்,**

**நான் இப்பொழுதும் என் அறையில் ஏகாந்தவாசத்தில் இருக்கிறேன். நான் யார் ஒருவரையும் பார்க்கவில்லை - எனது அருகிலிருக்கும் மண்டலியைக் கூட பார்க்கவில்லை. விஷ்ணு மட்டும் தினமும் அஞ்சலுடன் என்னிடம் வந்து பதில்களுக்கான கட்டளைகளைக் கேட்டுச் செல்கிறார், அதுவும் மிக அவசரமான நிகழ்வுகளுக்கு மட்டுமே. என் இதயத்தின் அன்பான அன்பே, பின்வரும் வரிகளை நான் உங்களுக்காக வரைகிறேன்:**

**மின்டா கூறுகிறார்:**

**நீங்கள் இல்லாத வாழ்க்கை, வெறுமை, ஒன்றும் இல்லாதது;**
**உங்களுடன் வாழ்க்கை, ஆனந்தம், பேரின்பம்**
**நித்தியமானது;**
**வாருங்கள், பாபா, விரைவில் என்னிடம் வந்து விடுங்கள்!**
**இப்போது நான் உங்களையும் உங்கள் அன்பான**
**அரவணைப்பையும் தவற விடுகிறேன்!**

**பாபா கூறுகிறார்:**

**ஷாலிமார் அன்பே, கவலையடைய வேண்டாம்;**
**உங்களிடம் நான் விரைவில் வருவேன்;**
**நான், எல்லா படைப்புகளின் ஆதவன்;**
**நீங்கள் என் இனிமையான, ஆனால் மேகமூட்டமான சந்திரன்.**

நதீன் டால்ஸ்டாய்க்கு, நவம்பர் 22 அன்று, பாபா இவ்வாறு எழுதினார்:

**நான் உங்களை வேறு ஏதாவது செய்யச் சொல்லும் வரை, இன்றைய முயற்சியைத் தொடருங்கள். கஷ்டங்களும் சோதனைகளும் ஆன்மீகத்திற்குப் படிக்கற்கள். சத்தியத்தை உணர - உங்கள் இறுதி இலக்கு மற்றும் விருப்பத்தை நோக்கி அவை உங்களை வழிநடத்துகின்றன; இப்போது நீங்கள் என்னிடம் சரணடைந்து விட்டதால், அன்பிலும் பக்தியிலும் என்னை நெருங்க அவை உதவுகின்றன.**

**பிறருக்குத் தன்னலமற்ற சேவை செய்வதில் ஏற்படும் இடர்பாடுகள், வாழ்க்கையின் விஷயங்களைப் புரிந்துகொள்ள உதவும்; ஆகவே, அன்பானவரே, உங்களைப் போலவே, எப்போதும் என்னை உங்கள் மனதிலும் இதயத்திலும் வைத்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் நீங்கள் ஒரு தூய்மையான பாதையாகவும், மனிதகுலத்தின் நலனுக்காகப் பணியாற்றும் வாகனமாகவும் இருப்பீர்கள்; இப்படி, எனது பணியில் பங்கேற்கும் வாய்ப்பை அடையப் பெறுவீர்கள்.**

இங்கிலாந்தில் வாழும் மேரி பேக்கெட்டிற்கு, நவம்பர் 29 அன்று, பாபா எழுதியதாவது:

**ஏகாந்தவாசம் இன்னும் தொடர்கிறது, அத்துடன் எனது பணியும் தொடர்கிறது. கடல் தாண்டி, தொலைதூர நாடுகளில் வாழும் என் அன்பிற்குரியவர்கள், அவர்களின் பிரியமான பாபாவின் பிரிவை உணர்ந்தாலும், ஒருபோதும் உடைக்க முடியாத இணைப்பு, அவர்கள் அனைவரையும் இதமாக வைத்திருக்கும் என்று எனக்குத் தெரியும்.**

**அன்பிற்கு இறப்பில்லை. வெறுமனே வந்து போகும் அனைத்து ஏற்றதாழ்வுகளுக்கு மத்தியிலும், அது எப்பொழுதும் வாழவும் அனைவரையும் வாழவைக்கவும் வழிவகுக்கும். மேரியும், அவரைப் போல் என்னை நேசிக்கும் இதர அன்பானவர்களும், நான் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் என் இதயத்திலும் எண்ணங்களிலும் வாழ்கிறார்கள்.**

**தோல்விகள் அல்லது குறைபாடுகளால் உங்கள் தன்னம்பிக்கையை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. ஆனால் அவற்றை, இறுதி இலக்கை நோக்கிச் செல்லும் பாதையின் படிக்கற்களாக எடுத்துக்கொள்ள வேண்டும், அதை நீங்கள் அடைய நான் உங்களுக்கு உதவுவேன்.**

1935, டிசம்பர் 1 அன்று, பாபா, சாஞ்சியிடம், இந்தக் கடிதத்தை, சுவிட்சர்லாந்து, லண்டன் மற்றும் நியூயார்க்கில் வாழும் அவரது அன்பர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்:

**என் அன்பர்களே,**

**உங்கள் கடிதங்கள் அனைத்தும் என்னிடம் வந்து சேர்ந்தன. எனது ஏகாந்தவாசம் இன்னும் தொடர்கிறது.**

**மிகவும் அவசியமான, அவசரமான நிகழ்வுகளுக்கு மட்டும் எனது ஆலோசனையும், உதவியும் வழங்குவது தவிர, நான் எவரையும் பார்ப்பதும், வெளி விவகாரங்களில் தலையிடுவதும் இல்லை.**

**இந்த ஏகாந்தவாசத்தில் நான் ஈடுபடும் மிகப் பெரிய பணியின் காரணமாக, உங்களுக்கு பதில் எழுத காலதாமதமானால் அதற்காகப் பொறுமை இழந்து விட வேண்டாம்; ஏனெனில் நான் உங்களை எப்படி நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் எப்படி உணர்கிறீர்கள், மேலும் ஒவ்வொருவரின்**

**தேவைகளையும் அறிந்து, அனைவருக்கும் எப்படி உதவுகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.**

**என்னுடைய கடிதத்திற்காக நீங்கள் எவ்வளவு ஏங்குகிறீர்கள், எவ்வளவு பொறுமை காத்தீர்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் இன்னும் சற்று பொறுமையுடன் சிறிது நேரம் காத்திருங்கள். உங்கள் அன்பு ஆழமாகவும், தீவிரமாகவும் வளர்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**

**விரைவில் சந்திப்போம். இதற்கிடையில், அன்புடன் பாபா.**

கிறிஸ்மஸ் தினத்தை ஒட்டி, பாபா இந்தத் தொலைத்தந்தியை அமெரிக்கா, ஐரோப்பாவில் வாழும் அன்பர்களுக்கு அனுப்பினார்:

**எனது பிரியமானவர்களுக்கான என் அன்பு, எனது தெய்வீக நிலையைப் போலவே எல்லையற்றதும், நித்தியமானதும் ஆகும்.**

எவ்வாறாயினும், மெஹர் பாபாவிற்கு வந்த அனைத்து கடிதங்களும் அத்தகைய இனிமையான சுவையை வழங்குதாக இல்லை. மும்பையில் வாழ்ந்து வந்த கெ.ஜெ. தஸ்தூர், பணத்திற்கான வேண்டுகோளுடன் பாபாவைத் தொடர்ந்து துன்புறுத்தினார். பாபாவும் அவருக்குப் பணம் அனுப்பியது உண்டு; அதே நேரத்தில் அந்தத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான உறுதிமொழி குறிப்பையும் பெற்றுக் கொண்டார்; ஆனால் தஸ்தூர் ஒருபோதும் உறுதிமொழியைக் கடைப்பிடித்ததில்லை.

மேலும், பாபா மெஹராபாத் மேல்மலையில் ஏகாந்தவாசத்தில் இருந்தபோதிலும், அவர் தனது சீடர்களின் பிரச்சினைகளைக் கையாளுவதில் இருந்து விடுபடவில்லை. எடுத்துக்காட்டாக, ஃபிரீனி, தாயார் தவ்லத்மாயுடன் திடீரென நவம்பர் 18ஆம் நாள் வந்து பெண் மண்டலியின் இருப்பிடத்தில் நுழைய முயற்சித்தார். பாபா அவர்களை சந்தித்து, ஃபிரீனியிடம் அவரது வீடு மற்றும் குழந்தை வளர்ப்புக் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்தில் அவரை ஊக்குவிக்க முயன்றார், மேலும் நாசிக் திரும்பத் தயாராகும் வரை, ஃபிரீனியுடன் மெஹராபாத் குடும்ப குவாட்டர்ஸில் தங்குமாறு தவ்லத்மாய்க்கு அறிவுறுத்தினார்.

பாபா, ஆதி சீனியருக்கு இவ்வாறு விளக்கினார்:

**மூன்றாவது கண் திறக்கும்போது, ஒருவருக்கு அதிநுட்பமான சூட்சும பார்வை கிடைக்கும். இது பாதுகாப்பானது, ஒருவரால் சாதித்து அடையப்பட்ட ஒன்று. நான் விரும்பும் வழி இதுதான். ஆனால் ஃபிரீனி (மற்றும் டாலி) விஷயத்தில், அவர் பௌதீக மற்றும் சூட்சும உணர்வின் குழப்பமான நிலையில் இருக்கிறார். அவருக்கு நுட்பமான சூட்சும பார்வை இன்னும் வரவில்லை. ரோஜா மலர் இருப்பதைப் பார்க்காமல் அதன் வாசனையை நுகர்வதன் மூலம் ஒருவர் மலர் இருப்பதை உணர முடியும்;**

**அது போலவே, ஃபிரீனி சில நேரங்களில் நுட்பமான ஆனந்தத்தை உணர்கிறார், ஆனால் அதைப் பார்க்க முடியவில்லை. சாதாரண மனிதனின் பௌதீக உணர்வு நிலையில், அவர் தவறுகளைச் செய்து, காமச் செயல்கள் போன்ற எதையும் செய்யக்கூடும் அல்லது என்னைப் பற்றிய மோசமான கருத்துக்களைத் தெரிவிக்கவும் நேரும். அவர் கட்டுப்பாட்டை இழந்து, எனக்கும் எனது பணிக்கும் தடையாக இருக்கிறார். அவருடைய தற்போதைய மனநிலைக்கு - படிக்கக்கூடாத சில புத்தகங்களைப் படித்ததால் - ருஸ்தம் இதற்குக் காரணம் என்று கூறலாம். மேலும் டாலியின் மனநிலைக்கு குல்மாயே காரணம்**

மூன்று நாட்களுக்குப் பின்னர், ஃபிரீனி எதையும் உண்ணவோ அருந்தவோ மறுத்துவிட்டார், இதனால் பாபா தனது முக்கியமான ஏகாந்தவாச பணிகளுக்கு மத்தியில் அவரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார்.

இதன் விளைவாக, ருஸ்தம், ஃபிரீனியை மீண்டும் நாசிக்கிற்கு அழைத்துச் சென்றார். ஆதி சீனியர், ருஸ்தம் இருவருடனும் கலகத்தில் ஈடுபட்டு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தினார்.

1935 டிசம்பர் 3ஆம் நாள், பாபா ஃபிரீனியைப் பார்க்க நாசிக் சென்றார். ருஸ்தம் குடும்பத்தாருடன் பாபா நீண்ட நேரம் இந்த விஷயம் பற்றி பேசினார். ஃபிரீனியிடம் தனது வழிகளை மாற்றும்படி பாபா வற்புறுத்தினார். ருஸ்தம், ஆதி இருவருக்கும் உதவுமாறு மாஸாஜிக்கு அறிவுறுத்தப்பட்டது.

அன்று பாபாவின் பற்களைப் பரிசோதனை செய்ய பல் மருத்துவர் டாக்டர் பட்டேனா அழைக்கப்பட்டார். பாபாவிற்கு வேண்டிய சிகிச்சை வழங்கப்பட்டது.

டிசம்பர் 4ஆம் நாள் பாபா மெஹராபாத்திற்கு திரும்பி வந்து அவரது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார்.

இந்தக் காலகட்டத்தில் பாபாவிற்கு நெருக்கமானவர்களில் சிலர் தங்கள் வாழ்க்கை ஏற்பாடுகளை மாற்றிக்கொண்டனர். 1935 நவம்பர் மாதத்தில் தவ்லத்மாய் நாசிக்கிலிருந்து வந்து மெஹராபாத்திற்கு அருகிலமைந்த குடும்ப குவாட்டர்ஸில் தனியாகத் தங்கினார். 1925-லிருந்து பாபாவின் உத்தரவிற்கிணங்க மௌனம் கடைப்பிடிப்பதைத் தொடர்ந்தார். தவ்லத்மாயின் சகோதரி ஃபிரீனி மாஸி மும்பையில் வசித்து வந்தார், ஆனால் உடல்நிலை மோசமாக இருந்ததால், அவரது மகன் பாதிரி, அவருடன் இருப்பதை விரும்பினார். பாபாவின் தாயார் மெமோ, சகோதரர்கள் ஆதி ஜூனியர், பெஹெராம், அவரது மனைவி பெரின் ஆகியோர் நவம்பர் 20ஆம் நாள் மும்பைக்குக் குடிபெயர்ந்தனர்.

1935 டிசம்பர் 14 அன்று மெஹர் பாபா, ஜால்பாய், கலிங்கட் ஆகியோருடன் காரில் மும்பைக்குச் சென்றார். அவர்கள் ஒரு வாரம் பானுபாய் இல்லத்தில் தங்கினர்; அதற்குக் கீழே வசித்து வந்த அலமாய், ‘எவரையும்

உள்ளே அனுமதிக்க வேண்டாம்' என்ற பாபாவின் கட்டளையைக் கடைப்பிடிக்கும் நோக்கத்தில், வீட்டு வாசலில் பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்தார். ஃபிரீனி மாஸி ஒரு நாள் வந்து பாபாவைப் பார்க்க அனுமதிக்கும்படி கேட்டார். அலமாய் கடமையில் உறுதியாக இருந்ததால் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார். "நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் பாதிரியின் தாயார்!" என்றார்.

அதற்கு அலமாய், "நீங்கள் பாதிரியின் தந்தையாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை, நீங்கள் உள்ளே செல்லமுடியாது!" என்று கூற, பாபா தலையிட்டு அவரை உள்ளே அனுமதித்தார்.

இதேபோன்ற சம்பவம் மறுநாள் பாபாவின் தாயாருடனும் நடந்தது. மெமோ சார்பாக பாபா தலையிட்டு அலமாயை அவருக்கு அறிமுகப்படுத்தினார்.

மும்பையில் தங்கியிருந்த வேளையில், பாபா, வெலிங்டனை (WELLINGTON - அவர் மே மாதம் சந்தித்த தம்பதியர்) சந்தித்தார். பாபா அவர்களுக்கு இவ்வாறு விளக்கினார்:

**ஒருவர் பிறப்பு, இறப்பிலிருந்து விடுபட வேண்டும். ஆனால் இந்தச் சக்கரத்தில் சிக்கியிருப்பதால், அவர், எப்போதும் அதன் சுழற்சியில் பாதிக்கப்படுகிறார். பிறப்பு, இறப்பு எனும் சுழற்சியிலிருந்து தன்னை விடுவிப்பது மிகவும் எளிதானது, ஆனால், அவ்வளவு எளிதானது என்பதால், அது மிகவும் கடினமாகிறது!**

**மாயையில் மூழ்க வேண்டாம் என்று நீங்கள் உறுதியாக முடிவு செய்யும் அடுத்த கணமே நீங்கள் உங்களை விடுவிக்கலாம். ஆனால் இதற்கு ஒரு சத்குருவின் கருணை தேவைப்படுகிறது, அதற்காக நீங்கள் தகுதியானவராக இருக்க வேண்டும்.**

டிசம்பர் 17 அன்று நௌரோஜி தாதாசாஞ்சியின் இல்லத்தில் நடந்த ஒரு சிறிய தரிசன நிகழ்ச்சியில், வெலிங்டன் மற்றும் ஜாம்ஷெட் தேசாய் மீண்டும் பாபாவை சந்தித்தனர். இம்முறை, மும்பையில் பாபா, புதிய நபர்களை அனுமதித்தார். அத்தகைய தொடர்பில் வந்தவர் டாக்டர் அலு ஷாபுர்ஜி கம்பட்டா (DR. ALU SHAPURJI KHAMBATTA - 32). தாதாசாஞ்சி வாழ்ந்து வந்தக் கட்டிடத்தின் கீழ் தளத்தில், ஒரு சாதாரண வசதியுடன் 'ஃபுளோரன்ஸ் மகப்பேறு' இல்லத்தை (FLORENCE MATERNITY HOME) அலு நடத்தி வந்தார். தாதாசாஞ்சியின் வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பாபா கடந்து சென்றபோது, அலு, பாபாவின் தோற்றத்தைப் பார்த்து, அவர் ஓர் அரபு வைர வணிகராக இருக்கவேண்டும் எனத் தவறாக நினைத்தார். கடைசியாக பச்சாமாய், பாபாவைப் பற்றி அலுவிடம் கூறி, அவர் பாபாவை சந்திக்க விரும்புகிறாரா எனக் கேட்டதற்கு அலு ஆமாம் என்று கூறினார். ஆனால், பாபா வந்த நாளன்று பச்சாமாயிடம், **"நான் வந்ததை அவருக்குத் தெரிவிக்க வேண்டாம்; நான் வெளியே செல்லும்போது அவரை சந்திப்பேன்"** என்று கூறினார்.

மெஹர் பாபா, திடீரென அலுவின் மருத்துவமனைக்குச் சென்றபோது, அந்தப் பெண்மணி பாபாவின் அழகைக் கண்டு ஆச்சரியமடைந்து,

உணர்ச்சிவசப்பட்டார். பாபாவின் காந்தம்போல் ஈர்க்கும் சக்தியில் அலுவால் பேசவோ வணக்கம் செலுத்தவோ முடியவில்லை. உடனிருந்த சாஞ்சி, கடைசியில் பாபாவை நாற்காலியில் அமரவைத்து, அலுவிற்கும் ஒரு நாற்காலியை எடுத்து வந்தார். அப்போது பாபா, **"நீங்கள் இப்போது என்னிடம் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம்; எதை வேண்டுமானாலும் கேளுங்கள்"** என்று சைகையால் தெரிவித்தார்.

திடீரென அலு அவர் இங்கிலாந்து செல்ல விரும்புவதாக, சம்பந்தம் இல்லாமல் உளறினார்! அப்படி வெளிநாட்டிற்குச் செல்லும் எண்ணம் அந்தத் தருணத்திற்கு முன்னர் அவருக்கு ஒருபோதும் இருந்ததில்லை. அதற்கு பாபா, **"இப்போது இல்லை. நான் உங்களைப் பின்னர் அனுப்புகிறேன். வேறு என்ன கேட்க விரும்புகிறீர்கள்"** என்று கேட்டபோது அலு அமைதியாக இருந்தார். பாபா அவரிடம், **"நான் பேசுவதில்லை; ஆனால் நீங்கள் பேசலாம்!"** என்றதும், வயிற்றுப்போக்கு, தொற்றுநோயால் ஆபத்தான எண்ணிக்கையில் குழந்தைகள் இறந்து கொண்டிருக்கிறார்கள், அது தடுத்து நிறுத்தப்பட்டால் மிகவும் மகிழ்ச்சியடைவார் என்று அலு மிக்க சிரமத்துடன் விளக்கினார். **"உங்கள் மருத்துவமனையை எனக்குக் காட்டுங்கள்"** என்று கூறிய வேளையில், பாபா ஒவ்வோர் அறைக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். அவருக்கு எதிராகப் பிடிவாதமாக இருந்த பல பார்சி மக்கள், ஓர் அறையில் நிரம்பியிருந்தனர், ஆனால் பாபா அங்கே நுழையவில்லை. அறைகளைச் சுற்றிவந்த பின்னர் **"இப்போது எந்த உயிரிழப்பும் நிகழாது"** என்று பாபா உறுதியளித்தார். அவர் கூறியபடியே டாக்டர் அலுவின் மருத்துவமனையில் குழந்தைகள் எவரும் உயிரிழக்கவில்லை.

நர்கிஸ் தாதாசாஞ்சியின் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் உடல் மெலிந்து, எடை குறைந்து காணப்பட்டார். புறப்படுவதற்கு முன்னர், அவர் மெலிந்திருப்பதை பாபா கவனித்து, அருகிலிருந்த தடித்த தூண் ஒன்றைக் காட்டி அவரிடம், **"நான் உங்களை இப்படி மாற்றுவேன்!"** என்றார்.

டிசம்பர் 20 அன்று நாசிக் வழியாக, காரில், காக்கா, கலிங்கட் ஆகியோருடன் மெஹராபாத் திரும்பினார்.

மெஹர் பாபா தனது இருப்பிடத்தை, தென்னிந்தியாவில் மைசூருக்கு மாற்ற முடிவு செய்து, இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, டிசம்பர் 31 அன்று, டாக்டர் நீலு, குஸ்தாஜி, பஹீரத் ஆகியோருடன் பாபா ரயிலில் புறப்பட்டார். பூனாவிலிருந்து விஷ்ணு, சாஞ்சி இருவரும் உடன் இணைந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், பாபா பக்தர்களை, அவரது பாதங்களில் விழுந்து வணங்கவும், அவற்றைத் தொடுவதற்கும் தடை விதித்திருந்தார், அதேபோல் ஆண், பெண் மண்டலியும் பாபாவின் தரிசனத்தைப் பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், முதலாவதாக ரயில் நிலையத்தில், ரயில் நின்ற போது, ரயில்வே அதிகாரி ஒருவர் பாபாவை அடையாளம் கண்டு, அவரை


தரிசனம் செய்ய அணுகினார். அதிர்ஷ்டவசமாக, அவர் பாபாவை வணங்குவதைத் தடுத்து, பாபா ஏகாந்தவாசத்தில் இருப்பது அவருக்கு விளக்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதாயிற்று.

பெங்களூருக்கான ரயில் பயணத்தின்போது, பாபா தனது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மண்டலிக்குத் தெரிவித்தார்: "**மைசூரில் ஏகாந்தவாசம் மேற்கொள்ள பொருத்தமான இடம் கிடைத்தால், நான் சாஞ்சியுடன் அங்கேயே தங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மட்டுமே பெண் மண்டலியை அழைத்து வருவேன். ஆனால் நான் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றாலும், சாஞ்சி என்னுடன் இருக்க வேண்டும்.**" சாஞ்சி அதற்கு சம்மதம் தெரிவித்ததும், பாபா மகிழ்ச்சி அடைந்தார்.

அவர்கள் ஜனவரி 4 மாலை பெங்களூரைச் சென்றடைந்தனர்; சம்பத் ஐயங்கார் குடும்பத்தினர் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். பாபாவின் தரிசனத்திற்காக வந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து பாபா 'தரிசனம் இல்லை' என்று திட்டவட்டமாக அறிவித்து, ஐயங்காரின் வீட்டில் இரவு உணவுக்குப் பிறகு, பாபா மைசூருக்குப் பயணத்தைத் தொடர்ந்தார்.

5ஆம் நாள் காலையில் மைசூர் வந்து, 'மாடர்ன்' (MODERN) ஹோட்டலில் தங்கி, விரைவில், பெண் மண்டலி தங்குவதற்குப் பொருத்தமான பங்களாவைத் தேடிக் கண்டுகொண்டனர். ஐந்து நாட்களுக்குப் பிறகு மெஹராபாத் திரும்பி வந்து பெண் மண்டலியுடன் மைசூர் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் விரைவில் தொடங்கின.

குல்மாய் அவரது மகள் பிரோஜா ஆகியோர் ஜனவரி 22 அன்று மெஹராபாத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் மெஹராபாத்தில் தங்க வேண்டும் என்று பாபா விருப்பம் தெரிவித்தார், ஆனால் சில நாட்களுக்குப் பிறகு குஷ்ரு குவாட்டர்ஸில் தங்கும்படிக் கூறினார். 24 அன்று சாஞ்சி வந்ததும், பாபா தனது பயணத் திட்டங்களை சாஞ்சி, விஷ்ணு மற்றும் பிறருடன் விவாதித்தார். பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக, ஜனவரி 28 அன்று நாசிக்கிலிருந்து மாஸாஜி வந்தார். பாபா கோபத்தில் உடனடியாக அவரை நாசிக் திருப்பி அனுப்பினார்.



மைசூர் ஆசிரமம், 1936 –
அமர்ந்திருப்பவர்: மெஹந்தர்கே, மெஹர் பாபா, ஜமதார்
நிற்பவர்கள்: விஷ்ணு, ஜால், காளேமாமா, சாஞ்சி, சகன், குஸ்தாஜி, துக்காராம், முரளி காளே



மைசூர் ஆசிரமம், 1936 –
அமர்ந்திருப்பவர்: மணி,மெஹர் பாபா, மெஹரா
பின்னால் நிறுபவர்: இந்து ஸப்னிஸ், கோர்ஷத் மற்றும் பணிப்பெண்கள்

# மைசூர், ராஹுரி ஆசிரமங்கள்

**(Mysore, Rahuri Ashrams)**

1936 ஜனவரி 30ஆம் நாள், மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத், ஸூனாமாஸி, வாலு, இந்து ஸப்னிஸ் (வாமனின் மகள்) ஆகியோருடன் பாபா, பூனாவிற்குப் பேருந்தில் புறப்பட்டார். விஷ்ணு, இதர மண்டலியுடன் அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொண்டு ரயிலில் சென்றார்.

வழக்கம் போல், ஆண் மண்டலி, பெண்மணிகளுக்கு அருகில் அனுமதிக்கப்படாததால், பூனாவில் பாபாவே அவர்களின் பொருட்களை ரயிலில் எடுத்துச் சென்றார். சாஞ்சி, சகன் இருவரையும் ரயில் நிற்கும் வேளையில் தங்கள் பெட்டியை விட்டு வெளியேறி, பாபாவின் பெட்டி அருகில் வருமாறு அவர் அறிவுறுத்தினார்; இதனால் பாபாவிற்கு ஏதாவது தேவைப்பட்டால் அவர்கள் அதை எளிதாக வழங்க முடியும்.

ஜனவரி 31 அன்று இரவில் மைசூருக்கு வந்த அவர்கள், 'வாணி விலாஸ் மொஹல்லா'வில் (VANI VILAS MOHALLA) திரு பி. ரமண்ணாவிற்குச் (MR. B. RAMANNA) சொந்தமான பங்களாவிற்கு நேரடியாகச் சென்றனர். இது பின்பு, 'பாலா (தலைவலி) பங்களா' (BALA - HEADACHE - BANGALOW) என்று அழைக்கப்பட்டது. ஆண் மண்டலி, அருகில் அமைந்த ஸ்ரீ காந்தயாவின் (SHRI KANTHAYA) பங்களாவில் தங்கினர். ஆதி சீனியர், பெண்டு, ஜால்பாய் மூவரும் 2ஆம் தேதி தாமதமாக வந்தனர். அனைவரும் ஜனவரி 4 அன்று பாபாவுடன் பிரபலமான மைசூர் உயிரியல் பூங்காவிற்குச் (MYSORE ZOO) சென்றனர். ஆதியும் பெண்டுவும் அடுத்த நாள் ரயிலில் மெஹராபாத் திரும்பினர்.

1936 பிப்ரவரி 9 அன்று அரசியல்வாதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் (DR. S. RADHAKRISHNAN), மைசூர் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற துணைவேந்தரும், தத்துவ பேராசிரியருமான வி. சுப்பிரமண்ய ஐயர் (V. SUBRAHMANYA IYER) மற்றும் மைசூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வாடியா (WADIA) ஆகியோருடன் பாபாவைப் பார்க்க வந்தார். ராதாகிருஷ்ணன் நாக்பூரில் டாக்டர் தேஷ்முக் மூலமாக, பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார், மேலும் பாபாவின் பக்கத்து பங்களாவில் வாழும் ஐயர் மூலம் பாபா இருப்பதை அறிந்திருந்தார். மெஹர் பாபா இப்போது ஏகாந்தவாசத்தில் இருப்பதாகவும், அது ஜூன் மாதத்தில் முடிவடையும் வரை நேரடி சந்திப்புகளை வழங்க மாட்டார் என்றும் காளேமாமா அவர்களுக்குத் தெரிவித்தார். வந்தவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

பாபாவின் தரிசனத்திற்காக டாக்டர் ராதாகிருஷ்ணன் மீண்டும் ஒருபோதும் வரவில்லை, இருப்பினும் அவர், பாபா மீது ஆர்வம் கொண்டிருந்தார், பின்னர் அவருக்கு 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) என்ற மெஹர் பாபாவின் புத்தகம் அனுப்பிவைக்கப்பட்டது. 1960 ஆண்டுகளில் அவர் இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த வேளையில், டெல்லியில் வாழ்ந்த

பாபா அன்பர்களான மோனா & மனோகர் ஸாக்கரே (MONA & MANOHAR SAKHARE) ஆகியோரிடமிருந்து பாபாவைப் பற்றி தெரிந்துகொண்டார். அவர்கள் பாபாவின் செயல்பாடுகள் குறித்து தெரிவிப்பதும், ஆரத்தி பாடல்களை அவருடன் இருக்கும் போது இசைப்பதும் வழக்கம்.

பிப்ரவரி 14 காலை பாபா, ஆண் மண்டலியின் பங்களாவிற்குச் சென்று, சில விஷயங்களைப் பற்றி விவாதித்த பின்னர், உரையாடல் அன்பின் கூறுகளை நோக்கி நகர்ந்தது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**மகிழ்ச்சி, துன்பம் இரண்டையும் அன்பு தருகிறது. ஒரு கோப்பை மது உதிரமாக மாறும்! எடுத்துக்காட்டாக, புவாஸாஹேப், குஸ்தாஜியை நேசிக்கிறார் என்றும், அவரது அன்பின் அடையாளமாக அவர் குஸ்தாஜியின் முதுகில் குதித்து, கன்னத்தில் கிள்ளி, மீசையை இழுக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இது அன்பின் வெளிப்பாட்டால் விளையாட்டாக மாறும்போது - புவாஸாஹேப்பிற்கு மகிழ்ச்சியும், ஆனால் ஏழை குஸ்தாஜிக்கு, துன்பமும் வேதனையும் தருகிறது.**"

இந்தக் கலந்துரையாடலுக்குப் பின்னர், அன்று மாலை சாமுண்டி (CHAMUNDI) மலைக்கு, பாபா ஆண் மண்டலியுடனும், மறுநாள் மாலை மறுபடியும் பெண்மணிகளுடனும் சென்றார். சாமுண்டி மலையில் இருந்த இந்து கோயிலில் தெய்வ தரிசனம் செய்ய பாபா, காளேமாமாவை உள்ளே அனுப்பினார்.

மைசூருக்குச் செல்வதற்கு முன்பு, பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, மண்டலி அவரது பிறந்த நாளை அனுஷ்டிக்கக்கூடாது என்று வலியுறுத்தியதால், மெஹராபாத், அஹமதுநகர், நாசிக், மைசூர் ஆகிய இடங்களில் எந்த நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை. ஸொராஸ்ட்ரிய நாட்காட்டி படி, பாபா தனது 42ஆவது பிறந்த நாளான 1936, பிப்ரவரி 16 ஞாயிற்றுக்கிழமை அன்று பெங்களூருக்கு விஜயம் செய்தார். பாபாவின் பிறந்தநாளைக் கொண்டாடக் கூடாது, அவர் குடும்பத்தில் அனைவரையும் பார்க்க மட்டுமே வருகிறார் என்றும் ஏற்கனவே ஐயங்கார் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது. பாபா அன்றைய தினம் எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு சைகைகள் மூலம் மட்டுமே தொடர்பு கொண்டார்.

அன்று காலை பெங்களூர் வந்தடைந்த பாபாவை ஐயங்கார் குடும்பத்தினர் அன்புடன் வரவேற்றனர்; அவரது விருப்பப்படி, ஆரத்தி, வழிபாடு, விழா எதுவும் நிகழ்த்தப்படவில்லை.

ஐயங்கார் குடும்பத்தினரிடையே - முக்கியமாக, சம்பத் மற்றும் அவரது மகள்களுக்கும் இடையே அதிக கருத்து வேறுபாடுகள் இருந்ததாகப் பின்பு தெரியவந்தது. மாறாக, அந்த நாளில் எந்தக் கொண்டாட்டத்தையும் பாபா ஏற்கவில்லை, ஆனால் அவர் அவர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு

செவிமடுக்க ஒப்புக்கொண்டார்! பாபா, முழுக் குடும்பத்தினரையும் தனக்கு முன்னால் அமரவைத்து, அவர்களுடைய குறைகளை வெளிப்படையாக எடுத்துரைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். அவர், தந்தை (ஐயங்கார்) கூறியதைத் தொடர்ந்து குழந்தைகளையும் கேட்டார். பின்பு, பாபா அனைவரும் ஒற்றுமையுடன் வாழும் வழிகளை எடுத்துக்கூறி, குடும்பத்தில் நட்பும் அன்பும் மீண்டும் நிலவும் வகையில் அவர்களை ஒன்றிணைத்தார்.

சம்பத் ஐயங்கார் மற்றும் அவரது குடும்பத்தினர் பாபாவிடம், "உங்கள் பிறந்தநாளில் நாங்கள் மிக உயர்ந்த வரத்தைப் பெற்றுள்ளோம், உங்கள் அன்பின் அமிர்தத்தை ருசிக்கும் வாய்ப்பை எங்களுக்கு அளித்துள்ளீர்கள். நாங்கள் உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்." அவர்களின் நன்றியுணர்வைக் குறிக்கும் விதத்தில், பாபாவை அவர்களுடன் மதிய மற்றும் இரவு உணவு இரண்டிலும் பங்கெடுக்குமாறு அவர்கள் வேண்டினர், அதற்கு பாபா இணக்கம் தெரிவித்தார்.

மெஹர் பாபா பெங்களூரில் ஐயங்கார் குடும்பத்தை சந்தித்த அதே வேளையில் அஹமதுநகரில் ஒரு விசித்திரமான, அற்புதமான சம்பவம் நிகழ்ந்தது. ஆதி சீனியர், பாதிரி இருவரும் மெஹராபாத்திலிருந்து அஹமதுநகருக்கு, பொருட்கள் வாங்குவதற்காக வந்தவர்கள், பின்பு குஷ்ரு குவாட்டர்ஸுக்கு விஜயம் செய்தனர். ஆதி அவரது தாயார் குல்மாயிடம் விடைபெற்று, மெஹராபாத் செல்ல ஆயத்தமானபோது, எதிர்பாராமல் கார் ஒன்று பங்களாவின் நுழைவாயிலில் வந்து நின்றது. “இது உபாஸனி மஹாராஜ்!” என்று ஆச்சரியத்துடன் பாதிரி கத்தினார்.

காரிலிருந்து இறங்கி, மஹாராஜ் குஷ்ரு குவாட்டர்ஸில் அமைந்த அவரது அறைக்குள் நுழைந்தார்; அந்த அறை எப்பொழுதும் அவருக்காக வைக்கப்பட்டிருந்தது (குல்மாய், அவருடைய இருக்கை, அவர் உபயோகித்த கோணிப்பை மேலும் மெஹர் பாபாவின் புகைப்படம், ஒரு சிறிய இருக்கை இவற்றை பாதுகாப்பாக உள்ளே வைத்திருந்தார்). மஹாராஜுடன் வந்த அவருடைய செயலாளரை ஏதோ வேலைக்காக நகருக்கு அனுப்பி வைத்தார்.

உபாஸனி மஹாராஜ், வழக்கமாக அவரது இருக்கையில் அமர்ந்து மக்களுக்கு தரிசனம் வழங்கி வந்தார். ஆனால் இம்முறை, அவர் மெஹர் பாபாவின் புகைப்படத்தின் முன் நின்று பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். ஆதி, மஹாராஜின் தரிசனத்திற்காக அறைக்குள் நுழைந்தபோது, மஹாராஜ், மெஹர் பாபாவின் புகைப்படத்திற்கு முன்னால் பிரார்த்தனை செய்வதைக் கண்டுத் திகைத்துப் போனார். அவர் மனதில் பல எண்ணங்கள் அலைமோதின: "குருநாதர், அவரது சீடரின் புகைப்படத்தின் முன் நின்று, இருகரங்கள் கூப்பி பிரார்த்தனை செய்கிறார்! எவ்வளவு அற்புதம்!”

ஐந்து நிமிடங்கள், மஹாராஜ் அசையாமல் நின்று பிரார்த்தனை செய்தார். பின்னர், ஆதி பக்கம் திரும்பி, “எனக்கு இந்த இடம் மிகவும் பிடிக்கும். மேர்வானின் இந்தப் புகைப்படத்தை நான் இன்னும் விரும்புகிறேன்! நான் மேர்வானை நேசிக்கிறேன். அவர் உன்னதமானவர்! ஈடு இணையற்றவர்!

தனித்துவமானவர்! நான் அவரை வணங்குகிறேன். அவர் முன்னிலையில் பிரார்த்தனை செய்கிறேன். அவருக்கு எனது வணக்கங்களைத் தெரிவிக்கவும்." இந்த சம்பவம் ஆதியிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆச்சரியத்தில் ஆழ்ந்த ஆதி, 'குருநாதர் ஒருவர் தனது சீடரை வணங்கி, பிரார்த்தனை செய்யும்போது, அது என்ன அசாதாரண அன்பாக இருக்கவேண்டும்' என்று நினைத்துக்கொண்டே இருந்தார்.

அப்போது மஹாராஜ் குல்மாயிடம், "தட்டும், விளக்கும் எடுத்து வாருங்கள். நான் இன்று மேர்வானுக்கு ஆரத்தி நிகழ்த்த விரும்புகிறேன். குல்மாய், நீங்கள் மேர்வானிடம் அவரது பிறந்தநாளில் நான் இங்கு வந்து, அவருக்கு ஆரத்தியை நிகழ்த்தினேன்" என்று கூறுங்கள். குல்மாய் உடனடியாகத் தேவையான பொருட்களை எடுத்து வந்தார், மஹாராஜ் மந்திரங்களை உச்சரித்து, ஆரத்தி எடுத்து, ஆரத்தி தட்டை நெற்றியருகில் கொண்டுவந்து வணங்கினார்.

உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவை வணங்கும் காட்சி, ஆதி, பாதிரி, குல்மாய் மூவரின் இதயத்தையும் ஆழமாகத் தொட்டது. இதைப் பார்த்த குல்மாயின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. இதற்காக மஹாராஜ் ஸாக்கோரியிலிருந்து அஹமதுநகருக்கு வந்திருந்தார்.

மைசூரில் பாபாவுடன் இருந்த மண்டலிக்கு, உபாஸனி மஹாராஜின் வருகை குறித்தும், அவர் கூறியதையும் அறிந்த பின்பு, பாபா அவரது பிறந்தநாள் நிகழ்ச்சிக்குத் தடை விதித்ததன் காரணம் அவர்களுக்குப் புலப்பட்டது. காலம் இதை இப்படிப் பார்த்தது: "சத்குரு ஒன்றை செய்யும்போது அதை, அவர் முழுப் பிரபஞ்சத்திற்காகச் செய்கிறார். உபாஸனி மஹாராஜின் உடல் மற்றும் மனதின் மூலம் முழுப் பிரபஞ்சமும் அவரது பிறந்தநாளில் மெஹர் பாபாவை வணங்கியது! பெருங்கடல் அதன் மொத்த உருவத்தின் மீது தனது அன்பை வெளிப்படுத்தியது. படைப்பின் ஒவ்வொரு துளியும் பெருங்கடலுக்கு வழிபாட்டை வழங்குவதாக இருந்தாலும், அதை, ஒரு சத்குரு, அவதார புருஷருக்கு அன்போடு செய்யப்பட்ட இந்த வகையான வழிபாட்டுடன் ஒப்பிட முடியாது!"

மறுநாள் அதிகாலையில், பாபா பெங்களூரிலிருந்து அஹமதுநகர், நாசிக் ஆகிய இடங்களுக்கு ரயிலில் புறப்பட்டார்; அவருடன் ஜால்பாய் மட்டுமே இருந்தார். பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க சாஞ்சி மைசூருக்குச் சென்றார்.

மெஹர் பாபா, குல்மாயை அஹமதுநகரில் சந்தித்து, பின்னர் ஆதி சீனியர், ஜால்பாய் இருவருடன் நாசிக் நகருக்கு ருஸ்தம், ஃப்ரீனியை சந்திக்கச் சென்றார். மைசூரில் பெண் மண்டலியுடன் வாழ பாபா, ஃப்ரீனியை அழைத்துச் செல்லாததால், அவர் தனிமைப்படுத்தப்பட்டதாக நினைத்து வருந்தினார். பாபா, ஃப்ரீனியை மிகவும் நேசித்தார், குறிப்பாக அவரது உறுதியற்ற உடல் தன்மையைக் கருத்தில் கொண்டு, பெங்களூரிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து அவரை சந்திக்க வந்தார். ஃப்ரீனி, பாபாவின் இரக்கக்குணத்தை நினைத்து அமைதியானார். பாபா, ருஸ்தம், ஃப்ரீனியின்

குழந்தைகளான மெஹலு, ஃபாலு, மெஹரு, நாகு, பெஹராம் ஆகியோரிடம் அன்பான சிறப்பு கவனம் செலுத்தினார். நவல் தலாட்டி மற்றும் ராம்ஜூ குடும்பத்தினரையும் பாபா சந்தித்தார். அதற்குப் பிறகு, பாபா, ஆதி சீனியர், ஜால்பாயுடன் மும்பைக்குச் சென்று நெளரோஜி தாதாசாஞ்சியின் வீட்டில் ஓரிரவு தங்கினார்.

பாபா, மும்பையில் இருந்த வேளையில், மைசூரைச் சேர்ந்த எம். சக்ரவர்த்தி ஐயங்கார் (M. CHAKRAVARTHI IYENGAR), தாதாசாஞ்சி இல்லத்தில் பாபாவைப் பார்க்க வந்தார், ஆனால் அந்த நேரத்தில் பாபா அங்கு இல்லை. அந்த நபர், பாபாவின் ஆலோசனைகளுக்காக ஒரு கடிதத்தை விட்டுச் சென்றார்; பாபா பின்னர் அதற்கு பதிலளித்தார். பிப்ரவரி 23 இரவு, பாபா, ஜால்பாயுடன் மைசூர் திரும்பிச் சென்றார்.

அவர்கள் மைசூர் செல்லும் வழியில், ஜால்பாய் ஒரு விசித்திரமான நிகழ்வை சந்திக்க நேர்ந்தது. ஷோலாப்பூர் ரயில் நிலையத்தில், முஹமதிய சாது ஒருவர், அவர்கள் பயணம் செய்த பெட்டியில் நுழைந்து விசித்திரமான சைகைகளைச் செய்யத் தொடங்கினார். பாபாவிடம் படுக்கையில் சாய்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பாபாவும் அதற்கு இணங்கினார், சாதுவும் கீழே சிலநிமிடங்கள் படுத்து அமைதியாக இருந்தார். ஷாஹாபாத் (SHAHABAD) ரயில் நிலையத்தில் நள்ளிரவில் இறங்க வேண்டியவர், காலை வரை அவர்களின் அருகிலேயே இருந்து, பின்பு குண்டக்கல் (GUNTAKAL) வந்ததும் இறங்கினார். அந்த முஸல்மான் சாது இப்பகுதியில் நன்கு அறியப்பட்டவர் என்றும், ரயிலில், எல்லா வகுப்புகளிலும், ரயில்வே அதிகாரிகளால் தடையின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதாகவும் ஜால்பாய் அறிந்து கொண்டார்.

மெஹர் பாபா மைசூரில் தங்கியிருந்தபோது, மக்கள் அவரைப் பார்க்கவோ அல்லது அவருக்கு எழுதவோ கூடாது, அவரது பணிக்குத் தடையாக இருக்கும் என்ற எண்ணத்தில் தற்போதைய முகவரியை எவருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்று மண்டலிக்கு அறிவுறுத்தியிருந்தார். 1936, பிப்ரவரி 24 அன்று, பாபா, பஹீரத்திடம், **“நீங்கள் இந்த முகவரியை எவருக்கேனும் கொடுத்திருக்கிறீர்களா?”** என இரண்டு முறை வினவியும், பஹீரத் இல்லை என மறுத்தார். பாபா அவரது மேல் கோட்டை எடுத்து வரும்படி கூறி, அஹமதுநகரிலிருந்து பஹீரத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தை எடுத்தார். கடிதம் மூடி வைக்கப்பட்டிருந்தது; பாபா அதை அனைவரின் முன்னிலையிலும் திறந்து மைசூரைப் பற்றி குறிப்பிடப்பட்ட ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டினார். பஹீரத் தனது தவறை ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, பாபா அவரை மன்னித்தார்.

சில மாதங்களாக, பாபா தனது நெருங்கிய மேற்கத்திய அன்பர்களை நீண்ட காலத்திற்கு இந்தியாவிற்கு அழைக்கத் திட்டமிட்டிருந்தார். மைசூரில் கிழக்கு மற்றும் மேற்கத்திய ஆண்களும் பெண்களும் ஒன்றாகத் தடையின்றி வாழப் பொருத்தமான இடத்தை அவர் தேடிக்கொண்டிருந்தார். பிப்ரவரி 27 அன்று

இதற்காக குஸ்தாஜி, ஜால்பாய் இருவருடன் பாபா, ஊட்டி (OOTY) மலைநகரத்திற்கு விஜயம் செய்தார். குன்னூர் (COONOOR) போன்ற வேறு சில இடங்களையும் பார்த்த பின்பு, மார்ச் 1 அன்று மாலை பாபா மைசூர் திரும்பினார், "**மேற்கத்தியர் தங்குவதற்கு ஊட்டி ஒரு நல்ல இடம், ஆனால் அதைப் பற்றி நாம் பிறகு முடிவு செய்வோம்**" என்று குறிப்பிட்டார்.

பல ஆண்டுகளாக பாபா, மெஹராபாத் நிலத்தை ஆதி சீனியர், ருஸ்தம் அவர்களின் தந்தை கான்ஸாஹேபிடமிருந்து வாங்க விரும்பி, அதற்காக பாபா, ரூபாய் ஐந்தாயிரம் வழங்கினார், ஆனால் கான்ஸாஹேப் அதற்கு இணங்கவில்லை. 1936, மார்ச் 7 அன்று 'மெஹர் பாபாவிற்கு அன்புடன் பரிசாக வழங்கும் நிலம்' என்று கான்ஸாஹேப் பதிவு செய்த செய்தியை, ஆதி சீனியர் பாபாவிற்குத் தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**நான் அவரிடமிருந்து இந்த நிலத்தை ரூ 5,000க்கு வாங்க முன்வந்தேன், ஆனால் அவர் மறுத்துவிட்டார். இப்போது அவர் அதை எனக்கு இலவசமாக வழங்கியுள்ளார்! எப்படி, ஏன் நடந்தது? இதுதான் அன்பின் சக்தி! அன்பு தனித்துவமானது; அசாத்தியத்தை சாத்தியமாக்குவது.**"

மார்ச் 6ஆம் நாள் முதல், பாபா ஒரு வேளை உணவு உண்ணத் தொடங்கினார், மேலும் அவரது ஏகாந்தவாசம் கடுமையாக இருந்தது. அவர் 7 அன்று மாலை ஆண் மண்டலியுடன் கிருஷ்ணராஜ சாகர் அணையை பார்வையிட்டார், மறுநாள் பெண் மண்டலியையும் அழைத்துச் சென்றார்.

மும்பையில் பாபாவைப் பார்க்க விரும்பி, முடியாமல் போனதால், எம். சக்ரவர்த்தி ஐயங்கார் மார்ச் 9 அன்று தரிசனத்திற்காக, பாலா பங்களாவிற்கு வந்தார். பக்கத்து அறையிலிருந்து ஒரு நிமிடம் அவரைப் பார்க்க பாபா அனுமதித்தார். பின்னர் அவர் சாஞ்சியிடம் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி மைசூர் மஹாராஜாவிடமிருந்து பாபாவின் ஆசிரமத்திற்குத் தேவையான சிறந்த இடத்தைப் பெறுவதாக உறுதியளித்தார்.

இந்தக் காலகட்டத்தில், பாபாவின் மேற்கத்திய அன்பர்களின் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. தியான முறைகளைக் குறித்து அவர்களுக்கு உதவ, பாபா ஒரு வரைபடம் தயார் செய்து விளக்கினார்: '**நான் இந்த உடல் அல்ல' என்று அவர்கள் நினைக்க வேண்டும். இந்த விளக்கப்படம் அவர்களுக்கு தியான முறைகளைக் கற்றுக்கொள்ள உதவும், மேலும் ஒரே நேரத்தில், அவர்கள் மனதில் குவியும் ஆயிரமாயிரம் எண்ணங்களைத் தடுத்து நிறுத்த முடியும்.**

மெஹர் பாபா வழக்கமான வயிற்றுக் கோளாறால் அவதிப்பட்டார்; மார்ச் 12 அன்று பல் பரிசோதனைக்காக, சாஞ்சியுடன் பெங்களூருக்குச் சென்று,

திரும்பி வரும் வேளையில், ஐந்து ஏழை சிறுவர்கள் சாலையில் ஒரு குடிசைக்கு அருகில் விளையாடுவதை கவனித்து, காரை நிறுத்தி ஒவ்வொருவருக்கும் ஒரு ஆரஞ்சு பழத்தை வழங்கினார். சிறுவர்கள் மகிழ்ச்சியடைந்து பாபாவைத் தங்கள் தாய் மொழியில் பாராட்டினர்.

ஜெர்மனி (GERMANY), ஃபிரான்ஸ் (FRANCE) இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் உருவாகும் சாத்தியக்கூறுகள் குறித்து, செய்தித்தாள் அறிக்கைகள் வெளிவரத் தொடங்கின. மார்ச் 14 அன்று, பாபா, இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், **"போர் வெடிக்கும் என்பது உறுதி. அதில் முழு உலகமும் ஈடுபடும். ஆனால் இப்போது தொடங்காமல் இருந்தால் நல்லது."** அவர் மேலும் கூறுகையில், **"போர் தொடங்கியதும், எனது பணியும் தொடங்கும்"** என்று குறிப்பிட்டார்.

பாபாவின் ஏகாந்தவாசம் மிகவும் கடுமையாக இருந்ததால், சில காலமாக மேலை நாட்டினருக்குக் கடிதம் எழுதவில்லை, ஆனால் 1936, மார்ச் 16 அன்று பாபா, இந்தக் கடிதத்தை அனுப்பினார்:

**எனது பிரியமான உள்ளங்களுக்கு, இது ஒரு நீண்ட கால மௌனம் - உங்கள் அனைவருக்கும் மிகப் பெரிய சோதனையாக இருந்தது என்பது எனக்கு மட்டும் தெரியும். ஆனால், அதனால் ஒரு பெரிய நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**

**இந்த நீண்ட கால மௌனம், உங்களுக்கு ஒரு சிறந்த பாடத்தைக் கற்பித்தது - அதாவது, துன்பத்தைக் தாங்கிக்கொள்ளும் பாடம். ஆனால் அந்தத் துன்பம் உங்கள் பிரியமான பாபாவை மேலும் நினைக்கச் செய்து, அன்பின் நெருக்கத்தில் கொண்டு வந்திருந்தால், அது என்னைக் களிப்புறச் செய்திருக்கும். இவ்வாறு நிகழ்ந்ததை அறிந்து, நான் களிப்படைவதோடு மகிழ்ச்சியும் அடைகிறேன், ஏனெனில், பெரிய அளவில் உங்கள் பணியும் முடிந்தது; அதே அளவில் 'பாதையில்' முன்னேற்றமும் கண்டீர்கள்!**

**நீங்கள் துன்புறும் இந்த நேரத்தில்தான் நாம் ஒருவருக்கொருவர் உள்ளளவில் நெருக்கமான தோழமையை உருவாக்கி மிகவும் ரசித்தோம். எல்லா நேரங்களிலும் உங்களின் குரலையும் செய்தியையும், எனக்குத் தெரிவிக்க விரும்பிய இதயங்களின் துடிதுடிக்கும் இசையையும் கேட்டு மகிழ்ந்தது கொஞ்சநஞ்சமல்ல.**

**அமெரிக்கா, ஐரோப்பா** நாடுகளில் வாழும் வெவ்வேறு நபர்களுக்கு, பாபா இவ்வாறு எழுதினார்:

**'மௌனம், வார்த்தைகளை விட அதிகம் பேசுகிறது' என்பதை நீங்கள் அறிந்திருந்தால், பேசி அல்லது எழுதும் சொற்களை விட, நூறு மடங்கு அதிகமாக இதுபோன்ற மௌனத்தை நீங்கள் வரவேற்பீர்கள். ஏனெனில், நீடித்த 'மௌன' காலங்களில்தான், உங்கள் அன்பால் ஒன்றுபட்ட இதயங்கள் அன்பிற்குரியவரோடு நெருங்கி வந்து, உள்ளளவில்**

**உணர்வுகளை அடிக்கடி பகிர்ந்து கொள்கிறது. இந்த மௌனத்தில்தான், இறுதியில் உங்களுடையதாக இருக்கும் அன்பிற்காக ஏங்கும் உங்களின் வலுவான, ஆழமான இதயத் துடிப்புகளை நான் உணர்ந்தேன்.**

**பாபா, உங்களுக்கான பாதையை சீர் செய்து, பிரியமான உங்களை முன் நின்று வழி நடத்துகிறார். அன்புள்ளம் கொண்ட நீங்கள், அவரைப் பின்பற்ற மாட்டீர்களா?**

**வாழ்க்கையின், ஒளிமயமான அன்பின் இந்தப் பாதையில், நீங்கள் அவரைப் பின்பற்றும்போது, முகமலர்ச்சியுடன், நீங்கள் மகிழ்ச்சியாகவும், குதூகலமாகவும் உணர மாட்டீர்களா? என்னுடன் இந்தப் பாதையில் முன்னோக்கிச் செல்லும் வேளையில், நான் அறிந்த, நித்திய அமைதியும், சொல்லிலடங்கா பேரின்பமும் நிறைந்த வாழ்க்கை, உங்களுக்காகக் காத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.**

மார்ச் 16ஆம் நாள் வில், மேரி பேக்கெட் மற்றும் இங்கிலாந்து அன்பர்களுக்கு அவரது ஏகாந்தவாசத்தைப் பற்றி பாபா விளக்கினார்:

**நான் ஒருவரையும் பார்க்காமல் ஏகாந்தவாசம் இருந்து, உள்ளளவில், எனது அன்பு மகன், அன்பான மேரி மற்றும் அனைவர் மூலமாகப் பணிபுரிந்த போதிலும், எனது அன்பையும், ஆசீர்வாதங்களையும் வேண்டி விரும்பியவர்களுக்கு, உங்கள் வழியாக அவற்றை வழங்க முடிந்தது. இவ்வாறு, எனது அன்பானவர்கள் என்னுடன் பணியாற்றுவதற்கும், எனது மேன்மையான பணியில் பங்கேற்பதற்கும், அருமையான ஊடகங்களாகப் பணியாற்ற முடியும். நீங்கள் வில் - மேரி இருவரும் அதில் ஏற்றுக்கொண்ட பங்கு கொஞ்சநஞ்சமல்ல. எவ்வளவு மகிழ்ச்சியாகவும், அன்பாகவும், அற்புதமாகவும் எனது பணியை நீங்கள் செய்கிறீர்கள் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்றுதான் அதிசயங்களைச் செய்ய முடியும், ஆனால் உங்கள் மற்றும் மேரி போன்றவர்களின் பக்தியும், அன்பும் கலந்த நம்பிக்கை, அதிசயங்களை மட்டுமல்ல, ஏழைகளுக்கும், ஆன்மீகப் பாதையை நாடுபவர்களுக்கும் உண்மையான கணிசமான 'சேவையை' வழங்குகிறது. பாபாவுக்காக முழு மனதுடன் உழைக்கும் உங்களைப் போன்ற அன்பானவர்கள் மூலம், பாபாவின் அற்புதமான விளைவுகளை அவர்கள் அனைவரும் கண்டு உணருவதில் ஆச்சரியமில்லை. உங்கள் கடிதங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, நான் பல முறை கடிதங்கள் மூலம் பதிலளிக்காவிட்டாலும், சில சமயங்களில் எனக்காகப் பணிபுரியும் உங்களைப் போன்றவர்கள் மூலமாக, நான் மௌனமாக பதிலளிக்கிறேன். எனவே எப்போதும், உள் மற்றும் வெளியளவில் ஓர் இணைப்பு, செயல்பட்டுக்கொண்டே இருக்கும்.**

**ஏகாந்தவாசத்தின் போது, குறிப்பாக எனது பணி பெரும்பாலும் உள்ளளவில் நிகழும். இதனால்தான் நான் உலக நிகழ்வுகளை விட்டு விலகி இருந்து, எனது தனிப்பட்ட ஆலோசனை அல்லது வழிகாட்டுதல் இல்லாமல்**

நிர்வகிக்க முடியாத கட்டாய சூழ்நிலைகளில் மட்டும் பங்கெடுக்கிறேன். எனது அன்பானவர்கள் - முதலாவதாக, மௌனம், ஏகாந்தவாசம் இரண்டும் இணைந்த ஒரு சூழ்நிலை, அடுத்ததாக, அவர்களின் தொடர்பில் இருந்து பழக்கப்பட்ட நிலை - இவற்றை எவ்வளவு ஆர்வமாக உணர்கிறார்கள் என்பதை நான் அறிந்திருந்தாலும், எனது ஆன்மீகப் பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு நான் இதைச் செய்தாக வேண்டும் என்பது எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் வெளியளவிலான தொடர்பு, நடைமுறையில் துண்டிக்கப்பட்டிருந்தாலும், வழக்கமாக உள்ளுணர்வைப் பகிர்ந்து கொள்வதை விட, உள்ளளவில் நிகழும் தொடர்பு, அன்பானவர்களை இன்னும் நெருக்கத்தில் கொண்டு வருகிறது. எனது அன்பானவர்களுக்கான பொது கடிதத்தில், இதை நான் ஏற்கனவே விளக்கியுள்ளேன், மேலும், எனது அன்பில் வில், மேரி நீங்கள் ஒவ்வொன்றையும் நன்கு உணர்ந்து, புரிந்துகொள்ளும் தன்மை உள்ளவர்கள் ஆகையால், இதைப் பற்றி நான் விளக்கவேண்டிய தேவை இல்லை.

எனது அன்புள்ளம் படைத்தவர்களின் மற்றும் பிறரின் அனைத்து கேள்விகளும், அவர்களின் கடிதங்கள் மூலமாகவோ, உங்கள் கடிதங்களில் உள்ள அறிக்கைகள் மூலமாகவோ அல்லது உள் உணர்வு பரிமாற்றத்தின் மூலமாகவோ எனக்கு வந்துள்ளன; மேலும் நான் மிகச் சிறந்ததாகக் கருதும் வகையில் இவற்றிற்கு உள்ளளவில் பதிலளித்துள்ளேன். இந்தச் செயல்முறை எனது ஏகாந்தவாசம் முடிவடையும் வரை தொடரும்.

கடிதங்கள் மூலமாக, பதில்கள் அவர்களைச் சென்று அடையாவிட்டால், துன்பப்படும் அன்பான இதயங்களின் குரல் என்னை வந்து அடையவில்லை என்று அர்த்தமல்ல. இதயக்குரல் என்பது தகவல் தொடர்புக்கான உறுதியான வழிமுறையாகும், அது என்னை ஒருபோதும் வந்தடையத் தவறாது. ஆனால் பதில், உடனடியாக அல்லது தாமதமாக இருந்தாலும், அது எப்போதும் குருநாதரின் இனிமையான விருப்பத்தைப் பொறுத்தது, மேலும் ஓர் ஆத்மாவின் குரலுக்கு, உடனடியாக பதிலளிக்காவிடில் ஒருபோதும் ஏமாற்றத்திற்கான எந்த அடிப்படை எண்ணமும் வரக்கூடாது. அந்த மௌனத்திலும் ஓர் அர்த்தமும் காரணமும் இருக்கும், ஏனெனில் குருநாதருக்கு மட்டுமே அது தெரியும். அவர் வெகுதூர தொலைவில் பார்க்கிறார், உடனடியாகத் திருப்தி அளிக்கும் முடிவுகளுக்காக அல்ல, ஆனால் இறுதி நோக்கம், நன்மை இவற்றைக் கருத்தில் கொண்டு அதைச் செய்கிறார். ஆகவே, நீங்கள் எனக்கு எழுதிய பல கடிதங்களில் நீங்கள் குறிப்பிட்டிருந்த அனைத்து அன்பானவர்களுக்கும் இந்த சில வார்த்தைகளில் நீங்கள் விளக்கலாம், தெரிவிக்கலாம்!

பாபா அனைத்தையும் அறிந்திருக்கிறார்; ஒவ்வொரு அன்பான இதயம் நாடும் உதவி மற்றும் வழிகாட்டுதலின் குரலையும் அவர் கேட்கிறார்; மேலும் ஒவ்வொருவருக்கும் அவரது அன்பான உதவியை

**தனது சொந்த வழியில் எப்போதும் இறுதி நோக்கத்தைக் கருத்தில் கொண்டு வழங்குகிறார். எனவே எவரும் கவலைப்பட வேண்டாம், ஏனெனில் பாபா எப்போதும் உங்களுடன் இருக்கிறார்.**

**நான் ஏற்கனவே எனது பொது கடிதத்தில் உங்களுக்குக் கூறியபடி, நான் ஏகாந்தவாசத்தில் இருக்கும்போது, எனது அன்பான அனைவரின் இறுதி நலனுக்காகவும், மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்காகவும் மௌனம் கடைப்பிடித்து, பணியாற்றி வருகிறேன், மேலும் எதிர்கால வேலைகளுக்கான விஷயங்களைத் திட்டமிடுகிறேன். எனது மேற்கத்திய அன்பர்களில் பலர், அதில் பங்கேற்க வேண்டும் என்பதால், எதிர்காலத்தில், உங்களிடம் வந்து, அதே நேரத்தில் நாம் சந்திக்கும் ஒரு வாய்ப்பை உருவாக்கலாம். இது இன்னும் நிச்சயமாக தீர்மானிக்கப்படவில்லை, ஆனால் திட்டவட்டமான முடிவுகள் எடுக்கும்போது உங்களுக்கு அறிவிக்கப்படும். ஒரு வருடத்திற்கும் மேலாக அன்பான பாபாவை சந்திக்காத நீங்கள் அனைவரும் எவ்வளவு கவலையுடன் இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும், ஆனால் ஒருவேளை நாம் சந்திப்போம், விரைவில், என் அன்புள்ளங்களுக்கு, பிரியமான பாபா.**

1936, மார்ச் 28ஆம் நாள், மெஹர் பாபா இந்தக் கருத்தை நான்னி, ரானோ இருவருக்கும் மீண்டும் வலியுறுத்தினார்:

**உங்கள் கடிதங்கள் என்னிடம் உள்ளன; நான் கடிதத்தின் மூலம் பதிலளிக்கவில்லை என்றாலும், உள் உணர்வின் பரிமாற்றத்தால் நீங்கள் எனது பதிலைப் பெற்றுக்கொண்டீர்கள், அது எப்போதும் நான் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும் தொடர்ந்து, தவறாமல் நிகழும் ஒன்று. என்னை நேசிப்பவர்களிடமிருந்தும், என்னைப் போலவே தொடர்ந்து என்னை நினைப்பவர்களிடமிருந்தும் அன்பின் எந்த ஓர் அழைப்புக்கும் இதுவரை பதிலளிக்காமல் இருந்ததில்லை, அப்படியான சூழ்நிலை மிக மிகக் குறைவு.**

**பாபா, அன்பின் ஒவ்வொரு சிறிய செயலையும் கவனிக்கிறார், அன்பின் ஒவ்வொரு சிறிய கூக்குரலையும் கேட்கிறார், மேலும் அன்பிற்காக சிந்தும் ஒவ்வொரு கண்ணீர் துளிக்கும் பதிலளிக்கிறார், இவை எங்கிருந்து வந்தாலும் சரி... அன்பின் ஆதாரமான நீரூற்று, எப்போதும் பல்வேறு வழிகளில், தேவையான இடங்களில் வழிந்து அதன் போக்கை இயக்குகிறது.**

**உங்களைப் போலவே என்னை நேசிக்கும் அன்பர்களுக்கு, அதன் போக்கைத் திசைதிருப்பி எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வழிநடத்தச் செய்கிறேன்.**

பாபா சில மாதங்களுக்குப் பிறகு, மேற்கத்தியர்களுக்கு எழுதிய வேறொரு கடிதத்தில் (1936, ஜூலை 5) மீண்டும் அதே விஷயத்தை வலியுறுத்தினார்:

**....பதில் கடிதங்கள் தவறாமல் அனுப்பப்படவில்லை என்றாலும், எல்லா கடிதங்களையும் படித்து, தேவையான உதவிகளையும் ஆசீர்வாதங்களையும் உள்ளளவில் தெரிவிக்கிறேன். என்னால் வரையப்பட்ட பதில்கள் வராமல் இருந்தாலும், ஒருபோதும் விரக்தியடைய வேண்டாம். எனக்குக் கடிதம் எழுதத் தோன்றும் அந்த முதல் உண்மையான உணர்வு அல்லது அந்த முதல் எண்ணம் ஒரு தொடர்பை உடனடியாக ஏற்படுத்துகிறது. மேலும் இது வேண்டிய உதவியை வழங்கும் விதத்தில் எப்போதும் செயல்படுகிறது. அவர்கள் அனைவரும் பாபாவின் எண்ணங்களில் வாழ்கிறார்கள், அதே வேளையில், பாபா அவர்களின் இதயங்களில் வாழ்கிறார். உண்மையில் உணர்வு இருக்கும் இடத்தில் வார்த்தைகளுக்கும், விளக்கங்களுக்கும் என்ன தேவை?**

1936, மார்ச் மாதத்தில், மைசூர் நகரில் ஆசிரமம் ஒன்றை நிறுவுவது குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது. இருப்பினும், மைசூர் மக்கள் பாரம்பரிய மத சிந்தனை உடையவர்களாக, மரபுவழி மதத்தில் சிக்கியிருப்பதால், அவர்களின் குறுகிய எண்ணம் படைத்த தவறான கருத்துகளிலிருந்து அவர்களை விடுவிப்பது மிகவும் கடினம், எனவே ஆசிரமம் ஒரு கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் செயல்படும் என்று பாபா விளக்கினார்.

மார்ச் 15 அன்று, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**நான் இந்த இடத்தை** (மைசூர்) **விரும்புகிறேன், ஆனால் இங்கே வாழும் இதுபோன்ற மக்களால் சுதந்திரமாக அங்கும் இங்கும் நகர முடியாது, அதை நான் விரும்பவில்லை. டோக்காவில் நான் செய்ததைப் போல், எட்டே நாட்களில் ஆசிரமத்தை அமைப்பது, அகற்றுவது என்பது சிரமமான காரியம். அங்கிருந்த நிலைமை வேறு, இங்கிருக்கும் நிலைமை வேறு. எதிர்காலத்தில் எந்த சிரமங்களும் ஏற்படக்கூடாது என்பதற்காக, இப்போது ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க விரும்புகிறேன்.**

**அதற்காக, எனது உறை வாளை, கையில் எடுக்க வேண்டும், இதன் மூலம் நான் 'சிங்கத்தை அதன் சொந்த குகையில் அடக்கி வைக்க முடியும்', அதாவது இந்த மரபுவழிக்கு இடையிலும் நான் எனது பணியைச் செய்ய முடியும் என்பதே இதன் பொருள்!**

**இந்த வைராக்கியவான்கள் அனைவரும், போர்க்களத்தின் முன் எல்லைக்கு அனுப்பப்பட வேண்டும்! ஒரு துரோகி இந்த நபர்களைவிடச் சிறந்தவன், ஏனெனில் அவன் துரோகியைப் போலவே தோற்றமளிக்கிறான்.**

**மக்கள் அவனை அடையாளம் கண்டு, அவனிடமிருந்து விலகி இருக்க முன்னெச்சரிக்கைகள் எடுக்கலாம். ஆனால் இந்த மரபுவழி நபர்கள், புனிதர்கள் என்ற போர்வையில் பிசாசுகளாக, மக்களுக்கு மறைமுகமாக ஊறு விளைவிக்கிறார்கள்!**

**சோம்பேறிகளும் உதவாக்கரைகளும் பெரும்பாலும் வெளிப்படையாகவும், இயல்பால் தைரியமாகவும் இருக்கின்றனர்; எந்தவொரு நிகழ்விற்கும் தயாராக இருக்கும் நிலையில், உயிரை விட்டுவிடவும் அஞ்சுவதில்லை. ஆனால் இந்த வைராக்கிய வர்க்கங்கள் கோழைத்தனமும், பாசாங்குத்தனமும் மிக்கவர்கள்! எனவே, இந்த வெறியர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அவர்கள் ஒரு சாதுவின் ஆடைகளைப் போர்த்திய கருப்பு ஆடுகளைப் போன்றவர்கள்!**

18ஆம் தேதி பல் மருத்துவரைப் பார்க்க ஜால்பாய், சாஞ்சி ஆகியோருடன் பாபா, பெங்களூருக்குச் சென்றார். பெங்களூருக்குச் செல்லும் போதெல்லாம், அவர் கெங்கேரி (KENGERI) நகரில் நின்று, அந்த மருத்துவ குணம் மிக்க கிணற்று நீரை அருந்துவது வழக்கம். பல் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு நாள் தங்கவேண்டியதாக இருந்ததால், சாஸ்திரி ஆனந்த் பவன் விடுதியில் (ANAND BHAVAN LODGE) தங்கினர். மாலை வேளையில் பாபா பொது மைதானத்தைச் (காமன்ஸ் - COMMONS) சுற்றி வந்தார்.

மறுநாள் காலையில் பாபா, பல்மருத்துவரிடம் சென்று, பற்களில் புதிய பாலங்கள் பொருத்தி சிகிச்சைப் பெற்றார். அன்று மாலை, அவர்கள் நியூ இம்பீரியல் டாக்கீஸில் (NEW IMPERIAL TALKIES) ஒரு திரைப்படத்திற்குச் (அக்ஸெண்ட் ஆஃப் யூத் - ACCENT OF YOUTH) சென்றனர். 20ஆம் நாள், திரும்பி வரும் வழியில், பாபா காரை நிறுத்தி, தன்னை சூழ்ந்துகொண்ட சில ஏழை குழந்தைகளுக்கு, குக்கிகளை (COOKIES) வழங்கினார். மைசூர் திரும்புவதற்கு முன்னர், அவர்கள் ஒரு பாலத்தைக் கடந்து காவேரி ஆற்றில் அமைந்த ஸ்ரீரங்கப்பட்டணம் தீவுக்குச் சென்றனர்; அங்கு திப்பு சுல்தானின் கோட்டை மற்றும் இடிந்து காணப்பட்ட பிற நினைவுச்சின்னங்களை பாபா பார்வையிட்டார்.

1936, மார்ச் 21ஆம் நாள், மெஹன்தர்கே (MEHENDARGE) தனது சகோதரரின் மறைவு பற்றிய செய்தியை அறிந்தபோது, கண்கலங்கி அழுதார். மெஹர் பாபா அவரை ஆறுதல்படுத்தி விளக்கினார்:

**இந்த வாழ்க்கை, உடல், மரணம் அனைத்தும் மாயா; ஒருவரின் மரணம் குறித்து கண்கலங்குவது அறியாமை. நினைவில் கொள்ளுங்கள், மாயா என்பது இந்த உலகமும் அதன் விவகாரங்களும் என்று அர்த்தமல்ல. இந்த உலகமும் அதிலுள்ள அனைத்தும் உண்மையானவை என்ற போலித் தோற்றத்தையும், உணர்வையும் தருவது மாயை - மேலும் சில**

**சூழ்நிலைகளில் மகிழ்ச்சியாகவோ அல்லது மாறாகவோ உணரச் செய்வதும் மாயை.**

**மாயா, மனிதர்களை எவ்வாறு கவர்ந்திழுக்கிறாள், எப்படி ஏமாற்றுகிறாள் என்பதையும், அவர்களைச் சுற்றி அவள் எப்படிப் பின்னிப் பிணைந்திருக்கிறாள் என்பதையும் பாருங்கள்! தினமும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். சமீபத்தில் அமெரிக்காவில் வெள்ளப் பெருக்கால் பலர் உயிரிழந்தனர். அபிஸினியாவில் - ABYSSINIA (ETHIOPIA - எத்தியோப்பியா) நடந்த போரில், பலர் கொல்லப்பட்டனர். குவெட்டாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மட்டும் 30,000 பேர் மாண்டு போயினர்! ஆனால் இந்த ஆயிரமாயிரம் மக்கள் உயிரிழந்த வேளையில் நீங்கள் அவர்களுக்காக வருத்தப்படவில்லை - இவர்கள் ஆரோக்கியமும் திடகாத்திரமுமாக வாழ்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், நீண்ட காலம் வாழ்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டவர்கள், மேலும் பல்வேறு நம்பிக்கைகள், திட்டங்கள் மற்றும் லட்சியங்களைக் கொண்டிருந்தவர்கள்.**

**அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், உங்கள் சகோதரர் வயதானவர், உடல்நலமின்றி மிகவும் துன்பப்பட்டவர்; அவரைப் பொறுத்தவரை, உங்கள் கண்ணீர் பயனற்றது. அவர் துன்பத்திலிருந்து விடுபடும் தருணத்தில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!**

1936 மார்ச் மாதத்தில், பாபா வயிற்றுக் கோளாறால் அவதிப்பட்டு அசௌகரியமாக உணர்ந்தார். சில ஆயுர்வேத சிகிச்சைகளை அறிந்த சகன், பாபா விரலில் அணிய உலோக மோதிரம் ஒன்றைக் கொடுத்தார்; ஆனால் மறுநாள் அவரது விரல் வீங்கியபோது, பாபா அதை அகற்றிவிட்டார்.

இந்நேரத்தில் மண்டலியில் பலருக்கு உடல்நலம் சரியாக இல்லை. மணியின் காதில் தொற்றுக் கிருமிகள் தாக்கியதால் மார்ச் 23 அன்று மண்டி மொஹல்லாவில் (MANDI MOHALLA) ‘ஹோல்ட்ஸ்வொர்த் மெமோரியல் மிஷன் மருத்துவமனையில்’ (HOLDSWORTH MEMORIAL ‘MISSION HOSPITAL’) அனுமதிக்கப்பட்டார், அங்கு டாக்டர் ராபின்ஸன் (DR. ROBINSON) அறுவை சிகிச்சை செய்தார். நாஜா, மணிக்கு உதவியாக இருந்ததால் கோர்ஷெத் சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் தொடர்ந்து அவரும், வாலுவும் ஜுரத்தால் படுக்கையில் வீழ்ந்தனர். மெஹரா ஆரோக்கியமாக இருந்ததால் பாபாவின் தனிப்பட்ட தேவைகளை கவனித்துக் கொள்ள முடிந்தது.

ஆண் மண்டலியில், பாபாவின் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த சகனும் நோயால் படுக்கையிலானார். மற்றுமொரு சிக்கல் என்னவெனில், சில உள்ளூர் உதவாக்கரைகள் இரவு நேரங்களில் பங்களாவை நோக்கிப் பாறாங்கற்களை வீசத் தொடங்கினர், பின்பு வீட்டைச் சுற்றியுள்ள மூங்கில் பாய்களில் துளைகள் இட்டு உள்ளே நடப்பதை உற்று நோக்கினர்.

ஆண்கள் எவரும் அருகில் நெருங்காமல் ஸூனாமாஸி காவல்புரிந்து வந்தார். பெண் மண்டலி உடல்நலமின்றி இருந்ததால், பாபா, ஸூனாமாஸி வருவது வரை அந்தப் பணியைச் செய்யத் தொடங்கினார்.

**"இவை அனைத்தும் மைசூரியன் மாயா** (MYSORIAN MAYA)**"** என்று பாபா கூறினார், **"மாயா அதன் முழு சக்தியுடனும் செயல்படுவது, எல்லா பக்கங்களிலும் சிக்கல்களை உருவாக்குகிறது**!"

பாபா தினமும் இரண்டு அல்லது மூன்று முறை மருத்துவமனைக்கு மணியைப் பார்க்கச் சென்றார், அவருக்காக சூப் (SOUP) அல்லது வேறு ஏதேனும் திரவ ஆகாரத்தை எடுத்துச் செல்வது வழக்கம். மணிக்கு நல்ல சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்ய அவர் தொடர்ந்து சாஞ்சியை மருத்துவரிடம் அனுப்பிவைத்தார். பாபாவின் அடையாளத்தை வெளிப்படுத்தாதபோதும் அனைவரும் பாபாவால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

1936, மார்ச் 28 அன்று, மெஹர் பாபா இவ்வாறு கருத்துரை வழங்கினார்:

**எனது 'மனதை' எங்கு நான் ஈடுபடுத்தக் கூடாதோ, அந்த விஷயத்தை வெளியளவிலான வழிமுறைகளால் செயல்படச் செய்கிறேன். விவேகானந்தர் கூறியது போல், "உண்மையான ஆசிரியர் அவரது மாணவரின் நிலைக்கு இறங்கி வருகிறார்." நானும் இந்தப் பௌதீக உலகில் சாதாரண மனித நிலைக்கு வந்து, அந்த மக்களைப் போலவே அனைத்தையும் செய்து, உணர்ந்து துன்பப்பட வேண்டும். உதாரணமாக, மணியின் விஷயத்தில், என்னால் எனது மனதைப் பயன்படுத்த, ஈடுபடுத்த முடியாது, கூடாது. எனவே நான் எல்லா வெளியளவிலான வழிகளிலும் பணிபுரிகிறேன். ஒரு சாதாரண மனிதனாக உணர்கிறேன், அவனைப்போல நானும் துன்பங்களை அனுபவிக்கிறேன். மாயா எப்போதுமே எதிராகச் செயல்படுகிறாள், அவளுடைய வலிமை மிகப் பெரியது, அங்கு நான் எனது மனதை ஈடுபடுத்த முடியாது, கூடாது.**

**இவை அனைத்தும் சிக்கல்களை உருவாக்குகிறது, ஏனெனில் 'மாயை' என்றாலே தவறான நம்பிக்கையால் விளையும் சிக்கல்கள். உண்மையில் சொல்லப்போனால் எந்தச் சிக்கலும் இல்லை, ஏனெனில் இது ஒன்றானது; முழுமையானது; பிரிக்க முடியாத ஒன்று!**

**'தேவை' என்பது ஒரு முக்கியமான காரணி. குருநாதர்களுக்கும், அவர்கள் மனதைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையிலும், அவர்களுக்கு, சில விஷயங்களில் 'தேவை' உள்ளது. அவர்கள் சாதாரண மனிதர்களின் நிலைக்கு வந்து, சாதாரண விஷயங்களில் ஈடுபடும்போது, சாதாரண மனிதனுக்கு அது புதிராகவும், ஆச்சரியமாகவும் இருக்கும். உதாரணமாக, டாக்டர் ராபின்ஸன். நீங்கள் அனைவரும் அவர் பின்னால் செல்லவும், நான் உங்களுடன் சென்று அவரைப் பார்த்து, விஷயங்களை விளக்கி, அவருடைய பதிலைப் பெறுவதற்கும் மிகவும் ஆர்வமாக உள்ளேன். ஏன்? ஏனெனில், 'தேவை' உள்ளது. மணியின் விஷயத்தில், அவர்**

**விரைவில் குணமாக வேண்டும் என்பது ஒரு 'தேவை'; மேலும் மணியை ஒரு சிறந்த நிபுணரின் கைகளில் ஒப்படைத்துள்ளதால், நாம் அவருக்குப் பின்னால் ஓட வேண்டிய 'தேவை'; இல்லையெனில், சாதாரண சூழ்நிலைகளில், நமக்குத் 'தேவை' இல்லையென்றால், அவர் வந்து ஒரு நேரடி பேட்டியைக் கோரியிருந்தாலும் நான் அவரைப் பார்த்திருக்க மாட்டேன்.**

**மைசூர் நகரை, சில வெளியளவிலான காரணங்களுக்காகவும் நான் விரும்புகிறேன். காலநிலை, நீர், எல்லாவற்றிற்கும் மேலாக என்னை அங்கே** (மெஹராபாத், நாசிக், மும்பை) **தொந்தரவு செய்யும் சிறிய சிறிய கவலைகளிலிருந்து நான் ஒதுங்கியிருப்பதாக உணர்கிறேன்.**

**மேலும், திவானிடமிருந்து நல்ல பதில் வந்தால் வசதியாக இருக்கும். ஆனால் மணியின் கடுமையான நோய் மற்றும் அறுவை சிகிச்சை, உற்சாகத்தை இழக்கச் செய்கிறது. அனைத்திற்கும் மேலாக, மூங்கில் பாயில் துளையிடும் விவகாரம் நம்மை முற்றிலும் ஏமாற்றமடையச் செய்தது.**

1936, ஏப்ரல் 3 அன்று குஸ்தாஜி, ஜால்பாய், சகன், சாஞ்சி ஆகியோருடன் மெஹர் பாபா, 'நஞ்சங்குட்' (NANJANGUD) குறுநகருக்குச் சென்று, அங்கு அமைந்த புகழ்பெற்ற ஒன்பது மாடி கோயிலில் நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளைப் பார்வையிட்டார். அன்று ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அருகிலுள்ள நதியில் நீராடி, கோவிலை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

ஏப்ரல் 7ஆம் நாள், பாபா தூக்கத்தைப் பற்றி விளக்கினார்:

**ஒருவர் தூங்கும் நேரத்தின் அளவு பழக்கத்தால் வருவது; அது ஒரு 'தேவை' அல்ல. உண்மையில், தூக்கம் என்பது உணர்வற்ற நிலை, மேலும் உண்மையான இறை உணர்வை அடைவது வரை, ஆன்மீக ரீதியில், அனைத்து மனிதர்களும் உணர்வற்ற நிலையிலேயே உள்ளனர். தூங்கும்போது இந்த உணர்வற்ற நிலை என்பது உண்மையில் உடலின் செயலற்ற தன்மை மற்றும் ஓய்வைத் தவிர வேறொன்றுமில்லை, இது ஒரு வழக்கமான பழக்கமாக உருவாகி, ஒரு 'தேவை' என்றாகிவிடுகிறது.**

**விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவற்றில் அதீத ஈடுபாடு மிக்கவர்கள், தூங்குவது மிகக்குறைவு; அவர்கள் தங்கள் பணியில் முழுமையாகத் தங்களை அர்ப்பணம் செய்து, ஆழமாக ஈடுபட்டு, மும்முரமாக இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஓய்வெடுக்க நேரம் இல்லாதபோது, தூக்கத்திற்கான நேரம் மிகக் குறைவு - இரண்டு மணி நேரம் கூடத் தூங்குவதில்லை. இப்படி மிகக் குறைவான தூக்கத்துடன் பழக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர், ஆனாலும் அவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர்.**

**ஆகவே, குறைந்த அளவிலான தூக்கத்தால் ஒருவரின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது என்ற பொதுவான கருத்தில் எந்த மதிப்பும் அல்லது அர்த்தமும் இல்லை. இது சிறு பருவத்திலிருந்தே உருவாகிய பழக்கத்தின் விளைவாகும்.**

**இந்தியாவிலும் கிழக்கத்திய நாடுகளிலும் பொதுவாக இரவு, ஓய்வெடுப்பதற்கும், தூங்குவதற்குமான நேரம் என்று கருதப்படுகிறது; இங்கு பெரும்பாலான மக்கள் இரவில் சீக்கிரமாகத் தூங்கச் சென்று, அதிகாலையில் விழித்தெழுவது பழக்கம். மேற்கத்திய நாடுகளில் இது தலைகீழாக நடக்கிறது, அங்கு மக்கள் பகலில் இருப்பதை விட இரவில் அதிக 'சுறுசுறுப்போடு' உள்ளனர். அவர்கள் இரவில் தாமதமாகத் தூங்கி, பெரும்பாலும் நள்ளிரவுக்குப் பின்னர், இரவு விருந்து, நடனம், சினிமா, ஓபரா போன்ற பொழுதுபோக்குகள் முடிந்த பின்பு, காலையில் மிகவும் தாமதமாக எழுந்து, காலை உணவைப் படுக்கையில் கூட உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்! காலை 11 மணிக்கு, கிழக்கில் மக்கள் ஏறக்குறைய பாதி வேலையை முடிக்கும்போது, அவர்கள் வழக்கமாக வேலையைத் தொடங்குகிறார்கள்.**

**தூக்கம் மற்றும் செயல்பாடுகளின் நேரங்களில் ஏற்படும் மாற்றம், பழக்கத்தின் நிர்பந்தத்தால் உருவாகின்றன. மக்கள் தங்கள் வழக்கமான பழக்கத்தின் மூலம், அதிக சுறுசுறுப்பாக இருக்க கற்றுக் கொண்டால், தூக்கம் அவ்வளவு விரைவில் வராதவரை, தூக்கத்தின் நேரங்களைப் படிப்படியாகக் குறைப்பது ஆச்சரியமல்ல!**

ஏப்ரல் 10 அன்று பிற்பகலில், பாபா அற்புதமான மனநிலையில் இருப்பதாகத் தோன்றியது. "நல்ல மனநிலையில் இருக்கும்போது அடிக்கடி செய்வது போலவே, பாபா, வாய்க்குள்ளே ரீங்காரம் செய்து மெதுவாகக் குரல் எழுப்பினார்" என்று சாஞ்சி பதிவு செய்திருந்தார். பாரசீக கவிஞர் குஷ்ரோவின் (KHUSHRAW) கவிதை வரிகளை எழுத்துப்பலகையில் எழுதி, காளேமாமாவிடம் அவற்றை பலமுறை திரும்பத் திரும்ப எடுத்துரைக்கக் கூறினார். விஷ்ணுவிடம் அந்த வரிகளை இசையுடன் உச்சரிக்குமாறு தெரிவித்தார். பாபா அவற்றின் பொருளை விளக்கி, பின்பு கவிதை புத்தகத்தைத் திறந்து, ஒரு குறிப்பிட்ட கவிதையை, சகனிடம் படிக்குமாறு கூறினார்.

மேலும் பாபா, "**பக்தி பாடல்களைத் தனக்குள்ளே பாடுவதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள், 24 மணிநேரமும் அவ்வாறு செய்து அகமகிழ்பவர்கள்; நீண்ட காலமாக நான் அதை ரசிக்கும் வாய்ப்பை இழந்தேன்!**" என்று வருத்தம் தோய்ந்த விதத்தில் எடுத்துரைத்தார்.

பாபா பல ஆன்மீகக் கவிஞர்களைப் பற்றி குறிப்பிட்டார்: "**கபீரின் (KABIR) கவிதைகள் அழகு மிக்கவை - எளிமையான, ஆனால் ஆழமான அர்த்தமும் சுவாரஸ்யமும் நிறைந்தவை. கபீர், இயல்பாகவே அமைதியாகவும் மென்மையாகவும் இருந்தார், அதே நேரத்தில் (குரு) நானக்ஜி (GURU NANAKJI)**

**மிகவும் கோபமான மனநிலையில் இருந்தார். இருவரும் இறைநிலையை எய்தியவர்கள், இருந்தும் மனோபாவத்தில் மிகவும் வித்தியாசமானவர்கள். துக்காராம் (TUKARAM) அழகான குறுங்கவிதைகளில் கைவண்ணம் மிக்கவர். கிருஷ்ணா (KRISHNA), சந்தேகத்திற்கு இடமின்றி, கீதையின் (GITA) நாயகன், ஆனால் அவர் அதை எழுதவில்லை. பிறகு யார் எழுதியது?"** 'கிருஷ்ணரிடமிருந்து நேரடியாகக் கேட்டு அறிந்தவர்கள், சில தலைமுறைகளாக இது தந்தையிடமிருந்து புதல்வனுக்கு வாய்வழியாக வழங்கப்பட்டிருக்கலாம்' என்று மண்டலி கூறினர். பாபா அதை ஆமோதித்தார்: **'சமஸ்கிருதத்தில் இதை எழுதியவர் நிச்சயமாக ஒரு மேம்பட்ட ஆத்மாவாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் அவரைத் தவிர வேறு எவராலும் கீதை போன்ற தெய்வீக தலைசிறந்த படைப்பை உருவாக்க முடியாது.'**

அவெஸ்தாவைப் (AVESTA) பற்றி, பாபா மேலும் கூறுகையில், "**ஸொராஸ்டர், (ZOROASTER) அவதார புருஷர், தெய்வீக வாக்குகளை வழங்கினார்; ஆனால் இன்றைய அவெஸ்தாவில் அவை குறிப்பிடப்படவில்லை."**

மெஹர் பாபா தொடர்ந்து மருத்துவமனைக்குச் சென்று மணியின் உடல்நிலை பற்றிய அறிக்கைகளைப் பெற்றார். ஏப்ரல் 10ஆம் நாள், மணியின் உடல்நலமற்ற நிலை, அவரது நடவடிக்கைகளில் ஒரு 'தடையை' உருவாக்கியுள்ளது என்று பாபா குறிப்பிட்டார், ஏனெனில் அவர் மைசூரை விட்டு வெளியேற விரும்பினார், ஆனால் மணி குணமடையும் வரை அது முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஏப்ரல் 14ஆம் நாள், மெஹர் பாபா மண்டலிக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நான் 'பரமாத்மா', மேலும் நொடிப்பொழுதில் நான் இந்தக் கஷ்டங்களிலிருந்து அனைத்தையும் விடுவிக்க முடியும். மணி எனது சகோதரி, அவரை நான் குணப்படுத்தியிருக்க முடியாதா? அவர் எனது சகோதரி என்றாலும், நான் என் உலகளாவிய மனதின் சக்தியை அவரிடம் பயன்படுத்துவதில்லை, அதேபோல் எனக்கு நெருக்கமான அனைவருக்கும் இது பொருந்தும். ஆகையால், நான் உலக மருத்துவ முறைகளை நாட வேண்டும், எனது பணியைச் செய்யும் அனைவரையும் புகழ்ந்து பேச வேண்டும்!"**

சாஞ்சியை நோக்கி பாபா இவ்வாறு தொடர்ந்தார், **"நான் உங்களை அடிக்கடி மருத்துவர்களிடம் அனுப்புகிறேன், நீங்கள் அவர்களிடம் இனிமையாகப் பேசி, காரியங்களை சாதிக்க வேண்டும். சகனின் உடல்நிலை இப்போது மோசமாக உள்ளது, அவர் மூன்று மாதங்கள் ஓய்வெடுக்க விரும்புகிறார். ஆனால் அதே நேரத்தில் அவருடைய பணியை வேறு எவரும் செய்ய இயலாது என்று எனக்குத் தெரியும்.**

**ஆதலால் நான் அவரிடம் இணக்கமாகப் பேசி, காரியங்களைச் செய்ய வேண்டும்!**

**“நான் ஏன் இப்படிச் செய்கிறேன்? ஏனெனில் எனக்கு அவை ‘தேவை’. நான் சர்வவல்லமையுள்ள கடவுள் என்றாலும், எனது வேலைக்கென சில தேவைகள் உள்ளன. ஒவ்வொருவரும் வேறொருவரைச் சார்ந்து இருக்கிறார். ஆனால் உங்கள் தேவைக்கும், என்னுடைய தேவைக்கும் இடையே உள்ள வித்தியாசம், வானத்திற்கும் பூமிக்கும் நடுவில் உள்ள ஒரு பெரிய இடைவெளியைப் போன்றது. உங்கள் தேவைகள் சுயநலத்திலிருந்து உருவாகின்றன, என்னுடையது தன்னலமற்றது - எந்தவொரு சுயநல நோக்கமும் இல்லாதது. எனது பணி பிறரின் முன்னேற்றத்திற்கானது, மேலும் அது பிறரின் நன்மைக்காக இருப்பதால், மக்களை ஈடுபடுத்துவதில் நான் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை.**

**“எனது பணி உலகளாவிய கடமையைக் காரணமாகக் கொண்டது, நான் சகனின் உடல்நிலையில் கவனம் செலுத்துகிறேன், அவரின் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். எனக்கு, கடமை உணர்வு இல்லையென்றால், சகன் இறந்திருந்தாலும் நான் கலலைப்பட்டிருக்க மாட்டேன்!**

**“எனது ‘தேவை’ பிறருக்கு ஒரு வரப்பிரசாதம் ஆனால் எனக்கு அது ஓர் இடையூறு! இதை நீங்கள் மருத்துவரின் அணுகுமுறையிலிருந்து பார்க்க முடியும். நான் அவரை தாழ்மையுடன் பொறுத்துக் கொள்கிறேன், மேலும் தாழ்மையுடன் இருக்கவும் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.”**

1936, ஏப்ரல் 16ஆம் நாள், பாபா மைசூர் தொடர்பான விஷயத்தை மேலும் தொடர்ந்து விளக்கினார்: “**முதலில், இந்த இடம் பல விஷயங்களில் நம்மைக் கவர்ந்தது - இனிமையான வானிலை, அழகான சுற்றுப்புறங்கள், வசதியாக வாழும் இடம் (குறிப்பாகப் பெண்களுக்கு), ஆகையால் நாம் அனைவரும் இங்கே தங்க விரும்பினோம்.**

**“பின்னர் எதிர்பாராத விதமாக, மணியின் காது பிரச்சினையால் எல்லா பணிகளும் தடைபட்டுவிட்டன. சுருக்கமாக, நாம் உண்மையில் இங்கே மாட்டிக்கொண்டோம்.**

**“மைசூர் (MYSORE) கடைசியில் ‘கண் உறுத்தல்’ (EYESORE) ஆகிவிட்டது!”** பாபா கேலி செய்தார். “**நாம் அனைவரும் விரைவில் இங்கிருந்து வெளியேற விரும்புகிறோம்.”**

இந்தச் சிறிய சிறிய விஷயங்களையும், தொந்தரவுகளையும் தாங்கி, பாபா, அவரை ஏன் இவ்வளவு சிக்கலுக்குள்ளாக்குகிறார் என்று மண்டலி கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**மாயையின் பிடியிலிருந்து உங்களை விடுவிப்பது எனது கடமை; நான் இதைச் செய்யும்போது, அதை விரும்பாத மாயாவின் எதிர்ப்பை நான்**

எதிர்கொள்ள வேண்டும். ஏன்? இது 'எதிர்வினை'யின் நியதிப்படி தானாகவே நிகழ்வது. மாயா வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை, ஆனால் அது தானாகவே நிகழ்கிறது. அவளது பிடியிலிருந்து மக்களை விடுவிக்க நான் எவ்வளவு அதிகமாக முயற்சிக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக அவள் வலையில் அவர்களை இழுத்து எதிர்ப்பை உருவாக்க முயற்சிக்கிறாள்!

இது எதிர்ப்பு மற்றும் எதிர்வினை சட்டத்தின் படி நிகழ்வது. மாயா ஒரு வௌவால் போன்றது. ஒரு முறை வௌவால் உங்கள் காதோடு ஒட்டிக்கொண்டால், அது எளிதில் போகாது. நீங்கள் பொறுமையாக, தொந்தரவு எதுவும் செய்யாமல் அல்லது அதைத் தொடாமல் மணிக்கணக்கில் காத்திருந்தால் அது போகக்கூடும். ஆனால் நீங்கள் அதை வலுக்கட்டாயமாக அகற்ற முயற்சித்தால், அது இன்னும் இறுக்கமாகப் பற்றிக்கொள்ளும். நீங்கள் வௌவாலை இழுக்க முயற்சித்தால் அது காதோடு வெளிவரும்!

அதுபோல சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும் பல்லியுடன் மாயாவை ஒப்பிடலாம். நீங்கள் அதை அகற்ற முயற்சித்தால், அது இன்னும் இறுக்கமாகப் பற்றிக்கொள்ளும். இது தவிர்க்க முடியாத சட்டம், குணப்படுத்த முடியாததை சகித்துக்கொள்ள வேண்டியது அவசியம்! அதனால்தான் குருநாதர்கள், அவதார புருஷர்கள் அனைவரும் மிக மோசமான துன்பத்திற்கு ஆளாகிறார்கள். குருநாதர்களின் பணி மற்றும் கடமையின் தன்மைக்கு ஏற்ப, எதிர்ப்பு சக்தியும் வேறுபடுகிறது.

சாய்பாபா, பாபாஜான், உபாஸனி மஹாராஜ் போன்ற சத்குருக்களுக்குக் கூட, எனக்கு இருக்கும் அளவுக்கு எதிர்ப்பு இல்லை. ஏனெனில், அவர்களின் கடமைகள் சில கோள்களுடன் அல்லது கோணங்களுடன் மட்டுமே மட்டுப்படுத்த பட்டிருக்கின்றன, என்னுடையது போன்ற உலகளாவிய அளவில் அல்ல. உதாரணமாக, சாய் பாபா, மது அருந்தி, மாமிசம் உண்பது உண்டு. அது பிறர் மீது ஏற்படுத்தும் கருத்தின் விளைவை அவர் கண்டுகொள்வதில்லை, ஏனெனில் அவருடைய பணி என்னுடையது போல மாறுபட்டதாகவும் உலகளாவிய அளவிலும் இல்லை. தரிசனத்திற்காக வந்த அனைவரையும் ஆசீர்வதிக்கும் பணியை அவர் தொடர்ந்து செய்தார். அவரது செயல்பாட்டுத் துறையில் என்னுடையது போல் அவ்வளவு பரவலாக ஆசிரமங்கள், எண்ணற்ற திட்டங்கள் எதுவும் இல்லை. எனவே, தன்னிடம் வந்தவர்களின் குறிப்பிட்ட செயலைப் பற்றியோ அவர்கள் என்ன எண்ணம் கொண்டிருந்தார்கள் என்பதைக் குறித்தோ எதையும் பொருட்படுத்தவில்லை. இருந்தும் செல்வாக்கு மிக்கவர்களாகிய தீக்ஷித், கபர்தே மற்றும் பலர், அவரிடம் வந்து அவரை வணங்கினர்.

உபாஸனி மஹாராஜ், நாராயண் மஹாராஜ் விஷயத்திலும் இந்த ஒற்றுமையைக் காணமுடிகிறது. அவர்கள் இருவரும் பரிபூரண இறை உணர்வை அடைந்த குருநாதர்கள் என்றாலும் அவர்களின் பணி (இந்து)

குறுங்குழுவாத இயல்பைச் சார்ந்திருக்கிறது. அவர்கள் எல்லா சடங்கு சம்பிரதாயங்களையும் கண்டிப்பாகக் கடைப்பிடித்து, பிற அனைவரையும் ஒதுக்கி வைக்கும் பிராமணர்களால் சூழப்பட்டிருக்கிறார்கள். சமுதாயத்தின் ஸ்தாபிக்கப்பட்ட விதிகள் குறித்து, உபாஸனி மஹாராஜின் அலட்சியம் (பல இளம் பெண்களைக் கன்னியாஸ்திரிகளாக ஆசிரமத்தில் வைத்திருத்தல்) அவருக்கு ஒரு கெட்ட பெயரைக் கொண்டு வந்து, அவரது பணியைக் கடினமாக்கி, அவதூறு மற்றும் சிக்கலை உருவாக்கியது. ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை, ஏனெனில் அவர் பரிபூரணமானவர் - எனவே இந்த விஷயங்களுக்கு மேலேயும் அதற்கு அப்பாலும் - அவரது பணி அவ்வளவு விரிவானதாகவும், பரந்ததாகவும் இல்லை.

எனது பணி உலகளாவியது; எனவே, நான் கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் உள்ள அனைத்து மதங்கள், நாடுகள், மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். என்னுடைய பணியில் ஈடுபடும் போது, எனது தொடர்பில் வரும் அனைவரின் உணர்வையும் தோற்றத்தையும் கருத்தில் கொண்டு, நான் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நான் அவ்வாறு செய்யாவிட்டால், எவரும் உள்ளே வரமாட்டார்கள் - அவர் அல்லது அவள் அதைச் செய்ய வேண்டும் என நான் விரும்புவதால் அவர்களைத் தூண்ட வேண்டியதாகிறது. எனது மிகப்பெரிய, உலகளாவிய தெய்வீக திட்டத்தில், அனைத்து சாதிகள், மதங்கள், வழிபாட்டு முறைகள் மற்றும் மதங்களைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் தேவைப்படுகிறார்கள் - ஏழ்மையான விவசாயி முதல் பணக்கார ராக்ஃபெல்லர் (ROCKFELLER வரை - ஒவ்வொருவரும் அவரவர் வகுப்பு அல்லது சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகை வேலைக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும். அதன்படி, இணங்கும் நபர்களை நான் கண்டுகொள்கிறேன்.

இவ்வாறு என்னுடன், இந்துக்கள், முஹமதியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், கிழக்கு மற்றும் மேற்கத்திய மக்கள் அனைவரும் உள்ளனர், ஒவ்வொருவரும் சில போக்குகள், மனோபாவங்கள், விருப்பங்கள் அத்துடன் ஒரு குறிப்பிட்ட வகை வேலைகளைச் செய்யும் உடல் ஆரோக்கியம் அல்லது ஆர்வம் கொண்டவர்கள். நல்ல குணங்கள் படைத்த ஒவ்வொருவரும், அதே நேரத்தில் அருகருகே, சில பலவீனங்களையும், தவறான எண்ணங்களையும் கொண்டிருக்கின்றனர் என்பதால், பொருத்தமான ஒருவரை எனது பணிக்காகத் தேர்ந்தெடுக்கும் முன்னரே, இந்த விஷயங்கள் அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

ஆகையால், ஒரு நபர் அறிமுகம் ஆகும்போது, அல்லது எனது தொடர்பில் வரும்போது, நான் அவரை உன்னிப்பாக கவனிக்கிறேன், ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, சாதி, மதம் அல்லது மதம் குறித்த அவரது தவறான எண்ணங்களைத் தூண்டிவிட்டு அவரது தகுதியை எடை போடுகிறேன். அவரது இயற்கையான மனநிலையில்

உள்ள இதர பலவீனங்களை அவர் படிப்படியாக, ஒவ்வொன்றாக விட்டுவிடத் தயாராகும் வரை நான் பொறுமை காக்கிறேன். பின்னர் அவர் ஒவ்வொன்றையும் ஒரு சிறந்த, பரந்த கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ளத் தொடங்குகிறார்; எல்லா நேரங்களிலும் பேச்சுக்கள், விளக்கங்கள், சொற்பொழிவுகள், பிறருக்கான நேரடி குறிப்புகள் மூலம் தானாகவே பயிற்சியளிக்கப்படுகிறார்; சொல்லப்போனால் அவை உண்மையில் அவருக்கே உரியவை.

இது மிகவும் நுட்பமான மற்றும் கடினமான பணியாகும், இது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் சம்பந்தப்பட்ட பல நபர்களுக்கு, பல சிக்கல்களை உருவாக்கக்கூடியது; இதன் விளைவாக, பயிற்சியளிக்கும் வேளையில், சிலர் இதை சகித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இவ்வாறு, ஓர் இந்து என்னைப் பார்க்க வந்தால், நான் அவருடைய சாதியை - பிராமணர் அல்லது தாழ்த்தப்பட்டவர் என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்தாற்போல் அவருடன் பேசவும், நடந்துகொள்ளவும் வேண்டும், அதேபோல் ஒரு முஹமதியர், பார்சி அல்லது கிறிஸ்தவர் விஷயத்திலும் அப்படித்தான். அவர் மிகவும் விரும்புவதைப் போல, நான் விஷயங்களை விளக்குகிறேன் - அவரது மனோபாவம், ஆர்வம் அல்லது தவறான எண்ணங்களையும் கருத்தில் கொள்கிறேன் - அப்போது நான் சொல்ல விரும்புவதை அவர் ஜீரணிக்கிறார்; பின்பு படிப்படியாக அவரது தவறான எண்ணங்களை வென்று மேலும் கற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்.

இந்த முறையில், இத்தனை வருடங்களில் பலர் பயிற்சி பெற்றுள்ளனர், இதனால் அனைத்து மண்டலியிலும் உள்ள இந்துக்கள், முஹமதியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக வாழக் கற்றுக்கொண்டனர். அவர்களின் மதம் மற்றும் பிற சமூக பாரபட்சங்கள் நடைமுறையில் அழிக்கப்பட்டுவிட்டன; மேலும் அவர்களின் பலவீனங்கள், தவறான எண்ணங்கள் அனைத்தும் பொய்யானவை, உண்மையற்றவை என்பதையும் அவர்கள் நம்புகிறார்கள்; இன்னும் சொல்லப்போனால் உண்மையான மதம் என்பது உலகளாவிய சகோதரத்துவ மனப்பான்மையுடன் அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிப்பதாகும். பல வருட பயிற்சி முறையுடன் செயல்தந்திர யுக்திகளை மேற்கொண்டு, ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரின் மனோபாவத்திற்கு ஏற்ப தனித்தனியாகக் கற்றுத் தருகிறேன். அவர்களை, சாமர்த்தியமான முறையில் ஒன்றிணைத்து, என்னுடைய குறிக்கோளான அனைத்து மதங்களும் ஒன்று என்ற சரியான புரிதலுடன், சகிப்புத்தன்மையை வளர்த்து, உண்மையான ஆன்மீக நோக்கத்துடன், வாழ்க்கையின் இறுதி இலக்கை அடையச் செய்வதாகும் என்பதை நான் அறிவேன்.

ஆனால், இந்தப் பயிற்சியின் ஆரம்ப கட்டத்தில், உங்கள் மனித பலவீனங்களையும், சாதி, மதம் குறித்த தவறான எண்ணங்களையும்

புறக்கணித்து, இந்த ஆன்மீக உண்மைகளை நான் ஆரம்பத்திலிருந்தே கற்றுத்தந்திருந்தால், உங்களில் எவருமே என்னுடன் இருந்திருக்க மாட்டீர்கள், மேலும் இப்போது நீங்கள் கற்றறிந்த வாழ்க்கையின் ஒழுக்கம் மற்றும் சரியான புரிதல் மிகவும் குறைவாகவே இருந்திருக்கும்.

இத்தகைய பலவிதமான பலவீனங்கள் மற்றும் பாரபட்சங்கள் நிறைந்த நபர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். ஆரம்ப காலத்தில், அவர்களின் குறைபாடுகளைக் கண்டும் காணாததுபோல் இருந்து, வேண்டுமென்றே செய்யும் தவறுகளையும் மறந்து, அவர்களை இணங்கச்செய்து, வெகு நுணுக்கமாகக் கையாளவேண்டியது அவசியம். இதன்மூலம் எனக்கும் கடுமையாக பாதகம் விளைவித்து, சில சமயங்களில் பிறரும் தேவையின்றி துன்பப்படுகிறார்கள், அதற்காக அவர்கள் என்னை மீண்டும் குறைகூறி, என் மீது கோபப்படுகிறார்கள் அல்லது வருத்தப்படுகிறார்கள். சில நேரங்களில் நான் ஏன் சில விஷயங்களைச் செய்கிறேன் என்பதை அவர்களுக்கு மீண்டும் விளக்க வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது.

ஒரே நேரத்தில் நூறு அல்லது ஆயிரக்கணக்கான மக்களை உள்ளடக்கி, சம்பந்தப்படுத்தி நான் ஈடுபடும் உலகளாவிய பணியில் எப்போதும் சிக்கல்கள் உள்ளன; இதன் விளைவாக, எனது செயல்கள், சொற்கள் அல்லது விளக்கங்களை ஒரு விதத்தில் அல்லது வேறு வழியில் தவறாகப் புரிந்து கொண்டு, தவறான முடிவுக்கு வரும் வாய்ப்பை வழங்குகிறது.

எல்லோரையும் மகிழ்விக்க முயன்றால், ஒருவர் எவரையும் மகிழ்விக்க முடியாது! ஆயினும்கூட, சில சந்தர்ப்பங்களில், ஒரே நேரத்தில், வெவ்வேறு செயல்கள், சொற்கள் மூலம் சில இடங்களில் தேவைக்கு ஏற்றாற்போல நான் அவர்களை மகிழ்விக்க முயற்சிக்க வேண்டும்.

நான் இங்கு மைசூருக்கு வந்தது ஒரு குறிப்பிட்ட குறிக்கோள் சார்ந்த பணிக்காக இருந்தது, மேலும் இங்குள்ள எனது நடவடிக்கைகள் சில திசைகளை நோக்கி இருந்தன, அவற்றை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. உதாரணமாக, நமது அண்டை வீட்டார், சுப்ரமணிய ஐயர்: அவர் ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த நபர், அவருடன் நான் சில நுணுக்கமான யுக்திகளைக் கையாள வேண்டும், ஏனெனில் எதிர்காலத்தில் என்னுடைய சில பணிகளில் அவர் உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஐயர் ஓர் இனிமையான மனிதர், நன்கு படித்தவர், மதவாதி, நல்ல குணமுள்ளவர், நேர்மையானவர். ஆனால் அவருக்கு சில (மரபுவழி வந்த) விசித்திரமான பலவீனங்கள் உள்ளன; அவை என்னவென்று எனக்குத் தெரியும், எனவே எனது பணியின் நிமித்தம், முதலில் நான் அவற்றை கவனிக்க வேண்டும்.

கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் காணப்படும் மனித குணத்தின் குறிப்பிட்ட பண்புகளை விளக்கும் போது, மெஹர் பாபா இவ்வாறு கூறினார்:

**எனது அறிவுடன் கூடிய அனுபவத்திலிருந்து இந்தியர்களின் குணாதிசயத்தில் குறிப்பிடத்தக்க குறைபாடும், பலவீனமும் உள்ளது: மேற்கத்திய மக்களைப்போல் இவர்கள், இருவருக்கிடையே, இரு பொருட்களுக்கிடையே வேறுபாடு காணவல்ல நிலையில் இல்லை. உதாரணமாக, மீண்டும் நமது அண்டை வீட்டு ஐயர். அவர் ஒரு வகையான நபர், அவருக்கு இத்தனை கல்வி அறிவு இருந்தும், அவர் புரிந்து கொள்ளாத ஒரு சிறிய காரணத்தை நோக்கி ஒரு கணத்தில் பாரபட்சம் காட்டுகிறார்.**

**ஐயருக்கு ஆன்மீக குருநாதர்கள், புனிதர்களைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட அபிப்ராயம் உள்ளது, மேலும் காளேமாமா, சாஞ்சி ஆகியோரால் அவருக்கு விளக்கப்பட்ட விஷயங்களிலிருந்தும், அதேபோல் அவர் படிப்பதற்காக வழங்கப்பட்ட புத்தகங்களிலிருந்தும் அவர் தனது எண்ணத்தை உருவாக்கியுள்ளார். நாம் திட்டமிட்டபடி இங்கே ஒரு 'ஆசிரமம்' திறப்பதிலும் அவர் மகிழ்ச்சியடைகிறார், மேலும் அவருடைய வழியில் நமக்கு விருப்பத்துடன் உதவுவார். ஆனால் இவை அனைத்தும் ஏற்கனவே அவர் மனதில் விதைக்கப்பட்ட எண்ணம் நீடிக்கும் வரை இருக்கும். அந்த மனப்படிவங்களைத் தவறாக எடுத்து இழந்துவிடும் தருவாயில் நமக்கு ஒத்துழைத்து, உதவும் ஆர்வம் அனைத்தும் காற்றில் பறந்துவிடும். அத்தகைய நபரின் எண்ணம் அவர் உருவாக்கிய சில இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டது; அவை அதிநுட்பமாகப் பராமரிக்க படாவிட்டால் எளிதில் சிதைந்துபோகும் வாய்ப்புள்ளது.**

**எனவே அந்த எண்ணத்தையும் இலட்சியத்தையும், தக்க வைத்துக் கொள்ள, அவரை மிகவும் கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.**

**அதனால்தான் நீங்கள் அவருடைய உணர்வுகளை புண்படுத்தாமல் அவருடனான உங்கள் பேச்சுகளில் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கிறேன். மூங்கில் பாய்களை வெட்டி, துவாரம் இடுவது போன்ற தீவிரமான விஷயத்தில், மீண்டும் மீண்டும், அது அவரது ஊழியர்களின் வேலை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது, அல்லது அவர்கள் இந்தக் குறும்புத்தனத்தில் பிறருடன் ஒத்துழைக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். அண்மையில் பங்களா மீது கல் வீசித் தாக்கியதைத் தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் ஆபத்தானதாக இருக்கும் இந்த வழக்கமான தொல்லைகளைத் தடுக்க, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அவர் பங்களாவின் உரிமையாளர், குடும்பத் தலைவர் என்பதால், அவரது கவனத்தை ஈர்ப்பது மிகவும் அவசியமாகத் தெரிகிறது. குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டியதும் அவசியம். நீங்கள் இவ்வாறு செய்வதைப் பரிந்துரைக்கும் வேளையில், இதை அவருடைய கவனத்திற்குக்**

கொண்டுவருவதை நான் விரும்பவில்லை, இது நம் அனைவருக்கும் மிகுந்த எரிச்சலையும், பிரச்சினையையும் ஏற்படுத்தும்.

அவரை ஏன் இதிலிருந்து விலக்கிவைத்து, இவ்வளவு துன்பங்களை அனுபவிக்க நான் விரும்புகிறேன்? இப்போது அவருக்கு ஒரு அதிர்ச்சியைத் தருவதைத் தவிர்ப்பதுடன், தற்போதைய அவரது மனநிலையையும் உணர்வையும் பராமரிக்க வேண்டும், ஏனெனில் எதிர்காலத்தில் நான் அவருடன் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. இந்த விஷயங்களைப் பற்றி குறிப்பிடுவதன் மூலம், அவை உண்மைகளாக இருந்தாலும், அவருடைய மனம் ஒரே நேரத்தில் சிந்திக்கத் தொடங்கும், எளிதில் தவறாகப் புரிந்து, அவரிடம் உருவாக்கப்பட்ட மனப்படிவங்கள் முற்றிலும் சிதைந்துவிடும் என்பதை நான் அறிவேன். நம்முடைய சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முயற்சிக்க மாட்டார் - ஒரு புதிய பகுதியில் வாழும் அந்நியர்கள், சில கடுமையான ஒழுக்க நெறிகளில் பயிற்சி பெற்ற பல பெண்மணிகள் நம்முடன் உள்ளனர். நான் ஆன்மீக குருநாதராக இருந்தாலும், உலக மக்களுடன் நான் உலகின் பணியைச் செய்ய வேண்டும், எனவே உலகின் சில வழிகளை கவனித்து அதற்கேற்ப செயல்பட வேண்டும், அது மிகவும் கடினம் என்பதை அவர் ஒருபோதும் உணர மாட்டார்.

குருநாதர்கள் மற்றும் புனிதர்களைப் பற்றிய அவரது சிந்தனையானது ஒரு குறிப்பிட்ட திசையில் இருக்கும் - அதாவது, அவர்கள் உலக விஷயங்களுக்கு அப்பாற் பட்டவர்கள், இவற்றால் அவர்களுக்கு எவ்வித தீங்கும் விளையாது என்று அவர் நினைக்கிறார்! அந்தத் திருடர்கள் அல்லது கொள்ளையர்கள் ஒருபோதும் ஒரு குருநாதரின் ஆசிரமத்திற்கு அல்லது அவர் தங்குமிடத்திற்கு செல்லமாட்டார்கள், அல்லது அவர்கள் சென்றாலும், துறவியின் சக்திகளால் அவர்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியாது என்றும் நினைக்கிறார்!

அவர் தனது சிந்தனையில் சரியாக இருக்கலாம், ஆனால் நம் விஷயத்தில் அது முற்றிலும் தவறு! நான் மூவுலகங்களின் திறவுகோலை வைத்திருக்கும் ஆன்மீக குருநாதர் என்றாலும், பொருள்சார்ந்த இவ்வுலகின் சில சட்ட திட்டங்களின்படி செயல்பட வேண்டும். உலக மக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், அவரது மனம் ஒரே நேரத்தில் பாரபட்சமான சிந்தனையைக் கொண்டிருக்கும், அவரது இலட்சியம் அதிர்ச்சிக்குள்ளாகி, மனப்பதிவுகளை அழிக்கும். இதுபோன்ற சிதைந்துபோன ஆயிரமாயிரம் பதிவுகளை நான் சாதாரணமாகக் கண்டுகொள்ள மாட்டேன். ஆனால், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் என்னுடைய சில ஆன்மீகப் பணிகளுக்காக நான் நிலைமையை சமாளித்து, அவருடைய மனப்படிவங்களுக்கு எந்த சிதைவும் வராமல் அப்படியே இருக்கச் செய்ய நான் ஏதாவது செய்தாக வேண்டும்.

அதனால்தான், சிரமங்களைப் பொருட்படுத்தாமல், இந்தக் கடுமையான ஆபத்து அனைத்தையும் நான் அமைதியாகப் பொறுத்துக்கொண்டு, பிற வழிகளைப் பயன்படுத்துகிறேன். ஒவ்வொரு நயா பைசாவும் நமக்கு முக்கியம் எனும்போது, இவ்வளவு செலவு செய்து, ஜமதாரை மெஹராபாத்திலிருந்து இங்கு அழைத்ததன் காரணமும் அதுதான்.

இந்தியர்களின் குணாதிசயத்தில் இந்த விசித்திரமான பண்பை நான் தொடர்ந்து கவனிக்கிறேன் - அதாவது நன்மை, தீமை எனும் பாகுபாட்டுத் தன்மை இல்லாதது - இது மேற்கத்திய மக்களிடையே ஒரு குறிப்பிடப்பட்ட பண்பாகத் திகழ்கிறது. இந்தியாவில், குறிப்பாக, புனிதர்கள், குருநாதர்களைப் பொறுத்தவரையில், மக்கள் எதையும் எளிதாக நம்பிவிடுகிறார்கள்; இது, இந்த நாட்டின் பொதுவான போக்கு. ஆனால் இந்த நம்பிக்கை, அவர்களின் பிரியமான கொள்கைகள் மற்றும் இலட்சியங்களுக்கு எந்தத் தீங்கும் வராதவரை மட்டுமே நீடிக்கும்; ஒருமுறை பாதகம் விளைவிக்கப்பட்டால், குருநாதர்கள் மீது கொண்டிருந்த பக்தியும், நம்பிக்கையும் சிதைந்து அழிந்துபோகின்றன.

மேற்கத்திய நாடுகளில் இது முற்றிலும் மாறுபட்டது. முதலாவதாக, அவர்கள் எளிதில் எவரையும் நம்புவதில்லை. ஆன்மீக ரீதியில் ஒருவர் எவ்வளவுதான் மேம்பட்ட நிலையை அடைந்திருந்தாலும், ஏதாவது ஒரு சிறப்பு அம்சத்தை அவர்களில் கண்டுகொள்வது வரை அவர்கள் நம்புவதில்லை. ஒரு முறை நம்பிக்கை வைத்த பின்னர், அவர்கள் அதை எளிதாக விட்டுவிடுவதும் இல்லை. அவர்களுக்குப் புரியாத விஷயங்களை நன்கு சிந்தித்து, நல்லது, தீயது எனும் பாகுபாடுகளுக்குப் பின்னர் அவர்களின் செயலை நியாயப்படுத்தும் போதுமான காரணங்கள் இல்லாவிட்டால், அவரை ஒருபோதும் விட்டு விலக மாட்டார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் மேற்கத்திய மக்கள் எதையும் எளிதாக நம்பிவிடமாட்டார்கள். ஒரு குருநாதரை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், எப்போதும் தங்கள் பாகுபாட்டுத் திறனை ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்துகிறார்கள்.

மேற்கத்திய நாட்டில் ஐயர் போன்ற ஒருவர் இருந்தால், அந்த நபருக்கு நிலைமையை விளக்க நான் தயங்கமாட்டேன், ஏனெனில் அவர் தனது பாகுபாட்டுத் திறனைப் பயன்படுத்துவதோடு, முறையாக வழங்கப்படும் விளக்கங்களை ஜீரணித்து ஏற்றுக்கொள்ள முடியும் என்று எனக்குத் தெரியும். அதேசமயம், இந்தியாவில் வாழும் ஒருவர், எவ்வளவு படித்தவராக இருந்தாலும், இலட்சியங்களில் உள்ள வேறுபாடு, சிந்தனை வழிகள் மற்றும் சில குணாதிசயங்கள் காரணமாக, இதை வெகு அபூர்வமாகவே செய்வார்.

இந்தியாவில், என்னைப் போன்ற குருநாதர் மீது மிகவும் உறுதியான, அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளவர்கள், அவர் ஒரு திரைப்படம் அல்லது

ஏதேனும் பொழுதுபோக்கு இடங்களுக்குச் சென்றால், சந்தேகக் கண்களால் பார்த்து, சிந்திக்கத் தொடங்கி, பாரபட்சத்துடன் நடந்துகொள்வார்கள். அதேசமயம், மேற்கத்திய நாடுகளில், மாறாக, மக்கள் என்னை வலுக்கட்டாயமாக, திரையரங்குகளுக்கும் இதுபோன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்வார்கள். அமெரிக்க, ஐரோப்பிய மக்கள், ஒரு குருநாதர், பௌதீக தளத்தில் அவரது ஆன்மீகப் பணியைச் செய்கிறார் என்பதைப் புரிந்து கொள்வதால், இதைத் தவறாக எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் இந்திய மக்கள் அத்தகைய யோசனையை ஒரு கணம் கூட பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்; இறைநிலையை அடைந்த குருநாதர்களுக்கு உலக விஷயங்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்ற கடுமையான இலட்சியங்கள், மற்றும் தவறான எண்ணங்கள் காரணமாக, இதைச் செய்யக்கூடிய ஒருவர் ஒருபோதும் ஆன்மீக மனிதராக இருக்க முடியாது எனும்போது, ஒரு துறவி அல்லது குருநாதருக்கு எந்தவித வாய்ப்பும் இல்லை.

ஆகவே, இந்தியாவில், சாது, சன்னியாசி, இறை ஞானிகள் அனைவரும் உணவு, உடைகள், வாழ்க்கை முறைகள் பலவற்றைப் பற்றிய அன்றாட வழக்கமான பல விஷயங்களில், கடுமையான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென மக்கள் கருதுகிறார்கள் - குகைகள், மலைகள், அல்லது நகரங்களிலிருந்து ஒதுங்கிய இடங்களில் அமைந்துள்ள ஆசிரமங்களில் வாழ்வது, தாடியும், நீண்ட கூந்தலுடன் ஒரு குறிப்பிட்ட தோற்றத்தைக் கொண்டிருப்பது, அல்லது சுத்தமாக மொட்டையடித்துக் கொள்வது, ஒரு குறிப்பிட்ட வகை உடை, நீண்ட அங்கிகள், வெள்ளை அல்லது காவி நிற ஆடைகளை அணிவது, மேலும் அவர்கள் சில பொருட்களை உண்ணவோ அருந்தவோ கூடாது, பெரும்பாலும் பால், தண்ணீர் போன்ற ஆகாரத்தில் வாழ்வது அல்லது உபவாசம் இருப்பது, மத சாஸ்திரங்களை அறிந்திருப்பது, யோக நடைமுறைகள் அல்லது ஆசன பயிற்சிகளில் ஈடுபடுவது, இதுபோன்ற ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது என்று நினைக்கிறார்கள்.

இவை அனைத்தும் ஆரம்பத்திலிருந்தே பாரம்பரிய முறைப்படி, சுய மகிழ்ச்சிக்காகப் பேணி பாதுகாக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் கற்பிக்கப்பட்ட கொள்கைகள், லட்சியங்கள் மற்றும் தவறான எண்ணங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளது. இது ஒரு குறிப்பிட்ட வகை சமய நூல் அல்லது இலக்கியங்களைப் பயின்ற பின்னர், அல்லது சில குருநாதர்களின் வழிபாட்டு முறைகளுடன் தொடர்பு கொண்ட பிறகு, பிற குருநாதர்களின் கொள்கை, வழிமுறைகளோடு ஒப்பிட்டு தவறான எண்ணங்கள் மற்றும் கருத்துக்களுடன் தனக்கென ஒரு நடைமுறை உருவாக்கப்படுகிறது.

ஆன்மீக ரீதியில் முன்னேறிய சுவாமிகள், யோகிகள், வாலிகள், பீர்கள், சத்குருக்கள் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட வட்டம் அல்லது கோளத்தில்

பணிபுரிய வேண்டி இருப்பதால், அவர்களின் சுற்றுப்புறங்களில் உருவாக்கப்பட்ட இலட்சியங்கள் மற்றும் போதனைகளுக்கு ஏற்ப தங்கள் சொந்த வட்டத்தைத் தயார் செய்கிறார்கள். ஆனால், அவதார புருஷர் உலகெங்கிலும் ஆன்மீக மறுமலர்ச்சியையும் எழுச்சியையும் கொண்டுவருவதற்காக, பெரிய அளவில் பணிபுரிய வேண்டி இருப்பதால், அவருடைய பணியின் நோக்கம் மற்றும் பரிமாணம் மிகவும் விரிவானது; மக்களின் இடம், சூழ்நிலைகளுக்கு ஏற்ப பலவிதமான ‘வகைகள்’ நிறைந்தவை. ஆன்மீக இலட்சியமும், மனிதகுலத்தின் இலக்கும் எப்போதுமே ஒன்றாக இருந்தாலும், சில நேரங்களில் ஒவ்வொரு அவதார காலகட்டத்திலும் படைப்பில் பணிபுரியும் முறை வேறொரு காலகட்டத்துடன் ஒத்திருப்பதில்லை.

ஒட்டுமொத்த உலகிற்காக இதுபோன்ற பணிகளைச் செய்யும்போது, அவதார புருஷர் கூட - இறை உணர்வை அடைந்து, அளவிறுதியற்ற அறிவையும் ஆற்றலையும் கொண்டிருந்தாலும் - அவரது சீடர்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களின் பலவீனங்களுக்கும், தவறான எண்ணங்களுக்கும் அடிபணிய வேண்டும். இந்த பலவீனங்கள் மற்றும் தவறான எண்ணங்களை, மனிதகுலத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக, அவரது பணியில் உதவ அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் என்னைப் பொறுத்தவரையில் இவை அனைத்தையும் ‘சகித்து, கெஞ்சிக் கூத்தாடும்’ தொழிலை நான் செய்ய வேண்டி இருப்பதால் அடிக்கடி மக்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

அதனால்தான் நான் எனது பௌதீக உடல் ரீதியாக, சமூக அல்லது மத பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டதிட்டங்களின்படி என் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, பல்வேறு மக்கள் மத்தியில் வெவ்வேறு இடங்களில் பணிபுரிய வேண்டும். உலகத்திற்காக நான் செய்ய வேண்டிய இத்தகைய உலகளாவிய கடமை இல்லையென்றால், உங்களின் நூற்று ஒன்று பலவீனங்களையும், தவறான எண்ணங்களையும் சகித்துக்கொள்வதற்கும், உங்களுக்குச் செல்லம் கொடுத்து, தோள்தட்டி உற்சாகப்படுத்த வேண்டிய தேவை எதுவும் இல்லை. இது சுற்றியுள்ள பிற அனைவரையும் எரிச்சல் படுத்துவது மட்டுமல்லாமல் எனக்கும் மிகப்பெரிய அளவில் எரிச்சலையும் துன்பத்தையும் தருகிறது.

இக்காரணத்தால்தான், நான் ஓர் இந்துவிடம் (பிராமணர் அல்லது தாழ்த்தப்பட்டவர்) இந்துவாக நடந்துகொள்ள வேண்டும்; ஒரு முஸல்மானுடன், முஸல்மானாக, ஒரு பார்சியுடன், பார்சியாக, ஒரு கிறிஸ்தவருடன், நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன். வேறு எந்தக் காரணத்திற்காகவோ அல்லது எனது சொந்த நோக்கத்திற்காவோ அல்ல; ஆனால் உங்கள் அனைவரையும் மாயாவின் பிணைப்பிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான எனது கடமை மற்றும் பணி, இதன் மூலம் நீங்கள் மதம் மற்றும் பிற தவறான எண்ணங்களுக்கு மேலாக உயர்ந்து இறுதியில்

**உண்மைப்பொருளை உணரவும் உதவுகிறது; இதை, அறிவிலிகளான நீங்கள் பிறப்பு - இறப்பு எனும் முடிவிலா சுழற்சிகளில் வெளியளவில் தேடுகிறீர்கள்.**

**விவேகானந்தர் மிகப் பொருத்தமாக எடுத்துரைத்தபடி, "உண்மையான ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களின் நிலைக்கு இறங்கி வருகிறார்!"**

**எனது தோழர்களாகிய உங்களுக்காக, நான் என் அளவிறுதியற்ற ஆன்மீக நிலையிலிருந்து இந்தப் பொருள் உலகின் நிலைக்கு வரவேண்டும், அங்கு நீங்கள் அனைவரும் 'மகிழ்ச்சியைத்' தேடுவதில் அறியாமை எனும் இருளில் தத்தளிக்கிறீர்கள்; இதை, இறைநிலையை அடைந்த ஒருவரின் உதவியின்றி உங்களால் கண்டுகொள்ள முடியாது.**

மைசூரிலிருந்து சார்லஸ் பர்டமிற்கு (1936, மார்ச் 4ஆம் நாள்) எழுதிய கடிதத்தில் சாஞ்சி இதே கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்:

பாபா, மாயாவின் அனைத்து எதிர்ப்பையும் மீறி அல்லது உலகம் என்ன சொல்லும் அல்லது என்ன எழுதும் என்பதைப் பொருட்படுத்தாமல், அல்லது தனது பக்தர்களுக்கு புரியவில்லை என்றாலும், தனக்கே உரித்தான வழிகளில் ஒவ்வொரு விஷயத்தையும் செய்து நிர்வகிக்கிறார், ஏனெனில் அவர் என்ன செய்கிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும்; இது அவரது செயல்களை மட்டுப்படுத்தப்பட்ட மனதுடன் முடிவுகட்டும் ஒரு உலகத்தால் கிட்டத்தட்ட தவிர்க்கமுடியாமல் 'தவறாகப் புரிந்து கொண்டு, தவறாக மதிப்பிடப்படுகிறது' என்றாலும், அது எப்போதும் தனி ஒருவரின் அல்லது குழுவின் நன்மைக்காகவே இருக்கும்.

திருடர்களும், குறும்புக்காரர்களும் கற்களை வீசி, மூங்கில் வேலிகளுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்க்க, ஆண்களில் ஒருவர் பெண் மண்டலியின் பங்களாவில் பாதுகாப்புக் கடமையில் விழித்திருக்க வேண்டியிருந்தது. ஜமதார், விஷ்ணுவின் தாயார் காக்குபாய், முரளி, மாஸாஜி ஆகியோர் ஏப்ரல் 18ஆம் நாள் மைசூர் வந்தனர். இவ்வேளையில் பெண்டு, பாதிரி, ஆதி சீனியர், சிது, மெஹராவின் தாயார் தவ்லத்மாய், குல்மாயின் மகள் டாலி ஆகியோர் மட்டுமே மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தனர்.

மணி குணமடைந்து வரும் வேளையில், தினமும் வெளியே செல்ல மருத்துவர் அனுமதித்ததால், பாபா சில மண்டலியுடன் மணியைக் காரில் அழைத்துச் சென்றார். ஒரு சில மாலை வேளைகளில், புவாஸாஹேப், ஜால்பாய் ஆகியோர் நகைச்சுவை மிக்க குறுநாடகங்களை நிகழ்த்தி பாபாவை மகிழ்வித்தனர்.

1936, ஏப்ரல் 23ஆம் நாள், டாக்டர் தேஷ்முக் சமீபத்தில் வெளியிட்ட 'மை மாஸ்டர் அண்ட் ஹிஸ் டீச்சிங்' (MY MASTER AND HIS TEACHING) புத்தகத்தைக் குறித்த கருத்துரை வழங்கியபோது, விவேகானந்தரை மீண்டும் குறிப்பிட்டார். இது "**இதயங்களுக்கு அமிர்தமாக விளங்கும்**" என்று பாபா கூறினார். பாபா

மேலும் கூறுகையில், "**கிருஷ்ணரின் பக்தர்கள் அவரது வாழ்க்கையில் ஆர்வமாக உள்ளனர், ஆனால் பண்டிதர்கள், வேதாந்தம், பகவத் கீதை இவற்றின் மீது மட்டுமே ஆர்வம் காட்டுகிறார்கள். கீதை, வேதாந்தம் உண்மையில் மிகவும் நல்லது, ஆனால் அவை தலையை** (அறிவை) **மட்டுமே தொடுகின்றன, அதேவேளையில் கிருஷ்ணரின் வாழ்க்கை இதயத்தைத் தொடுகிறது. விவேகானந்தரின் 'மை மாஸ்டர்'** (MY MASTER) **எனும் படைப்பு ஒரு குறுகிய தொகுப்பாக இருந்தாலும் மிகச் சிறந்த வெளியீடு. ஏன்? ஏனெனில் அது 'அன்புடன்' எழுதப்பட்டது. அவரது இதர படைப்புகளும் மிகவும் அறிவுபூர்வமானவை.**"

மெஹர் பாபாவின் எதிர்கால திட்டங்கள் குறித்தும், அவரது இந்திய பெண் மண்டலி மற்றும் அவர் அழைக்க விரும்பிய சில மேற்கத்திய அன்பர்களுக்காக ஆசிரமங்களை எங்கு நிறுவுவது என்பது பற்றியும் மண்டலியுடன் ('அமைச்சரவைக் கூட்டங்கள்' - CABINET MEETINGS) தினமும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. 24ஆம் நாள், மெஹராபாத் மலையில் ஒரு கோபுரத்துடன் புதியதொரு கட்டிடத்தை அமைப்பதற்கான யோசனை முன்மொழியப்பட்டது, ஏனெனில் ஒரு கோபுரம் மேல்மலையில் (கீழ் மெஹராபாத்தை விட) முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும், மேலும் கிழக்கத்திய பெண் மண்டலிக்கு மிகவும் சௌகரியமான குடியிருப்பாகவும் அமையும்.

அடுத்த நாள் நாசிக் நகரில் வாழும் நவல் தலாட்டிக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகவும், உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும் ராம்ஜூவிடமிருந்து கடிதம் வந்தது. நவலைப் பற்றி குறிப்பிடுகையில் பாபா, "**அவர் என்னை முழு மனதுடன் நேசிக்கிறார், மன்ஸில்-இ-மீம் நாட்களில் இருந்து என்னுடைய அரவணைப்பில் வந்தவர்**" என்று குறிப்பிட்டார்.

பாபா மேலும் கூறு கையில், "**நான் அனைவரையும் நேசிக்கிறேன், அதேவேளையில் நான் எவரையும் நேசிக்கவும் இல்லை! நான் இப்போது நவலுடன் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன், ஆனால் மைசூர் மும்பையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது; பயணம் செய்வது எளிதல்ல.**"

நவலைக் குறித்து இரண்டு தொலைத்தந்திகள், ஒன்று ராம்ஜூவிற்கும் மற்றொன்று ஆதி சீனியர் மூலமாக மும்பையில் வாழ்ந்த நவலின் குடும்பத்தினருக்கும் அனுப்பப்பட்டன (மைசூரில் பாபாவின் முகவரியை மட்டும் அறிந்தவர்), நவலின் ஆரோக்கியத்தில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து, அடுத்த மூன்று நாட்கள் தினமும் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்புமாறு அறிவுறுத்தினார்.

1936 ஏப்ரல் 26 அன்று பாபா மைசூர் சென்ற பிறகு முதல் முறையாக ஒரு மாலையில் நடைப்பயிற்சியை மேற்கொண்டார்.

அடுத்த நாள், ஆண் மண்டலி மத்தியில், வாழ்க்கையில் 'நல்ல' மற்றும் 'தீய' செயல்களின் நடைமுறை நிகழ்வுகள் பற்றி, ஒரு விவாதம் நடைபெற்றது; அதைக் கேட்டு பாபா விளக்கமளித்தார்:

**உண்மையில் 'நல்லது, தீயது' என்று எதுவும் இல்லை. நல்லது தேவை எனும்போது, தீயதும் தேவை - அதாவது நேர்மறை, எதிர்மறை போன்றது. செயல் திறன், பரிணாம வளர்ச்சி இவற்றிற்கு இரண்டும் சமமாகத் தேவை. எல்லா இடங்களிலும் நன்மை மட்டுமே மேலோங்கினால், வாழ்க்கை முடிவடைந்து அழிந்துவிடும்! நல்லது அல்லது தீயது இரண்டையும் அதி தீவிர உச்சிக்கு எடுத்துச் செல்வது இறை உணர்வுக்கு வழிவகுக்கும்; உதாரணமாக, நன்மையின் தடயங்கள் முற்றிலும் இல்லாத முழுமையான தீயது, அல்லது தீயதன் எந்தத் தடயமும் இல்லாத முழுமையான நல்லது - இரண்டும் இறுதி இலக்கான இறை உணர்வை அடைய சமமான சாத்தியம் உள்ளவை.**

**இது அப்படியானால், இயற்கையாகவே எழக்கூடிய கேள்வி என்னவெனில், "தீயதை விட நல்லது ஏன் சிறந்தது?" நல்லது, தீயது இரண்டும் பூஜ்ஜியமாகும், இறைநிலையை அடைந்த ஒருவருக்கு, இவை இரண்டும் பூஜ்ஜியத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இரண்டும் இருமைத்தன்மையின் சொற்கள்.**

**ஆனால் மேன்மைமிகு சத்குருக்களும் அவதார புருஷர்களும் தீயதை விட நல்லதற்கு முன்னுரிமை அளித்து ஆதரிக்கின்றனர். இதற்குக் காரணம், ஆன்மீக ரீதியில் சொல்லப்போனால், இறுதி இலக்கை அடைய 'நல்லது' எளிதானது என்பதால்தான்; ஆனால், பொருள் ரீதியில் வெளிப்படையாகப் பார்க்கும்போது, அது தலைகீழாக இருக்கும்..**

**உதாரணமாக, தீயது வெளிப்படையாக எளிதானது - உண்மையில் கடினம்! ஆனால் வாழ்க்கையின் அடிப்படை கொள்கையான ஆன்மீக முன்னேற்றம் - உண்மையான வாழ்வு நிலை - பொருள் முன்னேற்றத்திற்கு எதிராக இருப்பது. இந்தப் பொருள் சார்ந்த முன்னேற்றம் வெளிப்படையானதாக இருந்தாலும் உண்மையானது அல்ல. ஆகவே, மனிதகுலத்திற்கு உண்மையிலேயே 'நல்லது' எளிதானதாக, சிறந்த, தரமான முறையில் வாழ்க்கையின் இலக்கை நோக்கி முன்னேற வழிவகுப்பதால், குருநாதர்கள் நல்லதையே பரிந்துரைத்து ஆதரிக்கிறார்கள்.**

**நல்லவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, பரிந்துரைப்பதற்கு மற்றுமொரு காரணம் என்னவெனில், தீயது, வெளிப்படையாக எளிதானது என்றாலும், ஒரு மோசமான செயலைச் செய்த சிந்தனை, மனதில் எப்போதுமே ஒரு வகையான 'களங்கத்தை' உருவாக்கும், இது செயலைச் செய்த பின்பு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. உதாரணமாக, சட்டத்திற்குப் புறம்பான பாலியல் அல்லது கொலை.**

**அதேசமயம், நல்லது கடினம் என்றாலும், இது மனதிற்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அப்படி எதுவும் இல்லை; மாறாக, அதை சிந்திப்பதில் மட்டுமல்ல, ஒரு நல்ல செயலைச் செய்வதிலும் ஒருவிதமான மகிழ்ச்சியின் நிலையான உணர்வு உள்ளது; இருப்பினும் தீயதை விட நல்லதைச் செய்வது எப்போதுமே மிகவும் கடினம்.**

**இதைத் தவிர, தீயதைப் பின்பற்றி தீவிரமாகக் கடைப்பிடிப்பது, கடைசி வரை வெற்றியைத் தராது. ஒரு மனிதனின் உடல் எவ்வளவுதான் துணிச்சல், அலட்சியம், ஆரோக்கியம் மற்றும் வலுவானதாக இருந்தாலும், தீமைகள் வழியாக அடையப்பெற்ற மகிழ்ச்சி நீடித்து இருக்காது - அதாவது காமம் அல்லது தீவிரமாக மது அருந்துவது போன்றவை. எனவே, தீயதை, உச்சக்கட்ட நிலைக்கு எடுத்துச் செல்வது, உடல் ரீதியாக நடைமுறையில் சாத்தியமில்லை.**

1936, மே 2ஆம் நாள், குஸ்தாஜி, சாஞ்சி இருவருடன் பாபா மைசூரிலிருந்து ரயிலில் புறப்பட்டு புனித 'பாபா புதான்' (BABA BUDAN) சன்னதிக்குச் சென்றார். அவர்கள் சமையல் பாத்திரங்கள், அடுப்பு, படுக்கை, விளக்குகள், ஆடை போன்ற பதிமூன்று பெரிய மூட்டை முடிச்சுகளை எடுத்துச் சென்று, சிக்மகளூர் (CHIKMAGALUR) அரசு பங்களாவில் தங்கினர்.

மைசூரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட விளக்கு மற்றும் அடுப்பை உடன் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று பாபா சாஞ்சிக்கு அறிவுறுத்தியிருந்தார்; ஆனால் அவசரத்தில் சாஞ்சி, அவற்றை காலி செய்ய மறந்துவிட்டார். சிக்மகளூர் செல்லும் வழியில் மண்ணெண்ணெய் மெத்தை மீது கசிந்ததை, சாஞ்சி கண்டுபிடித்தபோது, அவர் பயந்து, படுக்கையை வெயிலில் உலரவைத்தார்.

பாபா, சாஞ்சியின் கவனக்குறைவால் மன உளைச்சலுக்கு ஆளாகி, "**நான் விரும்புவதை கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் சிறிய தவறு எனக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது!**" என்று கண்டித்தார்.

அவர்கள் மறுநாள் காலை, சிக்மகளூரிலிருந்து புதான் மலைக்குப் புறப்பட்டனர். சாலை மிகவும் கடினமானதாக இருந்தது, அடர்த்தியான காடு, செங்குத்தான பாதை, திகிலூட்டும் விதத்தில் காணப்பட்டது. அவர்கள் மிகுந்த சிரமத்துடன், 150 பேர் வாழும் புதான் கிராமத்திற்கு வந்தனர். மலையில் குடிநீர் வசதி இல்லாததால் கீழே இருந்து கொள்கலன்களை நிரப்பி எடுத்துச் சென்றனர்.

பேருந்தில் பயணம் செய்யும் போது, ஒரு வயதான முஸ்லிம் பெரியவர் பாபாவை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். பாபாவின் தோற்றத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்ட அவர், பாபாவுடன் மலை உச்சியில் அமைந்த அரசு பங்களாவிற்கு வர விரும்புவதாகக் கூறினார்; பாபா எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

மலை உச்சியில் தங்கியிருந்த பங்களாவில் தண்ணீர் வசதி இல்லாததால், கீழேயிருந்து நீர் எடுத்துவர, பணியாளை நியமிக்க வேண்டியதாயிற்று. இதற்கிடையில் பாபாவே அவருடைய கைகளால் சப்பாத்தி, உருளைக்கிழங்கு தயார் செய்தார். உணவுக்குப் பிறகு, பாபா ஒரு மணி நேரம் பங்களாவில் ஏகாந்தவாசம் இருக்கப்போவதாகவும், பங்களாவை நோக்கி எவரும் வராமல் வீட்டு வாயிலைக் கண்காணிக்குமாறும் சாஞ்சியிடம் கூறினார்.

ஆனால் பாபா அவரது பணியில் மும்முரமாக இருந்த வேளையில், வேலைக்காரன் தண்ணீருடன் பங்களாவை நோக்கி வந்தது, பாபாவிற்குத் தொந்தரவாக இருக்கும் என்ற எண்ணத்தில் சாஞ்சி சைகையால் இங்கே வராதே என்று கூறி அருகில் சென்று வராமல் தடுத்தார். தண்ணீர் நிரப்பப்பட்ட கொள்கலனை சாஞ்சி எடுத்துச் சென்ற அதே வேளையில், பாபா கைகளைத் தட்டி அழைத்த சத்தம் கேட்டது. சாஞ்சி ஏறிவந்த களைப்பில் மூச்சு விட முடியாமல் திணறிப்போனார். பாபாவை அணுகியதும், அதிருப்தியை வெளிப்படுத்தி, **“நான் எவ்வளவு நேரமாகக் கைகளைத் தட்டினேன், நீங்கள் இப்போதுதான் வருகிறீர்களா?”** என்றார்.

சாஞ்சி விளக்க முயற்சித்து மூச்சுத்திணறலால் திக்குமுக்காடி "பா ... பா" என்று சொல்ல முடியாமல் தவித்தார். **"அது என்ன?"** என்று கேட்டு பாபா சிரித்தார். ஆனால் சாஞ்சியால் இன்னும் பேச முடியவில்லை. இறுதியாக, சிரமப்பட்டு மூச்சை வாங்கி, பின்னர் என்ன நடந்தது என்பதை விளக்கினார்.

அடுத்த நாள், மே 4, மெஹர் பாபா, சாஞ்சி, குஸ்தாஜி மூவரும் ‘பாபா புதான்’ மலையிலிருந்து இறங்கி சிக்மகளூர் வழியாக பேலூர் (BELUR), ஹாஸன் (HASAN) என்ற இடங்களில் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொண்டு பின்பு மே 7 அன்று மைசூர் திரும்பி வந்தனர்.

இந்தப் பயணத்தைத் தொடர்ந்து, மைசூர் திரும்பிய சில நாட்களுக்குப் பிறகு, மெஹர் பாபா அவரது ஆசிரம தலைமையகத்தை நகர்த்த விரும்புவதாக முடிவு செய்தார். மைசூரில் ஆசிரமம் அமைப்பது குறித்து ஆண் மண்டலியுடன் கலந்துரையாடிய போது, பாபா இப்போது மெஹராபாத்திலிருந்து 30 மைல் தொலைவில் அமைந்த கிராமப்புற, வனப்பகுதியான ராஹூரிக்குச் (RAHURI) செல்ல விரும்புவதாகச் சுட்டிக்காட்டினார்: **“ராஹூரி, மெஹராபாத் மற்றும் நாசிக் நகருக்கு இடையே இருப்பதால், நான் அங்கிருந்து எந்த இடத்திற்கும் எளிதாகச் செல்ல முடியும். பெண்கள் மெஹராபாத்தில் சில ஆண் மண்டலியுடனும் இதர மண்டலி அனைவரும் ராஹூரியிலும் இருக்கலாம். எனக்காக ஒரு சிறிய குடிசை ராஹூரியில் கட்டப்பட வேண்டும்”** என்று கூறினார்.

ராஹூரியில் குடிசைகள் அமைக்கும் பணியை பாபா, காளேமாமாவிற்கு வழங்கினார்; மேலும், இந்த நோக்கத்திற்காக ஒரு நிலத்தைக் கைப்பற்ற டாக்கேவிற்கு அறிவுறுத்தினார். பெண்கள் மற்றும் மண்டலியின் பராமரிப்பிற்காக அறக்கட்டளை ஒன்றை உருவாக்க வேண்டும் எனவும் பாபா முன்மொழிந்தார்.

1936, மே 13 அன்று பாபா மைசூரிலிருந்து நாசிக் நகருக்கு, காளேமாமாவுடன் ரயிலில் புறப்பட்டார். ருஸ்தம் அவர்களைப் பூனாவில் சந்தித்து, பாபாவுடன் மும்பைக்குச் சென்றார். 17ஆம் தேதி, ஆதி சீனியர் பாபாவை நாசிக் மற்றும் ராஹுரிக்கு அழைத்துச் சென்றார். ஆசிரமத்திற்காக ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது, மேலும் இந்த நிலம் லக்ஷ்மிநாராயண் என்ற மார்வாரியிடமிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு, குத்தகைக்கு எடுக்கப்பட்டது. நில உரிமையாளருக்கு முழுத் தொகையும் வழங்கி, பாபா, காளேமாமாவிற்கு அங்கு முடிக்க வேண்டிய பணிகள் குறித்து அறிவுறுத்தினார்.

மெஹராபாத்தில், சில நாட்கள் மண்டலியுடன் இருந்த பின்பு, பாபா மே 22 அன்று பெங்களூருக்குச் சென்று சாஞ்சியை சந்தித்தார். ஸ்பென்சர் ஹோட்டலில் (SPENCER'S HOTEL) அவர்கள் தேநீர் அருந்தும் வேளையில், மைசூர் மாநில அரசாங்கத்தில் பணிபுரிந்த துவார்காதாஸ் (DWARKADAS) என்ற சமணர், பாபாவை அடையாளம் கண்டுகொண்டு, கூப்பிய கரங்களுடன் பாபா முன் நின்றார்.

அவர்கள் அதே நாளில் ரயிலில் மைசூர் திரும்பினர். பாபா மூன்றாம் வகுப்பில் பயணம் செய்ய விரும்பினார், ஆனால் சாஞ்சி, பாபாவை எவரேனும் அடையாளம் கண்டு கொள்ளும் வாய்ப்பு குறைவாக இருக்கும் என்ற நோக்கத்தில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்யக் கேட்டுக்கொண்டார்.


அண்மையில் ஏற்பட்ட கடினமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, பாபாவின் மனநிலையை எளிதாக்கும் நோக்கத்தில் ஜால்பாய், சாஞ்சி இருவரும் மே 24ஆம் நாள், பிற்பகலில் திரைப்படத்திற்குச் செல்ல பாபாவை வற்புறுத்தினர். பாபா, தயக்கம் தெரிவித்தாலும், இறுதியில் உடன் செல்ல சம்மதித்தார்.

இருப்பினும், 'மைசூரியன் மாயா' அதன் தீவிரமான கைவண்ணத்தைக் காட்டியது. நகரில் மின்சாரம் இல்லை. திரைப்படம் நான்கு மணிக்குத் தொடங்க இருந்தது, 5:30 மணி வரை காத்திருந்த பின்பு, பாபா ஆசிரமத்திற்குத் திரும்ப முடிவு செய்தார். அவர்கள் வெளியேறிய சில நிமிடங்களிலேயே மின்சாரம் வழங்கப்பட்டதாகத் தகவல் வந்தது.

மெஹர் பாபாவின் உடல்நிலை இன்னும் சீரானபாடில்லை. நிலைமையை மேலும் மோசமாக்கும் விதத்தில், காரில் திரும்பி வரும் வேளையில், துக்காராம் ஒரு வளைவைத் தவறாகக் கருதி ஓட்டுகையில், கார் இரண்டு பெரிய பள்ளங்களில் வீழ்ந்து எழும்பியது. இது பாபாவின் உடலைக் கடுமையாகத் தாக்கியது. அவர்கள் திரும்பி வந்ததும் பல சிறப்பு வைத்தியங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

நான்கு மாதங்கள் மைசூரில் தங்கியிருந்த பின்பு பாபா ஆசிரமத்தைக் கலைத்தார். மே 30ஆம் நாள் காலையில் ஆண், பெண் மண்டலியுடன் ரயிலில் புறப்பட்ட அவர்கள் பூனா வழியாக மெஹராபாத் வந்து சேர்ந்தனர்.


மெஹராபாத், மே 1936


மெஹராபாத், ஜூலை 1936

இந்தக் காலகட்டத்தில், டாக்டர் கனி தனது குடும்பத்துடன் லோனவாலாவில் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு நேர்மையற்ற செல்வந்தரின் சதி வலையில் சிக்கித் தவித்தார். டாக்டர் கனியின் சில சொத்துக்களை மோசடி செய்து கொள்ளையடித்த ஒரு கணவன் மனைவியர் இருவரும் ஒரே நாளில் கொலை செய்யப்பட்டனர். டாக்டர் கனி இந்தக் கொலையைச் செய்ததாக அவர் மீது பொய்க்குற்றம் சாட்டப்பட்டது. இறுதியில் மனச்சோர்வடைந்த அவர் தற்கொலை செய்ய முடிவு செய்தார்.

1936, ஜூன் 3ஆம் நாள் இரவு, டாக்டர் கனி அதிக அளவில் மது அருந்திவிட்டு, வால்வன் ஏரியில் (WALVAN LAKE) மூழ்கச் சென்றார். ஆனால் அவர் ஏரியைச் சென்றடைந்ததும், மயக்கமாகி அமர்ந்து, பின்பு தனது வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினார். தனது அவலநிலையைக் கண்டு வெறுப்படைந்த அவர், ஹஸ்ரத் பாபாஜான், உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபா ஆகிய மூன்று குருநாதர்களையும் சபிக்கத் தொடங்கினார், "நான் எல்லா பக்கங்களிலும் சிரமங்களால் சூழப்பட்டிருக்கிறேன், எவருமே உதவ முன்வராத போது இந்த மெஹர் பாபாவால் எனக்கு என்ன பயன்?"

"அவருக்கு என்ன வகையான சக்தி, என்ன ‘அனுபவம்’ இருக்கிறது? அவர் அனைத்தையும் அறிந்திருக்க வேண்டும், ஆனால் அவரைப் பின்பற்றுவது பயனற்றது!" டாக்டர் கனி தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்து, அவரது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்ததும், குளிர்ந்த தென்றல் காற்று அவரைத் தழுவி தூங்கச் செய்தது.

இதற்கிடையில், அன்றிரவு, பாபா அமைதியற்றவராக இருந்தார். திடீரென மறுநாள் அதிகாலையில் ஆதி சீனியர், டாக்டர் நீலு இருவருடன் மெஹராபாத்திலிருந்து காரில் புறப்பட்டார். முதலில் தலைகாவ்ம் சென்று, பாபா, அமினா, அப்துல்லா ஜாஃபர் ஆகியோரை சந்தித்து பின்பு நேரடியாக லோனவாலாவுக்குச் சென்றனர். அவர்கள் டாக்டர் கனியின் வீட்டைச் சென்றடைந்த போது, அவர் அங்கு இல்லாததால், அவரைத் தேடி ஏரிக்கு வந்தவர்கள் டாக்டர் கனி நதிக்கரையில் தூங்குவதைக் கண்டனர். பாபா அவரை எழுப்பியதும், டாக்டர் கனி பாபாவைப் பார்த்து, ஆச்சரியமடைந்தார்! அவரால் எதுவும் பேச முடியவில்லை, கண்களில் நீர் வழிய அழுது புலம்பினார்.

**“என்ன விஷயம்?”** பாபா அவரிடம் கேட்டார்.

திகைத்துப்போன டாக்டர் கனி, "பாபா, நான் உங்களை எவ்வளவு தாறுமாறாகத் திட்டினேன் தெரியுமா? இருந்தும் நீங்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்கள்!"

**“உங்களின் அவதூறான வார்த்தைகள் என்னை இங்கு அழைத்து வந்தது”** என்று பாபா சைகையால் தெரிவித்தார். **“இது எனக்கு அமிர்தத்தை விட இனிமையானது! நயவஞ்சகர்களின் பாராட்டையும், புகழாரங்களையும் ஒப்பிடும்போது, என் அன்பர்களின் சாபங்கள் மிகவும் இனிமையானவை!”** டாக்டர் கனி அழுதுகொண்டே பாபாவைத் தழுவினார்.

பாபா, டாக்டர் கனியையும் மும்பைக்கு உடன் அழைத்துச் சென்று, ஒரு நாள் தாதாசாஞ்சி இல்லத்தில் தங்கியிருந்தார். அங்கு ஸவக் கொத்வால், அவரது சகோதரர், பெரிய கோர்ஷெத், காக் ஸாஹேப் ஆகியோர் பாபாவைப் பார்க்க வந்தனர். டாக்டர் கனியை தனதருகில் நெருக்கமாக வைத்து, பாபா நகரைச் சுற்றி வந்தார், இப்படி அவரது மனதில் இருந்த பயனற்ற எண்ணங்களை அகற்றினார். பாபா மறுநாள் பிற்பகல் நாசிக் நகருக்குச் சென்று, இரண்டு நாட்களுக்குப் பிறகு மெஹராபாத் திரும்பினார். டாக்டர் கனியும் உடன் சென்றார்.

மெஹர் பாபா தனது சகோதரி மணியை மும்பைக்கு அனுப்பி வைத்தார்; மெமோ அப்போது பெஹராம் குடும்பத்துடன் மும்பையில் வாழ்ந்து வந்தார். மணியின் காது குணமடையும் வரை, சகோதரர் ஜால் உதவியாக இருந்தார்.

மெமோ தங்கியிருந்த 'பானு மேன்ஷன்' (BANU MANSION) என்று அழைக்கப்பட்ட வாடகைக் குடியிருப்பில் கடந்த ஆறு மாதங்களாக வாழ்ந்து வந்தனர். இந்த வீடு மன்சில்-எ-மீமிற்கு எதிரே மும்பை தாதரில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பெரும்பாலும் பார்சி அல்லது ஈரானியர்கள் வாழ்ந்து வந்தனர். ஷிரீன்மாய் மெஹர் பாபாவின் தாயார் என்பதை அறிந்த அவர்கள், பாபாவைக் கடுமையாக எதிர்த்ததால், ஷிரீன்மாய் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்.

இந்தக் காலகட்டத்தில், தவ்லத்மாயின் சகோதரர் கர்னல் ஈரானி, பாபாவைப் பற்றி குஜராத்தி செய்தித்தாள்களில் தொடர்ந்து அவதூறான கட்டுரைகளை வெளியிட்டார்; மும்பையின் ஈரானி, பார்சி சமூகத்தை, தனது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் தவறாக வழிநடத்தினார். ஆனால் அதே வேளையில் மும்பையில் வாழ்ந்து வந்த அதே இனத்தைச் சார்ந்த தாதாசாஞ்சி, கத்ரக், கொத்வால், தேசாய், மெர்சண்ட், பாரியா மற்றும் பிளீடர் குடும்பங்கள் பாபாவிற்கு நெருக்கமான ஆதரவாளர்கள். எந்தவொரு பிரச்சாரத்தையும் கண்டுகொள்ளாமல், இந்தக் குடும்பங்கள் தங்கள் சொந்த சமூக மக்களின் அவமதிப்பு, கேலி, கிண்டல்களைப் பொறுத்துக்கொண்டன; மெஹர் பாபா மீதான அவர்களின் பாறை போன்ற நம்பிக்கை, இத்தகைய எதிர்ப்புகளால் பெரும் சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இந்த விரோத போக்கிற்கு ஷிரீன்மாய் முக்கிய இலக்காக இருந்ததால் மிகவும் பதற்றமடைந்தார். பானு மேன்ஷனில் வாழ்ந்து வந்தவர்களில் பெரும்பாலானோர் உரிமையாளரை அணுகி, ஷிரீன்மாயை வெளியேற்றத் தவறினால் கட்டிடத்தை காலி செய்வதாக மிரட்டி, மனுவில் கையெழுத்திட்டனர்.

வீட்டு உரிமையாளர் இந்த அச்சுறுத்தலால் மெமோவை அணுகி, அவர்கள் வெளியேறுவது சிறந்தது என்று கூறினார். "ஏன்? நான் வழக்கமாக வாடகையைச் செலுத்துகிறேன். நான் எவரையும் துன்புறுத்துவதில்லை, காயப்படுத்தவில்லை. நான் ஏன் வெளியேற வேண்டும்?" மெமோ வாதாடினார். குத்தகைதாரர்கள் மெமோவை வெளியேற்றுவதற்கான தங்கள் பிரச்சாரத்தைத்

தொடர்ந்தாலும், மெமோ அச்சமின்றி அங்கிருந்து நகரக்கூடாது என்ற தீர்மானத்தில் இருந்தார்.

மெஹர் பாபாவின் நேரடி பார்வையின் கீழ் இருந்த இந்த சமாச்சாரம், அற்புதமான முறையில் ஒரு தீர்வுக்கு வந்தது. மெமோவை மிகவும் துன்புறுத்திய முக்கியமான நபர் இடமாற்றம் செய்யப்பட்டு பின்பு மும்பையிலிருந்து வெளியேறினார். மற்றுமொரு குடும்பத்தில் திடீர் மரணம் ஒன்று நிகழவே, அவர்களும் வெளியேற வேண்டிய சூழ்நிலை. வேறொருவர் அவரது வேலையை இழந்தார். மெமோவிற்கு வேண்டுமென்றே சிக்கலை ஏற்படுத்திய அனைவரும் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரே மாதத்தில் அங்கிருந்து வெளியேறினர்; இது அவதார புருஷரின் பிரியமான தாயாரை நிம்மதியாக வாழ வழிவகுத்தது.

மெமோ தைரியமும், துணிச்சலும் மிக்க பெண்மணி. அவருடைய மனவலிமை காரணமாக, அனைத்தையும் தனியாக எதிர்கொண்டார். அதே நிலைமை பூனாவிலும் உருவானது; மெமோவின் உண்மையான வலிமை அவருடைய பிரியமான புதல்வனின் தெய்வீகத்தன்மையின் மீதான நம்பிக்கையாகும், மேலும் பாபாவின் கடைக்கண் பார்வை அவர் மீது இருந்தது, இது எந்தவிதமான விரோதத்தையும் எதிர்கொள்ள பேருதவியாக அமைந்தது.

மெஹராபாத் திரும்பி வந்த பின்பு, பாபா, ராஹுரிக்கும் நாசிக் நகருக்கும் இடையே அடிக்கடி பயணம் செய்யத் தொடங்கினார். தங்கை மணியைப் பார்க்க அவ்வப்போது மும்பைக்குச் சென்றார், அது அவருடைய அன்பர்களுக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. பாபா, நௌரோஜியின் இல்லத்தில் தங்கியிருந்தார், பக்தர்களும் தரிசனத்திற்காக வந்தனர்.

தாதாசாஞ்சி குடும்பம் பாபாவுடன் நெருக்கமாக வளர்ந்து வந்தாலும், அவரது வருகையின் போது ஒரு விஷயம் குடும்பத்தின் குழந்தைகளைத் தொந்தரவு செய்தது. முதலில் பாபாவிற்கு உணவு பரிமாறிய பின்னரே பச்சாமாய் குழந்தைகளுக்கு உணவளிப்பது வழக்கமாகிவிட்டது. பாபாவின் வருகை தங்களுக்குச் சிக்கலை ஏற்படுத்தியதாக குழந்தைகள் புகார் கூறினர், முக்கியமாக அவர்கள் பசியுடன் இருந்ததால், சரியான வேளையில் உணவு கிடைக்கவில்லை. தங்கள் வீட்டிற்கு வர வேண்டாம் என்று பாபாவிடம் சொல்லப்போவதாக, பச்சாமாய் மிரட்டினார். ஆனால், குழந்தைகள் அதை மட்டும் செய்ய வேண்டாம் என்று கெஞ்சினர், ஏனெனில் பாபா வரும்போது அவருடன் விளையாடுவதில் மிக்க ஆர்வமாக இருந்தனர். ஒரு கட்டத்தில், பாபா இவ்வளவு அன்பாகவும், வேடிக்கையாகவும் இருப்பதால், அவர் நிரந்தரமாக அங்குத் தங்கினால் நல்லது என்று குழந்தைகள் முன்மொழிந்தனர்.

சில சந்தர்ப்பங்களில், பாபா தாதாசாஞ்சியின் வீட்டிற்கு எதிர்பாராத விதமாக முன்னறிவிப்பின்றி வருவது உண்டு. ஆனால் பச்சாமாய், பாபா, மண்டலி அனைவருக்கும் அன்பாக இடமளித்து, சேவை செய்து வந்தார்.

பச்சாமாய் ஒரு தனிச்சிறப்புமிக்க பெண்மணி, எல்லா நேரங்களிலும் பாபாவை மகிழ்விப்பதையே அவரது நோக்கமாகக் கொண்டார்.

மெஹராபாத்தில், 1936 ஜூன் மாதத்தில், உணவு, தூக்கம் அனைத்தும் சாதாரணமாக இருந்தாலும், பாபா தலைச்சுற்றலால் அவ்வப்போது மயக்கமாக உணர்ந்தார். ஜூன் 14ஆம் நாள் காடேக்கர், மானேக் ரஞ்சி, ஸரோஷ், டாக்கே ஆகியோர் பாபாவை சந்தித்தனர். அதைத் தொடர்ந்து, பாபா, டாக்டர் நீலு, ஆதி சீனியருடன் ஸரோஷ் டாக்கீஸில் ஒரு திரைப்படத்தைப் பார்க்கச் சென்றார்.

ஜூன் 22 பிற்பகலில், ருஸ்தம், பெண்டு, விஷ்ணு ஆகியோருடன் பாபா நாசிக் சென்றார். மும்பையிலிருந்து அழைக்கப்பட்ட சாஞ்சியும் உடன் இருந்தார். பாபா, நவல், தீனா தலாட்டியைப் பார்க்கச் சென்று, தனது கணவரின் உடல்நிலை குறித்த தீனாவின் கவலையை அகற்றினார்.

டாக்டர் தேஷ்முக் நாக்பூரிலிருந்து அவரது மனைவி இந்துமதி மற்றும் முதல் பெண் குழந்தை சஞ்சீவனியுடன் வந்திருந்தார். ஜூன் 23ஆம் நாள் ருஸ்தத்தின் இல்லத்தில் பாபாவை சந்தித்து, அந்த நாளை இனிமையாகக் கழித்தார். ஒரு வருடத்திற்குப் பிறகு பாபாவைப் பார்த்த தேஷ்முக் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பாபா அவருக்குக் கூறிய அறிவுரை: “**உலகில் இருங்கள், ஆனால் பட்டும் படாமலும் இருங்கள்**.

“**உங்கள் மனைவி படித்தவர், சௌந்தரியம் மிக்கவர்; உங்கள் குழந்தையும் அப்படித்தான். அத்தகைய மனைவியையும் குழந்தையையும் பெறுவது உங்களுக்கு அதிர்ஷ்டம். நீங்கள் இருவரும் சேர்ந்து எனது பணியைச் செய்ய முடியும், நீங்கள் அதைச் செய்தால், இந்த உலகத்தைச் சார்ந்தவர்களாக இருக்க மாட்டீர்கள்**.”


ஜூன் 24 அன்று சாஞ்சி, பெண்டு, ராம்ஜூ ஆகியோருடன் பாபா மும்பைக்குச் சென்று, மெமோ, தங்கை மணி மற்றும் சிறுநீரக சிகிச்சைக்காக டாக்டர். முல்காவ்கர் நர்ஸிங் ஹோமில் (DR. MULGAOKER’S NURSING HOME) அனுமதிக்கப்பட்ட குல்மாயையும் சந்தித்தார்.

25ஆம் தேதி, பாபா விக்டோரியாவில் சாஞ்சியின் குடும்ப வீட்டிற்குச் சென்றார். பாபா அங்கு இருந்தபோது, எதிர்பாராத விதமாக, பிளீடர் அங்கு வந்தார், ஆனால் பாபா அவரைப் பார்க்கவில்லை; அன்று இரவு கொத்வாலின் புதிய இல்லத்திற்குச் சென்றார்.

ஜூன் 26ஆம் நாள் பாபா, பெண்டுவுடன் நாசிக் திரும்பினார். குல்மாய், டாக்டர் நீலு இருவரையும் ஆதி சீனியர் அஹமதுநகருக்குக் காரில் அழைத்துச் சென்றார். பாபா அடுத்த நாள் ராஹுரிக்குச் சென்று ஜூன் 29 அன்று மெஹராபாத் வந்தார்.



ராஹூரி



சத்குரு உபாஸனி மஹாராஜைப் பற்றிய கட்டுரை ஒன்று மராட்டி செய்தித்தாளில் வெளிவந்தது; அவர் ஸாக்கோரியை விட்டு வெளியேறி ஒரு காட்டில் ஓய்வு பெற விரும்புவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கேள்விப்பட்டு, 1936, ஜூலை 2ஆம் நாள் பாபா, ஆதி சீனியரை ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார்: **"நான் கடந்த ஒரு வருடமாக நேரடி பேட்டிகளை வழங்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பு, ராஹூரியில் தங்கியிருப்பதன் மூலம் மண்டலியிடமிருந்து ஒதுங்கி இருக்க முடிவு செய்தேன். மண்டலி மெஹராபாத்திலும், பெண்கள் மேல்மலையிலும், மேற்கத்தியர்கள் நாசிக் நகரிலும் வாழத் திட்டமிட்டேன். நான் ஏற்கனவே, ஏறக்குறைய, தனிமையில் ஓய்வு பெற முடிவு செய்துள்ளதால், நீங்களும் (மஹாராஜும்) இந்த வயதில் ஏன் காட்டுக்குச் செல்ல வேண்டும்? அதற்கு பதிலாக நீங்கள் இங்கு வந்து என்னுடன் ராஹூரியில் தங்க வேண்டும்."** மஹாராஜூம் அவருடைய நிலைப்பாட்டை தெளிவுறக் கூறாமல் பதிலளித்தார்.

ஜூலை 7ஆம் நாள், சாஞ்சி, ஃபிரீனிமாஸியுடன் மெஹராபாத் வந்தார். சம்பா (CHAMPA) என்ற வெண்ணிற கழுதை ஒன்று மெஹராபாத்திற்குக் கொண்டு வரப்பட்டது; பாபா அதன் மீது முதல் முறையாக அமர்ந்தார். இது மண்டலிக்கு ஒரு வேடிக்கையான, மகிழ்ச்சி மிக்க சந்தர்ப்பமாக அமைந்தது.

குஸ்தாஜி இதுபோன்ற சவாரியைப் பெரிதும் விருப்பினார். பாபா ஒருமுறை அவரை, கழுதை மீது சவாரி செய்ய அனுமதித்தார்.

கழுதை, முன்னோக்கி நகர்ந்து செல்வதற்கு பதிலாக, பின்னோக்கிச் சென்று, குஸ்தாஜியை முதுகில் ஏறவிடாமல் தடுத்தது! அவர் அதைச் சுற்றி வந்து எவ்வளவோ முயன்றும், கழுதை பிடிவாதமாகப் பின்னோக்கிச் சென்று, குஸ்தாஜியைத் தூக்கி எறிந்தது. சிரித்துக்கொண்டே, ஆண்கள் அனைவரும் அவருக்கு உதவ ஓடினர்.

மணி தனது உடல் நிலை முற்றிலும் குணமானதும் பெண் மண்டலியுடன் மேல் மெஹராபாத் வந்து தங்கினார். ஜூலை மாதத்தில் ஒரு நாள், மணி, நாஜா இருவரும் பாபா, மெஹரா மற்றும் இதர பெண் மண்டலியை கழுதையுடன் புகைப்படம் எடுத்தனர்.

1936, ஜூலை 10 அன்று ஆதி சீனியர், பாபாவை மெஹராபாத்திலிருந்து ராஹூரிக்கு காரில் அழைத்துச் சென்று, அங்கு நடந்து வரும் பணியின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு, பின்பு நாசிக் நகருக்கு சென்றார். பாபாவின் அறிவுறுத்தலின்படி ராஹூரியில் ஆசிரமத்தை எழுப்பும் பணியை, காளேமாமா விரைவாக மேற்கொண்டார்.

பாபா, தீனா & நவல் தலாட்டி இல்லத்திற்கு விஜயம் செய்து, நவலின் உடல் நலம் குறித்து விசாரித்த வேளையில், தீனா கவலை தோய்ந்த முகத்துடன் தென்பட்டதைப் பார்த்து, பாபா சைகையால் தெரிவித்தார்:

**இது நல்லதல்ல! ஒருவர் எவ்வளவுதான் வருத்தத்துடன், மனச்சோர்வடைந்து இருந்தாலும், கவலைகளைப் பற்றிக்கொண்டு இருக்கக்கூடாது, அவற்றை எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ளக்கூடாது. அதற்கு பதிலாக, உங்கள் மனதின் கவலையை வெளியே தூக்கி எறிந்துவிட்டு வழக்கமான பணிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் இவை அனைத்தும் ஒன்றும் இல்லை - பூஜ்ஜியம் - மாயை. நடந்தது நடந்துவிட்டது. முடிந்தது முடிந்துவிட்டது, அது வேதனையாக இருந்தாலும் இனிமையாக இருந்தாலும், இரண்டிலும் ஒன்றுமில்லை.**

**அது மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது துயரமாக இருந்தாலும் சரி, இரண்டும் ஒன்றுதான். இரண்டுமே நீடிப்பதில்லை. உங்களின் பரிதாபகரமான நிலையில், நீங்கள் சோகமாக இருந்தீர்கள். இப்போது அந்த உணர்வு உங்களை விட்டுவிட்டது. அதைப்போல, நீங்கள் கவலைப்பட ஒன்றுமில்லாத நிலையில், நீங்கள் மகிழ்ச்சியாக இருந்திருப்பீர்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியும் நீடித்திருக்காது. அப்படியானால் அந்த மகிழ்ச்சியால் உங்களுக்கு என்ன பயன்? எனவே இன்று, இங்கே துன்பம், மகிழ்ச்சி எதுவாக இருந்தாலும் அதுவும் கடந்து போகும்.**

**எல்லாம் வருவதும், போவதும் சகஜம். ஆனால் ஆன்மீகக் கண்ணோட்டத்தில், ஒருவர் முடிந்த வரை துன்பத்தைத் தாங்கிக் கொண்டால், அது மிகவும் நல்லது.**

தீனா, பாபாவிடம் வினவினார், "ஆனால் நீங்கள் இங்கே பௌதீக உருவில் இருக்கும்போது ஏன் இவ்வளவு துன்பங்களை சந்திக்க வேண்டும்?"

அதற்கு பாபா, **“நான் இங்கே இருப்பதால் தான் நீங்கள் துன்பப்படுகிறீர்கள். நான் கஷ்டப்பட்டு அதைத் தாங்கிக் கொள்ளவில்லையா? ஆகவே என்னுடையவர்களும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்”** என்று பதிலளித்தார்.

அன்று மாலை பாபாவுடன் இருந்த அனைவரும் சார்லி சாப்ளினின் ‘மாடர்ன் டைம்ஸ்’ (CHARLIE CHAPLIN’S MODERN TIMES) திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர். அடுத்த நாள், ஒரு விளக்க உரையின் போது, பாபா இவ்வாறு கூறினார்:

**உங்கள் பௌதீக கண்களால் சாஞ்சியைப் பார்க்கும் வேளையில், அவருடைய உருவத்தை நீங்கள் காண்கிறீர்கள் - வட்டத்தையும், அவரைச் சுற்றியுள்ள வண்ணங்களையும் பார்ப்பதில்லை. ஆனால் நீங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தி, உங்கள் நுட்பமான சூட்சும கண்களால் அவரைப் பார்க்க முடிந்தால், நிறம் அல்லது குறியீடு இல்லாமல் அவரது நிழல்போன்ற ஒரு மங்கலான வடிவத்தை, சற்று நீலம் அல்லது சாம்பல் நிறத்தில் காணலாம். எவ்வாறாயினும், நீங்கள் ஆழ்மன உணர்வை வளர்த்துக் கொண்டு, உங்கள் மனக்கண் வழியாகப் பார்க்கும் தருணத்தில், நீங்கள் அவரை ஏழு**

**வண்ணங்களைக் கொண்ட ஒரு வட்ட வடிவில் பார்க்கிறீர்கள் - அனைத்தும் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. இதை ஒரு குருநாதர் மட்டுமே பார்க்க முடியும்.**

**கற்பனையால் உருவான மனப்படிவங்களால் நிறங்கள் தோன்றுகின்றன. ஏன் ஏழு நிறங்கள்? சக்திக்கும், வானுலகங்களுக்கும் (அல்லது விண்வெளி; பிராணம் மற்றும் ஆகாயம்), இடையே ஏற்பட்ட மோதல் ஒரு தீப்பொறியை உருவாக்கியது, அதாவது ஏழு நிறங்களைக் கொண்ட ஒரு வட்டம். அத்தகைய தீப்பொறிகள் அனைத்தும் ஏழு வண்ணங்களைக் கொண்டுள்ளன.**

**மின்னணு** (ELECTRON - எலக்ட்ரான்) **உருவாவதற்கு முன்பே, ஆரம்பத்தில் ஒரு வடிவம் இருப்பது யாருக்கும் தெரியாது. சக்திக்கும், வானுலகங்களுக்கும் இடையில் நடந்த முதல் மோதல் இந்த முதல் வடிவத்தை உருவாக்கியது.**

நாசிக் நகரிலிருந்து, பாபா மீண்டும் ஜூலை 11 அன்று ரயிலில் மும்பைக்குச் சென்றார், அவருடன் சாஞ்சி, சிது, மெஹலு (ருஸ்தத்தின் மகன்) ஆகியோர் சென்றனர். மும்பையில், பாபா அவரது நெருங்கிய பக்தர்களை - தீனாவின் பெற்றோர் ரூபாமாய் & ஹோர்முஸ்ஜி, பிளீடர், ஸவக் கொத்வால் ஆகியோரைப் பார்த்தார்.

பிளீடர் அவரது கடினமான நீண்ட பயணங்களை மேற்கொண்டு, பல மாதங்களுக்குப் பிறகு, முதல் முறையாக அங்கு, பாபாவை சந்திக்க இருந்தார். பிளீடர், ஸவக் கொத்வால் இருவரையும் இறை போதையில் இருக்கும் மஸ்துகளையும், நிஜ பைத்தியங்களையும் கண்டுபிடித்து, பாபா அவர்களோடு இணைந்து பணிபுரிய, ராஹூரி ஆசிரமத்திற்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தினார்.

ஒரு கட்டத்தில், பாபா ஸவக் கொத்வாலுக்கு மாம்பழம் ஒன்றை உண்ணக் கொடுத்த அவ்வேளையில் அவரது மனைவி நர்கிஸ் அந்தப் பழத்தில், ஒரு பங்கு அவருக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பார்த்தார். ஆனால் எவருடனும் பகிர்ந்து கொள்ளாமல், முழுப் பழத்தையும் உண்ணுமாறு பாபா, ஸவக்கிடம் தெரிவித்தார். நர்கிஸ், இது ஏன் என்று புரியாமல் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார் - ஆனால் ஒரு வருடத்திற்குப் பின்னர், அவர்களுக்கு ஆதி என்று ஒரு மகன் பிறந்தபோது, நர்கிஸ் தனது கணவருக்கு பாபா வழங்கிய பிரசாதம் என்பதை நினைவு கூர்ந்தார்.

பாபா மும்பையில் இருந்த வேளையில், கொத்வால், தாதாசாஞ்சி, தாதரில் சாஞ்சியின் சகோதரி மெஹரா, ருஸ்தம் தின்யார், கர்மன் மாஸி ஆகியோரின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். பாபாவை அழைத்துச் செல்ல வந்த ருஸ்தம், அன்று இரவு தாதரில் ‘பிளாஸா சினிமா’வில் (PLAZA CINEMA) ‘ஷாங்காய்’ (SHANGHAI) திரைப்படத்தைப் பார்க்க பாபாவை அழைத்துச் சென்றார்.

இந்த நேரத்தில் மும்பையில் இருந்த மன்ஸாரி தேசாய் (MANSARI DESAI), அவரது சகோதரர் மினூ (MINOO) மற்றும் நவ்ஸாரியில் வாழும் அவரது வருங்கால மனைவி பபாய் (BAPAI) இருவரையும் மும்பைக்கு அழைத்தபோது பாபா அவர்களை ஆசிர்வதித்தார். அவர்கள் பாபாவை நான்கரை ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

1936, ஜூலை 15ஆம் நாள், மெஹர் பாபா மும்பையிலிருந்து நாசிக் வழியாக மெஹராபாத் வந்து இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். பாபா வாரத்திற்கு ஒரு முறையாவது சில மண்டலியுடன் ஸரோஷ் டாக்கீஸில் (SAROSH TALKIES) திரைப்படத்திற்கு செல்வது வழக்கமாகிவிட்டது. ஜூலை 18 அன்று, எடி கேன்டர் (EDDIE CANTOR) & எத்தேல் மெர்மனுடன் (ETHEL MERMAN) இணைந்து நடித்த 'ஸ்ட்ரைக் மீ பிங்க்' (STRIKE ME PINK) என்ற இசை நகைச்சுவை திரைப்படத்தை பாபா பெரிதும் விரும்பினார்.

இந்தக் காலகட்டத்தில், ஒருமுறை ஸரோஷ் அவரது மனைவி விலூவுடன் (VILOO) பாபாவைப் பார்க்க மெஹராபாத் வந்தார். ஸரோஷ், பாபாவின் அனுமதியுடன் விலூவை மணந்தார், ஆனால் பாபாவின் தெய்வீகத்தன்மையில் விலூவிற்கு நம்பிக்கை இல்லை. ஆயினும்கூட, பாபா அவரை விரும்பினார்; இறுதியில் விலூ, ஒரு நாள் பாபாவை நேசிப்பார் என்று உறுதியளித்தார்.

இந்த ஜோடி திருமணமாகி கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஆகியும் இன்னும் குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் அவர்கள் ஒருமுறை மெஹராபாத் வந்தபோது, பாபா, மண்டலியுடன் அமர்ந்திருந்தார்; நல்ல மனநிலையில் காணப்பட்டார்; அவர் ஒவ்வொருவருக்கும் பரிசு வழங்கப்போவதாகத் தெரிவித்து, ஒருவருக்கு அவர் கைக்குட்டை ஒன்றையும், பாதிரிக்கு ஒரு மோட்டார் சைக்கிள், ருஸ்தத்திற்கு குதிரையும் கொடுத்தார். பின்பு பாபா, ஸரோஷ் பக்கம் திரும்பி, **"நான் ஏற்கனவே உங்களுக்கு ஒரு பரிசை வழங்கிவிட்டேன்"** என்று சைகையால் தெரிவித்தார்.

அந்த நேரத்தில், விலூவிற்குத் தான் கர்ப்பமாக இருப்பது தெரியாது. ஆனால் விரைவில் அது தெரியவந்தது; பின்னர் ஒரு மகனை ஈன்றெடுத்தார். அதற்குப் பின்னர், அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர். ஆயினும்கூட, விலூவிற்கு, பாபா மீது நம்பிக்கை வரவில்லை. பாபாவைப் பார்க்க அவர் எப்போதாவது ஸரோஷுடன் வரும் வேளையில், பாபாவிற்கு, குருநாதர் என்ற மதிப்பை அளித்தாலும், அவரது இயல்பான சிந்தனையில், மெஹர் பாபாவிற்கு 'இயற்கையாகவே நிகழும்' சம்பவங்களுடன் எந்த சம்பந்தமும் இல்லை என்று நினைத்தார், ஆனால் அவர்கள் உண்மையில் பாபாவின் ஆசீர்வாதங்கள் என்று ஸரோஷ் தொடர்ந்து வலியுறுத்தினார்.

பாதிரி இந்தியாவின் 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி'க்கு (ILLUSTRATED WEEKLY OF INDIA) சந்தா செலுத்தியிருந்தார், மேலும் ஜூலை 26 அன்று தபாலில் வந்து

சேராத பழைய இதழைக் குறித்து குறை கூறி முறையிட்டார். **'கடந்து போனது கடந்த காலம் என்றும், சிந்தி, சிதறிப்போன பாலைக் குறித்து ஒருவர் கவலைப்படக்கூடாது'** என்றும் பாபா கருத்துத் தெரிவித்தார்.

ஏற்கனவே எரிச்சலடைந்த மனநிலையில் இருந்த பாதிரி, "அது உங்களுக்கும் பொருந்துமா?" என்று கேட்டார்.

"**நான் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறேன்**" என்று பாபா கூறினார், ஆனால் பாதிரியின் அவமரியாதைக்குரிய வார்த்தைகளால் பாபா மிகவும் அதிருப்தி அடைந்தார்.

கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்ய பாபா அடிக்கடி ராஹூரிக்குச் செல்லத் தொடங்கினார். அவர் இந்தியாவிற்கு அழைக்க விரும்பிய மேற்கத்திய அன்பர்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்வதற்காக நாசிக் நகருக்கும் அவ்வப்போது சென்று வந்தார்.

ராஹூரியில் ஆசிரமம் 1936 ஆகஸ்ட் மாதத்தில் திறக்கப்பட்டதாக அறிவித்து, முதன்முதலில் மஸ்த்களும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும், அங்கு அழைத்து வரப்பட்டனர். இது, இறை ஏக்கத்தில் பைத்தியம் போலத் தோற்றமளிப்பவர்களுடன் மெஹர் பாபா மேற்கொண்ட பணியின் மிக முக்கியமான கட்டத்தின் தொடக்கமாகும், மேலும் பல ஆண்டுகளாக அவரது நேரத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்த இன்றியமையாத கட்டமாகும்.

மெஹர் பாபாவின் பின்வரும் விளக்கம் ஒரு மஸ்தின் (MAST) மனதின் உருவாக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது:

**எல்லா மஸ்துகளும் இறை போதையில் இருப்பவர்கள்; தெய்வீக அன்பின் போதையில் திளைப்பவர்கள். ஒரு சாதாரண மனிதன் மதுபானங்களை அருந்தி, போதையில் இருக்கும்போது, போதைப்பொருளின் போதுமான செறிவு அவனது உடல் திசுக்களில் இருக்கும் வரை, இந்த உணர்வை அனுபவிக்கிறான்: ஒரு குடிகாரன் மகிழ்ச்சியாக உணர்கிறான், எவருக்கும் அல்லது எதற்கும் அக்கறை காட்டுவதில்லை, மேலும் மதுபோதையின் ஒரு மேலாதிக்க உணர்வைக் கொண்டிருக்கிறான், அதில் கடந்தகாலம், நிகழ்காலம் அல்லது எதிர்காலம் இவற்றின் நடைமுறையில் எந்த அர்த்தமும் இல்லை. ஆனால் மதுபோதை நீங்கியவுடன், குடிகாரன் தலைகீழாக - அதன் ஆக்கவேலையால் உடலின் பின்விளைவை சந்திக்கிறான். இப்படித் தூண்டப்பட்ட உடல் போதை தவிர்க்க முடியாதது, தற்காலிகமானது, ஏனெனில் இது போதைப் பொருளின் தன்மையால் கட்டுப்படுத்தப்பட்டது; சுற்றுப்புறசூழலின் நிலைமைகளைப் பொறுத்தது; போதைப்பொருளின் விலை மற்றும் தாங்கிக்கொள்ளும் தன்மை ஆகியவற்றால் வரையறுக்கப்படுகிறது.**

**இப்போது இறை போதையில் இருக்கும் ஒரு நபர், குடிகாரன் அனுபவிக்கும் அதே உணர்வை அனுபவிக்கிறார், அவரது உள் போதையின் அளவிற்கு ஏற்ப, எவரையும் எதையும் பொருட்படுத்துவதில்லை;**

முக்கியமான வேறுபாடு என்னவெனில், மஸ்தின் போதை தொடர்ச்சியானது, அதிகரிக்கக்கூடியது, ஆனால் ஒருபோதும் குறைவதில்லை, மேலும் அதற்குத் தீங்கு விளைவிக்கும் மனம் அல்லது உடலின் எதிர்வினை எதுவும் இல்லை. இது நிரந்தர, தூய்மையான இறை போதையின் உள்ளளவிலான நிலை, வெளிவுலகத்துடன் சற்றும் தொடர்பு இல்லாதது.

இறை போதையின் இந்த நிரந்தர இன்பமே ஒரு மஸ்தின் பிரதான உணர்வு நிலையாகும். பிரபஞ்சத்தின் படைப்பு, ஆனந்தத்தால் நிரம்பி வழிவதால், மஸ்த் இந்த ஆனந்தத்தை அனுபவித்து, அதன் மூலம் கிட்டத்தட்ட வரம்பற்ற அளவிற்கு போதைக்கு ஆளாகி, ஏறக்குறைய அவரையே உள்வாங்கி, அதன் மூலம் அவரைச் சுற்றியுள்ள உலகம் மறைந்து, மறந்து போகும் நிலையை அடைகிறார். இறை நினைவில் மூழ்கிய அவர் தொடர்ந்து இறைவனைப் பற்றிய சிந்தனையில் உள்வாங்கப்படும் நிலையில், முற்றிலும் எதிர்பாராமல் இறையன்பால் ஆட்கொள்ளப்பட்டு தெய்வீக போதை நிலையில் இருக்கிறார்.

இதர சந்தர்ப்பங்களில், மெஹர் பாபா மண்டலிக்கு விளக்கினார்:

**மஸ்துகள் என்று அழைக்கப்படும் இத்தகைய நபர்கள் சாதாரண அர்த்தத்தில் மனப்பக்குவம் இல்லாதவர்களோ அல்லது பைத்தியமோ அல்ல; மஸ்துகள் கடவுளை நேசிக்கிறார்கள் - அல்லது கடவுள் மீதான அன்பினால் நுகரப்படுகிறார்கள்.**

**மஸ்துகள், மனிதனுக்குத் தெரிந்த நோய்களால் தாக்கப்படுவதில்லை. அவர்களுடைய மனம் ஆழ்ந்த, அளவுக்கு அதிகமான ஆன்மீக சக்திகளால் ஆட்கொள்ளப்படுவதால், அவர்கள் சீர்குலைந்த மனநிலையில் இருக்கிறார்கள்; இது, உலகத்துடனான தொடர்பை இழக்கும்படி கட்டாயப்படுத்துகிறது, சாதாரண மனித பழக்கவழக்கங்களையும், சமுதாயத்தின் நாகரிக நடைமுறைகளையும் களைந்து, ஒரு வகையான ஆன்மீக ஒளிமயத்தில் ஆனால் அருவருப்பான, அசுத்தமான சூழலில் வாழ்கின்றனர்.**

**அவர்கள், கடவுள் மீதான அதீத அன்பினால் வெல்லப்படுகிறார்கள், மேலும் தெய்வீக பரவசத்தில் மூழ்கடிக்கப்படுகிறார்கள். ஒரு பரிபூரண குருநாதரில் பொதிந்துள்ள தெய்வீக அன்பு மட்டுமே அவர்களைத் தீண்ட முடியும்.**

வேறொரு தருணத்தில், பாபா இதை மேலும் தெளிவுபடுத்தினார்:

**சில ஆண்களும் பெண்களும் மஸ்துகளாக மாறுவது எப்படி? கடவுளின் ஆழ்ந்த சிந்தனையில் இடைவிடாமல் வாழ்வதன் மூலம் மனதின் சமநிலையை இழந்து, அவர்கள் சாதாரண மனித தேவைகள் அனைத்தையும் புறக்கணிக்கிறார்கள். மிகவும் முன்னேறிய, மேம்பட்ட ஆன்மீக ஜீவனுடனான திடீர் தொடர்புகளால் மனதின் சமநிலையை இழந்தவர்களும் இருக்கிறார்கள். ஆன்மீக அனுபவங்களைத் தேடி,**

**அதிலிருந்து மீளமுடியாத ஒரு நெருக்கடியை சந்தித்தவர்களும் உள்ளனர். எல்லா மஸ்துகளின் சிறப்பியல்புகளும் இறையன்பின் மீதான தீவிர ஒருமுகப்பார்வையே ஆகும்.**

ராஹுரி, ஒரு பெரிய கிராமம், அஹமதுநகரை நாசிக் நகருடன் இணைக்கும் சாலையில் அமைந்துள்ளது, மேலும் பாபாவின் நிரந்தர தலைமையகம் மெஹராபாத் ஆதலால், இது பாபாவிற்கு வசதியாக அமைந்தது. கோதாவரி நதியின் கிளையில் அமைந்த இந்தக் கிராமம் பசுமையால் நிறைந்தது. ஆரஞ்சு மற்றும் மாமரங்களின் தோப்பில் இந்த ஆசிரமம் கட்டப்பட்டது, இது போன்ற பணிகளுக்கு இனிமையான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

ராஹுரி வாசிகளுடன் அங்கு வசிக்கும் ஒரு சில மண்டலிகளுக்கு உணவு தயார் செய்யும் பொறுப்பு பைதூலுக்கு வழங்கப்பட்டது. பிளீடர், (ஜூலை இறுதியில் மும்பையிலிருந்து வந்தவர்) ராவ்ஸாஹேப் ஆகியோர் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டனர். பிளீடர், காக்கா பாரியா, ஸவக் கொத்வால், ஹோமி ஈரானி ஆகியோர் வெவ்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து, மஸ்துகளையும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களையும் அழைத்து வருவதில் மும்முரமாக இருந்தனர்.

இந்த நேரத்தில், டாக்கே:ஃபால்கர் ராஹுரியில் பயிற்சி பெற்ற வழக்கறிஞராக இருந்தார்; அலுவலக விவகாரங்களை நிர்வகிக்க, அடிக்கடி ஆசிரமத்திற்கு விஜயம் செய்து, சில நேரங்களில் அங்கேயே தங்கினார். டாக்டர் நீலுவால் நிர்வகிக்கப்பட்ட ஒரு மருந்தகம், பின்பு ராஹுரியில் திறக்கப்பட்டது, ஜால்பாய் அவரது உதவியாளராக இருந்தார்.

அந்த அமைதியான, கிராமப்புறத்தில் இலவசமாக வழங்கப்பட்ட மருத்துவ வசதியை நூற்றுக்கணக்கான மக்கள் பயன்படுத்தினர். டாக்டர் நீலுவும், ஜால்பாயும் முழுநேரமும் மும்முரமாக இருந்தனர்.

மாஸாஜி, குஸ்தாஜி, டாக்டர் கனி இன்னும் சிலர் ராஹுரி ஆசிரமத்தில் வசித்து வந்தனர். இதர மண்டலி மெஹராபாத்திலும், பெண் மண்டலி மேல் மலையிலும் தங்கினர்.

அறக்கட்டளை ஒன்றை உருவாக்குவது குறித்த கலந்துரையாடல் நடந்த வண்ணம் இருந்தது, ஆகஸ்ட் 6ஆம் நாள், பாபா "**அவரது நான்கு 'தூண்கள்' - ஆதி சீனியர், பெண்டு, பாதிரி, விஷ்ணு - மெஹராபாத்தின் முக்கியஸ்தர்கள்**" என வலியுறுத்தி, அவர்களிடம் நம்பிக்கை பத்திரத்தின் உட்பிரிவுகளின் வரைவை கவனமாக மதிப்பாய்வு செய்யக் கூறினார். அனைத்து செலவுகளையும் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

1936, ஆகஸ்ட் 15ஆம் நாள், மெஹர் பாபா நாசிக் நகரில் அறக்கட்டளையின் நம்பிக்கை பத்திரத்தை (TRUST DEED) அதிகாரபூர்வமாக அமல்படுத்தினார். 'மெஹர் மண்டலி பராமரிப்பு அறக்கட்டளை'யையும் (MEHER

MANDALI MAINTENANCE TRUST) உருவாக்கினார். நாசிக், ராஹுரி, மெஹராபாத் ஆசிரமங்களை நிர்வகிப்பதற்கும், மெஹர் பாபாவைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் பராமரிப்பை உறுதி செய்வதற்கும் அறங்காவலர் குழு (BOARD OF TRUSTEES) ஒன்று நியமிக்கப்பட்டது. இது பாபாவின் மேற்பார்வையைப் பெரிய அளவில் குறைப்பதற்கான ஒரு வழிமுறையாகும். ஆனால் பாபா இன்னும் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து, தேவைப்படும்போது தனிப்பட்ட முறையில் தலையிட்டார்.

ஆதி சீனியர், காக்கா, பாதிரி, பெண்டு, ராம்ஜூ, ஸரோஷ், விஷ்ணு, நோரினா ஆகிய எட்டு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். ஆதி அதன் தலைவராகவும், பெண்டு, நோரினா இருவரும் துணைத் தலைவர்களாகவும், விஷ்ணு செயலாளராகவும் இருந்தனர். அறங்காவலர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும்; முதல் கூட்டம் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை நாசிக் நகரில் நடைபெற்றது.

நவ்ஸாரியைச் சேர்ந்த இரண்டு இளம் பக்தர்கள்: மினூ தேசாய் (மன்ஸாரியின் சகோதரர்) மற்றும் அவரது உறவினர் பபாய், ஆகியோரின் திருமண நிச்சயதார்த்தம் ஆக்ஸ்ட் 16 அன்று நாசிக் நகரில் நடைபெற்றது. பாபா, நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மோதிரத்தை பபாய் விரலில் பாபாவே அணிவித்தார்; பபாய் கண்கலங்கிப் போனார். காலம் இதை இப்படிப் பார்த்தது: "பிரபஞ்சத்தின் அதிபதி, உலகளாவிய படைப்புகளைத் தவிர, அவரது ஒவ்வொரு அன்பரையும் கருத்தில் கொள்கிறார். சத்தியத்திற்கான தாகத்தை உருவாக்க, அவர் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு குறிப்பட்ட விஷயத்திலும் கலந்துகொள்கிறார்."

பாபா, மறுநாள் ராஹுரிக்குச் சென்று, அவருக்காகக் கட்டப்பட்ட சிறிய குடிலில் தங்கத் தொடங்கினார். அடுத்த மூன்று மாதங்கள் அவர் ராஹுரியில் வசித்து வந்தார். சில நேரங்களில் மனநிலை பாதிக்கப்பட்டவர் அல்லது மஸ்துடன் ஏகாந்தவாசத்தில் அமர்ந்திருப்பது வழக்கம்.

1936, செப்டம்பர் முதல், பாபா ஒவ்வொரு புதன்கிழமையும் நாசிக் நகருக்கும், வியாழன் மெஹராபாத் மேல்மலையில் பெண் மண்டலியை சந்திக்கவும் சென்று, அதே நாள் மாலையில் திரும்பி வருவதை வழக்கமாகக் கொண்டார்.

ராஹுரி ஆசிரமத்தில் ஒரு சில உண்மையான இறை-போதைமிக்க மஸ்துகள் மற்றும் பல இறை-பைத்தியங்களும் இருந்தனர், ஆனால் பெரும்பாலானோர் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள். ஆசிரம எல்லைப்பகுதிக்கு வெளியே செல்லாமல் இருப்பதைத் தவிர, அவர்களுக்கு அனைத்து சுதந்திரமும் வழங்கப்பட்டது.

இறை போதையில் இருக்கும் மஸ்துகள் அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் நடத்தை உண்மையிலேயே அசாதாரணமானதாக

இருந்தது. 'டக்டு புவா' (DAGDU BUA) என்ற மஸ்த் 'பாவ்' (BHAU - சகோதரர்) என்று அழைக்கப்படுவதை விரும்பினார். அப்படி அழைத்தால், அவர் தோள்களைக் கவ்வி, மார்போடு அணைத்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். சில நேரங்களில், டக்டு புவா காம்பவுண்டில் உள்ள ஒரு பெரிய மரத்தில் ஏறி, நான்கு அல்லது ஐந்து மணி நேரம் தொடர்ந்து மேல் கிளை ஒன்றைப் பற்றிக் கொண்டிருப்பது வழக்கம்.

பெயர் இல்லாத மற்றுமொரு விசித்திரமான மஸ்த் மும்பையிலிருந்து ஒரு குறுகிய காலத்திற்காக அழைத்து வரப்பட்டார். தனது முழு உடலையும் சாம்பல் மற்றும் சுண்ணாம்பால் நிரப்பிக்கொண்டு, இறை போதையில் இருந்த இந்த மஸ்தை, அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்றாலும், இங்கே பாபா, அவரது கைகளால் முதல் முதலில் நீராட்டிய மஸ்த் அவர்தான்.

'லால் ஸாஹேப்' (LAL SAHEB) என்று அழைக்கப்பட்ட ஒரு மஸ்த் பாபாவின் காலடியில் விழுந்து அவரை ஆர்வத்துடன் அரவணைத்தார். அவர் பாபாவை 'கடவுள்!' என்று அழைத்து வந்தார். லால் ஸாஹேப், 'புஞ்சியா' (PUNJIA) என்ற மற்றொரு குறை அறிவு படைத்த மஸ்துடன் மிகுந்த நட்புணர்வோடு இருந்தார், அவர் ஆசிரமத்தில் மிகவும் வேடிக்கையான மற்றும் அன்பான குணவான்களில் ஒருவர். லால் ஸாஹேப், புஞ்சியாவிடம் தங்கம், நகைகள் மற்றும் பொக்கிஷங்கள் நிறைந்த வாகனம் ஒன்றைக் கொண்டு வருவதாகவும், பணக்கார மஹாராஜாவின் மகளைத் திருமணம் செய்து வைப்பதாகவும் உறுதியளித்தார். லால் தன்னிடம் ஒரு கோடி ரூபாய் இருப்பதாகக் கூறி, தனது கையைச் சட்டைப் பையில் வைத்து, அவருக்குக் கொடுக்கட்டுமா என்று புஞ்சியாவிடம் கேட்ட போது. "இல்லை, இன்னும் இல்லை" என்று புஞ்சியா பதிலளித்து வந்தார்.

புஞ்சியா குழந்தைத்தனமாக அல்லது முட்டாள்தனமாகச் செயல்பட்டாலும், கூஃபி (GOOFY) என்ற புனைப்பெயருடன், அவர் அற்புதமான தோழமையை வெளிப்படுத்தி, ஆசிரமத்தின் உயிர்த்துடிப்பாக இருந்தார்.

சிறிதளவு கோபமூட்டினாலும் அவர் பெருங்களிப்புடனான சிரிப்பை வெளிப்படுத்தினார். அவர் ஒலி மற்றும் உடலின் தாளத்தை நேசித்தார்; மேலும் அவரது கழுத்தில் மண்ணெண்ணெய் தகர கொள்கலன் இல்லாமல் அவரைக் காண்பது மிக அரிது; அதை, அவர் ஒரு தாள வாத்தியத்தைப் போல வாசித்தார். எவரேனும் இசையோடு தாளமிட்டு ஒலி எழுப்பினால், அவர் கற்பனை நடனங்கள் ஆடி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது வழக்கம். அவரது நடத்தையின் எந்தவொரு குறைபாட்டையும் சரிசெய்ய, அவருடைய தாள வாத்தியத்தைப் (தகர கொள்கலன்) பறிமுதல் செய்வதாக அச்சுறுத்தினால் மட்டுமே போதும். சில நேரங்களில் குறும்புத்தனம் செய்யும் புஞ்சியா ஒருமுறை ஜமாஸாஹேப் (JAMASAHEB) என்ற மஸ்தின் முடியைக் கத்தரித்து விட்டார்.

ஒவ்வொரு காலையிலும் நான்கு மணியிலிருந்து, பாபா இந்தக் 'கைவிடப்பட்டவர்' கூட்டத்தை, கண்ணின் மணிபோல கவனித்துக் கொண்டார். பாபா அவர்களின் முகங்களைக் கழுவி, சவரம் செய்வது, தலைமுடியை வெட்டி

விடுவது, அவர்களின் கழிவறைகளை சுத்தம் செய்வது, காலை உணவைப் பரிமாறி அடிக்கடி அவரது கையால் ஊட்டுவது, அவ்வப்போது அவர்களைத் தழுவி முத்தமிடுவது, இவை அனைத்தும் வழக்கமாக நடந்து வந்தது. பாபா அவர்களின் பொழுதுபோக்குக்காக இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார். பூனாவின் 'பாபு கவாய்' (BABU GAVAI) என்ற கலைஞரை மாதம் **40** ரூபாய் சம்பளத்தில் நியமித்து அவர்களைப் பாடி மகிழ்விக்கும் பொறுப்பை அவருக்கு வழங்கினார். பாபு பாடும்போது, மற்றொரு மஸ்த் நடனமாட, புஞ்சியா அவரது மேள தாளங்களுடன் இசைக்குழுவில் பங்கெடுத்தார்.

"ராஹுரி, ஒரு விசித்திரமும் அற்புதமும் நிறைந்த ஆசிரமமாக இருந்தது," காலம் இதை இப்படிப் பார்த்தது, "உலகில் பித்து பிடித்தவர்களை, இறை பைத்தியத்தில் இருக்கும் மஸ்துக்களோடு இருக்கச் செய்து, பிரபஞ்சத்தின் இறைவன் ஒரு தோழனாக தனது அன்பர்களுக்கு சேவை செய்கிறார் என்பதை மனிதகுலத்திற்கு நிரூபிக்கிறது. மெஹர் பாபாவின் மகிமை இந்த யுகத்தில் உலக பைத்தியம் மற்றும் இறை பைத்தியமான மஸ்துகளுடன் பணிபுரிவது, வரும் காலத்தில் மானிடனுக்கு உத்வேகத்தின் கருவூலமாகத் திகழும்."

ஆசிரமத்தின் மஸ்துகள் இறை போதையில் மயக்கமுற்று, இறைவனுடன் விளையாடுவதையும், குருநாதர் அவர்களின் ஒவ்வொரு காரணம் புரியாத தற்போக்கு ஆசைகளைப் பூர்த்தி செய்ததையும் காலம் உன்னிப்போடு கவனித்தது. தெய்வீக மதுவின் என்ன ஒரு தனித்துவமான நாடகம்! என்னே இறைவனின் லீலை! இறை போதையில் இருந்தவர்களுக்கு இந்த விளையாட்டைப் பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் போதையில் மூழ்க மூழ்க, பிரியமானவர் மதுவை மேலும் மேலும் பரிமாறி, உலக உணர்வை முற்றிலுமாக இழக்கச் செய்தார்; இது ஒரு நாள் அவர்களை உண்மைப்பொருளை உணரும் தயார் நிலைக்கு எடுத்துச் செல்லும்.

"மஸ்துகளுக்கு என்ன ஒரு மயக்க நிலை!" காலம் இப்படி சிந்தனை செய்தது: "உடல், உலகம் எதைப் பற்றியும் எந்த உணர்வும் இல்லை - ஆனால் பிரியமான இறைவனுடன் ஒன்றாக விரும்பும் வேதனையின் உணர்வை மட்டும் கொண்டுள்ளனர். மது, ஏக்கத்தின் நெருப்பை உருவாக்கி அதை அருந்துபவர்களை எரிக்கிறது! இக்காரணத்தால்தான், இரக்கமுள்ள இறைவன் அவரது உண்மையான அன்பர்களின் தோழர் மட்டுமின்றி சேவகனுமாக இருந்து, குருநாதர் முழு அர்ப்பணிப்புடனும் அன்புடனும் அவர்களுக்கு சேவை செய்கிறார்."

**1936**, செப்டம்பர் **20** அன்று ஸவக், காக்கா பாரியா, ஹோமி மூவரும் மும்பை வி.டி. (VICTORIA TERMINUS) ரயில் நிலையம் எதிரே அமைந்த பூங்காவில் இருந்த ஒரு பழைய பஞ்சாபி மஸ்தை அழைத்து வந்தனர். அதுபோல பிளீடரும் சாஞ்சியும் **27**ஆம் தேதி மும்பையிலிருந்து மஸ்த் என நினைத்து அழைத்து வந்த இரண்டு நபர்களை பாபா மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்று தெரிவித்தார்.

ராஹுரியில் ஓர் இரவு, ராவ்ஸாஹேப் பாபாவின் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த வேளையில், குடிலுக்கு வெளியே இருந்த அவரிடம் எவரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்பது பாபாவின் கண்டிப்பான உத்தரவு. ஆனால் சில மணி நேரத்தில் ராவ்ஸாஹேப் தனது இயற்கையின் அழைப்பை ஏற்று சென்றபோது, திடீரென டாக்டர் கனி தனது வருகையை பாபாவிடம் தெரிவிக்க வந்தவர், பாபா அவரது பணியில் மும்முரமாக இருப்பது தெரியாமல் பாபாவின் குடிலுக்குள் நுழைந்தார். பாபா அதீத வேதனையில் இருக்கும் நிலையைக் கண்ட அவர் திகைத்துப் போனார். பாபா பல நிமிடங்கள் கடுமையான நடுக்கத்தில் இருந்தார். டாக்டர் கனி இவ்வாறு விவரித்தார், "பாபாவை நான் முன்பு பார்த்ததை விட மிகவும் கொடூரமான தோற்றத்தில் பார்த்தேன்."

பாபா கோபத்தில் ராவ்ஸாஹேப், டாக்டர் கனி இருவரையும் கண்டித்தார், **"எனது ஆன்மீகப் பணி குறுக்கிடப்பட்டதால், அதன் முழு அதிர்ச்சியையும் நானே எடுத்துக்கொண்டேன். இல்லையேல், கனி உடனடியாகக் கொல்லப்பட்டிருப்பார்!"** இந்த நேரத்தில், ராவ்ஸாஹேப் மிகவும் நோய்வாய்ப்பட்டு, அஹமதுநகர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றார்.

அக்டோபர் 4ஆம் நாள் மேலும் இரண்டு மஸ்துகளுடன் பிளீடர் ராஹுரி ஆசிரமத்திற்கு வந்தார். பாபா, பிளீடரிடம் அவர் செய்யும் இந்தப் பணியால் பெரிதும் பயனடைவார் என்று தெரிவித்தார். **"உங்கள் கடமையை மனசாட்சியுடன் செய்யுங்கள். இந்த வாழ்க்கையில் நீங்கள் விரும்புவதைப் பெறுவீர்கள் - இறை அனுபவம் (ஒரு மஜ்ஜூப் போல் அல்ல) - அது எந்த நேரத்திலும் வரக்கூடும்"** என்று பாபா அவரிடம் கூறினார்."

மும்பையின் பொறுப்பாளரான திப்பு பாபாவைப் (TIPU BABA) பற்றியும் மெஹர் பாபா குறிப்பிட்டார் (பாபா, இளமைப் பருவத்தில் அவரை சந்தித்தார்), **"திப்பு பாபா 'சிறப்பு' நிலையில் இருக்கும் ஒரு மேன்மை வாய்ந்த மஸ்த். அவர் 6ஆவது ஆன்மீகத் தளத்தில் இருந்தபோதும், இறை உணர்வை அடைந்த ஓர் ஆத்மாவின் அதே அனுபவத்தைக் கொண்டிருந்தாலும், அவர் இன்னும் இறைநிலையை அடையவில்லை."**

அண்மையில் மும்பையிலிருந்து பிளீடர் அழைத்து வந்த புதிய மஸ்துகளில் உண்மையிலேயே மேல்நிலையை அடைந்த ஒருவர் - முஹமது மஸ்த் (MOHAMMED MAST), அவர் மெஹர் பாபாவின் **'பிரியமான மஸ்துகளில்'** ஒருவரானார். முஹமது மஸ்த் இறுதியில் ஐந்தாவது ஆன்மீகத் தளத்திற்கு முன்னேறினார், ஆனால் அவர் தனது இருபது வயதுகளில் ஓர் இளைஞனாக ராஹுரிக்கு முதன்முதலில் வந்தபோது, அவர் மூன்று மற்றும் நான்காவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில் ஒரு ஆபத்தான நிலையில் சிக்கியுள்ளதாக பாபா தெரிவித்தார்.

அக்டோபர் மாதத்தில் மஸ்துகளுக்கு, சிறிய மூங்கில் குடில்களைக் கட்டும் பணியில் டாக்டர் கனிக்கு உதவவும், பாபாவிற்கு ஒரு சிறிய அறை அமைப்பதைக் கண்காணிக்கவும் கலிங்கட் ராஹுரிக்கு மாற்றப்பட்டார்.

அக்டோபர் 7 அன்று பாபா, நாசிக் சென்று அவரது அடுத்த மேற்கத்திய பயணம் குறித்த ஏற்பாடுகளைச் செய்ய சாஞ்சியை மும்பைக்கு அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் காலையில் அறங்காவலர்களின் கூட்டத்திற்காக ஆதி சீனியர், சாஞ்சி, ஜால்பாய் ஆகியோருடன் பாபா, மெஹராபாத்திற்குச் சென்றார். மேற்கத்தியரின் வருகை குறித்து ஒரு விவாதம் நடைபெற்றது. உணவைப் பற்றிய விவாதத்தில் இறுதியாக சைவ உணவு வழங்க முடிவு செய்யப்பட்டது. தங்கும் வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்ய, பாபா நாசிக் சென்று, ருஸ்தம், ஃப்ரீனி இருவருக்கும் அனைத்து விஷயங்களைப் பற்றி அறிவுறுத்தினார். நாசிக் நகரில் கையகப்படுத்தப்பட்ட வீடு மற்றும் 22 ஏக்கர் நிலத்திற்கு ‘மெஹர் ரிட்ரீட்’ (MEHER RETREAT) என்று பெயர் சூட்டப்பட்டது. ருஸ்தம் குடும்பத்தினர் முதலில் பிரதான பங்களாவில் தங்கியிருந்தனர், அதே நேரத்தில் ஒரு சிறிய விருந்தினர் குடிசையும் கட்டப்பட்டது (அல்லது புதுப்பிக்கப்பட்டது). மேற்கத்தியர்களுக்கு இடமளிக்கும் வகையில் ருஸ்தத்தின் நிலத்தில் பன்னிரண்டு அறைகளைக் கொண்ட ஒரு தனி கட்டிடமும் அமைக்கப்பட்டது.

# கராச்சி, பாக்தாத், இஸ்தான்புல் வழியாக ஐரோப்பா பயணம்

**(Europe Via Karachi, Bagdad, Istanbul)**

1936, அக்டோபர் 18 அன்று ஆதி சீனியர் பாபாவை மும்பைக்கு அழைத்துச் சென்றார், அங்கிருந்து 20ஆம் நாள், காக்கா, சாஞ்சி இருவருடனும், பாபா கராச்சிக்கு (KARACHI), 'கத்தியவார் மெயில்' (KATHIAWAR MAIL) ரயிலில் பயணம் செய்தார். (மெஹர் பாபா மும்பையில் இருந்தபோது நடந்த இந்து-முஸ்லிம் மதக்கலவரத்தில் 60 பேர் உயிரிழந்தனர், 500க்கும் மேலானோர் காயமடைந்தனர்.) கராச்சியில் பாபா, பீலாமாய் மற்றும் பானுமாசி குடும்பத்தினரை சந்தித்தார்.

24 இருக்கைகள் கொண்ட 'இம்பீரியல் ஏர்வேஸ் ஹெட்ரியன்' (IMPERIAL AIRWAYS HADRIAN) விமானத்தில் பாபாவும் மண்டலியும் அக்டோபர் 24 அன்று கராச்சியிலிருந்து புறப்பட்டனர். அது மெஹர் பாபாவின் ஒன்பதாவது வெளிநாட்டுப் பயணம். பெஹ்ரைனிலிருந்து (BAHRAIN) பஸ்ரா (BASRA) வரை, கடுமையான காலநிலை காரணமாக, காக்கா, சாஞ்சி இருவரும் பெரும் சிரமத்திற்குள்ளாயினர்.

அக்டோபர் 25 அன்று மாலை பாக்தாத் (BAGHDAD) நகரம் வந்து, பாபாவும் மண்டலியும் ஒரு ஹோட்டலில் தங்கினர். அடுத்த நாள் அவர்கள் பாக்தாத்தில் பயணம் மேற்கொண்டனர். 27ஆம் தேதி, பாபா, ஸுஃபி சத்குரு - ஹஸ்ரத் அப்துல் காதிர் கிலானியின் (HAZRAT ABDUL QADIR GILANI) சமாதிக்கு விஜயம் செய்து, சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்தார். அவரது பணி குறித்து, பாபா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை .

துருக்கி (TURKEY) நாட்டின் எல்லைப் பகுதியைக் கடக்கும் இடத்தில் ரயில் பாதையில் தடை ஏற்பட்டுள்ளதாக, பாக்தாத் ரயில் நிலையத்தில் அறிவிக்கப்பட்டது. இது எப்போது சரியாகும் என்ற திட்டவட்டமான தகவல்கள் எதுவும் இல்லாததால் சற்று இடையூறாக இருந்தது, ஏனெனில் பாபா ஈராக்கிலிருந்து (IRAQ) ரயிலில் இங்கிலாந்துக்குச் (ENGLAND) செல்ல திட்டமிட்டிருந்தார்.

பாபாவின் உடல்நிலையும் சாதகமாக இல்லை; அவரது கண்கள் வீங்கியிருந்தன, அவ்வப்போது பல்வலியாலும் அவதிப்பட்டார். இந்த நிலையிலும் அக்டோபர் 27 அன்று பாபா, நகரின் 100 பிச்சைக்காரர்களுக்குத் தனது கைகளால் உணவு வழங்கினார். ஒரு கட்டத்தில், **"நான் இங்கு வருவதன் மூலம், ராஹுரியுடனான இணைப்புத் துண்டிக்கப்பட்டது; இந்த இணைப்பை மீண்டும் நிறுவ, நான் இந்த ஏழைகளுக்கு உணவளிக்கிறேன்"** என்று குறிப்பிட்டார். பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா இவ்வாறு உணவளிக்கும் தனது விருப்பத்தைத் தெரிவித்தார்; முடிந்தால், பாக்தாத் நகரில்

வாழும் ஏராளமான ஏழை, ஊனமுற்ற மக்களை நீராட்டவும் திட்டமிட்டார். இப்போது, ரயில் பாதையில் ஏற்பட்ட தடையால், பாபா அவரது பணியைச் செய்ய முடிந்தது.

மெஹர் பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால், திட்டமிட்ட இங்கிலாந்து பயணத்தை ரத்து செய்து, கிட்டி டேவி மூலமாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்கத் திட்டமிடப்பட்டது. தொலைத்தந்திகளும் பரிமாறப்பட்டன, ஆனால் பாபா, பின்னர் அந்த யோசனையை நிராகரித்து லண்டனுக்குச் செல்ல முடிவு செய்தார்; அவர் அங்குத் தங்கவிருப்பது மூன்று நாட்களுக்கு மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டது.

1936 அக்டோபர் 28ஆம் நாள், பாபா டாரஸ் எக்ஸ்பிரஸ் ரயிலில், (TAURUS EXPRESS TRAIN) பாக்தாத்திலிருந்து புறப்பட்டார். கர்குக் (KIRKUK) நகரிலிருந்து மோஸல் (MOSUL) நகருக்குச் சென்று, தொடர்ந்து ரயிலில் சிரியா நாட்டின் ‘டெல் கோட்செக்’ (TELL KOTCHEK) மலை வழியாகச் சென்றார். பயண வேளையில், சார்லஸ் பர்டம் எழுதிய பாபாவின் சுயசரிதை, ‘தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்’ (THE PERFECT MASTER) புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை, சாஞ்சி, சத்தமாக வாசித்தார். லண்டனில் பாபாவின் பயணத் திட்டங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

ஒரு கட்டத்தில், 1927ஆம் ஆண்டில் பாபா எழுதிய புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியிலிருந்து இந்த மேற்கோளை சாஞ்சி வாசித்தார்:

**உலகின் கவலைகள், தொல்லைகள் அனைத்திற்கும் ‘சிந்தனை’ ஒன்றுதான் காரணம். விரைவில் நான் இந்த சிந்தனையை என்னில் எடுத்துக்கொள்வேன்; இது என் உடல்நிலையைப் பெரிய அளவில் பாதிக்கும். உலகம் முழுவதையும் பாதிக்கும். எனது எதிர்கால பணிக்கு இது இன்றியமையாதது.**

பாபா தொடர்ந்து கருத்துரைத்தார்: “**அந்த நேரம் இப்பொழுது என்பதால், எனது உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது**.” பாபா தினமும் ஒரு வேளை மட்டுமே ரொட்டி, வெண்ணெய், சீஸ் உண்டு வந்தார், அவருடைய உடல்நிலையும் மோசமடைந்தது.

துருக்கி (TURKEY) வழியாகப் பயணம் செய்து ரயில் கொன்யாவில் (KONYA) நின்றது. ரயில் நிலையத்திலிருந்து சில மைல் தொலைவில், பாபாவின் பிரியமான கவிஞர்களில் ஒருவர் மௌலானா ரூமியின் (MAULANA RUMI) சமாதி இருந்தது. கொன்யா ஸூஃபிகளுக்கு (SUFI) ஒரு புனிதமான இடம். மெஹர் பாபா ரூமியின் சமாதிக்குச் செல்லவில்லை என்றாலும், அவர் அதற்கு மிக அருகில் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் 31ஆம் நாள் இஸ்தான்புல் (ISTANBUL) நகரைச் சென்றடைந்து, பாபா மண்டலியுடன் ஓரியண்ட் எக்ஸ்பிரஸில் (ORIENT EXPRESS) நவம்பர் 3 அன்று பாரிஸ் (PARIS) நகருக்கு வந்தார். ஒரு குறுகிய ஓய்வுக்குப் பிறகு, மறுநாள்

லண்டன் வந்தடைந்து, பாபாவும் மண்டலியும் மீண்டும் ஹைஜியா ஹவுஸில் (HYGEIA HOUSE) தங்கினர்.

லண்டனில், கிட்டி, அவரது பெரிய சகோதரி மே க்ளூஸ், மின்டா, மார்கரெட், மேபெல், டிலியா, கிறிஸ்டின் மெக்நாட்டன், வில் & மேரி பேக்கெட், டாம் ஷார்ப்லி, குயன்டின், சார்லஸ் பர்டம் ஆகியோரை பாபா தனித்தனியாக சந்தித்துப் பேசினார். இதுபோல, லண்டனுக்கு வந்த தனது அமெரிக்க அன்பர்களையும் - நோரினா, எலிஸபெத், நான்னி, ரானோ, ஸாம் கோஹென், மால்கம், ஜீன் ஸ்க்லோஸ் மேலும் ஜான் பாஸ், கென்னத் ரோஸ் - ஆகியோரையும் அவர் தனிப்பட்ட முறையில் சந்தித்தார். மேற்கத்திய அன்பர்களை, பாபா, நாசிக் நகரில் அமைந்த மெஹர் ரிட்ரீட்டில் தங்கவைப்பது பற்றி விரிவாக விளக்கினார்; இந்தியாவிற்கு டிசம்பர் மாதத்தில் வருவதாகத் திட்டம்.

நேரடி சந்திப்புகள் முடிந்ததும், கேரி கூப்பர் (GARY COOPER) நடித்த ‘மிஸ்டர் டீட்ஸ் கோஸ் டு டவுன்’ (MR. DEEDS GOES TO TOWN) என்ற திரைப்படத்தைப் பார்க்க பாபாவும் குழுவும் சென்றனர். இந்தத் திரைப்படம் பாபாவை வெகுவாகக் கவர்ந்தது; மேலும் ‘**திரைப்படங்கள் எவ்வாறு தயாரிக்கப்பட்டு மனிதகுலத்தின் உணர்வின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முடியும் என்பதற்கும், அதே நேரத்தில் பொழுதுபோக்கை வழங்குவதற்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு**’ என்று குறிப்பிட்டார்.

இந்தச் சுருக்கமான லண்டன் விஜயத்தின் போது, அவரை முதன்முறையாக சந்தித்த அலெக்ஸாண்டர் மார்க்கியுடன் (ALEXANDER MARKEY) மெஹர் பாபா மேற்கூறிய கருத்தை விவாதித்தார். ‘ஸாண்டர்’ (ZANDER) மார்க்கி ஒரு அமெரிக்க எழுத்தாளர், மேடை மற்றும் திரைப்பட இயக்குனரும் ஆவார். (‘வண்ணமயமான கலைஞர்’ - A COLORFUL IMPRESARIO - என்று பலர் அவரை விமர்சித்தனர்.) பல திரைக்கதை எழுத்தாளர்கள் பாபாவின் திரைப்படத் திட்டங்களுக்கான திரைக்கதையில் பணியாற்றுவதற்காகத் தொடர்பு கொள்ளப்பட்டனர், மேலும் மார்க்கியின் பெயர் பாபாவிற்கு நோரினா, எலிஸபெத் ஆகியோரால் பரிந்துரைக்கப்பட்டது. பாபா மீண்டும் தொலைத்தந்தி அனுப்பினார்: “**மார்க்கிதான் இதற்கான மனிதர்!**” எனவே, இதர எழுத்தாளர்களுக்கான தேடல் ஒரு முடிவுக்கு வந்தது. மெர்சிடிஸ் டி அகோஸ்டா ஒரு சுருக்கமான வெளி வடிவத்தை எழுதிய பிறகு, கார்ல் வால்மொல்லரின் கதையான ‘தி மேன் டேவிட்’ (THE MAN DAVID) என்ற திரைப்படத்தில் மார்க்கி பணிபுரிந்தார்.

அவர்களின் சந்திப்புக்கு முன்பு, சில விசித்திரமான சூழ்நிலைகள் உருவாயின. ஒரு வணிக ஹாலிவுட் திரைப்படத்தின் தயாரிப்பை மேற்பார்வையிட 1936 நவம்பரில் லண்டனிலிருந்து வந்த அழைப்பை மார்க்கி ஏற்றுக்கொள்ள முடியாமல், அவருடைய பணியில் மும்முரமாக இருந்தார். ஆனால் சூழ்நிலைகள் காரணமாக, திடீரென லண்டனில் வேலையை ஏற்க

அவர் விடுவிக்கப்பட்டார். இது அவரை எதிர்பாராத விதமாக லண்டனுக்கு அழைத்து வந்தது.

ஹைஜியா ஹவுஸில் பாபாவை சந்தித்த மார்க்கி, ‘ஒரு கலக்கமடைந்த குழந்தையைப் போல்’, எப்படி நடந்து கொள்வது, என்ன செய்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் தயக்கத்தில் இருந்தார். அவர் பாபாவின் அறைக்குள் நுழைந்தபோது, "நான் இதுவரை கண்டிராத மனித வடிவத்தில், தூய்மையின் மொத்த உருவமாக எனது முன்னிலையில் தோன்றியதைக் கண்டேன்" எனக் குறிப்பிட்டார். கடைசியாக அவர் தேடியவரை சந்தித்ததும், நன்கு ‘அறிந்தவர், பரிச்சயமானவர்’ என்பதை உணர்ந்தார்.

மெஹர் பாபா, இம்முறை, புதிய நபர்களை சந்திப்பதில் அக்கறை காட்டவில்லை எனத் தோன்றியது. கிட்டி மற்றும் சிலர் எப்போதும் புதிய நபர்களை பாபாவிற்கு அறிமுகப்படுத்த ஆர்வமாக இருந்தனர். கிட்டி புதிய நபர்களை, பாபாவின் அருகில் அமரச் செய்ததில் பாபா அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை; “**தக்க தருணம் வரும் வேளையில் உலகம் முழுவதையும் என்னிடம் கொண்டு வருவேன்**” என்று குறிப்பிட்டார்.

ஒரு முறை ஆங்கில அன்பர் ஒருவர் இல்லத்தில் தேநீர் வேளையின்போது, திடீரென பாபாவின் முகம் தீவிரமான தோற்றத்தை வெளிப்படுத்தியது. சற்று அமைதியான போது, பாபா விளக்கினார், “**ஸ்பெயின் நாட்டில் இந்தத் தருணத்தில் ஆயிரக்கணக்கானோர் அனுபவிக்கும் வேதனையை நீங்கள் அறிந்திருந்தால், எனது வேதனையை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்**.” அந்த நேரத்தில் ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் அதன் உச்சக்கட்டத்தை எட்டியது.

இந்த ஐரோப்பிய வருகைக்கு முன்பு, பாபா அமெரிக்காவில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த அவருடைய ‘இரகசிய புத்தகம்’ (SECRET BOOK) லண்டனுக்கு எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது; பாபா லண்டனில் இருந்த இவ்வேளையில் மற்றும் சில பொருட்களுடன் இந்தப் புத்தகம் பாபாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஸூரிக் (ZURICH) செல்வதற்கு முன்பு, நவம்பர் 6ஆம் நாள், லண்டனில் பாபாவின் கடைசி நாள். பாபா தனி நபர்களுக்கு இறுதி அறிவுறுத்தல்களை வழங்கினார்; பின்பு பாபா குழுவுடன் விக்டோரியா ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டார். கிட்டி, மார்கரெட் இருவரும் பாபாவுக்காக அன்புடன் எடுத்து வந்த ஊதா மொட்டுக்களை, பாபா ஒவ்வொருவருக்கும் அன்பின் அடையாளமாக வழங்கினார்.

ஸூரிக் பயணத்தில் பாபா மற்றும் மண்டலியுடன், நோரினா, எலிஸபெத், மார்கரெட் ஆகியோரும் இருந்தனர். அடுத்த நாள் அவர்கள் ஸூரிக் வந்தடைந்து, பாபா ஹெடி, வால்டர் மெர்டென்ஸ் இல்லத்தில் அவர்களது குழந்தைகளை சந்தித்தார். அனிதா டி காரோ, ஓட்டோ ஹாஸ்-ஹெய் பள்ளியில் கலை பயின்று வந்தார். இந்த சந்தர்ப்பத்தில், அனிதா மூன்று மாதங்கள் படிப்பைத் தொடரவும்,

பின்னர் இந்தியாவிற்கு வருவதற்கான அழைப்புக்காக காத்திருக்கவும் பாபா அறிவுறுத்தினார். பாபா வால்டரின் சகோதரரின் இல்லத்திற்குச் சென்று அங்கு ஒன்றுகூடியவர்களை சந்தித்தார். சிறிது நேரத்தில் பாபா, **"நான் எதிர்பார்த்த ஒருவர் வரவில்லை. இப்போது, நான் மீண்டும்** (மேற்கு நோக்கி) **திரும்பி வர வேண்டும்"** என்று குறிப்பிட்டார். பாபா, ஐரின் பில்லோ (IRENE BILLOW) என்ற இளம் சுவிஸ் பெண்மணியைக் குறிப்பிடுகிறார், 'இறை' மனிதனுடனான சந்திப்பு விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது. ஐரீன் பாபாவை அறிந்திருந்தார், ஆனால் அவரை வந்து சந்திக்க மிக்க பதட்டத்துடன் காணப்பட்டார். பாபாவை சந்திக்கும் அளவுக்குப் போதுமான தூய்மை இல்லாதவர் என்று அப்பாவித்தனமாக நினைத்தது பாபாவிற்குத் தெரியும். அவர் நண்பர்களுடன் அருகிலுள்ள உணவகத்திற்கு ரகசியமாகச் சென்றிருந்தார், ஆனால் அந்த வாய்ப்பை தவறவிட்ட வருத்தத்தில் கண்கலங்கி அழுதார்.

ஸூரிக் நகரில் இருந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபாவும் குழுவும் 1936 நவம்பர் 8 அன்று ரயிலில் பாரிஸ் நகருக்கு வந்து ருவானோவை சந்தித்தனர். அவருக்கும் இந்தியா வருவது குறித்த தகவல் தரப்பட்டது.

17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு பெரிய தோட்டமான 'சேட்டோ டி கல்லுயிஸ்' (CHATEAU DE GALLUIS) என்ற இடத்தில், அதே பெயரில் அமைந்த கிராமத்திற்கு, பாபாவும் குழுவும் காரில் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தத் தோட்டம், போலந்து நாட்டில் (P0LAND) பிறந்த ஒரு பணக்கார ஓபரா பாடகரும், இதற்கு முன்னர் பாபாவை சந்திக்காத நோரினாவின் நண்பருமான மேடம் கேன வால்ஸ்கா (MADAME GANNA WALSKA) என்பவருக்கு சொந்தமானது. அற்புதமான வீடும் அழகான தோட்டமும், மைதானமும் இருந்தது. பாபா, ஒரு டஜன் மக்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவை சந்தித்தார். ஒரு சிறப்பான விருந்திற்குப் பிறகு, பாபா ஓய்வெடுக்க விரும்பினார். குளிர்காலம் மட்டுமல்லாமல், படுக்கையறை பயன்படுத்தப்படாத ஒன்றாக இருந்ததால் பாபா அசௌகரியமாக உணர்ந்தார்.

திருமதி கேன வால்ஸ்கா, பாபாவை, பிரதான வீடு மற்றும் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அனைவரும் பல கலைப் பொக்கிஷங்களைப் பாராட்டினர், மேலும் அவர்கள் ஒரு மூதாதையரின் வர்ணம் பூசப்பட்ட உருவப்படம் அருகே வந்தபோது, கேன வால்ஸ்கா பெருமையுடன் பாபாவிடம் (ஒருவேளை வேடிக்கையாக), "அது என் குருநாதர்!" என்றார். இதைக்கேட்ட எலிஸபெத் தர்மசங்கடமாக உணர்ந்தார். இந்த நன்கு அறியப்பட்ட பிரபுத்துவ பெண்மணியையும் அவரது வகுப்பைச் சேர்ந்த பிற நபர்களையும் பாபாவிடம் கொண்டுவருவதில் உறுதியாக இருந்ததால் நோரினாவும் திகைப்பில் ஆழ்ந்தார்; ஆனால் பாபாவுடனான அவர்களது உள் தொடர்பு ஆழமாக வேரூன்ற படாததால், அவரது வெற்றிக்கான வாய்ப்பு அரிது என்றே கூறமுடியும். எவ்வாறாயினும், ஒரு கட்டத்தில், இந்தியாவிற்கு வந்து, ஆசிரமத்தில் தங்குவதற்கான ஆர்வத்தை கேன வால்ஸ்கா வெளிப்படுத்தினார்.

உண்மையில், திருமதி கேன வால்ஸ்கா, பாபாவை ஒருபோதும் நம்பவில்லை, ஆனால் அவர் பாபாவை மதித்து, அவரை விருந்தினராக அடையும் பாக்கியத்தை உணர்ந்தார். "பத்து நாட்களுக்கு மட்டுமே மேற்கத்திய நாடுகளில் தங்குவதற்காக இந்தியாவிலிருந்து பயணம் செய்கிறார்," பின்னர் அவர் இதை இவ்வாறு குறிப்பிட்டார், "(பாபா) ஃபிரான்ஸ் நாட்டில் தனது நேரத்தின் ஒன்றரை நாட்கள் ஏன் 'சேட்டோ டி கல்லுயிஸில்' தங்கி, அதைப் புனிதப்படுத்த வேண்டும்?" திருமதி கேன வால்ஸ்காவைப் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட நம்பிக்கையும் புரிதலும் கொண்ட ஒருவர், குருநாதரையும், அவருடைய சீடர்களையும் புரிந்து, திருப்தி அடைவது கடினம்; இதைக் கீழ்வரும் அவரது நினைவுக் குறிப்புகளில் இருந்து காணலாம்:

"பாபாவின் அதீத அமைதியற்ற நிலை காரணமாக, மற்றும் பதினான்கு பேரை ஒரே இரவில் வசதியாகத் தங்கவைக்கும் விருந்தோம்பினராக நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் என்பதால், என் எண்ணங்களைப் பதிவு செய்ய முடியவில்லை; மேலும் இல்லத்தரசி என்ற முறையில் உணர்வுகள் எனது கடமையில் தலையிடுவதை நான் அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு நொடியும் நான், சமையலறையிலிருந்து பாபாவின் சீடர்கள் வரை, கார் கேரேஜில் இருந்து வீட்டு வேலைக்காரர் வரை, ஓடி ஓடி கவனிப்பதில் மும்முரமாக இருந்தேன்; எங்கள் சமையல்காரர் அவரது சுயகட்டுப்பாட்டை இழந்துவிட்டதாக வீட்டுப் பொறுப்பாளர் புகார் கூறினார் - இதற்கிடையில் எனது செயலாளர், குருநாதரின் உத்தரவின் பேரில் தொலைபேசி மூலமாகப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

"இந்த அவசரம், பதட்டம், அமைதியின்மை காரணமாக, பாபா ஒரு விதிவிலக்கான, தற்போக்கெண்ணம் படைத்த, எளிதில் உணர்ச்சிவசப்படும் ஒருவராகவும், அவரது சீடர்கள் வழக்கமான அடிமைகளைப் போல துணையாக இருந்து, செயலாளர் மற்றும் பணிப்பெண்களின் பங்கை வகிக்கிறார்கள் என்ற எண்ணம் என்னில் வந்தது. அதே நேரத்தில் நோரினா மாட்சபெல்லி ஓர் இத்தாலியன் போல நடித்தார்! பாபாவின் ஒவ்வொரு விருப்பத்தையும் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் அனைவரும் மிகவும் உற்சாகமாகவும், அச்சம் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர்... தரையில், படிக்கட்டுகளில் அமர்ந்திருக்கும் நன்றிமிக்க நாய் போல் அவரது வாசலில் அவர்கள் காத்திருந்தனர். ஒரு அழைப்பு வந்ததும், அவர்கள் இராணுவ பாணியில் மிக வேகமாக விரைந்து, ஏதாவது நுணுக்கமான பழங்கால கலைப் பொருட்களுக்கு பாதகம் வந்துவிடுமோ எனவும் நான் நடுங்கினேன்.

"ஒரு வாய் சிற்றுண்டியைக் கூட உண்ணவில்லை, குருநாதரின் அழைப்பை ஏற்று விரைந்தனர்; ஒரு டம்பளர் காஃபியை முடிக்கும் முன்னர் உண்மையில் ஆறு முறை சூடு செய்ய வேண்டியிருந்தது. மதிய உணவு நேரம் எட்டு முறை மாற்றப்பட்டது, முதலில் மதியம் ஒரு மணி என்று நிர்ணயிக்கப்பட்டது, மிகையாகக் காலதாமதம் ஆனதால் உணவு 'கல்லுயிஸ்' தரத்திற்கு நிகராக இல்லை; ஏனெனில் எனது சமையல்காரர் இந்தச்

சிக்கலான சைவ உணவை தனது வழக்கமான நேர்த்தியுடன் ஒரு மணி நேர அறிவிப்பில் தயாரித்திருக்க முடியாது, கடைசி நேர மாற்றங்கள் பெரும் பிரச்சினையாக இருந்தது. இதற்கெல்லாம் வேறொரு காரணம், பாபா தனக்குப் பிடித்தமான திரைப்படங்களுக்குச் செல்ல விரும்பினார் - ஃபுளோரன்ஸ் **ஜீக்ஃபெல்ட்** – FLORENZ ZIEGFELD (தி கிரேட் ஜீக்ஃபெல்ட் – THE GREAT ZIEGFELD) வாழ்க்கையை சித்தரிக்கும் ஓரின சேர்க்கையாளரின் இசையுடன் கூடிய நகைச்சுவை திரைப்படம்.

"(பாபா அங்கிருந்து புறப்பட்ட பின்பு, நள்ளிரவில்) நான் இறுதியாக என் அறைக்கு வந்தபோது, பரபரப்பான, ஆரோக்கியமற்ற, 'முழங்கால் சவுக்கடியுடன்' வாழ்ந்த அந்தப் புனித வாழ்க்கையிலிருந்து மீண்டு வர மூன்று நாட்கள் அங்கேயே தங்கினேன். அடுத்த நாளே என் தலைவலி பறந்துவிட்டது... கடவுளின் பிரசன்னம், நம் இதயத்திலும் இல்லத்திலும் அவரின் அன்பையும் அமைதியையும் கொண்டுவர வேண்டும்; பயம், பீதி, அவசரம் அல்லது உடல் சம்மந்தமான பிரச்சினைகளை அல்ல. நான் பாபாவைப் பார்க்காமல் இருந்திருந்தால், பல நாட்கள் என் ஆன்மீக, மன மற்றும் உடல் சக்திகளை நான் இழந்திருக்க மாட்டேன். ஆனால் அந்த சூழ்நிலையில் கூட, நான் எந்த முடிவுக்கும் வர விரும்பவில்லை, ஏனெனில், குறிப்பாக பாபா என்னிடம் மிக்க கருணையுடன் நடந்துகொண்டார்."

பாபாவிடமிருந்து விடைபெற்ற எனது ஊழியர்களை அழைத்தேன். கேன வால்ஸ்காவின் தனியார் செயலாளர், அவரது கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தார். பாபா அன்றிரவு பாரிஸ் நகரில் அமைந்த 'ஆல்ஃபிரடோ & கான்ஸுலோ ஸைட்ஸ்' (ALFREDO AND CONSUELO SIDES) என்ற தம்பதியினரின் இல்லத்தில் தங்கினார். கேன வால்ஸ்காவைப் போலல்லாமல், அவர்கள் இருவரும் பாரிஸில் பாபாவின் முக்கிய தொடர்பில் வந்தனர்.

நவம்பர் 10ஆம் நாள் காலையில், பாரிஸ் நகரில் சில புதிய நபர்களை சந்தித்த பின்பு, பாபா குழுவுடன் மார்செல்லஸ் வந்ததும், தனக்கு ஒரு முக்கியமான 'சந்திப்பு' இருப்பதாகக் கூறி, குறிப்பிடத்தக்க ஆர்வத்துடன் காணப்பட்டார்.

பாபா உடனடியாக நோரினா, எலிஸபெத் இருவருடன் சரளைக் கற்கள் நிறைந்த பாதை ஒன்றில் முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினார். ஓர் இளம் ஃபிரெஞ்சுக்காரர் புல்வெளியின் மறுபுறம் இருக்கையில் அமர்ந்திருந்தார். கடைசியில், பாபா அந்தப் புல்வெளியைச் சுற்றி உலாவ, எழுந்து நின்ற இளைஞன் நேராக நடந்து சென்று பாபாவிடம் பயபக்தியுடன் தலை குனிந்து வணங்கினார். பாபா, அதன் பின்னர் உடனடியாக வெளியேறினார், அந்த இளைஞன் (இரவல் வாங்கப்பட்ட) ஆன்மீக முகவர்களில் ஒருவர் என்றும் பாபாவுக்காக ஆன்மீக உள் தளங்களில் பணிபுரிவதாகவும் தெரிவித்தார்.

**1936,** நவம்பர் **12**ஆம் நாள், இந்தியாவின் வைஸ்ராய் **(**VICEROY OF INDIA**)** கப்பலில், மெஹர் பாபா, மண்டலியுடன் இந்தியாவை நோக்கிப் பயணம் செய்தார். கப்பலில் பயணிகள் நிரம்பி இருந்ததால் கடைசி நேரத்தில் 'எப்படியோ' மூன்று இருக்கைகள் கிடைத்தன. கப்பலிலிருந்த **658** இருக்கைகளிலும் பயணிகள் நிரம்பி இருந்தனர். கப்பலில் ஆறு இந்திய இளவரசர்களும் மஹாராஜாக்களும் பயணம் செய்தனர்; ஆனால் பாபா அவர்களில் ஒருவரையும் சந்திக்கவில்லை, பாபாவின் பயணம் ரகசியமாக வைக்கப்பட்டது.

இந்தப் பயணத்தில், பாபாவின் அறை வசதியாகவும், அமைதியாகவும், விரும்பியபடி ஒதுங்கியும் இருந்தது. கப்பல் திறந்த கடலை அடைந்ததும், பாபா நாசிக் நகரில் மேற்கத்தியர்கள் தங்குவதற்கான அட்டவணையைத் தயாரிக்கத் தொடங்கி, ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட கடமைகளின் பட்டியலையும் முடிவு செய்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, மும்பையில் பாபாவை சந்தித்த அசோசியேட்டட் பிரஸ் மற்றும் ராய்ட்டர்ஸ் நிறுவனத்தின் **(**THE ASSOCIATED PRESS AND REUTERS**)** ஜே. டர்னர் **(**J. TURNER**)** என்ற சக பயணி, சாஞ்சியை சந்தித்து, மெஹர் பாபா எங்கே என வினவினார். முதலில் சாஞ்சி அவரை, பாபா நாசிக்கில் இருப்பதாகக் கூறி தவிர்க்க முயன்றார்; ஆனால், பாபா, அவரைக் குறித்து வேறு எவருக்கும் தெரிய வரக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், அடுத்த நாள் காலையில் பாபாவை சந்தித்து, கைகளைக் குலுக்கி, அவரது மரியாதையைச் செலுத்த அனுமதித்தார்.

பாபா காலை, மாலை வேளைகளில் கப்பல் தளத்தில் உலாவ வருவது வழக்கம். நவம்பர் **19**ஆம் நாள் கப்பல் ஏதன் **(**ADEN**)** நகரைக் கடந்து சென்றது.

அடுத்த நாள், மெஹர் பாபா ராஹுரி ஆசிரமத்தில் தனது பணியைக் குறித்து விளக்கமளித்தார்:

**இது எல்லாமே உள் உணர்வின் ஒரு விளையாட்டு. இறை போதைக்குள்ளான மஸ்துகளின் ஆன்மீக உணர்வை, நான் எனது பௌதீக உடலால் அவர்களுக்கு சேவை செய்வதன் மூலம், பொருள் சார்ந்த பௌதீக உணர்வை நோக்கி வழிநடத்துகிறேன்; இது, என்னுடைய ஆன்மீக வழிகாட்டுதலால், பிறரின் பொருள் சார்ந்த உணர்வு நிலையை மேம்படுத்தி, இறை உணர்வை நோக்கி வழிநடத்த உதவுகிறது. இவ்வாறு, என் எல்லையற்ற உணர்வு, இரண்டு வழிகளில் செயல்படுகிறது. ராஹுரி ஆசிரமத்தில் இந்தத் தற்போதைய செயல்பாடு நான் எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன் செய்ய வேண்டிய பணிகளில் முக்கியமான ஒன்றாகும்.**

**எனது பணியைப் பார்க்கவும், பகிர்ந்து கொள்ளவும் மேற்கத்தியர்களை இந்தியாவிற்கு அழைத்துள்ளேன். ஆன்மீகத்தைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு நடைமுறை பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியம். அது அவர்களுக்கு முட்களாலான கிரீடமாக**

இல்லாமல் இருந்தாலும், ரோஜா இதழ்கள் நிரம்பிய படுக்கையாகவும் இருக்காது. ஆன்மீகம் எப்போதும் அதன் உள்ளார்ந்த சிரமங்களைக் கொண்டிருக்கும்; ஆனால் எனது அன்பின் அரவணைப்புடன் வழிகாட்டும் முறை, அவர்களுக்கு மென்மையாகவும் எளிதாகவும் இருக்கும்.

ஆகவே, பிற அனைவரும், அவர்களின் சேவையைச் செய்ய, நானே அதைச் செய்ய வேண்டியதாகிறது... மனிதகுலத்தை வழிநடத்தவும், அதற்கு அறிவுறுத்தவும், உதவவும், நான் அவர்களால் புரிந்து கொள்ளும் உணர்வு நிலைக்கு வர வேண்டும், இங்குதான் நான் பொதுவாக, தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறேன். ஆனால் நான் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும், மனிதகுலத்திற்கு உதவுவதற்காக நான் சாதாரண பௌதீக உணர்வு நிலைக்கு வருவது எந்த வகையிலும் எனது எல்லையற்ற நிலையில் குறுக்கிடவோ அல்லது அதைக் குறைக்கவோ செய்யாது.

எடுத்துக்காட்டாக, எம்.ஏ. பட்டம் பெற்ற பட்டதாரி ஒருவர், எழுத்துகளைத் தானே எழுதுவதன் மூலம் அவர் அவற்றைக் கற்றுக்கொள்ளும் ஒரு மாணவனின் உணர்வு நிலைக்கு வருகிறார். அவர் அகர முதல எழுத்துக்களை எழுதுவதால் அவருடை எம்.ஏ. பட்டம் தொலைந்துவிடும் என்று அர்த்தமல்ல.

எனவே, நான் மனித நிலைக்கு வந்தாலும் எனது ஆன்மீக, அளவிறுதியற்ற நிலை, பாதிக்கப்படாமல் இருக்கும்.

தற்போதைய உலக குழப்பம் ஆன்மீக வெளிப்பாட்டின் ஆரம்பமாகும். உதாரணமாக, கண்புரையால் பாதிக்கப்பட்ட ஒருவரின் கண்ணில் உருவாகும் திரைபோன்ற படிவம் கண்பார்வையைத் தடுக்கும். இதை ஒரு மருத்துவர் அறுவை சிகிச்சை செய்து, கண்பார்வையை மீட்டுத் தருகிறார்.

இதேபோல், உலகின் தற்போதைய நிலை, மனிதகுலம் பொருள்முதல்வாதத்தில் மூழ்கி, சுயநலத்திலும் பேராசையிலும் ஈடுபடுவதால், கண் பார்வையைத் திரை மறைப்பதுபோல், ஆன்மீகப் பார்வை மற்றும் வளர்ச்சிக்கு, பொருளுலகம் இடையூறாக இருக்கிறது. இது உலகெங்கிலும் குழப்பத்தை விளைவிக்கும் அளவிற்கு மோசமடைந்துள்ளது; மேலும், கண்புரைக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுவது போல் உலகத்திற்கும் தேவை என்பதற்கான தெளிவான அறிகுறியாகும்.

இதுதான் இன்று உலகில் நடப்பது. அறுவை சிகிச்சை செய்யப்படும்போது, அறியாமை, பேராசை, காமம் ஆகிய நோய்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, உலகத்தின் பார்வை மீண்டும் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் திசைதிருப்பப் படுவதால் உலகம் மீட்கப்படும். தக்க நேரம் வந்துவிட்டதால் மருத்துவர் இதைச் செய்யத் தயாராக இருக்கிறார்!

இந்தியா ஓர் ஆன்மீக நாடு; ஆன்மீகம் என்றால் அமைதி, அன்பு, சகோதரத்துவம். குழந்தைத்தனமான விஷயங்களில் இந்தியர்கள் தங்களுக்குள் மோதும்போது, இந்தச் செய்தியை இந்தியாவிலிருந்து உலகம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? முஹமதியர்களுக்கும் இந்துக்களுக்கும்

**இடையிலான பிளவு, பிராமணர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையிலான முறுகல் நிலை அனைத்தும், இந்தியா, சாதி, மதம் மற்றும் இன வர்க்கம் எனும் அரக்கனால் கட்டுப்படுத்தப்படும் பிளவுகளின் விளை நிலம் என்பதைத்தான் குறிக்கும்! உண்மையான சுயராஜ்யம்** (தன்னைத் தானே ஆட்சி புரிவது) **என்பது ஆன்மாவின் சுயராஜ்யம். ஆன்மீக சுதந்திரத்தை அடையும் தருவாயில், தார்மீகம், மனம் மற்றும் பொருள் சார்ந்த 'சுய-ராஜாக்கள்' தானாகவே பின்தொடர்ந்து வருவார்கள்.**

**எனவே, இந்த பயனற்ற கேள்விகளையும் கடந்து இந்திய தேசம் உயரட்டும்; அவற்றை சீராக வைத்து, குழப்பத்தினால் வேதனைக்குள்ளாகி, அறியாமையில் மூழ்கிய உலகிற்கு ஆன்மீகத்தை வழங்கட்டும்.**

**புனிதர்கள், சத்குருக்கள், பரிபூரண ஆத்மாக்கள் எப்போதும் தங்கள் எல்லையற்ற அன்பின் மூலம் மனிதகுலத்திற்கு உதவுகிறார்கள்; மேலும், வெகுஜனங்களின் ஒத்துழைப்பால், குருநாதர்களின் போதனைகளின்படி செயல்படும் தருவாயில், அவர்களின் பணி எளிதாக முடிந்துவிடும்.**

1936, நவம்பர் 21 அன்று 'அசோசியேட்டட் பிரஸ்' நிருபரான டர்னர் மீண்டும் பாபாவை சந்தித்து, நிகழவிருக்கும் போரைப் பற்றி கேட்க விரும்பினார், ஆனால் அவர் அவ்வாறு செய்வதற்கு முன்பு, பாபா தனது எழுத்துப்பலகை வழியாக, சிறிது நேரத்திற்கு முன்னதாக வெளிப்படுத்திய கருத்துக்களை வாசிக்குமாறு சாஞ்சிக்கு உத்தரவிட்டார். அதைக் கேட்ட டர்னர் பெரிதும் ஆச்சரியமடைந்தார்; அவர் கேட்க விரும்பிய சில கேள்விகளுக்கான பதில்கள் அதில் இருந்தன.

டர்னர், பாபாவிடம், "நான் அந்தக் கேள்வியைக் கேட்கப் போகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டார்

**"எனக்கு எல்லாம் தெரியும்!"** என்று பாபா பதிலளித்தார்.

நிருபரிடம் இன்னும் சில கேள்விகளைக் கேட்க பாபா அனுமதித்தார். "நீங்கள் எப்போது பேசுவீர்கள்?" டர்னர் கேட்டார்.

**"ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளில்."**

"உங்கள் வெளிப்பாடு எப்போது இருக்கும்?"

**"நான் பேசிய பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த பன்னிரண்டு ஆண்டுகால மௌனம் அதற்கு வேண்டிய அனைத்தையும் தயாரிக்கும் முனைப்பில் இருந்தது."**

"அதன் விளைவு என்னவாக இருக்கும்?"

**"திடமாக நம்புவது."**

"ஒரே நேரத்திலா அல்லது படிப்படியாகவா?"

**"படிப்படியாக, மழை மற்றும் பயிர்களைப் போல. மழை ஒரு நேரத்தில் பொழியும், ஆனால் பயிர்கள் வளர நேரம் எடுக்கும். ஆகவே, எனது வெளிப்பாட்டின் இந்த பன்னிரண்டு ஆண்டுகளில் நேரம் கடந்து செல்லச்**

**செல்ல எனது பணி மற்றும் வெளிப்பாட்டின் விளைவுகள், பலன்கள் படிப்படியாக வளரும்.... "**

"நீங்கள் பேசுவதற்கு முன்னர் ஒரு போர் உருவாகுமா?"

**"ஆம்."**

"இது அவசியமா?"

**"ஆம், தவிர்க்க முடியாதது. எவரும் வெல்லவும் மாட்டார்கள், எவரும் எதையும் இழக்கவும் மாட்டார்கள். ஆனால் இது ஒரு சிறந்த மற்றும் உயர்ந்த இலட்சியத்திற்கான விழிப்புணர்வை உருவாக்கும். இனம், நிறம், தேசிய குடியுரிமை, தேசியவாதம் மற்றும் பலவற்றின் தவறான கருத்துக்கள் அனைத்தும் அழிக்கப்படும், உலகளாவிய மனித சகோதரத்துவம், இலட்சியவாதம் நிறுவப்படும். உண்மைப்பொருளைத் தேடுபவர்களுக்கு நான் வழிவகுப்பேன்"** என்று பாபா கூறி முடித்தார்.

தனது 25 நிமிட நேரடி பேட்டியின் முடிவில், டர்னர் சில முக்கிய சக பயணிகளை முறையாக அறிமுகப்படுத்த அனுமதி கோரினார் (பிரபல ஆய்வாளரும் விஞ்ஞானியுமான லூயிஸ் பெர்னாச்சி - LOUIS BERNACCHI மற்றும் 'ஸால்வேஷன் ஆர்மி'யின் – SALVATION ARMY உலகளாவிய தலைவரான எவாஞ்சலின் பூத் - EVANGELINE BOOTH போன்றவர்கள்), ஆனால் உரையாடல் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

கடலில் பதினொரு நாட்கள் பயணத்திற்குப் பிறகு, பாபா, சாஞ்சி, காக்கா ஆகியோர் நவம்பர் 23ஆம் நாள் நண்பகலில் மும்பை வந்தடைந்தனர்; ஆதி சீனியர், ஆதி ஜூனியர் இருவரும் பாபாவை அழைத்துச் செல்ல வந்தனர். பெஹ்ராமின் மனைவி பெரின் ஆறு நாட்களுக்கு முன்னர் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தார். எனவே மெமோவை சந்திப்பதற்கு முன்பு மருத்துவமனையில் தாயையும், சேயையும் பார்க்கச் சென்றார். பாபா குழந்தைக்கு 'ஸூனு' (SOONU) என்று பெயரிட்டார், ஆனால் பின்னர் அவர் அந்தப் பெயரை, குல்னார் (GULNAR) என்று மாற்றினார்.

தாதரில் மெமோவை சந்தித்த பிறகு, மெஹர் பாபா, தாதாசாஞ்சியின் இல்லத்திற்குச் சென்று, உணவு உண்டு, மாலையில் நாசிக் நகருக்குப் புறப்பட்டார்.

1936, நவம்பர் 24 அன்று, பாபா மேற்கத்திய அன்பர்களின் வருகையைக் குறித்து ருஸ்தம் மற்றும் ஃப்ரீனியுடன் விவாதித்தார். குழந்தைகளையும் பார்த்த பின்பு, பாபா ராஹுரிக்கும் தொடர்ந்து மெஹராபாத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டார். ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அன்பர்களின் வருகை குறித்தும், அவரது பிறந்தநாளைக் கொண்டாடுவது பற்றியும் மெஹராபாத்தில் வாழும் ஆண், பெண் மண்டலிக்குத் தெரிவித்தார்.

பாபா கூறியதாவது:

எனது அடுத்த பிறந்த நாளில், 20,000 ஏழைகளுக்கு உணவளித்து, தலைவணங்குவேன். நான் இதைச் செய்ய ஒரு சிறப்பு காரணம் உள்ளது. இது "வெற்றிக்காக பிறர் பாதங்களை நெற்றியால் தொடுவது!" என்று பாபா சிலேடையாகக் கூறினார். இந்த 20,000 ஏழை மற்றும் ஆதரவற்றோருக்கு நான் அடிபணிந்தால், உலகம் முழுவதும் எனக்கு அடிபணியும்!"

நான் ஒரு மாபெரும் சூறாவளியை உருவாக்க உத்தேசித்துள்ளேன், ஆகையால், அவர்கள் இதற்கு முன்பு செய்யாத பணியை மண்டலி இப்போது செய்யவேண்டியதாகிறது! மண்டலி என்னுடன் முழுமையாக ஒத்துழைத்தால், நான் இதைச் செய்வேன், அல்லது எல்லாவற்றையும் மூடிவிட்டு நான் தனியாகப் பணிபுரிவேன். அரைகுறையாக நான் எதையும் செய்யப்போவதில்லை; ஒன்று அது அல்லது இது - இரண்டு உச்சங்கள்!

எல்லோரும் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில், மேற்கத்திய அன்பர்களின் உற்சாகத்தைத் தடுக்கவோ அல்லது அதில் எந்தப் பின்னடைவையும் சந்திக்கச் செய்யவோ கூடாது. அவர்களில் எவரும் 'பின்னோக்கிச்' செல்வதைக் குறித்த கேள்விக்கு இடமில்லை. மேற்கத்தியர்கள் இங்குத் தங்கும் வேளையில், இங்குள்ளவர்கள் அவர்களின் வியக்கத்தக்க வெற்றியைக் கண்டு பொறாமைப்பட வாய்ப்புள்ளதால், மேற்கத்தியர்களின் உற்சாகமான மனநிலையைப் பாதுகாக்க, பராமரிக்க ஒவ்வொருவரும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உண்மையான பணியைத் தொடங்குவதற்கு முன்பு புதிய சூழல்கள், நிலைமை மற்றும் காலநிலைக்கு ஏற்றாற்போல் அவற்றை முழுமையாகவும் வசதியாகவும் மாற்றியமைப்பதே எனது திட்டம். முதல் மாதத்தில், அவர்கள் ஓய்வெடுத்து, இந்த சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; பின்னர் ஏறக்குறைய ஐந்து மாதங்களுக்கு நிலையான மற்றும் வழக்கமான, ஆனால் இலகுவான கடமைகள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட திறன்களுக்கு ஏற்ப வழங்கப்படும். தினமும் காலையில் எழுந்து ஒரு மணி நேரம் தியானிப்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும். சில வேலைகளுக்காக உருது மொழியில் ஒரு மணி நேரம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

நான் அவர்களுடன் நாசிக் நகரில் இருக்கும் நாட்கள் அல்லது அவர்கள் என்னுடன் ராஹுரி மற்றும் மெஹராபாத்தில் இருக்கும் நாட்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன; இதனால் எனது தற்போதைய பணிகளின் மூன்று அங்கங்களையும் அறிந்து கொள்ளமுடியும்: நாசிக், ராஹுரி, மெஹராபாத். மெஹராபாத்தில் இருக்கும்போது, என்னுடைய இந்திய மண்டலி உறுப்பினர்கள் செய்வது போலவே உதாரணமாக, உண்டு, உட்கார்ந்து, மற்றும் பலவற்றை அவர்களும் செய்வார்கள். மேற்கத்திய ஆண்கள் கீழ் மெஹராபாத்தில் வாழும் ஆண் மண்டலியுடனும், மற்றும் மேற்கத்திய

**பெண்கள் மேல் மலையில் வாழும் பெண் மண்டலியுடனும் சேர்ந்து வாழ்வார்கள்.**

**ஐந்து மாதங்களுக்குப் பிறகு, நாசிக் ஆசிரமத்தில் பணிபுரியும் சிறுவர்கள், ஊழியர்கள், சமையல்காரர்கள், சலவைத் தொழிலாளிகள் அனைவரும் அங்கிருந்து நீக்கப்படுவார்கள். மேற்கத்தியர்கள் தங்களது சொந்த சமையல், சுத்தம், சலவை அனைத்தையும் செய்வார்கள்; அத்துடன் அந்த நேரத்தில் திறக்கப்படவுள்ள மருத்துவமனையில் தங்கள் சேவைகளை வழங்குவார்கள். இந்த மருத்துவமனையின் சிறப்பு அம்சம் என்னவெனில், நோய்வாய்ப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து, சேவை செய்வது!**

1936, நவம்பர் 25 அன்று, அசோசியேட்டட் பிரஸ்ஸுக்கு பாபா வழங்கிய செய்தி வானொலியில் டெல்லியிலிருந்து தினசரி செய்தியாக ஒலிபரப்பப்பட்டது. மெஹராபாத் மண்டலி அதைக் கேட்டனர்; பாபாவும் அதைக் கேட்டிருக்கலாம்.

அடுத்த நாள், பாபா ராஹூரிக்கும், தொடர்ந்து நாசிக் நகருக்கும் அழைத்துச் செல்லப்பட்டார்; வழியில் குஷ்ரு குவாட்டர்ஸில் குல்மாய் மற்றும் அக்பர் அச்சகத்தில் வாழ்ந்த ஸட்டா குடும்பத்தினரையும் சந்தித்தார். ராஹூரியில், புதிதாகக் கட்டப்பட்ட செங்கல் அறையைப் பார்வையிட்டார். ‘ராஹூரி கேபின்’ (RAHURI CABIN) என்றழைக்கப்பட்ட இந்தச் சிறப்பு அறை இதர மண்டலியும், மஸ்துக்களும் வாழ்ந்த குடில்களுக்கு இடையே அமைந்திருந்தது.

1936, நவம்பர் 28ஆம் நாள், மெஹர் பாபா, சாஞ்சியுடன் நாசிக் நகரில் நடந்து செல்லும் போது, ஒரு பிராமண பண்டிதர் பாபாவை அடையாளம் கண்டுகொள்ளாமல் அவருடன் இணைந்தார். இந்து வேதங்களைக் கற்றறிந்த அவர், செய்தித்தாள்களில் வெளிவந்ததற்கு இணங்க மெஹர் பாபாவின் வருகையைக் குறிப்பிட்டு, பின்னர் ஒரு மனிதனைக் கடவுளாக வணங்குவது எவ்வளவு தவறு என்று கருத்துத் தெரிவித்தார். சமஸ்கிருத வசனங்களை மேற்கோள் காட்டி, அவர் ‘உண்மையான ஆன்மீகம்’ குறித்த, நீண்ட சொற்பொழிவை வழங்கினார். பாபா அவரைத் தடுத்து, சாஞ்சியிடம் தனது அடையாளத்தை வெளிப்படுத்தவும், அவரது ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கவும் கூறினார். அந்தப் பண்டிதர் குற்ற உணர்வால் வெட்கப்பட்டு, வெளிறிப் போனார். அவரது விரும்பத்தகாத அணுகுமுறையால் மனம் நொந்த பண்டிதர், பாபாவின் காலடியில் விழுந்து, "உங்கள் தரிசனத்தைப் பெறுவது எனது பேரதிர்ஷ்டம்" என்று கூறினார்.

மெஹர் பாபா, எவரும் தனது கால்களைத் தொடுவதை அனுமதிக்காத போதும் அவர் ‘கற்றறிந்த’ பிராமணருக்கு விதிவிலக்கு அளித்து ஆசீர்வதித்தார்.



உண்மையாக
இருப்பவை,
தரப்படுவதும்,
பெறப்படுவதும்
நிசப்தத்தில்தான்
.